சுபபாப மறிந்து கூட்டியது சகோதிராதி புத்திரகளத்திரபாவமென்றும் காரகவசாத் இவ்விதமே கண்டறிந்ததுகையை காரகபெலன்களுடன் ஸ்தான இராசிக்கிக்கூறியபடி பெருக்கிய எண்ணிற்கொடுத்துக்கண்டவை சகோதிராதி பாவங்கள்என்றும் சுபாசுபமானது அந்தந்த ஸ்தான மூலமா கவுங் கண்டறியவேடிண்யது மேலேகண்டகாரக இராசிபெண்களின் சுபா சுபத்துக்கு இசைந்தபடி பெருக்கியும் காரகலக்னவசாதும் கிரகசம்மந்த மானவர்களுடனும் காரகரிவர்களுடைய பெலனைக் கண்டறிந்த வையை காரகசிவசரீராதி பெலகணித யெண்களின் பேருக்கு கொடுத்த இவை ஓரி டத்தில் வைத்தும் கிரகமொத்தமான இதற்கு சம்மந்தமான சுபபெலன் களை யொன்றுபடுத்தி ஓரிடத்தில் பெழுதிப பெண்களால் பெருக்கியது சகோதிரமென்றும் அவை சந்திரன் புதன் சுக்கிரன் கன்னி கும்பம் விருச்சிகம் துலாம் விருஷபம் மீனம் இவ்வித இராசி சிவசரீராதிபர்களி னிடம் முதலிய வகையுடனிருக்கினும் சேரினும் மருதாராதி மருகளத்திர புத்திராதிசகோதிர முதலிய புரத்திரனுண்டென்றுங் கொள்ளவேண்டியது களத்திராதி பிதுர்பாவமாகினும் மாதுருபாவமான பிதுர்விவாகவிஷப ஸ்தி ரீகளைப்பற்றிப் பாற்கவேண்டியதாகில் தனக்குறிபதும் அந்தந்த பாவத் துக்குரியதுமானபெலனில் குரு சுக்கிரன் சந்திரன் இவர்களுக்குரிய சம பெலனுண்டாகப்படும் கிரகங்களையாவது கூறிய பெலவசாத்யெடுத்துக் கொண்ட குணிதக்கணக்கை உ-பெலனுக்குமேற்பட்டால் இராசி யெண் ணைற் பெருக்கியும் கஅ-குள்ளாகில் கிரகயெண்ணுடன் இராசிபெலனுக் குரிய எண்ணைக்கூட்டியும் கவ-க்குள்ளாகில் கிரகயெண்பெலன் சுபாசுபத் துக் குரியதைமாத்திரம் யெடுத்தும் ௯-க்குள்ளானால்அந்த கிரகபெலனுக் குரிய துகையிலேயே மூன்றிலொன்று நீங்கியதும் ரு-குள்ளானல் உ- பங்கு தள்ளிக்கண்ட யெண்ணை அந்தகிரகத்தின் சுபபெலம் பாவவசாத் ஸ்தானுதி பத்தியம் ஸ்திதி இந்த பெலன்களை யொன்று சேர்த்தும் காரக வசாத் உறிய ஆதிபத்திய ஸ்திதிவசாதுறிய பெலன்களையொன்று சேர்த்த வையின்பேரில் கொடுத்துக்கண்ட சேஷம் யெதுவோ அதுவேதாரம் பிதா மாதாவென்றும் இதில் குரு சுக்கிரன் சந்திரன் ரவியானல் குரு பிதா சவய மாதுருசுயதாரமென்றும் பாபரானல் பெலன் கொடுத்து வந்தவை கீழ்க்குலம் அயல்தாராதி புத்திர மாதுரு பிதுருவென்றுங் கருதிச்சொல்ல வேண்டியது. இவ்வித மறிந்ததையும் பெலாபெலன்படிக்கி உள்பாவ பெல னுளும் ஒன்ருெடொன்றை நிதானித்துக் கூடியவைகளைப்பற்றி கணக்கெடு த்தவையில் ஓசையானல் ஒன்ருலும் யுக்குமமானல் (உ) னுலும் வாங்கிக் கண்ட சேஷம் (க) ஆகில் யேகதாரமென்றும் புத்திராதி வகைகளையும் பிதுருமாதுருவம்ச பாவங்களையும் சொல்லவேண்டியது.

(2)க்குள் ஒன்றுக்கு மேற்பட்ட மிச்சமானுலும் பெருதாராதி ஒன்றுக்கு மேற்பட்ட தாரா புத்திராதி பலன்களை யுரைக்கவேண்டியது. மேற்கண்டபாவ கிரககாரக வசாதும் கண்டறிந்த பெலன்களுடன் அந்தந்த பாவகாரக பாவவசாத் அஷ்டமாதிபதி அஷ்டம ஸ்திதிகிரக பெலகணிதம் சேர்த்து மொத்தத்தை தனித்தனி கிரகயெண்களை (கூ) ல் கழித்த சேஷம் புக்திகளிலும் வந்த ஈவை (ரு) ல்பெருக்கி (கூ) ல் கழித்த சேஷபுத்திகளிலும் புத்திரகளத்திராதி யந்தந்த பாவக்ஷயம் கர்மாதிகளுக்குறிய தேககெண்டகாலமென்று மறியவேண்டியது. மேற்கண்டதிசாபுக்தி ஒவ்வொன்றையுங் கண்டறியவும்.

களத்திரவிவாக காலநிர்ணய கணிதம்.

திசாபுக்திகளுங் கூறப்படும்.

களத்திர சீவசரீராதிபதி அவர்களின் மூலமான சுபாசுப குணிதயெண்களையு மிராசியெண்களால் பெருக்கியும் ஸ்தான காரகாதிபர்களின் பெல பிரகாரம் அந்தந்த சீவசரீரங்களுக்கு (ச) (எ) (ரு) (கூ) இவ்விதம் (உ) இந்த வீட்டதிபர்களில் லெவர் சம்மந்தமாயினும் உறியபெலன்களை இராசி பெலனுக்குரிய யெண்களால் பெருக்கிய துகைகளையு முன்கொடுத்த துகைகளையும் ஒன்றுசேர்த்து (கூ) ல் தனித்தனி கிரகவசாத் கொடுத்தசேஷம் திசையாகவும் வந்த ஈவை (ரு) ல் பெருக்கி ஒன்பதில் கழித்த சேஷம் புக்திகாலமான திசாபுக்திகளில் பெலாதிக்கமானவர்களின் திசாபுக்திகாலம் விவாகாதி சுபசோபன கல்யாணம் நடக்குமென்றும் இவ்விதமே புத்திரவிஷயக் கணக்குமெடுத்து முன்போலவே கழித்தசேஷ திசாபுக்தி காலங்களில் களத்திரபுத்திரலாபமென்றுங் கண்டறிந்து சொல்லவேண்டியது இவைகளையெல்லாம் யூகித்துக் கூறவேண்டியது. ஒவ்வொருவிதகெணிதங்களில் அந்தந்தபாவ சீவசரீராதிபர்களின் வசாத் ஒவ்வொன்றையுங் கண்டுசொல்லவேண்டியது. மேற்கண்ட கணக்கின்வசாத் அறிந்துள்ளவையில்மிகுந்தவைதான் ஷெ. பாவபெலமென்றும், மொத்தமானபெலத்தினுல் பாவவிர்த்தி பாவதோஷங்கண்டறிந்து ஒவ்வொரு பாவபலன்களையும் சொல்லவேண்டிய தென்றும் மேற்கூறிய ஒவ்வொரு பாவாதிபதிகள் வசாதும் காரகமூலமாகவும் ஒவ்வொரு பாவங்களுக்குரிய மொத்தத்துகைபைக்கண்டபின் ஒவ்வொருபாவ சீவசரீராதிபர்களின் பெலயெண்களையுங்கூட்டியதை ஒன்றுபடுத்திக்கொண்டு அந்தத்துகையை ஓர்புரத்திலெழுதியதை வைத்துக்கொண்டும் அந்தந்த பாவசிவசரீராதிபர்கள் வசாத் (க) (உ) முதலிய ஸ்தானதிபதியானவர்களின் சீவசரீரபெலனுள்ளதும் சுபபெலன்களையெடுத்துக்கொண்ட துகையினுல் மேலே ஓர்புரத்தில் யெழுதிவைக்கும்

படி சொல்லியிருந்த தொகையையும் பெருக்கி (கஉ) ல் கழித்து சேஷம் எதுவோ அதையறிந்தும் மொத்தபாவங்களுக்கு பனிரெண்டுபலனைப் பிரித்து (க) முதல் லெக்கமிட்டிருக்கும் உள்பாபத்தில் மேலேகழித்த சேஷம் எத்தனுவதாக வரப்படுகிறதோ அந்த கணக்கிற்குறிய உள்பிரிவுபலனை யெடுத்துக்கொண்டு சாதகன் லெக்கினவசாத் அந்தபாவ முள்பிரிவுக்கு அதிபதியானவன்சவ்யாதி நான்கின்வசாத் சுபபெலன் யெவ்வளவோ அல்லது பாபபலன் எவ்வளவோ அதுகளையறிந்து சுபபெலன் பாபபெலத்தில் ஈடுகொடுத்தது போக மிச்சம் எவ்வளவுசுபபெலனோ அவ்வளவுபெலன் உத்தமாக அந்த உள்பிரிவில்கண்ட அத்தனுவது பலனை ஜாதகன் அனுபவிக்க பிரயோசனமுள்ளவனோ அவையை யடைவன்.

பூரணபெலனுகில் அந்த உள்பிரிவில்கண்ட பலனை யெப்பவும் அனுபவித்து வருவானென்றும் (ஷ) ஆன பெலஞ் சுபமானல் சிலமத்திய காலமனுபவிப்பனென்றும்.

(൭) பெலனுகில் மத்தியகாலமாக வனுபவிப்பவன் சிலனாள் அனுபவிக்கப்படமாட்டானென்றும்.

(வ) பெலனுகில் அல்பநாள் அனுபவித்துப்பின் னிவனுக்கு கிடையாதென்றம் பாபபெல னதிகமானுல் அந்த நம்பற்பலனை யனுபவிக்கப்படமாட்டானென்றும்.

(ஷ) பாபபெலனுகில் அல்பமனுபவித்து பொருநாளது இன்றிவருந்துவனென்றம்.

(൭) பாபபெலனுகில் மத்தியகாலவறை வருந்திப்பின் அந்தபலனை யனுபவிப்பனென்றும்.

(வ) பாபபெலனுகில் சொல்பநாள் அந்தபாவபலனின்றி வருந்திப் பின் உடைந்து வாழ்ந்தனுபவிப்பனென்றங் கண்டுகொள்ளவேண்டியது.

முன்கூறிய சிலனாள் மத்தியனாள் அல்பனுளென்று சொன்னவை யென்ன சங்கையென்றால் அந்தகிரகத்துக்கு கீழேசொல்லியகாலத்தில் சிலனாள் மத்தியனாள் அல்பனுளென்று கூறல்வேண்டியது இன்னமும்.

அல்பநாள்யென்றால் பாலியகாலமென்றும். சிலநாளென்றால் கவுமாரமானவயது காலங்களென்றும்.

மத்தியநாளென்றால் எவ்வன காலப்பருவ வயதென்றும்.

பூரணனாளென்றால் பாலியமுதற்கொண்டு மரணவரையான விருத்தப்பருவ வயதுகாலங்களென்றுங் கொள்ளவேண்டியது.

மேற்கூறிய மொத்தபாவத்தையும் உள்பிரிவு பாவபலன்களை யறிந்தபின் அதை யனுபவிக்குங் காலநிர்ணய கணிதங்களாவன.

மொத்தபாவ சீவசரீராதிபர்களுக்குறியதும் ஸ்தானம் ஸ்தானாதிபதிகளுக்கும் உறிய கெணித யெண்களை ஒன்றுபடுத்திக்கொண்டு அவர்கள் இருக்கும் ஸ்தானந்தொட்டுக் கண்டறிந்த உள்பிரிவு பாவாதிபதியான சீவசரீரசுபபெலத்துக்குறிய கிரகயெண்களையும் இரரசியெண்களையும் பெருக்கி மேலேசொல்லிய மொத்தபாவ சீவசரீராதிபதிமூலமான யெண்களுடன் கூட்டி (கூ) ல் கழித்த சேஷம் திசையிலும் வந்த ஈவை (ரு) ல் பெருக்கி (கூ) ல் கழித்த சேஷம் புக்திகாலங்களிலும் அவ்விதமான உள்பிரிவு பாவங் கஷ்டபாப பலனேயல்லது சுபபலன் வருகுரதோ அவ்விதபலனை யனுபவிப்பனென்றும் மேற்கூறியபலனை இவ்விதமாக காலங்களுடன் கண்டுபிடித்துச் சொல்லவேண்டியது. இவ்விதமே ஒவ்வொரு உள்பிரிவு பலன்களையும் முன்கூறியதுபோலவே மொத்தபாவ சீவசரீராதிபதிகளிருக்குமிடமுதலாகக்கொண்டு (க) முதல் (கஉ) வரை சீவசரீராதிபதிகள் ஒன்றாகிச் சுபபெலத்துடனிருக்கில் அந்தபெலன் சாதனுக்கு உண்டென்றும் அவர்கள் பெலன்கேட்டு பகைவராகினும் பாபக்ஷேத்திரம் பகை நீசாதியல்லது பெலக்குறைவுடனிருக்கில் அந்தபாவகெணிதமும் உள்பிரிவு பலன்களும் பிரயோசன மடையப்படமாட்டானென்றும் சுபபெலனுக்குறியது அல்லது பாபபெலனுக்குத்தக்கபடி அடையக்கடவனென்றும் யூகித்து உணரல்வேண்டும் மேற்கூறிய உள்பிரிவுபாவாதிபர்கள் சென்மலக்கினவசாத் அந்தபாவம்(அ-கூ-கக-கஉ-ரு)இந்தவீடாகினும்இதற்குசமானபாப க்ஷேத்திரமாகினும் பாபபெலனானாலும் அந்தகணக்கிற்குறிய பாவமான பலனையடை யப்படமாட்டானென்றுங் கண்டுசொல்ல வேண்டியது.

இந்தவிதமான மொத்தபாவ சீவசரீராதிபர்களின் கெணிதயெண்களையும் உள்பாவாதிபர்களான சீவசரீரர்களின் பெலயெண்களையும் தனித்தனி உள்பாவாதி சரீரசீவாதிபர்களின் யெண்களில்கூட்டி உள்பாவம் பனிரெண்டுக்குள் பிரிவுசொல்லியவையின் (கஉ) ல் கழித்த சேஷம் ஒவ்வொரு கிரக உள்பிரிவாதிபர்களின் சீவசரீரமறிந்து. மேற்கூறிய மொத்தசிவசரீர யெண்களுடன்கூட்டி (கஉ) ல் கழித்த சேஷம் இப்படியே சூரியாதிகிரக பாலமுதற்கொண்டு எத்தனைவது உள்பாவபலனை யெந்தெந்த கிரகத்துகையான மிச்சத்தால் காண்பிக்கப்படுகுரதோ அந்தமிச்சம் பலனை யெத்தனை கிரகயெண்களின் சேஷம் தொடப்படுகுர கிரகங்களுக்கு அந்தந்த பாவபல

னுக்கு சீவசரீரமுள்ளகிரகம் அவர்கள்தானா வென்றறிந்து அவர்கள் சுப பெலனுடன் மித்துருவாகி அவர்கள் சீவசரீரமுடையவர்களாகில் ஜாதகன் அந்த கணக்கிற்கிசைந்த அத்தனாவது உள்பிரிவு பாவபலனை சாதகன் அனுபவிக்க கடவனென்றும் சீவன் வேறுகிரகம் சரீரம் வேறுகிரகமானால் அதுசுபராகில்அந்தபலன் தன்முன்னோரால்குடும்பத்தில்விருத்தியாக இருப்பினும் சாதகன் அனுபவிக்கமாட்டானென்றும் அதனால் பெயர்மாத்திரமிருக்கும்இருவரும்பாவராகினும் பகைவராகினும் சுபபெலமுடையோராகினும் அவ்விதபலனே சாதகன் அனுபவிக்கப் படமாட்டானென்றும் பகை பாபமானால் அதனால் விரோதவிவாத துன்ப வருத்தமடைவனென்றும்பல வகைசோகம் அந்தபலனால் கொடுக்கப்படும் ஒருவர் சுபராகி ஒருவர்பாவர் ஆனால் அதிலும் சரீரம் சுபபெலத்துடனாகில் அந்தகணக்கிட்ட உள்பாவம் இவனுக்கு இயன்றதல்ல பரனுடையதாக இவன் அனுபவஞ்செய்வன் சீவ பெலன் சுபமானால் இவனுடைய அந்தபலனை யனுபவிக்கமாட்டான் அதனால் சுகமடையமாட்டான் பிரருக்கு அடையும் பிரரேபிரயோசன மடைவரென்றும், சீவனுஞ் சரீரமும் பெலக்கில் இவனே தன்சோந்தமாக அடையக்கடவன் அவர்சுபரானால் அதனாலதிக கூடுதலையும் சுகமும் பிரபலசுக மேன்மையுண்டாகும்.

பாபரானால் அதனால் நஷ்டத்தையும் ரோகாதிபாதைகளையும் விரோதத்தையும் தனக்குறிய சுகபெலன்களையும்கூட கெடுத்தும் பலதுக்கவனுபங்களை யனுபவிப்பனென்றும்; சமபெலக்காரராகில் அதனால் சுகமுமின்றி கஷ்டமுமின்றி மேற்கூரியவைகள் நிரந்தரமாக நடந்துவரப்படுமென்றுங் கண்டுசொல்லவேண்டியது இவ்விதமே ஒவ்வொரு உள்பிரிவு பாவமேன்மைகளையுங்கண்டு கூறவேண்டுவ ;தவசியமாதலால் இதை நிதானித்துச் சொல்லவேண்டியது இதன் கால நிர்ணயங்களை மேலேகூறிய காலநிர்ணய விதிப்பிரகாரங் கணித்து அரிந்துக்கண்ட சேஷம் உள்ள திசாபுக்தி காலங்களில் மேற்கண்டநம்பர் உள்ளபலன் சுபமோ அல்லது பாபத்துவ அசுபமோவென்றறிந்து அதற்குள்ள சுபபெலத்தின் பலனையும் பாபபெலத்தின் கஷ்ட நஷ்ட துன்பங்களையும் சொல்ல வேண்டுவது அவசிகம்.

துவாதச லக்கினங்களிலும் பிரந்தவர்களுக்கு பாபசுபமாரகங்களாகிய கிரகங்களைக் கூறப்படுமென்ற வாரு.

மேஷ லக்கினத்தில் பிரந்த சாதகனுக்கு சுக்கின்ர புதன் பாபியென்றும் சுக்கிரன் மாரகாதிபதியாகினுங் கொல்லா னென்றும் குரு சனியோக

காரகர்களென்றும், சனி முதலில் கேடும் பின் பாகத்திலவன் திசையில் யோகமும், குருதிசை பின்பாகம் அவயோகமும் குசன்சூரியசந்திரர்கள் சுபர்களென்றுங் கூறப்பட்டன. சனி இராகு சுக்கிரன் கொல்லாமற் கொல்வர்.

சுக்கிரன், சந்திரன், சனி இவர்களுடைய திசாபுக்திகளில் மாரகத்தைக்கொடுப்பார்களென்றுங் கூறப்படும்.

மேற்கூறிய மேஷலக்கினத்தில் ஜெனித்தவர்களுக்கு நான் காந்திசை சூரியனாகவும்,மூன்றாந்திசை சந்திரனாகவும்,இரண்டாந்திசை சனிகுருவாகவரில் இத்திசையில் அவரவர்களின் தனது புக்திசென்று குரு சனி சுக்கிரன் சந்திர சூரியன் இவ்வித புக்திகாலத்தில் அதியோகமென்றும் இராசயோக பிரபலத்தையும் மிகவும் கிரகவாகன பலிதங்களையும் கீர்த்திகளையும் களத்திர புத்திரலாபங்களையும் தேசாடனத்தால் பிரபலசுகங்களையும் கொடுப்பார்களாகும், இதில் இராகுபுதன்கேது சுயபுக்திகளில் குடும்ப கருமம் சத்துருரோகங்களையும் விவாதங்களையும் கொடுக்கப்படும் குசன் புக்திகாலத்தில் முன் சுகபலன்களையும் பின் மரணதுக்கபலன்களையும் கடன்முதலாகிய உபத்திரவங்களையும் கொடுக்கப்படுமென்றும், குசன் இராகு கேது புதன் இந்தத்திசையிலுஞ் சுக்கிரன் இவ்வித திசையிலும் தனது சனி சூரியன் சந்திரன் குஜபுக்தி காலத்தில் இராசதெண்டனை விரோதம் இடப்பெயர்ச்சி சீவனக்குறைவு பித்தவாதநோய்த்துன்பம் பலகவலை மாதுரு பிதுருகற்மம் சகோதிர புத்திரகளத்திரவரிஷ்டம் இவ்வித துக்கபலன்களை பூர்வரர்சித நஷ்ட்டம் றொணம் சத்துருபாதையுண்டாம். குரு புதன் கேது இராகு இந்த புக்திகாலத்தில் மிகவும் தனவிற்தி குடும்ப சுகசௌக்கியங்களையும் சுபசோபனம் கலியாணம் இஷ்ட்ட வெகுமானஞ் சீவன பலன் புத்திரகளத்திர பலன்களையடையப்பட்டபோதிலும் மனதுக்கு திருப்தியின்றி நடக்கும்.

ஜாதக தேகசுகம்

குருதிசை சனி சந்திரன் இவ்வித புக்தியென்றும் சனிதிசை குரு சூரியன் சுக்கிரன் புக்தியும், குசன் சந்திரன்றிசையில் குரு சுக்கிரன் புதன் புக்தியாகும்.

புதன் திசை தனது சுக்கிரன் சூரியபுக்தியிலும் கேது திசை குசதிசையில் தனது சனி புதன் புக்தியில் பித்தவாயு நீருபத்திரவமும் இராசவிரோதமும் கொடுப்பார்கள் யோககுறைவு முண்டாகும்.

சனி புதன் சுக்கிரன் திசைகளில் சந்திரன் இராகு சனிபுக்திகாலங்களில், மாதுருபீடைகொடுக்கும், சனிகேது இராகு திசையின் காலம் சுக்கிரன் ரவி குசன் இந்த புக்தியில் பிதுராரிஷ்ட்டகாலமாகும்.

சுக்கிரன் சனி இராகு திசையில் குரு சுக்கிரன் சனி இந்தபுக்தி காலம் களத்திர கெண்டமாகும்.

குரு இராகு புதன்திசையில் குசன் சனி இராகு கேது இந்த புக்தி வருங் காலத்தில் புத்திரசகோதிர வரிஷ்ட்டங்களைக் கொடுக்கும்.

குரு சனி சுக்கிரன் இராகு இந்தத்திசையில் குரு குசன் சந்திரன் சூரியன் சுக்கிரன் இந்தபுக்திகாலத்தில் இராசானுக்ரகதனலாபமும் மிகுதியான வாகனமுங் கன்றுசாலியும் உத்தியோக ப்ராபல்லியங்களையும் மிகுதியான கீற்திமூற்தி புகழ்ச்சிகளையும் கியாதிகளையும் விவகார செயத்தையும் இராஜ விரோதங்களை நிவர்த்தித்து, மேலானவனுகூல உத்தமபலன்களையும் சுயகிரகம்பூமிகளையும் கொடுத்து, போகபலனுகவே அடைந்துவருவனென்றுங் கூறப்படும்.

ஷலக்கினத்திற்கு குருவுடன் சனி அல்லது சந்திரன் இராகுசேர்ந்தால் மாத்திரம் அவர்கள் திசாபுக்தி அந்திரத்தில் விசேஷ யோகமுண்டு, தனித்தாவது வேறே குசன் குரு சேர்ந்திருக்கில் சம பலனையும் அல்லது சுக்கிரன் புதன் சேரினும் சூரியன் சேர்ந்திருந்த போதிலும் தேக வியோகாதியோககுறைவு சத்துருராசபயம் நஷ்ட்டம் ரோணம் குடும்ப விரோதாதி கெடுதல் அன்யஸ்தல சஞ்சாரங்களைக் கொடுக்கப்படும்.

அந்தந்த கிரகங்களுடனே பாபர்கள் கூடியிருக்கில் அசுபபலனையும் சுபர்கள் கூடியிருக்கில் மிகசுப பலன்களையுங் கொடுப்பார்களெனக் கண்டு சொல்லவேண்டியது.

மேஷலக்கினத்தின் பாவகண்டிதங்களை கணிதப்ரகாரமாய் கூறப்படுகின்றனவாம்.

க-லக்கினமாகிய மேஷலக்கினபலன்.

இராச பூச்சியன் திரபுத்தியுடையவன்ஆபரணஞ்சேர்ப்பான் அடிமையுள்ளவன் இளைத்த சரீரன் ரோகி தனமுடையவன் சாமர்த்தியன் தர்மசாஸ்திரவிருப்பமுடையவன் நீண்டகழுத்தும் வரமுறைவாற்தையும் கோபிசீவ இம்சை செய்வன் ரு-வயசு ரு-மாதம் தீயினுற்பயம் எ-வது, ௰-வது, சுரம், உ௦-வது வயசு காலம் இஷ்ட ஸ்திரீவாகேயும், உ௰உ-வது வயதில் காதுநோய், உ௰-கூ௰-வது வயசில் விஷபயம், ரு-உ௰ரு-ல், செலகெண்டம்

உயிஅ-வது, வயசில் பிளவை யிரண்டுேயும் உண்டாகும், இந்த மேஷலக் கினத்தை குருமுதலிய சுபக்கோள்பார்க்கினுமிருக்கினும் ஷெ கண்டங்களுண்டாகி னிவர்த்தியாகுமென்றும் பின்மொத்த வாயுள் ள-யென்றுங் கூறப்படும்.

பாவகணித நிர்ணயமாவன.

முதலாவது ஆயுர் பாவம் லக்கினுதிபதியாகிய குசன் கேந்திரத் திரிகோண இராசியில் நீசம் பகை யில்லாத விடத்து குரு சனி சந்திரனில் ஒருவருடன் கூடி சார்ந்தோர்களாகிய கிரகங்களும் பெலமுடன் உச்சத்தினிற்கினும் அந்த வீடானது சரவிராசி களாகியதுமாக விருக்கில் சாதகனுக்கு மற்றய பாபக் கிரகங்கள் (யக) (ய) (ரு) (ரு) இவைகளிலிருக்கில் அப்படிக் கொற்ற சாதகனுக்கு வாயுள்(ள)-ம் குரு வொன்றே லக்கினுதிபதியுடன் கூடி பெலத்துடன் இருக்கில் வாயுள் (எரு)சனி ஷெ கண்ட விதிப்படி இருக்கில் ஆயுள் ருயி-ம், சந்திரனுடன் இருக்கில் ஆயுள் உரு-ம், கொண்டுரைக்க வேண்டியது.

சு-அ-கஉ மிடங்களிலும் உ-மிடங்களிலும் லக்கினுதிபதி மேற்கூறிய கிரகத்துடன் இருந்தாலும் அல்லது தனித்திருந்தாலும் ரோகியாகி வருடுக-வரை வாழ்வ னென்றும்.

கக-ரு-செனம லக்னத்திலாவது அல்லது உ-கஉ-வது வீட்டில் புதன் இராகு சூரியன் முதலிய பாபிகள் சேர்ந்திருக்கினும் பெலமற்ற இடங்களாகிய நீசம் பகை இவ்வித ஸ்தானங்களில் லக்னுதிபதி இருக்கில் குழவிப்பருவ காலமாகிய வருடு எ-க்குள் பாலாரிஷ்ட சாதகனென்றும் சூரிய சந்திர சமமாக கிரகங்களுடன் குரு அஸ்தமனமாகி குசன் பெலத்துடனிருக்கில் வருஷம் (ருஉ) ல் மரண மடைவ னென்றும்.

குசன் சனி குரு இவர்கள் தனித்தனியாகிய கேந்திர திரிகோண விடத்தில் இருக்கினுஞ் சுபர்களாகிய சந்திரன் சுக்கிரனைச் சேர்ந்திருக்கின் பூரணயுள் என்றும்.

ஸ்திர விராசிகளில் மேற்கூரிய கிரகங்கள் சுபருடனே கூடி இருக்கில் மத்திமத்தில் பூரண வயதும் உபய விராசிகளாகில் மேற்கூறிய லக்னுதிபதியும் அவருடன் குரு சனி சந்திரன் இருந்தாலும் அல்லது தனித்து சர விராசிகளிலிருக்கினும் மத்திமத்தில் மத்திம வயதென்றும் சர விராசியில் குசனும் சனி குருமதி இவர்கள் ஸ்திரவிராசியில் இருக்கில் மத்தி மத்தில் அல்பவயதென்றும்.

சரவிராசியில் குசனும் மற்றய குரு சனி சந்திரன் சரவிராசிகளி லிருக்கில் தீர்க்கத்தில் பூரணவயதென்றும்.

சரவிராசியில் குருமுதலிய மேற்கூறிய கோளும் குசன் மாத்திரம் ஸ்திர விராசியிலிருக்கில் பூரணத்தில் மத்திமவயதென்றும் உபயவிராசி களில் குருமுதலிய கோளுங் குசன் ஸ்திர விராசியிலிருக்கில் பூரணத்தில் அல்ப வயதென்றும் குசன் உபயவிராசியிலும் மற்றய கிரங்கள் ஸ்திர விராசியிலிருக்கில் அல்பத்தில் அல்பமென்றும் ஸ்திரவிராசிகளில் குச னும் ஸ்திரவிராசியில் மற்றய குரு முதலிய கிரகங்ளிருக்கில் அல்பத்தில் மத்திமமென்றும் ஸ்திரவிராசியில் குசனும் உபயசரவிராசியில் குருமதி யும் ஸ்திர உபயராசியில் சனிமுதலிய பாபகிரகங்களிருக்கில் அல்பத்தில் அல்பவயதுக்குள் ஆயுள் முடிவென்றும் அறிந்துக்கொள்ளவேண்டியது.

பூரணத்தில் பூரணவயதாவது வருஷம் ா-யென்றும்.
பூரணத்தில் மத்திமம் வருஷம் அகூ-ம்
பூரணத்தில் அல்பமான வருஷம் எள-ம்
மத்திமத்தில் பூரணம் வருஷம் சுகூ-ம்.
மத்திமத்தில் மத்திமம் வருஷம் ருச-ம்.
மத்திமத்தில் அல்பம் வருஷம் சச-ம்.
அல்பத்தில் பூரணம் வருஷம் ௩௩-ம்.
அல்பத்தில் மத்திமம் வருஷம் உ௨-ம்.
அல்பத்தில் அல்பம் வருஷம் கக-ம்.

யென்றறியவேண்டியது.

ஆயுர்பாவகணிதம்.

குசனையுங் குசனுடன் கூடியகிரகங்களையுங்கண்டு சனியுடன் கூடிய கிரகங்களையும் சனிக்கி யெட்டாம் இராசியிலுள்ள கிரகங்களைக்கண்டும் விருச்சிகத்தில் இருக்கும் கிரகங்களையுங்கண்டு இந்தசம்மந்த கிரகங்களில்,

கிரக கெணிதயெண்.

சூரியனுகில்	ரு-ம்
சந்திரனுகில்	உக-ம்
குசனுகில்	எ-ம்
புதனுகில்	கூ-ம்
குருவாகில்	கo-ம்

சுக்கிரனாகில்	கசு—ம்
சனியாகில்	ச—ம்
இராகுவாகில்	ச—ம்
கேதுவாகில்	ச—ம்

ஆனகுணிதத்துகை ஒன்றசேர்த்து அவர்களின் ஐவகைப்பெலன் களைகண்டறிந்ததில் எவ்வளவு பெலனிருக்குரதோ அந்தத்துகையுடன் பெருக்கினதுகையை ஓரிடத்திலெழுதிக்கொண்டு சுக்கிரனுடனும்சனிக்கி உ-எ-ம் இடத்திலிருக்கிரவர்களல்லது அவ்வாதிபதியுடன் கூடியவர்களு டன் கூடியகிரகங்களின் பெலாபெலனுக்கிசைந்தபடி மேலே கூறிய கணி தப்படிக்கி கிரகங்களுக்கு கண்டதுகைகளை ஒன்றபடுத்தி மேலேசொல்லிய ஐவகைப்பெலன்களில் வருந்துகையை ஒன்றசேர்த்து மேலே கூறிய கிரக குணிதத் துகைகளை யொன்றபடுத்தி பெருக்கிக்கொண்டு (உ) துகைகளை யும் பெருக்கி க00—ல் குடுத்துவந்த மிச்சம் ஆயுளென்றும் மேலே பெரு க்கியதுகையை கூ—ல் கழித்தமிச்சம் யெத்தனையோவத்தனுவது திசையில் சாதகனுக்கு ஆயுள் முடிவென்றும் இத்திசைக்கணக்கை சாதகன் சவ்ய மானல் மிச்சமானதுகை யெத்தனையோ அத்தனை திசையென்றும் அபசவ் யமானல் மீந்ததுகைபோக கூ—ல் கழித்தசேஷம் எவ்வளவோ அத்தனையா வது திசையில் மாரகமென்றுங்கண்டரியவேண்டியது, மேலே கூறியவரு ஷமும் இப்படியே அரிந்து வயசு ஹ காணவேண்டியது அவ்விதந் திசை களையும் ஒட்டிக்கொண்டபின் ஈவுத்துகையை ச—ல் பெருக்கி கஉ—ல் கழி த்த மிச்ச யெண்ணே மேஷமுதல் யெண்ணிக்கண்ட இராசியில் சனி, இராகு அல்லது கேதுவருங்காலம் மாரகமென்றும் மேலேவந்த ஈவை க0—ல் பெருக்கி கஉ—ல் கழித்த மிச்சம் இராசியில் குரு வருங்காலமான வருஷத்திலும் வந்த ஈவுத்துகைய நு—ல் பெருக்கி வந்ததை கஉ—ல் கழி த்து இராசியில் சூரியன் வருங்காலமாதமாகவும் ஈவுத்துகையை உக—ல் பெருக்கி உஎ—ல் கழித்த மிச்சம் நக்ஷத்திரமென்றும் ஈவுத்துகையை உசு—ல் பெருக்கி சுo—ல் கழித்தமிச்சம் கடிகையென்றும் மரணகாலகணி தங்களை அரியவேண்டியது.

இவ்விதமே ஒவ்வொரு லக்னங்களுக்குகூடிய கிரகங்களை வைத்து இவ்விதகணிதஞ்செய்து ஆயுள்மரணகாலகணிதங்கள் செய்யவேண்டியது இதினுலும் கிரகபெலாபெலன்களை மெத்த யூகித்தலின் பேரிலும் உணர் ந்து கணிதஞ் செய்யாவிடில் யாவும் பிரழ்ந்து விடுமென்றும் அரியவேண் டியது ஆகையால் அஸ்திபாரத்தை மிகவும் உணர்ந்து நிதானித்தல் வேண் டும் என்றரியவேண்டியது.

௨-வது தன குடும்பங்களைப்பற்றிய விவரணங்களாவன.

சுக்கிரன் சரவிராசிகளில் இருந்தாலுமல்லது சந்திரனுடன் கூடி ௨-ளல் இருந்தாலுங் குரு விசேஷணியம் பெற்றும் பனிரெண்டாமிடத்துக் கதிபனுடன் கூடாமலும் குரு க்ஷேத்திரமல்லது உச்சவிராசிகளி னின் றுஞ் சனி குரு சம்பந்தமாகினும் சந்திரகேந்திரமாகி இருக்கினும் பெண் வழியால் தனமும் பிதுர் பூர்வார்சிதமும் மிகபிரபலத்தை சென்ன ஸ்தா னத்துக்கு அக்கினிதிக்கு வாயுதிக்குகளிலிருந்து விற்தியாகும் அவ்வித பெலனுட பாபர் திருஷ்டி சம்மந்தமின்றி இருக்கில் (கோடியாந்திர ஆர்சி தமுடையவன்.

இராகு முதலிய குசன் மேஷம் மகரத்திலிருந்தபோதிலும் கோடியா ந்திரதனவானென் றறியவேண்டியது.

மேற்கூறிய சுக்கிரன் குரு இவர்கள் நட்பு ஆக்ஷிஸ்தானங்களில்கேந் திர திரிகோணத்திலிருந்து சந்திரனுங்கேந்திரத்தில் ராகு குருவீட்டிலா வது இருக்கின் குசன் சனி முதலியோர் பார்த்தபோதிலுங் கூடி இருந்த போதிலுஞ் சாதகன் லக்ஷாந்திரக் கணக்குள்ள தனத்தை அடைவன் யென்றும்.

மேற்கூறிய சுக்கிரன் குருவும் குருவுக்கு ௨-மிடத்துக்குடையவன் கேந்திரத்திலும் நட்பாக்ஷியில் சூரியன் புதனுடன் அல்லது பாபக்கிரகங் களுடன் கூடி யிருக்கில் சகஸ்திராந்தரமுடைய பொருளுடையவ னென்றும்.

குரு சுக்கிரன் மூன்று ஆரெட்டிலாவது அல்லதுகேந்திரதிரிகோ ணங்களிலிருந்து நீசம் பகைப்பெற்று இராகுகேதுமுதலிய கிரகசம்பந்தம் பெற்றிருந்தாலுஞ் சதாந்திரமுடையவபொருளை உடையவன் என்றும்.

௩-௮-௰௨-யிடங்களில் பகையோர்கள் துர்ப்பலபாபிகளாகியபுதன் இராகு கேது குசன் சனி இவர்களுடன்கூடி குருவுக்கு இரண்டு பனிரெ ண்டாமிடத்திலும் சென்ம லக்கினத்துக்கு ௨-௰௨ மிடத்திலும் இருக்கில் சாதகன் தனமில்லாதவனாகி தரித்திரமடைவனென்று குரு சுக்கிரனுடன் புதன் சூரியன் சனியிருந்தாலும் செவ்வாய் சனியுடன் கூடி (௨) மிடம் (௰௨) மிடங்களிலிருக்கினும் இவன்றனங்கள் கடன்களாலும் இராசாக்க ளாலும் விரோத விவாதத்தாலும் அக்கினியாலும் சோரத்தாலும் அழிந்து தேசபிருஷ்டனாகி வாழ்ந்து வருமை நோயிற்றன்ப மடைவனென்றும்.

குரு சுக்கிரன் (௫) (௯) மிடங்களில் குருவுடனே சூரியனும் சுக்கி ரனுடனே சந்திரனுமிருக்கில் கெட்டுப்போன பின்னும் இராசாக்கள் வை

சியத்தொழிலாளரைச் சேர்ந்துபின் இராசயோகமுண்டாகு மென்றும் கூறப்படும்.

குருவுக்கு இரண்டாமிடத்ததிபனுடனும் சுக்கிரனுடனும்புதன் சந்திரன் இராகு கூடி இருக்கில் வைத்தியஞ் சோதிஷ விஷயத்தால் கெட்டுப்போனபின்தனத்தைத்தேடுவன் சுக்கிரன் தனித்தாலும் சனியுடனே புதன்சந்திரன் இருந்தாலும் அல்லது இரண்டு மூன்றுமிடத்திலாவதுகுருவுக்கு (௨) (௩) மிடங்களி லிருந்தாலும் வியாபாரத்துடன் பலவிததொழிலில்விவாதவழக்குகளாலும் பொருளைத்தேடுவன்இவ்வித கிரகங்கள்குருவைசேர்ந்தாலும் குரு (௨) (௰௧)ல் இருந்தாலும் (௬) மிடத்திலிருந்தாலும் சாதகன் பலபேருக்கு ஷயசனுகவாவது உபதேசகர்த்தாவாக இருந்தாவது தனத்தைத்தேடுவன். ஷை குரு சந்திரன் சனி இவர்களுடன் புதன் சுக்கிரன் குசன் சேர்ந்திருக்கில் நடநாடகம் புரிந்து தனமடைவன் புதன் சுக்கிரனுடனே சனி இராகு கூடி மிதுனம் மகரம் விருச்சிகத்திலிருக்கில் மனையாளையல்லது குடும்ப உடன் பிறந்தாரை கூட்டிக்கொடுத்து பொருளைத்தேடுவன்.

குசனுக்கு இரண்டாம்வீட்டதிபனும் சுக்கிரனும் உச்சசொஷத்திரத்தில் குசனுடன்கூடி குசன்வலுத்து குருவுந்தன்வீட்டில் இருக்கில் பூமிப்பொருள்கிடைத்து அதனுல் தனவிர்த்தி செய்வனென்றும் குரு சுக்கிரன் மீனம் கன்னி மிதுனத்தில் னின்று சனி ராகு பாபிகளின் சம்மந்தம் பெற்றிருக்கில் சாதகன் கெட்டவிஷயத்தாலும் பெண்போகத்தாலும் பொருள்களழிந்துவிடும் இதில் கேதுகூடி விருச்சிகத்திலாவது மகரமீனமிவைகளிலிருக்கில் குடியினுல் பொருளை இழப்பன்.

குரு கடகம் சிம்மம் விருஷபம் கும்பத்தில் சந்திரன் சூரியனுடனே கூடி இருந்து சுக்கிரன் துலாத்திலாவது மீனத்திலாவது குசன் சந்திரசம்பந்தம் பெற்றிருக்கில் கீர்த்தி பெற்ற விவகாரம் சட்ட திட்ட மூலங்களால் பொருளை யாற்சிப்பன்.

மேற் கூறியவர்களுடன் புதன்கூடி விருஷபம் தனுசு மீனத்தில் சுக்கிரனிருந்தும் குரு தனுசு சிம்மத்தில் சூரியனுடன் கூடிஇருக்கில் சுருதி வித்தை புராணத்தால் தனத்தைத்தேடியுங் கீர்த்தியைப் பெருவன் யென்றும்.

(௨) (௰௨) மிடத்திலும் (௰௧) மிடத்திலும் ராகு குசன் சனி சுக்கிரன் இவர்களுடன் இருக்கில் திருட்டு பாபத்தொழில் கொலைகள் மதுவிற்பனையால் தனத்தை யாற்சிப்பன் யென்றும்.

சனி சுக்கிரன் குருவுடன் புதன் சந்திரன் விருஷபம் மகரம் மீனம் க்டகம் மிவைகளிலிருக்கில் கப்பல் வியாபாரத்தால் பொருள்கள் முன் தேடிடாது பின்தேடுவன். முன்னஷ்டமும் பின்லாபமும் பின்னஷ்டமும் முன்லாப மடைவனென்றுங் கூறப்படும்.

சுக்கிரன் புதன் கேந்திர திரிகோணத்தில் குருபார்வையுடன் அல்லது இரெண்டாமிடத்தை குரு சுபசந்திர னிவர்கள் பாற்கில் மிகவுமேலாகிய குடும்பத்தோனுகி பிரபல குடும்ப விற்தியுடன் வைதீக குடும்பஸ்தனுகி அல்லது வித்தியா குடும்பஸ்த னென்றும் மேல் மேலான குடும்பபிரபலமாகி வருமென்றும் மேற்படி கிரகங்களுடனும் ௨-௧௨-மிடத்திலும் பாபிகள் இருந்தும் பாபிகள் பாற்தும் நீசம் பகை பெற்றிருக்கில் குடும்ப முன் விற்தியாயிருந்து பின்வரவர குறைந்து சின்ன பின்னங்களாகி பல மரண துக்கத்தையு மடைந்து வேறுபட்டு ஸ்தானங்களை விட்டிழுந்து பாபத் தொழில்களையும் விபசாரங்களையுஞ் செய்து குலகீனத்துவத்தை யடைவர்களென்றுங் கூறப்படும்.

௨-ரு மிடத்தில் சுபர்கள் குரு சந்திரன் சுக்கிரன் இருக்கில் வாக்கு பலிதமும் குசன் சூரியன் இருக்கில் கடுமை வாக்கும் குசன் கேது சனி இருக்கில் விஷவாக் குடையவன் கோபியென்றும் சுப பாபசம்மந்தமிருக்கில் மிருதுவாக்கனுகியும்.

௨-ரு-க்குடையவனும் புதனும் நீசம் அல்லது அஸ்தங்கதமாகிசனி இராகுவுடன் கூடினுலும் ஸ்திர விராசியில் இருக்கினும் கேதுஉடன்கூடி மூவித பாபத்துவ பெலனுடன் இருக்கில் சாதகன் ஊமை உளர்வாயாதிகனென்றும் வாயூனப் பட்டுப்போவ னென்றும் சனி சுக்கிரன் கூடி சூரிய சம்பந்த மிருக்கில் பொள்வாயன் வாய்நாற்ற முடையவனுகி அரூபியாகி விடுவன் சனி புதன் கூடினுலும் மேற்கண்ட படியாகியும் பிசகு அசத்தியனுகியும் அப்பிரமாண குருவாகியும் வாழ்வன் என்றறிய வேண்டியது. இவைகளுக்கு குரு முதலிய சுபக்கோள் கூடினுலும் பாற்தாலும் இவ்வித கெட்ட நடத்தை னீக்கிஅல்பமான எண்ணமுந்திக்கு வாயனுகியும் அல்ப பிசகனுகியும வாழ்வா னென்றறிய வேண்டியது.

சுக்கிரன் குசன் மதி இவர்கள் விருஷபம் தனுசு மகரம் மீனம் இந்த விடங்களில் சனி யுடன் கூடி குரு னேக்கம்பட விருக்கில் பிரபல பூமிகட்டெடத்தால் பொருளைத்தேடிஅரசனுகி வாழ்வன்என்றறியப்படும்.

சூரியனுடனும் சூரியனுக்கு இரெண்டாமிடத்துக் குடையவனுடனும் சுக்கிரனுடனும் சனி இராகு கேது இருக்கினும் மூன்றுரெட்டில்

பெலமற்ற இடத்திலும் சுக்கிரன் புதன் இரெண்டில் சனிஇராகு சம்பந்தமாகி பெலன் கெட்டிருக்கில் சாதகன் அந்தகனென்றும் குரு மதிநோக்கவாவது இருக்கவாவது பெரின் அந்தகத்துவம் னீங்கி அல்ப னேயரிஷ்டிக்கு மென்றும் அந்தியகாலம் நேத்திரமறையும் என்றும், சூரியன் சுக்கிரன் இரண்டிலிருந்து புதன் கூடியதில் சனி முதலியோர் நோக்கின் நீலக்கண்ணன் முழி குருடன் புதன் ஒருவன் சேரில் மாலைக்கண்ணன், மதி கேது குசன் சூரியனுடன் அல்லது சூரியனுக்கு (உ)ல் லக்னத்துக்கு (உ) இவைகளிலிருக்கில் மேகனீ ருபத்திரவ நேத்திரத்தை உடையவனென்றும், குசன் கேது மாத்திர மிருக்கில் ரெத்தநேத்திரன் விழிபெருத்தவன் மத்திய காலத்தில் நேத்திர பீடைகள் உண்டென்றும்.

இவையை குரு முதலாகிய சுபர் னேக்கில் அல்பமாக காண்பித்து உடனுக்குடன் னீங்கிவிடு மென்றும் இடபத்தையாவது மீனத்தையாவது, சூரியனுக்கு (உ)-(யஉ) மிடத்தையாவது குசன், கேது, பார்த்தாலும் பாபி இருந்தாலும் உஷ்ணநேத்திர ரோகியாவான் யென்றும்.

அந்தஸ்தானத்துடையோர் பெலமுடன் தனுசு, கடகம், கும்பத்தில் குரு முதலிய சுப சம்பந்தனேக்கமுரில் மிகவிசேஷ வியாதியின்றி நேத்திர னேப்கண்டு, உடனுக்குடன் னீங்கி விடும் யென்றும்.

சனி முதலிய இராகு குசன் சூரியனுடன் உ-யஉ-மிடத்தில் அஸ்தங்கதமாகி சூரியனுக்கு (உ) (யஉ) மிடத்ததிபதிஇருக்கில் பிறவிக்குருடனென்றும், மற்றவை மத்தியில் னேப்த் துன்பங்களால் நேத்திரம் போகுமென்றும் யூகித்துரைத்தல் வேண்டும்.

இதில் ஷை திசாபுக்தி காலத்தில் நேத்திர னேயுண்டாகு மென்றும் சுபம் பெற்றவர் திசா புக்திகளில் மிகவும் இராச சமான வாக்கு பலிதம் குடும்ப விர்த்தியு முண்டா மென்றரிய வேண்டியது.

தனத்தினளவை.

கணிதபாவங் கணிக்கின்ற விதியுணரவேண்டியது.

சுக்கிரனுக்கு யசு-ம். சனியின்பாகம் (அ),ம் அத்துகை (உச) உடனே குருவிற்கிரண்டாம் வீட்டிலிருக்கும் கிரகம் சூரியனகில் (ரு)ம், சந்திரனகில் உக-ம், குசனகில் எ-ம், புதனகில் கூ-ம் குருவாகில் ய-ம், சுக்கிரனகில் கசு-ம் சனியாகில் ச-ம், இராகு கேதுவாகில் தனித்தனி ச-ம், எத்தனை கிரகஞ் சேர்ந்தாலும் அவ்வளவு துகைகளையும் ஒன்று சேர்த்துக்கொண்ட துகையையாவது அல்லது குரு நின்ற இராசிக்கி

உ-ம்வீட்டில் கிரகமில்லாவிடில் இந்தவீட்டுக் குடையவனிருக்குமிடத் திற் கூடிய கிரகங்களின் துகையையும் லக்கினத்துக்கிரண்டில் இருந்த கிரகத் துகையைபாவது கிரகமில்லாவிடில் இரண்டிற்குடைய கிரகத்து டன் சார்ந்த கிரகத்தின் துகைப்படியுள்ள முன்கூறிய கிரகங்களின் வெண்படிசேர்த்து ஒன்ருக்கி பாபபெலனுகிய நீசம்பகை சனி இராகு கேது இவர்கள் சேர்ந்திருந்த துகையாகில் தள்ளுபடி செய்து மற்றவை களை யொன்றுபடுத்தி வைத்த துகையையும்.

இராசிகணிதவெண்கள்.

கிரகங்கள் கூடினவிராசி.

மேஷமாகில் (எ)லும்,
விருஷப சிம்மமாகில் (ய)லும்,
மிதுன விருச்சிகமாகில் (அ)லும்,
கடகமாகில் (அ)லும்,
கன்னி மகரமாகில் (ரு)லும்,
துலாமாகில் (எ)லும்,
தனுசுவாகில் (கூ)லும்,
கும்பமாகில் (கக)லும்,
மீனமாகில் (கஉ)லும், பெருக்கி வைத்துக்கொள்ளவும்.

சுக்கிரன் குரு உச்சமாகி உச்சகிரகங்கள் ஜாஸ்தியாகச் சேர்ந்திருக் கில் (அ) தரஞ் சமத்துகைப் போட்டுப் பெருக்கியும் ஆக்ஷியாகில் (௩) தடவை சமத்துகையால் பெருக்கியும், நட்பு ஆகில் (உ) தடவை சமத் துகைபோட்டு பெருக்கியும், பகையாகில் (க)½ தடவையும், நீசமாகில் (க) தடவை பெருக்கிய துகையில் பாதியுஞ் சேர்த்து பார்த்து வைத்துக்கொண்டு.

அந்த கிரகங்களானது யாவுங் கேந்திரமே இருக்கில் கால்பங்கு கூட்டியும் திரிகோணத்தில் இருக்கில் அதே துகையென்றும்.

உ-௩-கக-மிடங்களிலிருக்கில் கால்பங்கு குறைத்தும் கூ-மிடத்தில் கஉ-மிடத்திலிருக்கில் அறைப்பங்கு குறைத்தும் அ-மிடத்திலிருக்கில் முக்காற் பங்கு தள்ளி நின்ற சேஷம் எவ்வளவோ அவ்வளவு பொன்ற னஞ் சாதகனுக்கு உண்டென்றும் ஆயுளுக்குள்பட்டதுள் லாபமென் றும் பெயராகும்.

இதில் பகை நீசம்பெற்றிகோள்களும் ௩-௬-௮-௧௨-மிடங்களில் மேலே கூறிய கிரகங்கள் நின்று கணித கணக்கிற்கு இசைந்துபெருக்கி வந்த தொகை கடனாளியாகிப் பொருளையுமிழந்து பலவாராகிய கஷ்டத்தை யடைவனென்றுங் கூறப்படும்.

மூன்றும் பாவ பலன்கள்.

புதனுடனும் மூன்றுமிடத்தினும் குசனுக்கு, மூன்றுமிடம் மூன்றுதிபனுடனும் சனி இராகு கேது யிருக்கில் ஷ ஸ்தானங்களிலிருக்கின்ற மற்ற எவ்வித கிரகங்களும் பார்வையாவது அல்லது சேருமலிருக்கில் சகோதிரமில்லான்.

குசன் தனித்து மூன்றுமிடமான மிதுனத்தில் பெரும்பாபிகளுடன் கூடியிருக்கில் பாபர்பார்க்கிலுஞ் சகோதிர பின்னில்லான்.

குசன் மூன்றுமிடத்திருந்து அசுபர்பார்க்கில் பிறந்திருக்கும் சாதகனுக்கும் மூன்று மிடத்திருக்கும் குசன் குரு முதலிய சூரியன் கூடினும் பார்த்தாலும் ஆண்சந்ததி அதிகமுள்ளன் சுக்கிரன் சந்திரன் புதன் கூடினாலும் பாற்தாலும் பின்சகோதிரம் பெண் ஜாஸ்தியுள்ளவன் சுக்கிரனிருக்கில் மூன்றில் குசனுக்கு மூன்று மிடத்தில் இருக்குங் கிரகங்கள் சந்திரன் புதனுகில் அடுத்த ஆண்டு (௰௨)-க்குள் பெண்ணே ஜெனித்து வரும் குசன் சனி கேது இவர்கள் கூடினாலும் பார்த்தாலும் அப்படிக் கொற்ற சகோதிரங்கள் மரணத்தை யடையும்.

குரு சந்திரன் தீர்க்க பெலத்துடன் னேக்கமாவதுஇருக்கினும்அவ்விதம் நோக்குபவரை பாபிகள் பார்க்கினும் கூடினும் சிலகாலஞ் சகோதிரமிருந்து மரணத்தடைவார்கள்.

புதன் சுக்கிரன் முதலிய கோள் குசனுடன் அல்லது மூன்றில் மிதுனத்திலிருக்கில் பாபிகள் நோக்க மலலது சேர்ந்திருக்கில் சகோதிரர்கள் விவாகம் புத்திரறை அடைந்தபின் மறணமடைவார்கள்.

சனி சூரியன் கேது மேற்கூறிய இடங்களிலாவது அதிபர்களுடனாவதிருந்து அல்லது பார்த்து இருக்கிற சகோதிரர்கள் அங்க ஈனர்களாயாவது அல்லது மதிகெட்டவராய் சாதிப்ருஷ்டர்களாய் குடும்ப விர்த்தியின்றி மரணமடைவர்கள் என்றும் பரதேசவாசியாவர்கள் என்றும் அறியவும்.

குசன் சிம்மம் மிதுனதனுவில் குரு சூரியன் இராகு இவ்விதத்தோர்களுடன் கூடினாலும் பார்த்தாலும் பெலத்துடனிருக்கினும் குசனுக்கு

மூன்றுமிடத்திலாவது இவ்விதமிருக்கில் பிறந்த சேயின் சகோதிரர் புருஷர்களாகி அதிக விர்த்தியுடன் சிலகாலம் வாழ்வார்கள்,

மேற்சொல்லிய கிரகங்கள் குசனுக்கு பகை நீசமின்றியும் மற்றைய கிரகங்களுக்கு பகை நீசமின்றியுமிருந்து நோக்கில் விசேஷபிரபலர்களாகி சகோதிரர்கள் வாழ்வார்கள் குடும்பவிர்த்தியு முண்டாகும.

ஷஸ்தானங்களில் குரு உச்சமல்லது சுக்ஷேத்திரனுகி கேந்திரதிரிகோணமாயாவது நட்பு வீட்டிலாவது இருந்து மூன்றுமிடங்களை நோக்கினும் பிறந்தசாதகன் சகோதிரன் இராசயோகனுகி மிகவும் மேலான பிரபலத்துடன் கீர்த்திகளைப்பெற்று அதிபதியாவன் சுக்கிரனுகில் நடநாடக சங்கித சாஸ்திராதிபுராண வல்லவனுக கீர்த்தியுடன் வாழ்வன்.

புதனுகில் சித்திராதி சகலவித பணித்தொழில் கர்த்தாவாகியும் ஞானவானுகியும் கீர்த்திபெறுவன்.

சந்திரனுகில் கணிதபண்டிதனுக வாழ்வன்.

சூரியனுகில் அரசன் பூபதியாய் வாழ்வன்.

சனியாகில் நீசத்தொழிலாயும் மதபேதகர்த்தாவாகியும் பாபத்தொழில் திருட்டில் கீர்த்திபெருவன்.

இராகு கேதுவாகில் மிகவுந்துஷ்டனுகி பிரபலமான அவகீர்த்தியுடன் யாரும் பயங்கொள்ள பில்லி சூனிய மாந்திரீகத் தொழில் புரிவன்.

மிதுனத்திலாவது கன்னி விருச்சிகத்திலாவது புதன் குசன் இருந்தும் சந்திரன் சூரியன் சனி கூடி இருக்கினும் கும்ப இராசியில் நின்றுலும் பார்த்தாலும் சகோதிரர் மிகவும் பகையாளிகளாய் முகாலோபனங்கூட இன்றிப் பலவாராகிய கஷ்ட நஷ்ட துன்பங்களை யடைந்து விவாத வழக்குடன் இராசாங்கத்திற்கு பொருள்களை யழிப்பர்களென்றும் பலவகைவிரோதிகளாய் வாழ்வார்களென்றறியப்படும்.

சுபர்களில் குசனுக்கு மூன்றுமிடத்திலும் மிதுனஞ் சிம்மம் கும்பமிவ்வித இராசியில் குரு புதன் சனி இருந்தாலுமல்லது சந்திரனிருந்து மற்றய பகையோரென்னும் பாவர்கள் சுபபலமின்றி நோக்காமலும் சேருமலுமிருக்கினும் சாதகனும் சகோதிரரும் அக்கியோங்கியர்களாய் அனேக தலைமுறைவறையில் கூடிவாழ்ந்தும் வசியத்தோடும் வாழ்வார்கள் அதிக சுக்ருத சகோதிரவனுகூலமடைவன் இவ்விதமிருக்கையில் குசன் புதன் சேர்ந்தாலும் ஷ ஸ்தானத்தை பார்த்தாலும் சனி நோக்கி இருந்தாலும் சகோதிரகர்மத்துக்கும் சொத்துக்கும் பாத்தியதையடைவன்.

இதில் சந்திரன் சுக்கிரனுடன் மேற்கூறிய ஸ்தானங்களில் கூடியா வது ஷெ கிரகங்கள் பார்வையாவது இருக்கில் பிறந்தசேய்க்கி சகோதி ரன் வனுகூலமின்றியும் சகோதிரன் எவ்வளவு குற்றமாயினும் சாதகன வனுக்கு அனுகூலஸ்தனுவன்.

சனி குரு இராகுவாகில் சாதகன் சகோதிரனுக்குத் தீங்குசெய்தா லும் சகோதிரன் சாதகன்மேல் பக்ஷமுடையவனுவன்.

குசனுக்கு யேழா மிடத்திலாவது மூன்றுமிடத்திலாவது அல்லது மிதுனந்தனுவிலாவது சனி இரர்குவு மல்லது பாபபெலனுற்றபாபசம் மந்த சுக்கிரன் சந்திரன் சேரில், சகோதிரவம்ச மனையாளாவது சகோதிரி களாவது விபசாரதோஷத்தை யடைந்து வருபவர்களென்றுங் கூறப்படு மென்றவாறு.

மிதுனபுதனுடன் சுக்கிரன் அல்லது குரு கூடினுல் பிராம்மண உத்தமகுலஸ்ரேஷ்டமான ஸ்திரீயைப் புணர்வன் சுக்கிரன் றனித்து பாபி கள் னேக்கமாவதுசேற்கையாவது இருந்தால் காமாதுரனுகி ஸ்திரீகளான விஷயத்தால் அவமானமுண்டாகும் குசனுவது கேதுவாவது பெலத் துடன் இருந்து குருமுதலிய சந்திரன் சுக்கிரன் பாற்கில் பூபதியானவர் கள் அல்லது பிரபு வீட்டுப்பெண்களைப் புணருவன் அவர்களால் சிலதன லாபத்தையுமடைவன்.

குசன் கேது தனித்துனின்றாலும் பார்த்தாலும் விதவையை புணரு வன் சனி மேஷத்திலிருந்து இராகு முதலியோர் மூன்றிலிருக்கின் அனு சாரமடைந்தை நீசஸ்திரீ தாரஸ்திரீ சம்போகம் செய்வன் என்றும் அறிய வேண்டியது.

புதன் சுக்கிரன் மிதுனசிம்ம தனுசுவில், இருந்து சந்திரன் குரு னேக்கினுமிருக்கினும் சங்கீத வித்தையும் பலசாஸ்திர பரிசயனுகி வாழ் வன், இன்னுன்கு கிரகங்களும் பெலத்துடனிருக்கில், கீர்த்திபெற்ற கீத வித்வானுகி பலஸ்திரீகள் வனுவிற்போகாதி சுகமீய வசனிக்கவும் சம்பா ஷிக்கவும் சபாரஞ்சிதனுவான். இவர்களுடன் ஷெ ஸ்தானங்களிலாவது சுக்கிரனுக்கு மூன்றும் இடத்திலாவது புதன் சனி முதலியோர் கூடி சூரியசம்மந்தம் புதனிருக்கில் சாதகன் கேவலங் கூத்தாடியாகி உலகத் திற்றிரிவன்.

சகோதிராதி பாவங்களைக்கணிதமூலமாய் கணிக்கும் வகைகளாவன.

மிதுனத்திலும் புதனுடனும் குசனுடனும் குசனுக்கு மூன்றுமிடத்திலும் அதிபதியுடனுங்கூடிய பெலாபெலத்தால் கண்டறிந்த கிரகங்களின் யெண்ணுகிய முதற்பாவத்திற் கூறிய யெண்களைக் கூட்டி ஜவகைப் பெலன்களுக் குறியபடி குறைத்துங் கூட்டியுங் கொண்டுள்ள துகைகளை யொன்று படுத்திவைத்து அந்த கிரகங்கள் னின்ற இராசிக்குள்ள யெண்களாகிய இரெண்டாம் பாவத்தில் தனத்தைக்குரித்த குணிதத்தில் கண்டிருக்கும் யெண்கள் இராசி துகைப்படிக்கும் கிரகம் நின்றிருக்கிற இராசிப்படிக்குஞ் சேர்த்து முன்கண்ட துகையை இராசித்துகையில் கழிக்க நின்றமிச்சம் சகோதிர உத்பத்தியான துகைகளென்றும் அத்துகையைச் சனி பெற்றிருக்கிற பெலன் பேரிலும் அல்லது குரு பெற்றிருக்கிற பெலன்பேரிலும் கண்ட அவர்களின் யெண்களில் கொடுத்துக் கண்ட மிச்சம்அந்திய வறையுள்ள சகோதிரங்களென்றும் அத்துகையை முன்கூறியகிரகங்கள் நின்ற விராசி பெண் ஜாஸ்தியான விராசியா அல்லது புருஷ கிரகஞ்ஜாஸ்தியான இராசியா வென்று அறிந்து அந்த விராசிக் குள்ள துகையில் கழித்து அல்லது கழிக்க குறைந்தவையாயின் இராசி கிரக பெலத்தின் பேரில் பெண் ஆணென்றறிந்து கொண்டு அத்துகையுடன் சேர்த்து கிரகங்கள் நின்ற ராசியிலாவது அல்லது புருஷ இராசிக்குள்ள துகையிலாவது புருஷ இராசி யில்லாவிடில் புருஷக் கிரகங்களின் பெலத்துக்கேற்ற படியுள்ள துகை சேர்த்து அத்துகையில் கொடுத்துவந்த ஈவு புருஷர்கள் யென்றும் மற்றவை பெண்களென் றும் அறியவேண்டியது.

பாபிகளாலே கொடுத்த துகைகளாய் அல்லது பகை நீசர்களாலே கொடுத்த துகைகளாயாகவாவது இருந்தால் சகோதிர பூச்சிய மென்றும் ஓர் சுபக்கிரகம் ஸ்திரீ கிரகமிருந்து நோக்கவாவது சேர்ந்தாவது இருக்கில் பெண்சந்ததி அல்பமான யேகசந்ததி யென்றும் புருஷ கிரகங்கள் பார்க்கில் யேகமான ஓரேபுருஷ சந்ததி யென்றஞ் சொல்லவேண்டியது.

நான்காவது மாதுரு கிரகவாகன வித்தைகளைப்பற்றி கூறப்படும் பாவங்கள்.

கடகத்திலும் சந்திரனுடனும் சந்திரனுக்கு நான்காம் அதிபதியுங் கொண்டு மாதுரு பாவபலன்கள் சொல்லவேண்டியது சந்திரன் நாலுயெட்டிலிருக்கினு மாதுருவரிஷ்ட முண்டு விருச்சிகத்தில் சந்திரனிருக்கில் மாதுருவுடன் மரணத்தடைவன்.

மேற்கூறிய நான்கு ஸ்தானங்களில் அந்தந்த ஸ்தானங்களுக்குஅஷ்டமாதிபதிகள் பாபிகளாகி பகை நீசம் பெற்றுதுற்பலஸ்தானத்திலிருந்து மேற்படி ஸ்தானங்களை பார்த்தாலும் மேற்படி நான்குஸ்தானங்களில்துற்பலராய் இருக்கினும் மாதுருவுடன் -குழவிப்பருவத்தில் மாதா பின்னமடைவளென்றும் சந்திரனுடனுவது அந்த நான்கு ஸ்தானுதிபர்கள்மறைவிடங்களாகிய ௬-அ-கஉ மிடங்களில் நீசம் பகையுடனல்லது பலர்களாகி பகைவர்களுடன் கூடி இருக்கினும் நோக்கினும் மாதா பாலியத்திலேயே மரணமாவள். சூரிய சந்திரனுடன் சனிமுதலிய பாவர் கூடினும் சந்திரனுக்கு நான்கிலாவது, கடகத்திலாவது கூடியிருந்து சுக்கிரன் குரு பார்வையற்று பாம்பு கூடி இருந்தாலும் தனுசு நீங்கிய கும்பம் மிதுனங் கன்னி விருச்சிகங்களில் நின்ற சேய்க்கு எவ்வனத்திலேயே மாதா மரணமாவள்.

குசன் ராகு முதலியபாபிகள் கடகம் விருச்சிகமல்லது சந்திரனுக்கு நாலு ஏழு இடங்களில் பகை நீசம்பெற்று அஷ்டமாதிபதியுட னிருக்கில் யெவ்வனத்திற்குய்போகும் மிதுனம் கன்னி துலாம் மகரம் மீனம் இந்த விருசிகளில் சனி குசன் சந்திரனுடன் பாபர்கள் கூடினுலும் நீசம்பகை பெற்று நான்கிலிருந்தாலும் நாலுக்குடையவன் பெலஹீனனுகி சத்துரு க்ஷேத்திரங்களில் பாபர்களால் நோக்குண்டு குரு சுபர்களின் வீக்ஷணியமிருந்தாலும் கவுமாரகாலவயதில் மாதா மரண மடைவள். சந்திரனுக்கு நான்கு ஏழிலும் அஷ்டமத்திலும் கடகம் துலாத்திலும்பிறந்தவர்களுக்கு குரு முதலிய சுபக்கோள் மிகு பெலத்துடன் இருக்கில் பிறந்த சேய்க்கு வார்த்தீக வயதில் மாதா மரணமென்றும் பத்தாமிடத்திலுஞ் சந்திரனுக்கு பத்தில் பாபர்களிருந்தும் சந்திரனுடனும் சந்திரனுக்கு ச-லும் கடகம் துலாத்திலும் பாபர்கள் பகை நீசம் பெற்று ஸ்தானுதிபதிகள் கெட்டுப்போயிருக்கில் பிறந்த சாதகன் மரணத்தின் பின் தாய்மரணமாவளென்ற விதிகளை யறியவேண்டியது.

தாய் பரபுருஷனுக்குப்பெற்ற சாதகன்யென்ற விதிகளை யுணர்த்துகின்றது. விவாகபுருஷனைத்தவிர மற்ற புருஷன்தான் பரபுருஷனென்று சொல்லப்படும்.

சந்திரன் நீசனுகிநான்கில் சனிராகுமுதலிய பாபிகள் இருந்து பகையல்லது பெலக்குறைவுட னிருந்தாலும் அல்லது புதன் நான்கிலாவது சந்திரனுக்கு நான்கிலாவது பாபிகளுடன் கூடி உ-மிடத்தாதிபதியும் பாபிகளாகிபாபசம்மந்தம் பெற்றிருக்கில் பிறந்தவன் அயலானுக்கு உதித்தவனென்றும் மேற்படி சூரியஸ்தானங்களிலாவது கிரகங்கள் ஸ்தானுதி

பதிகருடன் ரு-பாபிகளுடனுவது சூரியனிருக்கில் க்ஷத்திரியகுலமல்லது (அரசர்களுக்குஉதித்தவனென்றும் சந்திரனுகில் வைசியனுக்கு அல்லது பெலக்குறைவால் வண்ணனுக்கு உதித்தவனென்றும் குசனுகில் சங்கிருமன் பெலக்குறைவால் வடுகர்தெலுங்கருக்கு உதித்தவனென்றும் புதனுகில் வாணியனுக்கு உதித்தவனென்றும் அல்லது வேளாளனுக் குதித்தவனென்றும் குருவாகில் உயர்பெலத்தால் பிராமணனுக்கு உதித்தவனென்றும் சுக்கிரனுகில் பிராமணரும் சுக்கிரன்பெலக்குறைவுடன் இருக்கில் தட்டார் முதலிய சும்மாளர் தொழிலாளர்களுக்கு உதித்தவனென்றும் சனியாகில் சதுர்த்தசாதியாகிய புலால் புசிப்போர் வேடரிவர்களுக்கு உதித்தவனென்றும் இராகு கேதுவாகில் குடியர் முதலியநீசர் சாதிப்ருஷ்டர்களுக்கு உதித்த சாதகனென்றுங் கண்டு சொல்லவேண்டும்.

லக்கினவாசத் நான்காம் வீடும் சந்திரனுக்கு நான்காவது வீடும் சுபகிரகங்களாகி சுபர்கள் பெலத்துடன் கேந்திரமுதலிய இடத்திலும் அல்லது மேற்படி ஸ்தானங்களைப் பார்த்திருக்கில் பிறந்தவன் விவாகபுருஷனுக்கே குரு புத்திரனுகச் செனித்தவனென்றுங் கூறப்படும் இதிலும் அவசியம் சந்திரனுக்கு நாலாமிடத்தைக் கொண்டு மேன்மையான ஸ்திரமாகக் கூறல்வேண்டும்.

வாகன பலன்கள்.

சந்திரன் குருவுடன் கூடினுலும் அல்லது சூரியனுடன் கூடினுலும் நட்பு ஆகூழி உச்சகேந்திர திரிகோணத்திலிருக்கில் யெக்காலத்தும் பிரபலமான வாகன யோகனுவன் இதில் சனிமுதலிய பாபர்கள் இருந்தாலும் பார்த்தாலும் சிலகாலஞ் சொயவாகன மற்றகாலம் அன்பர்களுடைய வாகனங்களிலுஞ்சஞ்சரிப்பன் வாகனமென்னும் பிரபலமுண்டுசுக்கிரனுக்குநாலாமிடத்ததிபதி கேந்திரத்திரிகோணத்தில் சுக்கிரனுக்கு இஷ்டனுகி பாபரானபோதிலும் கேந்திரத்திலிருக்கில் அசுவவாகனமுள்ளவன் பாபிகளாகிப் பாபிகளுடன் கூடி இருக்கில் பழையவாகனமும் சீர்கெட்டதும் அசுவவாகனங்கிடைக்கும் சனியாகி உச்ச சொக்ஷேத்திரத்தில் சுக்கிரனுக்கு நாலிலாவது அல்லது கடகத்திலாவது இருந்து சுபர்கள் நோக்கினும் அசுவவாகனப்பிரபல முண்டு.

சுக்கிரன் பெலத்து சுக்கிரனுக்கு நாலாதிபனும் பெலத்து சிம்மம் கடகம் மகர விருஷபத்திலிருக்கில் பல்லக்கு வாகன யோகனுவன் இவ்வித ஸ்தானத்தோர் பெலத்து மீனம் மிதுனந் துலாத்திருக்கினும் பல்லக்குவாகன யோகவானுவன்.

இதில் பாபர்பார்க்கில் சிலகாலம்அயலோர்களின் பல்லக்கு யேருவன் ஸ்தாநாதிபர்களாவது ஸ்தானத்திலிருப்போர்களாவது சு-அ-கஉ-ல்மறைந்து பகை நீசம் பெற்றாலும் சத்துருவோருடனுற்றாலும் சிலகாலம் வாகனமும் பின் வாகனமின்றித்திரிவன்.

குசன் கடகத்தில் சனிமுதலியோர் பார்த்தாலும்இருந்தாலும் சுக்கிரனுக்கு நான்கிலுற்றாலும் பகை நீசமாகிச் சுபர்பார்வையின்றி இருக்கில் முன்னோர் வாகனத்தையும் விற்று புசிப்பன்.

சுபர்கள் நோக்கி பெலத்துடன் இருக்கில் முன்னோர்கள் பாதசாரியாகியும் சாதகன் வாகனசாரிபாகவும் வாழ்வன் சுக்கிரனுடன் அல்லது சுக்கிரனுக்குநான்கில் ௩-சுபர்கள் மேலாயிருந்து பெலத்துடன் கேந்திரதிரிகோணமாய் பாபர் வீக்ஷணியமின்றி இருக்கிற் பிரந்தவன் அனேகவாகனங்கள் படைத்து அரசனாகிவாழ்வன்.

சுக்கிரன் மதி நான்கிலுஞ் சனி நோக்கமிருக்கவாயினும்மற்றபாபிகள் பார்வை இன்றி இருக்கில் யானை ஒட்டகைமுதலிய பிரபல்வாகன யோகனவன் சுக்கிரனுக்கு குரு கடகம் துலாம் மீனத்தில் சனிமுதலியோர்கூடினுலுஞ் சந்திரகேந்திரத்தி லிருக்கினும் பரம்பறையாய் குதிரை யானை பல்லக்கு முதலிய ஒட்டகமுதலாகிய வாகனயோகனென்றுங் கூறப்படும் என்றவாறு.

அவ்வித ஸ்தானத்திலாவது ஸ்தாநாதிபதியுடனாவதுகூடியகிரகம்.

சூரியனாகில் சிவப்பு பழமை வாகனமும்
சந்திரனாகில் வெண்மையிற் பழமையும்
குசனாகிற் செங்கருமையும்
புதனாகில் நீலநிறமும்
குருவாகில் மஞ்சள் கலந்த குங்கும நிரவாகனமும்
சுக்கிரனாகில் வெண்மை நிரவாகனமும்
சனியாகில் கருமைநிரவாகனமும்
இராகுவாகில் கருமையிற் புள்ளியுள்ள நிரமும்
கேது வாகில் சிவப்பு நிரவாகனமு முண்டாகும்.

இவ்விதங் கிரகங்களுடைய நிறத்திற்கும் இராசிகளி நிறத்திற்கும் இசைந்தபடி சொல்லவேண்டியது.

இராசிகளின் நிறம்.

மேஷம்	சிவப்பு
விருஷபம்	வெள்ளை

மிதுனம்	பசுமையும்
கடகம்	பழுமைவெள்ளை
சிம்மம்	புகைநிரம்
கன்னி	அழுக்குவெள்ளை
துலாம்	பலநிரம்
விருச்சிகம்	கருப்பு
தனுசு	பொன்னிரம்
மகரம்	அழுக்குவெள்ளை
கும்பம்	கருப்பு
மீனம்	அழுக்கடைந்த சிவப்பு

ஒவ்வொருலக்கினங்களுக்குச் சொல்லிய ஒவ்வொரு பாவங்களிலும் கண்டுள்ள கணிதங்களின் பெலன்களாவது சு-அ-ஸ்தானமானுலும் அதிபதிகளானுலும் கொடுத்தகணக்கில் வ - பங்கும் ந-கக - ஸ்தானம் ஸ்தாஞதிபதியானல் ௨-பங்கும் கஉ-௨- ஆனல் ௩ - பங்கும் மற்றவைக்கி முழுபபங்குமான பெலத்தையும் கிரகங்களின் ஒருவர்க்கொருவரின் பெலத்தையும் அந்தந்த லெக்கின துவாதசபாவஸ்தான மூலமான நட்பு ஆக்ஷி உச்சம் பகை நீசபெலன்களையுமறிந்து யெடுத்ததில் அந்தந்த பாவ ஸ்தானம் காரகபாவஸ்தான கிரகாதிபனுடையவும் அந்தந்த ஸ்தானத்திலிருப்பவர்களின் பெலனுக்கேற்றதில் குடுத்துக்கண்ட யெண்ணில் சகோதிராதி பாவமாகும் புதன் சுக்கிரன் குரு கேந்திராதிபதிகளானல் வ-பெலஞக எடுக்கவும்.

கிரக பாவக் கட்டடங்களைப்பற்றிய பலன்கள்.

சந்திரன் கேந்திரத்தில் சுக்ஷேத்திர நட்பு அல்லது உச்சத்திலிருந்தும் குரு சுக்கிரனிவர்கள் கிரகவாகன க்ஷேத்திரமாகிய கடகத்திற்கு கேந்திரத்திலிருக்கினும் சுக்கிரன் பெலத்துடன் இருக்கிற் பிரந்த சாதகனுக்கு பிரபல மாடமாளிகை கூடகோபுரமும் தோப்பு சம்மந்த கட்டடங்களும் இராசனுக்கு ஒப்புற்று வாழ்வன் என்றும் இதில் குருவிருக்கில் தேவாலயமும் அமைத்து தர்ம சத்திரமும் உண்டாகும் கிராமாதி பிரதிஷ்டா மேன்மை செய்வனென்றும் சுக்கிரனிருக்குமாயின் பிரபல கட்டடங்களும் லீலா விநோத சாலைகளும் தோப்பு தோட்ட சம்மந்த கட்டிடமும் நீராழிமண்டபங்களும் பிரபலமுண்டாகும் சந்திரன் அவ்விதம் பெலத்தோடு இருக்கில் சித்ரமேடையுடன் அனேக கட்டிடங்கள்

பிறபலஞ் செய்வனென்றும் புதனிருக்கில் அவ்வித கட்டிடமும் பழயவஸ்து வீட்டை புதிதாய் செய்வனென்றும் குசனிருக்கிலும் சூரியனிருக்கிலும் தீயினலடைந்த கிரகத்தையும் வெகு நாளாக வாஸ்துவின்றி ஸ்மசான சம்மந்த கட்டடம் நேருமென்றும் இராகு கேதுவாகில் பழய கற்களுள்ள கட்டடங்கள் அரை குரை பழமையிலுங் கிடைத்து வாழ்வன் கடகத்தில் குசன் இராகு கேது இருக்கினும் சனி முதலிய பாபிகள் நோக்கினும் கட்டடமின்றித் திரிவன் இராகு முதலிய பாபிகள் சுபர் வீடாய் நான்கிலிருக்கில் தன் கிருகமிருக்கப் பிறர் கிருகவாசமாய் வாழ்வன் சுபர் நோக்கின் பறவாசத்தினல் பொருளுங்கூடும் பல கட்டடமும் வந்து சேரும் புதன் கடகத்தில் சனியோடு சனி முதலிய பாபிகள் பார்க்கினும் கிரகம் முதலிய இடங்கள் சத்துருக்களாலாவது கடனுலாவது கிரகத்தை இழந்துவிடுவ னென்றும் அறியப்படும் இவ்விதமே சுக்கிரனிருக்கிற இராசிக்கி நான்காமிடத்தையுங் கண்டு சொல்லவேண்டியது சனி முதலிய பாபர்கள் சுக்கிரனுக்கு நான்கிலாவது கடக விராசியிலாவது அல்லது அந்த கிரகங்களுடன் இருக்கினும் சந்திரன் குசன் நட்பு ஆக்ஷியாயிருக்கினும் சாதகனுக்கு கூறை யல்லது சரக் கட்டடங்கள் பலிக்குமென்றும் கூறப்படும்.

வித்தியா பலன்கள்.

சந்திரன் கடகம் விருஷபத்திலாவதுகேந்திரத் திரிகோணத்திலாவது இருந்து சுபர்கள் சம்மந்தமாகி இருக்கின் சனி முதலானோர் பாராதிருக்கினும் புதனுக்கு நான்காதிபன் சுக்ஷேத்திர உச்சநட்பாவது அல்லது கேந்திரத் திரிகோணத்தில் பெலக்குறைவில்லாமல் சுப சம்மந்தனகி இருந்தால் மிகவும் வித்தையால் பிரபல கீர்த்திகளையுஞ் சீவன லாபத்தையும் அடைந்து யாவரும் வெகுமானிக்கவும் அரசர்கள் முதல் வருந்தவும் மானியாகி வாழ்வன் மேற்படி ஸ்தானக் கிரகங்கள் இவையுடனே சூரியன் சந்திரன் குரு சனி எவர் நிற்கிலும் பெலமான சுபபெலத்துடன் இருக்கில் இராஜபாஷை யென்னும் வித்தையால் மிகவும் பிரபல யோகவானகி வாழ்வன் இராஜ பூசிதனவன் இதில் குருமட்டும் மேல் பெலனக விருக்கில் வேத பாரங்கத சம்ஸ்கிருத வித்துவானவான்.

புதனகிக் கலர்ந்தாலும் நோக்கினலும் கணிதமான கணக்கும் தமிழ் வித்தையில் வல்லபனவன்.

குசனுகில் தெலுங்கு வித்தையில் வல்லபனுவன் பண்டிதனுமாவன்.

சுக்கிரனுகில் காவ்யா நாடக அலங்காரமும் சோதிடாதி வித்தைகளையும் மாருய்வன்.

சனியாகில் விவகார வித்தையினுலும் மீமாம்சாதி வித்தையில் கீர்த்தி யடைவன் இராகுவாகில் பல சில்லறை மாந்திரீக வித்துவானுகியும் மதபேதமான வித்தை பாஷையையும் படிப்பன்.

கேதுவாகில் பலவித வித்தைகளிலும் வல்லவனுகி விவாகம் புகன்று வாழ்வன் மதபேத குலபேத வித்தையும் உண்டாகும் என்று மறியவேண்டியது.

கடகம் விருஷபத்தில் புதனுவது தசமத்திலாவது இருந்து சனி நோக்கினுலும் சனியைச் சாரினுஞ் சந்திரனுக்கு நாலுக்குடையவன் புதன் சுக்கிரனுகித் துலாம் தனுசு மிதுனம் கடகத்திலிருந்தாலும் குரு முதலியோர் கூ-எ-இந்த வீட்டினின்ருலும் சாதகன் வியாபாரத்தினுல் மிகவும் கீர்த்திகளையும் சந்திரனதில் பெலத்து வாழில் இராஜாங்க சம்மந்தம் கப்பல் சம்மந்த வியாபாரங்களைச் செய்து பிறபல கீர்த்திகளைச்சேற்பன் என்றும் சனி இராகு புதன் முதலியர் மேலே கூறிய ஸ்தானங்களிலும் கிரகங்களுடனே கூடி நிற்கிலும் நோக்கிலும் செய்தொழில் வியாபாரத்தில் சிலகாலந் தனலாபமானது கொடுத்துப் பின் நஷ்டமாகிவிடு மென்றும் பாபிகளே பிலக்கில் வியாபாறஸ்தனுன சாதியாகிலும் வியாபார முயற்சி கிடையா தென்றுங் கூறப்படும் இதில் சூரியனுகில் கீழ்திசை வியாபாரத்தால் மிக லாபத்தையும் சந்திரனுகில் வடமேல்திசை வியாபாரத்தாலும் குசனுகில் தென்திக்கு வியாபாரத்தினுலும் புதனுகில் வடதிக்கின் வியாபாரத்தாலும் குருவாகில் வடகிழக்கு திக்கின் வியாபாரத்தாலும் சுக்கிரனுகில் தென் கிழக்கின் திக்கின் வியாபாரத்தாலும் இராகு கேதுவாகில் நிருதி திக்கின் மூலிய லாப நஷ்டங்களை கிரகங்களின் சுபாசுப பெலனுக்கு இசைந்தபடி அந்தந்த கிரகத்தின் பாவங்களைக் கூறப்படும்.

இவர்களுக்குறிய திரவியாபாறத்தையும் முயற்சிகளையும் கண்டறிந்து சொல்லவேண்டும்.

ஐந்தாவது புத்திர கெற்ப பலன்.

சூரியன் புதனுடன் கூடி ரு-அ களிலிருக்கினும் சனி இராகு முதலியோர் கூடினும் சிம்மம் தனுசுகளில் இருந்தபோதிலும் சனி குசன் புதன் முதலியோர் கூடியும் குரு ரு-அ ல் பாபக்ரக சம்மந்தனுகி புதன் சனியை கூடினுலும் பகைமுதலிய க்ஷேத்திரத்தில்பெலமற்று நிற்கினும் சுக்கிரனும் சனியும் மேற்கண்ட விதிப்படிமேஷம் கன்னி இவைகளில் புத சம்பந்தவீக்ஷணியமாயினும்வேறு சுபர்கள் பார்வை இல்லாவிடில் புத்திரனுங் கிடையாது தெத்தெடுத்தாலும் மரணமாகி அந்தியகாலத்தில் புத்திர கருமமின்றி மிகுந்த பாதையையடைவன் சனி சூரியன் புதன்சேர்ந்து ரு-கூ மிடங்களிலிருக்கில் பாபத்துவத்தோர் கூடினும் னேக்கினும் குருவுக்கு ரு-மிடத்தில் பாபிகளல்லது சனி புதன் வீடாகி பாபத்துவத்துடன் புதன் சனி இருக்கிற் பிறந்தவனுக்கு புத்திரனே உற்பத்தி கிடையாதென்றும் இதில் குரு சுக்கிர சம்மந்தம் பாற்வை சுபக்ஷேத்திரத்தில் பாபிகளிருக்கின் முதற்றாரத்துக்குஇன்றி மற்றய துதிகை முதலாகிய தாரங்களுக்கு புத்திர பாவமுண்டாகுமென்றும் புதன் சனி அஸ்தங்கத்தோஷனுகி ரு-கூ-கo-லிருக்கிற சாதகனுக்கு சிவீகார புத்திரனுண்டென்றும் அதில் குரு சந்திரனிருக்கினும் பாற்கினும் சிவீகாரத்தின்பின் காலப் பிற்பாடாய் புத்திரன் மருதாரங்களுக்கு செனிப்பனென்றும் கேது முதலிய குசன்கூடி இருக்கில் தளஹித்ரனவன் புத்திரனுகப் பாவிப்பனென்றும் குரு யெட்டிலும் சனி மேஷத்திலும் குசன் கடகத்திலாவது கும்பம் கன்னியிலாவது புதன் சூரியனைப் பாபிகளைக் கூடிநிற்கின் பிறந்தசேய் புத்திர்களுண்டாகி உண்டாகி அந்தியகாலத்திற்கு அபுத்திரனுகிப் பவிப்பனென்றும் குருவுக்கு ரு-கூ-ய - மிடங்களையும் இவ்விதமே அனுசரித்துப் பார்க்கப் புத்திர விர்த்தியல்லது க்ஷயங்களைக் கூறல் வேண்டும் சத்துருக்கிரகங்ளுடனுவது சத்துருவீடாயாவது புத்திரஸ்தானம் ஸ்தானுதிபதி வாழில் பிரந்தவன் புத்திரர்கள் குடும்ப விரோதிகளாய் மாதுரு பிதுருகளுக்கு அன்னமிடானுகி விரோதியாகி வாழ்வன் என்றும் புதன் சனி முதலியோர்களும் குருவுக்கைந்தாமிடத் தாதிபதியும் சூரியனுமிருக்கிற இடத்தில்பகையோர்களும் ரேகஸ்தானுதிபதிகளுங் கூடி இருக்கினும் சந்திரன் சுக்கிரன் குஜன் நோக்கினும் புத்திரர்கள் ரேகஸ்தர்களாகி வாழ்வார்களென்றுங் கண்டு சொல்ல வேண்டியது.

புத்திரபாவ விஷயங்களை எண்மூலமான கணிதப்பிரகாரம் கணிக்கின்ற விதிகாண்க.

புத்திரபாவம் உண்டில்லை என்றவை அறிந்தபின் சூரியனுடனே கூடிய கிரக யெண்களையும் குருவுடனும் குருவுக்கு ரு - மிடத்தி நின்றவர்கள் அல்லாவிடில் அந்த வீட்டிற் குடையவனுடன் கூடிய யெண்களை யொன்று சேர்த்து ஐவகைப் பெலத்துக் குறியபடி யெண்களை வர்கித்து குருவுக்கும் சூரியனுக்கும் ஐந்தாமிடத் ததிபன் கிரக யெண்களில் கொடுக்க வந்த மிச்சம் புத்திர ஜெனனமும் அத்துகையை இராசி யெண்ணிற் பெருக்கி அந்த இராக்கதிபதியின் பெலத்துக் கிசைந்த யெண்ணிற் கொடுக்க வந்த மிச்சம் தீர்க்கமான பிரசைகளென்றும் இதில் மூன்றும் பாவத்திற் கூறிய ஸ்திரீ புருஷ யெண்களாகக் கொடுத்த மிச்சத்தை பெண் புருஷனென்றும் கண்டு உரைக்கவேண்டும்.

சிம்மத்தில் சந்திரன் முதலிய பொன்னேக்கமும் சூரியனுமிருக்கினும் குசனிருக்கினும் சுக்கிரன் பாக்கிய கேந்திர திரிகோணத்தி லிருக்கில் புத்திரர்கள் தனக்கதிகமான இராசயோகத்தை யடைவர்களென்றும் ஷெ ஸ்தானங்களில் குரு புதனிருந்து சனி பாற்கினும் இராகு கேது விருக்கினும் ஷெ ஸ்தானதிபதி கடகம் கும்பம் விருச்சிகம் இவைகளிலிருந்தாலும் புத்திரன் மரணகாலத்தில் அன்யதிக்கில் வாழ்வன் யென்றும் பரதேச வாசனுவன் யென்றும் இதில் ஒருவருக் கொருவர் பகையாகி குருபெலன் கெட்டும் சனி முதலியோர் மகரம் கன்னி மேஷம் விருச்சிகம் இவ்வித இராசிகளில் நிற்கில் ஜாதகன் புத்திரன் மதபேதியாகிக் குடியனுகி அசத் கர்மஸ்தனுகித் தள்ளுண்டலாகி இராஜாங்க முதலியதால் தெண்டனை விரோதம் சித்தபேதமாகி வாழ்வனென்றும் பல வகைக் குறைகளையும் அடைவனென்றும் கூறப்படும் எ-று.

சு-ம் பாவம் சத்துருரோக பாவங்களும் இராஜதண்டனை ருேணத்தைக்கொடுத்த பாவங்கள்

புதனுடன் சூரியன் முதலிய சுக்கிரன் கூடினுலுஞ் சனி இராகு முதலியோர் கூடி கன்னி விருச்சிகம் கும்பத்திலிருக்கினும் கேது முதலியோர்கூடி குசன் மறைந்தும் க்ஷீணசந்திரனுகி சந்திரனுக்கும் சூரியனுக்கும் சு-ல் குசன் குரு முதலியோரிருக்கினும்

பெலன் கெட்டிருக்கில் சாதகன் ரோகியாகியும் அல்லது கடனாளியாகியும் இராஜ தெண்டனைகளுக்கும் உள்படுவனென்றும்.

மேற்படி ஸ்தானம் நீங்கிய இடத்தில் புதன் சூரியன் குரு குசன் முதலியோர்கள் விருஷபம் தனுசு கும்பத்திலிருக்கினும் கடனாளியாகிப் பகையோர்களை யுடைத்து தெண்டனுதி அபஜெய மடைவனென்றும் அவுமானங்கள் பெண் மூலியங்களால் நேருமென்றும் பலவகை துக்க சோகங்களையும் கொடுக்கப்படும் என்றும் அப்படிக்கி ஒற்ற கன்னி கும்பத்தினுக்கதிபர் மேஷம் அல்லது சந்திர சூரியனுடன் கூடி பீடை அல்லது விஷசமான ரோக சரீரஸ்தனுகி இளைக்கப்படுமென்றும் ருணக்ரனுகியும் சத்துரு விரோதஸ்தனுகியும் வாழ்வான்.

சூரிய சந்திரர்களுக்கு கூ-க்குடையவனுடனும் புதனுடனும் கூ-அ களிலிருக்கும் கிரகங்களுடனும் அந்த வீட்டாதிபதிகளாகினும் சென்ம லக்கினம் அல்லது சந்திரனுடனே கூடியதில் சூரியனுகில் நயனரோகாதி மேகநீருபத்திரவமும், சந்திரனுகில் கபக்ஷயரோகமும் நீர்சம்மந்த வியாதியும், குசனுகில் ரக்தவிரணமேக நீருபத்திரவத்தையும், புதனுகில் வாதனேயுபத்திரவமும், குருவாகில் பாண்டுமுதலிய மேகசூலை வியாதிகளாலும், சுக்கிரனுகில் லிங்கரோகாதி போகவிஷயாதிகளாலுஞ் சிலநோய்கள் உதரவாயுக்களாலும், சனியாகில் பித்தவாதநோய்களாலும், பலவகை மனோ வருத்தங்களாலும், இராகுவாகில் குட்டாதிபெருநோய்களாலும் பலவகை விரணகாசாதி ரக்த உபத்திரவம் சதைசம்மந்த நோய்களாலும், கேதுவாகில் சித்தபிரமை வலிப்பு முதலிய இதரநோய்களாலும் வாதைப் படுவனென்றும் இவ்விதகிரகங்களை குருநோக்க மிருக்கில் பலவகை நோய்களும் நிவர்த்தியாகி விடுமென்றுங் கூறப்படும்.

சனி முதலிய இராகு முதலியோர் விருச்சிகம் கன்னிகளில் குருபுத சம்மந்தமிருப்பினும் நோக்கினும் இராச தெண்டனைகள் அடைவனென்றும், குருமுதலியோர் நோக்கில் மத்தியில் இராசதெண்டனை யுண்டாகி உடன் னிவர்த்தியும், மேற்படி சுபகிரகம் பார்க்காமலும், கிரகங்கள் பெலமற்றுமிருக்கில் சாதகன் ஆயுள்வறை இராசதெண்டனையடைவனென்றும் கேது குசன் கூடினுலும் பாபிகளாயிருந்து நோக்கினும் தெண்டனைகிடைக்குமுன் குலையான மரணதையடைவ னென்றும் மானஸ்தனுகி வாழ்வனென்றும் கூறப்படும்.

கன்னி விருச்சிகத்தில் குருவாதல் சுக்கிரனாதல் சனியாதலிருந்தும் புதன் பாம்பு குசனிவர்கள், விருஷபம் தனுசு கும்பத்தில் மீனத்திலிருக்கின் பாபர்பார்க்கின் பிறந்த சாதகனுக்கு ருணங்களாலவுமானத்தையும் இராஜதெண்டனைகளையும் அடைந்து பலவகை துக்கசோகங்களையும் அடைந்து வரப்படுவனென்றும், சுபர்களுமறைநோக்கின் அந்தியவறை ருணங்கள் போகாதென்றும், பாபிகள் கூடவாவது பார்க்கவாவது நிற்கினும் பெலமற்ற விராசி யிருக்கில் மத்தியகாலத்திலேயே ருணமுண்டாகி உடனுக்குடன் நீங்கி அந்தியகாலத்தில் றெணமடையானென்றும் அறியவும், புதன் குசன் பெலனற்றும் அல்லது குருவுக்கு ஆறமிடத்தாதிபதி பெலமற்றும் இருக்கில் றெணமின்றி நடக்குமென்று மறியப்படும்.

ஏழாவது களத்திரபாவ விவாத பலன்களறியவும்.

சுக்கிரன் மிதுன விருச்சிகம் கும்பம் மீனங்களிலிருந்து சூரியனைக் கூடினாலும் சனிமுதலிய பாபர் லாபத்திலாவது சுக்கிரனுக்கு யேழிலாவது குசன் புதனுடன் கூடி சுபர்கள் பார்வையின்றி இருக்கில்சாதகன்இரண்டு மனைவியை யடைவனென்றும் அந்த இடத்திலும் ஸ்தானாதியும் பகை நீசமல்லது விருஷபம் மீனம் விருச்சிகம் சிங்கத்திலிருக்கில் இரண்டிற்கதிகமான மனைவியை யடைவ னென்றும் குருமுதலிய சுபக்கோள்கள்நோக்கின் ஓர் மனைவியிருக்க மற்றொரு மனைவியை விவாகஞ் செய்பவென்றும் விருச்சிகத்தில் சனி இராகுவும் தனுவில் குசன் முதலிய பாவர்களல்லது புதன் சுக்கிரனிருக்கிலும் சந்திரன் பாவருடன் கூடியாவது க்ஷீண சந்திரனாகவாவது விருச்சிகம் துலாம் கன்னியில் சுக்கிரனுக்கு கேந்திரத்திலாவது (௪) லாவது (எ) லாவதிருக்கின் மனைவிவேறொருபுருஷனையனைந்து மகவைப் பெற்று சுகத்துடன் வாழ்வள் யென்றும் இந்தஇடத்தில் குசன் கேது பாவக்ஷேத்திர மடைந்து சுக்கிரனுடனே அல்லது சுக்கிரனுக்கு யேழு மூன்றில் (அ) ல் இருந்து பகை நீச க்ஷேத்திரமான பாபபெலத்தைப் பெற்று வாழில் மனைவி பரபுருஷ சங்கமத்தால் தன்கணவனை நீங்குவளல்லது கணவனைக் கொள்வளென்றும் சுக்கிரலக்னாதிபனும் யேழாமதிபனும் குரு சந்திரனைக் கூடினும் அல்லது நோக்கிப் பெலத்துடன்யேழாமிடத்திலிருக்கில் மனைவி ஒருவள் சற்குணியாகியும் புதன் முதலியோரிருக்கில் பரநாரியென்றும் சனி முதலியோராகினும் சுப க்ஷேத்திரமடைந்து சுபர் வீட்டினிற்கினும் சுபர்கள் நோக்கினும் மனைவிநற்குணியாகி இருதாரத்துடன் வாழ்வ னென்றும் சுக்கிரன் வீடாகிய விருஷபம் துலாத்திலாவது சுக்கிரனுக்கு யேழிலாவது சந்திரன் சனி யிருக்கிலும் குரு நோக்கிலும் இரெண்டு தாரஸ்தனாகியும் சனி யொருவன் பாபியுடன்

குசன் பார்க்க னிற்கில் பல மாதரும் தீர்க்கமடையா; ரென்றும்புதன்இராகு சூரியன் துலாம் விருஷபம் கும்பத்தினிற்கினும் அல்லது சுக்கிரனுக்கு யேழில் னிற்கினும் அவ்விடம் பெலக்குறையான வீடா யிருக்கில் விவாக மில்லாத வனுவனென்றும் சந்திரன் குரு நோக்கினும் சூரியநோக்கினுக் காலதாமத மேல விவாக முண்டாகு மென்றுங் கூறப்படு மென்றவாறு.

சுக்கிரனுடன் கூடியகிரகத்தின் பெலனுக்கேற்றபடி கிரகயெண்களையும் சுக்கிரனுக்கு எ-ம் வீட்டிலிருந்த கிரகயெண்களையும் துலாத்தினின்ற கிரகயெண்களையும் ஒன்று சேர்த்து சுக்கிரனின்ற இராசிபெலமறிந்து இராசி யெண்ணிற் கொடுத்துக்கண்ட எத்தனையோ வத்தனை மனையாளென்றும் அவ்விடத்து கொடுத்த ஈவு இல்லாவிடில் ஈவுத்துகையை உ-ல் வகுத்து வந்தமிச்சம் எவ்வளவோவத்தனை மனையாள் யென்றுங் கூறப்படு மென்றவாறு.

இவ்விதங் கண்டறிந்தபின் சுக்கிரனுக்கு எ-லும் துலாத்திலுமிருந்த பெலத்துக்கிசைந்த கோள்க்களின் யெண்களை யொன்றுபடுத்தி அவ்விராசியெண்ணும் பின் துலாத்தின் யெண்ணும் பெருக்கிக் கண்ட துகையை ச-ல் கொடுக்க வந்த மிச்சத்தில் பாலியம் எவ்வனங்கவுமாரம் வார்த்திகமென்ற காலங்களாக அச்சாதகனுக்கு யேற்பட்ட வயதை ஐந்து பாகஞ் செய்துக்கொண்டும் ஒன்று மிச்சமானல் பாலியத்திலும் உ-மிச்சமானல் எவ்வனத்திலும் ௩-மிச்சமானல் கௌமாரவயதிலும் ச-மிச்சமானல் வார்த்திக வயதிலென்றுங்கண்டு கூறல்வேண்டும்.

இவ்விதமறிந்தபின் மேலேபெருக்கிய துகையை கஉ-ல் கழித்த மிச்சம் எத்தனையோ அத்தினவது இராசியில் குருவரும் வருஷமென்றும் வந்தஈவை கூ-ல்பெருக்கி கஉ-ல் கழித்துவந்த மிச்சம் மாதமென்றும் வந்த ஈவை உசச-ல் பெருக்கி ௩0-ல் கழித்தமிச்சம் தினமென்றும் உஅ-ல் கழித்தமிச்சம் அல்லது எ-ல் கழித்த மிச்சம் வாரமென்றும் இவ்விதியாக விவாக காலங்களை யறியவேண்டியது.

சுக்கிரனுக்கு உ-எ-மிடத்திலாவது ஸ்தானதிபதியுடனுவது கூடியிருக்கும் கிரகங்களின் யெண்களையும் விருஷபத்தினின்ற கிரகங்களின் யெண்களையும் சேர்த்து ஒன்றாக்கி கூ-ல் கழித்த சேஷம் எத்தனையோ அத்தனுவது திசைபுத்தி காலம் களத்திர மாரகமென்றும் இவைகளை யெல்லாம் சவ்யாபசவ்ய மூலமாக க-லக்கம் ச-ஆகியும் நாலான லக்கம் ஒன்ருகியும் ஒன்றான லக்கத்தை ஒன்பதின் பலனுகியும் ஒன்பதான லக்கத்தை ஒன்று முதலாயும் பார்த்தல் வேண்டும்.

இவ்விலக்கங்கள் முதலாகிய கணக்குகளை யெல்லாம் பெலா பெலத்தின் மீது யூகித்து வாளின்மேல் நடப்பவர்கள்போல உஷாராக பார்த் துரைத்தல் வேண்டும்.

சுக்கிரன் கன்னி விருச்சிகத்திலும் குரு முதலாகிய, சனியுடன் கூடி பாப சம்மந்தமும் குசன் முதலானோர் கன்னி கும்பத்தில்மீனத்திலிருக்க சாதகன் தோருவழக்கு விவாதஞ் செய்வதினால் அபசெயமடைவானேன் யொழிய செயமடையான் பல தேசாடனம் அலைச்சல் அகால போஜனஸ்தறும் வியாதிக்காரனாகி வாழ்வன்.

கடகம் சிம்மம் தனுசு மீனத்தில் குரு சுக்கிரன் மதி இவரிலெவர் நின்றாலும் புதன் கன்னி மீனம் கும்பத்தினின்றாலும் சனி மிதுனம் விருச்சிகம் கன்னியில் அடையினும் யெந்த வழக்கு விவாதமும் செயஞ் செய்து உலகத்தில் கீர்த்தியுடன் விவாத சமர்த்தனென்றும் நல்ல விவகாரி யென்றுங் கண்டுரைத்தல் வேண்டும்.

பிதுர்பாக்கியத்தையும் உபதேசாதிஞான விசேஷ அட்டமாசித்திகளின் விதிகளையுணர்த்துகின்றன.

குருவும் சூரியனும் பெலத்துடன் சிம்மம் தனுசு மீனம் கடகமிவைகளிலிருக்கினும் சுபக்கோள்கள் நிற்கினும் நோக்கினும் சந்திரனுக்குஞ் சூரியனுக்கு ஒன்பதாமிடத் ததிபதி சுபக்ஷேத்திரம் அல்லது ஐவகைப் பெலன்களில் விசேஷபெலன் பெற்று கேந்திரத் திரிகோணத்திலிருக்கில் சாதகன் பிதுர்பாக்கிய மிகுந்த யேராளமும் பிரபல பிதாவென்றும் வம்ச விர்த்தியாகியும் இராஜசமான பூஜிதர்களாகி இராஜ பிரபுக்களின் சீவனமுடையோராய்க் கீர்த்தி பெற்றோராகி வாழ்வர்களென்றும் பிதுர் ஆயுள் தீர்க்கமும் மிகவும் மேன்மையான பிதுராகியும் வாழப்படு மென்றும் பிதுர் வம்ச விர்த்தியாகியு மிருந்துவரும் மேற்கூறிய குரு அல்லது சுக்கிரன் சூரிய சந்திரர்களுக்கு கேந்திரத் திரிகோணத்தில் உச்ச க்ஷேர க்ஷேத்திரத்தில் தனக்குரிய சுப சம்மந்தத்துடனே கூடி இருக்கில் சாதகன் பிதா பூபதியாகி வாழ்வனென்றும் அறியப்படும்.

கன்னி விருச்சிகம் மிதுன மிவைகளில் குருவும் சூரியனுக்கு ஒன்பதா மிடத்திலும் பாபிகள் பகைபெற்று சந்திரன் அல்லது புதன் கூடி இருக்கினும் சனி இராகு கேது முதலிய பாபிகள் சேரவாவ தல்லது சிம்மம் தனுசு மிதுனத்திலாவது சூரியனுடனே அல்லது சூரியனுக்கு கூ-ல் இருக்கில் பிதா துஷ்டனாகியும் அக்ருத்திய

ஞகியும் ரோகியாகியும் கடனாளியாகியும் பூர்வாற் சிதங்களைத்தோ ற்று விடுவனென்றும் பலவகைக் கஷ்டத்தை யடைவனென்றும் பிதுருவம்ச க்ஷயமாகியும் விடும்.

இதில் சுக்கிரன் புதன் இராகு முதலிய பாபிகள் சேரினும் நோக்கினும் பிறந்த சாதகன் பிதா உ-முதலிய பின் தாரஸ்தனென்றும் அவ்வித தாரங்களாலும் குடும்ப க்ஷயத்தையும் பின் விர்த்தி யையடைவ னென்றுங் கூறப்படும். உ-முதலிய என்றது யென்ன வபிப்பிராய மென்றால் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தாரனென்று கூட வருவித்துக் கொள்ளல் வேண்டும்.

மேற்கூறிய சிம்மம் தனுசு மிதுனத்தையும் இவ்வதிபர்களையும் சூரியன் சூரியனுக்கு ஒன்பதாமிடத்தி லுற்றவர்கள் சூரியனுக்கு ஒன்பதாமிடத் ததிபதி இவர்களை கொண்டும் பிதுர்பலன் பிதுர் வம்ச பலன்களைக் கூறல் வேண்டும்.

மேற்கூறிய ஸ்தானதிபதியும் ஸ்தானத்திலும் பகை பெற்ற வர்களாகியும் பெலமற்றும் சூரியன் தனுசு மீனத்திலிருக்கினும் அல்லது விருச்சிகத்தி நின்றவருடனே சனி முதலிய இராகு கேது புதனிவர்களும் குரு விருச்சிகம் கன்னியிலிருக்கினும் பிரபல பாபிகள் உடன் அல்லது நோக்கத்துடன் இருக்கிலும் அ-மிடம் விருச்சிகம் மகரத்திலும் சூரியனுக்கு இரண்டுபக்கங்களிலும் பாபர் சூழ்ந்து பகை பெற்றும் பலவகை அபெலமார்க்கத்துடன் இருக்கில் பிதா கெற்பாதி முதல் பாலியத்திலேயே மரணமாவான் யென்றும்.

குஜன் கேது முதலியோர் சூரியனுடன் சூரியனுக்கு (கூ) - ல் அல்லது தனுசு சிம்மம் கன்னி துலாம் இவைகளில் இராகு சனி யுடன் கூடி இருக்கில் புதன் சந்திரன் க்ஷீணனாக இருந்தாலும் பார்த்தாலும் பிதா யௌவன வயதில் மரணமாவனென்றும்.

புதன் சனி சந்திரன் இவர்கள் கூடி நட்புபெற்ற இராசியில் பகை முதலிய அசுப பெலன் பெற்றிருக்கில் பிதா கௌமார வயதில் மரணமாவ னென்றும்.

சூரியன் கேது சனியுடன் மதிமுதலியோர்கூடி குரு வீக்ஷண சம்மந்தம் சுபசம்மந்தத்துடன் தீர்கஸ்தான சுபக்ஷேத்திரத்தில் வாழில் பிதாவார்த்திகவயதில் மாரகமென்றும்.

ஷெ. கிரகங்கள் சிம்மம் மாரத்திலும் கன்னி விருச்சிகத்தில் சனி இராகு முதலியபாபியும் குரு பெலன் கெட்டு விருச்சிகம் கும்பம் கன்னி

யிலிருக்கினும் பாபர்களின் சம்மந்தம் பகை நீசம்பெற்றிருக்கினும் சாதகன் இறந்தபின் பிதுர்மரணதிசையை யடைவனென்றுங் கூறப்படும்.

சூரியனுடனும் குருவுடனும் சூரியனுக்கு ஒன்பதாமிடம் தனுசு இவ்வதிபர்களுடன்கூடிய கிரகயெண்களைப் பெலாபெலத்தின்மேல்பங்குப்படி யெண்ணித்துகையைக்கூட்டி ஒன்றபடுத்தி சூரியனுக்கு எட்டிலும் அவ்வதிபனுடனும் கடகம் சந்திரன் இவர்களுடனும் ஸ்தானத்திலுமிருக்கிற யெண்களை பெலவீதப்படி எடுத்து ஒன்றபடுத்திப் பெருக்கிக்கொண்டு மேலே பெருக்கிவைத்த துகையையும் கீழே கண்ட துகையையும் பெருக்கி கூ-ல் கழித்த சேடம் எத்தனுவது கணக்கோ அதை சாதகம் சவ்யாபசவ்ய மறிந்து சவ்யமானல் வந்தமிச்சத்தை சாதகன் சென்னமான திசைமுதல் அத்தனுவது திசை புக்தியில் பிதுரு கருமமென்றும் அபசவ்யமானல் (கூ) திசையில் மேல்மிச்சம்வந்த கணக்குள்ளதிசை போக பாக்கி எத்தனையோ அந்தத் திசையின் புக்திகாலத்தில் பிதுருகர்ம திசையைக் கூறல்வேண்டும்.

மேற்கூறிய சூரியனுக்கு க-கூ களிலும் சிம்மம் தனுசுவிலும் பாப பலத்துடன் நீசம் பெற்றோர் சனி இராகு கேது இவர்களிருக்கில் பிதா அங்க ஈனனல்லது குலஹீனனுகி வாழ்வனென்றும்.

அந்த ஸ்தானுதிபதிகள் பகை நீசம்பெற்று பாபகிரகத்தில் சனி இராகுகுச்சம்மந்தம் பெற்றிருக்கில் பிதா நீச குலத்தனல்லது மதபேதியாகுவனென்றும் கூறப்படும்.

அஷ்டமாசித்தி முதலாகிய
தத்துவஞானங்களையுங் கூறப்படுகிறது.

குரு புதன் ஒன்பது ஐந்திலாவது சந்திரசமாகமம் பெற்றாலும் சுக்ஷேத்திர உச்சமாகிப் பாபர் சம்மந்தமின்று சூரியனிருக்கினும் குருவுக்கு க-டு கூ-ல் சுபகிரகஸ்தானமாகி சுபர்கள் நின்றும் அந்தஸ்தானுதிபதி குரு புதன் ரவியுடன் கூடி கேந்திரதிரிகோணத்தில் பகை நீசம் நீங்கிய இடமாயிருக்கில் சாதகன் தத்வஞானியாகி சுவாதிஷ்டானவனுபூதி மார்க்கமரிந்து நரை திரை மூப்பின்றி ஈசதுல்யனுகி உலகத்தின்கண் யாவரும் படியவும் மேலோனுகி வாழப்படும்.

இவ்விதமிருக்குங் கிரகத்துடன் குரு பெலவானுகி சந்திரபெலனுடனும் சுக்கிரனுங் கூடினுலும் பார்த்தாலும் அல்லது மகரம் மீனம் துலாத்திலும் அதர்க்கு உ-டு-கூ களில் சனி அல்லது குசன் பெலத்துடனிருக்கில் இராச சன்னியாசியாகி அனேகர்களுக்கு குருவாகியோக போக்கிய

வனுபவத்துடன் யாவரும் புகழ வாழ்வன், இதில் சொல்லா தொழிந்த இடத்தில் சனி இராகு னிற்கில் அவ்விதகுலத்திற் பிறந்தும் இழிவனுகி அவுமானங்களையும் பொருந்தி வாழ்வன் அதில் புதன் கேது கூடி இருக்கில் அல்பசன்னியாசியாகி விவகரித்துத்திரிவன் தனக்கு ஒன்றுமரியான் சந்திரன் க்ஷீணனுகி சனி பாம்பு முதலிய பாவருடன் கூடி மேலேகண்ட ஸ்தானத்தில் பகைமுதலியவகை பெற்றிருக்கினும் நோக்கினும் மேலுக்கு விரதத்துடையனுகி அந்தர்யாமி அகிர்த்தியவானுகி ஞானவானென்ற பெயர் ஒன்றொழிய வேறில்லாதானுவன் கபடம் சூதனுவன்.

முதற் பாகத்திற் கூறியபடி ஸ்தானத்திலும் கிரகங்களுடனும் சூரியன் சனி புதன் இருந்தாலும் பார்த்தாலும் யோகாதி அப்பியாசம் ஞானமானது. இச் சென்மத்தில் முடிவு பெறுனுகி வாழ்வனென்றும். வேறு பாபசம்மந்த மின்றி சுபவீக்ஷணியத்துடன் இருக்கின் மகான்களின் தெரிசனை கண்டு சொர்ணஞ் செய்யும் சக்திகளையும் தேக நரை மூப்பு பிணி சாக்காட்டை செயித்து ஈசு வரதுல்லியத்துவம் இந்த சென்மத்திலேயே கிடைக்கப் படுமென்றறிய வேண்டியது. இவ்வித மிருந்து பாபிகள்நோக்கில், கிருபை, யொன்று மின்றி செனங்களின் வசியமும் தேவானுக்கிரக ஸ்தனுகியும் வாழ்ந்து மடாலயங்களை விர்த்திசெய்து மிகுந்த கீர்த்தியுடன் குடும்ப மில்லரத்தை துறந்து வாழ்வனென்றும்; இதில் குசன் மாத்திரங் கூடி இருக்கில் யாவரும் புகழத்தக்க சால தொழிலு சன்னியாசியாகியும் சித்தனுகியும் உலகத்திற்றிரிவனென்றும் குசனுடன் மற்றொரு பாவரிருவர்நோக்கமாவது சேரவாவது இருக்கில் தற்மாலய முடிவின்றிசெய்தும் தற்ம முதலிய பொருளையுங் கைக்கொண்டு ஞானவேஷிதனுகி டாம்பீகனுகி வாழ்வன் என்றும் கிரியாபத மிருப்பதுயென்பது யாவும் பிசகனுகி வாழ்வன்.

மேற்கூறிய கிரகங்களிருந்தபடி பெலாபெலத்தின்மேல் யெண்களைக்கூட்டி இராசி யெண்ணிற் பெருக்கி வந்த தொகையை, ஒன்பதில் கழித்த, மிச்சம் எத்தனையோ, அதை, முன்கூறிய சவ்யாபசவ்யம் போலரிந்து அந்தத்திசா புத்தியில் ஞானமுற்றுதலுண்டாகி, லோகவாச்சரிய லோகமித்தியா புருஷனுகி ப்ரபஞ்ச உண்மையரிந்து, அடியானுகி நற்கதி யடைவனென்றுங் கூறப்படும்.

அவ்வித ஸ்தானங் களிற் சேர்ந்த கிரக தேவதைப் படிக்கி உபதேசம் பெற்று வாழவ னென்றுங் கூறப்படும் என்றறிய வேண்டியது.

பத்தாவது கருமபலனும் இராசிபலனுங் கூறுவோமாக.

மகரத்தில் குசன் சந்திரனும் குசனுக்கு தெசமத்திலும் ஆதிபதியும் உச்ச சொக்ஷேத்திரமாகிச் சனியு முச்சமல்லது நட்பு ஆக்ஷி க்ஷேத்திரத்தில் கேந்திரத் திரிகோணத்திலும் சூரியன் வலுப் பெற்றும். இருக்கில் மண்டலாதிபதியாகி வாழ்வ னென்றும் இக்கிரகங்களில் மேற் கூறிய இடத்தோர் யாவரும் பெலத்து குசன் சந்திர சம்மந்த மிருக்கில் தேசாதிபன் என்றும்.

குருசம்மந்த மாகிப் பெலனுடன் மேற்கண்டவர்களுடன்மேற்கண்ட இடத்தி லிருக்கில் சிலகண்டங்களுக்கு அதிபனுகியும் சுக்கிரன் சந்திரன் சனி முதலியோர் ஷெ கிரகமிடத்திற் பெலத்துடனிருக்கில் கண்டத்துக்குள் சிற்றரசனுகி மற்றொருவரசனுக் குள்ப்பட்டவனுகியும் இராகு புதன் முதலிய சனி கேந்திர கோணத்தில் நட்புபெற்று மேலேகூறிய இடங்களிலிருக்கில் சில பூமிக்கதிபனுகி சிலகிருமாதிபனுகியும் சூரியன் கேது சுக்கிரனுடன் கூடி கேந்திரகோண முன் இடத்ததிபருடன் இருக்கில் குடித்தனப்பாங்கில் மன்னரைப்போலொற்ற வாழ்வையுடையவனுகி அல்பமான சில பூமியைப் படைத்து வாழ்வன் யென்றும் கடகம் மகரம்இவைகளில் நீசம் பகை பெற்றோரும் குசன் குருவுடன் சனி இராகு சூரியன் முதலியோர் கூ-அ விருச்சிகம் கன்னி மேஷத்திலிருக்கில் இவன் பூமிமுதலான சொத்துகள் கடனுக்கு கொடுத்தே கெடுவனென்றும் சனி குசன் கேது கூடி ஸ்தானுதிபதி பெலமற்றிருக்கின் பூமியில்லாதவனுகியும் தரித்திரனுகியும் வாழ்வனென்றும் அவ்விராசிகளில் பகை பெற்றோருஞ் சிலசுபரும் மிருக்கில் பூமி முதலியஸ்திதி யிருந்தும் கிடையாமல் சிலகாலம்வருந்தி இளைத்துத்திரிந்து விவாதத்தின் மேல் கிடைத்தலும் இவ்விதம் குசன் னின்ற இராசிக்கி ச-ய மிடத்தின் பெலனையும் அதிபதியின் பெலத்தையுங் கண்டு கூறல் வேண்டும்.

கருமபாவ பலன்கள்.

குருவுக்கு பத்தா மிடத்துக் குடையவனும் பத்திலும் மகரத்திலுஞ் சனியுடனும் சுபர்வீட்டில் சுபர்களுடன் கூடி நிற்கையில் குரு சுக்கிரன் சூரியன் பூரணசந்திரன் கூடி இருந்தாலும் பார்த்தாலும் சத்கருமமே செய்வனென்று மிகுந்த பக்திகளும் ஞானங்களும் விசேஷ கீர்த்தியுமடைவன்.

அவர்கள் சுபர்களாயிருந்தும் பகை நீச இடங்களில் கன்னி விருச்சிக மிதுனத்தில் அசுபபாப பெலசம்மந்தராகி இராகு சனியைக் கூடில்

அசத் கருமனுகி கொடூரியாய் குலைதளவு களக்காமவானுகியு மிகவும் துராக்ரமஸ்தனுகியும் சண்டாளத்வங்களைப் புரிந்து மிகவும் கேடனுகித் திரிவ னென்றும் குலஹீனனுவனென்றும் இதில் சனி நீசம் பகை பெற்றுச் சூரிய சந்திரர்களுக்கு பத்தில் ஏழிலிருக்கினுங்கூட இருக்கினும் மாதுரு பிதுரு கருமங்கள் கூட செய்ய இடமின்றி மிகவுங் கஷ்டங்களை யடைந்து கறுமபாத்தியதைக்கு உதவானுகியும் இருந்து மில்லாதவனுகி பரதேச வாசகனுகவாவது பவிப்பன் என்றறிய வேண்டியது.

பதினோராவது லாப பாவம் கூறப்படுகிறது.

சனி கேந்திர த்ரிகோணத்தில் குருபெலத்துடன் இருந்தாலும் கும் பத்திலாவது துலாம் சிம்மம் தனுசுவிலாவது விருஷபத்திலாவது மேலே கூறிய கிரகங்கள் னின்றாலும் சந்திரனின்றாலும் பெலன்பெற்றிருக்கினும் மீனத்தில் சனி முதலான பாபிகள் இருந்துவரில் லாபமதிக முள்ளவன் யென்றும் மூத்த சகோதிர விற்தியு முண்டாகும்.

அதில் சூரியன் பாம்பு குசன் இவர்களிருக்கினும் புதன்கூடி இருக்கினும் முன்சகோதிர மிலான் குரு இருந்தாலும் பார்த்தாலும் முன் புருஷ சந்ததியும் சந்திரன் சுக்கிரன் இவர்களிருக்கவாவது நோக்கமாவதிருக்கில் பெண்சந்ததி முன்னென்றும் இல்லாவிடில் அந்த இடம்பெண் அல்லது ஆண்ராசியறிந்து முன் ஆண் பெண் குறிக்கப்படுமென்றும் அறியவேண்டியது.

பனிரெண்டாவது விரயம் பரதேசம் உத்தியோக விஷயங்களைப்பற்றி கூறப்படும்.

குரு சொக்ஷேத்திரத்தில் சுக்கிரன் கேந்திரத் திரிகோணமான துலாம் விருஷபம் மகர சுக்கிரனுகியும் சனி துலாம் கடகம் விருஷபம் இவைகளி லிருக்கில் பரதேசத்தில் உத்தியோகத்துடன் மிகவும் பிறபலமாகி ஜீவனுதி பத்தியமும் இராஜமூலிய வித்தையால் பிறபலவானுகியும் வாழ்வன் மேற்கூறிய சனிக்கி கo-மிடத்தையும் கஉ-மிடத்தையும் இவ்விதமே கண்டுகூறல் வேண்டும் இந்த ஸ்தானத்திலும் ஸ்தானுதிபர்கள் பகை நீசம் பெற்று பெலமற்ற இடத்தி இருக்கில் சீவனம் இராசாங்க உத்தியோகக் குறையும் அதில் குரு பெலக்கில் சிலநாளிருந்து தப்பிதத்தினுல் தள்ளுண்டும் குரு சுக்கிரன் இருக்கில் சீவன விஷய முயற்சியால் தண்டனைப் படுவன் சனி புதன் கூடி இருக்கில் விரோத வரசனுல் தானுகவே ஜீவனத்தை இழந்தும் கேது குசன் நிற்கில் சீவனத்தாலும் முயற்சியாலும்வரும்

அவுமானத்தால் மரணமும் இராகு சூரியன் இருக்கில் பரதேசத் தொளிந்தும் இவ்விதமாய்ப் பலவாரான கஷ்ட நஷ்டத்தை சீவன மூலியங் கொடுக்கப்படுமென்றும் அவ்வித கிரகம் ஸ்தான மிவைக ளுக்கு ஐந்தாமிடம் ஐந்தாமிடத் ததிபதியுடன் கூடிய கிரகங்களின் யெண்களை ஒன்று சேர்த்து அந்த இராசி பெல யெண்ணிற் கொடு த்த பொன் முதல் சீவனலாபம் மாதம் மொன்றிற் கிடைக்கப்படு மென்றும் முன் கிரகம் ஸ்தானங்கள் பின்கூறிய ஐந்தாமிடம் கிர கம் இவைகளின் யெண்கள் யாவையும் கூட்டி இராசி மொத்தம் பெலா பெலத்தை இரண்டுதபா சமத்துகையுடன் பெருக்கிக்கண்ட துகையில் கொடுத்துவந்த மிச்சமான பொன் கணக்குள்ளதொகை சீவனம் விடும்போது இருக்கும் யென்றுங் கண்டறியவேண்டியது.

பொன்னென்பது அவரவர்கள் செனித்த தேசத்துப் பணம் பத்துக்கொண்டது ஒரு பொன்னனபடியால் இவ்விதங் கணக்குச் செய்து தற்கால வரகாக்ஷிக்கி இசைந்தபடி பார்த்துக் கொள்ள வேண்டியது.

விருஷப லக்னத்தின் பாவம்.

விருஷபலக்னத்தில் பிறந்தவர்களுக்கு குருவும்சந்திரனும்பாவ பலன்களையும் கெடுதல்களையும் கொடுக்கப்படுவர் குசன் மாரகனெ ன்றும் கேது மாரகனுகவும் சுக்கிரன் சமபலத்தைக் கொடுப்பவனென்றும் சனி புதன்சூரியன் இராகு யோக காரகர்கள்யென்றும் குசன் கொல்வான் யென்பது. கடகம் சிங்கம் கும்பம் மீனம் னீங்கிய விடத்தில் யென்றும் கடக சிம்ம கும்பம் மீனத்திலிருக்கில் மாரகங் கொடுப்ப னென்றும், குரு வும் மிதுன துலா மேஷ விருச்சிகத்திலிருக்கில் மாரகனென்றும் சந்திரன் இராகுமாரகனுகினும் தனுசு சிங்கம் மகரம் கன்னியில் சந்திரன் இராகு விருக்கில் மாரகங் கொடுக்கப்படமாட்டார் களென்றும் மற்ற இராசியிலிரு க்கில் மாரகத்தை புதனுங் கொடுப்ப னென்றும், இந்த திசையில் புதன் குரு இராகு சந்திரன் இவ்வித புக்திகளில் மாரக மென்றுங் கூறப்படும்.

சனி இராகு புதன் கேந்திர திரிகோணத்தில் நீசம் பகை இடம் னீங் ய விடத்தில் இருக்கினும் சுக்கிரன் சூரியன் குசன் கேது இவர்களை விட சனி இராகு அதியோகக் காரகர்கள் புதன் யோககாரகனுகிலும் நிரந்தரசம

யோகமழிப்பான், குசன் கேது சூரியன் சுக்கிரன் சுபர்களென்றும் அறியப்படும் இத்திசாபாகங்களில் பாவங்களின் கணித திசாபுக்திகளைக் கீழே வறியவும்.

சாதகன் சுகாசுகம்.

புதன் திசை சனி இராகு சுக்கிரன் சூரியன் இவ்வித புக்திகளிலும் சனிதிசை சந்திரன் கேது இராகு சுக்கிரன் புதன் இவ்வித புக்திகளிலும் குசன்திசை சனி கேது சூரியனும் சுக்ரதிசையில் சனி புதன் சூரியனிலும் கேதுதிசை சனி சூரியன் குசனிலும் சூரியதிசை குரு புதன் மதி குசன் இராகுவிலும் கிரக வாகன க்ஷேத்திரமும் பூமி லாபமும் இராசாங்கவனுகூலமும் சன்மான வெகுமானமும் வெள்ளி வெண்கலாதி லாபமும் சுபகல்யாண செயமும் சத்துரு செயமும் அனேகவித யோக பிறபல கீற்திகளையும், யெத்தன காறியசித்திகளையும் களத்திர புத்திர லாபமும் உண்டாகும்.

சாதகன் பீடை ரோகவ் கெடுதல் திசாபுக்திகள்.

சந்திரன் இராகு குரு இவ்வித திசையில், தனது குரு இராகுகுசன் கேது சூரியன் இவ்வித புக்தி அந்திரங்களில் குடும்பதுக்கம் பொருள்சேரும் விவாதம் தனநஷ்டம் அவுமானம் ராசதெண்டனைகள் கடன் முயற்சிக்கிறைவுகளும் ஸ்தானபேதம் புத்தி பேதம் கவலைகள் சீவன நஷ்டம் காருகிரகபெந்தனம் பலவகையுள்ள தேசங்களையும் கொடுக்கப்படுமென்றறியவேண்டியது.

மாதுருவரிஷ்டம்.

சந்திரன்றிசை சனி சுக்கிரன் இராகுவிலும் சூரியதிசை சுக்கிரன் குரு இராகுவிலும்இராகு கேதுதிசை புதன் சனி சுக்கிரன் மதியிலும்குசன்திசை தனது குரு சுக்கிரனிலும் மாதுரு துக்கத்தையும் மாதுருஅரிஷ்டத்தையும் மாதுருவம்சக்ஷயத்தையும் மாதுரு தேகாறிஷ்டங்களை விரோதத்தைக் கொடுக்குமென்றும் அறியப்படும்.

பிதுருவரிஷ்டம்.

சூரியதிசையில் சனி குரு புதனிலும் இராகுதிசை தனது சுக்கிரன் சனியிலும் சனிதிசை குரு புதன் சுக்கிரனிலும் புதன்றிசை சனிகதிர் குருவிலும் சந்திரன்றிசை தனது இராகு சனிபுகரிலும் பிதுருவரிஷ்டமும் மரணதுக்கங்களையும் பிதுருவம்ச மரணங்களையும் பிதுராற்சித நஷ்டத்தையும் விரோத விவாத பலன்களைக் கொடுக்கப்படுமென் றறியவேண்டும்.

சகோதிரவறிஷ்டம்.

குசன் சந்திரன்றிசையில் சுக்கிரன் சனி இராகு புக்திகளிலும் குரு திசை சனி இராகு புதனிலும் புதன கேதுதிசையில் குசன் சனி புதன் இந்த புக்திகளிலும் அரிஷ்டமாகும்.

களத்திரலாபம்.

சனி மதி சூரியன் புதன் சுக்கிரன் இவ்வித இராகுவின் றிசைகளிலும் சுக்கிரன் மதி குரு புதன் சனி புக்திகளிலும் விவாகம் சந்திரன் குரு கேது இராகு சுக்கிரன்றிசையிலும் சனி புகர் குசன் இராகு குரு புக்திகளிலும் களத்திரகெண்டம் தோஷங்கொடுக்கப்படும்.

புத்திரலாப வரிஷ்டங்களின் றிசைபுக்திகள்.

புதன் குரு மதி குசன் இத்திசையிலும்கேது சூரியன்றிசைகளிலும் இராகு குரு புகர் குசன் கேது இந்த புக்திகாலங்களில் புத்திரதோஷமும் அரிஷ்டமும் உண்டு புத்திரபாகம் உண்டாகவுமாட்டாவாம் சூரியன் சுக்கிரன் சனி புதன்றிசை இராகுதிசையில் குரு சந்திரன் சுக்கிரன் சனி புதன் புக்திகாலங்களில் புத்திரலாபமும் குடும்ப விர்த்தி க்ஷேமமுமுண்டாகும்.

ரிஷபத்தில் செனித்தவன் தெய்வபக்தி பூசையுள்ள சொற்ப போசனன் தூலசரீரம் அடிமையாள் சேவகர் உள்ளவன் புளிருசிப்பிரியன்கணித நூலறிவன வஸ்திராபரணமுடையன் பிரர்பொருளை யாசிக்கவல்லவன் இருமல்லது கபபீடையுடையவன் அஞ்சேருகி வாக்குறுணயவானுவன்.

ரு-வது- வருஷமாதத்தில் நெறப்பு சமானகண்டம் கசு- ல் விரணரோகன் ககூ- வருஷத்தில் மாதத்தில் இருமல்முதலிய கபநோய் உ0-உஎ ல் சுரம் சா0-லும் சாதிபாதைகளாலும் சுபக்கிரகங்கள் இலக்கினத்தைப் பாற்கின் வயது எஎ- நீற்கமான தென்றம் மார்கழிமாதம் பூரண வியாழக்கிழமை உரோகிணிநாள் இராத்திரி சா0 - நாழிகையளவில் சாதகவாயுள் முடிவு தலைநோயால் மரணம்.

முதலாவது ஆயுர்பாவபலன்.

சுக்கிரன் குரு சனியிவர்கள் ஒன்றாயினுமல்லது தனித்தனியாக கேந்திரதிரிகோணமான விருஷப குடும்பத்தில் கன்னி மகற மீனங்களிலிருந்து அவரவர்களுக்கு நீசம் பகை இல்லாத இடங்களாகி சுபக்ஷேத்திரத்தில் சுபசம்பந்தர்களாகி யிருக்கினும் பெலன் பெற்ற பூரண சந்திரன் கேந்

திரத்திலிருக்கினுஞ் சாதகனுக்கு ஆயுர்பாவ வருஷம் எஎ - யென்றும் மேற்காட்டியபடி மூவருமின்றி மிதுனம் சிம்மம் துலாத்தில் சுக்கிரன் சனி மகர கும்பங்களில் சந்திரனுடன் குருவாதல் அவர்கேந்திரத்திலாதல் இருக்கினும் கடக குருவாகினும் சுக்கிரன் புதன் கேந்திரத்தில் பாவரு டனே கூடினுலும் சாதகனுக்கு வருஷம் ௱௬௨-ம் தனுசு கடகம் மகரம் மீனம் இதில் சுக்கிரன் சந்திரன் புதனிருக்கில் சனி சுக்ஷேத்திரம் உச் சம் அல்லது நட்பாகி கேந்திரத்திலிருக்கினும் பாவரைக் கூடினும்வருஷம் ௬௨-யென்றும்.

சந்திரன் சனி னின்றவைக்கி லக்னுதிபதி அஷ்டமாதிபதி திரிகோ ணத்தில் குரு வீக்ஷணியம் பெற்று மகரம் கும்பம் மிதுனம் விருச்சிகத் தில் குசன் முதலிய பாபிகளுட னிருக்கினும் சுக்கிரன் பெலத்து இருக் கில் வயது ௱ ௰௪ யென்றும்.

சனி குசன்முதலிய பாவருடன் சுக்ஷேத்திர விடத்தில சந்திரலக்னு திபனுகில் ஸ்திர இராசியில் குரு சனி முதலியோர் கேந்திரத்தி லிருக்கில் ௱ (௬௰௧) யென்றும் இதில் குரு மறைந்து சனி அபலனுகிப் பாவரு டன் கூடி கதிர் முதலியோர் நீசமாகி சுக்கிரன் பெலக்குறைவாகி இருக் கில் வருஷம் ௪௮-யென்றும் சனிமுதலிய பாவருடன் சுக்கிரனுங் குரு வும் புதன் சூரியன்முதலியோர் கேந்திரத்திலிருக்கில் வருஷம் ௪௨-ம் குரு பெலக்குறை வாகியும் சனிபாவருடன் விருச்சிகம் மீனம் மேஷம் கன்னி சிங்கத்தில்னின்று பகைவரைச் சேர்ந்து சுக்கிரன் கன்னி விருச்சிகம் மே ஷம் மிவைகளிலிருக்கில் வருஷம் ௩௩-யென்றும் குரு கேந்திரத்தில் வலு த்தும் பாபியுடன் கூடவல்லது நோக்கவும் சுக்கிரன் நீசம்பகையுடன் ௩-௬-௮-௧௨லிருக்கினும் பாபிகள் நெருக்குண்டு மிதுன மேஷத்தினும் யிருக்கில் வருஷம் உ௬-யென்றும் சுக்கிரன் புதனு மேஷமாகிஇராகுமுத லிய குசனைக்கூடி சந்திரன் முதலியோர் கேந்திரத்தில் குருவிருந்துபகை யைப் பேரில் வயசு ௧௮-யென்றும் மேற்படி சனி நீசம் பகை பெற்று அப லமாகிச் சேரில் வருஷம் ௧௨-க்குள் ளென்றும் அறியவும்.

சந்திரன லக்கின மிருக்குமிடஞ் சரமாகினும் குரு சுக்கிரனிருக்கு மிடஞ்சரமாகின் வருஷம் ௩௨-ஆகிய அல்பத்தில் பூரண மென்றும் குரு சுக்கிரன் கன்னி கடகம் மகரத்திலும் சனி கும்பம் விருஷபம தனுவில் பாபருடனும் சந்திரனுக்கு இரண்டு பக்கங்களிலும் யாவரும் க்ஷீணசந்திர னுகில் அல்பத்தில் மத்திமமும் குசன் இராகு கூடி இருக்கில் அல்பத்தில் அல்பமும் குரு தன் வீட்டிலாவது கன்னி கடகம் துலாத்திலாவது இருந்து சனிகூடினுலும் பார்த்தாலும் சுக்கிரன் சனி கேந்திரத்திலாவது

மதிகேந்திரத்திலாவது விருஷபம் கும்பம் மீனம் இவ்விடம்கடகத்திலிருக்கினும் மிதுனத்திற் சாரினும் சாதகனுக்கு மத்தி மத்தில் பூரணமென்றும் இத்துடன் புதன் இராகு பாவர்கள் குசனிவர்கள் கேந்திரத் திரிகோணத்திலிருக்கில் மத்தி மத்தில மத்திமமும் சிம்மம் மகரம் தனுவில் மிதுனத்தில் சுக்கிரனு பாவருடன் கூடி பகை பெற்றிருக்கில் மத்திமத்தில் அல்பமுமாக வறியவும்.

மேஷ மிதுனத்தில் சனி இராகு முதலிய பாவருடன் பெலக்குறைவுகளையுடையவனுகி சூரியன் முதலாகிய கோள்கள் பலவகை இடுக்கத்துடன் ஒன்று பெட்டிலிருக்கினும் சனி சுக்கிரன் பெலக்குறைவாகி யிருக்கினும் சாதகன் பாலாறிஷ்டத்துடன் பாலியத்திலேயே மரணமாவான்.

சுக்கிரன் கேந்திரகோண நட்பு க்ஷேத்திரத்தில் பெலத்துடன் குரு மறைவாகியும் சனி துலாம் மகரத்திலிருக்கினும் குசன் மதி கடகம் சிம்மம் தனுசு மீனத்தில் பாவருடனிருக்கினும் பூரணத்தில் பூரணவயதும் சுக்கிரன் சந்திர கேந்திரனுகி இருந்து நட்பு க்ஷேத்திரமாகியும் குருசமந்தம் சந்திர கேந்திரம் லக்னமாகி சரத்தில் குரு புகரிருக்கில் பூரணத்தில் மத்திம வயதும் சனி—புதன் கூடிபாவரு நோக்கமாவது மேற்படி கிரகங்களுக்குறில் மேற்படியில் அல்பாயுளென்றும் அறிக.

ஆயுள்கணித திசைகளும் ஆயுள்க்கணிதமுங் கூறப்படும்.

தனுவிலும் குருவுடனும் சந்திரனுடனும் சனியுடனும்சனிக்கியெட்டாவது வீட்டிலிருக்கும் கிரகத்தினுடையவும் அதிபதியுடனுமுற்ற கிரகங்களின் பெலாபெலத்துக் கிசைந்தபடி முற் கூறிய கிரகயெண்களை யொன்று சேற்து அந்தந்த இராசிகளின் யெண்களையு மொன்றசேற்து பெருக்கி மிதுனத்திலும் குசனுடனும் விருச்சிகத்திலும்நின்றகிரகயெண்களை பெலாபெலப்படி ஆறும்ந்தெடுத்து ஒன்றுபடுத்தி அந்தஇராசியெண்களால் பெருக்கி இரண்டு பெருக்குத்தொகையை யொன்றுபடுத்தி கஉ0-ல் கழிக்க வந்ததை ஆயுளென்றும் (ரு)-ல் கழிக்க வந்த மிச்சம் பருவகாலமும் கூ-ல் கழித்த மிச்சம் திசையாகவு முன்கண்ட கணக்கைப் போலவே ஒற்று பார்க்குங் காலம் மாரக மெனக்கண்டு கூறல்வேண்டும்.

உ-வது தனகுடும்ப பாவபலன்.

புதன் சுக்ஷேத்திர உச்சமாகி குரு முதலிய கோள்க்களை கூடாமல் சநி ரவி முதலிய கோள்க்களைக் கூடி கேத்திரத் திரிகோணத்தி லிருக்கில் பிரந்த சாதகன் மிகவும் பிறபலமான தனர்ச்சிதனுவன் இல்விதத்

கோளை குரு முதலிய சந்திரன் குசன் பார்க்கில் தனங்கள் வருதலும் அதற்குமேலாகிய பொருள் விரயத்தையும் அடைவன். கடனது அவ னைப் பிடித்து இழுத்து வந்தபோதிலும் அந்திய காலங் கடன் னிற்கா தென்றும் தனகாரகனுடன் ஒருவருமின்றி ஸ்த்திரதி விருந்தும் புதன் ரவியுடன் கூடி பாபரைச் சேர்ந்தும், (சு) (அ) (டூஉ) ல் இருக்கினும் தன மில்லான் ரொணத்தால் மூழ்குவன் அப்படிக்கி இருக்குமிடம் சந்திர கேந்திரமாய் சரராசியிலிருந்து குருனின்ற வீட்டோன் கேந்திரம் ஸ்திர இராசுயி லிருக்கினும் சனி தனது அல்லது கேந்திரத்தில் பெலன் பெற்றி ருக்கினும் சிலனுள் ரொணத்தால் அமுழுந்திபலவகை நஷ்டம் பிரர்பொரு ளார்ப் பின்விருத்திக்கி வருவனென்றும் இதில் குசன் கேது இவர்கள் கூடில் தன் வரவு முண்டு வரத்துக்கு மிஞ்சிய சிலவையடைந்து வரப்படு வனென்றும் சூரியன் கெட்டு பகை க்ஷேத்திரத்திலிருந்து நீசம் பெற்று லும் புதன் முதலியோர் அத்துடன் கூடி கடகம் துலாம் மீனம் மகரம் மேஷத்தி லிருக்கில் தகப்பன் தனங்கிடையா தென்றும் மற்ற இடங்களி லிவ்வித மிருந்து குரு சனி முதலிய மதி இருந்தாலும் பார்த்தாலும் பிதுர் பொருளுண்டு பின் னஷ்டமாய் சுயாற் சிதமே பிறபல விற்தி யுண்டென் றுங் கண்டு கூறல் வேண்டும் புதன் குரு இவர்கள் சுக்ஷேத்திர உச்சமாகி கேந்திர கோணத்தில் இருந்தும் சனி முதலி யோறைக் கூடினும், சாத கன்கோடியாந்திர வாஸ்தியும் அதில் குரு ஒன்றுவது புதனுவதின்றி மற்றவர்பெலக்கில் லக்ஷாதிகாறிபென்றும் புதன் குருவின்றிச் சனி குசன் கூடி மிதுனம் கன்னி துலாம் கும்பத்திலிருக்கிலிருக்கில் லக்ஷாதி காரியாகியும் புதன் தனித்தாலும் சுபக்கோளைக் கூடி சுபக்ஷேத்திரத்தி லும் இரெண்டிலும் சுபர்களைனின்று பகைமுதலிய அபெலன்களின்றி இருக்கினும் தச சாஸ்திர மேலுள்ளதன விற்தியுடைய பொன்னுள்ள வனென்றும் மேற்கூறிய புதனுக்கு உ-ல் சுக்கிரன் அல்லது குருமுதலிய சுபர்கள் பாபசம்மந்தமின்றி புதன் சூரியன் பாபியுடன் கூடி இருக்கில் லக்ஷாதிபனுப் சுயாற்சிதனுகவும் பின் மூழ்மையை யடைவனென்றும் புதன் குரு அபெல ஸ்தானங்களில் பகை நீசம் பெற்று பாபசம்மந்தமாய் நெருங்குண்டு இருந்தபோதிலும் கடகம் கன்னிமிதுனம் தனுசு கும்பத்தி லிருக்கில் அல்பமான பொன்னுடையவன் சதகணக்காகவுங் கூறப்படும்.

மிதுனத்திலும் குரு அபெலனுகி குருவிற்கிரண்டிலும் பாபராசி பெலன் கெட்டும் புதன்மறைந்தும் பெலகிரகத்துடனிருக்கினும் தனமில் லாதவனுவன் தரித்திரமடைவன்.

மற்றஸ்தானத்திலிருக்கில் அல்பமான தனவந்தனுவன்.

தனத்தின் கணிதம்.

குருவுடனும் தனாதிபதியுடனும் மிதுனத்திலும் குருவுக்கு இரெண்டாமிடத்திலாவது இல்லாவிடில் அதிபதியுடன் இருக்கும் கிரகபெண்களை யொன்றபடுத்தி இராசி யெண்ணாற் பெருக்கி வைத்த தொகையை கிரகங்களுக்கு எடுத்த பெலனில் உச்சகிரகம் கேந்திரக் கிரகத்திலும் சுபக்கிரக மதிகமானுல் ௩-தடவை சமத்தொகை போட்டுப் பெருக்கியும் ஆக்ஷியானுல் ௨-தடவைபெருக்கியும் நட்பு ஆனல் ஓறேதடவை பெருக்கியும் வைத்த தொகை தனத்தின் யெண்ணனபொன் அந்தசாதகன் அந்தியவரைக்குள் உண்டாகுமென்றறிய வேண்டியது.

பகை நீசபெலனுனல் வந்ததொகை கடனவளவு தொகையென்றுங் கண்டு கூறவேண்டியது.

குடும்பபலன்.

புதன் குரு கேந்திரகோணத்தில் சுபக்ஷேத்திர பெலத்துடன் இருக்கினும் ௨-௧௨-மிடங்களில் சுபரே கூடவாவது நோக்கமாவது உறில் அல்லது மேற்படி இடங்கள் சுத்தமாகி பாபரின்றி இருக்கில் குடும்பமென்மேலும் விற்தியுண்டாம் அப்படிக்கி இல்லாமல் பாபரிருக்கில் கெடும்பாபருஞ்சுபருங் கலர்ந்து இருங்கவாவது நோக்கமாவது உறில் இருந்தழிந்து பின் உண்டாகும் பாபர்பெலன் சாஸ்தியாகில் குடும்பமிருந்து வரவரக் குறிகி பலவாராகச்சிதரும் என்றறியவேண்டியது.

மூன்றுவது சகோதிரபலன்.

குசனுக்கு மூன்றுமிடத்தையும் அதிபதியின் பெலத்தையும் சந்திரன் பெலா பெலன்களையும் யூகித்து உரைத்தல் வேண்டும்.

சந்திரனுடன் சுபர்களாகிய குரு சனி குசன் இவர்களிருக்கில்சகோதிரன் புருஷசந்ததி யுண்டென்றும் கடகத்தில் குரு நின்றாலும் மீனத்தில் பூரணசந்திரனிருக்கினும் மேலாகிய சகோதிரர்கள் அதிகயோக பிறபலராகி அரச துல்யராய் வாழ்வார்கள்.

சந்திரன் கடகம் சிம்மம் மீனத்தில் குரு சனி சம்மந்தத்துடன் இருக்கில் பிறபலமாயும் அதிகமான சகோதிர விற்தியுண்டு இதில் சூரியன் முதலிய இராகு கேது மூவர்கூடி'இருந்தாலும்ஒருவாராகத் தனித்துக் கூடினுலுஞ் சகோதிர புருஷ சந்ததி யுள்ளவனென்றும் சந்திரன் துலாம் தனுசு மகரம் விருஷபம் இதில் குரு குசன் சூரியனிவர்கள் சம்மந்தமிருக்கில் மிகவும் மேலான சகோதிர மிகுந்த

லாபமும் துணைவர்களா லனுகூலமும் கீர்த்தியை யடைவன் குச னுக்கு மூன்றுமிடத்தையும் இவ்விதமே பார்த்துரைத்தல் வேண் டும் மேற்கூறிய இடங்களில் பாபர்களே பகை பெற்று வாழில் உண்டாகி மரணத்தடைவர்க ளென்றும் பாபருஞ் சுபருமாக வாழில் உடன் பிறந்தோர்கள் உண்டு. அல்ப சந்ததியாகி சாதக னுக்கு முன் மரணத்தடைவர்க ளென்றும் கும்பம் விருச்சிகம் மேஷம் துலாம் இந்த இராசிகளிலும் மிதுனத்திலுஞ் சந்திரனிருக் கினும் விருச்சிகம் கும்பம்நீங்கியவிடத்தில் சுபசம்மந்தம் சுபக்கிரக வீக்ஷணியத்துட னிருக்கில் சகோதிரஞ்சம விற்திகளுா் கும்பவிருச் சிகமாகில் சகோதிரமில்லா னென்றும் அவ்விடத்தில் சனி புதன் இராகு முதலிய பாம்புகளிருக்கினும் நோக்கினும் சகோதிரம் கிடையாதென்றும் மேற்கூறிய விடங்களில்அமரபக்ஷத்து சந்திரனு கில் பெண்ராசியில் சுக்கிரன் புதன் குசனுடன்கூடில் சகோதிரம் பெண்ணே நிலைக்குமென்றும் குரு சூரிய சம்மந்தம் உறில் புருஷ சந்ததி அல்பமாக தீற்கிக்கும் என்றும் இராகு கேது சனி சம்பந் தம்பேரில் சகோதிர முண்டாகி அவன் அந்தியகாலத்திற்கு ஒரு வருமிரார்களென்றும் குசன் முதலிய கேது இராகு கடகம் கன்னி யிவையினு மிருக்கின் சகோதிரமில்லானென்றும் மீன விராசியில் பெலத்துடனும் அதிபதி பெலத்து சூரியன் சந்திரன் சுக்கிரனிருக் கில் பெண் ஆண் சமதியாயும் சுக்கிரன் சந்திரன் அதிக பெலவா னுகி இருக்கில் பெண் சாஸ்தியென்றும் குரு சூரியன் குசன் இராகு பெலத்திருக்கில் ஆண்சந்ததி சாஸ்தியான விர்த்தியென்றும் கண்டு கூறவேண்டியது.

மேற்கூறிய ஸ்தானங்களிலும் ஸ்தானதிபதிகளுஞ்சுபராயினும் பாபராயினும் உச்ச சுக்ஷேத்திர பெலத்துடன் பெற்றுவாழில் உடனுற்ற சகோதிர மேலான விருத்திகளும் சகோதிர வனுகூலத் தையும் பெற்று வாழ்வனென்றும் அசுபபெலனென்னும் ஐவகைப் பெலனில் குறைந்தபெலத்துடன் இருக்கில் சகோதிரவனுகூலமின்றி யும் சகோதிரவிருத்தியின்றியும் அடைவ னென்றுங் கூறப்படும் சந் திரன்விருச்சிகம் கும்பம் மேஷம் இவைகளிலொன்றினின்று சனி முதலிய கோள்களைக் கூடினும் குஜனுக்கு மூன்றுதிபன் இவ்வித மிருந்தாலும் சோரனுகியும் அக்ருதனுகியும் அபிசித்தாகியும் பாபத் தொழில் புரிந்தும், பிருஷ்டனுகி வாழ்வன் சூரியனைக்கூடில் மேலா னேனுவன் சனி ராகு கேதுவைகூடில் சித்தபிரமையுடைவனுகியும்

ரோகியாயும் வாழ்வன் யென்றும் குடும்ப விரோதஸ்தனுவான் எனவும் இவ்விதமரிந்த பின் சகோதிரகாரகனுக்கு மூன்றுமிடமல்லது அதிபனுடன்கூடியகிரக சுபங்களையும்சந்திரனுடனும் கடகத்தினும் நின்ற கிரகபெலாபெலன்களின் கூர்மைப்படியரிந்த கிரகயெண்களைக்-படுத்தி ராசிகுணித மிச்ச யெண்ணிற்பெருக்கி: அந்த விராசிகளில் ஆக்ஷி உச்சம்பெற்ற கிரகத்துக்கிசைந்த யெண்ணில் கொடுத்துனின்ற மிச்சம் சகோதிரமாகும் அத்துகையை யேழாம் இராசியெண்ணிற்பெருக்கி சிவவிர்த்திக்குரிய கிரகயெண்ணிற் குடுக்கனின்ற மிச்சமானவைதீர்க்க சகோதிரமென்றும் இதில் பெண்கிரகத்தால் பெண்கிரகத்தால் எவ்வளவு ஆண்கிரகத்தால் யெடுத்தயெண் ணெவ்வளவுயென்றரிந்து அவ்வென்ணைப் பிரித்துக்கண்டவை ஆண் பெண்ணென்றும், இதில் சுபகிரகம் பெலம்பெற்ற நல்லோர் யெண்சாஸ்தியாகில் அவ்வித யெண்ணுள்ள சகோதிரர்கள் அதிகயோகமு மனுகூலத்தைப் பொருந்திவாழ்வார்களென்றும் அதில்கூறிய பாபர்களால்கொடுத்த பெண்ணரிந்தமிச்சம் சகோதிரர்கள் விரோதம் அவத்தொழில் குலஹீன நஷ்டஞ்செய்பவர்களாய் பவிப்பவர்களென்றுங் கண்டறியவேண்டியது.

போகாதி அடிமை சங்கீத பலன்கள்.

குசன் பெலத்தும் சந்திரன் கடகம் கன்னி மீனம் இவைகளிலாவது மிதுனத்திலாவது நின்று குருவல்லது சுக்கிரனைக்கூடினாலும் பார்த்தாலும் சங்கித சாஸ்திர பரிசியஞ்னென்றும் சனி புதன் முதலியோர் நோக்கினுலுஞ் சேர்ந்தாலுஞ் சங்கீத முதலாகியதும் தைரிய வீரியங்கள் குறைந்து அரை குரையாகி பிரியத்துடன்கூடி பலபெண்போகி யென்றும் புதன் கேதுகூடி இருக்கில் விதவை கிழஸ்திரீ போகனென்றும் குசன் சனியாகில்: நீசஸ்திரீ போகனென்றும் இராகுவாகில் தள்ளுண்ட ஸ்திரீபோகனென்றும் குருவாகில் இராசஸ்திரீ போகனென்றும் சுக்கிரனுகில் விபசாராதி உயர்குலப் பெண் போகமோக வாக்சல்ய தனலாப செயத்துடன் வருவனென்றும் குரு அல்லது முன்னேருடன் சூரியன் குசன் சேர்ந்திருக்கினும் நோக்கினும் ஸ்திரீகளாலேயே பொருளை யழித்துக் கடனாளியாவனென்றுஞ் சனிராகு பாவர்கூடினும் குடும்பக்கேடடன்னுவன் என்றும் இவர்களுடன் மிதுனம் விருச்சிகம் தனுசு மீனம் கும்பத்தில் மேஷத்திலிருக்கில் பல ஸ்திரீபோகமும் நிலையில்லாமல் காமா

துர்னகித் திரிவனென்றும் சனி புதன் முதலிய கேதுவிருக்கில் தைரிய வீரியமில்லாதவனுகி பெலக்குறைவும் சூரிரோகாதியால் போக இச்சை இன்றியும் காமலேபனுதி இன்றிரவு மடைவன் இவர்களை குரு சுக்கிரன் சூரியன் இவர்களில் ஒருவர் பார்த்தாலும் பல போகத்துடன் மிகவும் போகியாகி ரோகியாயும் தயிரிய வீரியனுகியும் வாழ்வன் சங்கீதஞ்ஞனுவான்.

நான்காவது மாதுரு கிரகவாகன வியாபாரபலன்கள்.

சூரியன் புதனுடன் கூடி கன்னி விருஷபம் சிம்மம் மிதுனம் கும்பம் மிவைகளிலிருக்கில் மிகவும் பிரபல கீர்த்தியான கிரகவாகனமும் மாட மாளிகையுடன் வாழ்வன் சுக்கிரன் கேந்திரத்தில் வலுத்து குரு முதலியோர் கேந்திரத்திலும் இருக்கினும் மாடமாளிகை வீடுபிரபலமும் செய்வனென்றும் சுக்கிரன் சூரியன்வலுத்து கடகம் விருச்சிகம் மீனத்திலும் சுக்கிரனுக்கு நாலுக்குடையவன் பெலத்து சுபர்வீட்டிலும் சிங்கம் இவைகளில் சுபர்பார்வையல்லது சுபரிருக்கினும் பிரபலகட்டடங்களுடன் வாழ்வன் என்றும் சூரியன் பெலமற்று நீசம் பகையுடனும் பாவருடனுமிருக்கினும் பாவர் பாற்கினும் பூர்வாற்சித வீட்டில் வாழானென்றும் சுபபெலஞ் சாஸ்தியாகில் சில காலம் பூர்வாற்சிதம் விட்டுப்பின் மேன்மையான பூர்வாற்சித வீட்டையடைந்து விருத்திசெய்வனென்றும் சந்திரன் குரு முதலியர்கள் சிம்மம் கும்பம் விருஷபத்திலிருக்கில் பிரபல கட்டடவாகனுதிகளுடன் வாழப்படுவ ணென்றும் மிகவும் பிரபலவானுகி வாழ்வனென்றும் கூறப்படும் மற்றய சிம்மம்விருச்சிகம் கும்பத்தில் குசன்முதலிய சுபசம்மந்தமிருக்கில் பிரபல கட்டடவிருத்தி முன்னேறலும் பழயவீடு கிடைக்குமென்றும் அறியவும் அந்தந்த கிரகம் இராசிக்கிசைந்த பெலப்படிக்கி முகம்பாற்த வீடுகள் என்றும் மேற்படிஸ்தான கிரகங்களுடன் இராகு கேது புதன் இவர்களிருக்கில் கெட்டி இல்லாத வீடும் குசன் சனி நோக்கினு மிருக்கினும் சித்ராதிவீடு இடைஞ்சலுடன் அறைகுறையாகிக்கிடைத்துவாழ்ந்து வருவனென்றும் அறியவும்.

குசன் பாவருடன் கூடி சிம்மம் கடகம் மீனத்திலும் அல்லது சூரியனுடன் கேது முதலிய பகைப்பாவர் பகை நீசவிடத்து ஸ்தானுதிபதி பெலன் பெராமல் கெட்டபெலத்திலிருக்கினும்வீடுமுதலானவை விற்தியடையானென்றுங் கூறப்படும்,

சுக்கிரனுக்கு நான்கோன்வலுத்தும் சொக்ஷேத்திர உச்சமாகி யும் சிம்மத்தில் குருமதி சூரியனிருக்கில் குதிரைமுதலாகிய வாகன யோகன் பிரபலமுண்டாகும் பாபிகள்நோக்கில் நிலைப்பில்லாதவாக னமுண்டு பாவரே மேற்படி ஸ்தானங்களிலிருந்து அதிபதிகள் பெ லக்குறைவாகிப் பாவருடன் கூடி இருக்கில் வாகனங்கிடையாதென் றும் தன்பாசுமே வாகனமாய்க் கொள்வனென்றும் அறியப்படும் அவ்வவகோட்களுக்கு உறிய நிரத்தை கூறப்படும் சனி முதலிய கிரகம் பெலத்துடனிருக்கில் சகலவாகனமாகு பாற்பசு விற்தி யுண்டாகும்.

வியாபாரபலன்.

சூரியன் புதன் விருச்சிகம் சிம்மம் கன்னியிலாவது கும்பத்திலா வது துலாத்திலாவதிருக்கில் யெக்காலமும் வியாபாரப்பிறியனென் றும் ஏதேனும் வியாபார முயற்சியென்றும் பாவர்கள் சேர்ந்து புத னுக்கு நாலாமிடத்திலாவது யேழாமிடத்திலாவது சந்திரன் இருக் கில் வியாபார பிரபலமுண்டு சரராசியாகில் வியாபாரத்தில் நஷ்டம டைவனென்றும் மற்றய இராசியாகில் மிகவும் லாபத்தையடைந்து வாழப்படுவனென்றும் குரு நோக்குமாயின் பிரபலமான இராசாங் கசம்மந்தமுள்ள பெருநகரங்களில் வியாபாரக் கிற்தியும் பாவர்சேர் ந்தாலும் பார்த்தாலும் வியாபாரமத்தியில் விட்டுவிடுவன் எதனுலெ ன்ருல் நஷ்டத்தினுலென்றும் சுபபெலனதிகமாகில் மிகவும் அந்திய காலவரை வியாபாரம் விடாமல் முயர்சியில் லாபமடைவனென்றும் அறியவேண்டும்.

மாதுருபாக பலன் கூறுகின்றது.

சந்திரனுக்கு நான்கா மிடத்தையு மதிபதியையும் சூரியன் சிம்மம் இவைகளின் பெலாபலன்களை கொண்டுரைக்க வேண்டும் சந்திரன் சிம்மம் விருச்சிகம் தனுசு மேடம் நீங்கிய இடத்திலும் பாபருடன் கூடாமல் இருக்கில் மாதுருவிற்தி யென்றும் அவ்விடங்களி லிருக்கில் ஜெனனத் துடன் மாதுரு மரணமென்றும் சூரியன் சுக்கிரன் புதன் பெலத்துடன் கூடில் மாதுருதோஷ மென்றும் சூரியன் புதன்கூடி சிங்கம்கன்னி தனுசு கும்பத்திலிருக்கில் மாதுரு விருத்தி யென்றும் சுபர் பாற்கில் மாதுரு பெலனும் சந்திரனுக்கு நாலாவது இடத்துக்கு அதிபதியையும்அந்த வீட் டினிற்கும் கிரகபெலன்களைக் கண்டு கூறவேண்டும்,

சந்திரனுடன் பாம்பு முதலிய பாவரானாலும் யேழு மேஷம் தனுசு இவைகளில் குரு முதலிய சுபவீக்ஷணிய மின்றி இருக்கில் தாயுடன்மரணமானது செனனகாலத்திலே உண்டாகும் சுபர்நோக்கில் சிலகாலம் நின்று மரணமாவ ளென்றும், அறியப்படும்.

சந்திரனுக்கு நாலுக்குடையவன் சூரியன் இவர்கள் பெலமானொருடன் கூடி னிர்க்கின் மாதாதீர்க வயதின் மேல் மரணமென்றும் சூரியன் முதலிய பாவர் கூடவிருக்கின் அல்லது நோக்கின் ரோகியாகி வாழ்வ ளென்றும் சந்திரனுக்கு மூன்றில் பாவரல்லது பாவர் நோக்கில் ஸ்தானாதிபதி பாவருடனே நீசம் பகை வீட்டில் இருக்கில் மாதா கெட்ட நடவடிக்கை யென்றும் பரபுருஷனை கொஞ்சிக் குலாவிவாழ்வளென்றும் சூரிய சந்திரர்கள் ஒன்று கூடிப் பாவருடன் (சு) (கூ) (யிக)ல் இருக்கில் பரபுருஷனோடு குலாவி மகவைப் பெருவள் கடூரியாகி விரோதியாகி வாழ்வள் யென்றறியப்படும் ஷெ ஸ்தானங்களில் பாவரும் அதிபர்களும்பெலனற்று வாழில், தாய்வழியா தொன்று மின்றி நஷ்டத்தை யடைவர்க ளென்றும் அறியப்படும்.

சந்திரனுக்கு (நு)ல் பாவரிருந்து ஸ்தானாதி பதி பெலமற்று இருக்கினும் மாதுருவம் :சஸ்தர்கள் குடும்பச் சேதமாய் நஷ்டத்தையடைவனென்றும், புதன் சுக்கிரன் இவற்களி லொருவர் நிற்கில் தாய்வழிப்பொருள் சாதகனுக்கு பாத்திபனுவன் யென்றும் பாபர்கள் கூடில் தாய்வழிப் பொருள்கள் விவாத நஷ்டத்தின் பேரில் பொருள் கிடைக்கு மென்றும் குரு நோக்கினுஞ் சூரியன் கூடி நோக்கினும் மேற்படி வகைக் குடும்பத் தாய் சகோதிரவிர்த்தி யுண்டென்றும் சந்திரன் சுக்கிரன் பெலன் பெற்றிருக்கில் பெண்சந்ததியே தீர்க மென்றும் குசன் முதலிய சூரியனாகில் ஆண்சந்ததி யதிகவிர்த்தி யென்றும் ஐவகைப் பெலனுக் கிசைந்தபடி கூறல் வேண்டும்.

சூரியன் கன்னி தனுசு விருஷபம் மிதுனமிவைகளில். புதன் கூடி இருக்கில் குரு முதலிய சுபக்கோளின் கேந்திரமாவது அல்லது வீக்ஷணியத் துடனிருக்கினும் சந்திரன் பெலத்துடன் சந்திரனுக்கு நாலாமிடம் நாலாமாதிபதி இவ்விதமிருக்கில் தாய் வழியோரால் யோகமும் பிரபலமுமடைந்தும் தாய்வழியோர் அதிகயோக முடையோர்ராயும் இராசவல்லபராகியும் வாழ்வர் இவ்வித முன்னுரைத்த இடத்திலும் ஆதிபதிகளுடனும் பெலமற்றவர்கள் இருந்து பகை நீசமாகி துர்த்தானமாகிய சு-அ-ல் பாவருடனிருக்கில் மாதுரு பீடையும் மரணமும் அவ்வம்சம் தரித்திரர்களுமாகி

குடும்ப சோகத்துடன் வாழ்வர்களெனறும் பலவகை நஷ்டத்தையும் அடைவர்களென்றும் பலவகைதுக்க சோகக்குடும்பத்தையும் அடைவர்களென்றும் கூறப்படுமென்றும் அறியப்படும்.

சிம்மம் விருச்சிகம் சந்திரனுக்கு நாலு யேழில் சுக்கிரன் இராகு சனி இவர்கள் இருக்கில் தாய்வழிகலத்தையும் துக்கத்தையும் அடைந்து விரோதத்துடன் வாழுமாதவாகிய இருப்பாளென்றும் பலவகை வருத்தமும் உண்டாகும்.

மாதுருபாவ கணிதங்கள் கணிக்கப்படுகின்றனவாம்.

சிம்மத்திலும் விருச்சிகத்திலும் சந்திரனுடனும் சந்திர லக்கிணதிபதியுடனும் சந்திரனுக்கு நாலாமிடத்திலும் அதிபதியுடனுமுற்ற கிரகங்களின் யெண்களைப் பெலா பெலத்தின் மேற்கூட்டி இராசி யெண்துகையிற் பெருக்கி குருவுடனும் சந்திரனுக்கு அஷ்டமாதிபன் தசமாதிபனுடனும் கூடிய கிரகங்களின். யெண்ணைப் பெலா பெலத்தின்மேல் கூட்டி இராசி யெண்ணிற் பெருக்கியு முன் பெருக்கி வைத்த எண்களையும் ஒன்று சேற்து (கூ)ல் கழித்த மிச்சம், சவ்யாபசவ்ய ரீதியாகி கண்ட யெண்ணுக்குடைய திசா புக்திகளில் மாதுருகரும மென்றும் அறியவேண்டும்.

மேற்கூறிய இடத்திலும் அதிபனுடனும் சுக்கிரன் சனியிருந்து பெலமற்றிருக்கில் அவன் தகப்பனுக்கு இரண்டுமுதலிய களத்திரங்களையுடைய தகப்பனென்றும் புதன் சந்திரன் இவர்கள் ௰-ம் வீட்டிலாவது கூ-ம் மிடத்திலாவது சனி முதலிய பாவருடன்கூடி இருக்கில் இவன்றுய் தகப்பனுக்கும் பின்மனையாளாகப் பவிப்பளென்றும் கண்டறியவேண்டும்.

ஐந்தாம்பாவ புத்திரபலன்.

இந்த இடபலக்கினத்திற்கே புத்திராரிட்டமென் றுறைக்கப்படும்.

புதனுங் குருவும் மகரம் கன்னி மிதுனம் மேஷம் மிவைகளில் சனியாதல் பாம்பாதல் கூடினின்றாலும் பார்தாலும் கன்னி மகரத்தில் சுக்கிரனுடன் முதலியபாபர்கூடவாவது நோக்கமாவது இருக்க நீசருடனே அந்த ஸ்தானதிபதி இருக்கினும் பெலமற்று பாவர்மத்தியில் இருக்கினும் குருவின் நோக்கமின்றிக்கெடினும்குருவுக்கு ஐந்தாமிடத்தோரும் இவ்விதமிருக்கினும் ஐந்தாமிடத்ததபாபர் பார்கினும் குரு பெலனற்று யிருக்கின் கர்மபுத்திரன் யில்லையெ

ன்றும் பிறப்பதேஅறிதென்றும் இன்னமும் துலாம் மீனம் விருச்சிகம் இவைகளிலும் புதனுடன் இரவிகூடி பெலன்கெட்டுபாவருடன் வாழிலும் புத்திரனில்லானென்றும் இவையில் ரு-மிடம் ஒன்பதாமிடத்தை குருநோக்கினும் யேழாமிடத்துக் குசனும் தனுசுக்குறிய சுப இஷ்டனுடன் அந்தஸ்தானத் தோன்பெலத்துடன் இருந்து சுக்கிரனுங் குருவும் சமசத்தமமாய் சுபர்வீட்டில் குரு முதலியோரிருக்கினும் சந்திரன் வசாத் ரு-கூல் குருநிற்கினும் நோக்கினும் பூர்வ பக்ஷபெலத்துடைய சந்திரனுகி இருக்கில் அநேகநாள் மகவின்றி வருந்திப் பின்றுரமூலமாய் புத்திரன் கிடைக்குமென்றும் அக்குரு புத்திரஸ்தானத்தை சனி குசன் முதலியபாவர்கள் நோக்கினும் நிற்கினும் சுபர் பாபர்கலந்து இருக்கினும் பாற்கினும் சாதகனுக்கு தெத்துபுத்திரன் சிவீகாரனுகியும் வாழப்படுவனென்றுமறிக.

சூரியன் புதன் அல்லது தனித்தாவது சனி இராகு முதலியோர்சேராமலும் நோக்கின்மைஇன்றியும் கடகம் விருஷபம் தனுசு கும்பம் மேஷம் மிவைகளிலிருந்தும் சுபர்நோக்கத்துடனும் கன்னி மகரம் இவையிலும் குருவுக்கு ரு-கூ மிடங்களிலும் பாவரிருக்கினும் நோக்கினும் அநேக நாளாகவுண்டாகும் புத்திரபாவ மரணமடைந்து பல கவலைகள் புத்திரமூலிய முண்டாகுமென்றும் பல துக்கமும் புத்திரசோகமும் உண்டென்றும் குருமுதலிய சுபக்கோள்கள் உடன் கூடினும் நோக்கினும் சுபக்ஷேத்திரங்களில் விசேஷ பெலத்துடனிருக்கில் சாதகனுக்கு புத்திரா அல்பமானவிர்த்தியையடையுமென்றும் குடும்ப விர்த்திகளும் இவர்களுடன் பாபருஞ் சுபருமாகிக்கலர்ந்துநிற்கில் அகாலபுத்திரன் பின்மனையாலுண்டாகு மென்றறியப்படும் மேற்படி ஸ்தானங்களில் சுபர்கள் பெலத்துடன் கூடி இருக்கில் புத்திரர்கள் அதிகயோக பிரபலர்களாகி வாழ்வார்கள் அசுபர்களுடன் கூடினும் நோக்கினும்,

புத்திரர்கள் குடும்பக் கேடுடன் உள்ள புத்திரராகியும், பலவகை கஷ்ட நஷ்டத்துடனும் மனோவருத்தமும், புத்திரர்களால்குடும்ப ஹீனம் பொருள் சேதாதி தரித்திரர்களாய் ஜெனிப்பார்களென்றறியவும்.

புதன் மறைந்து பகை நீசருடன் கூடினும் பாபரைக் கூடினும் பொறுமையும் மனச் சஞ்சலனுகி வாழ்வன் யெப்பவுங் கவலையும் பலவகை கஷ்ட நஷ்டத்தையும் வியாபாரத்தால் முன்லாபம் பின்

னஷ்டமும் உண்டாகும். ஞானதிக்குறைவும் விவேகாதி விஷயங்க ளில் மனவருத்தமும் உண்டாகும்.

புதன் பெல மற்றவனாகி வாழினும் மதி முதலிய குசன் பாபி கள்வீட்டினிற்கினும் அவை சரவிராசி ஸ்திரவிராசியாகினும் புத்திச லனத்துடனும் மனக்கவலையுடனும் வாழப்படும் என்றும் பலவகை தனநஷ்டாதி முயல்வுக்குறைவுமுண்டாகுமென்று கூறப்படும். ஞா னமின்றி வாழ்வன், இதில் குருமுதலிய சுபக்கோள்கள் வலுத்து நட்புக்ஷேத்திர பெலத்துடன லக்ன கேந்திரத் திரிகோணத்திலிரு க்கில் பிறந்தவன் தேவதாபக்தி சிருத்தையும் சிலகாலம் அவையி லும் கூட அதிருப்திகளைப் பொருந்திவாழ்வன் கருமக்குறை வாகனேரும்.

புத்திரபாவ கணிதங்கணிக்கும் வகை கூருகின்றனவாம்.

புதனுடனும் கன்னியிலும், குருவுக்கைந்தாமிடத்திலும் அதிபனுட னும் கூடியபெலத்துடன் முற்கூறிய யெண்களை ஒனறுசேர்தது அவ்வெ ண்களை பெலன்பெற்ற குருனினற இராசியதிபன் பெண்ணுக் குறியயெ ண்களை ஒன்றுசேர்த்து அவ்வெண்ணிக்கொடுத்துக் கண்டசேஷம் ஆண் கிரகம் பெண்கிரகங்களிற்கூட்டி திறகஞ்சொல்லப்படவேண்டும் முன்பார் த்த மொத்த பாவமூலமாம் இல்லாவிடில் இக்கணக்கு பெடுத்து நோக்கு வது சரித்தப்பாகும் ஆகையால் எந்தபாவத்தை முன் னிதானித்தலின் மேல் இக்கணிதத்தை நிதானித்தல்வேண்டும். மேற்கண்ட எண்ணைப் பெ ருக்கிவைத்த துகையை (க) ல்பெருக்கி (கூ) ல் கழித்த சேஷமும்அந்த ஈவை (ரு) ல் பெருக்கி (கூ) ல் கழித்த சேஷமும் உள்ள திசாபுக்திகளில் மகவு தோன்றமென நிதானித்தறிதல்வேண்டும். ஆகையால் இக்கணித பாவங்களை நிதானித்துக் கணிக்குந்தன்மையின்மீது பாவலற்றமைக்குப் பிரழ்வின்றியாகும் இதில் சனி இராகு முதலியோர்களினல் கொடுத்தயெ ண்களாயினும் புதனல்கொடுத்த யெண்களாயினும் சாதகனுக்கு புத்திர னில்லையென்றும பரதாரபுத்திரன் பலர் சம்மந்த காந்திருவ ஸ்திரீகளுக் குண்டானதாக வுரைத்தல்வேண்டும்.

கூ-வது சத்துரு ரோகபாவங்களைப் பற்றிய பலன்கள்.

சுக்கிரன் சனி பெலத்துடன் விருஷபம் சிம்மம் விருச்சிகம்முதலா கிய கேந்திரதிரிகோணமென்னும் இராசிகளினும் பகைவருடனுகிய சூரி யன் குரு இவர்கள்கூடினிற்கினும் பாலருடன் நின்றாலும் பாவானேக்கி

னும் சத்துருக்களாலும் பித்த ஊஷ்ண மேகம் சத்துருக்களால் செய்யு சூனியாதிபாதைகளனுசரிக்கும் இதில் சந்திரனுடனுங் குருவும்கேதுமுத லிய குசன் சனிசேரினும் நோக்கினும் மேற்கண்டவியாதிபாலாரிஷ்டமும் சத்துருக்களால் எப்பொழுதும் துன்பத்தையடைவன் இதில் புதன்முத லிய கோள்சேரிற் சத்துருவானவன் சமனிடையாய் நிற்பவன் சுபக்கோ ள்கள் துலாம் மீனம் இவைகள் பெலத்து பகைவரைக் கூடிநிற்கில் சத் துருசெயமில்லாமல் சாதகனை சத்துரு செயஞ்செய்வன் ஷஷ்டஸ்தானங் களில் பாபிகள் நீசம் பகைபெற்றிருக்கில் சத்துருக்கள் அதர்அதர்களாகி சத்துருக்களை செயித்து கீர்த்திசம்பாதிப்பன் பெவ்வித மனுஷர்களையும் நிகர்பண்ணுமல் செய்ஞ்செய்து கீர்த்திபெருவன் துலாமீனம் இவைகளி லும் சந்திரசூரியனுடன் சனியிருக்கில் பிணிச்சரீரனுகி பித்தரோகமான வாதஉபாதியால் வருந்துவன்சுக்கிரன்முதலிய கோள் புதனிவர்கள் கூடி னிற்கில் அபெலத்துவ பாபராயிருக்கில் ஜெலசிலேஷ்பன சம்மந்த வியா தியாவன் குரு இராகுவாகில் பித்தசம்மந்த அண்டநோயுண்டாகும் கேது குசனுகில் ரெக்தசம்மந்த வியாதியுடன் வாதசம்மந்தனேய்த் துன்பசம்ம ந்த சரீரனுகிவாழ்வன் யென்றம் அறியப்படும் மேற்கண்டயிடத்திற் சனி இராகு பகைவருடன்கூடி சுக்கிரனீசம்பகை பெற்றிருக்கினும் அஷ்டம மிராசியிலிருக்கினும் குசன் பகைமுதலியதுடன் அவ்விராசியி லிருக்கில் பிறந்தவன் இராசதெண்டனைக்கு உள்படுவன் இதில் சனி புதன் இராகு ஸ்திரவிராசியாகியும் குசன்சரவிராசியில் பகைநீசம்பெற்றிருக்கில் ஆயுள் வறை தண்ணீர்மேலேற்றப்படுவன் சூரியன் முதலானேர் கூடினும் ஆரிற் சுபர் பெலனற்று இருக்கினும் இராசதெண்டனையடைவனென்றும் குரு முதலியசுபர்நோக்கில் அல்பகுற்றத்துடன் நீங்குவனென்றும்கூறப்படும்.

இவ்வித மிருக்கும் கிரகத்துடன் சூரியன் குருவிருக்கில் சாதியோர் பகையும் பலவிதத் துக்கத்தையும் மனுபவிக்கப் படுவனென்றும் அவ்வி தம் சாதி பகை விஷயம் ஸ்திரீ கலகங்களையுங் கண்டு உரைத்தல் வேண் டும் இவ்வித ஸ்தானத்தில் சுக்கிரன் சந்திரன் பகைபெற்று சநியாதல்பாம் பாதல் கூடி கடகம் விருச்சிகம் மீனம் இவையில் இருக்கினும் தனுவில் புதனுடன் யிருக்கினும் வேருசுபர் நோக்கமின்றி துலாத்தில் புதன் சூரி யன் முதலியோருடன் புகரிருக்கினும் நோக்கினும் பகைவராலும் சோர ராலும் பொருள் போவதுடன் தன்தேக அவயவக்குறைவு அவமானமும் பெண்போகங்களால் அவமானத்தையு மடைவன் யென்றும் பலவகை துக்க சோகங்களையும் பிராணஹானிக் குறிய வகைகளையும் பொருந்தி வாழ்வனென்று மறியவும்.

எ-வது களத்திர விவாத பலன்கள் கூறுகின்றது.

சுக்கிரனுங் குசனுஞ் சேருமல் பாபியுடன் சாருமலும் தன்பகையாகியவர்களைச் சேருமலுங் கேந்திரத் திரிகோணத்தில் சந்திரனுடன் கூடினாலும் குருநோக்கினும் விருச்சிகம் மீனமிவையில் சுக்கிரன் இன்றி குசன் இருந்து குருமுதலிய சுபர்கள் நோக்கினும் ஒரேதாரமென்றும் சுக்கிரனுக்கு யேழாமிடம் அதிபதியையும் இவ்விதம் பெலத்துடன் னோக்கில் சாதகனுக்கு ஒரேதாரமென்றும் குருமதி சுக்கிரனுக்கு யேழிலிருக்கிலும் விருச்சிகத்திலிருக்கிலும் இருதாரனென்றும் சநிமுதலியவர் தனித்து அஸ்தங்கதனுய் சுக்கிரனிருக்கிலும் குசனிருக்கிலுங் களத்திர விவாக மில்லையென்றுங் குசன் முதலியோர் கடகம் தனுவிலிருந்து சநி கேதுபுதனிருக்கிலும்பார்க்கினுமனைவி இல்லையென்றுங் குருமதி சுபர்நோக்கின் மனைவியொருவள் பெலத்துடன்மலடியாய்வாழ்வளென்றும்இதில்குசன்புலரான கிரகத்துடன் சிங்கம்கன்னி தனுசுமீனத்தில் சநியுடன்கூடினும்பாம்பைக் கூடினும் சாதகனுக்கு இரண்டுக் கதிகமனைவியும் பரநாரியையும் அனுசார மடந்ததையையும் புணருவனென்று இதினல் மிகவும் அபகீர்த்திகளாயும்ஊனஸ்திரீயையும் புணருவன் யென்றும் கதிர்முதலியோர்பகை நீசமுற்றுப்பாற்கில் குலஹீனம்புலன்ஹீனமுடையமடந்தையென்றும்மகரம் கும்பம் இடபம் கடகம் மிதுனம் இதில் சுக்கிரனுடன் குஜனுடன் பகையோரும் பாவரும் பலரானகிரகஞ் சேரில் பலவகைஸ்திரீபோகமும் இரண்டுதாரத்தையுடையவனென்றும் குருமதிநோக்கினு மிருக்கினும் ஒரேமனையாளென்றும் புதன் இரவி கேது சேரில்மனைவி பலரையும் புருஷனாகக் கொள்வனென்றும், சனி இராகு விருக்கில் கொண்டபுருஷனை கொல்வளல்லது கொண்டவனைவிட்டு உலகறிய பரபுருஷனைசேர்ந்து சுகப்படுத்திப்பின்னவளே அன்னஞ் சொர்ணமா யலைவளென்றும் விருச்சிகம் விருஷபம் சுக்கிரனுக்கு யேழில் சுபர்களாகிய குரு உச்ச சொக்ஷேத்திரம்பெற்று கேந்திரத்திரிகோணத்தில் வாழில் மனைவியால் பொருளு மதிக செல்வமும் இராஜபோகமும் மனைவிமேலானவளாய் ரூபத்துடன் அதிமோகியாகிவாழ்வள் இவர்களுடன் குசன் ரவி புதன் இருக்கினும் தனித்துக்கூடினும் மனைவிரூபத்துடன் அதிமோகியாய்பகையாய்வாழ்வளென்றும் புதன் தனித்து சந்திரனிவர்கள்கூடில் அல்பபோகியாயும் அசக்தமும் ரோகியாயும் வாழ்வள் இராகுமுதலிய பாவர்கூடிநிற்கில் நீண்டவியாதி ஸ்திரீயாய்வர்ழ்வளென்றும் அத்தலப்பகைவீடாகின் வியாதியால் குலையானதைச் செய்வளென்றும்

சனிபுதன் இவர்கூடினும் இராகு கேதுகூடி சுக்கிரனுக்கு யேழு ஐந்தில் பகை நீசம்பெற்று சூரியனுடன் கூடினாலும் கன்னி விருச்சிகத்திலிருக்கினும் ஸ்திரீதேவதாபீடை கருமத்தொந்தத்தால்புத்திரரின்றி பேய்பிடித்துத் திரிவள் பில்லிசூனியமும் பயித்தியமும் இவ்விதமான்குறை தேககுறை முதலிய வியாதிகளை யடைவளென்றுங் கூறப்படும். சுக்கிரனுடனும் எழிலும் பகையோராகியும் சூரியன் புதன் குசன்கூடி சனி இராகு கூடி இருக்கில் மனைவி விபசாரி பலமாதறை விவாகஞ் செய்வன் புதன் சுக்கிரன் சனிமுதலிய பாபவர் கடகம் கன்னி தனுசு மீனத்திருக்கில் உ-க்கு மேற்கண்ட தாரத்தையவன் யென்றும் குரு முதலியோர் அந்தத்தலத்திலேயே இருக்கில் தாரமொன்றென்றும் அத்துடன் சந்திரன்முதலிய பாவர்சேரில் மனைவி ரெண்டென்றுங் கூரப்படும் கேதுமுதலிய பாவர்கூடில் கடைசிமனைவியோர் எவ்வளவானாலும் இருக்கமாட்டளென்றும் கண்டறியவேண்டியது.

களத்திர பாவங்களைக் கணிதமூலமாய்க் கூறப்படும்.

சுக்கிரனுடனும் சுக்கிரனுக்கு யேழாமிடத்ததிபனுடனும் குசன் விருச்சிகம் இவைகளினுடனும் பெலத்துக்கிசைந்த கிரகங்களில் சுக்கிரன் குரு புதன் மதியாகில் தனசுயமனைவியென்றும் சனி முதலியஇராகுகேது புதனாகில் பரஸ்திரீ மனைவிக்கிணையானவர்களுக்கு யெடுக்கவேண்டியகணக்காகும் ஆகையால் சுபபெலம் பெற்றிருக்கும் கிரகங்களின்யெண்களை ஒன்றுபடுத்தி அந்த கிரகம் நின்ற விராசி சரமாகி லொன்றினுடஸ்திரமாகில் இரண்டினும் உபயமாகில் மூன்றினாலும் வகுத்துக்காணல் வேண்டும் அவ்வெண்களை அதிகமான வெகுகளத்திரக் கணக்காகில் அந்த இராசியெண்ணில் கொடுத்துக்கண்டமிச்சம் களத்திரமாகும் யென்றும் அறியவேண்டியது.

குசன் விருச்சிகம் இவையின் கிரகயெண்களும் சுக்கிரனின்றஇடம் யெண்களும் புகரின் யெண்களையும் ஒன்றுசேர்த்து இராசித்தொகையில் பெருக்கி (௩) ல் கழித்தமிச்சம் திசாபுக்தியில் களத்திரங்கள் லாபம்விவாகமென்றும் தனுசுவினும் குருவுடனும் மேற்கண்ட கிரகங்களுடன்கூடிய தொகைகளை யொன்றுபடுத்தி (கூ) ல் கழித்தமிச்சம் திசாபுக்திகளில் களத்திரமாரக மென்றும் கண்டறிய வேண்டியது.

பிதுர்பாக்கிய பலன்கள்.

சூரியனும் சனியும் கூடாமலும் ஒருவருக்கொருவர் பார்க்காமலும் கூ-டு நீங்கிய இடத்திலும் விருச்சிகம் தனுசு துலா மேஷங்களில்லாதிருக்

கிற் பிதாவுக்கு ஆயுள் விர்த்தியென்றும் குடும்ப பிதுர்வம்ச விர்த்திகளும் உண்டென்றும் அதில் திருகோணமாகிய மகரம் நீங்கிய கேந்திரகோணத்தில் குரு முதலிய சுபக்கோள் நின்று சுபபெலத்துடனும் சந்திரனுக்கு கோணமான ௯-டு-ல இருக்கில் பிதுருவிர்த்திகளும் சூரியன் புதன் மேஷம் கன்னிகளில் குருமுதலியோர் நோக்கமின்றி சனி அபெலனாகவிருக்கில் தகப்பனுக்கு பாலியத்திலேயே மரணமென்றும் சுபபெலத்துடன் சுபர் நோக்கில் பிதா ஆயுர்தீர்க் கத்துடன் இருந்து பின்தகப்பன்நல்லகதியுள்ள மரணத் தடைவனென்றும் மேற்படி சூரியனுக்கு ஒன்பதாமிடத்தோனும் பாபருடன் கூடி நீசக்ஷேத்திரத் தோருடனும் பாவருடன் கூடி சனியும் அவ்வித மிருந்து குசனைக்கூடினும் குசன் நோக்கினும் அவ்வகை பாம்பு கூடினின்றாலும் தகப்பன் பாலியத்திலேயே மரணமாவனென்றும் இவ்விதங்கூடி தனுசு துலாம் கும்பம் மிதுனமிவைகளிலிருக்கினும் பாவர் கூடி நிற்கினும் பகை நீசக்கோள் கூடினும் விரோதியான வீட்டினிற்கினும் பிதா பாலியவயதிலேயே மரணம் யென்றும் புதன் குருநோக்கிப் பெலத்துடன் கூடி இருக்கினும் பெல சுபத்துவமாயிருக்கினும் பிரந்த சாதகன் பிதாயெவ்வனத்தில் மரணம் யென்றும் அமரபக்ஷத்து சந்திரன் கூடி நிற்கில் பாலியத்திலேயே மரணமென்றும் சுபாதிபர்கள் சுக்கிரன் பெலத்து மேற்கூறிய ஸ்தானம் அதிபர்களுடனிருக்கில் பிதா கௌமாரவயதில் மரணமென்றும் குருவுடன் கூடி பெலத்துட னிருக்கினும்மேற்கூறிய ஸ்தானம் அதிபர்களிவர்களுடன்கூடிற் பிதாவார்தீகதிசையில் மரணமென்றும சனிமுதலாகிய பாவர்பெலத்து . சுபக்ஷேத்திரத்தில் சுபபெலத்துடன் பாம்பாதல் கும்பம் மகரம் துலாம் இவைகளிலிருக்கில் தகப்பன் கருமத்துக்கு சாதகன் பாத்தியதையின்றி அடைவன் சாதகன் பிற்காலந்தந்தை மரணமென்று குசன் கூடி இருக்கில் பிதாகுலேயான திடீரென்ற மரணமும் இராகு முதலிய பாவருடன் கடகம் விருச்சிகம் மீனத்திலிருக்கில் பிதா இராஜதெண்டனையில் மரணமும் சூரியன் முதலியோருடன் மகரம் மிதுனம் மேஷமிவைகளில் இருந்து சனிமுதலிய பாவரைக்கூடி எ-௬-ம் மிடத்திநிற்கில் தகப்பன் பரதேசத்தில் அல்லது மார்க்கத்தில் மரணமாவ னென்றுங் கூறப்படும்.

மேற்கூறிய ஸ்தானத்திலும் அதிபர்களும் சுபருடன் சுபக்ஷேத்திரத்தில் பெலன் பெற்று வாழில் பிதுர்வகை பலவிதக்ஷேமத்தையும் யோகத்தையும் அடைவர்களென்று மிக்கயோக இராஜ பூசிதர்களாகி வாழ்வர்களென்றும் பாவர்களிருந்து நோக்கில் பிதுர்வம் சக்ஷயமும் பலவாறு தரித்

திரங்களும் மனதுக்குகஷ்ட நஷ்ட துன்பங்களையும் அடைவனென்றும் பின் மிகவுமேலாகிய ஞானத்தோருயும் சாதிசனராகியும் பவிப்பார்கள் இவ்விதம் பிதுருபாகங் கூறல்வேண்டும்.

ஞானேபதேச தற்மபலன்கள்.

சனி சுபக்ஷேத்திரமான கேந்திரகோணத்திலும் சுக்கிரன் அல்லது பூர்வபக்ஷத்து சந்திரன் மகரத்திலிருக்கினும் புதன் ரவி சிம்மம் கன்னி இவையிலிருக்கினும் குருமுதலிய சுபர்கள்நோக்கின் மேலான தருமமும் ஞானஉபதேசியாயும் மிகுந்த கீர்த்திபெற்ற இராசசன்யாச சத்காலக்ஷேமத்துடன் யோகாப்பியாசாதி மேன்மையுடன் மிகுந்த மேலான தன்மையுடன் வாழ்வன் யென்றும் மிகவு மேலானதாகியும் வாழ்வர்கள் யென்றும் திருப்பணி முதலாகிய கீற்தியுடன் மேன்பாடுகளும் மிகுந்த பிரபலத்துடன் கூறப்படுமென்றும் அதிகதர்மவானுகியும் வாழ்வன் யென்றும் அதிசது சகவாசத்துடனும் வாழ்வனென்றும் கூறப்படும் அவ்வித ஸ்தானங்களில் பாபராகிய சனியல்லாதவரிருக்கினும் இராகு கேதுமுதலியோர் நோக்கினும் சாதகத்துக்கு அதரும இச்சையும் எவ்விதத்தையும் நம்பாதவனுய் குருரியாகிப்பலகவலையுடனும் வாழ்வனென்றும் அறியப்படும்.

அவர்கள் சுபர்களும் பாவர்களுமாகி இருக்கில சாதகனுக்கு சமபக்தியுடையவனுகி வாழ்வனென்று மறியப்படும்.

சுக்கிரன் சனிஇவர்கள் பெலத்துடன் சூரியன் கேந்திரத்திரிகோணவிராசியில் பெலமான சுபக்ஷேத்திரங்களிலிருக்கில் சாதகனுக்கு பிதுரார்சிதவிர்த்தி யுண்டென்றும் இவர்கள் சு-அ-இடத்தில் பகையாய் பகையோருடன் அபெலனுகி அசுபர்களின் வீடேரி நிற்கில் பிதுரார்சிதுமில்லாதவனென்றும் கூறப்படும். இவ்விதகாரகனும் சனி முதலிய பாவருடன் கூடி இருக்கில் பிதுரார்சிதமின்றி பிதுர்ஸ்தானத்தை விட்டிழப்பனென்றும்பாபர்கள் நீசம்பெற்று மகரம் முதலிய கன்னியில் இருக்கினும் அவ்வதிபன் பகைவீட்டிலல்லது பாவருடன் துலாம் விருச்சிகம் கும்பம் மீனம் இவையில் புதனுங்கூடி இருக்கில் தகப்பன் பொருள் கடனுக்கு மிராசதெண்டனைக்குங் களவுக்குஞ் சரியாகித் தலம்விட்டு இழந்து தரித்திரனுவனென்றும் அந்த இடத்தோர்பெலத்துடன் குருமுதலாகிய சந்திரன் சுக்கிரனைப்பற்றி இருந்தாலும் பெலத்துடன் சுபர்பாவருடன் விருஷபம் மிதுனம் சிம்மம் மீனமிவைகளில் இருக்கில் தகப்பன் பொருளின்றி நஷ்டமுண்டாகி சுபாற்சித பிரபலத்தைச் செய்து அதிககீர்த்திபுடன் வாழ்வ

னென்றும் மிகுந்த இராசவெகுமான சன்மானங்களையுடையவனாவனெ ன்றுங் கூறப்படுமென் றறியவேண்டியது.

கருமம இராச்சிய பலன்கள்.

சனி உச்சனாகியல்லது மகரம் கும்பம் கடகம் இவையில் குரு சுப க்ஷேத்திரயுதனாகி நோக்கமுற்று சுக்கிரன்சந்திரன் கேந்திரங்களி லிருக்கினும் சுக்கிரன் சிம்மம் மகரம் கும்பம் இவையிலும் குரு கும்பம் விருஷப கடகத்திலும்இருந்து சந்திரசம்மந்தமுற்றிருக்கில் சாதகன் இராச்சியாதி பனாகி நல்லகிருத்தியங்களை தனகுடும்பசத்கருமனாக வாழ்வன், சனிமுத லாகிய பாவர்கள் பெலத்துசுபர்கள்பெலமற்றவிடத்தில்இருக்கில் சாதகன் இராச்சியங்கிராமம் பூமிமாத்திரமுள்ளவனாகி அக்ருத்தியங்களையும் அவக் கியாதிகளையும்பெற்று அசத்கருமனானவன் குருமுதலியோர் மாத்திருஞ் சுபக்ஷேத்திர சம்மந்த யுதனாகி கருமம்அல்லது ஐந்திலிருந்து பாவர்சேர்ந் தாலும் பார்த்தாலும் சனிபொன்கெட்டாலும் நல்லகருமகுலத்தில்செனித் துந்தரித்திரனாய் கரும கிருத்தையின்றி பாபத் தொழிலைப் புரிவன், சனி யல்லாதமற்ற பாவர்களே பகை நீசம் பெற்று (நி) (கம்) இடங்களி லிருக் கில் பாபகுலத்தனாகி பாபத்தொழிலையே புரிவன் அதைச் சுபர்கள் பெல வானாக நின்று நோக்கினும் மிருக்கினும் ஹீனகுலத்தில் பிறந்தாலும்நல்ல கருமஞானாகிமிகவு மேலானோனாகி சொல்ப பூமியையடைந்து மானியாகி வாழ்வன் கெருவியாவன். கும்பம் சிம்மம் கன்னி மீனத்தில் குருவும் சுக் கிரனும் கன்னி நீங்கிய இடத்தில்கூடி பெலத்துடன் குசனைக் கூடியும் குசனுக்கும் சுக்கிரனுக்குகந்த சமாதிபதி தசமம் இந்த இடத்தில் பெலத் தோர் சுபராய் வாழினும் கேந்திரகோணவிராசி, உச்சம் பெற்றிருக்கில் மண்டலாதிபதி யென்றும். குரு மாத்திரும் சேற்கையில் வலுத்து ஸ்தா னாதிபதி பெலத்து கோணத்தில் மாத்திரு மிருக்கில், தேசாதிப னென் றும் சூரியனுடன் வலுத்து புதன் கூடில் சிலகண்டங்களுக்கு வதிப னென்றும் சுக்கிரன் சுக்ஷேத்திராதி பெலத்துடன் வலுத்து சந்திரனும் பெலக்கில் சிலகிரு மாதிபதி யென்றும் புதன் தனித்து குசனுங் கூடி இருக்கில் சிலபூமிகளும் அல்ப கிருமத்தலைவ னென்றும் சுக்கிரனும் குசன் சனி வலுத்து நிற்கில் சாதாரணமாய் அல்ப பூமியாதிபனாகியும் ராகுமுதலிய பாபபலத்தோர் கூடி இருக்கில் பூமி இன்றியும்.

கிரக க்ஷேத்திரமின்றியும் முன் சொல்லா தொழிந்த இடத்தில் பாவரல்லது சுபரிருப்பினும் அல்ப பூமியும் பாவரே பெலத்துடனி

ருக்கில் பூமி இல்லாதவனுகியும் பாபர் சுபர்கலர்ந்து நிற்கில் கிரக முதலாகிய அல்பமேன்மையுமுண்டாகும் என்றறியவேண்டியது.

சீவன பலன்கள்.

சூரியன் புதன் கும்பம் விருஷபம் இவையி லிருக்கினும் கன்னி மிதுனத்திலிருக்கில் சனி கூடி யல்லது தனித்து இருக்கிலும் சாதக னுக்கு வியாபார சீவனமும், குசன் கூடி இருக்கில் இராசாங்க சம் மந்த வியாபாரமும், சுக்கிரன் முதலியோர் இருக்கில் சாஸ்திருதி வித்தையின் சங்கீத முதலானவைகளாலும் குரு முதலியோர் சூரிய னுடன் சந்திர னிவர்களிருக்கில், சாதகனுக்கு மிகவுமேலான இராச வதிகாருதி ஜீவனலாப மேன்பாடுகளும் மிகவு மேன்மை களும் மேலானசீவனமும் இராகு சனி இவர்களுக்குப்பகையுடன் கூடியோர்களும் மதியுங் கூடி இருக்கில் அடிமைத் தொழில் சீவன மும், சனி சுக்கிரனுடன் பாம்பு கூடில் திருட்டு முதலிய பொய்த் தொழிலுமுண்டாகுமென்றும் மிகவும் மேன்பாடுகளும், சீவன யோக பிறபலனுகி வாழ்வனென்றுங் கண்டறியவேண்டியது சனி யுடனும் சனிக்கி பத்தாமிடத்தினும் அதிபதிகளையும் இவ்வடைவே பார்த்துக் கூறல்வேண்டுமென்றறியவும்.

இதில் சனியுடனுங் குருவுடனும் சனிக்கி பத்து பதினொன்று மிடத் தோனுடனும் கூடியதும் கும்பத்தினின்ற கோளிகளின் பெ லாபெலனுக்கு இசைந்தபடி யெண்களை யொன்று படுத்தி அந்த இராசி யெண்ணிற் கொடுக்க வந்த மிச்சத்தை மாதம் (க) க்கு முத லில் ஆரம்பலாபமடையும் பொன் கணக்கென்றும், அந்தஸ்தானத் தோடு கன்னியுடனும் புதனுடனும் இருக்குங் கிரக யெண்களை பெ லா பெலப்படிக்கி யொன்ருக்கி இருப்பின் யெண்ணிற் பெருக்கிஅத் துகை சுபபெலத்தோர் சாஸ்தியாககொடுத் திருக்கில் அத்துகை ஜீவனமுடிவில் பிறபோஷன் யென்றும், பகை பெற்ற அபலத்தோர் குடுத்த துகையாகில் அவ்வளவு துகையும் நஷ்டத்துடன் ஜீவனத் தில் லாபமின்றிப் போகுமென்று கண்டு உறைத்தல் வேண்டும்.

உச்ச கேந்திர கிரகசுபத்தோர் கொடுத்த துகையாகில்இரெட் டித்தும் ஆக்ஷியாகி திரிகோணமாகில், (கவ) பங்குசாஸ்திசெய்தும் நட்பாகில் (௭) குறைத்தும் பகையாகில் முக்கால்பங்கு குறைத்தும் நீசமாகில் (அ) ல் ஒருபங்காகக் குறைத்துவிடல் வேண்டுமென் றும்அப்படிக்கி குரைத்ததுகை பொன் தனக்கணக்கென்று கூற வேண்டும்.

லாப பலன்கள்.

குரு சனிலாபத்துங் கன்னி துலாத்தும் தனித்திருக்கினும் விருஷபகடகத்திலிருக்கினும் லாபமதிகமு முன்சந்ததி விர்த்தியுண்டென்றும் சனி மாத்திரமிருந்து பாவர்கூடவாவது பார்கவாவது இருக்கில் லாபமுண்டு முன்னோர் கிடையாதென்றும் சூரியன் புதனிருக்கினும் அவ்விதமே கூறவேண்டியது.

சுக்கிர சந்திரன் முதலியவர்கள் மீனம் மகரம் விருஷப சிம்மத்திலிருக்கில் அதிக லாபத்தையுடையவன் மற்ற இராசியிலாவதுஷெஸ்தானங்களில் பாவருடனிருக்கில் கடனுண்டாகுஞ் சிலவு சாஸ்திரலாபம் வரினும் விரயஞ் சாஸ்தியென்றம் சுபர்னேக்கில் லாபம் கையில் மீருமென்றும், சனிமுதலியோர் (ய)(க) வும் குரு லக்ன கேந்திராதிகளில் பெலத்துடனிருக்கில் மூத்தசந்ததி அதிகவிர்த்தியோடு யோகபிறபலமும் மிகுதியான பொருளேயு மனுகூலத்தையும் பொருந்திவாழ்வன் யென்றும் அவ்வித குருவையல்லது ஸ்தானத்தை சனி இராகுவுடன் உற்ற பாவர்கள் ஸ்திர இராசியில் நின்று நோக்கில் மூத்தோர் சித்தமில்லாதவராய் புத்தியின்றி ரோகியாகி பித்தரோகிகளாய் வாழ்வார்களென்றும் இதிலவர்கள் சனி சுபபெலத்துடனும் ஸ்தானந் தோஷமின்றி இவ்வித மிருக்கில் பெண்சாஸ்தியான செனனத்தையுமடைவர்கள் யென்றும் லாப விர்த்திசெய்யும் மிகுந்த மேலோராய்வாழ்வர்கள் யென்றறிய வேண்டியது.

விரயம் தேசாடன பலன்கள்.

குசன் பெலத்து சிம்மம் மகரம் விருஷபவிருச்சிகத்தில் குரு சுக்கிரர் முதலியவர்களுடன் சுபபெலத்துடைவனுகி வாழில் இராஜ வனுகூலபெருங் கீர்த்தியுடன் அன்யதேசசஞ்சாரத்துடன் வாழ்வர்கள் கேது புதன் கூடியிருக்கில் மத்தியில் அன்னியதேசத்தில் சீவனந்திடீரென்று கோல உடனே குறைந்து பலகவலையடைவார்கள் இராசவிரோதமுண்டாகும்.

சூரியனுடன் முன்னோர்கூடி இராகு கேது இருக்கில் கெங்கா தீர்த்த யாத்திறையுண்டாகும் சந்திரன் முதலியோர் மேஷத்திலாவது மீனத்திலாவது பாவருடன் கூடினுலுந் தனித்தாலு மிகவுந் தேசாடனம் குசன் சுக்ஷேத்திரனுகி சுபர் கிரகத்தில் சுப சம்மந்தத்துடன் இருக்கில் தன்னிருப்பிடத்திலே இருந்து கெங்காஸ்னு

னுதி தீர்த்தயாத்திரை தேவாலய தெரிசனபக்தி செய்வன் விச்சை யான போக்கியவதிக சுகியாவன் பாவருடனேகூடினும் இருக்கினும் ஸ்தானுதிபதி பாவருடன்கூடினும் பரதேசத்தில் கஷ்டத்துடன் திரிவன் விரயமாகும் பூர்வார்ச்சிதம்கெடும் மற்ற இடத்திலிருந்து அசுபரல்லது சுபர் சேரில் பரதேச யாத்திரையின்மேலே வெகு காலந்தாமதித்து சீவன மல்லது முயற்சியை செய்து கீர்த்தி பெருவன் என்றவாறு.

குரு முதலிய சுசன் புதன் சனி யிவர்களிலொருவர்கள் மேஷம் தனுசு கடகம் கன்னி துலாம் இவைகளிலிருந்து சுபர்கூடில் விரயமதிகன் பாபர்கூடில் விரயமிடான் புதன்முதலிய பாபர்சுபரிருவருங்கலந்துகூடில் லாபத்திற்குச்சம விறயமுண்டாகும்.

லாபவிரயங்களைக் கணிதமூலியபங்குகளாகக் குறிப்பிடப்படும்.

சுசனுடனும் மேஷத்திலுமிருக்குஞ்சுபத்துவபெலனுக்குறியதுகை யையொன்றபடுத்தி அவ்விராசி யெண்ணில்கழித்த சேஷம் விரயப்பங்கு யென்றும் குருவுடனும் மீனத்திலுமிருந்த கிரக சுபபெலத்துக்குறிய எண்களை ஒன்றபடுத்தி கஉ கழித்த சேஷம் லாபமென்றுங் கூறப்படும்.

இதில் லாபத்திற்கு விரயங் கம்மியானல் தனயோக லாபவானென் றும் விரயமதிகமானல் கடனளியென்றும் அத்துகையை ஒன்றுக்கொ ன்று பெருக்கி (கூ) - ல் கழித்த சேஷமும் அதில் வந்த ஈவை ௫-ல் பெ ருக்கி கூ-ல் கழித்த சேஷமெதுவோ வந்த சேஷத்துகை திசாபுத்தியாகக் கொண்டு அக்த திசாபுக்திவறை விரயலாபமதிகம் கம்மி ஏறணம் யென்ற பலன்களை ஆராய்ந்து உரைக்கவேண்டும்.

மிதுன லக்கினம்.

பாவ பலனும் முதலில் குணகுணமும் உணர்த்துகின்றனம்.

மிதுனலக்கினத்தில் பிறந்தோன் புகழுடையவன் லெச்சையுள்ள வன் கபடி ஆசாரபரன் இருசொல்லன் நல்ல விரதம் பூணுவன் தன் காறியத்திற் பிரியன் பித்தரோகி சத்தியவாக்கன், ௩-வருஷகாலம் அப மிருத்து ௫-ல் அக்கினி சமான கெண்டம் அ-ல் ஆயுதபீடை க0-ல் சத்

திரு சிரியோரால் கெண்டம் க௮-ல் வாதவாயுவு பாதை உ௮-ல் கண்ணோ ய் விரணநோய், சுபர்கள் வீக்ஷணியம் ஷெ வக்கினத்திற்கிருக்கில் மிகவு மேலான வயது ௬௰ சுரு-வறை தீர்க்கமென்றும் கூறப்படுமென்றும் அறியவேண்டியது.

சுக்கிரன் புதன் சுபர்களென்றும்.
இராகு குரு சனி யோக காரகர்கள் யென்றும்
சூரியன் சந்திரன் குரு மாரகரென்றும்
கேது குசன் பாபியென்றும் பெயராகும்.

இதில் சூரியன் குசன் கேது குரு இராகு இத்திசைகளில்சுக்கிரன் சனி இராகு குசன் இவ்விதபுக்திகால மாரகவதிகாரிகளாகியும் தேகாரிஷ் டாதி துக்கபலன்களையுங் கொடுக்கப்படுவோர்களென்றம்,

சாதகவரிஷ்டம்.

குசன்கேதுதிசையில் சந்திரன் ரவி குரு இராகுவிலும்,
இராகுதிசையில் சனி புதன் குசன் சுக்கிரன் இவ்வித புக்திகளும்,
குருதிசை தணது புதன் சூரியன் இராகு புக்திகளிலும்,

சனிதிசை சுக்கிரன் இராகுவிலும் ஜாதகனுக்கு தேகவரிஷ்டம்ராச விரோதம் அலைச்சல் கஷ்டநஷ்டம் ரிணம் சத்துருபாதை குடும்பதுக் கமிவ்வித யோகபங்க பலன்களைக் கொடுக்கும்.

யோகதிசையாவன.

சுக்கிரன் புதன்றிசையில் சந்திரன் புதன் சுக்கிரன்சனியிருந்த புக் திகளிலும் சனிதிசையில் இராகு புதன்சுக்கிரன் இவ்வித புக்திகளிலும் குருதிசையில் சந்திரன் ராகுவிலும்பிரபலராசயோகஞ் சோபனம்குடும்ப விர்த்திகளையும் மிகவு மேலான யோகத்தையும் பூமிகிரக வாகன க்ஷேத் திர லாபங்களும் மேன்பாடாகிய சுக சௌக்கியங்களையும் சிவனருபம் விவாதசெயம் சத்துருசெயங்களையும் அடைந்து இராசயோகவானகிக் கீர்த்தியுடன் பிரபலத்திற்கு உண்டாகுமென்ற மிகுந்த மேன்பாடுகளும் சுகசௌக்கிய உத்தமபலன்களாகியும் நடந்துவரும்.

இம்மிதுலக்கினனத்திற்கு இத்திசை கௌமாரம் யௌவனம் வாற் தீகத்துக்குள் வாராவிடில் யோகசாதகனுகவிருந்தபோதிலும் துக்கபலன் களையே அனுபவிப்பனென்றறியவேண்டியது.

மாதுரு அரிஷ்டம்.

சந்திரன் றிசை சனிஇராகு சுக்கிரனும்,
புதன்திசையில் குருசனியிலும்,
சுக்கிரனில் சனி இராகு சந்திரனிலும்,
இராகுதிசையில் குரு கேது சுக்கிரனிலும்,
குருதிசையில் தனது சனி சுக்கிரனிலும்,
மாதுரு கருமகண்டம் மாதுரு பகை துக்கம் பலகஷ்டமுண்டாகும்,

பிதுர் அரிஷ்டம்.

சூரியன் கேதுதிசை சனி கேது குருவிலும்,
இராகுதிசை சந்திரன் சூரியன் இராகு புதனிலும்,
சனிதிசை செவ்வாய் குரு சனியிலும்
புதன் றிசை சுக்கிரதிசை இராகு சுக்கிரன் சந்திரனிலும்

பிதுருகருமமும் பிதுருவுக்கு தேககண்டம் குடும்ப துக்கம் பிதுருசகோ திரவழித் துக்கமுண்டாகும் யென்றறிய வேண்டியது.

சகோதிர வரிஷ்டம்.

குசன் கேது திசையில் சனி இராகு சுக்கிரன் புக்திகளிலும் குரு புதன்றிசையில் சனி கேது புதனிலும் சகோதிரவரிஷ்டம் தேசபிருஷ்ட்டம் துக்கம் பலவகை துக்கசோகமும் உண்டபகும்.

களத்திர வரிஷ்டம்.

சூரியன் சுக்கிரன்றிசையில் சனி சந்தின் குருவிலும் இராகு சனி திசையில் சுக்கிரன் கதிர் புதன் இராகு புக்திகளிலும் குருதிசை தனது கேது புகர்மதி இந்தபுக்திகளிலுங் களத்திரதோஷம் நேருமென்று அறியவேண்டியது.

புத்திர வரிஷ்டம்.

குரு இராகுதிசையில் சனி புகர் குசன் புக்திகளிலும் குசன்றிசையிலுங் கேதுவிலும் புதன் குரு இராகுவிலும் சுக்கிரன் சூரிய திசையில் இராகு தனுசு சுக்கிரனிலும் கெண்டமும் புத்திரதோஷமும் துக்கங்களேயுங் கொடுக்கும்.

முதலாவது ஆயுர்பாவங்கள்.

புதன் மிதுனகன்னி தனுசுவில் சூரியனுடன் கூடியும் கேந்திரத்தில் குரு சுக்கிரன் பாபத்துவ சம்மந்தமன்னியிலும் சனிதன

திடமல்லது துலாத்திலிருக்கினும் சந்திரன் பூரண பெலவானகி கேந்திர கோணத்திலிருக்கினும் சாதகனுக்கு ஆயுர்பாவம் வருஷம் கூகூ-வறையும் இதில்மேற்படி ஸ்தானங்களில் சுபர்கள் னின்றுபாப ரைக்கூடி நீசம் பகை பெற்றிருக்கில் வருஷம் எகூ-யென்றும் சந்திர கேந்திரமாகிப் பெலத்துடனிருக்கில் வருஷம் அச-யென்றும் புதன்கூடி நீசம் பகைபெற்றிருக்கினும் குரு கேந்திரத்திலும் இருக்கில் சாதகனுக்கு வருஷம் எஉ-ம் குரு சனி புதன் இம்மூவர்கள் தனுசு கடகம் துலாம் மீனம் மேஷமிவையிலிருக்கினும் சில பாவரைக்கூடினும் நோக்கினும் வருஷம் சுசு-யென்றும் மற்றய கும்பம் மீனம் விருஷபம் சிம்மத்திலிருந்து சந்திரகேந்திரமாகிப்பெலத்துடன் புதனிருக்கில் வருஷம் ҧகூ-யென்றும் இதில் குரு அல்பனுகி சுக்கிரன் கேந்திரகோணத்திலிருக்கினும் புதன்பெலத்து முன் இராசிகளில் சூரியனைக் கூடி இருக்கில் வருஷம் ҧச-க்குள் யென்றும் சுக்கிரனும் பெலமற்று புதனுஞ் சனியும் பெலத்துடன் இருக்கில் வருஷம் சஅ -யென்றும் சூரியனின்ற புதன் தனித்து மேற்படி ஸ்தானத்திலிருந்து சந்திரபெலன் குரு வீக்ஷணிய லக்ன மல்லது புதனுக்கு இருக்கில் வருஷம் ҧச- யென்றும். புதன் கெட்டு சனி மாத்திரம் பெலவானகி குருமுதலிய சுப நோக்கமின்றி இருக்கில் வருஷம் உக- யென்றும் பாவரே விருஷபம் கடகத்திலும் மல்லது மகரம் விருச்சிக மிவைகளிலும் புதன் பகை நீசம் பெற்றிருக்கில் வயசு வருஷம் கசு-க்குள் மரணமென்றும் பாபபெலத்துடன் குரு தனுசு மகரம் விருச்சிகம் மேஷமிவையிலும் பாவருடன்கூடியும் சனி பகை நீசம் பெலமற்ற இடத்திலிருக்கினும் பாம்புமுதலியோர்கூடில் வயசு வருஷம் கஉ- க்குள்ளயே பாலாரிஷ்டத்துடன் உண்டாகுமென்றும் அறியவேண்டியது.

சந்திரனுடனும் உ-கஉ- லும் கடகம் விருஷபமிவைகளில் சனி செவ்வாய் பாம்பு சூரியன் இவர்கள் கூடி இருக்கினும் இவர்களில் மூன்றுக் குள்ப்பட்ட கிரகங்கள் மேற்கூறிய இடத்திலும் புதன் பெலமற்றும் குரு முதலியோர் பார்க்காமலும் க்ஷீனசந்திரனகி விருச்சிகமகரம் மிவைகளில் ,மேலேசொல்லிய பாவரைக்கூடிநிற்கினும் ய-குள் ய-மாதம் ய-வருஷத்திர்க்குள்ளே தாயுடன் சிசுமரணமாகும் இதில்சந்திரனை குரு சுக்கிரன் பார்த்தும் விருஷபம் கடகம் மிதுனம் கன்னி கும்பத்தில் சந்திரனிருந்தும் குருமுதலியவர் தனுசு கும்பம் துலாமிதுனத்தில் இருக்கினும் இவ்வித பாபர் சேரினும் பாலாறிஷ்

டங்கள் வயசு ௭-௪-வரைகண்டு உடனே சுகமாகிவிடும் ஆயுள்தீர்க மாகும் சிம்மம் மீனம் மேஷம் இவையில்சுபரிருந்து பாபிகளைக்கூடி புதன் சூரியனுடனும் பெலத்துனிற்கில் குழந்தைக்கு மாத்திரம் பாலாரிஷ்டமும் சந்திரன் மாத்திரம் க்ஷீணித்து விருச்சிக மகரத்தி லிருக்கினு மல்லது பகை இடத்தில் சனி பாம்பு குசனை ரவியைக் கூடி இருக்கில் தாய்மாத்திரம் மரணமாவாளென்றும் இவர்களை குரு சுக்கிரன் நோக்கினுலும் கூடினுலும் பாலாரிஷ்டங்கண்டு உட னுக்குடவே நிவர்த்தியாகி விடுமென்றும் தாய்க்கும் பிணிகள்கண்டு நிவர்த்தியாகு மென்று அறியவேண்டியது.

௨-வது தனகுடும்ப வாக்குபலன்.

சந்திரன் குரு கேந்திரத்திலும் கடகம் விருஷபத்தில் புதன் சுக்கிரன் யிருக்கினும் குரு சந்திர னிருந்தாலும் பார்த்தாலும் புதனுக்கு ௨-௧௨-மிடத்தில் இவ்வித சுபக்கிரகமே பெலத் துடனிருக்கில் வாக்கு சத்தியவந்தனுய் வாக்கு பலிதமுடையவ னுய் வாக்கைவிற்று மகா கீர்த்தியடைவனென்றும் குடும்பவிரு த்தியும் தனத்தையும் அளவற்ற பொருளையடைவனென்றும் இதில் உச்சகிரகம் அதிகமாகி விருஷபத்தில் கன்னி மீனம் தனுவில் சந் திரன் குரு விருந்தாலும் இவர் நீங்கிய சுக்கிரன் புதன் உச்ச சொக்ஷேத்திரமாய் குருவுடன் சேராமல் குரு தனித்து இருக்கில் கோடி பொருளதிகாரியென்றும் கடகம் விருஷபத்திலும் குருவுக்கு ௨-௧௨-லும் சந்திரன் சுக்கிரன் பெலத்துடனிருக்கினும் வேறு பாவர் சேராமல் நோக் காமலிருக்கில் லக்ஷாந்திரப் பொருளும் வாக்குநாணயமும் குடும்பப் பிர பல விருத்தியில் பெண் சந்ததி அதிக பிரபலமென்றும் மேற்கூறிய இட த்தில் சூரியன் இருக்கினும் சுக்கிரன் சந்திரன் சேராமல் பாற்கினும் சந் திரன் கூடினுலும் ௰-௫-ம் பொன்னுள்ள தனவந்தனென்றும் குரு சுக்கி ரன் பாற்வை இல்லாமல் சந்திரன் கேந்திரத்திரிகோணத்தில் பாவருடன் கூடினுலும் மேற்கூறிய இடத்தில், சுபரிருக்கினும் சகஸ்திரக்கணக்குள்ள பொன் தனமுடையவனென்றும் சிலநாள் வாக்குசெல்லும் சமமான குடும்பவிர்த்தியையும் அடைவனென்றும் பாவருஞ் சுபருங்கலர்ந்து விரு ஷபம் கடகத்திலும் சுக்கிரனுக்கு ௨-௧௨-ல் பாவர் சுபருங்கலர்ந்து கொஞ் சத்துக்குகொஞ்சம் சுபபெலமிருக்கினும் சந்திரன் கடகம் மிதுனம் கன்னி துலாம் தனுசு கும்பம் மீனம் இவைகளிலிருந்து சனி செவ்வாய் இல்லாத மற்ற சூரியன் புதன் கூடினுலுமல்லது குரு சுக்கிரனில் யார் கூடினுலும் அல்பமான சிலபொருளை விர்த்திசெய்து பிதுரார்சித தன

மும் உண்டென்றும் மேற்கூறிய இடத்திலும் விருஷபம் கடகம் குருவுக்கு உ-கஉ-ல் பாபிகள் பகை நீசம் பெற்று சனி செவ்வாய் சூரியன் புதனிருந்தாலும் தரித்திரனாய் தனமின்றி கடனாளியாகி கடனால் பலவகையடைவனென்றும் அவ்விதத்துடன் குருவாவது சுக்கிரன் புதனாவதுகூடி ஸ்தானத்திலாவது ஸ்தானாதிபதியாகி சந்திரன் குரு இவர்களுடன் இருக்கில் சாதகன் சில நாள் முன்பொருளைத்தோத்து கடனாளியாகி பின் காலம் யேராளமானபொருளை ஆர்சிதம் பண்ணுவனென்றும் பாவர்களேவலுத்து இருக்கில் அசத்தியனாகியும் கடனாளியாய் பலகவலையடைந்து வாழ்வானென்றுங் கூறல்வேண்டும்.

கடகம் விருஷபம் இதில் சூரியன் சனி சுக்கிரனை கூடியாவது சுக்கிரனைப்பார்த்தாவது இருக்கில் நேத்திரங்கெடும் விருஷபத்தில் மாற்றிருவவ்விதம் ரவியிருந்து சுக்கிரனைப்பாவர்கூடி மகரம் விருச்சிகம் சிங்கத்திலிருக்கில் மேசுனீர் நேத்திரம் இடது கண்ணைக்கெடுக்குமென்றும் கடகத்திலிருக்கில் வலதுகண்ணைக் கெடுக்குமென்றும் மேற்படி ஸ்தானத்திலும் அதிபதியும் விருச்சிகம் மகரம் கடகம் சிம்மம் மிவையிலிருந்து குசன் சுக்கிரன் சனியை யல்லது கெட்ட பெலமற்ற இடத்தில் பாவரைக்கூடி இருக்கில் பிரவிக்குருடனென்றும் இரண்டுபாவரிருக்கில் மத்தியகாலகுருடும் ஒரேபாவரிருக்கில் குசன் கூடில் வியாதியினால் கண்ணுக்கு ஊனமும் இராகுவைக்கூடில் கண்மறைவும் புதனைக்கூடில் மாலைக்கண்ணும் சுக்கிரனைக்கூடில் வெள்ளைபடர்ந்தகண்ணும் கேதுவைக்கூடில் ரெக்தக்கண்ணும் சூரியன் பெலநற்றுப்போனால் கடைக்காலத்தில் கண்ணே இராதென்றும் குரு முதலியோர் சுபர் இருந்தாலும் பாற்தாலும் சந்திரன் மிதுனம் கடகம் கன்னி தனுசு மீனம் விருஷபத்தில் குரு வீக்ஷணியம்படயெவர் கூடினின்றாலும் கண் தீற்கம் பாபர்கூடி இருந்தால்அல்ப உபாதிதோன்றி சுகமாகும் மற்ற இராசிகளிலிருந்து பாபிகளைக்கூடில் கண்பீடையெப்போதும் இருக்கும் சுபர்பாற்கில் வந்து வந்து நீங்கும் சுபரே இருந்து பாற்கில் தீற்கநேத்திர சுக வனுகூலனாகி வாழ்வன். குடும்பவிர்த்தியும் மிகவு மேலான செல்வாக்கும் அல்பமானவனாய் பொருளில்லாதவனாகினும் யாருமவனை சத்தியனென்று நம்பி மிகவும் யோகவானாவான் யென்றவாறு.

தனபாவகணிதங்கணிக்கும் வகைகள்.

சந்திரனுடனும் நடகத்திலும் மீனத்தில் குருவுடனும் கூடியதும் குருவுக்கு உ-மிடத்திலிருக்கும் கிரகமும அதிபதிகளின் கூட இருக்கும் கிரகபெலனுக்கு இசைந்தபடி கிரகயெண்களையெடுத்து ஒன்றபடுத்தி அந்த இராசி யெண்ணில் பெருக்கி வைத்துக்கொண்டும் உச்சகிரகம் சுபர்

அதிக மானுல் சமத்துகைபோட்டு மூன்று தடவைபெருக்கியும் ஆகூியா னுல் உ-தபாவும் நட்பு ஆனுல் க-தபாப்பெருக்கியுங் கண்டதுகையுள்ள பொன் பணத்தையுடையவனென்றுங் பகைநீசமானுல் ருணமென்றுக் கண்டும் துகையின் யெண்ணத்தைக் கூறப்படும் யென்றவாறு.

சனியுடனும் குசனுடனும் விருச்சிகமகரத்திலு முள்ள கிரகயெண் களைசுபபெலனுக்கு இசைந்தபடி யெடுத்து இராசி யெண்களால் ஒவ் வொன்றையும் பெருக்கி முன்போலவே உச்சம் நட்பு ஆகூிப்படிக்கு பெருக்கிகொண்டு கண்டதுகை கடனென்றும் இவைகளில் தனமானுலும் ருணமானுலும் பாற்கவேண்டில் விருச்சிகம் மகரமாகில் கிரகம் இராசி யெண்களில்பாதி பாதியாயும் பகைவீட்டு கிரகமானுலும் விருஷபம் சிம் மம் மேஷம் கடகம் இவ்விதங்களில் இருந்தகிரகம் இராசியாகில் அவ் வெண்களில் கால்பங்காக்கி யெடுத்துக்கொண்டு பாற்கவும் மற்ற ராசியில் சுபக்ரகமாகில் சுபபெலன் பெற்றிருந்தாலும் அவரவர்கள் துகைகளையும் பெலனுக்கிசைந்தபடி யெடுத்துக்கூறல் தனமும் ருணமும் கண்டு சொலல வேண்டியது.

௩-வது சகோதிராதி பலன்கள் கூறப்படுகின்றனவாம்.

சிம்மத்திலுஞ் சூரியனுடனும் குசன கூடினும் இராகு கேது முதலி யோர் நிற்கினும் சுபர் ௬ ஸ்தானங்களிலாவது அதிபனுடனுவது பாற்கவல்லது இருக்காமலிருக்கின் சாதகனுக்கு சகோதிரமடையானென் றும், சனியாதல் புதனுதல் கூடிநிற்கின் செனித்திறக்கப்படுமென்றும், ஜாதகனுக்கு சகோதிரம் இருக்கப்படமாட்டாது என்றும் சனி இராகு முதலியபாவர்கள் சிம்மம் மேஷத்திலிருக்கினும் குசனுடன்கூடி இருந்த ஸ்தானங்களினிற்கினும் குசனுக்கு மூன்றுமிடத்தினிற்கினும் சகோதர விர்த்தி கிடையாது நீசசம்மந்தமாகி இருந்தாலும் பாவர்கள் பகைபெற்று மேற்கண்ட ஸ்தானங்களிலும் ௬ கிரகம் நிற்கினும் உடன்பிறப்பு விரு த்தியடையாது இவருடனும் பாவர்களுடனும் சுக்கிரன் கலர்ந்து ஆண் ராசியில் நிற்கில் அல்பமான பெண்ணென்றும் புருஷனென்று உண்டெ ன்றும் சந்திரன் இருக்கில் புருஷனைவிட ஸ்திரீசகோதிர வல்பமுண்டெ ன்றும் அறியப்படும். சந்திரன் சுக்கிரன் இவர் கூடி நிற்கில் பெண்ணே விருத்தி சகோதிரமென்றும், புதனிருக்கில் அவ்விதம்பெண்சந்ததியுடன் புருஷன் யேகவிருத்தியென்றும் குரு சூரியன் மாத்திரமிருக்கில் பெண் யின்றி புருஷர்கள் பெரும்பாலும் உண்டாகி அல்பமாக நிலைக்குமென் றும் சுபர்கள் தனித்துநிற்கினும் சூரியனும் சிம்மம்தனுசு கும்பம் மேஷ த்திலிருக்கில் ஆண்சகோதிர விருத்தியென்றும் புதன்கூடிசுபரேயிருந்து

நோக்கின் ஆண்சந்ததி சாஸ்தியும் பெண்சகோதிரம் அல்பமென்றும்சுபர் களில் குருநின்று நோக்கின் முன்பின் சந்ததிதீர்க்கமும் செவ்வாயிரு ந்து நோக்கினும் பாவர் பார்க்கினும் அடுத்தமுன்பின் சந்ததி கெடுமென் றும் சுக்கிரன்குருமுதலிய இராகுவிருக்கில் சகோதிரவிரோதம் தனித்து குரு அல்லது சுக்கிரன் ரவி இருக்கில் சகோதிரவனுகூலம் புதனிருக்கில் அதிகவல்லமையோகனுகி வாழ்வனவென்றும் பாவராகி சனி யல்லது இராகு முதலியோர் மூன்று கக-ல் இருக்கினும் நோக்கினும் அடுத்த முன்பின் சந்ததி பலமற்று நஷ்டமும் ஸ்தானுதிபதி சூரியன்புதனுடன் கேந்திரத்தில் மிதுன மீனத்திலிருக்கில் பெண் ஒன்று ஆணென்று தீர்க மும் தனுசு கன்னியாகில் ஆண்குறைந்து பெண்சாஸ்தியாயும் மிகுந்து ரும் இவ்விடந்தவறி நிற்கில் பிறந்த சகோதிரம் பலவற்றுநஷ்டமாகியும் இருவகை சந்ததியுண்டென்றும் பாவராகிய சனி இராகு கேது குசன் கூடிநிற்கினும் நோக்கினும் செனித்தவை இறந்துவிடுமென்றும்குசன்பதி னென்றில் சனியுடனல்லது சுபரிருக்கில் பிறந்ததில் மூத்தவனே சாதக னுவானென்றும் பாவர் பார்க்கில் முன்னஷ்டப்படுமென்றும் அறிந்துகூற வேண்டியது.

சனி செவ்வாய் மூன்று பதினொன்றில் நின்று அதிபதியாகிய சூரிய ன் குசன் வலிதுபெற்றிருக்கில் பிறந்துள்ள சகோதிரங்களுக்கு மூர்ச்சை நரம்புசம்மந்த சிலவியாதி உடலோராக வாழப்படுமென்று பாவரல்லது சுபரிருக்கினும் பெலமுற்றவருகின் திடசரீர மேன்மையுள்ள சகோதிரர்க ளென்றுங் கண்டுகூறல்வேண்டும்.

மூன்றுபதினொனறில் சூரியன் குரு சந்திரன் புதனிவர்களிலெவர் நின்றாலும் சகோதிரர்கள் மிகவும் இராசயோகபிரபவர்களாகி செயம்பெ ற்று வாழ்வர்கள் என்றுமிக மேன்பாடும் தனதானியப்பிரபல யோகமுடை யவர்களாய் வாழ்வார்கள் குசனுக்கு மூன்றுபதினொன்றையும் இவ்வித மே பார்க்கவேண்டியது பாவரிருக்கில் தரித்திரர்களாய் மிகவும் குலஹீன தரித்திரர்களாகி வாழ்வார்களென்றும் கூறல்வேண்டியது ௩-ல் சனிமுத லிய பாவரிருக்கில் பலஸ்திரீபோகன சுக்கிரனிருக்கில் குடித்தன இராச ஸ்திரீ மேலான குலப்பெண்போகம் குருவிருக்கில் உயர்குலப்பெண்போக ம் குசனிருக்கில் பார்க்கில் வடுகு ஆந்திரப்பெண் போகம் புதன் முதலிய சூரியனிருக்குவாகில் மேன்மையான ஸ்திரீபோகன் இராகுகேதுயிருக்கில் தாழ்குலப் பெண்போகன் ஸ்தானுதிபதி சூரியன் முதலியோர் வலுத்தும் மிதுனம் கன்னி கும்பம் மீனத்திலிருக்கில் ரூபஸ்திரீ போகனென்றும் கண்டுகூறல்வேண்டும், குசன் சனியுடன் கூடினுலும் பார்த்தாலும் சூரி

யன்முதலியோரைக் கூடினாலும் விதவபோகனென்றுங் கூறப்படுங் குலத்தாழ்வாகும்.

சுக்கிரன் மதி சிம்மம் துலாம் மீனத்திலிருக்கில் புதன் கூடினுதும் பார்த்தாலும் சங்கீதப்பிரியன் மேன்தொழில் செய்வன் பரதசாஸ்திரி யாவன் ஸ்தானாதிபதி சூரியன் புதனைக்கூடிநிற்கினும் சுக்கிரன் பார்க்ககூட இருக்கினும் சுபக்கோள் மூன்று ஐந்தைப்பார்க்கினும் சுக்கிரனுக்கு மூன்றிலும் இவ்விதங் கிரகமிருக்கில் சங்கீதப்பிரியன் கோலாகலன் பாபிகளான சனிமுதலியோர் நிற்கினும் நோக்கினும் அதிபதியுடனும் கூடில்பழய சாமானும் பழயவஸ்துக்களையும் புதிப்பித்து சந்தோஷசல்லாபனுஞ் சங்கீதப்பிரியனும் வாக்சாதுரியனும் மானியாகியும் வாழ்வன் மற்றகிரகமாகிய சுக்கிரன் பகையோரைக்கூடினிற்கினும் நோக்கினும் ஷெ பலன்களெல்லாம் பிரயோசனமின்றி இருந்தவஸ்துக்களையும் விற்றுபலவாறுகஷ்டத்தடைவனென்றறியவேண்டியது.

சகோதிரபாவங்கள் கணிதவகையாய்க் கூறுகின்றனம்.

சூரியனுடனும் சிம்மத்திலும் குசனுக்கு ௩-கக-இவ்வதிபனுடனும் மேஷத்தினின்ற கோள்கள் குசனுடநின்ற கோட்களில் பெலனுக்கிசைந்தபடி யெண்களைக்கூட்டி இராசியெண்ணில் கழித்தமிச்ச சகோதிரலாபமென்றும் புதன்குரு இவர்களுடன் நின்ற இராசியிலும் இவர்களுடையயெண்களைப் பெலத்துக்கிசைந்தபடி கூட்டி இவ்விராசியில் கொடுத்துக் கண்டவை தீர்க்கமபுருஷன் சந்ததியென்றும் பெண்சந்ததியென்றும்யூகித்து உரைக்கவேண்டியது.

ச-வது வீடு தாய்முதலிய வியாபார பலன்களாவன.

புதனும்சுக்கிரனுக்கு நாலாமிடத்ததிபனும்சுபனுகி மிதுனம் கன்னி தனுசு துலாம்கும்பம் மீனமிவைகளில் பகைவருடன் கூடாமல் சூரியன் முதலிய தனக்கு இஷ்டருடன் சூரியன் புதன்கூடினல் துலாந்தவிர மற்ற முன்சொல்லிய இடத்திலும் சுக்கிரன் ரவியுடன் கூடாமல் புதனுடன் கூடினல் மீனம் கன்னி நீங்கியவிடத்திலும் கன்னியில் சுக்கிரனின்றியும் மீனத்தில் புதனின்றியு மற்ற இடத்தில் கூடினுலும் தனித்து குருமுதலிய சுபர்கள்நோக்கின் மாடமாளிகையுடன் கூடிய பிதுர்வீடுமுண்டு சுயமான கிரகம் அலங்காரத்துடன் சேர்ப்பன் நூதனவாகனங்களுங் கவருவங்களும் படைத்துவாழ்வன் புதன் தனித்துவாழில் அவ்வளவு விசேஷமின்றி அல்பவாகனமும் பரவாகனமும் சிறியகிரகம் அடைவன்.

குரு சுக்கிரன் நீசமின்றி நாலிலிருக்கினும் பார்க்கினும் மெத்தை வீடு உண்டாகும் மென்றும் குடும்பமேன்மையும் வியாபாரத்தொழிலே அதிகமாகச் செய்வன் குருதனித்தும் புதனுக்கு நாலாம் வீடு புதன்வீடாய் யிருக்கில் மேலான இராசாங்கசம்மந்த வியாபாரம் உண்டாகுமென்றும் மிகவும் மேன் பாடடைந்தும் இதில் சுபர்கள் நின்றும் பெலத்துடனிருக்கின் சாதகன் கிரகவாகனமேன்பாடு பிரபலமும் இராசபிரபு இஷ்டமும் பலவகைகிரகமும் கட்டிடம் பலவற்றையும் அடைந்து மிகவுமேலாய் வாழ்வனென்றும் பலவாரான கட்டிடங்கள் மேன்பாடுகளும் சன்மான வெகுமானமும் உண்டென் சுக்கிரனுக்கு நாலுக்குடையவன் குருசந்திரனிவர்களுடன் வாழ்ந்துகேந்திர கோணததிலிருக்கில் மிகவுமேலான பல கட்டிடங்களும் இராசங்கத் தண்மையுடன் வாழ்வார்களென்றும் பிரபல சுகங்களும் புதன் பெலத்துடன் , புதனுக்கு ச-கம் மிடத்துக்கதிபனுடன் பெலத்து துலாம் மிதுனம் கன்னியிலிருக்கில் வியாபாரவற்கத்தால் பிரபலவானுவனென்றும் இவ்வித இராசி கிரகங்களுடன்பாவராகி சனி இராகு முதலியபாவர் இருக்கினும் நோக்கினும் மிகவுமேலாகிப இராச சன்மானியாகி வியாபாரம் பூமிக் கட்டிடங்கவ் பலவற்றை மேன்மையாய்ச் சேற்பனென்றும் நாலுக்குடையவன் குசன் முதலிய பாவருடனிருக்கில் கன்னி மிதுனம் துலாம் தனுசு கும்பம் மீனம் இவையில் பாவருடன் கூடியிருக்கில் மிகவும் பூர்வாற்சிதமிருந்து சாதகன் காலத்தில் நஷ்ட முண்டாகுமென்றும் இவ்விதஸ்தான மேன்மையில் பாவாராகிய சனி பாம்பு குசனிருக்கில் பலவிதமான கஷ்டத்தையடைந்து கிரகமின்றியும் வாகனமின்றியும்அடைவனென்றும் வியாபாரமுயற்சிகளால் நஷ்டமடைந்து பலவாருதுக்கப்படுவனென்றும் புதனுடனும் சுக்கிரனுக்கு நாலுக்குடையவனும்பகைக்ஷேத்திரம்நீசம்பெறறு சனி ராகு குசனிவரைக்கூடி ரு-சு அ-லும் அல்லது கன்னி சுக்கிரனுக்கு நாலிலிருக்கில் கிரகவாகனமின்றி அலேவனென்றும் பலவகை துக்கசோகியாயும் வாழ்வனென்றும் இந்தஸ்தானம் ஸ்தானுதிபதிகளுடன் பாவரும் சுபரும் கூடிநிற்கில் பலவகை கிரகவாகன வியாபாரம் சிலகாலமிருந்து மத்தியகாலத்தில் நஷ்டமடைவ னென்றும் கன்னி தனுசு சுக்கிரனுக்கு ச-ல் இந்த இடத்தில் சனி இராகு குசனிருக்கில் சிலசில வாகனங்கள் உண்டாகி உண்டாகி உடன் இழந்து விடுவனென்றும் பலகிரக பரஇடவாசஞ் செய்வனென்றும் சுபர்வீடாய் அந்த ஸ்தானுதிபதி புதனும் சுக்கிரனுக்கு நாலுக்குடையவனும் வலுத்து சுபர் வீட்டில் சுப

ருடன் கூடி க-ச-எ-ய-கூ-றீ- ல் பகை நீசமில்லாத இடத்தில் பாவருடன் கூடிநின்றாலும் சிலகாலந் தன்வீடிருந்த போதிலும் தன்வாகன மிருந்தாலும் அனுபவிக்க இடமின்றி தரித்திர வருத்தப்பட்டு பர மனுஷர் கிரகவாகமும் பரஸ்தல வாசமும் அன்னியருடையவாகன பிரவேசமுமுண்டாகிப் பின்வாகனம் கிரகம் சுயமாய் நேருமென்றும் கண்டறிய வேண்டியது.

காலகணிதமாவன.

மேற்கூறிய கன்னியிலும் புதனுடனும் சுக்கிரனுடனும் சுக்கிரனுக்கு நாலுக்குடையவனுடனும் கூடிய கிரக பெல்ா பெலனுக்கு இசைந்தபடி இராசி கிரகயெண்களைக்கூட்டி இருக்கிற இராசியெண்ணிற் பெருக்கி கூ-ல் கழித்தமிச்சம் வரும் கணக்குள்ள திசை புக்தி காலத்தில் சொயகிரகவாகனம் வியாபார பலிதமுண்டாகு மென்றும் மேன்மையாய் வாழ்வனென்றுங் கண்டறியவேண்டியது.

மாதுருபாவபலன்கள்.

சந்திரனுக்கு நாலாமிடத்தையும் அதிபனையும் கன்னியையும் புதனையுங்கொண்டு மாதுருபலன் கூறவேண்டியது.

புதன் சுக்ஷேத்திர உச்சம்பெற்று கேந்திரத்தில் சூரியனுடனும் சந்திரனுக்கு நாலாமதிபன் அவ்விதமே இருக்கினும் நான்கில் குரு முதலியோர் இருக்கினும் நோக்கினும் மாதாவானவன் அதிக மேன்மையு மாதாவினால் குடும்ப யோகமும் அதிகாரியான மாதாவாவாள் இதில் சுபர்கள் கூடினும் நோக்கமிருந்தாலும் மாதாவுக்கு ஆயுள்விருத்தியாய் வாழ்வாள் யென்றும் தாய்வழிச்சந்ததி அல்ப மேன்மையான புருஷர்களின் சந்ததி யல்பமும் பெண்சந்ததி விருத்தியாகவும் வாழும் புதன் பெலத்துடன் கதிரைக் கூடி வாழினும் சந்திரனுக்கு நான்காமிடங்களில் இவ்வித சுபர்கள் நின்றும் பார்த்திருக்கில் தாய் அல்பமனோவிரோதத்தையடைந்து செல்வத்துடன் விருத்தாவஸ்தையில் மரணமாவள்.

புதனும் சூரியனும் பாவருடன் கூடி கேந்திரகோணத்தில்பகை நீசம் பெற்ற இடத்திலிருக்கில் ? கவுமாராவஸ்தையில் தாய்மரணமாவள்.

சந்திரன் பாவராகிய சிம்மம் விருச்சிகம் மகரம் கும்பம் மேஷமிவையிலும் கன்னியிலுமிருந்து பாவர் சுபர்கலந்து நின்று பார்த்தாலும் எவ்வனத்தில் தாய்போகும்.

சந்திரன் புதன் இவர் வீட்டில் மீனம் மகரம் விருச்சிகம் இவையில் பாவருடன் கூடி சனி செவ்வாய் பாம்பைக்கூடியிருக்கில் தாய் பால்யத்திலேயே மரணமாவாள்.

விருச்சிக மகரத்தில சனி செவ்வாய் பாம்பு முதலியோருடனுவது பகையோருடனும் நாலில் சனி செவ்வாய் பாம்பு இவர்களில் இரண்டுபேர் இருந்து குரு முதலிய சுபர்கள் பார்க்காவிடில் தாய் பிறந்தவுடன் மரணமாவள் குரு பார்க்கில் தாய் சீக்குடையவளாய் தேகமிளைத்துப் பலவாராகிய கஷ்டத்தையும் வம்சக்ஷயமும் அடைவள் பகையாய் வாழ்வாள் பரபுருஷனைச் சேர்வள் குரு முதலிய சந்திரன் நாலு யேழிலும் கேந்திரத்தில் புதனும் ஓர்பாபியுங்கூடியிற்கில் தாய் யிருவாராய் பலராயும் பவிப்பன் புதன் முதலியோர் சனியுடன் மேற்கண்ட கிரகத்தில் இருக்கில் சிவீகாரத்தாயைபடைவன் சூரியன் முதலியோரைக் கூடினாலும் புதன் குரு வீட்டில் சந்திரன் குரு இருந்தாலும் மிதுனம் மீனம் விருச்சிகம் விருஷபம் இதில் புதன் ஆதல் சந்திரனுதல் மற்றொரு விரோதமில்லாத குசன் ரவி சனியை இவரிலொருவரைக் கூடினாலும் தகப்பனுக்குப் பின் தாரமுண்டென்றும் அவளொரு தாயென்றும் இதில் குசன் பார்த்தாலும் புதனுக்கு மூன்றில் சனி முதலிய பாம்பு நின்று சந்திரனுக்கு க-ு-மிடமானாலும் தகப்பனுடைய மருதாரப் பெண்ணைப் புணருவன் மாதுருபோகஞ் செய்வனென்றும் சண்டாளத்துவனென்றும் குரு முதலியோர் பெலத்து சுபரிருந்தாலும் பார்த்தாலும் கன்னி மிதுன தனுசு சந்திரனுடனல்லது புதனுடன் சந்திரனுக்கு நாலுக்குடையவனுடன் கூடினாலும் அவ்வித மாதுருகெமன யெண்ணம் முதலானவை அவைமூலமான அவக்கியாதி பொருந்துவனென்றும் போகஞ் செய்யானென்றுங் கண்டுகூறவேண்டுவனவாம் அவர்களுடன் சனி ரவி கூடினல் ௩௰-ச-க்குள் தாய்மரணமாவன்.

சந்திரனுடனும் புதனுடனும் கன்னியினும் சந்திரனுக்கு நாலுக்குடையவனுடனும் சந்திரனுக்கு யெட்டாதிபன் புதனுக்கு யெட்டாமிடத்திலும் மேஷத்திலுமுண்டாகிய கிரகபெலாபெலன்களுக்கு இசைந்த யெண்களை ஒன்றாகக் கூட்டி அந்தந்த இராசிபெலத்தின் யெண்ணிற் பெருக்கி கூ-கழித்த மிச்சமானதிசையும் அந்த ஈவை ு-ல் பெருக்கி கூ-ல் கழித்த மிச்சத்தை புக்தியாகவுங் கண்டு அந்த திசாபுக்தி சித்திரகாலத்தில் தாய் மரணமென்றுங் கண்டு

கொள்ள வேண்டியது. அந்த திசை சாதகனுக்கு வாராவிடில் தாய் கருமஞ்செய்ய மாட்டானென்றுங் கூறல் வேண்டும்.

வித்தியா பலன்களாவன.

புதன் மிதுன கன்னியிலும் சுபரைக்கூடியதில் குருவைக்கூடி நிற்கின் விசேஷ இராச வித்தையுள்ளன் பாவர்கள் கூடின் மத்திய காலத்தில் விருதிக்கி வாராது புதன் தனுசு மேஷமிவையில் நிற்கில் குசன் சூரியனைக் கூடினாலுங் குரு கேந்திரத்தில் நின்றுநோக்கினும் இராசவித்தையும் பலவித்தையரிவன் ஸம்ஸ்கிருதத்திலும் வல்லபனு வன், ரு-கஉ-கூ-கக-ல் புதனிருந்து அவ்வதிபன் சந்திர கேந்திரத்தி லிருக்கினும் கணித சோதிஷாதிரச வித்தையுமுண்டாகும்.

மற்ற இடத்திலிருந்து சுபர் நோக்கினும்} கூடினும் வித்தையல பமுடையவன், ௪-எ-ல் குரு சந்திரனிருக்கினும் புதன் க-௪-எ-கூ-கக-ல் இருக்கினும் இராஜவித்தை கணக்கு முதலிய யுக்தி புத்தியு டையவனவன் அதிக தேற்சியடையான் குரு கேந்திரத்திலும் சுபர் வீடு அல்லது தனது வீட்டில் சந்திரன் புதனிருக்கில் மூன்றுவித பாஷையில் மேலான பதவியடைவன் இதில்: சூரியன் சனி கூடினால் வித்தை அறைகுறையாகும்மற்ற பாவர் கூடில் யெவ்விதவித்தையும் பிரயோசன மற்றுவிடும், குரு சுக்கிரனுகில் தந்திரவித்தை கபட நாடக சூத்திரனவன்.

யெவ்வித வித்தையையுங் கிரகிக்க வல்லபனுவன், குசன் வலு த்து கேது முதலியோர்பாற்க யிருக்கின் மந்திராதிவித்தை புரிவன் சுக்கிரனுகில் விவாத வித்தை புரிந்து மத்தியில் விடும்படி நேரும் புதன் கூடநிற்கினும் புதன் பெலக்கினும் காவ்ய நாடகாலங்கார சாஸ்திர பாஷீதனுகியும் சோதிஷம் முதலிய வைத்திய நூலுடை யவனுகியும் வாழ்வன் புதன் கெடில் இவ்வளவும் பிரயோசனமற்று வாழ்வன் புதனுக்கு நாலில் அதிபனுங் கெட்டு சனி பாம்பு முதலி யோர் ஷெ இடத்திலும் ஸ்தானுதிபதியுடன்கூடில் வித்தையில்லான் அப்ரகாசியாகி மூடனுவன் சுபக்கோள் அதில் கூடினாலும் பார்த்தா லும் தமிழ் ராஜபாஷை தெலுங்கு சுயபாஷை பிறபல முடையவன் பாபருஞ் சுபருமாகக் கலர்ந்து வாழில் வித்தை மத்திமமாகிவாழ்வ னென்றறியப்படும்.

நாலில் சுபத்துவம் பெற்ற குரு புதன்கூடி குசனை நோக்கினும் பார்க்கினும் புதன் உச்சனுகி இவர்களைக் கூடினும் மேஷம் ரிஷபம்

கன்னியிலிருக்கினும் இவனுக்கு நிக்ஷேபமாகிய பழம்பொருள் புதயல் இவைகள் கிடைக்கும் சனி முதலிய இராகு இவர் பகைபெற்றுஷ்டி யோருடன் வாழில் வைத்த பொருளுங் காணுமல் போகுமென்றறிய வேண்டியது.

ரு-வது புத்திரபாவ பலன்கள்

சுக்கிரனேயும் துலாத்தையும் குருவையும் குருவுக்கு ஐந்தாமிடத்ததிபனேயுங் கொண்டு புத்திர பாவங் கூறவேண்டியது.

மிதுனலக்கினத்திற்கு முன்பிரப்பது பெண்ணுகும் இதில் குரு குசன்பெலத்துடனிருந்துசுக்கிரன் கெட்டுப்போகிறபக்ஷத்தில்ஆண் சந்ததி முதலிலுண்டாகும் குருவுக்கு ரு-மிடம் பூரணச் சந்திரனுகி இராகு அல்லது குசன் பாவிருக்கில் முதல் ஆண் புத்திரர் மரணம்.

துலாத்திலும் குருவுக் கைந்தாமிடத்திலும் சுபர்களாகிய குரு நீங்கிய சந்திரன் சுக்கிரன் இவரிருக்கினும் குரு கேந்திரத் திரிகோணத்திலிருந்து செவ்வாய் ஐந்திலிருந்தாலும் பாபபெலமின்றிச் சுபபெலன் வலுத்திருந்தாலுஞ்சாதகனுக்கு புத்திரவிருத்தி யுண்டென்றும் சுக்கிரன் மிதுனம் தனுசு கும்பம் மேஷம் இவையில் சுபர் நோக்கத்துடன் பூர்வ பக்ஷத்து சந்திரன் பெலத்துடன் அவர்களே நோக்கினுங் கூடினுங் சாதகனுக்கு புருஷசந்ததி அதிக விருத்திகளும் குரு தனுசு கும்பம் துலாம் கன்னி இவையில் குசன் சுக்கிரன் பூரணசந்திர னிவரில் ஒருவரைக்கூடினும் சாதகனுக்கு புத்திர கருமமும் புத்திர விருத்திகளும் புத்திரர்கள் அதிக செல்வத்துடன் வாழ்வார்கள்.

சுக்கிரன் கன்னி விருச்சிகம் சிம்மம் மகரம் இவையில் பாவரைக் கூடி பாம்பு முதலாகியவரைக் கூடின் பெண் சந்ததி தவிரப் புருஷசந்ததி மத்திமவிருத்தியில் ஒன்றிரண்டான புத்திரர்கள் உண்டென்றும் விருஷபம் மிதுனம் கடகம் மீனமிவையிலிருக்கில் சந்திரன் முதலிய பாவரைக் கூடில் பெண்ணே புத்திரபாவமென்றும் இதில் குரு கூடினுலும் பார்த்தாலும் குசன் சூரியன் கூடினுலும் பெண் சாஸ்தி புருஷன் அல்பமென்றும் இதில் சுபர்கள் கெட்டு பாபிகள் வலுத்து துலாம் தனுசு கும்பம் இவையில் புதன் சனி கூடி இருக்குமாகில் எவ்வித புத்திரபாவமுங் கிடையாதென்றும் சூரியனல்லது குசன் இவர்களேக்கூடி புதன் வீட்டில் சனி வீட்டில் இருக்கில் சுவீகாரம் அபிமான புத்திரன் உண்டென்றும் இதில் சனி, முதலிய பாம்பு கொடூராய் சுபர் பாருமலிருக்கில் ஒருவகை

யான புத்திரரும் பெந்துவுமின்றி மரணமாவனென்றுங் கூறப்படும் குருவுக்கு எ-லும் ரு-மிடத்தையுமிப்படியே பார்த்துப்பலன் கூறவேண்டியது.

துலாம் கும்பம் குருவுக்கு ரு-கூ-மிடத்தை சனி பாம்பு இவர் இருந்தாலும் பார்த்தாலும் பெண்பிரக்கில் விருத்தியும் ஆண் பிரக்கில் அவ்வித கெர்ப்பமாதாவுக்குகூட தேகநோய்க்கண்ட துக்கத்தையும் பிரசைக்கி பாலா ரிஷ்டதோஷத்தையுங் கொடுக்கும் ஆகையால் அதற்கு சாந்திகள் செய்யில் தோஷபரிகாரமாகிச் சுகமுண்டாகும்.

புத்திரபாவகணிதம்.

குருவுடனும் குருவுக்கு ரு-மிடத்திலும் துலாத்திலுஞ் சுக்கிரனுடனும் கூடியகிரகங்களின் யெண்களைப் பெலாபெலத்தின் பேரில் கொடுத்துக்கண்டு அந்த இராசி யெண்களிற் பெருக்கி குருவிருக்கும் இராசி யெண்ணிலும் குருவுக்கு ஐந்தாமிடத்தாதிபதி யெண்ணிலுங் கொடுக்கவும் இந்த இரண்டு வீடும் உற்றகிரகங்களுக்கு நட்பானல் குரு விருந்த இராசி யெண்ணிலும் ஆக்ஷி உச்சமானல் இரண்டையுஞ் சேர்த்த எண்ணிலும் கொடுத்தமிச்சம் புத்திரலாபம் இதில் வந்த தொகையை ரு-ல் பெருக்கி அந்த இராசி யெண்ணிலேயே கொடுத்துக்கண்ட மிச்சம் தீர்க்கமானபிரசைகளாகும்.

இதில் யெண்கொடுத்த கிரகங்களின் இராசி கிரகம் இவைகள் பெண்ணறிந்து பெண்ணித்தனை ஆணித்தனை தீர்கமென்று கண்டறியவும் மேலேமுதலில் பெருக்கிய மொத்தத்தொகையை கூ-ல் கழித்த மிச்சமும் அந்த ஈவை ரு-ல் பெருக்கி கூ-ல் கழித்த மிச்சம் யெத்தனையோ அந்த திசா புத்தி காலத்தில் புத்திர லாபங்களைக் கூறப்படுமென்று மறியவேண்டியது.

புத்திரபெலன் கண்டபின் துலாம் கும்மம் தனுசு இவையிலும் குருவுடனும் குருவுக்கு ரு-கூ-லும் குசன் இராகு கேது சனி இருக்கில் புத்திரன் ரோகியாயும் அங்கஈனனுகி வாழ்வான் சுபரிருக்கில் சலக்ஷண புருஷனுகியும் அரோகதிடசரீரனுகியும் இராசயோகனுகவும் வாழப்படுமென்றறியவேண்டியது.

இதில் சுக்கிரன் தனுசு கும்மம் மிதுனம் சிம்மத்தில் சனி முதலிய புதனுடனிருக்கினும் தனுவிலிருக்கினும் குருவுடன் இவ்விதகிரகங்கள் கூடி நிற்கினும் குருவுக்கேழில் சூரியன் புதன் சனி நின்றாலும் கேந்திரத்திலாவது மிதுனம் மீனம் மகரம் துலாத்தில் இருக்கினும் சொன்னமான

வனுக்கு பின்தாரவம்ச புத்திரனுமுடைய யோகனுவான் பென்றரிய வேண்டியது.

௬-வது சத்துருரோக ருணம் இராஜதெண்டனையான பலன்கள்.

குசனையும் விருச்சிகத்தினையும் சனிக்கி (௬)லும் ஆருமாதிபனுகிய இன்னல் வரைக் கொண்டு சொல்லவேண்டியது.

குசன் இராகுமுதலிய பாவருடன் கூடிவிருச்சிகம் சிம்மம் மேஷம் மகரமிவையிலிருக்கில் சாதகத்துக்கு சத்துருவிருக்கினும் மனுகூலஸ்த் னுகியும் விருச்சிக மகர மிவையிலிருயிலிருக்கில் தனக்கிசைவுள்ள பெரும்பிரபு சத்துருவாயினு மனுகூலத்தையு மேற்கண்டபடிக்குள்ள வகையில் சூரியன் இராகுமுதலிய பாவர்நிற்கில் இராசதெண்டனை யுண் டாகுமென்றம் பல்வகை கவலை ரெக்தமாங்கச சம்மந்தநோயும் சூரியன் முதலிய கேதுவாகில் யெலும்பு சம்மந்தநோயும் குரு சுக்கிரனுகில் தோலும் எலும்படையும் சம்மந்தநோயும் சந்திரனுகில் க்ஷயாதி செலரோக பயமும் மனதுக்குக் கவலைகளும் பலவித மனோவருத்தமும் உண்டென் றும் அறியப்படும் என்றவாறு.

குசன் ஷஷ்டி ஸ்தானங்களில் குரு சுக்கிரன் முதலியசுபருடன் கூடி நிற்குமாகில் அந்தந்த கிரகங்களுக்கு இசைந்தநோய்ச் சரீரனுவன் சுக்கி ரன் கூடிநிற்கில் ஸ்திரீ மூலமான விரோதவாதமூலிய இராசு பயமும்குரு வாகில் டுருஷத்துவ பேலோர்மூலிய இராசமூலிய விரோதமும் குசனுகில், சமமனுஷரால் வாதவிரோதமும் புதனுகில் சந்திரனுகில் வைசியமூலிய விரோதவாதமும் சனி இராகு முதலியயோராகில் நீசர்கள் தாழ்குலபிறபு மூலியவிவாத விரோதமும் அடைந்து வாழ்வார்கள் யென்றுங்கூறப்படும்.

குசன் புதன் குருவாகில் கிரகக்கட்டெட்டம் பூமிமூலியவாதமும் சுக் கிரன் சந்திரனுகில் தோப்புமுதலிய ஆபரணவிவாதமும் சூரியன் சனி இராகுவாகில் ரெக்கதன மூலியவாதங்கள் விரோதங்களையும் அடையப் படுமென்றுங் கண்டு கூறவேண்டியது.

குசன் சுபருடன் கூடி மிதுனம் கடகம் கன்னி துலாம் தனுசு கும் பம் மீனம் வேஷமிவைகளில் இருக்குமாயின் கடனும் ருணத்தால் வாத மும் பகையும் சத்துருதுன்பமும் குடும்ப ரோகத்தையும் இவ்விதக் கெடு தல் பலனை கொடுக்குமென்றும் இந்த இராசிகளில் சனிமுதலிய இராகு இவரைக்கூடி நிற்கில் பலவாரான கள்ளபயம் னீங்காத சத்துருவையும் பொருள்மூலிய விவாதத்தையும் பலவகை துக்கசோகங்களையும் பிணிக

ளான சரீரனுகவும் ஸ்திரீமூலிய நோயுடையவனுகியும் வாழ்வன் இராச தெண்டனைகள் அல்பமுண்டாகும் இதை குரு சந்திரன் முதயோர்பாற் கில் உடன் னிவற்தியாகி வெகுமானங்களை யடைவ னென்றவாரு.

மகரம் விருச்சிகம் கடகமிவைகளில் குசன் சனி இராகுமுதலியோர் கூடிநிற்கினும் நோக்கினும் பாவர் பெலத்து நிற்கினும் சந்திரனுக்கு இவ் வித ஸ்தானங்களில் நின்ருல் விசேஷத்துக்கங்களால் தேகவிரணமும் பல வகை கஷ்ட நஷ்டத்தையும் இராசதெண்டனைகளுக்கும் உட்படுவான் சனி நீங்கிய மற்றயகிரகங்களிருக்கில் இராசதெண்டனை தவிர மற்றயவிஷ பீதியையும் அரிஷடத்தையடைவன் குசன் சனி இவருங்கூடி (கடகத்தி லிருக்கில் நாயாற்கண்டமும் சந்திரன் யெட்டிலும் குசன் சனி இரண்டு ஆரிலிருக்கில் பெருநோய்களால் நலிவன் குருமுதலியோர் நோக்கில் நேத் ராதி நோய்களும் இஷ்ட பிரபு மேலானபகைகண்டு நிவர்த்தியாகும்அதா வது இவர்களின் திசாபுக்தியி லென்றுங் கண்டறியவேண்டியது விருச்சி கத்தில் இராகுவும் மகரத்தில் கேதுவல்லது இராகு விருக்கினும் ஆயுள் வறை இராச தெண்டனைக்குள்படுவான் குரு விருஷபம் கடகம் இவையி லிருக்கில் இராசதெண்டனை இன்றியும் தேகசுகத்துடனும் வாழ்வன் மற் றய இடத்தில் குருநிற்கில் தேகரோகபாதையாகும் சந்திரனுனவன் கேந் திரகோணமாகிய மிதுனம் கடகம் கன்னி துலாம் தனுசு கும்பம் மீனம் இவைகளிலாவது விருஷபத்திலாவது இருந்து அல்லது சுக்கிரனைக்கூடி இருக்கில் தேகச்சுகமும் திடசாத்திரனுகியும் மேன்மையோடு அதியோக வல்லபனுகியும் குசனுங்கூடி இருக்கில் ரணசூரனுய் ஓர்பிடியனுகி மிகவுங் கீர்த்தியும் எவ்வித சத்துருவரசர்களையும் செயித்துவரப் படுவனென்றும் மேன்மையான பிரபலயோகத்துடன் யெவ்வித சத்துருக்களும் வசியமாம் வாழ்வார்கள் மேற்கூறிய இடங்களில் புதன் சனி பாம்பு இவர்கள் சே ரின் மிகவும் பகையுடன் குரூபியாய் பிணிசரீரனுகியும் பகையுடனும் அரசதெண்டனைக்கும் உள்பட்டு வாழப்படுவனென்றும் பாவருஞ்சுப ருங் கூடி இருக்கில் மேலேகூறியபலன்கள் அல்பமா பிணிசத்துரு ராச தெண்டனை ஸ்திரீபாதைகளையும் ரெணங்களையு மனுபவித்து உடனுக்கு டன் னிவற்தியடையவனென்றும்.

சிமமம் விருச்சிகம் மேஷம் இவைகளில் சந்திரன் சுபருடன் னின் ருலும் பாவருடன் னின்ருலும் பிணியனுகி ராச தெண்டனைகளும் பகை களையும் பலவாத நோய்களையு மனுபவிப்பனென்றம் குசன் மாத்திரம் யல்லது சூரியனிருக்கில் மிகவும் கொரேதெண்டனை யல்லது பிணிகள் அதிகமின்றியும் உடனுக்குடன் னிவற்தியாகி விடும் அதாவது கூடிபவர்

களின் நிசாபுக்திக் கிசைந்தபடி கண்டறிய வேண்டியது இதில் மேலேகூறியபடி பலன்களேயறிந்து சொல்லவேண்டும் சனி சந்திரனின்ற இடந்தொட்டு மிவ்விதியே கண்டரிய வேண்டியது.

களத்திர பாவங்களே பற்றிய பலன்கள்.

குருசுபக்ஷேத்திரத்திலு மல்லது கன்னி தனுசுமீன மிதுனமிவையிலும் சுக்கிரனுக்கு ஏழு எட்டு ஆரிலின்றி இருக்கினும் சூரியனுடன் புதனுடன் கூடி மேற்படி ஸ்தானங்களிலிருந்தாலும் சுக்கிரனுக்கு யேழில் பூர்வபக்ஷத்து சந்திரன் பெலத்தவிடத்திலிருக்கினும் சுக்கிரனைக்கூடினும் பெலத்துடன் பகை நீசம் நீங்கியவிடத்தில் இருக்கினும் மிகுந்த சுசிருசியுள்ள மேலான குடும்ப களத்திரலாபம் ரூபவதியாயிருப்பள். ஒரேதாரமாகும் தனுசுவிலும் சுக்கிரனுக்கு ஏழாமிடத்ததிபன் ஏழிலும் இவ்விதமே பெலத்துடனிருக்குமாயின் ஒரேதாரமென்றம், சந்திரனல்லது குரு தனுவிலாவது சூரிய புதன் தனுவிலாவது குரு சந்திரன் சுக்கிரனுக்கு ஏழிலாவதிருக்கில் ஒறேதாரமென்றம் சுக்கிரனுடன் பலக்கிரகங்கூடி துலாமிதுனம் கும்பம் மீனத்திலிருக்கினும் விருஷபத்திலிருக்கினும் குரு கூடாமனேக்கில் ஒரேதாரமென்றம் சனி இராகு கூடினும் ஒரே தாரத்துடன் மற்ரெருதார முண்டாகினும் அந்தியத்துக்கு இரெண்டு தாரங்களும் இருக்காதென்றம் குசனைக்கூடில் ரோக களத்திர மென்றம் ரவியைக்கூடில் விரோதத்தினல் இரெண்டு தாரமென்றம் சந்திரனைக்கூடில் ஒரே தாரமென்றம் புதனைக்கூடில், இருவிதத்தாரமென்றம் குரு முதலியருடன் செவ்வாய் சனிகூடில் பலதாரமாவது மூன்றுக்கு மேற்பட்டதாரமென்றம், மேஷ விருச்சிகத்தில் குசனுடனுவது சனி புதன் சூரியனுடனுவது சனி புதன் சூரியன் சுக்கிரனுடனுவது சுக்கிரனுக்கு யேழிலாவது தனுவிலாவது இருக்கில் குருவிருச்சிகம் மகரம் சிம்மம் இவையிலிருந்து சனிமுதலிய பாவரைக்கூடினும் தாரமிரண்டுக்கு மேல்வரையுங் கூறப்படுமென்றம், கன்னி மேஷம் கடகமிவையில் குருவல்லது பாவருடன் குருகூடினும் அல்லது தனித்தால் சுக்கிரனுக்கு அஷ்டமாதிபதியாகி கன்னி தனுசு மேஷமிவையில் குரு சந்திரனின்றாலும் சுக்கிரனுக்கு பத்திலும் நாலிலும் சனியிருந்தாலும் தாரமிரண்டென்றங் கூறப்படும் மற்றப ஸ்தானதிபதியான குருவுடன் பாவரின்றியும் தனுசுவில் மதியும் பூர்வபக்ஷனுயிருக்கில் அதிரூபதாரம் சிகப்புநிறமும் சுக்கிரனைபாவர்கூடினும்நோக்கினும் ரோகசரீரமான தாரமென்றம் இதில் குசன் கேதுபார்க்க கெற்பாதிரின ஊஷ்டனரோகமும் சனிஇராகுவாகில் வாதநீர்முதலிய கால்ரோகங்களேயும் ரவியாகில் சிரசு நேத்திரமுத

வியரோகமும் சந்திரனிலுங் பகைபெற்று விருச்சிகம் மகரம் சிம்மத்தி லிருந்து சுக்கிரனைக்கூடினும் பார்த்தாலும் கண்டநோய் செலநோயென் றும் குசனிருந்து கூடினும் பார்க்கினும் பகைமுதலிய பக்ஷவாத நோயும் புதனுகில் இருப்புநோயும் குரு அசுபனுய் பார்க்கில் மார்புநோயும் (சுக்கி ரனுகில் முழந்தாள்ரோகமும் சனியாகில் கால்நோயும் இராகுகேதுவாகில் பாதநோய்களையுங் களத்திரங்களுக் குண்டாகும் இதில் சுக்கிரன் பாபத் தாவனுகி மறைந்து குரு கண்டங்களிலிருக்கில் களத்திர மேற்கண்டவியா திகளால் மரணத்தடையுமென்றும் தாரமிரண்டினை யனுபிவிப்பனென் றறியவேண்டியது.

களத்திரகணிதம்.

சுக்கிரனுடனும் சுக்கிரனுக்கு யேழு யெட்டுக் குடையவனும் ஷெ ஸ்தானங்களிலும் தனுசுவிலும் குருவுடனு மிருக்குங் கிரகயெண்களை இராசியெண்களால் தனித்தனி பெருக்கிக்கொண்டு யெந்த இராசியில் சுக் கிரன் குரு இருக்கிறுனே அவ்விதபெலனுக்கு இசைந்த யெண்ணில்கொ டுத்து கணடசேடம் தாரமென்றும், அத்துகையை கூ-லும் மருபடி நி-ல் பெருக்கி கூ-ல் கழித்த மிச்சம் திசாபுக்தி காலத்தில் களத்திரலாபம் இர ண்டுதாரமென்றறிந்தும் மேஷத்திலுங் குசனுடனுங்கூடிய யெண்கணக் கை யொன்றபடுத்தி மேலே பெருக்கிய துகையைச் சேர்த்து கூ-ல் கழி த்து நின்றமிச்சமும் அந்த ஈவை நி-ல் பெருக்கி கூ-ல் கழித்த மிச்சம்திசா புக்திகாலத்தில் உ-வது தாரலாபமும் மேலேகண்ட இரெண்டு துகையுங் கூட்டியதுகையுடன் சனியினும் சுக்கிரனுக்கு யெட்டாமிடத்ததிபன் யெ ட்டாமிடத்திலு மிருக்குங் கிரகத்துடன் கூடிய யெண்களை ஒன்றபடுத்தி இம்மூன்று துகையையும் ஒன்று சேர்த்து கூ-ல் கழித்த மிச்சமும்ஈவுத் துகையை நி-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷமும் திசாபுக்திகாலங் களத் திரவியோகமான மரணமென்றுங் கண்டறிதல்வேண்டும்.

களத்திரமூலிய லாபநஷ்டம்.

களத்திரகாரகன் மிதுனம் கன்னி மீனத்திலிருந்து புதனல்லது குரு வைக்கூடினும் சந்திரன் சேர்ந்தாலும் பெண்வழியால் பொருள் தனம் பூமி கிரகவாகனமுண்டாகும் தனுசு மிதுனம் கும்பம் சுக்கிரனுக்கு பத் தாமிடத்தில் சுபர்வீட்டில் புதன் அல்லது சந்திரன் குரு பகைநீசமின்றி இருக்கில் மிகவும் மனையாலாலேயே சீவனம் பண்ணுவனென்றும் குரு வலுக்கில் சாதகனுல் மனையாள் வகைக்கும் கூடலாபயோக மேன்பர்டும் சுக்கிரன் புதன் வலுக்கில் மனையாளால் சாதகனுக்கு யோகமும் தாய்வ

ழியினும் பொருள்கூடும் இதைச் சனிமுதலிய செவ்வாய்பார்கினுமிரு க்கினும் பகையோரைக்கூடிய ஸ்தானத்திலிருக்கினும் தாய் மனையாளிவர் வழியால் அவ்விதமுற்ற பெலத்த கிரகத்துடன் குசன் சூரியனைக்கூடில் தகப்பன் சகோதிர மிவ்வித வகைப்பொருளுங் கைக்குவந்தாலும் அது களையும் இழந்து பலகஷ்ட நஷ்டமடைவனென்றுங் கூறப்படும். சுபபெ லத்துடன் சுபர்பார்க்கில் மிக்வும் யோகத்துடனுஞ் செல்வத்துடனும் இராசயோகனுகி வாழ்வன் விவாதசெயமுண்டாகும் சனிமுதலிய பாவ ரைக்கூடி வலுத்திருக்கில் மனைவி பரனைச் சேர்வள் தனத்தைத் தேடி யிடுவள் யென்றும் புதன் சந்திரன் குரு அசுபக்ஷேத்திரத்தில் அல்லது சுபக்ஷேத்திரத்திலிருந்து நோக்கில் பரபுருஷனைச்சேர்வள் பணந்தேடாள் இவ்வித பலனுக நடக்கும் என்றும் அவ்வித கிரகத்துக்குறிய திசாபுக்தி களிலிவ்வித பலனுண்டாகுமென்றறிய வேண்டியது.

பிதுர்பாக்கிய பலன்கள்.

சனிபானவனையும் கும்பத்தையும் சூரியனுக்கு ஒன்பதாமிடம் அதி பதி யிவ்வைந்தையும் கொண்டு பார்த்துரைக்க வேண்டும்.

சனியல்லது சூரியனுடன் பாவர்களிருக்கினும் சனிமுதலாகியவருடன் கதிர் சேரினும் கும்பம் துலாமிவையில் சூரியனிருக்கினும் ஷஸ்தானங் களில் பாவருகிய குசன் ரவிஇராகுஇருக்கினும் பிதாவிர்கு அரிட்டமென் றும் பிதா மாணமானது பாலியத்திலேயும் சிசுகாலத்திலு மரணமடைவ னென்றும் சனி மேஷம் சிம்மம் மகரம் விருச்சிக மிவைகளில் சூரி யன் முதலிய பாவருடன் இருக்கினும் கும்பம் மகரம் துலா மிவை யிலும் சூரியனுக்கு கூ-மிடத்திலும் குசன் கேது முதலிய சனி இவ ர்களிருக்கினும் நோக்கினும் சிசுவின் பால்யவயதிலேயே பிதுர் மர ணமாய் விடுவனென்றும், ஷ ஸ்தானங்களில் பகைபெற்ற சுபரும் பாபருமாகக் கலர்ந்தும் ஷ பாபிகளின் சேற்கை அதிகபெலமாகி இருக்கினும் சந்திரனுக்கு உ-கஉ-ல் பாபரும் அல்ல சனி இருக்கில் தகப்பனுடை பூர்வார்ச்சிதங் கிடையாதென்றும் இவ்விதத்திலும் குருவுமிவ்வித மரைந்து பகைபெற்றுப் பாவருடனிருக்கில் பிது ரார்சிதம் எராளமாக விருந்து நஷ்டமாகி விடுமென்றும், இவ்வித இடங்களைக் குரு முதலியோ ரிருக்கினும் நோக்கினும் தகப்பன் யௌவ்வன வயதில் மரணமும் சனி, குருவுடனுக் கூடினுலுங் குரு வுடையதனுசு மீனத்தினின்ருனும் புதன் மிதுனம், கன்னி, துலாம் இவையிலெதில்னின்றிருக்கினும் புதனைக்கூடி சூரியனுக்கு ஒன்பதா மிடத்ததிபன் இவ்விதமிருக்கினும் தகப்பன் யௌவ்வனனத்திலயே

மரணமாவன் சூரியன்வலுமையுடன் மேஷ சிம்ம தனுசுவிலும் சனி கூடினும் சுக்ஷேத்திரமான மகரகும்பத்தில் சனி நின்ருலும் குருமுத லியோர் கும்பம் துலாத்திலாவது பார்கவாவது இருக்கினும் சந்திர கேந்திரத்தில் குருனின்று இருக்கினும் பிதாவானவன் கௌமாரா வஸ்தையில் மரணமென்றும், கும்பத்துக்கு கேந்திரகோணத்தில் சனியும் அந்தவிடாதிபன் சுபகிரகத்துடன் சுபரிடத்தில் லக்கினதி பதியைக் கூடினும் சந்திர கேந்திரத்திலிருந்தும் குரு முதலியசுபக் கோள் நோக்கினும் பாவர்கள் யாறேனும் துலாம், சிம்மம் கும்பம் கதிர் கூடவிருக்கினும் பிதா யெவ்வனத்திலயே மரணமென்றுங் இதில் குரு பெலவானுகி சந்திர கேந்திரத்திலும் லக்கினமுதலாகிய கேந்திரத்தில் சூரியனுடன் புதன் மாத்திரமிருக்கிலும் கவுமாரா அவஸ்தையில் மரணமென்றும், சனி துலாம் விருஷபம் கும்பத்திலி ருக்கில் இந்த சாதகனுக்கு பிதா கவுமாராவஸ்தையில் மரணமென் றும், சனி சூரியனிவர்கள் மிதுனம் கன்னி தனுசு மீனமிவையில் புதசம்பந்தனுகியும் குரு சுபபெலத்தைப் பெற்றும் மல்லது குரு பெலவானுகி சுபர்வீட்டிலிருந்து சூரியனை யல்லது சனியை நோக் கினும் சனியுடன் சூரியனுடன் கூடினுலுஞ் சாதகன் பிதாவிருத்தா வஸ்தையில் மரணமென்றும் குரு உச்சனுகி யல்லதுசனி வீட்டிலா வது சனி குரு வீட்டிலாவது மாறி பாம்பு முதலிய பாவரைக்கூடி னும் சந்திரனல்லது சுபர்கள் கும்பத்தையாவது அதிபதியை யா வது நோக்கின் பிதா விருத்தாவஸ்தையில் மரணமென்றும் குரு முதலியோர் கேந்திர கோணத்தில் சனியல்லது ரவியைக்கூடி பெ லன் பெற்று கடகம் மீனமிவையி னின்ருலும் சாதகன் பிதா விருத் தாவஸ்தையில் மரணமென்றும் சூரியன் நீசமாயினும் சனி நீசம் பகையாகி இருந்தபோதிலும் சாதகன் பிதா பால்யத்திலேயே மர ணமாகி விடுவனென்றும் சந்திரன் பெலக்கில் பிதா தீர்க்கமும் பிதுர் சந்ததி விர்த்தியென்றும் சுபக்கோள்கள் ஷ பிதுரிடமான துலாம் கும்பத்திலும் சூரியன் சனியுடன் கூடினுலும் நோக்கினும் பிதா யௌவ்வனுவஸ்தைவரை தீர்க்கமும் பிதுர்வம்சமானது க்ஷயமென் றும் கூ-டு-ல் பாவர் பகை யல்லது நீசராயும் அல்லது அந்த ஸ்தா னுதிபதி கெட்டிருந்து சனி முதலிய பாவரைக் கூடினும் பிதுரர்ச் சிதமும் பிதுர் சந்ததி கிடையாதென்றும் அறியவும்.

சூரியனுக்கு ஒன்பதாமிடத்தையும் இவ்விதமே பார்க்கவேண் டியது. மேலே கண்ட ஸ்தானம் ஸ்தானுதி சுபர் வீட்டில் சுபருடன்

இருக்கினும் அல்லது மேஷம் மீனம் மிதுன கன்னி தனுசுவிலிருக்கினும் பிதுர் சொத்து பிரபல குடும்ப விர்த்தியும் யேராளமான பூஸ்திதி முதலிய கிரகவாகன-க்ஷேத்திரமும் மிகுந்த பெலன்களென்றும் சனி முதலியோர்கள் சிம்மம் கடகம் மகரம் கும்பம் துலாத்திலிருக்கில் பிதுர் ஸ்திதி சிலகாலம் யேராளமான பிறபலத்துடனிருந்து மத்தியில் கெடுமென்றும் அதில் பல விவாதமும் நஷ்டமும் மனதுக்கு கவலைகொடுக்கு மென்றும் பாபர் கூடின் கிடையாதென்றும் சுபர் கூடினும் நோக்கி பெலத்துடன் இருக்கினும் பிதுர்பாக்கிய பிறபலமும் இராஜயோகனுகியும் வாழ்வன்.

சனி மகரம் கும்பம் மிதுனத்தில் தனித்தாலும் புதனுடன் கூடினும் சூரியன் முதலிய பாவரைக்கூடி கும்பத்தை சுபர் பாரும மிருக்கினும் பாபிகள் பாற்கவிருக்கினும் சாதகன் தகப்பன்கூடச் சகோதிரமே நிற்காது அப்படி நின்றாலும் குடும்பமில்லாதவராய் அற்பாயுளாய் பலநஷ்ட துக்கத்துடன் அடைந்து பல வருத்தமடைவர்கள் பெண்ணுகினும் பிதா பிதுர் சகோதிர மிவர்களுக்கும் தேகாரிஷ்டநோயும் பித்தாதிநோயும் பலவகை வருத்தங்களையும் கொடுக்கும் குரு முதலிய சுபர்கள் நோக்கினும் பிறபல மின்றி சமயோகர்களாய் பிதுர்வம்ச சகோதிரர்களுக்கு புத்திர விர்த்தியை யடைவார்கள் யென்றும் கூறப்படும்.

சுபர்களே நிற்கினும் நோக்கினும் பிதுர்வசம் மிகவும் பிறபல யோக சகோதிரர்களாய் வாழ்வார்களென்றறியவும்.

இந்த லக்கினக்காரர்களுக்கு பிதுர்வம்சாவளி அதிக விர்த்தியடையாதென் றறியவேண்டியது.

பிதுர்பலன் குணிதமூலமாய்க் குணிக்கும் வகைகள் அறியவேண்டியது.

சூரியனுடனும் கூ-மிட மதிபதியுடனும் சனியுடனும் கும்பத்துடன்சூரியனுக்கு மூன்றுமிடத்ததிபனுடனும் உறிய சுபபலப்படிக்கி கிரகயெண்களை யெடுத்துக்கொண்டு அவ்விராசி பெலத்துக்கிசைந்தபடி யெண்ணில் பெருக்கி அவ்விராசிக்கதிபன் யெண்ணில் கொடுக்க வந்தசேஷம் பிதுர் சகோதரமாகும் சுபர்கொடுத்த யெண்களாயின் பிதுரு சகோதிரர்கள் அதிக யோகவான்களாகியும் குடும்ப விர்த்தியையுடைவர்களாகியும் வாழ்வார்களென்றும் பாவராகின்

பிதுர்வம்ச விருத்தியின்றி இன்றியும் குடும்பக்ஷயமும் தரித்திரர்களாய் வாழ்வார்களென்று கூறப்படும்.

மேலே பெருக்கியதுகையுடன் குசன்றுகையும் சனி நின்ற இராசித் துகையுமொன்று சேர்த்து அவ்விராசி யெண்ணில் பெருக்கிக்கண்ட மொத்தத்துகையை கூ-ல் கழித்து நின்றமிச்சமும் திசையாயும் அதில் வந்த ஈவை ரு-ல் பெருக்கி கூ-ல் கழித்தமிச்சம் புக்திகளில் பிதுர் கருமமென்றுங் கூறப்படும் என்றவாறு.

சூரியன் பெலத்து மேஷம் சிம்மம் தனுசுவில் புதனைக்கூடினுங் குரு முதலியோர் வலுத்து கூடியல்லது நோக்கினும் பிதா பிரபல குடும்பமும் பெரிதாகிய கீர்த்திபெற்ற வம்சஸ்தனென்றும் புதன் சந்திரனையும் கூடி சனி பெலத்து துலாம் கடகம் தனுசு மகரம் கும்பம் மிவையிலிருக்கினும் குரு மாறிநிற்கினும் பிதா் சுசிருசிபக்திவித்துவானவன் யென்றும் சுக்கிரன் ஷை பாவருடன்வலுத்து நிற்கில் விவகாருதி பலவித்தையிலும் வல்லபனாகியும் பொருள் பிரபலத்துடையவனென்றும் புதன் நிற்கில் பண்டிதன் கணிதனாகியும் சனி இராகு முதலியோர் ஆகில் தாழ்குல ஹீனன்தரித்திரனாகினும் செல்வாக்கு செயமும் கேது குசனாகில் றுணத்தனு மிகுந்த துன்பமுடையோன் றேகியாகிப் பலவித கஷ்டமுடையவ னென்றுங் கொள்ளல் வேண்டும்.

ஷை கும்பம் மீனம் துலாத்தில் குரு சந்திரன் புதன் இவர்களில் அதிக மானோர் கூடிநிற்கின் அதிஞானி விரதஸ்தன் மிகவுமேலான உபதேசம் பெருவன் அதிகமேன்மையுடன் தேவதாபக்தியுடன் மேலான பதவி தர்மிஷ்டன் அஷ்டமாசித்தி முதலினையுமுடையவனாகினும் பாவர்கள் நோக்கினு மிருக்கினு மிகவுமேலான பதஸ்தனாகினும் இகசென்ம முடிவிலானென்றும் மேலோனாகி சற்வபிராணியாதார புருஷனாகியுங் இராசத்துவ அம்சமும்உண்டாகும் மிகவுமேலோனாய் வாழ்வன் பிதுர்வம்ச விற்தியாகினும்மத்தியிலும் அந்தியகாலத்திலும் முடிவு இன்றி விருத்தியற்றுக் குடும்பம் வாழுமென்றும் மத்தியகாலத்தில் மிகவுமேலான பிரபலத்துடன் யோகவானாகியும் அதிக பிரபல யோகவான்களாகியும் வாழ்வன் யென்றறியவேண்டியது பாவர்கள் இருக்கினும் நோக்கினும் பக்தி இல்லான் வேஷக்காரன் அதர்மன் தான்செய்வது அக்ருத்தியமாயினும் பிரரை நகைப்பன் கெருவியாவன்.

௧௦-வது கருமம் இராச்சிய பலன்.

குரு கேந்திரங்களிலும் அல்லது திரிகோணத்திலும் இருக்க சந்திரன் அல்லது சூரியன் புதன் சுக்கிரனைக்கூடி நிற்கிற் பிறந்தவன் சத்கருமத்தையும் மிகவுமேலான கர்மம் யாகயெக்ஞ முதலிய பிரபல செய்கைகளையும் கியாதியுடன் கிரமம் பூமி யாற்சிதமுஞ் செய்வன் இதில் சுக்கிரன் கூடி நிற்கின் குருவுஞ் சேர்ந்தாலும் பெலத்துனின்று மீனத்தில் சனி முதலிய பாவரிருக்கினும் டாம்பீகனாகி மிகவும் பக்திசத்கருமம்போல் காண்பிப்பன் அசத்கருமத்தையும் மிகவும் பூமிகிரமம் உடையவன் குருதனித்துப் பெலன் பெற்று பாபிகளுஞ் சுபர்களுமின்றி இருக்கில் அனேக கட்டிடம் பூமியும் மிகவுங் கீர்த்தியான முயற்சிகளையுஞ் செய்வன் சுபரும் பாபியுமாகிக்கலர்ந்து நிற்கில் அல்பபூமியும் கருமசிருத்தை யிருந்தாலும் அக்காலத்தில் செய்யனேரும் சுக்கிரன் சனி மீனத்திலாவது கும்பமிவைகளில் கேந்திரத்திலிருக்கில் இராசயோக சன்னியாசியாவன் குரு சந்திரன் கூடினாலும் இராச சன்னியாசியாகி மிகவுமேலானோனாகவும் சிரந்த பக்தியுடனும் ஞானார்த்தம் முதலாகிய அர்த யோகனாகி வாழப்படுவனென்றும் காண வேண்டியது.

பத்திலாவது குருவுக்கு பத்திலாவது சுபரே பெலத்துடனிருக்கினும் இராசயோகனாகிய சன்னியாசத்துக்குறிய ஆச்ரமஸ்தனாகியும் இராசயோக வானாகியும் சகல உபதேசசித்தி கருமானுஷ்டான சிருத்தையுடன் வாழ்வனென்றும் பாவர்களாகினும் சுபர்கள் நீசம் பகைபெற்று இருக்கில் கருமச்சிருத்தையின்றியும் குடிகாரனாகியும் சாதிப்ருஷ்டனாகியும் பலவித அபசார யெண்ணஸ்தனாகியும் வாழ்வனென்றும் விபசாரஸ்தனாவான் உச்ச சொக்ஷேத்திரம் பெற்ற குருவல்லது சுக்கிரன் தசமத்தினின்று சந்திரன் முதலிய சுபசம்மந்தமிருக்கில் மிகுந்த இராச்சியம் பூமி அதிகமான கிராமாதி பனாகியும் மண்டலாதிபனாகி வாழ்வன் அதாவது இம்மூன்று கிரகத்துடன் புதன் உச்சசொக்ஷேத்திரத்தில் பாவருடன் தன்னுடன் சேர்ந்தவர்களுக்குப் பகைவருடன் கூடினால் மண்டலாதிபதியாம் நான்கு பேரில் ௩-மேல் பெலத்து மீனம் கன்னிதனுவில் குரு அல்லது மதி சுக்கிரன் இவரிருக்கில் தேசாதிபனாகியும் ௨-பேர்பெலத்துமுன்போலிருக்கில் சில கண்ட ரதிபனாகியும் அரசருக்குள்ளடங்கியவனாகியும் புதன் முதலியோர் வலுத்து சனி முதலியபாவரைக் கூடினும் சுக்கிரன் குரு சந்திரன் கேந்திரத்தில் சொக்ஷேத்திர உச்சத்திலிருக்கில்

சில்கிராமாதிபனுகியும் வாழ்வனென்றும் இவர்களுடன் குசன் பாம்பு கூடி கன்னி மீனத்திலிருக்கினும் முன் பூமி இழந்தும் பின்னும் சிலநாளிருந்து உடன்னஷ்டமாகியிருக்குமென்றும் குரு கெட்டு ஸ்தானத்தில் சுபரிருந்து வலுக்கில் பிரபலநூதனபூமிமுதலான வைகளைச்சேர்பனென்றும் அதை சனிமுதலிய விரோதபாவர்கள்நோக்கினு மிருக்கினும் சம்பாதித்துடனே அழிந்து விடுமென்றுங் கண்டு கூறல்வேண்டும்.

இதில் புதன் சூரியன் சனியுடன் அல்லது இராகு முதலியோருடன் கூடிநிற்கினும் யேழாமிடமான தனுசு விலிருக்கினும் குரு பாவருடன்கூடி மகர முதலாகிய பாபிகள் வீட்டிலிருக்கினும் பிரந்தவனுக்கு சூரியன் கெடில் பிதுர்கரும பாத்தியஸ்தனுகா னென்றும், சந்திரன் இவ்விதம் கெட்டுப் பாவருடனிருக்கில் மாதுருகருமம் அடையானென்றுங் கண்டறிய வேண்டியது.

இவ்விதமாக நின்ற கோள்களில் குசன் அல்லது பாவருடன் மீனம் கன்னியிலும் குரு கெட்ட இடத்திலுமிருக்கின் பூமி முதலாகிய கிரகங்கிடையாதென்றும் இருந்தபோதிலுமிவனுக்கு அடையாதென்றுங் கூறப்படும் இதில் பாவர்களிருக்கினும் நோக்கினும் பூமி இருந்து கடன் முதலியவகையிலாழ்ந்து மிகவும் பல கஷ்டநஷ்டத்தை யடைவனென்றும் பலவித பூமியும் தோற்று விடுவான் சூதுமுதலிய அக்ருத்தியத் தொழில் செய்வன்.

சீவன பலன்.

குரு சூரியனுடன் பெலத்திருக்கில் மிகவும் பல இராச ஜீவன முண்டு புதன் கூடினும் வித்தையினுல் சீவனஞ்செய்வன் குசன் கூடில் பூமியார்சிதத்தால் சீவனம் செய்வன் குசன் பாபியாய்க் கூறல் களவுசண்டையால் சீவனமுண்டு சந்திரனுடன் கூடிநிற்கில் இராசசீவனமும் சத்காலக்ஷேபமும் உடையவன் சுக்கிரனைக்கூடின் தானேமன்னவனுகி வாழ்வன் பொன் பொருளுண்டு சனியாகில் இராசயோகனுகிவாழ்வன்.

இராகு கேதுவாகில் அடிமையாய் அலபனுகி வாழ்வனென்றறியவும் இரண்டுசுபர்கள் கூடிநிற்கில் அவ்வீடு மிகவுமேன்மையான பெலமுள்ள இடமாயிருக்கில் உச்சவீடு உச்சவீட்டுகெதிபனுடன் குரு கூடில் மிகவும் இராசனுகி சிம்மாசனபதியாவன் பாவர்கள் பார்க்கில் சிம்மாசனபதிக்குள் சிம்மாசனுதிபனுவன் மூன்று சுபர் கூடில் தேசாதிபனுகி வாழ்வன் ஷ மூன்று சுபருடன் சனியல்லது குசன் முதலியபாவர்களிருந்

தாலும் பார்த்தாலும் சில பூபதி அதிபனாய் அரிதனைப்போலொற்றவனு வான் பாவர்களே அவ்விடத்திலிருக்கில் அற்பபூமியதிபனாகி,வாழ்வன்.

ஐந்து பாவர் வாழில் தரித்திரனாகி விற்தி இல்லானாய் தனக்குறை வுடன் அசேதனனாவன் அடிமைக்குள்ளடிமை செய்வன் அவருடன் சுபர்வாழில் ஒருவனுக்குள்பட்டவனாகியும் அவன் கீழ் சிலபெயரை அதி காரஞ்செய்வன்னீடித்ததல்ல ச-ல் பாவருடன் நிற்கினும் குரு சிம்மம் விருச்சிகம் மகரம் மேஷம் விருஷபத்திலிருக்கினும் ஒருவனுக்குள்ளி ருந்து மனுஷனாவன் புதன் முதலிய வீட்டில் குருவிருக்கில் வியாபார ஸ்தனாகி சீவனஞ்செய்வன் பாபர்பார்க்கிலதிலும் பிரயோசன மின்றி அடி மையாவன் பாபிகளுங் கூடி நிற்கில் தொழிலில் அல்பவிற்தியுங் அனுசார தொழிலுமுயற்சியில அல்பனாகியும் வாழுவன் யென்றும்.

ரு-பாபிகள் இருக்கில் ஒருவனுக்குள்ளிருந்து சீவனமும் பூர்வார்ச் சித மின்றிப் பலவகைதுக்க மடைவன் சுபருங்கூடி பார்க்கனிற்கில சில பூர்வார்ச்சித மிருக்குஞ் சீவன பிரயோசனமின்றி அடிமையும் பலரிடஞ் சீவனஞ் செய்துவருவன் குருபாவராகில் சுபத்தொழில் அல்பமாகச் செய்து கஷ்டப்படுவன் சுபர்கூடில் மிகவும் லாபத்துடன் பூமி பிரபல முண்டாகும் ஒருசுபருடன் பாபிகள் இருக்கினும் ஒரு அசுபருடன் சுபர்களிருக்கினும் பூமி கிரகவாகன மிகவுள்ளவன் இராசாங்க மூலிய சீவனமுடையவனாவன் குரு நோக்கில் சுயமுயற்சியுடன் தன்னிடஞ்சில அடிமைவைத்து வேலைசெய்வன்.

லாபபலன்களும் விரயபலன்களுங் கூறுகின்றனவாம்.

குசன் பெலவானாகி மேஷம் மிதுனம் மகரம் மீனையில் குருமுத லிய சுபருடன் கேந்திரத்திலிருக்கினும் சுபர்களாகிய சுக்கிரனீங்கியவர் கள் மேஷத்திலிருக்கினும் பாவர்பார்க்காதிருக்கில் பொருள் மென்மேலும் லாபமுடையவனென்றும் பிரபல லாபமுண்டாகும் முன்சந்ததிவிருத்தி யென்றும் மேலாகிய விருத்திகளும் இதில் சுக்கிரன் சந்திரனிவரிருக்கில் மிகவுமேலான லாபமும் காரிய செயத்தையும் அடைவன்.

சுக்கிரன் மேஷத்திலிருக்கினும் அல்லது (க) (ரு) (கூ)-மிதுன கன்னி தனுசு மீனத்திலிருக்கினும் கும்பம் துலாத்திலிருக்கினும் பிதுர் சொத்தின்பேரில் அதிக விரயமானது ஸ்திரீசுகமூலமும் சத்விஷயமூல மாகவு மிகவுந்தன விரயமுண்டாகும், (௧௨)ல் சனிமுதலிய பாபிகளிருக் கில் கஷ்டமனதுஞ் சிலவுசெய்ய மனமில்லாதவனாகி லோபியாயும் வாழ் வன் இவன் தனம் கள்ளர்முதலிய அன்யதுஷ்கிருத்தியத்தில் சிலவாகும்

பார்க்கினுமவ்விதமேயாகும் சுக்கிரன் விருஷபம் விருச்சிகம் மகரம் இவை யிலிருக்கில் ஸ்திரீ டாம்பீசம் பிரயோசனமில்லாததாலும் விவாதத்தாலும் பொருளை விரயஞ்செய்து நஷ்டமடைவன் பாவர்களிவனுடன் கூடினும் பாவர்பார்க்கினும் மிவ்விதமேயாம் குரு ஷ்டி இடத்தில் பகைவருடன் இருக்கில் பகைவராலும் லாபமுயற்சிக்கி செய்யும் விஷயத்தாலும் பொன் பொருள் பூமியையிழந்து பரதேசகதியாய் அடைவன் சனி சூரியன் புதனிவரிருக்குமாகில் பிதுராகசிதமா துலாற்சிதங்கள் தேடிவந்தும் ஓடிவிற்று விரயஞ்செய்து பரதேசனுகிப் பல விவாதத்துக்குள் பட்டு துக்கத்தை யனுபவிப்பன் இதில் இவ் விட்டபர்களில் விதிப்படிக்கி பாவரைக்கூடினும் நோக்கினும் பகை. நீசம் பாவர் வீட்டினின்றாலும் விவாதத்துக்கும் றுணத்துக்கும், அக்ருத வியாபாரங்களையுஞ் செய்துப் பொருளிழப்பன் புதன்கூடினிற்கில் நல்ல வியாபார விவாதத்தினல் பொருள்களைத் தோற்பன் இதில் குசன் கேந்திரத்திரிகோணத்தில் பெலத்து இவ்விதப் பாவரிருக்கினும் குருமுதலிய சுபகோள்கள் சுபபெல இராசியில் கூடினும் நோக்கினும் முன் பொருள்களை யிழந்து அனேக இடங்களையெல்லாம் பார்த்து பார்த்துவிட்டு விவாதம் முதலான பொருள்விரயமாகிய பின்னவன் நல்லமுரைக் குமாரரால் பொருளைமீட்டுவன் பாபர்பெலத்துடன் கெடில் தரணமின்றிப் பொருளகளை இழந்து பரதேசவாசனுவன். சுபர் பெலத்து விருஷபத்தினின்றாலும் சுக்கிரன் பெலத்து சுபக்ஷேத்திரத்தில் குசன் தவிற மற்றவர் பார்க்கவல்லது கூடினும் சூரியன் கூடாமலிருக்கில் பரதேசங்களில் இராசஉத்தியோகனுய் அதிமேதாவியாவன் அவருடன்கூடிய குசன் கேதுவாகில் யிகவும் பகையுடன் விவாதத்துடன் பெருளையிழந்து தவித்து மிகவும்வருந்தி பலதொல்லையிலகப்பட்டு சிலவேமிஞ்சிக் கடனாளியாவான் பரதேசவாச தரித்திரனுவன் யென்றுறைக்கவேண்டும்.

லாபவிறய குணிதம்.

குசனுடனும் மேஷத்திலும் சந்திரன் குருவுடனும் கூடிய கிரக யெண்களை யொன்றுபடுத்தி அவ்வொவ்வொரு யெண்களைப்பெலாபெலன் படிக்கி இராசி யெண்ணிற் பெருககிக்கொண்டு மேஷத்தில் யார்சுபபெலவானே அல்லது குசனுடன் யெவன் சுபபெலவானே அவ்வெண்ணில் கொடுக்கக்கண்ட மிச்சம் லாபமும், சுக்கிரனுடனும் விருஷபத்திலும் உள்ள கிரகயெண்களை சுபாசுபபெலனபடிக்கி அவ்விராசியில் பெருக்கிய தொகையை அவ்விராசியான விருஷபத்தில் பெலமுற்றோரல்லது சுக்கிரனுடன் பெல முற்றோர் யெண்ணிற் கொடுக்கக்கண்ட மிச்சம் விரயமாகும்.

ஆகையால் லாபமதிகயெண்ணானால் லாபமதிகமும் விரயயெண்ணதிக மானால் விரயமதிகமும் லாபத்திற்கும் விரயத்திற்கும் உறியதுகைப்படி கணக்கும் லாபத்துக் கதிகவிரய கணக்கானால் கடனென்றும் கூறல் வேண்டும்.

சீவன உத்தியோகத்தில்வருந் தனம் பொன்களைப் பற்றிய கணிதங்களாவன.

குருவுடனும் சுக்கிரனுடனும் சனியுடனும் சந்திரனுடனும் மீனத்திலும் விருஷபத்திலும் கடகத்திலுங் கும்பத்திலும் உறிய கிரகத்துகையெண்குணிதங்களை யொன்றுபடுத்தி அந்தந்த இராசி குணிதத்தில் பெருக்கி வைத்து கைகொண்டு மீனத்திலுறிய கிரகபலயெண்ணிற்கொடுத்த மிச்சம் சீவன ஆரம்பத்தில் வந்த துகையுள்ள பொன் தனலாபம் மாத மொன்றிலென்றும், துலாத்திலும் கும்பத்திலும் மேஷத்திலும்உறியகிரக சுபாசுப பெலத்துக்குறிய பெண் துகைகளை வொன்றுபடுத்தி அவ்விராசி யெண்ணிற் பெருக்கி மொத்தமானகிரகம்உச்ச மதிகமானால்நான்கினாலும் ஆக்ஷி அதிகமானால் உ-னாலும் நட்பாகில் அதேதுகையையும் கடைசியில் சீவனம் விடும்போது தனலாபமென்றும் மாதமொன்றில் கிடைக்கும்லாபமாக அரியவும் முன்கூறிய யெண்ணுடன் சீவன ஆரம்பத்துக்குக்கூறிய பெருக்கிய துகையை ஒன்றுசேர்த்து பார்த்தல்வேண்டும்.

கடக லக்கித்தின் குணகுணம்.

தேகஞ் சிகப்பு சாமர்த்தியவான் தைரியமான பிடிவாதமனதுநடையிலுஞ் சஞ்சாரத்திலும் மிகப்பிரியன் வேசிஸ்திரீ அதிககெமன போகன் தானிய தனவிர்த்தியுள்ளவன் குருவுபதேச வாஞ்சையுள்ளவன் பிதாவிற்கிசையான் காணாதஇடத்தில் அடையாள மருவுள்ளவன்சிலநாள் கடன் முதலிய தரித்திரப்படுவன் ரு-கசு-உ௰-உரு, இந்த வயசு மாதம் நாளில் அபமிருத்து பயம் சுபர் திருஷ்டி லக்கினத்தைப் பார்க்கில் சாதகனுக்கு வாயுள் கூ௰ வயதென்றும் உத்தராயணம் மாசிமாதம் சுக்கிலபக்ஷ பஞ்சமி புதவாரம் மிருகசீரநக்ஷத்திரம் மத்தியான வேளையில் நிரியாணமென்றும் தெய்வீக பரமபதனைக் கூறப்படுமென்று மறியவேண்டியது.

கடகலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு குசன் குரு யோகக்காரர்கள் யென்றும் இதில் குரு பாபக்ஷேத்திரம் கூ-அ-ல் வாழில் மிகுந்தகொடிய

தான பாபியாகிப் பொருளைத் தோற்கடிப்பன் குசன் பிரபல யோகவானு கியும் சந்திரன் சனி அதிகச்சுபர்களென்றும் சனியோர்பாக மாரகனென்றும் புதன் மாரகன் பாபியென்றும் சுக்கிரன் பாபியென்றும் இராகுகேது இயல்புக்குறிய யோகக்காரர்களென்றும் கூறப்பட்டிருக்கிறது.

மாரகதிசை.

சனி இராகு சூரியன் கொல்பவர்கள் ஓர்சாற்பால் சனியுடன்கூடியவர்களில் சுக்கிரனும் புதனுமாயிற் கொல்பவர்களென்றும் இவ்வித திசையைந்தில் குரு சுக்கிரன் கேது இராகு சனி இவ்வித புத்திகளும் சூரிய புத்தியுங் கொல்வரென்றுங் கூறப்படும்.

இந்த திசாபுக்தி காலங்களில் சாதகத்துக்கு தேகாரிஷ்டங் கொடுக்கும் சனிதிசையில் குரு சுக்கிரன் புதன் இவ்வித புத்திகளும்,

புதன்திசையில் கேது இராகு சனியும்,
சுக்கிரன்றிசையில் சனி கேது இராகுவும்,
சூரியன்றிசையில் இராகு குரு கேதுவும்,
இராகுதிசையில் குரு கேது சுக்கிரன்,

இவ்விதபுக்திகளும் மாரகவதிகாரமும் தேகாரிஷ்டரோக கெண்டதுன்பமும் பொருள் சேதமும் பலவகை கஷ்டநஷ்டரெணமும் தேசபிருஷ்டம் குடும்ப துக்கசோகம் பலவகை விசாரங் கொடிய துன்பங்கள் ரெணங்களும் பலவித வருத்தமும் இவ்வித பெலன்களாகிய கெட்ட பலன்களைக் கொடுக்குமென்றும் அறியப்படும்.

சனிதிசையில் முன்பாகமும் சந்திரன் தனது புக்தியும்.
சுக்கிரதிசையில் சந்திரன் புதன் குசனிலும்.
சந்திரதிசையில் குரு புகர் சனி புக்தியிலும்.
குசன்திசை குரு புதன் சனி சந்திரன் புக்திகளிலும்.
குருதிசையோர்பாகம் சந்திரன் குசன் இராகு சனியிலும்.
சனி பெலத்தால் இராகுதிசையில் சுக்கிரன் குரு புதபுக்தியிலும்.
கேது திசையில் குரு குசன் சந்திரன் இவ்வித புக்திகளிலும்.

அதிகப்பிரபல யோகமும் கிரகவாகன பூமி க்ஷேத்திரலாபமும் ராஜானுக்கிரக பலிதம் விவாதாதி சத்துருசெயம் மேன்பாடாகிகிரக வாகன பூமி கன்றுகாலிகள் புத்திர களத்திரலாப சுக சௌக்கியம் இவ்விதமான யோக திசைகளாக கொள்ளவேண்டியது.

மாதுரு அரிஷ்டம்.

சூரியன் றிசை சுக்கிரன் சனியிலும் புதன் றிசை கேதுசுக்கிரன் சந்திரனிலும்.

கேதுதிசை தனது இராகு சனியிலும் சுக்கிரன் தனது இராகு சனியிலும் சூரியன் றிசை குசன் புதனிலும் இராகுதிசையில் சுக்கிரன் குரு சனியிலும் குரு திசையில் தனது புதன் சுக்கிரனிலும் மாதுரு கர்ம சூதகம் மாதுருவம்ச நஷ்டம் பலவகைத் துக்கசோக பலன்கள் கொடுக்கப்படு மென்றும் அறியவும்.

பிதுருவரிஷ்டம்.

குரு திசை புதன் ரவி இராகுவிலும், இராகுதிசை தனுசு சனி சுக்கிரனிலும், சனி திசையில் தனது சுக்கிரன் ரவியிலும் இராகுவிலும், புதன் றிசையில் சுக்கிரன் இராகுவிலும் கேதுதிசை சுக்கிரன் புதனிலும் சூரியன் திசை மதி குரு புதனிலும் சுக்கிரதிசை தனது ரவி இராகு குருவிலும் மாதுரு வுக்கு கற்பம் பிதுருவகைச் சந்ததி யழிவு பலவகை துக்க சோகமனக்கவலை யுண்டாகும்.

சகோதிரவரிஷ்டம்.

சனி திசை இராகு குசன் சுக்கிரனிலும் புதன் திசை சுக்கிரன் ரவி இராகு விலும் இராகு திசை தனது சனி சுக்கிரனிலும் குசனிலும் சகோதிர வரிஷ்ட சூதக முண்டாகு மென்றறியவேண்டியது.

களத்திரலாபமும் அரிஷ்டமும்.

குரு திசை சந்திரன் திசையில் குரு சுக்கிரன் சந்திரனிலும் சனியிலுஞ் சூரியன் திசையிலும் சுக்கிரன் குரு சந்திரனிலும் குசன் திசை குரு சந்திரன் சுக்கிரனிலும் இராகு திசை புதன் திசையில் குரு சனி சந்திரன் சுக்கிரனிலும் விவாக சுபசோபனமும் இத்திசைகளிலும் கேதுவிலும் சூரியன் திசையிலும் சுக்கிரன் இராகு குரு வெவ்வித புக்தியில் களத்திர வியோகமும் அரிஷ்டம் களத்திரவகை பாதைகளையுங் கொடுக்கப்படு மென்றறியவேண்டியது.

புத்திரலாபமும் புத்திரவரிஷ்டமும் கூறப்படுகின்றது.

குசன்திசையில் குரு சுக்கிரன் சந்திரனிலும் இராகு குருதிசையில் சூரியன் சந்திரன் ராகு குரு புக்திகளிலும் சனிதிசையில்தனது

சுக்கிரன் சந்திரனிலும் ராகுவும் சுக்கிரன்திசையில் சனி சந்திரன் குரு புக்திகளிலும் புத்திரலாபமும் சுகபலன் நடக்கும் மேற்கண்ட திசைகளில் இராகு சூரியன் சனி சுக்கிரன் இந்தபுக்தி காலங்களில் புத்திராரிஷ்ட தோஷமும் துக்கமும் இவ்வித பலன்கள் புத்திரர்களுக்கு அரிஷ்டபலன் நடக்கும்.

முதலாவது ஆயுர்பாவ பலன்கள் அறியவும்.

சனி சொக்ஷேத்திர கேந்திரத்திலும் குரு சுக்ஷேத்திரமல்லது திரிகோணத்திலும் குசனும் பெலத்து நிற்கினும் சந்திரன் குரு கேந்திரமல்லது திரிகோணத்தில் இருக்கில் சாதகனுக்கு ஆயுர்பாவ வருஷம் கூ0- யென்றறிய வேண்டியதென்றும் சனி உச்சத்திலும் சூரியன் சுக்ஷேத்திரத்திலும் குரு லக்னத்துக்கு எ-டு-கூ-க-ல் இருக்கில் சாதகனுக்கு ஆயுர்பாவ வருஷம் அச- யென்றும் சந்திரனுக்கு குரு கேந்திர கோணத்திற் சேர்ந்து சனி ஆயுளாகிய எட்டு மூன்றில் சுக்ஷேத்திர உச்சாதிபனுடன் சூரியனல்லது கூடி சிலபாபிகள் சேரினும் குரு முதலிய சுபக்கோள் நோக்கினும் வருஷம் அச- வறையென்றும் சனியுடன் குரு சேர்ந்து கேந்திரத் திரிகோணமல்லது சுக்ஷேத்திர உச்சத்திலிருக்கினும் சுக்கிரன் சந்திரன்முதலியோரான சுபரைக்கூடினுஞ் சர இராசியில் வாழினும் சனி சுக்ஷேத்திர உச்சதுடன் இருக்கினும் சாதகனுக்கு ஆயுல் வருஷம் கூகூ-வறை யென்றும் குரு முதலியோர் நட்பு வீட்டிலாவது தனது வீட்டிலாவது சனி கேந்திர கோணத்தில் சுபபெலமின்றி இருந்து சுபரைக் கூடினும் சந்திரன் சர இராசியிலிருக்கினும் வருஷம் கூகூ- யென்றும் சனி சந்திரன் முதலியோர் பெலத்துடன் இருந்து சுபர் வீட்டில் பாவரைக் கூடினும் கும்பம் மகரம் மேஷம் மீனம் கடகமிவையில் பாவர் யிருக்கினும் வருஷம் கூக- வறை தீர்கமென்றும் குரு சனி அல்லது சனி கேந்திரகோணத்திலாவது புதன் வீட்டிலாவது இருந்து சந்திரன் பெலத்துடன் கேந்திரகோணத்திலிருக்கில் ஹ0டுச- வறையென்றும் சனி ங-கூ-அ-கக-கஉ-லும் பாவரைக்கூடி லக்னம் உ-கஉ-ல் பாவரும் சந்திரன் கேந்திர திரிகோணத்தில் பெலத்து பாவருடன் கூடினுலுங் தனித்தாலும் குறைமறைவாகியும் பெலமற்று நின்றாலும் வருஷம் சச-க்குள்ளென்றும்.

சந்திரன் ஸ்திர விராசியில் நின்று சனி முதலிய பாம்பு குசனைக் கூடினும் பெலமற்ற இடத்தில் சந்திரனிருக்கினும் சனி கேந்திர

கோணத்தில் வலுத்து நிற்கில் வருஷம் ௬௩-க்குள் ஆயுளுங் குசன் அல்லது சனி முதலிய சூரியன் சந்திரனுடன் பகை நீச இடத்தி லுங் குரு சனி சிம்மம் துலாம் தனுசு கும்பம் மேஷம் மிதுனத்திலி ருக்கில் வருஷம் ௨௪-வறை யென்றும் சந்திரன் விருச்சிகம் தனுசு சிம்மம் மேஷம் மிதுன மிவையில் சனி அல்லது குசன் முதலிய பா வருடனும் லக்கினத்திலாவது சிம்மம் மிதுனத்திலாவது குரு முத லாகிய சுபரின்றியுமிருக்கில் வருஷம் ௨௪-யென்றும் சனி பெலக்கி னும் கேந்திரத்தில் சனியும் குசனுடன் சூரியன் முதலியோரிருக் கில் வருஷம் ௬௧-க்குள் ளென்றும் மகர முதலிய இடத்திலும் கட கம் மீனமிவையில் சந்திரனுடன் சுபரிருக்கினும் நோக்கினும் மிக வதிகமானல் வருஷம் ௨௪-யென்றும் குரு முதலியோர் கெட்டும் சனி வலுத்தும் சந்திரன் பகை நீச இடத்தில் பாவரைக்கூடி இருக் கின் வருஷம் ௧௮-க்குள் வரையும் சந்திரனுக்கு முன் பின்னிலும் கடகத்துக்குமுன் பின்னிலும் சனி இராகு குசன் முதலிய பாவரிரு க்கின் வருஷம் ௧௨-க்குள் யென்றும் சந்திரன் மறைவுற்று பகையு டன் சனி முதலிய கிரகம் கூடினும் குரு பெலமற்ற இடத்திலிருக்கி னும் சூரியன் குசன் இராகு முதலிய பாவர்கள் கடகம் கும்பம் தனுசு இவையிலிருக்கில் வருஷம் ௭-க்குள்ளாகவே பாலாரிஷ்ட மென்றும் குரு சந்திரன் முதலியர்கள் மிகவும் பெலன் கெட்டு மிக கொடிய குசன் சனி முதலானோர் கூடி சந்திரனுடனாவது லக்கினத் திலாவது சிம்மம் மிதுனம் சந்திரனுக்கு ௨-௧௨-லாவது இருக்கின் தாயுடன் சிசு மாரகமென்றும் நீச முதலிய ஸ்தானத்திலிருக்கில் செனனத்துடன் துக்கமான மரண துக்கங்களையும் இவ்வித பல னுகும்.

மற்றோர்விதமாய் ஆயுள்பாவங் கணிக்கின்றன.

சந்திரனும் சனியும் சரத்திலாயும் குரு கடகம் சிம்மம் மீனம் இவையில் சுக்கிரன் கேந்திரத்திலும் பாவர்கள் லக்கினத்திலாவது அதிபதியுடனில்லாமல் ௨-௧௨ - இந்த இடத்திலிருக்கில் வருஷம் ௧௨0-வறை ஆயுள் என்றும் அவை சாந்திரமானரீதியாயும் இவ்வித மிருந்து சுக்கிரன் குரு இவர்கள் சூரியன் குசனுடன் சேருமல் சிம் மம் கடகம் துலாம் மீனம் மேஷம் இவையிலிருக்கில் சாதகத்துக்கு வருஷம் ௱-யென்றும் சந்திரன் சனி உபயம் உபயம் ஸ்திரம் ஸ்திர மாயினும் குரு சுக்கிரன் முதலியோர் கேந்திர கோணத்திலிருக்கின் பாவர் பார்க்காமலிருக்சில் வருஷம் ௬௦-யென்றும் இதில் சில அசு

பர் கூடின் பெலமற்று இருக்கில் வருஷம் அச-யென்றும் சரம் ஸ்திரமாகி கேந்திர கோணத்திலும் குருமுதலிய சுபக்கோள்கள் தனுசு கடகம் மீனம் கும்பம் மேஷம் துலாமிவையிலிருக்கில் சனி பெலத்துட னிற்கின் வருஷம் எடு-யென்றும் குரு முதலிய சுபக்கோள்கள் கடகம் சிம்மம் கன்னி விருச்சிகம் மகரம் விருஷபம் மிதுனத்திலும் பாவருடன் கூடினுலுங் குரு சுக்கிரன் கேந்திரகோணத்திலிருந்து சந்திரன் பெலத்துடன் விருஷபம் கடகம் துலாம் மகரம் இவையிவிருக்கினும் குரு கேந்திரத்தில் நின்றுலும் வருஷம் எஉ-யென்றும் குரு சுக்கிரன் முதலியோர் முன்னிருந்த இடத்தில் குசன் இராகுவைச் சேர்ந்திருந்து சந்திரன் சனி உபயம் சரத்தினின்றுலும் வருஷம் கூகூ-வரைடும் சந்திரனுஞ் சனியும் ஸ்திரமுபயமாகி கேந்திர கோணத்தில் குரு சுக்கிரன் முதலியோரிருக்கின் சாதகனுக்கு வருஷம் கூஉ-யென்றும்.

பாவர் சேர்ந்தாவது தனுசு மகரம் மேஷம் மிதுனம் சிம்மம் கன்னியில் சுபருடன் கூடிய சனி இராகு குசனிவர்கள் நின்றுலும் ஒருவர் கூடினுலும் வருஷம் நிச-க்குள் ளென்றும் சந்திரன் சனி கடகம் துலாம் தனுசு கும்பம் விருஷபம் இவையிலும் குரு சுக்கிரன் குசன் துலாம் மகரம் மேஷம் விருச்சிகம் மீனத்திலிருக்கினும் பாவர் கூடினும் ௵ சஅ-க்குள் ளென்றும். சிம்மம் கன்னி விருச்சிகம் மகரம் மீனம் மேஷ மிதுனம் இவையில் குரு சுக்கிரர்கள் பாவருடன் நின்றுலும் ௵ ச0-க்குள்ளென்றும் குரு சுக்கிரன் பெலமற்றும் சந்திரனும் அவ்விதமே இருந்து பாவர்கள் வலுத்தும் சனி கேந்திரகோண உச்ச ஆக்ஷியில் இருக்கில் ௵ நுகஉ-க்குள்ளென்றும் அறியவேண்டியது.

சிம்மம் மிதுன இரண்டிலும் சனி முதலிய பாவரிருக்க குரு நோக்கமின்றி சந்திரன் பெலமற்ற சிம்மம் மிதுனம் விருச்சிகம் கும்பம் இவைகளிலிருக்கினும் பாவர்கள் பார்க்கவல்லது கூடினிற்கினும் சனி ஷெ இராசியிலாவது கும்பம் மேஷம் தனுசுவிலாவது பாவரை சூரியனைக்கூடி இருக்கில் குருமுதலிய சுபர்கள் சிம்மம் கன்னி மகரம் இவைகளிலிருக்கின் ௵ உக-க்குள் மரணமென்றும் குசன் பாம்பு இவர்கள் கடகம் சிம்மம்கும்பத்திலாவது சந்திரன் கூடினின்றுலும் குரு நோக்கினும் ௵ ககூ-க்குள் மரணமென்றும் கடகத்தில் அல்லது கன்னியில் குசனுடன் ஓர் சுபர்கூடி பாவரைக் கலந்து கூடினும் சிம்மம் மிதுனம் இவையில் பாவரிருந்து கடகத்தில்

சூரியனும் சனி முதலியோர் கூடினாலும் பார்த்தாலும் சந்திரன் அபரபக்ஷனாகி பாபிகளைக்கூடி விருச்சிகம் சிம்மம் மேஷம் மிதுனம் தனுசு இவைகளில் நின்றும் குருமுதலிய சுபக்கோள் பாராமலிருக்கில் பாலாரிஷ்டமான ஆறு அ-க்குள்ளயே மரணமாவன் தாயுடன் போய்விடுவனென்றும் குருசுக்கிரன் நீசமல்லது தனுசுகும்பத்திலிருக்கில்பிறந்தவன் உடனே மரணமாவனென்றுகண்டறியவேண்டியது

ஆயுர்பாவகணிதத்தின் பாவமும் திசாபுத்திகளுங் கூறப்படுகின்றனவாம்.

சனியுடனுங் கும்பத்திலும் புதனுடனுஞ் சந்திரனுடனும் லக்னத்திலும், குருவுடனும் சனிக்கு யெட்டா மிராசியில் நிற்கும்கிரகம் இராசிகளைப் பெலாபெலன்படிக்கி யெண்களை இராசியெண்ணில் பெருக்கி ஒன்றாகச் சேர்த்ததுகையை உக்கிரமதிகமானால் (௱உ௰)லும் ஆக்ஷியானால் (௱)லும் நட்பாகில் (எஉ)லும் பகைபாகில் (௬அ)லும் நீசமாகில் (உ௬)லும் கொடுத்துவந்தமிச்சம் ஆயுள்வருடமென்றும், மேற்பெருக்கிய துகையை (௬)ல் கழித்த மிச்சம் திசைபாகியும் வந்த ஈவை ௫-ல் பெருக்கி (௬)ல் கழித்த மிச்சம் புக்தியென்றுங் கண்டறிந்தவை மாரகதிசாபுத்தி யென்றும் இவை (௫)ல் பெருக்கி (௬)ல் கழித்த மிச்சம் அந்திரமென்றுங் கண்டறிந்த திசாபுத்தி அந்திரத்தில் மாரகமென்றும் அறியவேண்டியது.

உ-வது தனகுடும்ப வாக்குகளின் பாவபலன்களாவன.

சூரியன் சிம்மங் கடகம் கன்னி தனுசு மிதுனம் மேஷமிவையில் புதனுடன்கூடிச் சுபர்நோக்கினும் சுபர் சேரினும் குரு பெலவானாகியிருக்கின் சாதகன் குடும்பம் மிகுந்த பிரபலயோகமும் தனவிருத்தி பொக்கப் பொருள் உடையவர்களாகியும் அதிக கீர்த்திபெற்றோனாகி வாழப்படுவன் வாக்கு மிருது பாஷியாய் மிகுந்த யுக்தி புத்தியுடையவனாகி மேலான பிரபலமுந் தனார்சிதமும் இராசவல்லபனாகி வாழப்படுமென்றும் மேற்சொல்லிய சூரியன் முதலானவர்கள் உடன் சனி முதலிய பாவரிருக்கின் குடும்பமற்று புத்திரர்முதலிய குடும்பமின்றித் தவிப்பனென்றும் குருசுக்கிரன் முதலியோர் சேர்ந்தாலும் பார்த்தாலும் பிரபல குடும்பதனலாபயோகனாய் வாழினும் குடும்ப சுயவிருத்தி யடைப்பானென்றும் சனிமாத்திரம் மல்லது குளிகன் கூடினும் கன்னி சிம்மம் மேஷம் மிதுனத்தினிற்கின் வாக்குரை தாமதவார்த்தை உளருதல் திக்கு வாக்கு முதலியவனாய் வாழ்வன் என்றும் இவருடன் புதன் சுக்ஷேத்திரங் உச்சமுதலாகிய பெலன்பேரில் சவுமியவாக்கு அன்பு கல்விவிருத்தி இராசயோகனவன் யென்றும் மிகவு

மென்ஞான தபோசிரேஷ்டனுகியும் வாழப்படும்மற்றவிராசியில் குரு சுபர் கூடினும் பதன் கூடினும் கூடியகிரகம் குருவாகில் தனுசு மீனத்திலும் சுக்கிரனுகில் கடகத்திலும் புதனுகில் கன்னி மிதுனத்திலும் சூரியனைக் கூடி நிற்கின் ராசபூசிதனுகி பலபேர்க்கு வதிகாரியாய் ஆளடிமையும் வாக்கினுல் மிகுந்த இராசயோக முண்டாகும் இவைகளில் சூரியனுடன்சுபரே பெலமின்றி கூடாமல் சனி பாம்பு புதன் முதலியோர் குசன் இவறைக் கூடிநிற்கினும் சிம்மத்தில் சனிமுதலிய பாவரிருக்கின் பொய் சொல்வன் தரித்திரன் பொருளை இழப்பன் கன்னி மிதுனம் மீனத்தில் சனியாவது பாம்பு ஆவது சூரியன் புதனுடன் கூடினுகில் ரோணஸ்தன் தனமதிசமாய்வரினுங் கடனுள்ளவன் தருமியாகி வழங்குவன் குடும்பவிருத்தியில் லாமலும் கஷ்டத்தை யடைவன் சுபர்நோக்கினும் கூடியிருந்தாலும் சாதகனுக்கு சமமான குடும்பவிருத்தியும் உறியவனுவான்.

துலாம் விருச்சிகம் மகரம் கும்பம் மீனம் விருஷபம் யிவையில்சூரியனின்ருலும் புதனுடன் கூடினும் சனிமுதலிய பாபக்கோள்கள் நோக்கினுலுங் கூடினுலும் குடும்பவிருத்தியின்றி தரித்திரனுகியுமிகுந்த பொருள்களை இழந்தும் ருணக்ருஸ்தனுகி மிகவுந் துக்கத்தடைபவனென்றும், மகரம் விருஷபம் மீனம் துலாம் இவையில் நிற்கில் முன்ருணக்ரஸ்தம் குடும்ப விருத்தியின்றியும் பலதுன்பத்திலாழ்வன் சூரியன்வீட்டிலாவது இவர்களுடனேயாவது சந்திரன் குருவிருக்கில் தோஷம் நீங்கிவா பலிதமும் பின்ருரவகையால் குடும்பவிருத்திகளையும் ருணவிருத்தியும் பொருளையிழந்தும் பின்தீர்ந்து கிரகமுதலியதாவது நிற்கும் சஞ்சலமும் பெரிய பிணிகளுந்தேகத்தில் சாடித்தே மிகவும் சரீரக்ருஷனுகி வாழ்வன் நேத்திராரிஷ்டம் சுல்பம் பீடிக்கும்.

பாவருஞ் சுபருங்கலர்ந்து நிற்கில் சிலநாள் ருணஸ்தனுகிப் பின் சுகத்துடன் வாழ்வனென்றும் மானியாகியும் அடைவனென்றும் கூறப்படும் யென்றவாறு.

தனத்தின் கணிதங் கணிக்கின்ற வகைகள்.

குருவுடனும் சிம்மத்திலும் சூரியனுடனும் குருவுக்கு இரண்டாமிடத்திலும் அவ்வதிபனுடனுங் கூடிய கிரகயெண்களை அந்த ராசியிற் பெருக்கிய துகையை யெடுத்துகொண்டு ஐவகைப் பெலன்படிக்கி உச்சகிரகங் கொடுத்ததானுல் (௨) தடவை பெருக்கியும் ஆக்ஷிக்கிரம் அதிகமானுல் ஓர் தடவை சமத்துகை பெருக்கியும் நட்பானுல் அதேதுகையையும் போட்டு தன விருத்தி கணிதம் அந்தந்த திசாபுக்திக்கி யேற்றப்படி கூறவும்.

குரு சு-அ-ல் 12-ல் இருக்கில் அவன் கணக்கை அவ்விராசியின் கணிதத்தில் பெருக்கியும் சனியுடனும் இரெண்டில் அல்லது இரண்டாதிபனுகிய சூரியனுடன் கூடி கிரக யெண்ணை அவ்விராசி யெண்ணிற் பெருக்கி மொத்தங்கூட்டி அத்துகையில் உச்சகிரகங்கொடுத்ததனுல் இரண்டுதடவை சமத்துகையால் பெருக்கியும் ஆக்ஷியானுல் சமத்துகைபோட்டு ஒரேதடவை பெருக்கியும் நட்புஆனுல் அதேகிரக யெண்ணில் பெருக்கியும் நீசசம்பகையானுல் பெருக்கதேவையில்லை அத்துகைகண்டவைகள் எவ்வளவோ அவ்வளவுபொன் கடனுள்ளவனென்றும்,குருசந்திரன் முதலியசுபர்கள் வலுத்துநிற்கில் அந்தியகாலத்தில் கடனிருதென்றும் சனிமுதலியோர் இருந்தாலும் பார்த்தாலுங் கடனுள்ளவனென்றும் சுபருடன் சனிகூடிநிற்கில் அந்தியகாலத்தில் கடனில்லாதென்றும்,சூரியன்முதலிய பகையோரைச் சனி கூடிநிற்கில் அந்தியகாலத்தில் அல்பகடனும் அதிகதிரவிய ஸ்தனுக வாழ்வானென்றுங் கண்டுசொல்லவும்.

நேத்திரபலன்.

சூரியன் சிம்மம் துலாம் கும்பம் மேஷமிவையிலாவது மிதுனத்திலாவது நின்று புதனைக்கூடி சுக்கிரன் கூடவல்லது பெலனற்று மேற்கூறிய இராசியில் நிற்கினும் சனி முதலிய இராகுவைக் கூடினும் நேத்திரம்போம் சிம்மத்தில் க்ஷீணசந்திரனும் மேற்கூறிய இடத்தில் சூரியனிருந்து சனி முதலியோர் பார்த்தாலுமிருந்தாலும் மத்தியகாலம் விருத்தகாலத்தில் கண்மறையும் அல்லது அரிஷ்டிக்கும் பிதாவுக்குமவ்விதியே நேத்திரம் போமென்றும் குசனைக்கூடி நிற்கின் ரெக்தம் மேகநீர் விறணநோயுண்டாகுமென்றும் கேதுவைக்கூடினுமவ்விதியே சுக்கிரனை மாத்திருங் கூடின் நேத்திரத்தில் வெள்ளைபடரும் நோயுண்டாகுமென்றும் இதில் குருமுதலிய சுபரும் சுக்கிலபக்ஷ சந்திரனும் இருந்தாலும் க்ஷீணசந்திரனைக் குருமுதலிய சுபக்கோள் பார்க்கின் நேத்திரம் மறைவுபோலும் புகைச்சல்முதலிய உபாதிகளைக்கொடுத்து உடனுக்குடன் னிவர்த்தியாகுமென்றும் பலவகைதுக்க சோகங்களையுங் கொடுக்கு மென்றும் அறியவேண்டியது.

ஷெ ஸ்தானஸ்கள் தவிற மற்ற இடத்தில் பாவருடன் சூரியன் சுக்கிரன் கூடி நிற்கின் அல்பநேத்திர நோய்கண்டு நீங்கும் சுபர்களாகிய குரு சந்திரன் முதலியோரிருக்கினும் நோக்கினும் பல நோயும் நீங்கி நேத்திர பீடையின்றியும் விசேஷ நேத்திர சுகத்துடன் வாழ்வன் யென்றும் அறியவேண்டியது.

மேற்கூடியவர்களின் திசாபுக்திகாலத்தில் நேத்திர நோயுண்டாகு மென்றுங் கருத்துடன் யூகித்துக் கூறல்வேண்டுமென்றறிய வேண்டியது.

௩-வது சகோதிரபலன்களின் விவரங்களாவன.

புதன் சுக்ஷேத்திர உச்சனுகிச் சனிமுதலிய பாருவடன் கதிருங் கூடி நிற்கினும் குசன் கூடினும் அல்லது இவர்கோணமாகிய மகரம் விருஷபத்திலிருக்கின் பிரந்த சாதகனுக்கு சகோதிரம் இரெண்டுண்டு சனி கூடினும் நோக்கினும் துலாத்தில் புதன் ரவி நிற்கினும் குசன் சரவிராசிகளிலேரினும் சனிமுதலியோரைக் கூடினும் குசனுக்கு ௰-கூ-ல் மூன்றில் சனி இருக்கினும் ஓரேசகோதிரனிருந்தும் குடும்பவிருத்தியுடனிருந்து மிரந்துவிடுவன் யென்றும் புதன் உச்ச சொக்ஷேத்திரத்துடன் குரு சந்திரகேந்திரங்களிலிருக்கினும் பிரந்து உடன் சகோதிரன் அதியோகனுயும் பிறபலகீர்த்தியுடனும் ராசயோகனுகவாழ்ந்து மரணத்தடைவனென்றும் அதாவதுசாதகனுக்கு முன்னமே மரணமும் பலதுக்கங்களையுங் கொடுக்கப்படுமென்றும் அறியவேண்டியது.

புதன் சிம்மம் கன்னி விருச்சிகம் கும்பம் மேஷம் மிதுனமிவையில் சூரியன் முதலிய கோளுடன் சுபர் பாற்க நிற்கினும் கூடினும் உடன் சகோதிர விருத்திகளும் அதிகயோகமும் பிறபலமும் மற்றய கடகம் துலாம் மகரம் தனுசுவிலிருக்கில் சகோதிரமிருந்தாலும் யோகசமனுகவு மிரெண்டு சகோதிரமென்றும் சாதகனுடன் அறியவேண்டியது இவ்வித ஸ்தானங்ளிலும் சிம்ம கன்னி விருச்சிகம் கும்பம் மேஷமிவையில் புதனிருந்து குருமுதலிய குசனைக்கூடி நின்றாலும் பாற்தாலும் பூர்வபக்ஷ சந்திரன் சூரியனுக இருந்தாலும் புருஷசந்ததி யதிகமென்றும்.

சுக்கிரன் கிருஷ்ணபக்ஷ சந்திரன் கன்னி விருஷபம் கடகம் விருச்சிகம் மகரம் மீனம் இதிலிருந்த சனியாகி புதனைக் கூடினாலும் அல்லது குசனைக்கூடினாலும் சகோதிரங்கள் பெண்ணென்றும் ராகு கேதுவுமப்படியே சொல்லவேண்டியது. மற்ற மிதுனம் சிம்மம் தனுசு துலாம் கும்பமாகில் சனிராகு முதலியோருடன் புதன் அல்லது குசனிவர்கள் பெலத்துனிற்கில் சகோதிரம் புருஷசந்ததியென்றும் மேஷம் விருச்சிகம் விருஷப மிவையிலும் மகரம் தனுசு மிதுனத்திலும் புதன் அல்லது குசனுடன் கடகத்திலும் பாம்பு முதலிய சனிகூடிற் சகோதிரமில்லை யென்றும் சூரியன் புதன் கூடி துலாம் மேஷம் மிதுனம் சிங்கத்திலிருக்கில் பெண் அல்பம் புருஷனுடன் சகோதிரவிர்த்தியு முண்டென்றும் இதில் நீசர்முதலிய பாவர்கூடில் செனித்த உடன் இறக்குமென்றும்

கடைக்காலத்தில் சகோதிரங்கிடையாதென்றும் சனிமுதலியோர் குசன் இவர்கள் நோக்கினும் இருக்கினும் சகோதிரவிர்த்தியடையாதென்றும் கடைக்காலம் சகோதிரம் மிராதென்றும் பெண்ணாகினும் பலதுக்கத் துடன் சந்ததிகுரையல்லது பரதுர் தோஷமுண்டாகுமென்றுங் கூறப்படு மென்றறியவும். விருஷபம்மிதுனம்கடகம் கன்னிவிருச்சிகம் கும்பம் இவையில் சூரியனுடனாவது அல்லது பாம்பு முதலிய கோளுடன் குசன் இவர்களுடன் புதனிருந்தும் பலபாவர சாஸ்நிபாகக் கூடி நிற்கினும்பெல மற்று சுபர்பகராதிருக்கில் சகோதிரமே இல்லை கடைக்காலத்துக்கு இல்லை யென்றும் சகோதிரங்கள் குடும்பவிர்த்தி இன்றி பலவகை கஷ்டநஷ்ட மும் அடைவன் சகோதிரம் அந்தியகாலத்திற்கிராது பெண்ணுண்டு குடும்ப தோஷியாக வாழ்வனென்றும் சுபரொருவர்கள் நோக்கமல்லது கூடிநிற்கில் சகோதிரன் ஒருவனே விருத்தியல்லாது, பெண் அதிகமும் சுக்கிரன் சந்திரன் முதலியோர் கூடியல்லது நிற்க நோக்கின் பெண் ணென்றே சகோதிரமென்றும்.

புதனுடனுங் குசனுடனுஞ் சுபர்வாழில் புருஷனை சகோதிரமும் பெண் சகோதிரமும் பிரபலத்துடன் விர்த்தியுண்டென்றும் குசன் சனி பாம்பு முதலியோருடன் புதனாவது கன்னி இடபத்திலிருக்கில் பிரந்த சாதகன் சகோதிர மின்றியும் சகோதிரஞ் செனிக்கினு மரணமடையு மென்றும் மேஷம் சிம்மம் துலாம் மகரம் தனுசுமீனம் இவையிலிருக்கும் புதன் கூட சூரியன் குசன் இராகு சனி இவர் இருக்கிற் சகோதிர முண் டாகி மரணமும் பாற்கினுமிப்படியே சகோதிர மரணமும்சாதகன்கடைக் காலத்தில் யெவ்வித சகோதிரமும் இராதென்றும் பலவகைக் கஷ்டங்களை யுங் கொடுக்கப்படு மென்றும் இவ்விராசியில் நிற்கும் புதனுடன் சுபரா கிய சுக்கிரனே யல்லது சந்திரனே வாழினும் நோக்கினும் உடன்பிறப் புகள் பிதாவின் மற்றய தாரவழியென்றும் அவ்விதத்திலும் உடன்சகோ திரம் பெண்ணிற்குமென்றும் குருமுதலியோர் இருக்கினுங் சூரியனைக் கூடினும் குசன் பாம்பு கூடினும் புருஷசந்ததியுண்டென்றும் பாவரே வாழில் எவ்வகைப்பட்ட சகோதிரமும் கிடையாது மரணமாகுமென்றுங் கண்டறிய வேண்டியது குரு சுக்கிரன் பூர்வபக்ஷ சந்திரனிவர்கள் இருக் கினும் மூன்றும் மிடத்தினிற்கினும் நோக்கினும் கன்னி விருச்சிகமிவை யினும் சூரியன் முதலிய சனியிவர் கூடிநிற்கில் சங்கீதபிறியமும் சுக்கி ரன் புதனே வாழில் சங்கீதஸ்தனாகியும் சனி இவரிருக்குமாகில் பரஸ்திரீ லோலன் வேசிபோக போக்கிய மிகவும் சரசசல்லாப லோலனென்றும் சிலவகைமூலிய மனைவருத்தமும் பெண்வகையாற்குறைவாகிய மானக்

குறைவு நேரினும் குருமுதலியோர் நோக்கினு மிருக்கினும் மத்தியில் சத்தாகிய ஞானமேன்மையும் பரதேசிபோகம் விடுவனென்றும் சுபரிருக்கின் வனுகூலப்பெண் குடும்ப போகமும் பாபராகின் பரஸ்திரீயில் கீழ் குலத்தோர் பொதுமாதர் போகனுய்ப் பொருளிழப்ப னென்றும் குடும்ப துக்க சோகமும் அடைவனென்றும் மிகவும் போகலோபிகனுய் வாழுவன் யென்றறியவேண்டியது.

சகோதிர வகையின் குணிதங்கள் அறியவேண்டியது.

குசனுடனும் கன்னியிலும் புதனுடனுஞ் சுக்கிரனுடனுங் கூடிய கிரகங்களின் பெலாபெலத்துக்கேற்க யெண்களை யொன்றுபடுத்தி அந்தந்த இராசி யெண்களில் பெருக்கியதுகையை கூடியகிரகங்களின் பெலத்துடனிருக்கும் கிரகத்துகையில் கொடுத்துநின்ற மிச்சம் சகோதிரமென்றும் இதில் கூடிய குரு அல்லது குசன் சூரியன் இவர்கள்பூரணசந்திரன் றுகையுள்ள பெண்ணைப் பெருக்கியதுகையை ; அவ்விதபெலனுள்ள கிரகத்துகையில் கொடுக்கமிச்சம் புருஷசகோதிரமென்றும் இவ்விதமேபெண் இராசியிருந்த புதன் சனி சந்திரன் சுக்கிரன் யெண் பெருக்கிய துகை மேற்கண்ட இராசிக்கதிபதி பெலத்துக்குறிய யெண்ணில் கொடுத்துவந்த சேஷம் பெண்சந்ததியாகவுங் கண்டறியவேண்டியது.

சுபராய் கொடுத்த பெண்தீர்க சகோதிரனென்றும் அசுபரால் கொடுத்தயெண் தீர்கமில்லா தென்றுங் கண்டுக்கொள்ளவேண்டியது.

கிரகவாகன பூமி வியாபாரம் மாதுரு பலன்களாவன.

சுக்கிரன் பெலத்து கடகம் துலாம் விருஷபம் மீனம் இவையில் சந்திரன் முதலிய சுபருடனும் குரு புதன் இவ்வித சுபர்கள் துலாத்திலுமிருக்கில் மாடமாளிகையான பலவீடுகள் விருத்தியுடையவனென்றும் இராசவனுகூலனுகியும் வாழ்வன் யென்றும், சனி சூரியன் குசன்பாம்புஇவர்கள் மாத்திர மிருந்து பாபபெலத்துடன் சுக்கிரன்கெட்டு பெலக்குறைவாயிருக்கில் வீடுமுதலிய வகையுமிராதென்று தரித்திரனுகவாழ்வனென்றும் பலவகை துக்கசோகமும் பொருள்சேதமு முடையவ னுவனென்றும் சுபரும் பாபியுமாக இருக்கினும் நோக்கினும் சாதகனுக்கு கிரகவாகன க்ஷேத்திரம் சிலனுள் இன்றி பரஸ்தலவாசனுகிப் பின் சுயமான கிரகம் முதலியனவற்றைச் சேர்க்கப்படும் யென்றும், ; சுக்கிரனுக்கு நாலாமிடத்தையும் அவ்வதிபதியையுங் கொண்டு சொல்ல வேண்டியது.

மேஷம்:மகரம் கன்னி விருச்சிகம்: இவையில் குரு சுக்கிரன் சந்திரனிவர்கள் நிற்கினுங்கூடினும் பகைபெற்றவர் சனி செவ்வாய் பாம்பு இவர்

கள் கூடினாலும் நோக்கினாலும் கிரகவாகன க்ஷேத்திரமிருக்காதென்றும் கடகத்தில் குசன் விருஷபம் இவையில் குசனிருக்கில் சிலகாலம் அன்னியக்கிரகவாசனுப்பின் சுயகிரக வாசமடைவன் சுக்கிரன் அல்லது துலா மேஷ மிவையில் சுபர்கள் சுபநோக்க மில்லாதவிடில் கிரககுறைவு க்ஷேத்திராதி குறைவு பொருள் சேதமும் தனதானிய நஷ்டமும்உண்டாகும், சுபர்வாழில் க்ஷேம முண்டாகும் மற்றய மிதுனம் சிம்மம் தனுசு கும்பம் இவையில் சுக்கிரன் முதலிய குரு சந்திரன் யெவர்சுக்கிரனுடன் கூடி நிற்கில் கிரகம் முதலியவை விருத்தியடையாமல் பழய வீடாய் மிகவும் துர்ப்பலமாகும் பின் வாழ்க்கையுங்கிரகமும் னேரும் சனி முதலிய குசன் இராகு முதலியோர் சுக்கிரனுடன் இருக்கினும் ஸ்தானத்திலிருக்கினும் சாதகனுக்கு கிரகம் கிடையாமலும் பலகஷ்டபலனுடன் வாழ்வன் கூறை ஸ்திரமில்லாத கிரகவாகஞ் செய்வனென்றறிய வேண்டியது.

பாபருஞ் சுபருமாகக் கலந்தாலும் பார்த்து துலாம் மேஷத்திலிருக்கினும் மிவ்விதியே கிரகம் மிருந்து கிரக விருத்தியின்றியும் பல கஷ்டமுண்டாகிப் பின் கிரகக்ஷேமமும் உண்டாகுமென் றறியவும்.

சூரியனுடன் கூடிய பாவர்களுடன் துலாத்திலாவது சனியுடன் சுக்கிரன் மேஷ மிவைகளிலும் சுக்கிரன் பாவருடன் கும்பத்தில் நின்று மிருக்கினும் சுக்கிரனுடன் சனி முதலிய புதன்சூரியன் நீசம் முதலிய பகை கத்துவத்துடனிருக்கினும் கிரகமில்லாமல் வருந்திக் கஷ்டமடைவன் அந்திய காலவறை கிரக வாழ்வின்றி பரகிரகவாசனை மரணமும் மடைவன் யென்றும் அறியவும்.

வித்தைபலன்.

புதன் சொக்ஷேத்திர உச்சனன கன்னியிலும் சூரியனுடன் கூடினாலும் சுக்கிரன் துலாம் விருஷபத்திலும் புதனையல்லது சிம்மத்தை குரு முதலிய சுபர்களும் பார்த்து சந்திர கேந்திரமாகவும் வேறு பாபர் சிம்மத்திலாவது புதன் சுக்கிரனுடன் கூடாமலிருக்கில் பிறந்த சாதகன் தேசாதிபதி வித்தையில் மிகவும் பிறபலயோகமும் இராசவித்தை தேவதாபக்தி சத்குணமும் மிகவு மேலான சன்மான வெகுமானத்துடன் சில ராஜாங்க வதிகார வித்தையில் கீர்த்திவந்தவனாய் சன்மான பூக்யனாகி அநேகர்கள் தன் கல்வியார் ஜீவிக்க யெத்தனனாகி செங்கோல் செலுத்தி வாழ்வன்.

மேற்கூறிய கிரகங்கள் கெட்டாலும் அல்லது சனி முதலிய பாம்பைக் கூடினாலும் இராஜவித்தையில் பிறபலனாகி சமயோகவா

ணுகி சுயபாஷை இராஜபாஷை யுள்ளவனுவான் அதிக பக்திமார்க்க சித்தாந்த முடையவனுகி இராஜத்துவச் செங்கோல் சில திடங்களுக்கு செய்வன் புதன் சூரியன் இவர்கள் சிம்மம் தனுசு மகரம் மேஷம் இவையிலிருக்கினும் குரு முதலியோர் நோக்கினும் இராஜவித்தை பிரபல முண்டாகும் பல பாஷையிலும் வித்துவானுவன் விருஷபம் மிதுனம் விருச்சிகம் கும்பம் மீன மிவையிலிருக்கில் வித்தை சாதாரணமாய் சொயவித்தையும் அல்பவானுகி இருந்து மில்லாதவனுயும் கடகத்திலும் இருக்கில் வித்தை சுயபாஷை இராசபாஷை உண்டாகினும் பிரபலமிராதென்றும் சூரியன் புதன் இவர்கள் கும்பம் விருஷபம் மிதுனம் துலாமிவையில் பெலமற்று விருச்சிகத்தில் இருந்து சனி முதலியோர்கள் கூடினும் அல்லது சனி முதலியோர் துலாம் சிம்மம் இவையிலிருக்கினும் ஸ்தானுதிபதியுடன் கூடினும் வித்தையின்றி மூடனுகி வாழ்வன் சுக்கிரனுடன் பாவரும் தனுசு கும்பம் துலாம் மிதுனத்திலிருந்து சனி முதலிய பாவரைக் கூடின் வித்தையின்றி மிகவும் வருந்துவன் இவ்விராசியில் குரு முதலிய சுக்கிரன் விருஷபம் துலாம் சிம்மம் மீனம் இவைகளிலிருக்கினும் சூரியனையாவது புதனையாவது குரு சுக்கிரன் முதலியோர் கூடினும் நோக்கினும் தன் சுயபாஷை சம்ஸ்கிருத வல்லமையுண்டாகும் வேத பாடியாவன் பாபர்கூடி இருக்கின் வேத முதலிய சாஸ்திர பாடியானுலும் லவுகிகனுகி ராசாங்க சீவனமு பாத்தியாயும் இவைகளைப் புரிவன் சூரியன் புதன் பாவர் கிரகத்தில் சனி முதலியோரைக்கூடி சுக்கிரனுடனுவது சிம்மம் துலாம் மகரம் சூரியனுடன் கூடி இருந்தாலும் மீனம் விருஷபம் மிதுனத்திலிருக்கினும் தகப்பன் சர்வமூடனுய் வித்தைவின்றி சாதகன் சிலவித்தை புரிந்து உபாத்தியாயனுகி பலவித்தை புரிந்து வாழ்வன் குசன் வலுத்து இவருடன் கூடினுலும் சந்திரன் சுக்கிரனுடன் இருந்தாலும் ஸம்ஸ்கிருத முதலிய ஆந்தர வித்தை புரிவன் சனி முதலியோர் கூடினுலும் பார்த்தாலும் சுக்கிரன் நான்கிலிருக்கினும் அவ்வித சுயபாஷையைப் பார்க்கினும் இராசவித்தையில் அதிக வல்லபனுவன் குருமுதலியோர் கெட்டு சுக்கிரன் வலுத்தும் சூரியன் புதன் கூடாமலிருக்கினும் வித்தை பிரபலமில்லான் பல கஷ்டமடைவன் அதிமேதாவியாவான் வித்தை இராஜவித்தையில் எவ்வளவு வருந்தினுலும் பிறபலமற்று பொருளை மாத்திரு மிழப்பனே ஒழிய அதனுல் பெருங்கீர்த்தியும் வித்தை படிப்பி லடையான் யென்றறிய வேண்டியது.

கூடியவர்களின் திசாபுக்திக்கி இசைந்தபடி அந்தந்த காலத்தில் வித்தையுண்டாவதையும் வித்தை நஷ்டத்தையும் கூறப்படும் இவ்விதமே புதனின்ற நாலிலும் நாலுக்கதிபதியையுங் கொண்டு சொல்லவேண்டியது.

மாதுருபாவபலன்.

சுக்கிரன் சந்திரன்வலுத்தும் சந்திரனுக்கு நான்கோன் துலாத்தினில் நிற்கும் பெலா பெலத்தைக் கண்டு மாதுருபலன் கூறவேண்டியது.

சந்திரன் பெலத்து கடகம் விருஷபம் தனுசு இவ்வித இடத்தில் நின்றும் சுக்கிரன் மேற்படி ஸ்தானங்களிலாவது மீனத்திலாவது தனது உச்ச முதலிய இடத்தைக் கூடினும் சுபர் நோக்கினும் தாய் வழிவிருத்தியும் பிரபல மேன்மையும் மாதுரு பெலத்தையுங் கூறப்படும் என்றும் இவர்களுடன் சனி குஜன் முதலிய பாவரும் நீச கிரகங்கள்கூடில் பெலயீன மாதாவாகி தோஷமும் மாதுரு வம்ச க்ஷயமும் சுபரும் பாவருமாகக் கலர்ந்து நிற்கின் சிலகால மாதுரு சந்ததி விருத்தியாகவிருந்து மரணமடைவரென்றும்சந்திரனுக்குஏழிலாவதுசுக்கிரனுக்கு ஏழிலாவது சனிமுதலியபாவர் பகைபெற்ற கிரகத்தோடிருக்கில் தாய்வழிநாசம் குடும்பக்ஷயம் மாதுரு பாலியாவஸ்தை மரணமென்றும் சுக்கிரன் சந்திரன் பாபிகள்வீட்டிலும் சந்திரனுக்கு நாலாதிபனு மிப்படியே பாவருடன் இராகு சனி குசனிருக்கினும் சூரியன் இரண்டுபாவர்கள் துலாத்திலாவது சந்திரனுக்கு நாலிலாவது சந்திரனுக்கு உ-கஉ-ல் பாவரிருக்கினும் தாயுடனே சிசுவில் மரணமென்றும் குரு முதலியோராகில் பாலியத்தில் மரணமென்றும் சுக்கிரன் பெலமற்ற இடத்தில் சந்திரன் வலுத்து சனி முதலிய பகைவர் பார்த்தாலும் நின்றாலும் யௌவனத்தில் மாதா மரணமென்றும் சனி சந்திரன் முதலிய பாவருடனும் நான்கில் பகைநீசம் பாபிகளிருக்கில் பாலிய சிசு காலம் மாதாமரணமும் சுக்கிரன் வலுத்து சந்திரன்கேந்திரதிரிகோணத்தில் பாவருடன்கூடி இருக்கினும் குரு முதலியோர் நோக்கினும் மாதா யௌவனத்திலேயே மரணமென்றும் தாய் வழியிராதென்றும் பலவகை கஷ்டநஷ்டதுன்பமும் உண்டாகும் சிம்மம் மேஷம் மிதுனம் இவையில் சந்திரனல்லது சுக்கிரனிருந்து பகைவரல்லது பாபிகளுடன் கூடியஸ்தானம் துலாத்தில் பாவரிருக்கின் பெவ்வன மரணம் தாயென்றும் விருச்சிகம் துலாம் கன்னியில் சுக்கிரன் சந்திரன் பெலமற்ற இடத்தில் பாவருடன் கூடி இருக்கில் பாலியமரணந்தா யென்றும்.

குரு முதலியோர் சந்திர கேந்திரத்தில் சுக்கிரன் வலுத்துஞ் சனிமுதலியோர் அவ்வதிபன் வீட்டிநிற்கில் கவுமாரத்தில் தாய்மரணமும் குரு முதலியோரான சந்திரனீங்கிய சுபர்கள் துலாம் மீனம் விருஷபம் இவையில் இருக்கில் விருத்த வபதில் தாய்மரணமென்றும் இவருடன் குசன் சனி முதலியவர் கூடினும் நோக்கினும் யெவ்வனமரணமும்மகரம் கும்பம் மீனம் மிவைகளில் சந்திரன் முதலிய சுபர்களுடன் நீசம் பகை இல்லாதவர்கள் கூடி சந்திரன் வலுத்து கேந்திரகோணத்தில் பகை நீசமில்லாத இடத்தில் புதன் பெலத்து நிற்கில் தாய் வாற்தீகமரணமும் ,தாய் வழி குடும்ப பிரபலமும் சனி முதலிப பாவரைக்கூடி இருக்கின் பகை நீசறைக்கூடினலுந் தாய் எவ்வன மரணத்துடன் தாய் வழிவிற்திபோலிருந்து உடன் அழியுமென்றும் குசன் பெலமற்று நீசம் பகையிலும் துலாம் மேஷம் இவையில் சந்திரன் சனி குரு விருக்கினும் பாவரைக் கூடினும் தாய் கருமபாத்தியத்தை யடையானென்றும் அதில் பாம்பு முதலியோர் இருக்கின் தாய் கருமகாலம் பரதேசவாசனுவனென்றும் கருமமும் வம்சமும் கிடையாதென்றும் சுபர் முதலியோராயினும் மிகவுமேலானவனகி பிரபல யோகத்துடன் வாழ்ந்து வருவனென்று மிருந்த பிரபல யோகவானுய் மாதுரு கருமபாத்திபதை உண்டாகுமென்றும் அறியப்படும்.

மாதுரு ஆயுள்பாவம் கணிதம்.

சுக்கிரனுடனுந் துலாத்திலும் சந்திரனுடனும் சந்திரனுக்கு நாலாதிபதிபனுடனும் உறியகிரகமும் சனி குசனைச்சேர்ந்த பெலனுக்குறியயெண்களைத் தனித்தனியெடுத்து அந்த இராசியெண்ணிற் பெருக்கி கூ-ல் கழித்த மிச்சங்களும் இந்த ஈவை ரு-ல் பெருக்கி கூ-ல் கழித்த மிச்சங்களையும் திசாபுத்திகளாக கண்டு கருமகாலம் மாதுருகரும வயதுகளையறியவேண்டியது இத்துகை மொத்தம் சமத்துகையால் பெலப்படி பெருக்கி கண்டதுகையை ௱-ல கழித்தமிச்சம் தாயின் ஆயுளென்றுங் கூறப்படுமென்றறிய வேண்டியது.

துலாம் மேஷம் மகரம் மிவையிலாவது சுக்கிரனுடனுவது சந்திரனுடனுவது புதன் சூரியன் சேர்ந்து நீசம் பகையில்லாத இடங்கிரகங்களிவர்களுடன் கூடாமல் கன்னி துலாம் மீனம் மிதுன மிவையிலிருக்கில் வியாபாரபிறபலச்செய்கையாலும் அதிகவாகன யோகனுக வாழ்வன்.

அதில் புதன் முதலியோரின்றி சுக்கிரன்றனித்து நிற்கில் பாவர் பாற்காமலிருக்கில் வித்தையாலும் ராசமூலமாயும் பிரபலமுண்டு, குரு முதலியோர் இருக்கின் சுக்கிரனிருக்கினும் வெண்வம வாகனங்களை பலிதத்துடன் எப்பொழுதும் வாகனயோகனுவன் ராசபூதனுவான்

பாவர்முதலியோரிருக்கினும் ஸ்தானாதிபதி பாவருடன் கூடினனும் பெல மற்றிருக்கினும் வித்தை வாகனமில்லான் சுபர் நோக்கில் பிரர்வாகனமா வது கிடைக்கும் சொல்பதினம் வாகனனவன் பாபரே நின்று ஸ்தானாதி பதி வலுக்கில் முதல் வாகனமின்றியும் பின் சுயவாகனஞ்சேர்ப்பன்யென் றும் அறியவேண்டியது.

பாபரே பெலத்துடன் பகை நீசக்கோளாயிருந்து சுக்கிரன் பெல மற்ற பாபர்பகை நீசம் பாவர்களைக் கூடிநிற்கின் வாகனம் பாதமதாய்க் கொண்டு திரிவன் யென்றறியவேண்டியது.

ரு-வது புத்திரபலன்கள்.

குசன் சுக்ஷேத்திர மல்லது மகரம் கன்னி தனுசு இவைகளில் சுபர் கள் கூடிநிற்கினும் நோக்கினும் குரு நோக்கினும் புத்திர விற்தியுடன் வாழப்படுமென்றும் புத்திர கருமமுடையவ னென்றும் குசன் மிதுனம் விருச்சிகம் மேஷம் மீனம் கும்பம் மகரம் இவைகளிலாவது சிம்மத்திலா வது சுபருடன் அல்லது சந்திரகேந்திரமாகி அவ்விடங்களுக்கு இசை வுற்ற கிரகத்துடன் இருக்கினும் நோக்கினும் விருஷபம் கடகம் இவை களில் குசனின்று அந்த இடத்ததிபன் பெலமுற்ற சிம்மம் தனுசு மேஷ மிவைமூன்றி லொன்றிருக்கில் சாதகனுக்குப் பிறபலமானபுத்திரர்களனே கர்களைப்பெற்று சுகப்படுவனென்றும். இதில் குசன் முதலியோர் நீசம் பகை பெற்று சனி முதலிய பாவரைக்கூடினும் நோக்கினும் குருவுக்கு ஐந்தாமிடத்ததிபதி பெலத்துடநிற்கு மிராசி புருஷராசி புருஷகிரகத்துட னிருக்கில் புருஷ சந்ததி மிகவுஞ்சாஸ்தியான சீவந்தராயினும் அவர்க ளால் சுகமதிகமடையாமல் புத்திரர்கள் தேகப்ருஷ்டநாகியும் பலதுக்கத்தி லும் புத்திரர்களுக்கு குடும்ப விற்திகளின்றியும் அக்ருத்தியராய் சாதி ப்ருஷ்டராய் விடுவர்களென்றும் அதில் குரு சுக்ஷேத்திரம் சந்திரனைக் கூடாமல் சந்திர கேந்திரத்திலும் அல்லது சந்திரத்திரிகோணத்திலுமிருக் கில் புத்திரர் மிகவும் விருத்தியுடன் கருமபாத்தியர்களாய் சிலகாலம் சுக மும் சிலகாலமவர்களால் கஷ்டத்தையும் சாதகனனுபவிப்பனென்றும் சந்திரனுடன் கூடினல் புத்திரவரிஷ்டமும் அவ்விதங் கூடி விருச்சிகம் மீனத்தினின்றும் தன் வீட்டிற்கு கேந்திரகோணத்தில் புதன் சனிவலுப் பெற்று சூரியன் முதலாகிய செவ்வாய் நீங்கிய பாவரைக் கூடியும் புத் திரஸ்தானாதிபதிக்கி கருமாதிபதி சனியல்லது புதனகி கும்பமல்லது கன்னி மிதுனத்திருக்கினும் மேஷத்தில் பாவரல்லது அவர் பகையோ ராகிய சூரியனையாவது சந்திரனையாவது கூடினும் பார்க்கினும் புத்திரனில் லான் யென்றும் சிவீகாரமுதலிய அபிமான புத்திரனை யடைவனென்

றும் எந்த ஸ்தானத்தில் இந்த சூரியன் புதன் முதலிய சனியல்லது குரு நிற்கின்றாரோ அவ்விதஸ்தானத்துக் கிசைந்த குடும்பவழி புத்திரனை அபிமானமல்லது சிவீகிருதனாகவடைந்து வாழ்வனென்றும் குசனுக்கு ஐந்தாவது இடம் புதனல்லது சனி க்ஷேத்திரமானதில் சனி புதன் முதலிய குசனீங்கிய பாபிகளிருக்கினும் பிறந்தவனுக்கு புத்திரதோஷமுண்டென்றும் கும்பம் துக்கங்களேயுமனுபவிப்பனென்றும் அப்படிக்கொற்ற புத்திரனும் பின் காலத்தில் பகையாவனென்றும் அறியவும் இதில் (ஸ்தானமாவன) மூன்றிலிருக்கில் சகோதிரபுத்திரனை யடைவனென்றும் யேழானல் களத்திரவம்ச புத்திரனையடைவனென்றும் ஐந்திலாகில் புத்திரியின் புத்திரனை யடைவனென்றும் உ-ல் ஆனல்குடும்ப புத்திரனை யடைவனென்றும் கூ-வானல் பிதுர் சகோதிர வம்ச புத்திரனை யடைவனென்றும் சனி முதலியோர் தனித்திருக்கில் அன்யரே கீழ்சாதியோர் மகவினல் மரணம் பின் சரீர அடக்கமும் கூறபடும்.

மேற்கூறிய விருச்சிகம் குசனிவர்களுடன் சனிமுதலியோர் கூடினல் யெவ்விதஸ்தான மாகினும் குருமுதலிய சுபர்நோக்கின் புத்திருண்டாகும் குருநோக்காவிடில் மரணமடையும் குசன் ஸ்திரவிராசிகளில் விருச்சிகத்தைப்பார்கின் பெண்வகையான புத்திரியென்றும் கூறப்படும் சனி முதலியோராகின் அவ்வித வம்ச வகையினும் தோஷமுண்டாகுமென்றும் சுபரிருக்கின் நோக்கின் குரு ரு-கூ-ல் இன்றி மற்றைய சுப க்ஷேத்திரத்தில் இருக்கில் புத்திரவிருத்தி யுண்டென்றும் மிகுந்த கீர்த்தியையுடைய புத்திரலாபத்துடன் வாழப்படுவனென்றும் அதிக கீர்த்தி மூற்தி புகழ்ச்சிகளு மிகவு மேன்மையான யோகத்துடன் இருப்பார்களென்றும் சுபர் முதலியோரின்றி பாவர்களேவலுத்து நின்ருலுமிகவும்யோகத்துடன் வாழாமல் முன் ப்ரசைகளனேக மரணமடையுமென்றும்கருமத்திற்கு புத்திரவிருத்தி யுண்டென்றும் அவ்வித பின்தார புத்திருல்யோகத்தையு மடைவனென்றும் அதிக கீர்த்தியுடன் வாழ்வனென்றும் குரு முதலியோர் வலுக்காமலிருக்கில் குடும்ப விருத்தியின்றி பின்தாரமாயினும் புத்திரரின்றி மரணத்தையும் கருமமின்றியும் அடைவனென்றுங் கூறப்படும்.

குசன் முதலியோர் வலுத்து நிற்கினும் கேந்திரகோணத்தி லிருக்கினும் குசனின்ற வீட்டுக்கதிபன் குருகேந்திர திரிகோணத்தி லிருக்கினும் விருஷபம் மீனம் இவைகளிருக்கினும் குரு முதலிய சந்திரன் (கூ) மிடத்திலிருக்கினும் அதிகயோகாதி காரனகி ஞானவானய் யோகாப்பியாச அஷ்டாங்க சித்திகளின் முறைமையறிவது மிகவும் தபேர

மகிமை பிடிவாதஞ் செலுத்த வல்லபமும் இக்கிரகத்தை சனி முத லிய பாபர்கள் நோக்கினும் யிருக்கினும் அவ்வித அப்யாசாதி தபசுகளுந் தேவபக்தியும் பெரியோர் தெரிசனமும் முடிவின்றி காலதாமதத்தில் சில வகை முடிவு மேலான பதவியுங் கிடைக்கப்படும் யென்றும் குசன் கட கம் விருச்சிகம் மீனம் இவையிலாவது மகரம் முதலியதிலாவது சந்திரன் சிம்மம் கும்பம் இவையிலிருக்கில் மந்திரவித்தைபுரிந்து வாக்குபலிதனாகி யாவரும் புகழ சகல மந்திர உபதேச நற்தனாகியும் வாழ்வன் சனிமுத லிய பாவர் கூடினாலும் பார்த்தாலும் அவ்வித மந்திர முதலிய ,வுபதேசங் கள் குடத்திலேற்றிய விளக்குப்போல் பிரகாசிக்காமலும் அவ்வித இராசி யில் சூரியன் புதன் சனியாவது அல்லது குசனுடனாவது இருக்கில் பிச காய் சகல மந்திரம்போல டாம்பீகனாய் ஜெனங்களை யேமாற்றியுங் குடித் தும் பல துறையாய் விட்டுவிட்டு வாக்சாலனாகி வாழ்வனென்றறிய வேண்டியது அப்படி பிசகுசொன்னாலும் தேவானுக்கிரகம் அல்பமுடை யவனாகி வாழ்வன்.

குசன் முதலாகியவர் விருஷபம் கன்னி விருச்சிகம் மீனமிவைகளி லிருக்கினும் சனி முதலிய சோரக்கிரகங்கள் (நி)மிடங்கு சனிவைகளைப் பார்க்கின் பிறந்தவன் பரஸ்திரீ பொதுமாதரிவர்களுக்கு புத்திரசம்பத்தும் பொருளையுமளிப்பன் அவ்விதவகைப் புத்திரனேயும் கெடுத்துவரப்படும் சுபரிருந்து நோக்கின் நற்குல சுபகுடும்ப புத்திரனுடன் கருமபிருத்திய னாய் வாழ்வனென் றறியவேண்டியது.

புத்திரகுணிதம் கணிக்கின்ற விதிகளாவன.

குருவுடனும் குருவுக்கு ஐந்தாமிடம் ஐந்தாமிடத்தாதிபதியுடனும் விருச்சிகத்திலும் குசனுடனும் கூடியகிரக எண்களை யொன்றுபடுத்தி அவரவர்களின் சுபாசுபத்துக் கிசைந்தபடி யெடுத்துக்கொண்டு அந்தந்த இராசி யெண்ணிற் பெருக்கி குசன் பெலத்திருக்கில் குசன் யெண்ணிலும் குருபெலத்திரிற்கில் குருயெண்ணிலுங்கொடுத்தமிச்சம்புத்திரபாவமாகும் புத்திரபாவ விசேஷங்களையறிந்துகொண்டு இதில் சுபபெலன் பெற்றக்கிர கப்படி யெண்ணிற்கொடுத்த மிச்சம் பெண்கிரகம் ஆண்கிரகங் கண்டு ஸ்திரமான புத்திர பாவபெலன்களைக் கூறல்வேண்டியது.

புத்திரபாவம் உண்டென்ப தறிந்ததின்மேல் இக்கணிதங்கண்டு பார்க்க வேண்டியது.

விருஷபம் கடகம் துலா மீனம் இந்த நான்கு இராசியிற் பிறந் தோர்களுக்கு விசேஷ ஞானங்களையும் விசேஷ ஆயுர் தாயாதிவிசே ஷங்களைக்கூறப்படு மென்றறிய வேண்டியது.

விருஷபலக்கினத்துக்கு சனி உச்சனுகியல்லது மகரம் விருஷபம் இவையிலும் பூரணசந்திரன் சனியுடனுவது கடகம் கன்னியிலாவது இருந்தும் சுக்கிரன் மகரம் கும்பம் மீனம் இவையில் நின்றும் புதன் ரவி கன்னி மிதுனமிவையிலும் குரு சந்திரனுடன் அல்லது கேந்திரகோணமான கன்னி மகரம் கும்பம் விருஷபம் சிம்மத்தில் இருக்கினும் சனியுடன் குரு சிம்மத்திலாவது சந்திரனுக்கு நாலிலும் இருந்தாலும் அவ்வித ஸ்தானுதிபதி கேந்திரகோணத்திலாவது சனி சுக்ஷேத்திரத்திலும் சனி நின்ற வீட்டதிபன் கேந்திரகோணத்திலும் இருந்தும் பெலத்துடன் இருக்கில் சாதகன் அதிதபசியாய் வனகிரிசஞ்சாரனுகி மிகவுங் காலஅளவில்லாத ஆயுள் விருத்தி செய்து தேக அழுக்கே சொர்ணமாய் பூண்டு ராசவல்லபனுகியும் உலகெலாம் திரியவும் அஷ்டமாசித்தியுணர்ந்து வருவன் யென்றறிய வேண்டியது மற்ற இடம் இராசியிலிருக்கில் சுபபெலன் பெற்றிருக்கினும் மிகவும் சாத்ரண ஞானியாகியும் உலகத்தில் திரிவன் சனி குரு வலுத்து நிற்கில் இராசசன்னியாசியாகி தேவாலயப் பொருளேயும் கையாக்ஷிசெய்து மிகவும் டாம்பீகத்துடன் வாழ்வனென்றறிய வேண்டியது. மற்ற இடத்தில் பெலமற்று இருக்கில் ஞான மின்றி அலேவன் யென்றறிய வேண்டியது.

கடகலக்கினத்தில் பிரந்தவர்களுக்கு குரு பெலத்துத் தன்சுபக்ஷேத்திரம் திரிகோணக் கேந்திரத்தில் பெலத்துடன் சந்திரனுங் கூடினுலும் அல்லது குரு கேந்திரஞ் சுபக்ஷேத்திரமாகிக் கூடினும் குரு திரிகோணஞ் சுபக்ஷேத்திரமாகி அதில் நின்றுலும் சந்திர லக்னுதிபதி பெலத்தும் மிகப் பெலவானுகிய குருவுக்கு ஐந்து பத்துக்குடையவர்கள் பூரண சுபராகி சென்மலக்கின கேந்திரத் திரிகோணத்திலும் சனி பெலத்தும் சனி நின்ற ஸ்தானுதிபதி குரு சனி கேந்திரமும் சந்திர கேந்திரம் பெற்றும் புதன் சம்மந்தம் சனி ரவி கூடாமலிருக்கினும் குரு நின்றதற்கும் சந்திரன் நின்ற ஸ்தானத்துக்கும் கேந்திரத்திலு மல்லது திரிகோணத்திலும் சுக்ஷேத்திர உச்ச கிரகங்கள் கூடி பெலத்துடன் அவ்வகை இராசியில் யெந்த கிரக மேலாகிய அதிக பெலக்காரனே அவ்வித திசைகளின் முதற்கொண்டு விசேஷமாகிய ஆயுள் விற்திக்குறிய தனக்குறிய ஆயுளுக்கு மேல் சுவாச பெந்தன மூலியமான யோக நித்திரையினல் ஊழ்வினையைத் தள்ளியும் ஈசாம் சத்துவத்துடனும் மிகவும் பிறபலயோகமாய் ஓர்யுகம் வறை ஆயுளேப்பெற்றும் இதில் குசன் கூடினுலும்

அல்லது ஓர்பகையோறுற்ருல் மத்தியில் ஷ யோகாம்சம்முதலிய யது கெட்டுதனக்குறிய ஆயுளுக்குமேல் ஞூக000- வறையென்றும் இராகு நிற்கில் ா- யென்றும் சனி இருக்கில் தனக்குறிய ஆயுளுக்கு மேல் ஞூ எஉ- வறை வாழப்படுவனென்றும் அறியவும்.

மேற் கூறிய ஸ்தானங்களில் பகை நீசம் அபெல விரோதிகளில்லாமல் சுபபெலத்தோரே பெலத்துடனிருக்கில் ஞூ இவளவென்றடையாமல் யுகாந்திரந் தோருமிருந்து மிகவும் தேவர்கள் முதல் ஏவல் பூண்டு நித்தியத்துவ வஸ்துவாகி வாழப்படு மென்றறியவேண்டியது.

துலாலக்கினத்திற் பிரந்தவர்களுக்கும் மீனலக்கினத்திற் பிரந்தவர்களுக்கும் அந்தந்த இலக்கின பாகங்கூறி இருக்குமிடத்தில் கூ-வது பாவத்திலாவது ஐந்தாவது பாவத்திலாவது கண்டறிய வேண்டியது.

கடகலக்கின ஆரம்பாவம்.

குரு பெலமற்ற இடத்திலாவது சனி முதலிய பாவர்கள் தனுவிலிருக்கில் சத்துருவில்லான் சந்திரன் சுபருடனேகூடி கேந்திர கோண சுபக்ஷேத்திரத்தில் பெலத்துடனிருக்கில் தேகதிடமுள்ளவன் கூ-ல் சில பாவருஞ் சுபருமாகக் கலர்ந்து கேந்திர திரிகோணதிபதி கூடி இருச்குமாகில் பிணிச் சரீரனென்றும் இவ்வித இராசிக்கதிபதிகள் பகை முதலிய இடத்தி லிருக்கில் பிணியுஞ் சத்துருவு முடையவ னென்றும் சூரியன் முதலியோர் வலுத்திருக்கில் சத்துருவை செயஞ்செய்து வாழ்வனென்றும் கூறப்படும் தனுவிலாவது சந்திரனுடனுவது சனி யல்லது ரவி முதலிய பாவர்கள் கூடி இருக்கில் ரோகியாவன்.

இதில் ரவியாகில் உஷ்ணதிகரோகமும் இளும்பு நோயும்
சந்திரனுகில் சீதவாதநோயும்
குசனுகில் ரத்தமாங்கிச விரணநோயும்
புதனுகில் கசநோயென்றும் மேக உபத்திரவமும்
குருவாகில் பிரமியநோயும் மூளைநோயும்
சுக்கிரனுகி வாதநோயும்
சனியாகில் பித்தவாதநோயும்
இராகுவாகில் சுராதிநோயும்
கேதுவாகில் சிலேஷ்ணதி நோயும் ரெக்தரோகங்களைகொடுத்து வருமென்றறிய வேண்டியது.

ரொணபாவங் கூறப்படும்.

குரு சுக்ஷேத்திரமான மீனம் கடகம் விருஷபம் துலாம் இவைகளிலிருந்து சுபராகிய சந்திரனைக்கூடி கேந்திரகோணமாகியதில் பெலத்துடன் அசுபர்கள் பாராமலிருக்கில் சாதகனுக்கு தனலாபமதிகமுண்டாகும் இவ்வித ஸ்தானாதிபதியின் கேந்திரகோணத்தில் சனி ரவி முதலினோரிருக்கினும் பெலத்துடன் நோக்கினாலும் அல்லது கன்னி மீனமிவையில் இருக்கினும் ரோனமுள்ளனென்றும் இவ்வித இடங்களைத் தவிர மற்றய இடங்களில் சுபபெலத்துடன்கூடி இருக்கினும் குருமுதலியோர் தனுசு மிதுனம் கன்னி சிம்மம் மகரம் இவைகளிலிருக்கில் தீராத ரோண ஸ்தனாகி அழுந்துவனென்றும் இதில் சுபபெலன் சாஸ்தியாகில் ரோண நிவற்திகள் உண்டென்றும் மேலான பிரபலமும் இவ்விதமேன்மையானதும் உண்டாகுமென்றறியவேண்டியது.

ரொணகணிதம்.

குருவுடனும் தனுவிலும் குருவுக்கு சு-லும் நின்றகிரகங்களையும் அந்த சு-மிடத்ததிபதியின் கூடச்சேர்ந்தவர்களின் பெலாபெலப்படிக்குறிய யெண்களை ஒன்றபடுத்தி அவ்விராசியெண்ணார்ப் பெருக்கிய துகையை உச்சமானால் சமத்துகையால் உ-தடவையும் ஆக்ஷியானால் ஒரேதடவை சமத்துகையால் பெருக்கியும் நட்பானால் அதே துகைகளையும் கடன் உள்ளவனென்றறியவேண்டியது.

களத்திரபாவ பலன்கள்.

சனியையும் சுக்கிரனையும் மகரத்தையும் சுக்கிரனுக்கு யேழாமிராசியையும் அவ்வதிபதியையும் கொண்டு களத்திரபாவ பலன் சொல்லவேண்டியது.

சனி மகரம் கும்மம் மீனம் மிதுனம் இவைகளிலும் கன்னி சிம்மம் இவைகளிலும் தனித்தாவது அல்லது பாவருடன் கூடி பெலமற்றும் சுக்கிரன் பாவராகியவர்களின் க்ஷேத்திரத்திலிருந்தும் சுக்கிரசத்தமத்தில் சனி முதலிய பாவர்கள் பகைமுதலிய அபெலமாக இருக்கினும் அசுபர்களாய் வாழினும் சுக்கிரனுடன் பெலமற்றோரும்!சனியல்லதுகுசன்முதலிய பாவர்களும் சுபராகிய குரு சந்திரன் முதலியோருடைய வீக்ஷணியமில்லாமலும் இருக்கினும் தாரமானது (உ)க்கு மேலயே பலதார விவாகனென்றய் மூன்றபாவர்களும் ஓர் சுபருடன் மேற்கூறியக்ஷேத்திரத்தில் ஒன்றுக்கொன்று விரோதமாக இருக்கில் பிரந்தவனுக்கு (உ) தாரமென்றும் (உ)சுபருடன் இரெண்டு பாவரிருக்கினும் சனி மகரமல்லது கும்

பத்திலிருக்கினும் குசன் முதலியோர் நீசம் பகை பெற்று நிற்கினும் நோக்கினும் தாரமிரண்டென்றும் (சுபர்களே முன் சொல்லிய ஸ்தானங் களிலிருந்து பாவர் கூடினுலுஞ் சுபரே பார்த்தாலும் கூடினுலும் ஒரேதார மென்றும் மற்றுப கடகம் துலாம் விருச்சிகம் தனுசு மீனம் இவையிலும் மேஷவிருஷபத்தில் ஓர் இராசியில் சனி நின்று சுபர்தனக்குறியவர்கள் உடன் பெலத்துடனிருக்கில் ஏககளத்திரமாகியும் ஓறேகளத்திரமாகும் இதில் சனியுடன் சூரியன் முதலாகிய புதனும் சுக்கிரன் பெலத்தும் சந் திர கேந்திர ராசியாகில் தாரம் இரெண்டென்றும் சுக்கிரனுக்கு (கஉ) மிடம் கன்னியாகில் அதில் இவர்களிருக்கினும் தாரமிரெண்டென்றும் குரு பெலத்துடன் யாவருஞ் சேராமல் சுபபெலத்துடனிருந்து பார்தால் ஓரேதாரமென்றும் சந்திரன் முதலிய சுபரிருந்து நோக்கில் தாரம் இரெண்டாவது அல்லது பரஸ்திரீ தீர்க்கியாகி (உ) தாரனுகி வாழ்வ னென்றும் மேற்கூறிய இடங்களில் குரு சந்திரன் சுக்கிரன் சேர்ந்தா லும் சுக்கிரன் பாவர் வீட்டிலிருந்தாலும் பெலமற்றிருக்கினும் தார முன் னயே மரணமடைந்து (உ) தாரமுடையவனென்றும் குருநீங்கிய சுபரு டன் சுக்கிரனிருந்து பெலத்துடன் சனிரவிமுதலிய பாபிகள் கூடினுலும் பார்த்தாலும் தாரமிரெண்டுண் டென்றும் இதில் நாலுக்கிரகம் அல்லது நாலுக்கு மேல்பட்ட கிரகத்துடனிருக்கில் களத்திரம் ஒன்றே தீர்க்கமாய் வாழ்வனென்றும் சுக்கிரனுடன் ஒருவருமின்றி விருஷப துலாம் இவையில் னின்றுலும் சுபர்கள்கூடி யல்லது நோக்கினும் பெலத் துடைய தாரமொன்றென்றும் குணவதியாகி மேலான அம்சத்துடனும் போகத்துடனும் வருப்வளென்று மிகவுங்கீர்த்திபெற்று வாழப்படுமென் றறியவேண்டியது. முன் சொல்லிப இடத்தில் சூரியன் சனி பாவரிருக்க வும் சுக்கிரன் பெலமற்று இருக்கினும் சத்தமத்தில் குரு நீசமாகி சுக்கி ரன் கெட்டிருக்குமாகில் விவாகமில்லாத புருஷனுக்கு பரகெமனத்துடன் சஞ்சரித்துத் திரிவனென்றும் புதன் வலுமையற்று குசனுடன்கூடி மக ரம் துலாமிவையில் சனிகூடினும் அதிகவியாபார பிறபலவானுகி வாழ் வன் களத்திரசொத்து சேரும் சனி சொஷேத்திரமாயினும் சுபரைக் கூடிகேந்திரத்தில் பெலத்துடனும் சந்திரன் சிம்மம் துலாம் மேஷம் விரு ஷபம் இவையிலிருக்குமாகில் களத்திரசொத்து சேருமென்றும் இதில் சுக்கிரன் பெலமற்று இருக்கில் களத்திர சொத்துக்கிடைத்தும் பிரயோ சனமற்று ரொணத்துடன் பொருளேயழித்து விடுவனென்றும் களத்திர முன்மாரகத்தையுங்கொண்டு செய்வனென்று மறியவேண்டியது.

களத்திரபாவ முற்றுப்பெற்றது.

பிதுர்பாக்கிய பலன்களறிய வேண்டியது.

குரு கேந்திரகோணத்தில் சுக்ஷேத்திர உச்சக்ஷேத்திரங்களில் சுபர் வீடாகி பெலத்தும் சந்திரகேந்திரமாகியும் மிகவுமேலாகிய சுக்கிரன் பெலத்தும் சூரியன் கேந்திரகோணத்திலாவது தனக்குறிய கன்னி மிதுனம் மேஷம் விருஷபத்திலிருக்கினும் சுக்கிரன் நீங்கிய சுபரைக்கூடினாலும் பெலத்து நின்றாலும் கெசகேசரியோக பிரதாபனாகி இருக்கும் சந்திர கேந்திர குரு கேந்திரங்களுக்கு கேந்திரமாயும் நிற்கில்செனித்த சாதகனுக்கு.பேராளமான பிதுரார்சிதமும் பிதாகீர்த்திபெற்றவனாகி அதியோகசாலியாய் உலகெலாந் துதிக்கவாழ்படிவனென்றும் பிதுர்சொத்து விருத்தியும் சூரியனுடனாவது குரு சந்திரனுடனாவது மீனங் கன்னியிலாவது சனி சேர்ந்தும் பகைவருட னிருந்தாலும் பிறந்தவன் பிதுரார்சித நஷ்டமுஞ் சுயார்ச்சிதப் பெயருங் கீர்த்தியும் சாதகனுக்கு அதிகபிரபலமாகி வாழ்ப்படிவனென்றும் மிகவுமேலோனாகுவ னென்றுங் கண்டறியவேண்டியது.

சுக்கிரன் சந்திரனுக்கு ச-ல் முழுப்பெலனும் எ-ஆ- பெலனும் ௰-ல் வ- பெலனும் க-ல் ௨- பெலனுங்கொண்டு உரைத்தல் வேண்டு மற்றய இராசியிலிருக்கில் முன் இடப்பெலன் கூறியதயேவைத்து பாற்துக் கொள்ளல் வேண்டும் இவ்விதமேஒவ்வொருலக்கினபாவங்களின் கணிதங்களை ஆராய்ந்தெடுத்துக் கூறவேண்டும் இவ்விடத்திலயே சகல லக்கின கிரகங்களுக்கும் பெலா பெல கெணிதவகை செப்பிமுடிந்தமையால் இவ்விதம் ஒவ்வொரு லக்கின பாவங்களிலும் சொல்லாது சிலவற்றைக் கூறினம் ஆகையால் சில விஷயங் கூறிய பெலன்களுடன் இவையையுமுக்கியமா யெடுத்துக் கனித்துக் கண்டரிதல் மிக ஆவசிக மென்றும் கூறப்பட்டனவம் என்றவாறு.

பிதுர்பாக்கிய பலன்களாவன.

மேஷத்தையும் குசனையும் சூரியன் சூரியனுக்கு கூ-ம் அவ்வதிபனையும் கொண்டு பிதுரார்ச்சிதாதிபலன்களைச் சொல்லல்வேண்டும் குசன் விருச்சிகம் மேஷம் மகரம் மிதுனம் சிம்மம் தனுசு இவ்விடங்களிலிருக்கில் பிதுரார்ச்சித விசேஷ பிரபலம் இராசயோகம் மேன்பாடாகவும் பிரபலனுவன் இதில் மேஷம் விருச்சிகம் மகரமாகில் பூர்வார்சிதம் பிதுரார்சிதமும் மிக்கமேலான பரம்பர விருத்தியும் தனலாபமும் சிம்மம் தனுசுவாகில் சிலசில தனங்கள் விருத்தி அல்பரொணம் பின்விருத்திகளையும் மிதுனமாகில் பலயிடமும் ஸ்திரமற்றுப் பொருள்கள் உண்டாகும் சமவிருத்தியுடன் வாழ்வன் இதில் குரு சூரியன் சந்திரன் இரெண்டாம்பக்ஷமாகி சுக்கிரன்சேரினும் பிதுரார்சிதப்பொருள் யேராளமாய்ச் சேரும் இதில் விருச்சிகந் தவிர மற்ற இடத்திலிருக்கவேண்டும் விருச்சிகத்தில்

சந்திரனிருப்பானுகில் பிதுரார்சிதப்பொருளை யழிப்பன் பல கவலை ராச தெண்டனு பயத்தைக்கொடுக்கும் மேற்கூறியக் கிரகமின்றி மற்றய புதன் சூரியனுடன்கூடி ஷெ ஸ்தானங் கிரகத்துடனிருக்கில் விசேஷயோகபிர பலம் கன்னியிலிருக்கினும் விசேஷ யோகபிரபலமாகும் பிதுரார்சிதம் பிதுர்மூலம் உண்டென் றறியவேண்டியது.

மேற்கூறிய கிரகங்களுடன் கூடாமல் மற்றய சனி பாம்பு முதலி யோர் கூடில் பிதுரார்சித நஷ்டமாகி மிகுந்த அரிஷ்டத்தையனுபவிப்பன் சுபரும் பாபருங்கலர்ந்து நிற்கில் பாட்டனுற் சிதத்தில் பிதா குறைந்து போவன் பிதுரார்சிதம் அல்பமுண்டு கடன் முதலியதில் பகையும் அனுப விப்பனென் றறியவேண்டியது.

விருஷபம் கடகம் கன்னி துலாம் கும்பம் மீனம் இவைகளில் குச னிருக்கில் பிதுரார்சித க்ஷயத்துடனும் பலவகை ரூணமும் பிதுர்வம்ச மான கருமதுக்க பலனுக நடக்கும் இதில் கடகம் கன்னியில் சேர்ந்த குச னுடன் சுக்கிரனுற் பிதுர்பாக்கிய நஷடம் மற்றவையிலிருக்கில் அதிக ஜெயலாபம் பிதுர் தீர்க்கமாகும்.

மீனந்தவிரப் புதனும் விருஷபந் தவிர குருவும் சந்திரனிவ்விதச் சுபர்கள் கூடி இருக்கில் பேராளமான பிதுரார்சிதம் பிதுர்வகையோகமும் பிரபல குடும்பத்தோறுப் வாழுப்படும் மதிகயோக பலன்களாக வாழ்வனெ ன்றும் மிகுந்த கீர்த்திமூற்திகளும் சுபபலன் நடக்கும் துலாத்தில் சனி பாம்பு கூடிற் பிதுராற்சிதவிற்தியும் வம்சக்ஷயமுண்டாகும் மற்றஇடத்தி லிருக்கில் பிதுற்சிதமின்றியும் வம்சவிற்தியுடன் வாழ்வான் பிதுர்தோஷ முமுண்டு இதில் துலாம் ரவியுடன் வாழில் பிதுர் நஷ்டமாகும் பாபருஞ் சுபருங் கலர்ந்து நிற்கில் பிதுர் குடும்பவிர்த்தியுடனும் பொருளின்றித் தரித்திருதி குரைவுடனும் தோஷத்தை யடைவனென்றறியவேண்டியது பின் பிதுர்வம்ச கருமமும் உண்டாகு மென்றறிய வேண்டியது யென்.

பிதுராயுள்விஷயம்.

குசன் ரவி யிவர்களின் கூட (சனிமுதலிய பாம்பு சேரினும் அபெ லராயிருந்தும் கடகம் துலாம் கன்னி மீனமிவைகளி லிருக்கினும் அல் லது மேஷத்தில் இக்கிரகத்துடன் கூடிநிற்கின் பிதுர்வம்சதோஷமும் பிதுருவுக்கு பாலியாவஸ்தையில் கற்மபீடையைக்கொடுக்கும்.

சூரியனுடன் சனி பாம்பும் மேஷம் தனுசுவிலாவது துலாத்திலா வது பாவரைக்கூடி சூரியனும் ஒன்பதாமிடம் பகை நீசமாயல்லது அந்த ஸ்தானுதிபன் இவ்வித பகை க்ஷேத்திரம் நீசம் முதலிய அபெலத்துட

னிருந்து பாபபெலன் அதிகரித்துறில் பாலியத்தில் பிதுர் மாரகதிசையும் ஓற்றவரில் பிதுர் கருமமென்றும் பிதுர்வகை க்ஷீணதயு முண்டாகும் யென்றும்.

சூரியன் பகை நீசமல்லது குசன் கடகம் மீனம் கன்னியிலிருக்கினும் குரு கேது இராகு இவ்விதபாவர் கூடின் பிதுர் மாரகதிசை யாரம்பிக்க சாதகன் சென்னமானவுடன் பிதுர் மரணத்தையும் அடைவனென்றும் சனி மேஷம் கடகம் மீனமிவையில் சூரியனல்லது குசனைக் கூடினும் சுபர் திருஷ்டியும் சுபக்ஷேத்திரவாசமும் இல்லாதிருக்கில் பாலியாவஸ் தையில் மரணம் பிதாவுக்கு யேற்படுமென்றும் மேற்கூறிய கிரகத்துடன் சுக்கிரன் முதலியோர் சேரில் பிதுர் கருமபாத்திய னின்றியும் புதன் குரு இவரில் எவர் சேரினும் பிதாவாக வேறொருவனை யடைந்து பல கருமஙகை வாழுந்துவருவனென்றும் கண்டறியவேண்டியது.

மேற்கூறிய கிரகங்கள் கூடி சூரியனுக்கு கூ-தனுசு குசனுக்கு கூ-க் குடையவனுக்கு ௩-அ-கக-இவைகளி னின்றுபாவரைக்கூடி பகை நீச மான அபெலனைப்பெற்றாலும் பிதாபாலியத்திலயே வினைத்தெரியுமுன் காலமே மரணமாவானென்றும் இவைநின்ற ஸ்தானாதிபதி கெட்டு அபெ லனைப் சூரியன் சனி பாம்பைக்கூடினும் கெற்பத்திலயே தகப்பன் மறிப் பானென்றறிய வேண்டியது.

சூரியன் குசன் முதலியோர் மேஷம் விருச்சிகம் துலாம் விருஷபம் மிதுனம் மிவையி னின்றும் சனி ரவி முதலிய பாம்பு முதலியகோளு டனுவது சுக்கிரனையாவது கூடி இருக்கினும் சுபர் நோக்கினும் மீனம் கும்பம் மேஷத்தினின்ற குசனல்லது ரவியை சுபர் முதலியோர் பார்க்கி னும் கூ-மிடத்ததிபன் னின்ற வீட்டதிபன் பெ்ந்த இடத்திலிருக்கிறனோ அவறைப்பாவர் சேர்ந்து ஓர் சுபராவது பார்த்தாலும் யௌவனத்திலயே தகப்பன் மரணமாவது அதாவது அவ்விதஸ்தானத்தினின்ற பிதுரரிஷ்ட காலத்திற் கண்ட திசாபுக்தி காலமென்றும் குசன் ரவியிவர்களும் குசனு க்கு ஒன்பதாமதிப நின்ற அதிபனும் பெலத்துடன் சனி பாம்பு புதனைக் கூடினும் அல்லது தனித்தாவது மிதுனம் கடகம் கன்னி தனுசு னின் றும் அந்த ஸ்தானாதிபர்கள் கூடிநிற்கினும் சுபர் நோக்கினும் பிரந்த சாத கனுக்கு எவ்வனத்திலேயே அத்திசைசேரும் புக்திகாலத்தில் பிதுர்கரும வென்றும் குசன் ரவி முதலியவர் சிம்மம் விருச்சிகம் மகரம் இவைகளில் புதன் முதலிய சுபருடனல்லது சனியைக்கூடினும் சூரியனுக்கு ஒன் பதாமதிபன் ஸ்திர இராசியிலிருக்கில் பிதாகவுமாரத்தில் மரணமென்றும்

சுபர் சேர்ந்து பார்த்து நிற்கில் எவ்வனத்துள்ளயே மரணமாவனென்றுங் காணவேண்டும்.

கும்பம் தனுசு துலாம் மீனமிவைகளில் சுபர்பாவர் கலர்ந்து சூரியன் சனி கூடினலும் குசனுக்கு கூ-மிடத்ததிபன் பெல முற்று நிற்கில் கவுமாருவஸ்தை காலத்தில் பிதுர் மரணதிசை தெரியலாகும் மேஷம் விருஷபம் சிம்மம் இவைகளில் குசன் ரவி தனித்துநின்று அல்லது சேரினுங் குரு புதன் முதலிய சுபர்கள் கூடினலும் அல்லது பார்த்தாலும் சுபக்ஷேத்திரத்தினிற்கினும் குசனுக்கு கூ-ம் இடத்ததிபனின்ற கிரகத்துக்குடையவன் கேந்திரகோண மித்திரக்ஷேத்திர சுபக்ஷேத்திரமாகி பெலத்துடனிருக்கின் சாதகன் பிதாவிருததாவஸ்தையில் மரணமென்றும் சூரியன் குசன் குசனுக்கு கூ-க்குடையவனின்ற ஸ்தானதிபதி இவர்கள்சிம்மம் மிதுனம் கன்னி தனுசு கும்பம் இவையில் ஒன்று சேர்ந்திருந்தாலும் தனித்தனி இவ்விடங்களிலிருக்கினும் குரு முதலியரவி இவர்களைக் கூடினும் பார்க்கினும் பெலத்துடனிருக்கினும் சாதகனுக்கு விர்த்தாவஸ்தையில் பிதுர்கருமமாகும் இவ்வித இராசிகளிலிருக்கும் கிரகத்தின் அபெலனேடு சுக்கிரன் அல்லது குரு முதலியோரிருக்கினும் பிதாவின் கருமபாத்தியமடையான் யென்றும் சனி பெலத்துடன்கூடி இருக்கில் அன்யபிதுர்கர்மபாத்தியத்தை யடைவனென்றும் இதில் ஷெகேந்திரஸ்திதனகி பாபர்கள் பகை பெற்றுவாழில் பிதா பரஸ்தலத்தில் மரணமாவனென்றும் இதில் மறைவாகிய ௩-௬-௮-௧௨-இவைகளில் வாழில் புத்திரன் அருகிருக்க மாட்டா னென்றறிய வேண்டியது.

மேஷம் தனுசு ரவியுடன் குசனுக்கு கூ-மிடத்ததிபன் நின்ற ஸ்தானதிபதியுடன் சுபரும் சுபக்ஷேத்திரத்திலும் இருக்கில் பிறந்த சாதகன் மிகவும் விசேஷயுகனகி பிரபல கீர்த்தியுடன் பிதுர் தனத்துடனும் மேலோனகிவாழ்வன் பிதுர் சந்ததியும் அதிகவிருத்தியுடன் வாழப்படுமென்றும் பிதுர்ஸ்தானமாகிய மேற்கூறிய இடங்களும் கிரகங்களும்பகைநீசமுதலிய விரோத அபெலன் பெற்று வாழினும் ஸ்தானதிபர்கள் கெடினும் பெலமில்லாத பிதுர் சொத்தினல் விவாததன நஷ்டமும் பொருள் சேதமும் தனதானிய ரூணஸ்தனகியும் பிதுர் குடும்ப கஷ்டமும் பல வாதங்களேயும் அடைவனென்றும் இவ்விதஸ்தானங்களில் பாபரும் சுபரும் கூடிவாழில் பலவித கஷ்டநஷ்ட துன்பக் கடன் முதலாகிய பிதுர் வம்சக்ஷயம் சில நாளும் சிலநாள் மேற்படிவகை விருத்திகளும் பலவகைப்பொருள் விருத்திகளும்மேன்பாடாகிய விருத்திகளும்மேன்பாடுகளும் இஷ்டகாரிய செய சித்திகளும் பிதுர் சொத்துண்டா

கியும் அன்யவம்சசொத்து கரும பாத்தியதை யுண்டாகி உடனுக்குடன் சேதமுண்டாகு மென்றறிய வேண்டியது இவைகளை முதற் குறித்த திசாபுக்தி காலங்களிலறிய வேண்டியது.

கருமபலன்களும் பூமிமுதலிய ராச்சியபலன்கள்.

சுக்கிரன் குரு குசன் இவர்கள் பெலத்து சுபகிரகசம்மந்தராகி சுபக்ஷேத்திரத்தில் அபெலனுடன் இருக்கினும் சுக்கிரனுக்கு தெசமாதிபதி நின்ற வீட்டதிபன் சுபக்ஷேத்திரமல்லது உச்சகேந்திர பெலனுடனிருக்கினும் துலாம் மீனம் விருஷபம் இவைகளில்பூரண சந்திரனுடன் குசன் கூடினுஞ் சுபரைக் கூடினும் குரு முதலியசுபக்ரக வீக்ஷணத்துடனிருக்கினும் பெலமுற்றோர் கூடி-நோக்கினும்சூரியன் புதனிவர்கள் கன்னி சிம்மம் மேஷம்மிதுனம்மிவைகளிலிருக்கினும் சாதகன் மண்டலாதிபனுகி பிரபூல பூமிபடைத்து அதிகயோகவானுக வாழ்வனென்றும் சத்கருமஞ் செய்வனென்றும் மிகவும் பரிசுத்தனுகி வாழ்வனென்றும் இவ்வித மேலானபதத்துடன் வாழ்வன் சந்திரனல்லது குசனைக் கூடி கடகம் துலாம் விருஷபத்திலிருக்கில் ராசாங்க முதலியசிவண மேன்மையும்இராசானுபூசிதங்களையும் அடைந்து வருவனென்றும் மிகவும் பிறபல சன்மானபூசிதனுவான் மேற்கூறிய இராசிகளிலும் மேலேகூறிய கிரகத்துடன் சனிபாம்பு முதலிய சுபர்கள் கூடினும் நோக்கினும் அவ்வித பிரபலராய் முன்னோர் வாழ்ந்து சாதகன். அராச்சியாதிபனுய் வாழ்வன் பென்றறியவேண்டும் அசுபர்கவால் கெட்ட பலனையும் சுபசம்மந்தரால் விசேஷ யோகபாவ பலன்களையுங் கூறப்படுமென்றவாறு.

சுக்கிரன் துலாம் விருச்சிகம் தனுசு கும்பமிவைகளில் சந்திரன்முதலிய விரோதமில்லாத குசனைக்கூடினும் நோக்கினும் கேந்திரகோணுதியுடன் சுபக்ஷேத்திர வாசனுகி குரு கேந்திர கோணமல்லது கடகத்திலிருக்கினும் சனி முதலியோர் கூடினூலும் சிலராச்சியாதிபனுவான் இவ்வித கிரகங்களுடன் சூரியனுக்கு பத்தாமதிபன் பெலத்த கேந்திரத்திலிருக்கினும் விசேஷமான பூமிகிராமத்தை யடைந்து வாழ்வன் இவ்வித இடத்திலிருக்குங்கிரகங்களுடன் சனி ரவி முதலிய பாம்பு கூடில் சில அல்பபூமியும் பிதுரார்சித நஷ்டமும் பலவகைதுக்க சோகங்களையும் உண்டாகும்.

பகைநீச கிரகமிருக்கினும் குசன் கடகம் விருச்சிகம் விருஷபத்திலிருக்கினும் பெலமற்றவர்களாகிய பாவரைக்கூடினும் பூமிமுதலிய பொருளின்றிப் பலவகை நஷ்டனுகிவாழ்வன்.

கன்னி கடகம் மகரம் மீனம் மிதுனம் இவைகளில் சுக்கிரனல்லது குசனின்றாலு மிருவருங் கூடினாலும் பகை நீச முதலியவர்களாகிய ரவி புதன் சனி பாம்பைக்கூடினும் சுபர் பார்வையல்லது கூடினாலும் பிரந்த சாதகனுக்கு பூமிஸ்திதி முதலியது அற்பமாகியும் தன தானிய நஷ்டத்துடனும் பரவிஷய ஆஸ்திகள் கிடைத்தும் விசேஷசுகபலன் பொராமலடைவனென்றும் கூறப்படும் யென்றறியவேண்டியது இவைகளிலொரே இராசியில் குரு சுக்கிரன் கூடியாவது சமசப்தமத்திலிருக்கினும் பூமி விருத்தியடையான் சுக்கிரன் சூரியன் இவர்களுடன் கூடினும் மேற்கண்டபலனே நடக்கும் மேற்கூறியவர்கள் தனித்து இருக்கிற விஷயத்தில் மேலேகண்ட இராசியிலிருக்குமாகில் மேன்மையான பூமிகளிருக்கினும் யெப்பொழுதும் பல கவலைகளும் மனோவருத்தமும் விருத்தியில்லாதபூமியும் பலசொத்தும் பலவிதத்துக்கமும் அன்யகருமத்துக்கு பாத்தியமடைவனென்றும் அவ்வித மடைந்த சாதகன் பின் மேன்மையுடன் வாழ்வன் சுபரல்லாத பாபிகள் கூடினும் நோக்குமாகினும் அபெலராகிவாழில் பரகன்மமும் சாதிப்ருஷ்ட நடவடிக்கைகளும் பலவகைதுக்கத்தையும் பலவித வருத்தங்களையும் கொடுக்கப் படுமென்றரியவேண்டியது.

குசன் சுக்கிரன் இவர்கள் கடகம் கன்னி விருச்சிகமிவைகளிலாவது சுக்கிரன் சிம்மத்திலாவது இருக்கினும் சனி பாம்புமுதலிய ரவியைக்கூடினும் பிரந்தவன் பலவிதப்பொருளையும் இழப்பன் மற்ற இடங்களில் குருமுதலிய சுக்கிரன் இருக்கினும் பாவர்கூடினும் நோக்கினும் விசேஷமான யோகத்துடன் வாழ்வன் பூமிமுதலிய ஸ்திதியுண்டாகும் மிகவுமேன்மையான யோகவானாவான் யென்றறியவேண்யடிது.

இவ்வித மிருக்கும் ரவியுடன் அல்லது சுக்கிரனுக்கு பத்தாதிபனிருக்குமிடத்ததிபன் வாழுமிடத்தி னீசம் பகையல்லது சனி பாம்பு புதனிருக்கினும் விருஷபத்தி னின்றாலும் குருமுதலியோர் பார்த்திருக்கில் பலவகை சொத்துக்களையும் இழப்பன் வருத்தமடைவன் இவைகளில் சுபர்களும்கேந்திராதிபதிகளானவர்களும்விசேஷபெலத்துடனிருக்கினும் அல்பபூஸ்திதியுடையவன் பலகருமனவன் பாபர்வாழில் அக்கிருத்தியமும் பலவித துக்கங்களையும் வருத்தங்களையும் அனுபவித்தும் கள்முதலிய் மதுமாம்ச பக்ஷணனவனெனறும் யாவராலும் இகழப்படுவன் கட்டாயமான ராசதெண்டனை முதலியவைகளையும் அடைவன் குருமுதலிய சுபர்கள விசேஷ பெலன் பெற்றுப் பார்க்கில் ரூசா அவமானம்போல் தோன்றியும் ரொணங்களையு னிவர்த்தித்து வாழ்வனென்றரியவேண்டியது அக்கருத்திய கருமங்களையுஞ் செய்வனென்றும் கூறப்படுமென்றவாறு.

மேலேகூறிய குசன் சுக்கிரனும் சுக்கிரனுக்கு தசமாதிபதி நின்ற இடத்திலாவது அவ்வதிபனுவதுநின்ற இடங்களிலாவதும் கடகம் கன்னி மகரம் மீனமிவைகளிலாவது மேலேகூறிய ஸ்தானங்கிரகங்களுக்கு உபய பாரிசத்தில் சனி பாம்பு ரவிமுதலிய பாவரிருக்கினும் நோக்கினும் மேற்படி கிரகங்களுடன் கூடினுலும் பிறந்த சாதகனுக்கு பூர்வார் சிதயோகமின்றிப் பலகவலைபடைந்து பிதுர் சாதகனிவ்வித காலங்களில் பொருள் சேர்க்குங்குணமும் பூஸ்திதியுள்ளவனுகியும் சத்கரும புருஷனுகியு மேலான விருத்தியுடன்வாழ்ந்து வரப்படுவனென்றும் இராசயோகபிரபல வானுவான் இவ்வித இடங்களில் குரு சுக்கிரன் பூரணசந்திரர்கள் தனக்கியல் புற்ற இடங்களிலிருக்கினும் விசேஷ பூஸ்திதிகளையும் அதிகமேன்மையுடன் மிக்க பிரபலவானுகி வாழ்வனென்றும் இவர்கள் சத்துரு இடமாய் நீசம் முதலியபாவர்களைக்கூடி இருக்கின் அக்கிருத்யருகி மிகவும் கஷ்ட நஷ்டத்துடனும் தன தானிய மின்றியும் பூஸ்திதிமுதலானது மில்லாமலும் அவ்வித மிருக்கின் ரெணமேலிட்டி கஷ்ட நஷ்டத்துடன் இழப்பனென்றுங் கூறல்வேண்டும்.

இனிசிம்மலக்கினத்தின் சீவனபாவங்களைக் கூறுவோமாக.

சுக்கிரன் சனி சனிநின்ற இராசிக்கி பத்தாமிடத் ததிபதினின்ற விராசினுதன்னிவர்கள் புதனல்லது குருவின் சுக்ஷேத்திர ஸ்தானங்களிலிருக்க சுபபெலத்துடன் சுபர்களைகூடி.

குரு நிற்கினும் நோக்கினும் சாதகனுக்கு விர்த்தியை முதலாகிய சாஸ்திரங்களாலும் சோதிஷ வைத்திய மிவ்வகையாலுஞ் சீவனஞ் செய்வன் இராஜ வதிகாரனுகியும் வாழ்வன் புதனுகிப் பெலத்திருக்கில் கணித பண்டித தொழிலால் சீவனஞ் செய்வன் சுக்கிரன் முதலியோர்களாகிலும் புதன் சுக்கிரனல்லது குருவுடன் இரெண்டற்றத்து நிற்கினும் பூபால வரசத்துவ மூலிய சீவனமும் இராஜ வதிகார சீவன முண்டாகும் ரவி சந்திரன் பகையின்றிப் பெலத்துடனிருக்கினும் மேற்கூறியவர்கள் இந்த ரவிமதி இவர்களைக்கூடி கடக சிம்மத்திலிருக்கினும் பிறந்தவன் விவாதவழக்கு இராஜவதிகார சீவனம் பிறபலமாய்ச் செய்வன் ஞாயாதிபதியாகியும் உலகத்தில் கியாதிபெற்று வாழ்வன் சனி பாம்பு இவர்களுடன் அபெலராகிப் பெலமற்றுக்கூடி இருக்கில் அடிமையாவன் பெலத்துடன் சனி கூடில் திருட்டு முதலிய பொய்சாக்ஷிகள் அக்கரும ஜீவனம் பாம்பாகில் பலவக்கைத் தொழில் செய்வன் புதன் சந்திரன் இலக முதலிய கேந்திரத்தில் ஷெ யோரைக்கூடி இருக்கின் வியாபாரஞ்

செய்வன் குரு முதலியோர் நோக்கினுங் கூடினும் வியாபாரியாகி னும் இதரத்தொழில் புரிவன் புதன் குரு முதலியோர் பெலமற்றுக் கூடி இருக்கின் தரித்திர கேவலத் தொழிலுடன் சத்விஷய யாசக ஞகி தேவாலயப் பெயர் முதலிய வகையைக்கூறி சீவனஞ் செய்வ னென்றும் குசன் கேது பெலத்துடன்கூடில் மாந்திரீகம் முதலிய வித்தைகளும் இராகு கேது தனித்துக்கூடில் க்ஷுத்திர மாந்திரீக அபிசாரப் பிரயோகனுய் உலகத்தில் சீவனஞ் செய்து வரப்படுவ னென்றறிய வேண்டியது.

மேஷ விருஷபம் துலாம் விருச்சிக மிவைகளில் சனி குசன் முதலிய சுகிரனிருக்கில் மேலான சீவனஸ்தனுகியும் பூமி முதலிய பூர்வார்ச்சித சீவன யோகனுகி வாழ்வன் என்றும் ரவி முதலிய சந் திரனுடன் பகை நீசமின்றி சேரில் குரு முதலியோர் பார்த்தாலும் இராஜாங்க சீவன மேன்மையுடன் வாழ்வனென்றும்.

சனிக்கி பத்தாமிடத்ததிபன் கேந்திரத்திலும் சுப பெலத்து டன் குசனுகில் பூபாலனுகி பூமியால் சீவனஞ்செய்து பிறபல வதி கார இராஜ யோகவானுவன் என்றும் மேலே சொல்லிய துலாம் விருச்சிகமிடத்தில் பகை நீசம்பெற்ற ரவி சந்திரன்கூடில் ஈனத்தொ ழிலும் தொழிலால் நஷ்டமும் புரிவனென்றும் குரு முதலிய சுக்கி ரன் புதனுகில் ரொம்பவு மேன்மையான பூமி முதலிய பிரபலத்துட னும் இராஜவதிகாரத்துடனும் வாழ்வன் யென்றும் அடிமை முத லியவாளுடன் வாழ்வனென்றும் தனித்த புதன் ஆகில் வித்தைமுத லிய கணிதவைத்தியம்புரிவன் யென்றும் குருவாகில் வேதாதி சாஸ் திரமும் சுக்கிரனுகில் சட்ட நிர்ணயாதி தர்மசாஸ்திரம் பரதாதி நூ ன்முறை யரிவதினுல் சீவனமும் குஜன் முதலியோருடன் விருச்சிக மேஷத்திலிருக்கில் உயுத்தாதி பெலனுள்ள சீவனமாம் கேது இராகு வாகிலும் இராஜாங்கவாத சீவன மேன்மையுடனும் ரவி சந்திரனு க்கு இராஜாங்க சீவனமும் பெற்றும் புதன் சந்திரனிவர்கள் கும் பம் விருச்சிகம் இவையாகிலும் பெலத்துடன் முன் கூறிய சனிவக ரத்துள்ள கிரகம் புதனுடனல்லது துலா கன்னி இவைகளில் வா ழில் வாணியத் தொழில் புரிவன் யென்றும் தனுசு மகர மீனமா கில் அடிமையாகியும் யுத்த சத்துரு மூலியவாத விரோதிகளாலும் ஜீவன மடைவன் சுபருடன் அசுபரிருக்கில மிகவுமான மித்துரு வத்துடன் இராஜவனுகூல சீவனமும் பிறபுத்துவமும் பெற்றுவாழ் வுன் யென்றரிய வேண்டியது.

சுக்கிரன் புதன் கூடி யல்லது சந்திரன் முதலியோரைக்கூடி விருஷபம் கன்னி இவையில் வாழில் பெண்வகை கணிதம் இவ்விரண்டு முயல்வுகளால் தனலாப முதலியபொருளை யடைவனென்றும்.

குரு சுக்கிரன் சம்மேளனத்துடன் இருக்கில் பூமி முதலியதன பூர்வ விர்த்திகளாலும் புராண சாஸ்திருதிகளாலுஞ் சீவனமும் சுக்கிரன் சுபரேகூடி கேந்திர கோணத்தில் இருக்கில் இராஜாங்க மூலியாதி சீவனமும் மேன்மையான யோகனும் பிரபுத்துவத்துடன் வாழ்வனென் றரியவேண்டியது.

மேற்கூறிய இடங்களில் சுக்கிரனுடன் அசுபர்சள் கூடி பகை நீச முதலிய தாகியதிலும் மகரம் மீனம் மிதுனம் துலாம் இவைகளிலிருக்கினும் பொய்த்தொழிலும் ஹீதர விம்சாதிகளேயும் அக்ருத்திய சீவனத்துடன் வாழ்வனென்றும் அவ்விதஞ் செய்தொழில்களிலும் லாபமின்றியும் அடைவன் அவ்வித இடங்களிற்கூடிய அசுபரும் சுக்ஷேத்திராதிபெலத்துடன் சுபர் சம்மந்தாதி திருஷ்டிபெற்று வாழில் இராஜயோகவானுகி அதிகார சீவனஞ்செய்து அடிமையாளுடன் வாழ்வான் சுபர்களே கூடி நிற்கும் அபெலத்துடன் பாவரைப்போ லொற்ற பெலத்துடன் க்ஷீணிதர்களாகி வாழ்வனுகில் அப்படிக் கொற்ற சாதகன் அதி கோரான தரித்திர வனுபவத்துடன் யாசகாற்றியைப் போல சீவனஞ்செய்து வருவனென்றுங் கூறப்படும்.

சீவனவிஷய கெணிதங்களாவன.

மேற்கூறிய சீவனவகை இன்னவிதமென்று கண்டபின் மேலே கூறிய சனியும் சனிக்கி பத்தாமதிப நின்ற இடத்ததிபனுடனும் விருஷபத்திலுஞ் சுக்கிரனுடனும் உறிய கிரகபெலன்படிக்கி துகைகளே யெடுத்துக் கொண்டு அவ்வவ் இராசியெண்ணிற் பெருக்கியும் குசன் பெலனுக்குரிய கிரகத்துடன் சேர்ந்தவர்களின் யெண் மொத்தத் துகை சேர்த்து அத்துகையில் கொடுத்துக் கண்டசேஷம் சீவனுதி லாபமும் (சுக்கிரனுடன் கூடி பெலத்திற் கண்ட யெண்ணிற் கண்ட சேஷம் சீவனக்கடையில் லாபமான பொன்களென் றரியவேண்டியது) இதில் சுக்ஷேத்திரம் உச்சங் கேந்திரமிவைகளின் கணக்கிற் கிசையக்கூறிய பெலன் யெத்தனையோவத்தனை தடைவை பெருக்கில் கண்டவை சீவனலாபத்திர்க் கிடைக்கும் தனமாகிய பொன்னென்றும் அவ்விதப் பொன்னனது அவ்வவதேசநாண

யங்களில் பத்துப் பலங்கொண்டது ஒருபொன்னென் றறியவேண்டி யது இவைகளை யவரவர்கள் பெலனுக்கிசைந்த திசாபுக்தி கால அள விஞற் தெரிந்துக்கொள்ள வேண்டியது.

லாபவிரய பலன்களாவன.

புதன் பெலவானுகி சிம்மம் கன்னி மிதுனம் விருஷபம் தனுசு இவைகளிற் றனித்தாலும் ரவி குரு சுக்கிரனைக்கூடி இருக்கில் சந்திரன் விருச்சிகம் மகர மீனம் கடகமிவையில் சுபருடன் வாழில் விரயத்துக் கதிகலாபமும் புதன் பெலமற்றும் பாவருடன்கூடி கடகம் மகரம் மீனம் துலாமிவைகளிலிருக்கினும் சந்திரன்முதலிய சனி இவர்களைக்கூடி கன்னி தனுசு மேஷம் மிதுனம் விருஷபத்திலிருக்கினுஞ் சாதகனுக்கு லாப மற் பம் விரயஞ் சாஸ்தியும் அன்னிய தேசவாசாதி உத்தியோக பிருப்பிகளு மிகுந்த கீர்த்திமூர்த்திகளுடன் மிகவும் அதியோகவானுகி வாழ்வனென் றும் மிக்கப்பிரதாப ஐசுவரியமும் அசனசயனமேன்மையும் இவ்விதமுண் டாகும் சந்திரனுடனும் பனிரெண்டாமிடத்திலுமுறிய சுபபெலன் பெற் றகிரகத்தின் அளவராகிய யெண்களையும் இராசியெண்களை அ-ல் பெரு க்கி க0-கழித்தவை விரயமும் புதனுடனுடம் மிதுனத்திலுமிருக்கும் சுபக்கிரக பெலனுக்குறிய யெண்களையும் இராசியெண்களையுங்கூட்டிகூ-ல் பெருக்கி க0-ல் கழித்த சேஷம் லாபமென்றும் இவ்விரண்டு தொகையில் யெந்தத்தொகை யதிகமோ அத்தனைமடங்கு அதிகலாப விரயங்களைச்சொல் லவேண்டியது இதில் லாபத்துக்கு விரயஞ் சாஸ்தியான பங்காகில் கட ஞளியென்றும் இவ்விதமறிந்து ஒவ்வொரு லக்கினங்களும் கஉ-மிடம் அதிபதியையும் கக-மிடம் அதிபதியையுங்கொண்டு இவ்விதமே கணிதஞ் செய்து அரிந்துக்கண்டவைகளை லாபவிரயம் கடன் இவைகளையும் சுகா சுக விருத்திகளை யுஞ் சொல்லவேண்டியது.

இதில் விரயாதிபதி பெலனும் யெண்ணும் அதிகமாகில் மிகமேன்மை யுள்ள அசனத்தையும் பரஸ்தல பரதேசவாசங்களையு மிருத்துக் கூறல் வேண்டுவ தவசியமென் றறியவேண்டியது.

கன்னியாலக்கினத்தின் குணுகுண பலன்களாவன.

யெப்பொழுதுஞ் சந்தோஷி தருமம் தியாகமுடையவன் மானியாசி க்கான் குற்றமற்ற ஆசாரன் பலவிதிநூல்களையும் ஆராயுவன் பின்வயதில் அதிகமான பொருளைத்தேடுவன்.

ரு-வது காலம் அக்கினி அக்கினிசமான வுபாதி நேரும் ௰-ல் சுரம் கஅ-ல் மீமனேய் இவ்விலக்கினத்தை சுபர்நோக்குறில் ஆயுள்தீர்க்கம்

வூல் எஎ-வைகாசிமீ அமரபக்ஷம் கச-வது திதி சித்திரை நக்ஷத்திர நாளில் குன்மாதிவாயுவு சீதநோயால் மரணமாவன்.

மாரகயோகாவயோக திசாபுக்திகள் கூறப்படுகின்றனவாம்.

சுக்கிரன் புதன் புதனுடன் சுக்ஷேத்திர உச்சம், பெற்ற இரவி-கேந்திரகோண மதி சென்மகேந்திர சப்த்தம கேந்திரம் கடகமிவையிலுற்ற குரு சனி இவ்வித திசைகளும் புத்திகளும், அதியோக சுபப்-பிரதாபர்களாகியும் கிரகவாகனம் பூமி கன்று காலிமுதலிய க்ஷேத்திர லாபங்களையும் சுபசோபனங்களையும் கொடுக்கவும் மேம்பாடுசெய்யவும் புத்திரகளத்திர பெந்துமித்து ருத்துவங்களையும் கொடுக்கவல்லபர்க ளாவார்கள் ஆகினும் குருதிசையில் சனி இராகு சுக்கிரன் ரவியும் குசதிசையில் சுக்கிரன். குரு இராகுவும் பாபபெல ரவிதிசையில் குசன் இராகு சனியும் சுக்கிரன் திசையிலும் கேது இராகு இந்த திசையில் சனி இராகு ரவி குசனும் மாரக மாரக சமான துன்பம் விரோதங்கள் குடும்பமரண துக்கங்கள் இவ்வித பலவகை சத்துரு வரசர்களின் கொடிய பகைகள் பலவாறான துன்பங்கள் இடப்பேர்த்தி இவைகளை யெல்லாங் கொடுக்கக்கடவனென் றறியவேண்டிய தென்றுங் கண்டுரைத்தல் வேண்டும் தேகத்தில் சகலவித பிணி முதலிய வரிஷடங்களையுங் கொடுக்குமென் றறியவேண்டியது.

ஆனல் குசன் பெலனின்றி ந-சு-அ-கஉ-ல் வாழில்மாரகங்கொடான் அம்மாரகத்தை யடுத்த அரவாக்கிய பாம்பு கொடுக்குமென் றுரைத்தல் வேண்டும்.

குருவுஞ்சனி சந்திரனிவர்கள் நன்மையையுந் தீமையையுங் கலர்ந்து கொடுக்கினும், இவர்கள் தனக்குறிய க்ஷேத்திரத்திலும் கன்னி கடகம் துலாமிவைகளிருக்கில் அதி கீர்த்தியைக் கொடுக்கப்பட்டு மிக்கமேன்மையாவர் சிம்மம் மகரம் மேஷ மிவைகளில் வாழில் தன் கவருவக்குரைவையும் சகலவித துன்பத்தையும் பலவித வருத்தங்களையும் மானபிமானக் குறைகளையும் அனேகவித பாதையையும் மரணத்தையு மல்லது மரண சமான துன்பத்தையுங் கொடுப்பார்களென் றறியவேண்டியது.

மாதுருவரிஷ்டம்.

சந்திரன் திசை சனி இராகு சுக்கிரனிலும்,
இராகு திசை தனது சனியும் மதியும்,
குரு திசை மதிபுகர் இராகுவும்,
புதன் திசை இராகு சனியும்.
கேது திசையில் சுக்கிரன் சந்திரன் சனியிலும்.

சுக்கிரன் திசை தனது சனியிலும் மாதுருகர்மம் துக்கம் வம்ச க்ஷயம்பல வாருகிய சோகமிவைகளை கொடுக்கப்படு மென்றறிய வேண்டியது அவரவர்களுக்கு கேற்ற சுபாசுபபெலத்துக்குறிய விதியால் கண்டிதமாரகஞ் செய்பவராம்.

பிதுரரிஷ்டம்.

புதன் திசை ரவி சனியும்.
சுக்கிரதிசை சனி இராகுவும் கேதுவும்.
ரவி திசை சனி சுக்கிரன் பாம்பும்.
மதி திசை புகர் சனியும் இராகுவும்.
குசன் திசை இராகு சனியும்.

குரு திசை சனி திசையில் புதன் பாம்பு இதற்கிசைவான காமமரிஷ்டமாகும்.

கன்னிலக்கினத்தின் சகோதிர வரிஷ்டம்.

ரவி புகரும் இவ்வித காலங்களில் பிதுர்மரண துக்கசோகாதிகள் பிதுர்வம்ச க்ஷயம் பலவாருகிய கஷ்டநஷ்ட துன்பங்களும் மனோ கிலேசமும் பலவகைதுக்க சோகங்களையும் பொருந்தி வாழ்வன்.

சகோதிர வரிஷ்டம்.

கேது திசை குசன் இராகுவும்.
சுக்கிரன் திசையில் இராகு சனி புதன் சிகியும்.
ரவி திசையில் இராகு குசனும சனி சுக்கிரனும்.
குசன் திசை புதன் சனி இராகுவும்.
இராகு திசையில் சுக்கிரன் குசனும்.

குரு திசையில் சுக்கிரன் குசன் இராகு இவ்விதகாலம் சகோதிர வரிஷ்டம் சகோதிர வகை துக்க சோகங்கள்பலவாருகிய துன்பம் மனவியாகூலங்கள் பொருள்சேதம் சகோதிரர் பலவகை துக்க சோகங்களும் சகோதிர வகை குடும்ப துக்கசோகமும் சகோதிர வகை குடும்ப க்ஷயங்களையுங் கொடுக்க வேண்டியது.

களத்திரலாப வரிஷ்டம்.

சந்திரனில் சுக்கிரன் புதனும் குருவும்.
இராகு திசை புதன் புகரும் மதியும்.

குரு திசையில் மதி புதனும்.
சனி திசை புதன் குருவும் மதியும்.
புதனில் சனி புகரும்.
கேதுவில் புகர் குருவும் புதனும்.
சுக்கிர திசையில் சந்திரன் இராகு சனி குருவும்.

இவ்வித காலம் விவாக சுபசோபன களத்திர லாபத்தையும் ஸ்திரீபோக போக்கிய சுகத்தையுங் கொடுக்கும்.

மேற்கண்டதிசையில் பாம்பு குசன் சனி குரு இவ்வித புக்தி காலங்களில் மரணதுக்கமும் களத்திர சோகமும் பலவாறுகிய வருத்தங்களும் களத்திர மரணங்களையுங் கொடுக்கப்படு மென்றறிய வேண்டியது.

புத்திரலாப வரிஷ்டம்.

கோணத்திலிருந்த குரு திசை சுக்கிரன் இவ்வித புக்திகளிலும் சனி திசை புதன் சுக்கிரன் சந்திரனிலும்.
சுக்கிரதிசை தனது மதியிலும்.
ரவி திசை சந்திரன் குரு புகரிலும்.
மதிதிசை குரு புதன் புகரிலும்.
பாம்பு திசை புதன் புகர் மதி குருவும்.

இவ்வித திசாபுக்திகாலம் மேன்பாடாகிய புத்திரலாபங்கொடுப்பர்கள் யென்றும் முன்செனிப்பவை யனேகமாய் பெண்பிரசையென்றும் கூறல்வேண்டும் இவ்விதமானதிசைகளில் சனி சுக்கிரன் ரவி குசன் பாம்பு இவ்வித புக்திகாலங்களில் புத்திரவரிஷ்டத்தையும் பலவகை சோகங்களையு மனபீதியும் பெண்களுக்கு அரிஷ்டமும் புத்திரகெற்பங்களும் அதைக்கொண்ட களத்திரங்களுக்கும் தேகாரிஷ்ட கெண்டங்களையும் கூறுவோம்.

இனிக் கன்னியா லக்கினத்தில்

பிறந்தவர்களுக்கு கிரகசாரப்படிக்குங் கணிதமுறைப்படிக்கும் ஆயுர்பாவபலன்கள் கூறுகின்றது

கன்னியும் புதனையும் சுக்கிரனையும் விருஷபத்தையும்மேஷமும் குசனையும் சனியையுங் கொண்டு ஆயுர்பாவங் கூறல்வேண்டும்.

புதன் சுக்ஷேத்திர உச்சமாகிக் குசன் சுக்ஷேத்திர வீட்டிலும் குரு சுக்கிரன் கேந்திரத்திலும் சனி திரிகோணம் முதலியதனதிடத்

தில் சுபபெலத்துடன் சந்திரன் கேந்திரத்தில் இருக்கினும் ஜென்ம லக்கினுதிபனும் சந்திரலக் னுதிபனும் சர இராசியில் இருக்குமாகில் சாதகனுக்கு சென் மலக்கினத்திற்கும் சந்திரலக்கினத்திற்கும் இருபாரிசங்களில் ரவி முதலிய குசன் சனி இல்லாதிருக்கினும் சாதகனுக்கு ஆயுள் வரு ௱௨௰-யென்றும் மேற்கூறிய கிரகங்கள் ஸ்திரத்திலேயே யிருக்கில் வரு ௱௰-யென்றும் உபயத்திலேயே இருக்கில் வரு ௱-யென்றும் சரவுபயத்திலிருக்கில் வரு ௯௰-யென்றும் ஸ்திரமுபயஞ் சாஸ்திரமாகில் வரு ௯௨-யென்றும் இவ்வித இராசிகளில் மாரிநிற்கின் வரு ௬௬-யென்றுங் கூறப்படுமென் றறியவேண்டியது.

புதன் சுக்ஷேத்திர உச்சமாணு லும் கேந்திரத்தினின்ற சூரியனைக்கூடியும் அவையிலு மிதுனத்தினில் அல்லது தனுசுவினின்று சந்திரனைக்கூடி நிற்கினும் குரு முதலிய சுபர் சந்திரனையல்லது சென்மத்தைப் பார்கினும் குசன் சுபக்ஷேத்திரத்தினிற்கிலும் சனி சரத்தினின்றாலும் புதன் குசன் உபயசரத்தினிற்கினும் ஜாதகனுக்கு வரு ௱-யென்றும் புதன் குரு ரவியுடன் கடகம் கன்னி மீனம் விருஷபத்திலிருக்கினும் சனி சுக்கிரனிவர்கள் ஸ்திரத்தில் குசனிருக்கினும் வரு அ௬-யென்றும் பாம்பு முதலிய பாவர் சேரில் வரு க௨-குறைக்கப்படுமென்றும் மேற்கூறிய சுக்கிரன் சுக்ஷேத்திர உச்சத்தில் குசன் ரவியையும் புதனைக்கூடினும் பெலமுற்ற கிரகங்கள் நோக்கினும் குரு சனி சரத்திலேயேயிருக்கில் வரு அ0-யென்றும் புதன்சுக்கிரன் இவர்கள் ரவியுடனிருந்து கன்னி துலாம் தனுசு மீனம் மிதுனமிவைகளிலும் சந்திர கேந்திரமாகி சனி குசன் சுக்ஷேத்திரமல்லது உச்சபெலத்துடனிருக்கில் சாதகனுக்கு ஆயுர்பாவ வரு எ௰-யென்றும் இவ்வித புதன் சுக்கிரன் சந்திரனிவர்கள் ௩-௬ அ-க௨-ல் இருக்கினும் கேந்திர கோணத்தில் குரு முதலிய ரவியும் சனியுமிருக்கில் அல்லது சந்திர கேந்திரமாகிலும் குசன் சுக்ஷேத்திர உச்சத்திலிருக்கில் ஸ்திரமுபயம் ஸ்திரம் ஸ்திரமாக இருக்கில் வரு ௬௬-யென்றும் சென்மகேந்திராதிபனுட னல்லது சிம்மம் துலாம் மிவைகளிலாவது சந்திரனுக்கு ௨-க௨-லாவது சனி ரவி முதலிய பாவர்களிருக்கில் சாதகனுக்கு வயசு க௩-வரைபாலாரிஷ்டநோய்க் கண்டமுண்டென்றும் குரு லக்கின கேந்திரத்தில் யிருக்கில் மேற்கண்ட பாலாரிஷ்டம் நீங்கி ஆயுள் விருத்தியையடைவனென்றும்.

குசன் கேந்திர கோணத்திலின்றி மற்றயஸ்தானமாகிய துலாம் கன்னி விருச்சிகம் கும்பம் மேஷம் கடகம் சிம்ம மிவையிலும் புதன் ரவி இவ்வித ஸ்தானங்களிலிருந்து குரு சந்திரன் கேந்திரத் திரிகோணமாகிச்

சுக்கிரன் ரிஷப மிதுனம் கன்னி துலாம் தனுசு மீனத்திலிருக்கினும் யெவ்வித பாவரைக்கூடினும் அவ்வித ஸ்தானங்கள் உபயம் உபயம் அல்லது திரவுபயமானாலும் ஜாதகனுக்கு வூடு சுஉ-யென்றும். இவ்விதமாகிய சுபர்களும் பாபபெலத்துடன் மேற்கூறிய இடத்திலிருக்கில் வூடு ௫ச-யென்றும் அசுபர்களே உ கஉ-லும் புதன் முதலியோர் நீசம் பகையாகி அசுபக்ஷேத்திரத்திலிருக்கில் வூடு சு மீ உ-க்குள் ஆயுளென்றும் கன்னி துலாம் தனுசு மகரம் மிவைகளில் புதன ரவி இருக்கினும் சுக்கிரன் குரு கடகமுத லாருக்குள்ளும் சனி மகரவிராசிமுதல் சு இராசிக்குள்ளும் சரமுபயமானவிராசிகளிலு மிருக்குமாகில் சாதகனுக்கு வூடு ௫உ-யென்றும் மேற்கூறிய சுக்ஷேத்திர உச்சகேந்திரகோணமின்றி குரு புதன் இவ்வித கிரகமிருக்கினும் சிம்மம் மேஷம் துலாம் சந்திரனுக்கு உ-பக்கங்களிலும் பாவர்களிருக்கில் சாதகனுக்கு வயசு ௫-லேயே முடிவாகுமென்றும் ஆயுள்தோஷமும் அடையுமென்றும் குசன் கேந்திரத்திலும் புதன் முதலிய சுபர்கள் துலாம் சிம்மம் விருச்சிகம் கும்பம் மேஷ மிவைகளில் மறைந்தும ஸ்திரமஸ்திரமாகினும் சாதகனுக்கு வூடு சசு-யென்றும் இவ்வித சந்திரலக்ன வசாத் சுபர்கேந்திரமாகில் மேற் கண்ட வயது யென்றும்.

புதன் மிதுன மேஷம் சிம்மம் கும்பம் விருச்சிகந் துலா மிவைகளிலிருந்து ரவியைக்கூடினு மல்லது தனித்துநிற்கினும் சத்துரு கிரகங்கூடினும் குரு முதலியோர் திரிகோண கேந்திரத்திலிருக்கில் சாதகனுக்கு சந்திரன் சனி இவர்கள் சரமுபயத்திநிற்கினும் வூடு ௯அ யென்றும் குருசுக்கிரன் பூரண சந்திரர் கேந்திரகோணத்தில் ரவி புதனைப்பார்த்தாலும் கூடினும் மேலே வருடம் பனிரெண்டென்றும் சுபர்களின்றி ரவி புதனுடன் சனி குசன் பாம்பு இவர்களிருபாபிகள் கூடினும் நோக்கினும் அமரபக்ஷ சந்திரனாகி யுரினும் வருஷம் ச-க்குள் இறப்பனென்றும்.

புதன் ரவி கன்னியிலல்லது மிதுனத்திலிருந்தும் சுக்கிரன் சுக்ஷேத்திரனாகி சந்திரகேந்திரத்தில் புதனிருக்கினும் சந்திர லக்னதிபதி சந்திர கோணத்தில் சந்திரனுடன் சேராமல் இருக்கினும் பாவர்க்ஷேத்திரங் கடுங்கோள்கள் குருவைக்கூடினும் நோக்கினும் சனிபாவர் வீடல்லது சம்மந்தமாகினும் நீசம் பகைபெற்றுவாழினும் கடகமுதலாரு இராசிக்குள் குருவும் மகரமுதல் சு-இராசிக்குள் சனியு மிருக்கின் வூடு சுசு-யென்றும் இவர்களுடன் பாம்பு முதலிய பெரும்பாவிகூடின் வூடு சுஉ-யென்றும் சரசரமாகில் வூடு எஉ-யென்றும் சரஸ்திரமாகில் வூடு சுசு-ம் சரமுபயமாகில் வூடு (சுகூ) ஸ்திரதிரமாகில் வூடு எ(-ம் ஸ்திரசரமாகில்

ஹூ௰ சூ௩-ம்ஸ்திரமுபயமாகில் ஹூ௰ சூக-ம்உபய உபயமாகில் ஹூ௰ ௫ச-ம் உபயசரமாகில் ஹூ௰ சூ0-ம் உபயதிரமாகில் ஹூ௰ சூஉ-யென்றுங் கூறு வாம் இவ்வித மேலேகூறிய புதன் ரவி புகர் இவர்களும் குரு சனியும் மேஷம் கடகம் துலாம் மகறம்கும்ப மிவையில் ஒன்றுகூடினும் தனித்து நிற்கினும் சந்திரன் குரு மீனம் கடகம் கன்னி துலாம் கும்பத்தில் தறி த்தலது ஒன்று கூடினும் மேற்கண்டபடி ஆயுற்பாவமென்றும்.

குசன் கடகம் சிங்கம் கும்பத்தில் இருந்தும் புதன் பாவறைக் கூடி னும் சனியல்லது குசன் சுக்ஷேத்திர இடத்தினின்றுலும் சத்துருவைக் கூடினும் சந்திரன் கன்னி இவைகளுக்கு (அ) (உ) (கஉ)-ல் பாவர்களிருக் கினும் ஹூ௰ ௩உ-க்குள் வயதென்றும் சுபர்களாகிய குரு சுக்கிரன் பூர்வ பக்ஷசந்திரன் மேற்கண்ட விராசியிலல்லது மகறம் விருச்சிகம் மேஷம் இவைகளி லிருக்கினும் ஹூ௰ உஅக்குள் மாரகமென்றும்.

புதன் சிம்மம் விருச்சிகம் தனுசு கும்பம் மேஷ விருஷபமிவை களில் ரவியைக்கூடினும் மற்றும் சனி முதலியர் அவறை யடுத்து நிற்கினும் க்ஷீண சந்திரனுகி வாழினும் குரு சனி மறைவு பெற்று வாழினும் ஜாதகனுக்கு ஹூ௰ உக-க்கு என்றும்.

க்ஷீணச் சந்திரனுகி விருஷபம் கடகம் கன்னி மீனத்திலிருக்கி னும் அல்லது ஸ்திரத்தி னின்றும் பகை பெற்றவரைக்கூடினும்புதன் ரவி முதலியோர் ஸ்திரமல்லது சரவிராசியாகிய மேஷ கடகம் து லாத்தில் இருக்கினும் குரு முதலிய சுபர்கள் (எ) (அ) (கஉ) (கக) (௩) இவ்வித இராசிகளி னிற்கினும் ஹூ௰ கஉ-க்குள் யென்றும் விருச் சிகம் கும்பம் கடகம் சிம்மம் இவைகளில் சனி செவ்வாய் முதலிய பாவரிருந்து இரெண்டுக்குக் குறையாத பாவிகள் கூடியும் குருமுத லியோர் பகைநீச இடத்திலும் மேலேகூடிய ராசிகளிற் பாவருடன் கூடினும் க்ஷீணசந்திரன் விருச்சிகம் மேஷம் சிம்மம் இவைகளில் சனி பாம்பு முதலிய பாவறைக்கூடினும் திங்கட்கிழமை சித்திரை நக்ஷத்திரமும் மங்களவாரம் உத்ராடமும் ஞாயிற்றுகிழமை பரணி யும் குருவாரம் கேட்டை நக்ஷத்திரத்திலும் புதன்கிழமை யவிட்ட மாகினும் சனிவாரம் இரேவதியாகினும் வெள்ளிக்கிழமையும் பூராட மாயினும் பூராட முதர்க்காலாயினும் பூசநக்ஷத்திரம் உ-ம் பாதமா யினும் சித்திரை இரெண்டாம்பாத மானுலும் உத்திரத்தில் முதற் பாதமாயினும் மூலத்தில் மூன்றுக்குள் பட்டபாதமாயினும் மகத் தில் முதர்பாதமானுலும் ரேவதி கேட்டை ஆயிலியம் மிவையின்

பின் பாதமாயினும் பாலாரிட்டத்துடன் (ச) (எ) வருஷங்களுக்குள் மாதா பிதா சிசு இவைகளும் போமாம் எவ்வித லக்கின சாதகனுக்கும் இந்நக்ஷத்திர தோஷத்தை யனுசரித்துக் கொள்ளல்வேண்டும் (ச) (எ) மாதம் ச-எ-நாட்களுள்ளு மரணம் பாலாரிஷ்டம் கற்ப மிவைகளை கொடுக்கப்படு மென்றுங் கண்டறியவேண்டியது.

ஆயுர்பாவ மிவ்விதமரிந்து கொண்டபின் கணித முறையின் விதிகள் கூறுவாம் சனியுடனும் புதனுடனும் சுக்கிரன் குசன் இவர்களுடனும் மேஷம் கன்னி சந்திரனுடனுங்கூடிய கிரகி யெண்களையும் சனிக்கி யெட்டாதிபனின்ற இடத்ததிபனுடனும் குசனுக்கு யெட்டாமதிபனின்ற இடத்ததிபனுடனும் கூடிய கிரக யெண்களை. சுபாசுப பெலன்களும் மேஷம் சிம்மம் இந்த இலக்கினத்திற் கண்டபடி யெடுத்துக்கொண்டு இராசியெண்களால் 'பெருக்கிய துகையை ஷட்பல முதலாகிய கண்ட பெலன்களுக் கிசைந்தபடிக்கித் தள்ளியல்லது கூட்டிய துகைகளை ஒன்றுபடுத்தி கூ-ல் கழித்த சேஷந் திசையும் இதில் வந்த ஈவை ரு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேடம் புக்திகள் மாரக திசாபுக்திகளாகும் மேலேவந்த துகையை ௱உ0-ல் கொடுத்த சேஷம் க0-மாதங்கொண்ட ஆயுளென்றும் கண்டறிதல் வேண்டும் இவைகளை மேஷலக்கின கண்டனையிற் கூறிய சவ்யாப சவ்ய விதிகளின்படி திசாபுக்திகளைப் பார்தரிந்து பகரவேண்டியது

உ-வது தனகுடும்பாதி நேத்திராதிபலன்கள் கூறுவாம்.

சுக்கிரன் சுக்ஷேத்திரமல்லது உச்சத்திலும் குருவுக்கு இரண்டாமதிபன் சுபக்ஷேத்திரத்திலும் சுபருடனே கூடியும் குருகேந்திர கோணத்திலிருக்கினும் உ-கஉ-ல் பாவரின்றியும் குருவுக்கு உ-கஉ-லுமிவ்விதமே யிருக்கினும் சாதகன் பரம்பறையான தனவந்தனகி கோடியாந்திரஸ்திதி யுடையவனகி வாழ்வன் இதில் சுக்கிரனுடனே பாவரின்றி சுக்ஷேத்திரத்தில் மாத்திரம் நின்றும் சிங்கத்திலாவது துலாவிலாவது குசனல்லது சனி நீங்கிய பாவர் இருக்கினும் குருவுடனும் பாவர்கூடி பகை க்ஷேத்திர முதலிய பாவர் வீட்டில் குருவிருக்கினும் குரு நின்ற கூ-ல் குசன் முதலிய பாவரிருங்கினும் அவ்வதிபன் பெலமுற்றவருடன் கேந்திரத்திலிருக்கில் பிதுர் பிதுர் பூர்வார்சித தனமின்றி தகப்பன் காலத்திலும் சாதகன் காலத்திலுங்கூடி லக்ஷாந்தரம் வறைக்குள் தனந்தேடுவன்யென்றும் ஸ்தானதிபதியுங் கெடில் தகப்பனுடைய தனமுமில்லாமல் சுயார்சிததனம் தச சகஸ்திரக்கணக்குள்ளவை சம்பாதிப்பனென்றும்

சுக்கிரன் குரு உச்சமல்ல கேந்திரகோணத்திலிருக்கினும் சூரியன் புதன் இவரைக்கூடி சர திர இராசியிலிருக்கில் சுயார்சிதமே லக்ஷக் கணக்காய்சேர்பனென்றும் இவ்வித சுக்கிரன் குரு ௩-௬அ-கஉ-மிட மாகினும் சுபக்ஷேத்திரமாகி சுபர் நோக்குஞ் சேற்கையுடனும் குருவுக்கு பாக்கியாதிபன் சுக்கிரனுக்கு பாக்கியாதிபன் கூடி கேந்திர கோணமல்லது சுக்ஷேத்திர உச்ச இடத்தில் இருக்கினும் சுக்கிரன் கெட்டபெலனல்லது பாவருடன் கூடினாலும் உ-கஉ-மிராசியில் பாவரிருக்கினும் பூர்வார்சிதம் அதிகபிரபலமாக லக்ஷாந்திரமாக விருந்து சாதகன் காலத்தில் குறைந்து வரப்படுமென்றும் சுக்கிரன் குரு கேந்திரகோணஞ் சுபபெலனுறிய க்ஷேத்திரத்தில் வசிக்கில்பிதுரார்சிதம் எவ்வளவுவகை சேரினும் பின் விடாமல் காப்பாற்றிவருவன் அதிகசம்பாதனஞ் செய்யானென்றும்.

சுக்கிரன் குரு முதலியோர் நட்பு இடமாகிய கன்னி துலாந் தனுசு மிதுன விருஷபம் மீனம் கடகம் மிவைகளிலிருந்து புதன் அல்லது பூரணசந்திரனைக்கூடினும் சந்திரகேந்திரத்திநிற்கினும் ஓர் அசுபரும்கூடாமலிருக்கில்லக்ஷாந்தர தனவந்தனென்றும்இதில்ஓர்பாபிகள் கூடி இருக்கில் தசாந்திர சகஸ்திர தனவந்தனென்றும் இரண்டுபேரும் பாவராய்க்கூடில் சகஸ்திரக் கணக்குள்ள தனவந்த லாபனென்றும் ௩-க்கு மேற்பட்ட பாவர்கள் கூடில் சதாந்திரத்துக் குள்ளாகிய தனவந்தனென்றும் ஸ்தானாதிபதிகள் பெலத்து நிற்கில் சகஸ்திர கணக்குள்ள தனவந்தனென்றும் ஸ்தானாதிபதிகளும் பெலமற்றவர்களாகியும் பாவருடன் கூடினும் தரித்திரனாகியும் ரொணஸ்தனாகியும் வாழ்வனென்றும்.

குரு சுக்கிரன் மேஷம் விருஷபம் கடகம் சிங்க மிவையிலும் விருச்சிக மகரம் கும்பமிவைகளில் ரவி புதன் கூடினும் குருவுக்கு கூ-அதிபதி கூடினும் பெலத்துடனிருக்கினும் தனமானது தசசகஸ்திர முடையவனென்றும் இவ்விடங்களிலிருக்கும் மேற்படி கிரகங்களுடனாவது அவர்கட்கு யேழிலாவது சனிமுதலியபாவரிருக்கில் சகஸ்திராந்தர தனமுடையவனாகி வாழ்வனென்றும் இத்துடன் குரு கன்னி தனுசு மீனம் விருஷபங் கடகத்திலும் சனி அவைகளுக்கு உ-கஉ-லும் இருக்கினும் சுக்கிரன் சனி க்ஷேத்திரமடைந்து சனியைக்கூடினும் அல்லது நோக்கினும் புதனுடன் சுக்கிரன் ரவியைக்கூடி யல்லது விட்டிருக்குமாகில் தசசகஸ்திரதன முதல் லக்ஷாந்திர தனஞ்சம்பாதனையானாலும் உடனுக்குடனே விரயமாகி விடுவனென்றும் ரவியைக்கூடில் தசசகஸ்திரத்துக்குள்பட்ட பொருள் கூடினும் விருத்தியடைவனென்றும் அவையை சனி யல்லதுகுருசன்

பார்க்கினுங் கூடினும் அவ்விதப் பொருளையு முன் ஆர்சித தனத்தையும் இழப்பனென்றும் அவ்விதவிடங்களிலுள்ள கிரகங்களுடன் குரு சனி ரவி மூவர் கூடினும் அல்லது குசன் சனி கூடினும் அல்லது நோக்கினும் பிறந்த சாதகன் தனமும் பூர்வார்சிதம் அரசர்களுக்கும் அக்ரமத்திற்கு கள் முதலிய மத்தியபானம் பரஸ்திரீகளுக்குங் கொடுத்தழிப்பனென்றும் ரவி யல்லது குசன் கூடினும் நோக்கினும் உறியபொருவிவாதத்தினலழி யுமென்றும் சுக்கிரன் குரு இவருடன் பெலமுற்ற ரவி புதன் கூடினும் கேந்திரகோணம் கடகத்திலிருக்கினும் பெலமுற்ற ௨-௧௨-மிடங்களில் பாவர் சுபர்வாழாமலிருக்கில் விவாதங்களாலும் அரசர்களாலும்பொருளை முன் சில்வழித்துப்பின் இருமடங்குடனும் பிரபலத்துடன் சம்பாதிப்ப னென்றும் மிகவுங் கீர்த்திபெருவனென்னும் சிம்மம் சனி யிருக்கில் சில வழிக்க மனதின்றி இருந்தாலும் தெரியாவையாகப் பொருளையழித்து கீர்த்திபெருவனென்றும்.

சுக்கிரன் சந்திரகேந்திர புதனுகி லக்னவசாத் ௩-௬-௮-௧௨-ல் இருக் கினும் புதன் முதலியோருடன் கூடினும் ௨-௧௨-ல் பாவரிருக்கினும் சுவய சம்பாதனை பிரபலமாயினும் பிரியமாட்டான் யென்றும் குரு முத லியோர் கன்னி தனுசு மிதுனத்திலிருக்கில் முன் வயதில்தேடிய பொரு ளழிந்து பின் வயதில் தனந்தேடுவனென்றும் அவைவிருத்திக்கி வரப்படு மென்றும் சனி முதலிய குசன் ௨-லும் குரு முதலிய சுக்கிரன் துலாம் விருச்சிகம் மகரம் மேஷமிவையிலும் சந்திரன் விருச்சிகம் சிம்மம் யென் னுந் திரவிராசியிலும் வாழில் யெப்பொழுதுங் கடனுக்கே பொருளையழி த்து விடுவனென்றும் சந்திரன் குரு சுக்கிரன் கேந்திரகோணத்திலும் சுபக்ஷேத்திர பெலத்துடன் ஓர் பாவரைக்கூடினுலுந் தனித்தாலும் ரவி குசன் சுக்ஷேத்திர இடமல்லது திரவிராசிகளினின்றாலும் கடன்கொடுக் கும் முதலாளி யென்றும் பிரபல தனுர்சிதத்துடனும் வாழ்வன் இவரு டன் இரண்டு முதலிய பாவர்கள் வாழில் கடையில் பொருளை அனேக பாவமழிந்து நஷ்டஞ் செய்வனென்றுங் கள்ளர் முதலியவரசரால் பொரு ளழியுமென்றுங் கண்டறிதல் வேண்டும்.

குடும்பபலன்.

௨-௧௨-ல் சுபரிருக்கினும் குரு முதலியோர் கேந்திரகோணராய் சுபர் வீட்டினின்றாலும் பெலத்துடைய சந்திரகேந்திரமாகி வாழினும் இவர்களைப்பாவர்கள் கூடாமல் நோக்கமின்றி அசுபபெலனின்றிய மிருக் கில் குடும்பம் பிரபல விருத்தியுடன் சுகக்ஷேமனுப் சாதகனுள்ளவரை விருத்தியாகும் இவைகளில் பாவராகிய சனி குசன் ரவி பாம்பு முதலி

யோர் பெலயீனர்களாகி இருக்கில் பிறந்தவன் குடும்பம் விருத்தியின்றி அடையும் தரித்திரத்துடனு முண்டாகும்.

சுக்கிரன் சந்திரனிவர்கள் சுபட்க்ஷேத்திரத்தில் சுபபெலத்துடன் பாவர் சேராமல் பார்க்காமலிருக்கில் குடும்பம பிரபல விருத்தியுடையவ னென்றும் இதைப் பாவராகிய குசன் சனி முதலிய பாம்பு கூடினும் நோக்கினும் சாதகன் குடும்பம் சிலநாள் விருத்தியும் சிலநாள் விருத்தி யற்றும் அடையுமென் றறியவேண்டியது.

நேத்திரபலன்.

சுக்கிரன் விருச்சிகம் சிம்மமாகிய திரத்திலும் மேஷம் இவைகளி னின்றும் சூரியன் சனி குசன் இவர்களி லெவரைக்கூடினும் சூரியன் துலாம் சிம்மம் கும்பம் இவைகளில் பலவகையான பகைவருடன் கூடி நீசம் பகை முதலியவரைக்கூடினும் உ-கஉ-லும் சூரியனுக்கும் சுக்கிரனு க்கும் இரெண்டு பனிரண்டினிற்கினும் குசன் சனி ரவியுடன்கூடி யெத் தலத்தினின்றும் மேலாகிய நேத்திரரேகத்தினால் நேத்திரம் கெடுமென் றும் இதில் சனி ஒருபாவியுடன் புதன் ரவி கூடினும் யேழுக்கேழாக நின்றாலும் பிறந்தவ நேத்திர வீனனவனென்றும் காணல்வேண்டும்இதில் கஉ-வது இடத்தி லிவ்வித பாவர்கள் பகை நீசம்பெற்று ஸ்தானமாவது ஸ்தானதிபதி யாவதிருக்கில் இடதுநேத்திரங் கெடுமென்றும் உ-ல் இவ் வித பெலமற்றவரிருக்கினு நோக்கினும் வலது நேத்திரம் போகுமெ ன்றும் இதில் ஓர் மதியல்லது குரு கூடினு நோக்கினும் அல்பஹீன நேத்திரமாகிப் பிணியுள்ளவ னுவானென்றும் ஓர் பாவரின்றி சுக்கி ரன் சுக்ஷேத்திர உச்சகேந்திரமாகி சனிமுதலிய பகை பாவர்கூடா மலும் இரெண்டில் அசுபரில்லாமலும் பனிரெண்டில் பாவரின்றியும் இருக்கில் குரு நோக்கமும் இருக்கினும் நேத்திரசுகமுடையவனுகி னும் அல்ப உஷ்ணமாகி இருந்துவருமென்றும் அரியவேண்டியது இரெண்டு பெரும் பாவரில் சனி குசனுகில் மேக ரெக்த நோய்த் துன்ப நேத்திர பீடையும் மதி பாப பெலத்துடன் வாழில் நீர்க் கண்ணும் சுக்கிரன் பாபபெலத்துடன் வாழில் பூவிழுந்த நேத்திரம் வெண்மை நேத்திரமும் புதனுகில் மாலைக்கண் ணுள்ளவனுகியும் வாழ்வன் யென்றரியவேண்டியது.

மேஷம் கடகம் கன்னி இந்த லக்கினமும் கும்பம் விருச்சிகம் இந்த லெக்கினத்தில் பிரந்தவர்களுக்கும் நேத்திரநோயல்லது நேத்

திர ஊனமாவது அல்லது அடையாளமாவதும், விருத்தாப்பியகாலத்திலாவது நேத்திரமேக நீரிரணுதி அல்ப உபாதியாவது காண்பிக்குமென்பவை யரிய வேண்டியது.

வாக்குபலன்கள்.

சுக்கிரன் துலாவிலும் விருச்சிகத்தில் குருவும் சந்திரன் ரவி கேந்திரத்திலும் சுபசம்மந்தம் சுபர்நோக்கம்பாற்கில் வாக்குவிஷேசம் சத்தியவா னுகியும் தாக்ஷணியனுகியும் கண்டிப்புடையவனுகியும் அஞ்சாதவனுகியும் கவனசக்தியும் நிர்மானுரூபனுகி யாருமதிக்கச் சபையிற் பேசவுஞ் செலுத்தவும் வல்லபனுகவாழ்வன் யெவரையும் நிகர்பண்ண மாட்டான் நன்மையான வாக்குடையவனுகி வாழ்வான் இவர்களுடன் குசன் இருக்கில் கோபவாக்கு அபசப்தன் ஒரேவித பிடியன் புதனுகில் சவுமியனுகியும் கணித முதலிய வாக்குடையவன் குருவாகில் சாஸ்திரவேத நீதிவாக்கனுகினும் முடிவு பெருன் விரதஞ் செய்வன் சனியாகில் மந்தத்தனமும் பொய்யும் சொல்வன் பாம்பாகினும் அப்படியே பொய்யனுகியும் வாழ்வன் மேலுக்கு மாத்திரம் பிரருக்கு சத்திய வசனம் உருதிசொல்லவேண்டுமென்று உபதேசிப்பன் தான் செய்வது யெல்லாம் பிசகும் அசத்தியவானுய் வாக்பலிதமின்றி வாழ்வன் நோக்கினும் இவ்வித பலனே யாம்.

சுக்கிரன் புதன் (௬) (௬) (௮) (௧௨) மிடமாகினும் பூர்வபக்ஷ சந்திர னல்லது குரு முதலிய சுபரைக்கூடினும் னேக்கினும் இவரிருக்கு மிரண்டாமிடம் சுபர்வீடாய் குரு முதலியோர் நோக்கினும் இருக்கினும் வாக்கைவிற்று சீவிப்பன் அதி மேதாவியாகியும் வாக்சாலனுகியுங் கணித முதலிய சோதிடாதி வல்லபனுகியும் மிகவும் பிரபலவானுவன்.

புதன் சுக்கிரன் சுட்சேத்திர உச்ச கேந்திரகோணங் கடகமிவையிலும் சிங்கத்திலிருக்கினும் அவ்வீட்டதிபர்களைக்கூடி இருக்கினும் சில பாவர்கூட வல்லது னேக்கினும் சுக்கிரனுக்கு இரண்டாமிட மல்லது அதிபதியுடன் பாவர் சுபர் கலர்ந்திருக்கினும் பாவராயிருக்கினும் சில ஜோதிஷம் முதலிய அதிக பிரியமும் பல நூர்க்களையும் பார்ப்பன் தேர இடமில்லான் கற்றரிந்தவரை பெலமுடையவன் வாக்கு பலிதனுவன் இவருடன் நீசம் பகைபெற்றவரிருக்கினும் பாவர் கூடினும் வாக்கு பலிதமின்றி அவ்வாக்குடையவன்

சிம்மம் கடகத்தில் சூரியன் புதன் சுக்கிரனிருக்கில் அரசவித்தை வாக்குடையவனுகினும் அதிக விருத்தி இல்லான் கன்னி முதலிய சுபக்ஷேத்திரத்திலு மிதுனம் துலாம் விருஷபம் தனுசு இவையில் வாழில் சுதேசபாஷையில் விவேகி வாக்கு விசேஷ முடையவன் மகர கும்பமானுலும் இப்படியே தமிழ் முதலிய வித்துவத் திறமை யாகினும் சனி முதலிய பாவர் திரராசியிலிருந்து நோக்கமாகில் அப்போதைக்கப்போ கொஞ்ச மறதி சமயத்திலுண்டாகும் குரு கேந்திரத்திலிருக்கில் வாக்கினல் சமயத்தில் செயிப்பனென்றரிய வேண்டியது.

பாவர் துலாவிலாவது சுக்கிரனுடனே சனி மூதலிய பாவர் வாழில் வாய் நாற்றமுடையவன் யென்றரியவேண்டியது சூரியனு டன் சுச்கிரனவது கன்னியிலாவது நின்ருலும் கணிதம் முதலிய சோதிடப் பிரியனுகியும் இராசவித்தை யல்பவானுகியும் திடீரென்ற சொற் பொருக்காத வாக்கு படபடப்புடையவனுவன் முன்கோபி பின் சாந்தனுகி தானேவருத்த மடைவனென் றரியவேண்டியது.

சகோதிரபாவபலன்கள்.

குசன் சுக்ஷேத்திர உச்சனுகி கேந்திர கோணத்தில் சுபக்ஷேத் திரங்களிலிருக்கினும் அல்லது குசனுக்கு மூன்று பதினென்றிலும் ரவி குரு முதலியோரான சுபரிருக்கினும் அவ்விடத்ததிபன் சென்ம லக்கின கேந்திரத்திலாவது சந்திர கேந்திரத்தில் சுபருடன் கூடினும் விருச்சிகம் மகர மிவைகளில் சூரியன் குசன் குரு இவ்வித புருஷ கிரக மிருக்கினும் ஆண் சந்ததி யதிகமுடைய சகோதிரனென்றும் அவ்வித கணக்கிற்குக் குறைந்த பெண் சந்ததியென்றும் சுக்ஷேத் திர உச்ச கேந்திர கோணத்திலிருக்கினும் சந்திர வசாதாவது அவ் வித பெலன் பெற்றிருக்கினும் மூன்றுக்குள் மேற்கூறிய புருஷ சந் ததி விருத்தியுடைவனென்றும் சுக்ஷேத்திர உச்சம் கேந்திரகோண மாகில் பின் சகோதிரர்கள் அதிக பிரபல யோகமுடையவர்களெ ன்றும் பெண் சந்ததி ஒன்று முதலாகிய அர்ப்பசந்ததி யுடையவ னென்றும் சனி குசன் கடக முதலிய இடத்தில் குசனிருக்கில் பிற ந்த சகோதிரர்களிலும் முன்னனேர்ஜாதகனுக்கு குறைவானயோக முடைவர்களென்றும் கேந்திர கோணத்திலும் சந்திரன் பூர்வபக்ஷ னுக வலுத்து குரு கேந்திரமேரியிருக்கில் சாதகனைவிட அதிகயோக முடையவர்களென்றும்மிகுதியானபிறபல கீர்த்தியுடையவர்களென்

றும் குசன் பலகீனனாகி கடக சிம்மம் மேஷ மிவைகளிலின்றாலும்சனி முதலிய பாம்பைக்கூடினும் சுபர்சம்மந்த திருஷ்டி இன்றியும் சந்திரவ சாது மறைந்து அபெலர்களால் பகை நீச கிரகத்திலும் ஸ்திரவிராசிகளி லிருக்கி சகோதிரமில்லான் யென்றும் விருச்சிகம் கடகம் மகாம் குசனு க்கு மூன்றுதிபனின்ற வீட்டதிபன் இவ்விதம் பகை நீசவிராசிகளில் அசுபகிரகத்துடன் சனி முதயோர் கூடி நிற்கினும் பிறந்தவனுக்கு சுபர் சேரவாவதுநோக்கமில்லாமலாவதிருக்கில் சகோதிரமானதுகிடையாதென் றும் இருபாபமத்தியில் ஓர் சுபர் குரு நீங்கியவர்களிலிருக்கில் பிறந்தசாத கன் சகோதிரங்கள் மறித்துவிடும் யென்றும் அடுத்த சந்ததி நிலையாது யென்றும் குசன் பாவக்ஷேத்திரமாகிய சனிரவிபாம்பு வீட்டில் ஓர்பாவர் களைக் கூடினாலும் தனித்தாலும் பிறந்தவன் அடுத்த சகோதிரம் போய் விடுமென்றும்.

குசன் புதன் ரவி முதலியோரைகூடாமல் தனித்து ரவி சனி க்ஷே த்திரத்திலிருக்கினும் சந்திரனுக்கு மறைவிடத்தில் வாழினும் பகையோ ரைநோக்காமலும் குரு முதலிய சுப திருஷ்டியுடனும் குரு முதலியசுபர் மூன்றைந்திலிருந்து பாவர் ஒருவரைக்கூடினுமல்லது சுபர் நோக்கினும் குசனுக்கு மூன்றுமிடத்ததிபன் சுபக்ஷேத்திர உச்சமல்லது கேந்திரகோ ணத்திலிருக்கினும் பாவக்ஷேத்திர மில்லாமலும் பாபர் பார்க்காமல் அல் லது சேராமலிருக்கினும் பதினொன்றுக்கதிபன் பஞ்சமிக்குள்ளடங்கிய சந்திரன் பூர்வபட்சனாகி கேந்திரகோணஞ் சுபர் வீட்டிலும் சந்திரனுக் கும் கடகத்துக்கு இருபக்கங்களிலும் பாவரின்றி இருக்கில் ௪-க்கு மேலா யகி சந்ததியுடன் சகோதிர விருத்தியுடையவ னென்று பிதாவுக்கு மறு மனைவி வம்சஸ்தனென்றும் மேற்கூறியசுபரிருக்குமிடங்களில் சுபரின்றி குசன் சனிமுதலியவரிருக்கினும் விருச்சிககேதுவுடன் ஓர்சுபரும்குசன் பார்க்கினும் தந்தையின் மறுதார வம்சனிவனுடன் சந்ததி ௨-ம்சுக்கிரன் குசனுக்கு ௩-டு-ல் பெலத்துடனிருக்கில் பெண்சந்ததி யல்பமானவை விருத்தியென்றும் சந்திரகோணமாய் விருச்சிகமும் சந்திரலக்னதிபன் சுபனாகிய ஸ்தானத்திலும் குசனுக்கு வைந்தாமதிபனும் அவனாகி பெலத் துடன் நோக்கினும் பின்னும் பிரபலசகோதிரமானது பிதாவின் மறுதார வம்சர்களாகி ௩-க்குமேல்பட்ட மொத்தசந்ததி ௬-க்குமேல் ஸ்திரீ புரு ஷாள் ௧௨-க்குள்பட்டவை வரையில் பிரிதி யுண்டென்றும் குசன் மூன் றிலிருக்கினும் நோக்கினும் சகோதிர ஒற்றுமையடையான் குசனுக்கு மூன்றுதிபன் சுக்ஷேத்திர உச்சம் பகைவீடில்லாத சுபர் வீட்டிலிருக் கினும் வேறுபாவரைக் கூடாமலும் தனக்குறிய இஷ்டருடனிருக்கில்

அத்தியந்த இஷ்டத்துடன் சகோதிரர்கள் வாழ்வார்களென்றும் புதனாகி ரவியுடன் சோக்ஷேத்திராதிபனுடன்கூடி ௩-௬-௮-௧௨-ல் மறைந்தாலும் குரு முதலிய சுபர்நோக்கில் ௩-வகை சகோதிர விருத்தியில் ௨-பேர்கள் மாத்திரம் அன்னியோன்னிய அதிக இஷ்டத்துடன் சகோதிர பிரபல யோகமும் குசனுக்கு மூன்றும் விருச்சிக மிவைகளையும் குசனுக்கு பதினொன்று கடகமிவைகளையும் சனி குசன் முதலியவர்கள் அபெலராகியும் பகை நீசர்களாகியும் நோக்கமல்லது சேரினும் ௨-பாவர் நோக்கமல்லது சேரினும் சுபரிருந்து பாபபெலஞ் சாஸ்தியாகினும் பிறந்த சகோதிரன் சிலநாள்வரை விருத்தியாக இருந்தும் அதிமேதாவி புத்திசாலி யாகினும் ரூபவந்தனாகினும் குடும்ப விருத்தியினின்றும் பாலியத்திலயே மரணமும் தப்பினால் களத்திர புத்திரர்களை யிழந்தும் தேககிருசத்துவமும் ரோகி யாகியும் எவ்வனவயதினுள் சாதகனிருக்கவே மரணமாகி அவ்வித துக்கங்களை சாதகன் அனுபவிப்பனென்றும்.

குசன் சுக்ஷேத்திர உச்சகேந்திரமாகிய துலாம் கன்னி மிதுனம் மகரம் தனுசு விருஷபம் மீன மிவைகளில் நின்றாலும் கடகத்தினின்றாலும் குரு சுக்கிரர் முதலிய பூரணசந்திரன் இவர்களின் திருஷ்டியல்லது கூடினும் கேந்திரகோணத்தி லிருந்தாலும் சனி குசன் முதலியோர் பெலத்துடன் சேரினும் ரவி புதன் கூடினாலும் ௧௪-க்கு மேற்பட்ட சகோதிர சந்ததிகளையும் தகப்பன் பல மனைவியையும் புணருவனென்றும்.

இதில் இரெண்டுவிரோதி சேரினும் சிம்மம் விருச்சிகம் மேஷமிவையிலும் மகரத்திலும்குசனிருக்கினும் குசகேந்திரமாகியும் லக்கினத்துக்கு மூன்றைந்து பதினொன்றிடங்களாகிய குருவீட்டில் சுபராகிய பூர்ணசந்திரன் சுக்கிரனிவர்களிருக்கினும் ஒருபாவர்கூடினு மல்லது தனித்தாலும் ௫-க்கு மேலாகிய ௮-க்குள் பரஸ்திரீ புருஷ சகோதிர சந்ததி பிதாவினாலுண்டாகப்படுமென்றும் இவ்வித இராசிகளில் அசுபரேநின்று ௨-முதலிய பாவருடன் ஓர் சுபன்கூடில் அல்பமான ௨-௩-க்குள்ளடங்கிய சகோதிரசந்ததியும் சம சுபரிருக்குமாகில் ௪-க்கு மேலான சகோதிர சந்ததியும் ௩-முதலிய அதிக பாவருடன் ஓரிரண்டடங்கிய சுபர்கூடில் ஓரேசந்ததி முதல் இரெண்டுக்குள்பட்டவை யென்றுஞ் சுபபெலனின்றி பாபபெலனதிகமாகில் சகோதிரமே கிடையாதென்றும் ரவி முதலிய பாவர் பகை கிரகத்தோடு சனி குசன்கூடி பாம்புநோக்கத்துடன் சுப விஷயமான சம்பந்தம் பார்வையின்றி குசனீங்கிய பாவர் விருச்சிக மகரம் இவைகளிலும் குசன்கூடிய பாவர் கடகம் துலாம் கன்னி மேஷமிவையி னிற்கினும்பாம்பைக்கூடினும் உடன் பிறப்பேகிடையாதென்றும் அசுபபெலத்துடன்

துலாம் விருச்சிகம் தனுசு மகரம் கும்பம் மீனம்விருஷபம் மிதுன மிவை களுக்குள் இருக்கில் உ-முதலிய அற்பசகோதிர விர்த்தியுடையவனென் றும் குருமுதலிய சுபர்நோக்குமாகில் விருத்தியான அந்தியவரை அவ்வித அல்ப சகோதிரமாவது நிலைக்குமென்றும் பாபபெலத்துடனேகூடி இருக் கினும் நோக்கினும் சகோதிரமிருதென்றும் சுக்கிரன் சந்திரன் கூடினும் நோக்கினும் பெண்ணொழிய புருஷனிராதென்றும் குசன் ரவி குரு முத லிய சுபர் நோக்கமாவதல்லது கூடில் ஆணேதீர்க்க மல்பமென்றும் இவர் கள் சுக்ஷேத்திர கேந்திரமாகில் பெலத்துடனிருக்கில் யேராளமான பிர பல சகோதிர மதிகமும் யோக பிரபல மல்பமாகவுஞ் செனிப்பார்களென் றுங் கூறப்படுமென்றறிந்து கூறல்வேண்டியது.

சுக்கிரன் சுட்சேத்திர உச்ச கேந்திரகோணத்திலுஞ் சுபர்வீடாகி குசன் மூன்று ஐந்து முதலிய இடத்தினிற்கினும் நோக்கினும் சங்கீத சாஸ்திர லீலாவினோதப் பிரியனுகியும் பிரசங்கியாகியும் பலமாதர் போக மும் குசன் பெலத்துடன் சொட்சேத்திர உச்சத்தில் வாழில் விதவை மாதரைப் புணருவனென்றும் கேதுவிருக்கினுமவ்விதியே வலுவிற்போக மும் ஷை கேது நோக்கினும் அவ்விதபோகமும் கடகம் மிதுன தனுசு துலாம் மீனகன்னி இவையில் குசனும் சுக்கிரன் முன்கூறிய இடங்களி லேயே இருக்கில் பரஸ்திரீபோகனுகியும் மங்கலஸ்திரீ முதற்போகனும் சுக்ஷேத்திரம் கடகத்தில் தனுசுகன்னி மீன மிவையில் குசனுகினும் குசன்பக்கத்திலாவது லக்கினத்தின் பக்கத்திலாவது குசனையாவது விருச்சிகத்தையாவது சுக்கிரனையாவது சுக்கிரனுக்கு மூன்றுமிடத்தை யாவது சனிமுதலியர் நோக்கினு மிருக்கினும் அவையவக்குறைவு அங்க அடையாளமுள்ள உயர் குலம் பெண்ணை புணருவனென்றும் மற்றய இராசிகளில் குருமுதலிய சுபருடன் சுக்கிரனைக்கூடி இருக்கின் உயர் குலப்பெண்ணைப்புணருவன் என்றும் அவையில் சனிரவி முதலிய பாம் பாகிய பாவறைக் கூடவாவது அல்லது நோக்கினும் தான் குலஹீனம் பெண்கள் ரூபியைப் புணருவனென்றும் அதிகமோகாக்கிருந்தனுகிவாழு வன்யென்றும்.

பாபபெலத்துடன் குசன் இருக்கினும் சனியல்லது சனிபோ லொற்ற பாவர் மூன்றைந்தெட்டு சுக்கிரனுக்கு அவ்வித இராசியில் அல் லது கேந்திர மானதி னின்றாலும் பாவராகிய சனிமுதலியோர்கள் சுக் கிரனைப் பார்த்தாலும் குசனுக்கு அஷ்டமாதிபதி யிருந்த வீட்டானை பார்த்தாலும் பெண்களால் மிகவும் அவுமானத்தையும் துன்பத்தையும் போகத்தின லவுமானத்தையும் அடைந்து மிகவும் பலவித கஷ்ட பலன் களேயடைவனென்றும் கூறப்படுமென்றும் அரியவேண்டியது.

குசன் சந்திரன் அவர்கள் நின்ற இடத்ததிபனுடன் விருச்சிக கடக மிவையில் சுபாசுபபெலக்கிரகயெண்கூட்டி குசன் சுபாசுப யெண்ணில் கொடுத்த சேஷம் சகோதிரம் தீர்கம் பெண்கிரகம் ஆண்கிரகங்கண்டு சொல்லவேண்டியது.

நான்காம்பாவம் வாகனம் பூமி வியாபாரவித்தை இவைகளும் மாதுருமுதலிய வாகன பாவங்கல் கூறுவோமாக.

குரு சந்திரனையும் சந்திரனுக்கு நாலாமதிபனையுங்கொண்டும் தனுசு விராசியையுங்கண்டு மாதுருபலனுறைக்கவேண்டியது.

குரு நின்ற விராசிக்கதிபனின்ற கோள்க்களையுங் கொண்டு சொல்லும் விதியுமுண்டு.

கண்டககேந்திரமான (௪)(௭)(௧௦) ஆகிய இடங்கள் தவிர்ந்த வீட்டுகளில் சந்திரன் விருச்சிகமேஷம் நீங்கிய இடத்தினின்றும் குருமுதலிய சுபர்நோக்கம் இவ்வித இராசிகளாகிய கண்டககேந்திரங்களில் குருவும் இருந்து சந்திரன் சுக்கிரன் கன்னி மீனத்தி னின்றாலும் சந்திரனுக்கு இருபக்கத்திலும் பாவருகிய சனி பாம்பு முதலியோரில்லாமலும் உச்ச சுக்ஷேத்திரமல்லது கன்னியில் குருநிற்கினும்நட்பினின்றாலும் சந்திரனுக்கு நாலாமதிபனின்ற இடத்ததிபனின்ற வதிபனோடு சுக்ஷேத்திரத்திலிருக்கினுங் குருமுதலிய சுபர்னோக்கினும் விருத்தாவஸ்தையில் மாதுரு மரணமும் சுக்கிரனீசமாகினும் மரைவிடங் குருவும் திரவிராசியில் யிருக்கினும் யௌவ்வனத்தில் தாய்கருமமும் சகடாகிய சந்திரன் கேந்திர கோணாதிபதியைக் கூடினும் னோக்கினும் அவ்வீட்டதிபன்அவர்களின் கேந்திரமாயினும் ௪ ௭-ல் பாம்பு அல்லது சனி இருக்கினு மாதாரோகியாயும் குருகேந்திரத்தில் வாழில் வயது தீர்கமும் கவுமாருவஸ்தையில் தாய்மரணமும் கேந்திரகோணமில்லாதயிடத்தில் பாவர்வீட்டில் குரு பாம்பு முதலிய பாவரைக்கூடினும் சந்திர கோணாகவும் சந்திர லக்கினாதிபன் பாவர்வீட்டில் பாவருடன் கூடினும் (உபயராசியில் சந்திரனிருக்கினும் முன் அல்லது பின்புரத்தில் பிரபலபாவர் நீசம் பெற்றவரிருக்கினும் பாலியாவஸ்தையில் தாய்பேரமென்றும் தகப்பனுக்கு மருதாரனாகியும் குருவுடனும் சந்திரனுக்கு இருபக்கமும் சனி பாம்பு முதலிய குசன் பகைநீசவீடாகியும் விருச்சிகம் மேஷம் சிம்மம் தனுசு இவையில் சந்திரன் க்ஷீணகெதியுடனும் இருக்கினும் சனிமுதலியபாவர் கூடினும்

சுபர்பெல திருஷ்டி இல்லாமல் குருபகை நீசஸ்திரசரவிராசியில் கடகனீங்கிய இடத்தில் இருக்கினும் தாய்செனனத்துடன் பாலியத்திலேயே மரணமாகுமென்றும் அமாவாசையாய் பாவறைக்கூடி சிம்மவிருச்சிகம் மேஷம் மிவைகளில் சனியுடன்கூடி யல்லது சனி பாம்புமுதலியோர் அவரிருபக்கத்திலும் மல்லது ஓர் புரத்திலாவது நோக்கியாவதிருந்தாலும் சுக்கிரன் பெலமற்று நீசம் பகைபெரினும் குரு குச க்ஷேத்திரங்களிலும் பாம்பானவரைக்கூடினும் தாய்பாலியத்திலேயே மரணமாகிவிடுமென்றும் சந்திரன் மறைவிடமல்லது பகை நீச இடத்தில் ரவிபுதன் சனிமுதலியபாம்பையும் குசன் முதலியோறைக் கூடினுந் தாய் பாலியத்திலேயே மரணமாவாளென்றும் குரு சந்திரம் சுக்கிரன் குசன் சனி ரவி வீட்டில் பகைநீசக்கோளாகி இருபக்கத்திலும் பாவரே இருந்தும் நான்கில் குசன் சனியல்லது பாம்புவாழினும் ஜெனனத்துடன் தாய்போமென்றும் சந்திரனுக்கு நாலுக்குடையவனின்ற வீட்டதிபன் பகை நீசமுதலிய பாவர்வீட்டில் சனி பாம்பு குசன் ரவி முதலிய பேரும் பாவறைக்கூடி சந்திரனுக்கு அ-ல் பாவரிருக்கினும் நோக்கினும் சந்திரனுக்கு உ-கஉ-ல்சனி முதலிய பாவரும் விருச்சிகம் தனுசு மகர மிவையில் சனி பாம்பு முதலிய பாவரிருக்கினும் சாதகனுடையதாய் புத்திரன் முகம்பாருமல் மரணமாவளென்றும் தகப்பன் மருதாரனுகியும் உபய விராசியில் அசுபரும் ஸ்திரவிராசியில் சந்திரனும் கேந்திரகோணக்கோளைக் கூடி குரு கன்னி மகரம் கடகம் விருஷப மிதுன மிவையிலும் சூரியன் திரிகோணத்திலிருக்கில் தகப்பன் மருதாரத்தை யுடையவனென்றும் குரு கேந்திரதிரிகோணத்திலும் சந்திரன் கடகம் கன்னி விருஷபம் துலாம் இவைகளிலிருக்கில் அசுபரான பாவர்கள் பார்த்து சேராதிருக்கினும் தனுசு சந்திரனுக்கு நாலாதிபனின்ற வீட்டதிபன் பெலத்துடன் கேந்திரகோண சுபக்ஷேத்திரமல்லது தனக்கு மித்துரு கிரகவாசனுக வாழில் விருத்தாவஸ்தையில் தாய்மரணமும் இதில் சந்திரனுக்கு (ம-உ)க்குடையவன் சனி முதலிய பாவராகினும் அவ்விராசிகளில் பாவர் நின்றாலும் பகை நீசக்கோளாய்சேர்ந்தாலும் மகனுடைய மரணத்தின் பின் தாய் மரணமடைவளென்றும் புத்திரரிருக்கினும் கருமபாத்தியதை யடையர்க ளென்றும் குரு அல்லது சந்திரன் கேந்திரகோணத்திலும் இதிலொருவர் ரு-சு-அ-கஉ-லும் பகைவருடன் பாபக்ஷேத்திரத்திலும் பாவர் தனுசு சந்திரனுக்கு நாலாம்வீட்டதிபன் நின்ற இடத்ததிபனுடன் கூடி பெலமற்று இருக்கில் எவ்வனத்திலேயே தாய் மரணமாவாளென்றும் மேற்கூறியவர் பகை நீசபாவருடன் கூடாமலும் பாவர் வீட்டிலின்

றியும் தனித்திருந்தாலுஞ் சுபரைக்கூடினுலும் வயோதிகத்தில் தாய் மரணமும் உண்டாகுமென்றறிய வேண்டியது.

சந்திரனுக்கு நாலு ஏழுகளில் சனி பாம்பு குசனிருக்குமாயினும் அவ்வதிபன் பெலமற்று கெட்டுப் போனுலும் பாலியத்திலேயே தாய் மரணமும் சுபர் நோக்கில் எவ்வனத்துக்குள் தாய் மரணமும் சுபரே பெலத்து நிற்கில் வார்த்தீக திசையில் தாய்மரணமும் கூறப்படும்.

தனுசுவிலும் சனியும் பாவர் வீட்டிலாவது பாவராவதிருந்து பகை நீச இடத்தில் கிரகமாரலர்ப்பகைவர் இருக்கினும் சிம்மம் மேஷம் விருச்சிகம் தனுசு மகரம் இவைகளிற் குசன் சனி முதலிய ரவி இருந்தாலும் சந்திரனுக்கு ௫-மிடத்ததிபன் புதன் சனியாகினும் சனி பாம்பு பார்த்தாலும் அல்லது சந்திரன் ௬ ஸ்தானுதிபதிகளைப் பார்க்கினும் கடகத்தில் குசனுகினும் தனுவில் இராகு கேதுவாகினும் குருவுடனே பாவர் சேர்ந்தாலும் பகை பாவக்ஷேத்திரவாசனுகி சந்திரனிருந்து பகை முதலிய பாவரை சந்திரன் கும்பம் சிம்மம் மேஷம் கடகத்தில் விருச்சிகத்திலிருந்து கூடினும் தாய்வழி நாசமாகுமென்றும் பலவாராய் சிதருமென்றும் அறியவேண்டியது.

மாதுருபாவ கெணிதம் அறியவும்.

சந்திரனுடனும் குருவுடனும் சந்திரனுக்கு நாலாமதிபனின்ற வீட்டதிபனுடனும் குரு நின்ற நாலாமதிபனின்ற வீட்டதிபனுடனும் தனுசுவிலும் உறிய கிரக சுபாசுபபெலன் படிக்குறிய பெண்களை ஒன்று சேர்த்து அவ்விராசியெண்ணிற் பெருக்கியதுகையை கூல் கழித்தசேஷம் திசையிலும் யிவை ௫-ல் பெருக்கி கூல் கழித்து வந்த சேஷம் புக்தியிலும் தாய் மாரகமென்றுங் கண்டு கூறவேண்டும்.

வித்தியா பலன்.

குரு சூரியன் சந்திரன் சனி சுக்ஷேத்திர வீட்டில் இருந்தும் கேந்திரகோண நட்பு க்ஷேத்திரமாகினும் புதன் ரவி கேந்திரகோணத்தில் குரு பிரபல பெலத்துடனிருக்கினும் அசுபரைக்கூடாமலும் பகை நீசமின்றி இருக்கினும் ராசபாஷையுடன் இரெண்டுவித பாஷையில் வல்லபனுகியும் தனசுய வித்தையிலும் பிரபலவானுவன் இவர்களுடன் பாவிகள் இருக்கினும் நோக்கினும் வித்தை அறை குறையாகுமென்றும் பலவித வித்தையிலுமுடிவுபெருனென்றும் புதன் வீடாகிய கன்னி துலாம் மிதுனம் கடகம் தனுசு விருச்சிகமிவைகளி லிருக்கினும் அவ்வதிபர்களைக் கூடி

னும் சுயபாஷை அலங்காரம் சோதிடம் முதலிய வயித்திய நூலாசரிப்ப னென்றும் இவ்வித இராசியி லெதிலாவது சுக்கிரன் புதனிருக்கில் கணிதம் கதை புராணாதி நூலறிவனென்றும் சனி முதலிய பாம்பாகிய குரு ரவி கேந்திரமாகில் அரச வித்தை நீசபாஷைகள் புரிவனென்றும் சனி புதன் ஸ்திரவிராசியிலும் குரு புதன் வீட்டிலும் சந்திரனுக்கும் புதனுக்கும் நாலாதிபன் புதனுடன் கூடிலும் நோக்கினும் கணிதநூல முறையுள்ள சோதிடாதி ஞானவானவனென்றும் மிகுந்த கீர்த்திமூர்த்திகளைப் பெற்று வாழ்வன்யென்றும்.

குரு ௬-௮-௧௨ இவ்வித இடங்களிலாவது பகை நீச முதலிய ஸ்தானங்களிலும் புதன் பெலமற்று பாபர் பகையோருடன் இருக்கில். வித்தையல்லனென்றும் ௨-௪-புதனும் புதனுக்கு ௨-௪-லும் சனி பாம்பு முதலிய பாவரிருக்கில் வித்தையில்லானென்றுஞ் சுபர்நோக்கில் அல்ப வித்தை யுடையவனென்றும் லக்கினத்து ௨-௪-க்குடையவன் புதனுடைய வீட்டதிபன் புதனுக்கு ௨-௪-க்கு அதிபன் அவ்வீட்டில் சுபராகிற் குரு ரவி மதி இவரிருக்கினும் நோக்கினும் கேந்திரகோண சுக்ஷேத்திர உச்ச நட்பு இடங்களி னின்றாலும் அல்லது குருவுக்கு ௨-௪-வீட்டதிபன் கேந்திரகோண பெலவானாகியும் சுபனாகியும் பெலத்து நட்பு முதலிய ஸ்தானங்களி னின்றாலும் ராசவித்தையுள்ளவனென்றும் அவ்விதவதிபர்கள் சென்மலக்கினவசாதாவது புதனுக்காவது ௬-௮-ல் இருக்கினும் பெலத்தவிராசியாகினும் சனி குருவீட்டில் அல்லதுமேஷம் மிதுன சிங்கம் துலாம்விருஷபத்தில்,நிற்கினும் இராச வித்தையுடன் சுயவித்தையினாலும் மத்திமமேன்மையடைவனென்றுமிகவும் விருத்தியுடன் வாழ்வனென்றும் கூறப்படும் இதில் கொடுமையான பாபிகள் பகை நீசத்துடனிருக்கினும் நோக்கினும் வித்தை விருத்தியடையானென்றுங் கூறப்படும்.

வாகனபலன்.

குரு பெலவானாகி கேந்திரகோணத்திலும் தனுசு சுக்கிரனுக்கு நாலுஇவைகளில் சுபராவதல்லது அவ்வீட்டதிபர் சுபக்ஷேத்திரத்தில் பெலவானாகியுமிருக்கில் எப்பொழுதும் பிரபலவாகன முடையவனென்றும் சுக்கிரன் துலாம் மீனம் தனுசு விருஷபம் மிதுனமிவைகளிலும் குரு தனுசு கன்னி மகரம் மீனம் கடகம் மிதுனம் விருஷபம் சிம்மமாயினும் குருவுக்கு நாலாமதிபனும் நின்ற இடத்ததிபன் சுபக்ஷேத்திரத்திலும் பகை நீசமின்றி கேந்திர கோணத் திலிருக்கினும் நோக்கினும் ஆந்தோளி முதலிய சகலவாகனமும் ரதகசதுரகமும்

உடையவனான யோகனவன் இவருடன் சனி யல்லது ரவி குசன் பாம்பு இவரிலெவர் கூடினும் குதிரை முதலிய வாகனமுடையவன் இரண்டு பாவர்கள் கூடி இருக்கில் வண்டி முதலிய வாகன முடையவன் மூன்று முதலிய பாவராகில் வாகனமில்லான் சுக்கிரனுக்கு நான்கில் சனியல்லது பாம்பு குசனிருக்கினும் குருவுக்கு நாலாமதிபனின்ற இடத்ததிபனுடன் இருபாவராகிய குசன் பாம்பு கூடினும் மாடு எருமை முதலிய விவகாரவாகனமும் மூதேவி வாழும் வாகன முடையவன் சுக்கிரன் குரு உச்ச சொக்ஷேத்திர கேந்திரகோண நட்பாகிசுப க்ஷேத்திரத்திலும் பெலத்து ஒரு பாவரைக் கூடினும் அசுவாதிவாகனச் சிறப்புள்ளவன் குருவுடனல்லது தனுசு சுக்கிரனுடனல்லது சுக்கிரனுக்கு நாலாதிபனுடன் பாம்பு முதலிய கடுங்கோள் கூடினும்ஷிஸ்தானங்களிலிருக்கினும் சுக்கிரனல்லது குரு வலுத்து ஓர்பாவருடனுவது தனுசு முதலிய இடத்தில் பாம்பு முதலிய ஓர் பாவர் நின்றும் பார்த்தாலும் சுக்கிரன் பகை நீசம்பெற்று கேந்திரத்திலிருக்கினும் குரு கும்பம் கன்னி மிதுன விருச்சிகம் விருஷபம் சிம்மத்தி நின்றாலும் யெவ்வளவு தனவந்தனாகினும் சிலநாள் வாகனமின்றியும் அப்படி வாகன முண்டானபோதிலும் நஷ்டமும் சுயஸ்திர மில்லாதவாகனாகியும் பரவகான சஞ்சாரியாகிப் பின் சுயமான வாகனஞ் செய்வனென்றும் பின் விருத்தியையடையுமென்றுங் கண்டறியவேண்டியது.

குரு சுக்கிரன் பகைநீச அசுப க்ஷேத்திரத்தில் பாவருடன் கூடியும் தனுசு சுக்கிரனுக்கு ச-மிடத்ததிபதி பெலமற்றிருக்கினும் அவ்வித இராசிகளில் பாம்பு முதலிய சனி ரவி யிருக்கினும் புதன் கூடினுமல்லது தனித்து நின்றாலும் வாகனமின்றி பாதசாரியாகி சஞ்சரித்து வாழ்வனென்றறியவேண்டியது.

கிரகபூமிபலன்.

சுக்கிரன் குரு பெலத்துங் கேந்திர கோணவிராசியில் பகை நீசமின்றியும் புதன்பூரணசந்திரனைக் கூடினும் நோக்கினும்தனுசுவிலும் குசனும் சுபசம்மந்த பெலத்துடனும் குசன் கேந்திர கோணத்திலுமிருக்கில் சாதகனுக்கு அநேகவித பூமிகள் கட்டடங்களுடனும் பிரபலமாக வாழப்படும் கெட்டியான அனேகவித விநோத கட்டடங்களுமுண்டாகும் பிரபலயோக வானுவனென்றும் சுக்கிரனுக்கு நாலாமதிபனும் அவனின்றவீட்டதிபனும் குருவுக்குநான்காம்வீட்டதிபதினின்றவதிபனும் இவ்வித பெலன் பெற்றிருக்கினும் கேந்திரகோ

ணத்தில் வாழினும் சுபரையும் மித்துருவையுங் கூடி இருக்கினும் பிர
பல் கட்டடங்கள் அனேகத்துடன் மாடமாளிகைப் ராசாதமுண்
டாகும் இவருடனே சூரியன் கூடியாவது மேற்கண்ட ஸ்தானத்தி
லாவது பெலத்துடனிருக்கில் பூர்வாற்சித கட்டிடங்கள்யென்றும்
சந்திரன் புதன் சுக்கிரனுகி ஸ்திரீவகை மாதுருவகை மூலிய கட்ட
டபிரபலமும் சனிமுதலிய குரு குசனுகில் சுயமானகட்டடம் பூமி
மிகுந்த பிரபலமும் இவருடன் பாபர்வாழினும் பகைநீசக் கோளா
லும் ஸ்தானத்திற் பாம்புமுதலிய பாவரிருக்கினும் குருமறை வல்
லது உபயத்திலிருக்கினும் கட்டடமிருந்தும் சுபகிரக வாசஞ்செய்
யானென்றுங் குருமுதலியோருடன் பாம்புமுதலியபாவரிருக்கினும்
ஸ்திரமுபயத்திலும் சனி குசன் புதன் வீட்டில் இருக்கினும்சுக்கிரன்
பகைநீசனுகிக் கேந்திரத்தினின்ருலும் பழயகட்டிடதை தள்ளி
நூதனகட்டிடமுஞ் செய்வனென்றும் அவைகளால் மிகுந்த கீற்தி
மூற்திகளும் சுக்கிரனுக்கு நாலாதிபனுடனும் சுக்கிரன் குரு தனுசு
இவைகளில் பாம்பு முதலியகோளும் சு-அ-கஉ-ல் இவைகளிலும்
பகைநீசவிடங்களிலும் மேலேகண்டகிரகங்களிருக்கில் பூர்வ கிரகா
திகள் முதற்கொண்டு நஷ்டமும் விருச்சிகம் மகறம் இவைகளிலும்
குரு சுக்கிரனுக்கு உ-கஉ-லும் பாவர்கள் நெருங்கி அந்த ஸ்தானங்
களிலும் பாப பெலனதிகமாகி ஸ்தானுதிபர்களும் வலுவின்றிஇருக்
கில் சிரகம் பூமி நிக்ஷேபம் கிடையாதென்றும் இதில் ஓர் சுபர்கூட
வாவது ஸ்தானத்திலாவதிருக்கில் அல்பகஷ்டங்களும் இரண்டுமுத
லிய சுபர்கள் வாழினும் மேன்மையுடைய கட்டடவிருத்திகளும் பாவர்க
ளதிகமாகில் கட்டடமின்றி அயல் கிரகவாசமுஞ் செய்வனென்றும் சுபர்
திருஷ்டி இருப்பு பெலமுண்டாகில் பூர்வமில்லாமல் பின் இவனுல்மிகவும்
பிரபல கட்டடவிருத்திகளுடன் வாழ்வனென் றறியவேண்டியது.

புத்திரபாவபலன்.

சனி புதன் வீட்டிலாவது சுக்ஷேத்திரத்திலாவது மேஷம் சிம்மம்
இவைகளிலிருந்து குரு முதலாகிய சுபர்களும் சுக்கிரன் புதன் வீட்டி
லாவது சனி வீட்டிலாவது மறைவுற்ற இராசியிலிருக்கினும் குரு சுக்கி
ரன் பகை நீசம் பெற்றும் பாம்பு முதலிய சனி புதனைக்கூடினும் மிதுன
தனுவில் பாவரிருக்கினும் புத்திரனே கிடையாதென்றும் சுபர் திருஷ்டி
யாவது சேர்க்கையாவது சுபபெலத்துடனே சந்திரகேந்திரமாகி இருக்கில்
அல்பமான யேகபுத்திரனென்றும் குரு முதலிய சுக்கிரன் அஸ்தங்கத
தோஷமடைந்திருக்கினும் பகை நீசபெலத்தால் துலாம் மகரம் விருஷ

பம் மிவைகளிலும் சனிக்கி ரு-கூ-உ-இந்த இடங்களுக்குடையவனின்ற ஸ்தானம் புதன் சனி வீடாகியல்லது பகை நீசம் பெரினும் புத்திரரின்றி தெத்தனுகி வாழ்வனென்றும் குருவுக்கும் இம்முறையே பார்த்தறிந்து சொல்லவும் இவ்வித கிரகங்களில் குரு மாத்திரம் வலுத்து சுபக்ஷேத்திரனுகி பாவர் சம்மந்தமின்றி இருக்கில் அல்பமான யேகபுத்திரத்தன்மைய காலத்திலுண்டாகுமென்றும் புத்திரசோகமடைவன் குசன் இராகு முதலியகோள் மகரம் விருஷபம் துலாம் இவைகளிற் றனித்தாலும் அவ்வவ ஸ்தானதிபதி யல்லது குரு சுக்கிரன் சனியைக்கூடினும் பிறந்திறக்குமென்றும் மிருந்தவந்ததிலை யென்றதோஷமடையுமென்றும் சனி முதலானோர் பகை நீசவிடத்திலும் யவற்கேழில் சுக்கிரனல்லது சுபரிருக்கினும் சுக்கிரன் சுக்ஷேத்திர உச்சம் தனக்குறிய மித்துருக்ஷேத்திரமாகி கேந்திரகோணத்தி னின்றாலும் சந்திரனிவ்வித சம்மந்தமாகி இருக்கினும் பெண் முன்சந்ததியும் விருத்தியும் புருஷபிரசையாகின் உடன் மரணத்தையும் அடைந்துவரப்படு மென்றும் களத்திரம் பின்னவையானாலும் மறுதாரத்தாலும் புத்திரவிருத்தி யடைவனென்றும் சனி கேந்திரகோணத்திலும் குரு சனியல்லது புதக்ஷேத்திரத்திலும் சனியை குருநோக்கினுமல்லது சிங்கரவியை சுக்கிரன் முதலிய கோள்நோக்கினும் குருகேந்திரகோணமல்லது சுக்ஷேத்திரம் நட்பாகி கும்ப முதலிய இடத்திலிருந்தும் கேந்திரத்தில் சுக்கிரனிருக்கினும் சனி இராகு முதலிய பாம்பு பாவக்கோள்கள் துலவிலிருக்கினும் நோக்கினும் ரவி இருக்கினும்சாதகனுக்கு காலாதீத விவாகமனைவியாளுக்கு புத்திர விருத்தி யல்பமுண்டென்றும் முன்பெண்சந்ததி யடைவனென்றும் இத்துடன் குசனல்லது புதன்கூடி நிற்கினும் நோக்கினும் மருதாரவகை புத்திருண்டு அல்பபுத்திரனுகிய யேகவானுங் கடையரிஷ்டிக்கப்படுவ னென்றும் "சாதகனுக்கு சனி விருஷபம் மேஷம் கடகம் மிதுனம் சிம்மம் இவைகளில் நின்று அபெலனுகியும் மகரம் விருஷபம் இவைகளில் பாவராகிய பாம்பு முதலிய அசுபர்களிருக்கினும் நோக்கினும் சனிக்கி பஞ்சமாதிபன்நின்ற இடத்ததிபன் சுக்ஷேத்திர உச்சமல்லது கேந்திரகோணமாய் புதன் சனி வீட்டினிற்கினும் அகால புத்திரலாபனென்றும் சனி அ-சு-ங-இவ்வித இடங்களிலிருக்கினும் நீச முதலிய பெலக்குறைவுடன் சுக்கிரன் அல்லது குருவுக்கு யேழாயிருக்கின் மறுதாரவகையால் புத்திர விருத்தியுடையவனென்றும் அகால புத்திரலாபமும் அடைவனெனறும் கூறப்படும் இதில் குருவுடனல்லது ரு-கூ-மிடங்களிலும் சனி நின்ற ரு-க்குடையவனின்ற ராசிக்கி ரு-கூ-மிடங்களில் பாவரிருக்கினும் நோக்கினும் சூரியன் பாம்பு குசன் முதலியோர் இருக்கினும் சுபர் நோக்கமின்றி வாழினும் அவ்வதிபர்கள்

பகை நீச முதலிய பாகத்தை யடைந்தாலும் புதன் சனி வீட்டில் புதன் சனியைக்கூடி புதன் சனி கூடினாலும் பாம்பு கூடினும் புத்திரனின்றி யடைவனென்றும் அவர்களுடன் சுபக்ஷேத்திரவாசனாகி குரு சுக்கிரன் முதலிய சுபர்கள் நோக்கினும் இருக்கினும் அல்ப புத்திரலாப முடைய வன் யென்றும் சனி விருஷபம் கன்னி சிம்மம் துலாம் மகரம் கும்பம் இவைகளிலுந் தனுசுவிலும் இருந்து குரு முதலிய சுபர்கள் கூடினும் சந்திரகேந்திரத்தி லிருக்கினும் சூரியன் சுக்கிரன் சுக்ஷேத்திர உச்சஸ்தானத்திலாவது கேந்திரகோணத்தில் தனக்குறிய சுபக்ஷேத்திரமல்லது மித்துருவுடனே கூடினிற்கினும் புத்திரர் வெகுவாய் பிரபலஸ்தர்களாகியும் அதிகவிருத்தியோடு வாழுவார்களென்றும் பிரபல சன்மான பூசித யோகவான்களாகியும் வாழ்வார்கள் என்றும்.

சனி குரு விருச்சிகம் மீனம் கும்பம் மேஷ மிதுன கடகமிவைகளில் பாவராகிய இராகு கேது குசனிவர்களைக்கூடினும் ரவி புதனைக்கூடினும் தனித்துநின்றாலும் மகரம் விருஷபம் மீனம் இவைகளில் புதன் சனி கூடினும் தனித்து நிற்கினும் பாம்புமுதலிய கோள்கூடினும் அதில் சுபர் முதலிய பார்வைகள் இல்லாமலுஞ் சேருமலும் புதன் நீசம் பகை க்ஷேத்திரத்தில் இவ்விதமிருக்கின் புத்திரரடையானென்றும் மேற்கூறிய வர்களுடனே சுபகேந்திரத் திரிகோணமாகி குரு ரவி குசன் கூடினும் இவரிலொருவர் சுபபெலத்துட நோக்கினும் புதனட்பாக்ஷி உச்சஸ்தானத்தில் கேந்திரகோணபெலன் பெற்றிருக்கில் சாதகனுக்கு புத்திரவிருத்தி அல்பமாகினும் உ-முதலியாகிய புத்திரயோகவானென்றும் அவ்வகைபுத்திர மூலப சுகசௌக்கியங்களும் மேன்பாடுகளும் அடைவனென்றுங் கூறப்படும்.

இரண்டு முதலிய சுபர்கள் சுபபெலத்துடன் மேன்மை பெற்றுக் கூடினாலும் பார்த்தாலும் வெகு ரகசியபுத்திர கருமம் அடைவனென்றும் பாவரே பெலத்து நிற்கில் புத்திர விருத்திகளையே அடையப் படமாட்டானென்றுங் கூறப்படுமென் றறியவேண்டியது.

இவ்வித மரிந்தபின் குருவுடனும் சனியுடனும் மகரத்திலும் சுக்கிரனுடனும் விருஷபம் துலாத்திலும் சனிக்கி ஐந்தாதிபனின்ற விட்டதிப நின்றவனுடன் கூடிய கிரக யெண்களை சுபாசுப பெலன் படிக்கி ஆருயந்தெடுத்து அந்தந்த இராசி யெண்ணுற்பெருக்கி சனிக்கும் சுக்கிரனுக்குங் கூடிய பெலா பெலப் பாகப்படிக்கிக் கண்டித்த யெண்ணிற் கொடுத்த சேஷம் புத்திரலாபமென்றும் அதில் சுப

பெலனுக்குரியவகை தீர்க்கமும்! பெண்ணாண் கிரக வெண்படிக்கி கண்டறிந்தவை ஸ்திரீ புருஷ தீர்க்கமுங் கண்டறிந்து கூறவேண்டியது.

சத்துரு ரொணம் ரோகம் இராஜதெண்டனாதி பலன்கள் கூறுவாம்.

சனி சுக்ஷேத்திர உச்ச கேந்திரமாகியும் இராகு முதலியோருடன் மேஷம் விருச்சிகம் கடகத்திலிருக்கினும் குரு முதலியவர்கள் கும்பம் சிம்மம் விருச்சிகத்தில் குசனைக்கூடிநிற்கினும் சூரியன் பகையிடமல்லது நீசத்திலாவது கும்பம் மேஷம் துலாம் விருச்சிகத்தில் நிற்கினும் இவ்வித இடம் ஸ்தானங்களை பூரணசந்திர கேந்திர முதலியவை இல்லாது சுபர் திருஷ்டி இல்லாமலுமிருக்கில் ஜாதகன் சிறை முதலாகிய ராசதெண்டனைகளையும் கடன் முதலிய தொந்தரையடைவனாகிய பிறபு முதலிய மேலோர் விரோத முண்டாகும்.

இதில் ரவி சந்திரன் பகை நீசத்துடன் கூடி இருக்கினும் பாவரைக்கூடினும் தேசரோகாதி துன்பம் உண்டாகும் குசன்கூடி இவ்விடத்திலிருக்கில் குலேச்சுரிய தெண்டனைகளையும் ரொணங்களையும் தன நஷ்டங்களையும் அடைவனென்றும் விஷாதி பாதைகளாலும் தேகாரிஷ்டம் நேரும் சனி சூரிய சந்திரருடன் கூடினாலும் சூரியன் சந்திரனை நோக்கினும் பாலிய சிசுவின் சாலம் கால் நோவு முதலிய அங்கஹீனமுஞ் சனி மூன்றும் பார்வை சூரியனைப் பார்க்கினும் லக்கினாதிபனையுஞ் சேர்த்து நோக்கின் காது முதலிய சிரோநோயும் புதன்களில் குறைவான சூரிடங்கொடுக்கும் இதைச் சுபராகிய குரு முதலியோர் பார்த்தாலுஞ் சேர்ந்தாலும் அல்பமாகக் காண்பித்து நிவர்த்தியாகும் சுக்கிரனாகில் நேத்திரநோயும் புதன் குருவாகில் சிலேத்துமாதி நோயும் குசனாகில் ரெக்தவிரணம் வைசூரியநோயும் பெலமாக வரிஷ்டித்து நிவர்த்தியாகும் பாம்பாகில் விஷநோய்க் கண்டமாகும் ரவி குசன் அல்லது இரண்டு பாவர்களிருந்துகூடினும் நோக்கினும் சுக்கில விஷநோய்யரிஷ்டிக்கும் சனியாகில் உதரக்கட்டி முதலிய பித்தவாயு நோய்காட்டும் இவைகளுக்கு சுபர் சேரினும் நோக்கினும் ஷை நோய்களரிஷ்டித்து மாறும்.

குசன் சனிகூடி மேஷம் கும்பம் விருச்சிகமிவையிலாவது சிம்மத்திலாவதிருந்தும் பாம்பு முதலிய பாவரைக்கூடினும் சுபர் திருஷ்டி கூடாமலிருக்க ராசதெண்டனைக்கி ஆளாகுவன் சத்துரு சோ

ராக்கினி பயம் நேரும் அவைகளால் மிகத் துன்பமுண்டாகும் சுபர் நோக்கினும் சனி குசன் சுபக்ஷேத்திர வாசனாகினும் அல்லது கடகம் முதலிய சிம்மத்தி னின்றாலும் மறைவுற்றாலும் ராஜபயம் விரோதம் போலக் காண்பித்து அவ்வித அரசர்களையே சாதகன்செயித்து வருவனென்றும் மேலான யோக முண்டாகுமென்றும் சனியொருவனிளைத்து குசன் வலுத்திருக்கினும் சுபசம்மந்த திருஷ்டியின்றி இருக்கினும் ரோணமும் சத்துரு விரோத விவாதமுண்டாகும் இருவருமறைவிடத்திலிருந்து பகைநீச க்ஷேத்திரவாசனாகினும்சனியைக் குரு முதலிய சுபர் திருஷ்டியிருக்கில் சிலநாள் ரணமின்றி வருத்தமடைந்து பின் ரோணமின்றியும் சத்துரு செயத்துடனும் ராஜதண்டனையில்லாமலுமாக வாழ்ந்துவருவன் மற்றய ஸ்தானங்களில் சனி குசனிற்கில் ராசதெண்டனை பிடிச்சப்படமாட்டாது குரு முதலிய சுபர்கள் சுபக்ஷேத்திராச மிவைகளைக்கூடி இருக்கில் மிகப் பல பெயரை தெண்டிக்கவும் அபராதம் போடவும் சக்தியுள்ளவனாகி ரோணமின்றி வாழ்வன் சூரிய சந்திரர்களுக்கு ௬-௮-ல் ௧-ல் குசன் அல்லது சனி பாம்பு கூடினாலும் நோக்கினும் அல்பரோக சரீரனாகவே வாழ்ந்து வரப்படுவனென்றும் சந்திரன் ரவி லக்கினத்தை சுபர் திருஷ்டியல்லது குரு சுக்கிரன் பூரண சந்திரரிருக்கில் தேகசுகமும் அரோகியாகி திடசரீரஸ்தனாகியும் வாழ்வன் சூரியனுடன் புதன்கூடி கன்னியல்லது சந்திரனுடன் கூடினும் சூரியன் சந்திரனை சனி முதலிய குசன் கூடினும் தேசமிளைத்தும் எப்போதும் அதிக கெற்ப சூடுள்ள சரீரனாவான் சனிபார்க்கினும் சந்திரனுக்கு யேழில் சனி நின்றாலும் சனி வீடாகிய மகரம் விருஷபம் இதில் ரவி யல்லது குசனிருக்கினும் நோக்கினும் பித்தவாயு உஷ்ணநோய்ச் சரீரனாகி தாது குறைவுடனும் வாழ்வன் சந்திரன் விருச்சிகம் கும்பம் மேஷமிவையில் சனியைக்கூடினும் நோக்கினும் குசன் கூடியல்லது பார்த்தாலும் க்ஷயமுதலிய மூர்ச்சைவாயு அண்ட நோயுண்டாகும் பிரபல பீடையடைவன் அவருடன் புதன் அல்லது சுக்கிரனிவ்விதசுப ராசியு அமரபட்ச பஞ்சமிக்குள் ஜெனன முடையவனாகில் இவ்வித மேலே கூறிய உபாதிகள் அல்பமல்ப மரிஷ்டித்து உடனுக்குடனே நிவர்த்தியைக்கொடுக்கும் இவ்விதம் சூரிய சந்திரவசாத் ௬-௮-மிடத்தின் பெலன்களையுங் கண்டு சொல்லவேண்டியது.

இவ்வித பலன்கள்யாவும் அவரவர்களின் திசாபுக்தி காலங்களிற் கொடுக்குமென்பதை யூகித்தறிந்து கூறல்வேண்டும்.

களத்திரம் விவாதம் இவ்வித பலன்களாவன.

குரு பெலவானாகியும் கேந்திரகோண இராசியில் இருந்தும் புதன் சனி இவ்விதக்ஷேத்திரத்திலின்றி பெலமுடையவனாகியும் சுக்கிரனுக்கு ஏழாமிராசிகளில் சுபரல்லது அதிபதி பெலத்து தனக்குறிய பகை நீசக்ஷேத்திர மின்று மீனத்திலும் பூரணசந்திராதிசுபரும் பிரபலத்துடன் இருக்கினும் குரு நோக்கினும் பாவர்கள் சேர்ந்தாவது நோக்கமாவது இன்றி இருக்கினும் குருவுக்கு சத்தமாதிபன் சுபனாய் சட்சேத்திர மல்லது உச்ச முதலிய நட்பு இடம் தனக்குறிய மித்திரர் வீடாகினும் வேறுபாவர்களைக் கூடாமலும் இவனிருந்த வீட்டதிபன் பெலத்து முன்போலச் சுபபெலத்துட னிருக்கினும் சாதகனுக்கு பிரபல ரூபத்திலுங் குணத்திலும் மேன்மையான இடத்தினின்றுங் களத்திரலாபமுண்டாகும் யென்றும் பாலிய விவாகனாய் வாழ்வன் யென்றும் இவர்களுடன் அல்லது மேற்கூறிய இடங்களில் சூரியன் புதனுங் அல்லது குசன் முதலியோர் கூடினும் பாலிய விவாகனாவனென்றும் சனி பாம்பு புதன் றனித்தவர்களாய்க் கூடினாலும் இவர்களின் பெலனதிகரித்தாலும் காலாதீதத்தின்மேல் எவ்வநாந்திய கவுமாரவயது களில் விவாகமென்றும்.

சனி சுக்கிரனுக்கு யேழிலல்லது மீனத்திலாவது பாம்பு தனித்தபுதனாகினும் குருவுடன் குருவுக்கு ஏழு அவ்வீட்டதிபனிருந்த வீட்டதிபன் சனி புதன் குசன் முதலியபாம்புகளைக்கூடி அவர்களுக்குறிய பகைக்ஷேத்திரங் களிலாவது பாபர்வீட்டிலாவது நீசமுதலிய பெலக்குறைவுடனிருக்கினும் நோக்கினும் அவ்வித குரு முதலிய சுக்கிரனும் குருவுக்கு ஏழுக்குடையவனின்ற அதிபனும் பெலமற்று சனி குசன் முதலிய பாபருடைய கிரகத்திற் பெலமல்லது அபெலாகிவசித்தாலும் மேலே கூறிய சனியல்லது புதன் பாம்புகள் பகை நீசத்தி நிற்கினும் திரவிருசிகளி நின்றாலும் சுக்கிரன்பெலவற்றிருக்கினும் சுக்கிரசத்தமாதிபன் பகை நீச இடங்களிலாவது தனக்குறிய விரோதிகளுடனாவது ரு-கூ-அ-ல் இருக்கினும் குரு முதலிய சுபக்கோள் சேராமலும் பார்க்காமலிருக்கினும் சாதகனுக்குதார முன்னாது போய் பின்னடப்பதும் காலதாமதமாகும் இதில் பாவரிருவருக்கு மேலுற்றோராகில்காலதாமத விவாகம்நேரும் அதியோகிகாமியாயும் மனைவியைப்போலப் பலரையும் புணருவன்களத்திரமிரண்டு முதற்பலவிவாகஞ்செய்வன் யென்றும் இதில் சூரியன் முதலிய குசன்பெலமற்றுக் கூடினும் சுக்கிராஷ்டமம் குரு அஷ்டமங்க

ளிலும் குரு சத்தமாதிபனுக்கு அஷ்டமாதிபன் ; அஷ்டமமிவை களில் இரெண்டுபாபர் பகை நீசமாகினும் விவாகமின்றியடைவன் ஒருபாபனுகில் களத்திர மிரெண்டென்றும் அவ்வகை களத்திரமும் மனக்குறையினுகாலதாமதத்தின்பேரிலும் முடியுமென்றுமேற்கூறிய இடத்ததிபனுடனுவது இடத்திலாவது சுபர் திருஷ்டியுடன் இருக்கிலும் சுபபெலக் கோளாகியவர்க நின்றாலும் களத்திரமொன்றென்றும் குரு மேஷ விருச்சிகம் மகர கும்பம் சிம்மம் இவையிலாவதும் பாம்பு முதலிய பாவரைக் கூடினுலும் சுக்கிரனுக்குங் குருவுக்கு யேழில் ஓரிடத்திலாவது சனி குசன் பாம்பாகியவரில் யெவர் நிற்கினும் சுக்கிர சத்தமாதிப நின்ற வீட்டதிபனுக்கு யேழில் சனி முதலிய ஒரு பாவர் பகை நீசம் பெற்றிருக்கினும் மீனத்தி நின்றாலும் களத்திர துவய முதலாகிய பல விவாகஞ் செய்தாலும் முன்னயே மரண மாவர் விவாகமாவதும் காலதாமதமாகி யெவ்வனந் தப்பி களத்திரச் சுகமடைவதில் மனது திருப்த்தியின்றி யாவனென்றும்.

இவைகளில் இரண்டு பாவருடன்கூடி சுப சம்மந்த நோக்கமின்றி இருக்கில் உ-முதலிய பல விவாகனென்றும் கன்னி மிதுனங் கடகம் சிம்மமும் கும்பம் இவைகளிலிருக்கும் குருவல்லது சுக்கிரனுடனே பாவர் கூடினும் குசன் முதலிய சனி நிற்கினும் களத்திர மிரெண்டென்றும் ஓர் சுபர் நோக்கின் மனையாள் ஒன்றே தீர்க்கம் வயோதிகத்தில் மரணமாவள் யென்றும் புதன் சந்திரன் அமரபட்சத்தோரைக் கூடிநிற்கில் விருத்தாவஸ்த்தை சுவுமாரக் கடையில் விவாகமுண்டென்றும் இருவித தாரஸ்தனென்றும் மூன்று முதலிய பாவர் பெலிஷ்டருகி குரூரத்துடனிருக்கில் விவாகமான தெல்லாம் போய்விடுமென்றும் சனி புதன் கூடி நிற்கினும் பரஸ்பர திருஷ்டியுடன் மேற்கண்ட விடங்களிலிருக்கின் விவாகமில்லை யென்றும் சுக்கிரன் முதலியோர்கூடி நோக்கினுலும் இருந்தாலும் கால தாமத விவாக மென்றும் சுபரே பெலத்துடன் மேற்கண்ட கிரகங்களுடன் சுபக்ஷேத்திரம் பெலத்துடன் மேற்கண்ட இடத்திலிருக்கில் மனைவி தீர்க்கவதியாயும் சனி முதலிய ஒரு பாபிகள் கூடினும் நோக்கினும் மனைவி இருக்க மற்றோர் மனைவி முடியுமென்றும் சுபர் பாபர் கலந்து தனக்குரிய கேந்திரகோணமாகினும் அல்லது சுபக்ஷேத்திரமானாலும் களத்திரம் ஒன்றென்றும் பாபக்ஷேத்திரமாக இருக்கில் பல விவாகமென்றும் இதில் மேன்மையுடன் க்ஷேமத்துடன் பெல

த்துடன் வாழ்வர்கள் என்றும் சுகசௌக்கியங்களையும் அடைவ னென்றும் மிக்க மேலான கல்வியுள்ள மனையாளாகியும் பிறபல இடத்தினின்றும் களத்திர மடைந்துங் களத்திரவழி சொத்து முத லிய பிரபலவானுவான் யென்றும் குரு சுக்கிரன் முதலியோரும் குரு வுக்கு சத்தமாதிபனின்ற இடத்ததிபனும் சந்திரனல்லது சென்ம கேந்திரத்தில் சுபட்க்ஷேத்திர வாசமாகில் பிறபல மனையாளாகி யும் கல்வி முதலிய விவேகி யாகியும் இவருடன் பலவித தனங் களத்திர வகையால் அனுபவிப்ப னென்றும் மிகுந்த அனுகூல மும் சுக சௌக்கியம் நேருஞ் சுபருடன் பாவியாவது சனி முத லியோர் கூடி யல்லது பார்த்தாலும் சமசப்தகமாக இருந்தாலும் களத்திரம் காலதாமதமும் களத்திரசமான முன்மேலானஸ்திரீயை யடைவன் காந்திருவவிவாகம் புகழுவனென்றும் சுபபெலத்துடன்நோக் கினும் வித்தியாவிவாக களத்திரமும் இரண்டுமுதலியபாவர்கள் ஆகில் களத்திரத்வயமும் கும்மம் சிம்மம் முதலியவர்களுடைய க்ஷேத்திரமல்ல தவ்வதிபர் புதன் க்ஷேத்திரத்தில் குருசுக்கிரன் முதலிய முன்கூறியவர் கள் இருக்கில் காலாதீத விவாகனுகியும் பகைவரே அதிகபெலமாகின் விவாகமில்லையென்றும் சுபரும்பாவரும் சமதுல்யராகிக்கலர்ந்து இருக் கில் தாரமிரெண்டென்றும் பாவரதிகபெலமாகில் தாரநாசமும்.

விருஷபமிதுனம் மீனம் கடகம் கன்னி துலாம் தனுசு இவைகளில் குரு சுக்கிரனிருந்தாலும் ஒருவர்பாவர் வீடு ஒருவர் சுபர்கிரகவாசமாய் தனக்குரிய சுபபெலத்துடனும் குருசத்தமாதிபனின்ற வீட்டதிபன் முன்கூறிய இடங்களி னின்றாலும் சுபரைக்கூடினும் பெலமுற்ற கேந்திர கோணத்தில் சுபரதிகபெலத்துடன் கூடினுலுங் களத்திரமொன்றென் றும் பாவர் அதிகமான பெலத்துடன் கூட்டத்துடன் இருக்கில் களத்தி ரத்வயாதி பலதாரமும் அவரவர்கள் தனித்து பெலாபெலத்துடன் சுபர் பாபரைக்கூடாமல் இருக்கில் தாரமொன்றென்றும் தனித்திருந்தும்சுபட் சேத்திரங்களில் பகைநீசமல்லது ௩-௬-௭-௰ இவைகளிலிருக்கினும் தாரமி ரெண்டென்றுங் கூறப்படுமென்றறியவேண்டியது. இவைகளையெல்லாம் அவரவர்கள் திசாபுக்தி மாரகமூலமாகக்கண்டறியவேண்யபது.

விவாதபலன்.

குரு சனி கூடினும் ௨-௧௨-ல் இருக்கினும் மீனம் மேஷம் துலாம் சிம்மம் இவைகளிலாவது பாபரான சனி குசன் முதலிய பாம்புகள் ௩-௬ அ-௧௨-ல் நிற்கினும் பலசொத்துக்களால் வாதத்தையேயடைந்து பொருள் களையெல்லாந் தோற்பனென்றும் பலவகைக் கஷ்டபலனையடைவனென்

றும் குசன் சுக்ஷேத்திர உச்சம் கேந்திர கோணத்திலும் சுபக்ஷேத்திர மாகி சுபர் வீட்டில் பெலத்தும் சனி கேந்திர மல்லது கூடியல்லது பார்த் தாலும் குரு இவ்விதமிருந்து மறைவிடங்களிலிருக்கினுடன் பாம்புமுத லிய பகைக்கோளே சநி குருகூடிவலுத்தாலும் சுக்கிரன் கூடினின்றாலும் பல விவாதங்களாலேயே பொருள்களே இழந்து தேசாடனஞ் செய்வன் கக்ஷிசெயிக்க மாட்டானென்றும் இவ்வித மற்றை கிரகமும் குருகேந்திர கோணத்திலும் சூரியனிருக்கினும் சனி குசன் மறைந்திருக்கினும் ஞாயா திபதியாகி விவாத திறமையுடையவனுகியும் யாவருக்கும் வசியனுய் விவாதவிவகாரததால் பொருளேயுந் தேடி செயகீர்த்திகளே யனுபவிப்ப னென்றறியவேண்டியது.

சுக்கிரனுடனும் மீனத்திலும் சுக்கிரனுக்கு யேழுக்குடையவனின்ற இடக்கோள்களுடனும் கூடிய யெண்ணே குருபெல யெண்ணிற்கொடுத்த சேஷம் களத்திரமாகும்.

பிதுர்பாக்கிய ப்லன்கள்.

சுக்கிரன் ரவியையும் விருஷபத்தையும் சுக்கிரனுக்கு பாக்கியமென் னும் கூ-மிடத்ததிபநின்ற வீட்டதிபனேயுங் கொண்டு பிதுர்பாக்கிய பலன் கள் கூறவேண்டியது.

சுக்கிரன் கேந்திர கோணத்திலும் தனக்குரிய சுபக்ஷேத்திரம் ஆக்ஷி உச்சமித்ரு க்ஷேத்திரனுகியும் ரவியும் சுக்ஷேத்திர உச்சம் முதலிய கேந்திரகோணத்திலிருக்கினும் சுக்கிரனுக்கு கூ-மிடத்ததிபனின்ற ராசிக் கதிபனும் பெலத்து மேற்கண்டபடி இருந்தும் அசுபபெலனின்றி குரு சந்திரர்கள் பூர்வபக்ஷகதியாய் வலுத்து நின்றாலும் பார்த்தாலும் மிக பிர பல பிதுராற்சிதம் அரசசமானத்துவத்துடன் ராசயோகமாக வாழப்படு வனென்றும் ஞானிதர்ம்மிஷ்டனுகியும் பாக்கியவந்தனுகியும் பிதாவின் யோகம் பிரபலவானுவனென்றும் அனேக கிரமம் பூமியும் ராசவதிகாற மும் பிதாவுக்கும் பிதாவினல் சாதகனுக்கும் நேருமென்றறியவும் ஓர் பாபர் வீட்டினின்றாலும் ஒரு பாபிகளேக்கூடினும் அல்பமான பூமியும னும்பிதுர்வம்சாவளி விருத்தியுடனும் அடைவனுவன் இதில் ரவி மேஷம் விருஷபம் தனுசு மகரம் கும்மம் துலாம் இவையில் நிற்கினும் சூரிய னுக்கு அ-ம-ல் பாபிகளாகிய குசன் பாம்பு சனி யாகினும் இவர்கள் கூடி னுலும் சுக்கிரனுக்கு கூ-மிடத்ததிபனுக்கு எட்டில் இவ்விதப்பகை நீசத் துடனிருக்கினும் சுக்கிரன் கன்னி மேஷம் சிம்மம் மகரம் இவைகளில் சூரியன்முதலிய பலவகைப்பாபிகளேக் கூடினுலும் சாதகனுடைய பாலி யத்திலேயே தகப்பன் மரணத்துடனும் அவன் குடும்பவிருத்தியடைய

மாட்டானென்றும் இதில் பாபர் திருஷ்டியாகிலும் ரவியுடன் சனி கூடி னலும் சுக்கிரனுடன் குசன் பாம்பு கூடினலும் இவ்விதபாவர்கள் விருஷபம் மகரத்தினின்றாலும் பகை நீசம் பெற்றாலும் பிதா பாலியத்திலேயே மரணம் பிதுர் சொத்து இருந்து அழியும் இவனல் நஷ்டமாகும் சனிரவி பெலக்கினும் பாம்பு முதலிய பாவரைக் கூடினலும் ஞானமின்றியும்பிதா பாலிய மரணமல்லது மரணசமான ரோகம் சித்த சுவாதீனமில்லாதவனுகி அங்கஈனனுகி வாழ்வனென்றும் இப்படிக்கேற்ற மேன்மைகளற்றுப் போம் குடும்ப விருத்திகளேயும் அடையானென்றும் குரு முதலியோர் நீசனுகினும் மேஷம் சிம்மம் துலாமிதில் சுபருடன் ரவி கூடினும் பிதாவின் ரோணபாத்திபனுகியும் பிதுர்பாலிய மரணத்தையும் அடைவன் என்றும் ஞானமில்லாதவனுவான் பென்றும் தருமமில்லாதவனுகியும் பலவகை பிதுரார்சித மின்றியும் அவ்விதம் பிதா ஆர்சிதம் பூர்வார்சிதமிருந்தாலும் அதற்கு மேற்கொண்ட கடன்களேயும் அடைந்து துன்பப்படுவனென்றும் அறியவேண்டும்.

சுக்கிரனுக்கு பாக்கியாதிப நின்ற வீட்டுக்கதிபன் சுபனுகியவருக்கு ௩-௬-௮-ல் இருந்தாலும் பாபனுகி கேந்திரகோணத்திலயேசுபக்ஷேத்திரம்பாவக்ஷேத்திரமானுலும் பிதா வார்தீகமரணமும் பிதுர் சொத்திருந்தும் இழந்து ருணஸ்தனுவனென்றும் சனிமுதலியோராகின் யெவ்வன மரணமும் புதன முதலிய சவுமியராகில் ;கௌமார வயதில் மரணமும் குரு முதலிய பெலமுற்றவராகில் வார்த்தீகதிசைவரை பிதுர் தீர்க்கமும் பிதா பூர்வார்ச்சிதம் முதலிய பொருள்கள் அபிவிருத்தியுடன் அடைந்து வரப்படுவனென்று மிகவும கீர்த்தி மூர்த்தியுண்டாகும்.

ரவி சுபக்ஷேத்திரங்களில் கேந்திரகோணமாகியும் துஸ்தானமாகில் சொக்ஷேத்திரமாக வாழினும் சுக்கிரனுக்கு ௬-௰-க்குடையவர்களிருக்குமிடத்ததிபனுனவன் கேந்திரகோணத்தில் பாவனுய் பாவக்ஷேத்திர மேறினலும் யௌவனத்தில் பிதாமரணமாவனென்றும்.

பாபிகளானவர் சுபக்ஷேத்திரமாகின் வார்த்தீகதிசையில்,மரணமென்றும் சுபர் பாபர் கலர்ந்து தனக்குறிய சுபமித்துரு க்ஷேத்திரமாகில் கவுமாராவஸ்தையில் பிதுர் மாரகமடைவனென்றும்.

பாபக்ஷேத்திரமும் பாபர்களேகூடினலும் பிதுர்கருமஞ் செய்யமாட்டானென்றும் புதன் சுக்கிரன் சந்திரனிவர்களி லெவராவது கூடினலும் பார்த்தாலும் பிதாவின் தாரங்கள் உ - முதல் பலதார விவாகனென்றுங் கூறப்படும் யென்றும் பிதுர் பாக்கியவிருத்திகளும் அதிகமான மேன்மை

யுடன் வாழ்வனென்றும் மிக்க கீர்த்தி மூர்த்தியுடன்சரசசல்லாபனுகிராச வதிகாரம் பொருந்துவனென்றும் சுக்கிரனுகில் யௌவனமரணமும் குருவாகில் வயோதிக மரணமும் குசன் சனியாகிலும் பாலியமரணமும் ரவி புதன் சந்திரனுகில் ரவிக்கு பாலியமும் புதன் சந்திரன் பாம்புக்கு கவுமாரகாலத்திலும் மரணமாவனென்றும்.

ரவிசுக்கிரன் புதனிவர்கள் தனித்தாவது சேர்ந்தாவது கன்னிமீனம் மேஷம் விருஷபம் மகரம் இவைகளி னின்றாலும் அவரவர்களின் உச்ச சொக்ஷேத்திர ரதியாயும் கேந்திரகோணமாகி இரெண்டாகிய ரவியுடன் புதனுடன் சுக்கிரன் கூடினும் ரவியை சுக்கிரன் கூடாமலும் சனி ரவி முதலிய பாபர்களின் சுக்ஷேத்திரமான மேஷ விருச்சிகம் மகர கும்பம் சிம்மம் துலாம் இவைகளில் இல்லாமல் மற்றைய இடத்தினின்றும் சுக்ரனுக்கு கூ-க்குடையவனின்ற ஸ்தானுதிபன் பெலத்துடன் தனக்குறிய சுபக்ஷேத்திரவாசனுகியும் பெலத்துடன் கேந்திரகோணரீதியுட னிருக்குமாகில் பிதாவும் ஆயுள்விருத்தியுடன் வார்த்தீகதிசை மரணமும் மிகவுந் தனதானிய பாக்கிய பிரபலத்துடன் அரசதுல்லியனுகி கிரகவாகனம்பூமி கன்றுகாலிகளுடன் இராசத்துவ அதிகாரமுறையுடனும் மிகுந்த பிரபலனுகி வாழ்வனென்றும்

மேலேகூறிய இடங்களிலும் கிரகங்களுடன் பகைநீச சுபரல்லது பாவர்கள் கூடினுலும் பார்த்தாலும் அல்பயோகமும் பூர்வவாழ்வுடையவனுகியும் மத்தியம் யாதொரு பிரயோசனமின்றியும் கவுமாரத்தில் பிதுர் மரணத்தையும் பல்வகைக்குடும்பம் விருத்தியாகவிருந்து பெலமற்று பல நஷ்டத்துடன் பின் காலத்தில்வருந்தி இளைப்பனென்றும் மனோபீதிகளையுஞ் சத்துருரோகங்களையுடைய பிதாவென்றும் இதில் சந்திரன் சுக்கிரனிவர்க நீசம் பகைகளானுலும் பாவர்களே இருந்து பாபபெலத்துடன் கூடி அல்ப சுபர்நோக்கஞ்சேர்ந்து இருந்தாலும் பிதாயௌவன மரணமும் சுபர் சேர்க்கை பார்வையில்லாவிடில் பாலியமரணமும் பிதாவுக்கு பல தொந்திரவும் கண்டனை ராசதெண்டனைகளும் இதில் குசன்சனிவலுத்து கூடிநோக்கினுலும் ராசதெண்டனை சோரதெண்டனையும் கடனுல் பொருளழிவும் யௌவனத்தில் பிதுர் மரணமும் உண்டாகும் துவிதிய முதலிய பல தாரபோகனுன பிதாவென்றும் கூறல்வேண்டும் பலவியாதியஸ்தனுகியும் ஸ்திரீ ப்ராந்தனுகியும் பிதாவாழ்வனென்றுங் கண்டறியவேண்டியது.

மேற்கூறிய ரவி சுக்கிரன் சுக்கிரனுக்கு கூ-மிடத்ததிபனின்ற ராசினுதன் இவர்கள் பகையில்லாதவருடன் சுபருடன் பாபக்ஷேத்திரங்களினின்றாலும் பகை நீசக்கோளுடன் கூடினுலும் பெலமற்ற இடங்களில்

முதற்கூறியோர் இருந்தாலும் சாதகனுக்கு பூர்வார்ச்சிதமின்றிசுயார்ச்சித
யோகமுடையுவனாகியும்பிதாபாலிய மரணமும்இதில் ஓர்சுபர்களில்புதன்
கூடினாலும் நோக்கினாலும் தனக்குறிய சுபஸ்தானமின்றி நின்றாலும்
பாலிய மரணம் பிதாவென்றும் பிதுர்சொத்தினால் பிரயோசனமடையா
னென்றும் இதில் ரவி முதலியோர் சுபருடன் கூடிவலுத்தால் பிதுர்
சொத்து யேராளவிருத்தியுடனும் பல லாபத்துடனும் குடும்பவிருத்தி
இன்றி பிதாயௌவனத்தில் மரணமும் பலவகை மரணதுக்கங்களையும்
முன் அனுபவிப்பனென்றும் இதில் குருமுதலிய சுக்கிரன் சுபபெலத்
துடன் தனக்குறியவர்களுடன்கூடி நோகினாலுஞ் சேர்ந்தாலும் பிதா கவு
மார மரணமும் பிதுர்சொத்து பிரபலமும் மிக்கவுண்டாமென்றும் பூரண
சந்திரன் குரு முதலிய இருவகைச் சுபபெலத்துடன் பாபர்வீடாகினும்
மித்துரு இடமாகிக் கேந்திரகோணத்தி லிருக்கில் பிதா பிரபலயோகப்
பொருளைக் கடன்செய்து பின் பிரபலமாக்குவனென்றும் பிதாயௌவன
மரணமாவனென்றும் ஓர் பாபர்கூடினால் சில பொருள்போகும் யௌவ
னத்தில் பிதுரு மரணமும் இரெண்டு பாபர்கள் கூடினாலும் அசுபபெலத்
துடனிருந்தாலும் பிதா பாலியமரணனாகி விடுவனென்றும் பிதுர்சொத்
தேகிடையாதென்றும்அல்லதுபிதுர்சொத்திருக்கினும்இழந்துவிடுவ
னென்றும் (பாபர் மூவர்முதலானவர்களாகில் பிதாஉடன்மரணமும்
சொத்து விருத்தி இல்லானென்றுங் கூறப்படுமென்றவாரு) இவ்வித
மிருக்கினும் சுக்கிரனுக்கு கூ-க்குடையவனுடனாவது அவ்வீட்டதி
பனுடனாவது சுக்கிரன் பெலமற்றுக்கூடினும் சனி முதலியோர் பார்
த்தாலும் பாபக்ஷேத்திரம் பாவருடனிருக்கினும் புதன் சனி வீடா
கினும் அதில் புதன் ரவி யல்லது சனியையாவது அமர பக்ஷ சந்தி
ரனையாவது கூடினாலும் தகப்பனுக்கு உ-முதலிய தாரத்தையும்
பலதாரங்களையு மணப்பனென்றும் அப்படிக்கொற்ற கிரகம்மூன்று
ரெட்டு பனிரெண்டில் வாழில் பூர்வார்சிதம் பிதுரார்ச்சிதம் சேதமா
கிக் கஷ்டநஷ்டத்துடன் றுணங்களுக் கழித்து பலகவலையடை
வன் பிதுர் கவுமாரம் எவ்வனம் இவ்வித வயதில் மரணம் பிதுர்குடு
ம்ப அல்ப விருத்திகளும் கேந்திர கோணமாகியும் சுக்ஷேத்திர உச்
சம் முதலிய இடத்திலிருக்கினும் புதன் ரவியாகினும் குசன் குரு
அல்லது குரு சனியானாலும் ௩-முதலிய துதிய தாரத்துக்குமேற்
கொண்டதகப்பன் பிரபலயோகவானாகி அநேக பொருளைத் தேடி
பிரபலஞ் செய்து விருத் க்கிக் கொண்டுவருபவனென்றும் இவர்க
ளுடன் பாவர்கள் கூடினும் நோக்கினும் பிதா தேகரோகி தேகபா
தை அசக்தனாகியும் சுபராகில் சுகதிடசரீரவானாகியு மிகவுங் கீர்த்தி

மூர்த்திகளையடைந்து பிரபலத்துடன் வாழ்வனென்று மிருதியான மேன்பாடுகளையும் சுபரும் பாபருமாக கலந்து இருக்கில் அல்ப விருத்தியையுடைய பிதா வென்றுங் கூறல்வேண்டுமென்றும் அதிக புகழ்ச்சிகளையும் அகங்களாம் சமமாக அடைவனென்றும் கூறல் வேண்டும்.

சுக்கிரனுக்கு கூ- க்குடையவனு மவன்நின்ற வீட்டதிபனும் பாபனல்லது புதனாகினும் அவர்பாவருடன் கூடினாலும் நீசம்பகை யில் அல்லது பகைகிரகவாசனாகியும் கிரகப்பகைவரைக் கூடினாலும் ௩-அ-கஉ-கூ இந்த இராசிக்கதிபனுட னல்லது இராசிகளி நிற்கினும் பிதுரார்சிதமின்றி பரதேசவாச சஞ்சாரனாகிப் பலவாறாகிய கஷ்ட நஷ்ட ரெணஸ்தனாகியும் வாழ்வன் சுபர்பாபக்ஷேத்திரங்களில் அல் லது பாவருடனே கூடிபார்த்தாலும் அப்படியே பிறபலமின்றியுங் கேவலஸ்தனாகிப் பலவாறான கஷ்டநஷ்டமும் அடைவன்வம்சவிரு த்திகளையும் பிரபலமாக அடையமாட்டானென்றுஞ் சுப க்ஷேத்தி ரத்திலாவது சுப பெலக்காரருடனாவது பெலத்துசுபநோக்கத்துட னிருந்தும் ரவிமுதலிய சுக்கிரன் சுபபெலத்துடனும் இருக்கில்பிதுர் பாக்கிய பிறபலமுமிகுந்த கீர்த்திமூர்த்திகளையும் இராசவதிகாற யோக மும் பூமிகிரகவாகனக்ஷேத்திர பிறபலனாகியும் மிகுந்தகீர்த்திகளையும் இராசவதிகாற யோகமும் பூமிகிரகவாகனக்ஷேத்திர பிறபலனாகியும் மிகுந்தகீர்த்திகளையும் படைத்து பிதுர்பாக்கியத்தினா லதிக சிறப் பை பொருந்துவன் அரசயோகவானாவன் தனக்கு இயல்பில்லாத சிலபாபரைக் கூடினாலும் பார்த்தாலும் கலந்துநின்றாலும் பிதா அல்பயோகவானாய் சில பூமி கிரகவாகனயோக மத்திபனாய் பூர்வ பிறபலனாய்ப்பின் தரித்திரனாவன் இதில் பாபர்கள்கூடி நிற்கினு னோக்கினும் பலவகை கஷ்டநஷ்ட தரித்திரசிகாமணியாய் குடும்ப விருத்தியும் பிதுர்தண்டனை யுடையவனாகியும் அக்ருத்தியனாகியும் வாழ்வனென்றுங் கண்டு கூறல்வேண்டியது.

சுபபெலமே சாஸ்தியாகில் அதியோகவானாய் மிகவுங் கீர்த்தியு டன் சக்கிரயோகனாவன் அரசனாய் ரொக்கம் பூமி கிரகவாகன பிற பலயோகவான் என்றறியவேண்டியது.

ஒருவருக்கொருவர் பகைபெற்றபர் இராசிகிரகத்துடன் கூடி னால் பிதாபலவித ரெணஸ்தனாகி அக்ருத்தியனாய்ச் சித்தபிரமாதி நோயாளி யல்லது விரோதவனாகி மிகவுங் கஷ்டநஷ்ட துன்பத்தை யுடையவனாகி வாழ்வன் என்றறியவேண்டியது.

பிதுர்பாவ மாரக கணிதங்கள்.

சுக்கிரனுடனும் ரவியுடனும்விருஷபத்தில் சுக்கிரனுக்கு௯-மிடத்ததிபனின்ற கோளுடனுங் கூடிய துகைகளை பெலாபெலப்படிக்கி கூட்டி இராசியெண்ணிற் பெருக்கிய துகையை ௯-ல் கழித்த சேஷம் திசையாகவும் ஈவை ௱-ல் பெருக்கி ௯-ல் கழித்த சேஷம் புக்தியாகியும் கணக்கு மேலேபெருக்கிய மொத்தத் துகையை ௱-ல் கழித்த சேஷம் காலமான அவஸ்தையென்றங் கண்டு நிரியாணங் கூறல்வேண்டும் என்றறியவேண்டியது. இவைகளை யெல்லாம் சவ்யாபசவ்ய ரீதிப்படிக்கி மேஷ லக்கினத்தில் சொல்லியவிதிப்படி முறையே பார்க்கவேண்டும் தவசியமாக இருக்கின்றது.

கருமம் இராச்சியம் இவைகளைப்பற்றிய பலன்களாவன.

புதன் சுக்ஷேத்திர உச்சதானம் கேந்திரகோணத்தில் தனக்குரிய சுபக்ஷேத்திரவாசனுகி ரவியை யல்லது சுபறைக்கூடினும் மிதுனத்தில் பாவர்களின்றி சுபசம்மந்த யுதத்துவ மிருக்கினும் குருபெலவானுகி சொச்சோச்சங்களில் நின்றாலும் தனக்குரிய கேந்திர கோணத்திலும் புதனுக்கு தசமாதிபனின்ற இடத்ததிபன் சுக்கிரன் பூரணசந்திரனிவரில் யெவரைக்கூடினும் கேந்திர சுபஸ்தானம் சேர்ந்து இருக்குமாகில் மண்டலாதிபனுகி பிரபலவானுய் தங்கள் தங்களுக்குறிய சத்கரும வனுஷ்டாதாவாகி மிகவும் பிரபலத்துடன் கீர்த்திபெற்று மிகமேன்மையுடன் வாழப்படுவனென்றும் பிரபல மேன்பாட்டுடன் கிரகவாகன பூமியாதிபத்தியங்களை யடைவனென்றம் கிருஷியல்லது வாணிபத்துவமும் இவருடன் புதன் ஸொச்சோச்சமிரண்டையும் அடைந்து பிரபலத்துடன் குருவுமிருக்குமாயில் மிகவும் மேன்மையான வாணிபத்துவம் பூபதி இவ்வித பிறபலவானுகி இராசயோகவானுவன்.

இவர்களில் ஒருவர் புதனல்லாதவர் கெட்டு பாபருடன் பாபக்ஷேத்திராயுதர்களாகி பகைநீசங்களை பொருந்தி இருக்கினும் பாபர்பார்க்கினும் சில அல்பபூமிக்கதிபனுகி வாழ்வதிலும் நூதனவாழ்வடைவனென்றம் இதில் குரு முதலியோர் கெடின் அரசத்துவமின்றி சிலபாகவனுகூலத்தைப்பொருந்துவனென்றம் சத்சருமனுகியும் புதன் குரு இவர்களிருவருங்கெட்டு ௬-௯-௮-௧௨ இவைகளிலும் பாபயுதர்களாய் கூடில் அல்பபூமியுடையவனுகியும் சிலபாக வயதுவரை யாதொரு பூமி கிரகவாகனமின்றி பலவருத்தத்தை யடைந்தும் பலவாறாக சஞ்சாரியாகி முன் இளை

த்து வருத்தங்களையுஞ் சோகங்களையுமடைந்து பின் க்ஷேமத்தை சமமான பூமிமுதலிய விருத்திகளை யடைவனென்றும் கூறல்வேண்டும் என்றும் அரசர்களுக்குத் தொண்டுசெய்யும் யோகத்தையும் அடைவனென்றுங் கூறப்படும்.

புதன் பகை நீச இடங்களிலும் விருச்சிகம் கும்பம் மேஷம்சிம்மம் இவைகளிலும் பகை நீசக்கோள்களுடன் சனி முதலிய பாவரைக்கூடினும் பார்த்தாலும் பாபக்ஷேத்திரகெதனுகினும் பூமிகிரகவாகனமின்றியும் பல கஷ்டநஷ்ட துன்பமடைவன் தரித்திரனுவன் ரவியைக்கூடி துலாத்திலும் சனிகுசனிவர்களைக்கூடி மேஷத்திலும் பாம்பு குசனைக்கூடி சிம்மம் கும்பத்திலுமிருக்கினும் பலவகைப் பூமியில்லானுகி இழந்தும்துன்பாகங்களை யடைவனென்றும் மிதுனத்திலாவது புதனின்ற இடத்துக்கு பத்தாமிடத்ததிபனின்ற இராசினுதன் மேற்காட்டிய விதமாய் பகை நீசமும் அல்லது அவ்வகை கிரகங்களையுங்கூடி துஸ்தானகேதருகி ௬-௬-அ-௧௨-லிருக்கினும் பூமிமுதலிய யெவ்விதமுமின்றிப் பல கவலைபடைந்தும் அதிதரித்திரனுகியும் பாவகர்மவானுகியும் கருமஹீனனுகியும் தன்குலஹீனத்தொழிலையும் புரிந்தும் தனக்குறிய கருமக்குறைவுடனும்ஆவான் யென்றும் இவ்விதமிருக்கும் பாபக்ஷேத்திர கெதக்கிரகங்களுடன் புதன் சேரிற் அல்பபூமிஸ்திதி காலாதீதத்தில் அடைவன் குரு முதலிய சுபக்கோள் சுக்கிரன்கூடினுலும் பார்த்தாலும்சிலகாலமுன்னேறுயிருந்து இழந்து பின் சுகசௌக்கிய வனுபவபூமி கிரகவாகனுதி க்ஷேத்திரமேன்மையும் அடைவன் பூரணசந்திரனுகினும் அவ்விதியே சுகபெலனும் பூமி பிரபலமும் பூர்வார்ச்சித யோகவானுப் கருமசிருத்தையும் மேன்மையுஞ் சிலகாலமழிந்து திரிந்துபின்னடைவனென்றும் சுபர்களுடன் பாவர்களும் கலர்ந்து கூடினுலும் அவ்விதமே சிலகாலத்தின் பின்னுண்டாகினும சமவிருத்திகளை யடைவனென்றும் பாபபெலனே சாஸ்தியாகின் இவர்களில் தள்ளுண்டகருமனுகி சாதிபேதனுகி இழிவான கருமத்தையும் அடைந்தும் பலவிததுக்கங்களையும் அனுபவிப்பனென்றும் ஸ்தானுதிபதி பெலத்துடனும் ஸ்தானத்தில் பாவரும் இருக்கில் அல்பபூமியடைவனென்றும் கருமசமதுல்யமும் ஸ்தானுதிபதி கெட்டும் ஸ்தானத்தில்சுபபெலத்தோர்வாழில் மிகவும் நற்கருமமும் சிலபூமிகளிருக்கினும் அதிகாரமேன்மையுடன் சுகத்தை யடைவனென்று மிகுந்த கீர்த்திமூர்த்தி பிரபலத்தையும் அடைந்து வாழ்வனென்றும் மேலேகூறிய பாவவிதிகளை யடைவன்.

புதன் கன்னி மீனம் விருஷபம் இவைகளிலும் கும்பத்திலும் சுக்கிரனை சனிமுதலிய பூர்வபட்ச சந்திரனை யல்லது குருவைக்கூடினும்

மிதுனத்திலும் சுபரிருந்தும் புதனுக்கு தசமாதிபன் குசனல்லது மற்றய ராய் கேந்திரகோண சுபபெல இராசியிலும் அவ்வீட்டதிபன் பிரபல சொச்சோச்சங்களானாலும் சந்திரகேந்திரமாக வரினும் குசன் பாம்பு பகையையுடையோர் கூடியல்லது பார்க்காமலுமிருக்கில் இராச்சியாதிபனாகி இராசயோகவானாய் அனேகர்களைக் காப்பாற்றியுங் கண்டனை தெண்டனாதிபனாகியும் அடிமை முதலியவாகன இயல்பும் அடைவன் இவர்களுடன் பாவர்சேரில் சிலகால மடிமையையும் சிலகாலம் ஒன்றுமின்றியடைவன்.

இருவிதக் குறிப்புள்ள பாவரைக்கூடில் சில கிருமாதிபனாகியும் சில பூமி இராச்சியங்கள் முன்னிருப்பவையை யிழந்து பலவித துக்கமடைவன் பாபபலனே அதிக வலுப்பெறில் சுல்ப பூமியும் உபயோகமின்றி அலைவன் கருமக்குறைவும் பிதுர் விரோதவானாகியும் பவிப்பன்.

துலாம் விருச்சிகம் தனுசுமீனம் இவைகளில் புதனின்று ரவிமுதலியரைக்கூடினும் அவ்வதிபர்கள் பெலமற்றுநிற்கினும் சனிமுதலியபாம்பு குசன் இவர்களையும் அமரபட்ச சந்திரனை கூடினாலும் சில கிருமம் பூமியுண்டு யென்றும் குரு முதலிய சுபர்பார்க்கில் இவனாலதிக பிரபலமும் உண்டாகும் பகை நீசர்கள் கூடினாலும் பார்த்தாலும் யாவையும் இழப்பன் விவாதவிரோதத்தினாலேயே சகலவகைப் பூமிகளையுங் கர்மானுஷ்டானங்களையுந் தவிர்ந்து கருமியாகி வாழ்வனென்றும் அவ்வவ இடத்துக்குறிய சுபர்களே பிரபல உச்ச சொக்ஷேத்திரத்துடன்கூடில் சிலபூமி யதிபனாகி பிரபலகிரக வாகனமுதலிய இடம்பொருளேவலைப் படைப்பன் இதினுடன் சனிமுதலிய பகைப்பாபர்கூடில் ஓர்விதப்பொருளுமின்றி யலைவன் கருமஹீனனாய்ப் பவிப்பனென்றும் சில பூமி இருந்தவைகளையும் இழப்பனென்றுங் கூறல்வேண்டும்.

மகரம் மேஷம் கடகம் சிம்மம் இவைகளில் புதனிருந்தும்ரவியைக் கூடி குரு பூர்வபக்ஷ சந்திரகேந்திரமும் இவைபெரில் மிகவுமேன்மையான சில பூமி கிருமாதிபனாகி வாழ்வன்யென்றும் இதில் சுக்கிரன் தனக்குறிய சுபக்ஷேத்திரமானதில் இருக்கில் மிகவும் மேன்மையான பூமிகளை விவாதமூலியத்தால் செயமடைந்து பின் கஷ்டமும் சனிமுதலிய குசன் பாம்பு இவர்களில் எவரைக்கூடினும் பலவிதபூமிக்ஷேத்திரநாசமும் தரித்திரசிகாமணியாகி கருமஹீனனாகிவாழ்வனென்றும் இரண்டுபாவரைக்கூடி பாவருக்கு இயல்புற்ற சொக்ஷேத்திராதிசுபஸ்தான மித்துருஸ்தானத்தில் கலர்ந்துநிற்கில் சில கிராமபூமி பிறபலமும் மேன்வமகளுங் கிரகவாகன க்ஷேமபலனும் பகை நீசவிரோத இடங்களில் கூடில் பலவகைப்பொ

ருள் நாசமும் பகையும் குடும்ப துக்கத்துடன் கருமஹீனனுவனென் றும் சுபபெல மதிகமாகியும் குசன் மகரத்திலும் ரவி புதன் மேஷத் தில் குரு கேந்திரமல்லது கூடினும் சந்திரன் சனி கடகம் விருஷப மிவைபிலுங் ரவிபுதன் சிம்மத்திலாவது சுப சம்மந்தனுகி குசன் சந் திரன் மேஷந்தி னின்றுலும் பிறபல வரசயோகத்துடன் கிரகம் பூமி பிரபல யோகத்துடன் வாழ்வனென்றும் மனதுக்கு அசந்துஷ்டிகளே யும் விவாதத்தையும் பின்னடைவ னென்றுஞ் சொல்லப்படுமென் றறியவேண்டியது.

சீவனபலன்.

புதன் கேந்திர கோணத்தில் சுபட்சேத்திர மல்லது கடகம் சிம்ம மேஷம் விருஷபம் இவைகளில் சூரியனே யல்லது சந்திரனைக் கூடி மித்துருத்துவத்துடன் குரு முதலிய சுபர் திருஷ்டியுடன் பெல த்தும் பாவ சம்பந்தம் திருஷ்டிகளில்லாமல் புஷ்டியோடு இருக்கில் இராசாங்கம் பிறபு இவர்கள் மூலிய சீவனமுடையவன் யென்றும் இதில் குரு முதலியோர் சுபட்சேத்திர பெலத்துடனிருந்து பார்த் தால் முக்கிய வரசத்துவ யோகவானுய் அநேகர்களையடக்கி துரை த்தனஞ் செய்வனென்றும் சுக்கிரனுகில் ஆலோசனே உண்டாக்கும் சக்தி இவ்வித நன்மார்க்க ராசாங்க சீவனஞ்செய்வனென்றும் பெண் வகைத் தனமும் கூடுமென்றும் பிறபல கீர்த்திவானுவன் சூரியன் சந்திரனுடன் கூடினுலும் பார்க்கினும் இராஜாங்க சீவனமுடையவ னுகி பிரபலவானுய் வாழ்வன் யென்றும் பெலமுடைய சுபத்துவ முள்ள குசனேக்கூடினும் பயிர்த் தொழிலுடன் அரசாங்கத்துவ கொடுங்கோல் செய்வனென்றும் பூர்வபட்ச சந்திரன் தனதிடமில் லாத சுக்கிரனுகில் பயிர் முதலிய பூபதித்துவ முயர்ச்சியுள்ள யோக சீவனமும் சனியாகில் அடிமை பூண்டு கேவல சீவனமும் கிருஷ்ண பட்ச பஞ்சமிக்குள்ளாகிய சந்திரனும் அடிமை வேலேயும் பாம்பு முதலியோர் கூடினும் நோக்கினும் இழிவுகுல சீவனமும் சுபர்கள் பகை நீசத்துடனிருந்து கூடினுலும் பார்த்தாலும் இழிவான அடி மை முதலிய அதமசீவனமும் பாபர் பகை நீசர்களாய் கூடினும் நோக்கினும் அதமத்திலுங் கடையா னபிக்ஷாவிருத்தி முதலிய சீவ னமுஞ்செய்து வருவனென்றும் குரு புதன் இவர்கள் நட்பு பெற்று கூடில் விவாதத் தொழில் ராசாங்கத்தால் பெற்று சீவனஞ் செய்து வருவனென்றும் கூறப்படும்.

இதில் புதன் மூன்று சுபருடன் பெலத்து லக்கின கேந்திரமல்லது சந்திர கேந்திரத்திலும் நட்பு க்ஷேத்திரமாக வாழினும்வித்தை மூலமாகவும் பூமியும் யாருக்குள்ளுந் தொண்டுசெய்யாமல் சீவன மேலானவனுகி வாழ்வர்கள் இவைகளை பகைபெற்ற சனிமுதலியபாபர்கள் கூடினும் நோக்கினும்சிலனுளடிமை சிலனுள் சுயமூலமாகசீவனம்பண்ணி வருவனென்றும் அவைகளால்மிகுந்த வனுகூலத்தையும் பெற்றுவாழ்ந்து வறப்படுவனென்றும் அதிகமான கீர்த்திவானுவன்.

மீனம் கன்னி மிதுனம் கும்பம் இவைகளில் புதனும் அவருடன் ரவிகூடினுலும் உரியபெலச் சுபறைக்கூடி குரு அல்லது சுக்கிரன் இவர்கள் நோக்கினும் பெலமுற்று நிற்கினும் பெண்மூலியமாய் சில தனலாபத்தையு மிகவும் கீர்த்திகளையும் பெற்றும் கணிதமுதலிய விதிநூல் தமிழ்முதலிய சுபபாஷைபும் பூமியும் வியாபாரத்தையுஞ் செய்து சீவனஞ்செய்ய வல்லபூனுய்க் கீர்த்திபெற்று வாழ்வனென்றும் உலகத்தி லதிகபுகழுங் கீர்த்திகளையும் அடைந்து இராசயோகவானு யாவனென்றும் இவர்களுக்கு யேழுக்கேழாய் குசன் பாம்பு சனி நின்ருலும் அவர்களைப் பாவர்கள் நோக்கினும் அவ்வித சீவனமிருந்தும் மேன்மையின்றி சிலகாலஞ் சிலருக்கு அடிமையும் இல்லாதவைபோலுங் குறைவடைந்து பின் க்ஷேமகரத்துடன் சீவனமேன்மை யடையப்படுமென்றும் மிக்க கீர்த்தியும் அபகீர்த்தியும் கலந்து நடக்குமென்றும் பலவிதத் தொழில்களையும் பூண்டு சீவனஞ்செய்வனென்றும்.

இவர்களுடன் ரவிகூடில் சொல்ப ராஜாங்கசீவனம் உடையவன் பிறபு பெரிய குடும்பவேலை பார்த்து வருவன் சந்திரனுகில் சில அல்ப பூமியுடன் ஸ்திரீவகை தன மல்பத்துடனும் இராசமூலிய அல்ப சீவனஞ் செய்வனென்றும் குசனுகில் சில பூமியும் ரொணமாஜிஸ்ட்ரேட் முதலிய கொடிய சீவன மல்பமுடையவனென்றும் புதனுடனுகிற் சந்திரன் சுக்கிரன் கூடில் கிருஷி கணிதவிதி நூல் நடாத்துவ னென்றும் புதன் சுட்க்ஷேத்திர உச்சத்திலாவது துலா முதலிய இடத்திலாவ திருக்கில் வியாபாரத் தொழில் பயிர்த்தொழிலுங் கதிருடன் கூடினும் சந்திரனுக் கேழாகினும் சுக்கிரன் குரு வலுத்து சந்திரனையாவது புதனையாவது நோக்கினும் வியாபாரமென்றும் சனி பாம்பாகினும் துலாம் மகரம் இவையானுற்ற மீனம் இதுகளினின்ற சுக்கிரனுடன் சனி கூடினும் ஜெலமேல் நடக்கும் முயர்ச்சிகளாலும் தண்ணீர் முதலிய சம்பந்த ஜீவனங்களாலும்

புதன் பெலத்துக் கூடினும் சிம்மம் கும்பம் மேஷம் இவையிலிருக்கின் பண்டிதாதித் தொழிலும் பாம்பு கூடினு மிருக்கினும் இழிவான வடிமைத் தொழிலும் கூறப்படும்.

துலாம் விருச்சிகம் தனுசு இவ்வித இராசிகளாகில் சுபருடன் புதனிருக்கில் வித்தியா சீவனமும் மலை முதலிய காடு சம்பந்த சீவனமுடையவனுவன் யென்றும் கூறப்படும் பாவர்கள் சேரில் மிகவும் குறைவும் வெட்கமுமுள்ள சீவனத்தை யடுத்து லாபம் பெற்று வாழ்வன் வியாபாரத் தொழில்களைப் புரிந்து சீவனஞ்செய்வனென்றரியவேண்டியது.

சீவன பலன்களின் தனகணிதங் கணிக்கின்ற வகை.

சனியுடனும் புதனுடனும் புதனுக்கு பத்தாமதிபனின்ற இடத்ததிபனுடனும் மிதுனத்திலும் உரிய பெலாபெலப்படிக்கு கிரகயெண்களை இராசியெண்ணுர் பெருக்கிய துகையை உச்ச ஆக்ஷி முதலியபாக முறைப்படிக்கு முன் விவரித்தபடி சமத்துகையுடன்பெருக்கியது மாதவரும்படி மொத்தமாம் இதில் ரவிக்கி பத்தாமிடத்ததிபனின்ற இடத்ததிபதியின் கணக்கெடுத்து புதன் பூருவான பிரபவபெலமாணுலும் உ-யாக வைத்து அவருடன் சேர்ந்த கிரக சுபாசுபபெலப்படிக்கி ஆகிய நிரையில் மேல் இராசி குணிதத் துகையால் பெருங்கி பெலன்படிக்கித் தள்ளி நின்றயெண் மாதவரும்படியான அவ்வித தேசபேதகங்களுக் கிசைந்தபடி பொன் லாபமானது இவன் சம்பாதனவாதியென் றரியவேண்டியது இதில் முன்கூடிய பிதுரார்ச் சிதத்தைத் தவிர்த்தவயே தவிர வேறு பார்க்கக்கூடாது.

லாபவிரயபலன்கள்.

சந்திரன் குரு கேந்திரத்தில் இருந்து சுபக்ஷேத்திர தெதணுகி பெலத்துடன் சொச்சஸ்தானத்தி லிருக்கினும் சுபபெலத்துடனும் பாபருடன் கூடாமல் நோக்காமலிருக்கில் சாதகனுக்கு அதிகலாபமும் சூரியன் ௬-௬-௮-௧௨-பகை நீசக்ஷேத்திரமாகி இருக்கினும் விரயம் அல்பலாபமதிகமாகநேருமென்றும் பாபரிருக்கினும் நோக்கினும் அசனசயனக் குறைவையுடையவனுகி வாழ்வன் சிம்மத்தில் சனி பாம்புமுதலிய பகைக் கோளிருக்கினும் சாதகன் விரயமிடமனமில்லாதவனுகி பலவித கஷ்டநஷ்டத்துடன் பொருள் அசனசயன குறைவுடன் சுகமில்லாதவனுவன் யென்றும் மேலேகூறிய மார்க்கங்களில் சூரியனுடன் அல்லது சூரியனுக்கு ௧௨-மிடத்ததிபனின்ற விராசினுதன் ௬-௬-௮-௧௨-நீங்கிய விடத்தி

னிற்கில் விரயமதிகமும் மேன்மையும் பெலத்துடன் விருத்திகளும் அயல் திசை சஞ்சாறவாசனாகியும் வாழ்வன் மற்றவிடங்களாகிய பகைநீச இடங் களில் பகைவருடன் இருக்கில் பலவித விரயஞ்செய்யவெண்ணமில்லாத வனாய் சயாத்துரோகனாகிப் பின் மிகுந்தநஷ்டம் செய்வனென்றும் சுப க்ஷேத்திரம் சுப பெலத்துடனிருக்கில் சத்விஷயசரசசல்லாப விரயமும் மிகவுமேன்மைகளும் பரஸ்தலவாசமும் சற்வகீற்தி விருத்திகளையும் பொருந்தி வாழ்வனென்றரியவேண்டியது சிம்மத்திலாவது சூரியனுக்கு கஉ மிடத்ததிபன் னின்ற இடத்ததிபன் பகைநீசம்பெற்றாலும் சனிமுத லிய பாவக்கோள் கூடினாலும் சாதகனுக்கு அக்ருத்யமும் போக ஸ்திரீ களால் அனேக தனநஷ்டமும் சாதிப்ருஷ்டமும் தீவுதேசாந்தரவாசஸ்த சஞ்சாரனாகி வாழ்வனென்றறியவேண்டியது சிலவதிகனாகினும் போக விஷய பிந்துவிருத்தி இல்லான் மற்றயச்சுபர் நோக்கில்சிலகாலம் விருத்தி யும் சிலகாலம் விருத்தியற்றும் வாழ்வன் குசன் முதலிய பாம்பு வாழில் சூரிரோகமுடையவன் வீரியமதிகன் இராகுசுக்கிரன் சூரியனாகில் போக வதிக இச்சை யுடையவன் மேன்மையான விருத்திகளும் பிறபலமான மேன்மையுடனும் குரு புதன் முதலியோராகில் யோகசமரசன் சூரியன் கூடி குருநோக்கில் கடும்போகனென் றரியவேண்டியது.

சந்திரனுடனும் கடகத்திலும் சந்திரனுக்கு கக-மிடத்தாதிப னின்ற ஸ்தானாதிபனுடன் கூடிய சுபாசுப பெலன்படிக்குரிய யெண்களைச் சேர்த்து இராசியெண்ணிற் பெருக்கி சந்திரனுக்கு கிடைத்த பெலனுக் குரிய யெண்ணிற்கொடுத்த சேஷம் லாபமானபங்குயென்றும் சூரியனுட னும் சிம்மத்திலும் சூரியனுக்கு பனிரெண்டாமிடத்தாதிபனின்ற இராசி னாதனுடன் கூடியகிரகசுபாசுப பெலன்படிக்கி ஏற்பட்டயெண்களை அவ் விராசியெண்ணார் பெருக்கி சூரியனுக்குரிய பெலனின் யெண்ணிற் கொடு த்துக்கண்டசேடம் விரயமென்றும் அரியவேண்டியது லாபத்துக்கு விர யப்பங்கு குறைவானால் லாபவிருத்தியும் ரோக்கமுதலிய தனமுடையவ னென்றும் லாபப்பங்குக்கு விரயப்பங்கு அதிகமானால் கடன் என்றுங் கருதி உரைக்கவேண்டியது.

ஜோதிஷ ப்ரஞ்ஞான தீபிகை,
கன்னியா லக்கின வரையில் முதற்பாகம் சம்பூரணம்.

உ

ஸ்ரீரஸ்து.

ஜோதிஷ ப்ரஞ்ஞான தீபிகை.

(இரண்டாம்பாகம்.)

துலாலக்கினம்

துலாலக்கின குணகுண பாவங்களாவன.

துலாலக்கின சாதகனுக்கு களத்திர வயதுமுடையவனென்றும் புத்திரரிரண்டு குல அபிமானி சம்பத்து முதலிய தன விருத்தியுடையவனென்றும் தனவான் ராசாக்களுக்கு அதிக பிரியன் நல்ல சுகமுடையவன் என்றும் பரிமளகந்த புஷ்பப் பிரியனென்றும் நெருங்கிய மேன்மையுள்ள பந்துவையுடையவனென்றும் தருமசிந்தனையுடையவனாகியும் எ-வது காலம் நோய் தீ இவைகளாலும் கஉ-வது வருஷம் மாதகாலம் வைசூரி முதலிய விரண ரோகமும் ககூ-பகையாலும் சித்த பேதநோயாலும் உஅ-ல் ஆயுதம் செல மிவைகளாலும் சஉ-ல் இனிய இஷ்டராலும் பிறபல நோயாலும் கெண்ட வுபாதிகளுண்டாகு மென்றும் சுபதிருஷ்டி லக்கினத்தைப் பார்க்கில் வயசு ஷூ அ௫-என்றும் கார்த்திகைமீ அமரபக்ஷம் ஷஷ்டி ஞாயிற்றுக்கிழமை விருத்தி யோகமும் புனர்பூச நக்ஷத்திரம் காலையில் ஈஸ்வர பாதார விந்தத்துக் காளாகுவனென் றறியவேண்டியது.

இந்த துலாலக்கின ஜாதகனுக்கு யோகா வயோக திசைகளும் புக்திகளும் சுபாசுப மாரகங்களும் கூறப்படு மென்றவாறு.

துலாலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு.

புதன் சந்திரன் சனி இவர்கள் யோகத்தைக் கொடுக்கும் பிறபல ரென்றும் புதன்றிசை சுக்கிரன் சந்திரன் சனி புக்தியும் சந்திர

திசை குஜன் இராகு சனி புதன் புக்தியும் சனிதிசை புதன் சுக்கிரன் சந்திர புக்தியும் சுக்கிரதிசை சில பாகமும் புததிசையில் சில பாகமும் குசதிசை சில பாகமும் இராகுதிசையில் பிறபல யோகத்துடன் கிரகவாகனம் பூமி கன்று காலி வாகனாதி முதலாகிய பிறபல சுகசௌக்கியங்களும் இராச சன்மான வெகுமானங்களும் சீவன ராசயோகம் களத்திர புத்திர லாபங்களையும் மிக மேலான சுகபலன்களைக் கொடுக்கப்படு மென்றும் பிறபல் யோகபலனாக நடந்து வரப்படுவனென்றும்.

புததிசை சில பாகமும் குருதிசையும் குஜதிசை சில பாகமும் சுக்கிரதிசை சில பாகமும் ரவிதிசையிலும் கேது திசையும் இவைகளினுடைய புத்திகளும் பலவகைக் கஷ்ட நஷ்ட துக்க சோகாதி கருமம் தனதானிய நஷ்டம் ஸ்தானப்ருஷ்டம் பொருள் சேதசோரம் ரோகபயம் பலவிததுன்பங்களும் அரிஷ்டங்களையும் களத்திர புத்திர வரிஷ்டம் அரசன் பிரபு இவ்விதத்தோர்களின் விரோத மாச்சரியங்களையும் பலவகை சோகங்களையும் காராக்கிர துன்பமும் மரணசமான வியாதிசம்பவங்களையுங் கொடுக்குமென் றறிய வேண்டியது.

இதில் மாரகர்கள் ரவியும் கேதுவும் குருவும் நால்வது சனி செவ்வாய்திசை வரினும் இவர்களில் இராகு புதன் குரு குசன் கேது இந்த புக்திகளு மாரகத்து வத்தைத் தொடுப்பார்களென் றறியவேண்டியது தேகாரிஷ்ட ரோக துன்பங்களையுங் கொடுக்கபடு மென்றும் சந்திரகேந்திர உச்சக்கோளல்லது சந்திர உச்சகேந்திர சமசப்தமத்தினின்ற கிரகங்கள் மாரகராயினும் இதில் குருவாகில் மாரகத்தைக் கொடார்கள் யோகமழிப்பவர்க ளென்றும் ஆகையால் சுபாசுப பெலன்படிக்கிக் கண்டறிந்து கூறல்வேண்டியதவசியமாதலால் இவ்வகையறிந்து கூறவேண்டியது.

மாதுரு அரிஷ்டமான திசாபுக்தி காலமறியவும்.

சந்திரன்திசை இராகு சுக்கிரன் சனியிலும்.
குசதிசை இராகு குரு புதன் சுக்கிரனிலும்.
இராகுதிசை தனது சனி சுக்கிரன் புக்தியிலும்.
குருதிசை சனி சுக்கிரன் சந்திரனிலும்.
கேதுதிசை சனி சந்திரன் இராகுவிலும்.
சுக்கிரதிசை சந்திரன் இராகு சனியிலும். மாதுரு மரண

மும் துக்கங்களையும் மாதுரு வம்சக்ஷயமும் பலவகை தன நஷ்டத்தையும் பொருள்சேதங்களையும் பலவருத்த பலன்களையுந் தேகாரிஷ்ட ரோகதுன்பத்தையுங் கொடுக்குமென்றறியவேண்டியது.

பிதுரு அரிஷ்டம்.

சூரியதிசை இராகு சனியிலும்.
இராகுதிசையில் குரு சுக்கிரன் சனி சந்திரன்.
குருதிசையில் சனி தனது ரவியிலும்.
சனிதிசை தனது இராகு ரவியிலும்.
கேதுதிசை குசன்திசை சுக்கிரன் இராகு சனி
புக்திகளிலும்.

புததிசை சனி இராகுசனிபுக்திகளிலும் பிதாவுக்கு தேகாரிஷ்ட ரோகதுன்பங்களுடன் பலவகை மரண கருமம் பிதாவுக்குண்டாகுமென்றும் பிதுர்வம்ச நஷ்டமும் பிதுர்வகை துக்கசோகமும் இவ்வித பலன்கள் நடந்துவருமென் றறியவேண்டியது.

சகோதிர வரிஷ்டம்.

ரவிதிசை குசன் குரு இராகு புக்திகளிலும்.
குஜதிசை இராகு சனி கேது சுக்கிரனும்.
இராகுதிசை சனி புதன் சுக்கிரன் குஜனும்
குரு தனது குசன் சுக்கிரன் இராகுவிலும்.
கேதுதிசை தனது குசன் இராகு குருவிலும்.

சுக்கிரதிசை சந்திரன் சனி குசனும். இவ்வித திசாபுக்தி காலங்களில் தேகாரிஷ்ட ரோகதுன்பம் பலவகை வருத்தமும் மனோகஷ்டங்களும் சகோதிர துக்கம் குடும்ப களத்திர புத்திர சோகமிவைகளையுங் கொடுக்குமென் றறியவேண்டியது.

களத்திரலாப வரிஷ்டம்.

இராகுதிசை குரு சுக்கிரன் சந்திரனிலும் சனிதிசை தனது புதன் சுக்கிரன் குருவும் புததிசை சுக்கிரன் சந்திரன் குரு சனியும் சுக்கிர சந்திரதிசை தனது சந்திரன் குஜன் புதனும் சனியும் குச சந்திரதிசையில் குரு புதன் சுக்கிரன் இவைகளிலும் விவாகம் சுபசோபனம் சரசசல்லாபம் போகபாக்கிய மேன்மைகளும் தனதானிய பிரபலலாபமும் பெரியோர் நேசமும் அசனசயன சுகங்களும் உண்டாம் சனி இராகு குசன் சுக்கிரன் குரு இந்த புக்திகாலங்களில் களத்திர மரணமென்றும் சொல்லப்படுமென் றறியவேண்டியது.

புத்திரபாவ லாபமும் புத்திர வரிஷ்ட திசைகளையுங் கூறுவோமாக.

புதன்திசை குசன் சந்திரன் குருவும் சுக்கிரதிசை இராகு குரு சுக்கிரனும் ரவி குசதிசை சந்திரன் குரு சுக்கிரனும் சனிதிசை புதன் சுக்கிரன் குரு இவ்வித புக்திகாலங்களில் மேலான புத்திரலாபமும் குரு திசையில் புத்திரபாவ முண்டாகில் உடலுக்குடன் சேதமாகிவிடுமென் றும் குடும்பதுக்கமும் குருதிசை தனது சுக்கிரன் குசன் சுக்கிரன் இந்த புக்திகளிலும் குசதிசை இராகுதிசை தனதுபுதன் சுக்கிரன் கேதுவிலும்.

இவ்வித ரவிதிசை மேலேகண்ட புக்திகாலங்களில் சாதகனுக்கு பல வித ரோகதுன்பமும் பொருள்சேதமும் மனதுக்கவலை சாதகநோய்த்துன் பம் புத்திரகெண்டங்களும் பலவகை நோய்களா லரிஷ்டத்தையும் மனோ விரோத துக்கசோகத்தையும் பலவகைவருத்தம் அலேச்சல் பிராணகெண் டங்களையும் பலவித வருத்த பலன்களையுங் கொடுக்கு மென்றறிய வேண்டியது.

துலாலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு க-வது ஆயுர்பாவ பலன்களின் விதி யுணர்த்தப்படும்.

சனியையும் சுக்கிரனையும் சுக்கிரனுக்கு அஷ்டம லக்னாதிபதி நின்ற ஸ்தானாதியும் புதன் சந்திரனையுங் கொண்டு ஆயுர்பாவங் கூறவேண்டியது.

சுக்கிரன் சுட்சேத்திர உச்சகேந்திர கோணத்தில் சுபட்சேத்திரசம் பந்தனுகி தனக்குறிய மித்துரு சுபபெலக்காரருடன் கூடியும் குருபெலத் தும் புதன் சந்திரன் சுட்சேத்திர உச்சம் நட்பு தனக்குறிய கேந்திரகோ ணத்திலிருக்கினும் சுபதிருஷ்டியுடனும் சுக்கிரன் இருக்குமிடம் சுபசஞ் சரமாகில் குருசந்திரனவ்விதிபோல் சஞ்சாரத்திலும் பாவர் இசைவில்லா தவரைக் கூடாமலும் உ-கஉ-ல் பாவரின்றி இருந்திடினும் சாதகனுக்கு ஆயுற்பாவம் வருஷ ௱உ௰ யென்றும் சரமுபயமாகில் ஒரு கோளாகிய பாவ ரைக்கூடினும் நோக்கினும் நீசம்பகைபெற்றிருக்கினும் சந்திரன்கூடிகேந் திரமாயுரில் சாதனுக்கு ஆயுர்பாவ வருஷ ௱ யென்றும் இரண்டுபாவருடன் சுக்கிரன் குரு கூடினுலும் நோக்கினும் சரமுபயமாகில் வருஷ அகூ வறை தீர்க்கமென்றும் ஸ்திரம் ஸ்திரமாகி சனிபுதன் பெலத்து சுட்சேத்திர உச் சத்தில் இருக்கினுங் முன்போல்சுக்கிரன் முதலியோரிருக்கில் வருஷ அஉக் குள்ளென்றும் ஸ்திரமுபயமாகினும் உபயம் உபயமாகிநிற்கின் வருஷ எகூ யென்றும் ஸ்திரசரமாகில் உபயஸ்திரமாகினும் வருஷ சுகூ யென்றும் உப யம் சரமாகில் வருஷ ருச-யென்றுங் கூறப்படுமென்றும் அரியவேண்டியது

புதன் சந்திரன் சுக்கிரன் இவர்களிலொருவராகிய புதன் பெலமற்ற பகை நீச மறைவிடத்தினின்றும் இருக்கினும் மற்றவர் பெலத்துடன் இருக்கினும் பாபசம்மந்த நோக்கமில்லாமலு மிருக்கில் சாதகனுக்கு ௵ அச யென்றும் சந்திரன் புதன் பெலமற்று முன்கூறிய புதன் றற்பெலமாயிருக்கினும் மற்றய குரு சுக்கிரன் பெலத்துடனிருக்கில் ௵ சுசு யென்றும்.

மூன்றுபெயராகிய குருவும் பகைமுதலிய உ-ச-இவைகளிலிருந்து பகையோறைக்கூடினும் சாதகனுக்கு ஆயுர்பாவம் ௵ ஙங.யென்றும்சந்திரகேந்திர குருவுடனிருக்கில் வருஷம் சுங யென்றும் சுக்கிரன்பெலமற்றும் மூன்றுபெயர் வலுத்திருக்கில் ௵ நிச யென்றும் இருவர் பெலத்துடனிருக்கில் சாதகன் ௵ சஉ-க்குள்ளென்றும் சுக்கிரனுடன்இருவித கிரகம் பகைநீசமாய் பாவறைக்கூடி பெலமற்றுஇருக்குமாகில் ௵ ஙஉ-க்குள்யென்றும் சுக்கிரனுடன் புதன் ரவிமுதலியோர்கூடி ஸ்திரவிராசியில் உ-அ-கடகம் இவைகளிலிருக்கினும் கன்னியி னிர்க்கினும் குருகூடினும் அல்லது சுக்கிரன் மாத்திரம் துலாத்திலிருக்கினும் குரு சந்திரகேந்திரத்தினிற்கினும் மல்லது லக்கினகேந்திரமானுலும் குசன் சுக்ஷேத்திரமாய் புதன்முதலியோறைக்கூடி சுபர் பூர்ணசந்திரன் நோக்கினும் சநி நீசம்முதலிய வகையைப் பெற்றிருக்கினும் ௵ சுங-யென்றும் இதில் பகைநீசக்கோளல்லது இருவிதபாவர்கள் கூடிநிற்கினும்நோக்கினும் ௵நிச-யென்றும் பிரபல பாவர்கூடி நிற்கினும் நோக்கினும் ௵ ஙசு-க்குள்ளென்றும் சுக்கிரன் புதன் சந்திரன் இவர்கள் துலாம் கன்னி மீனம் விருஷபம்மிதுனம் கடகம் இவைகளி லவரவர்களுக்குரிய பகை நீசமுதலிய இடம் நீங்கியும் அப்படிப்பகை நீசமிருக்கினும் சுக்கிரன் மீனத்திலிருக்கில் புதனுடனும் கன்னியில் சுக்கிரன் இருக்குமாகில் புதனுடனும் இவ்விதமாகவும் சந்திரகேந்திரமாகியும் இருக்கினும் வேறு எவ்விதபாவரும் பாற்காமலும் சனி துலாம் கடகம் மகற கும்பம் இவைகளிலிருக்கினும் சாதகனுக்கு ௵ எஉ-யென்றும் இவ்வித இராசிகளிலேயே சுக்கிரன் புதன் முதலியோர் நீசமாகியும் பாவரைக்கூடி இருக்கினும் பகைக்கோள்க்கள் கூடினும் சாதகத்துக்கு வருஷம் நிச-க்குள்ளென்றும் குருநோக்கில் பூரணவயதென்று மிகமேன்மைகளும் மேற்கூறிய இராசிகளில் பாவர்களே இருந்து சுபபெலனின்றிப் பகைநீசமுதலிய பாபசம்மந்த சுபர்களாகி இருக்கில் பாலியத்திலேயே மரணமென்றும் பாபருஞ் சுபருங் கலந்து நிற்கில் சாதகனுக்கு வயசு வருஷம் ஙஉ-க்குமேல் சஉ-க்குள்ளென்றும் பாபபெலன் சாஸ்தியாகில் பாலியத்திலேயே மரணமென்றும் கண்டறிய வேண்டியது.

மேஷம் சிம்மம் விருச்சிகம் தனுசு மகரம் கும்பம் இவ்விராசிகளில் சுக்கிரன் புதன் இருக்கினும் ரவியைக்கூடி புதனும் குருமுதலியோரிருக்கினும் நோக்கினும் கேந்திரத்தினின்றாலும் சந்திரன்பெலத்து சந்திரகேந்திர ராகினும் சாதகனுக்கு வயசு வருஷம் ருசு-க்குள்ளென்றும் சனி பெலத்து சுவேஷத்திர உச்சத்துடன் முன்கிரகங்களுமாக விருக்குமாகில் வயசு வருஷம் எஉ-வறையென்றும் சனி பெலனற்று பகை நீசஷேத்திரத்தி லிருக்கில் சாதகத்துக்கு வருஷம் நிஉ-க்குள் ளென்றும் சமமாக வரில் வருஷம் சுரு-யென்றும் சனிநின்ற ஸ்தானாதிபதி பெலவானாகி இருக்கில் வருஷ முன்கூறிய வகையென்றும் முன்கூறிய இராசிகளில் இருக்குங்கிரகங்களுடன் சுபபெலன் அதிக பிரபலத்துடனிருக்கில் சாதகனுக்கு வயசு வருஷம் அசு-யென்றும் பாபக்கிரகத்துட னிருக்கில் சாதகனுக்கு வயசு வருஷம் நிசு-க்குள் ளென்றும் சனி குசன் முதலிய நான்குபாவருடன் முன்கூறிய இடங்களில் சேர்ந்தாலும் தனித்து நின்றாலும் வருஷம் உக-க்குள்ளென்றும் குருநோக்குமாகிலல்லது கிருஷ்ண பக்ஷ பஞ்சமிக்குள்பட்ட சந்திர பார்வை இருந்தாலும் வருஷம் சுசு-க்குள்ளென்றும் மேற்கூறிய சந்திரன் சுக்கிரன் புதனில் ஒருவர்பாவருடனும் இருவர்பெலமற்றிருக்கில் வயசு வருஷம் பாலியத்திலேயே மரணமென்றும் உ-பெலத்து ஓர் கிரகம் பெலமற்று இருக்கில் வருஷ உக-க்குள் மரணமாவனென் றறியவேண்டியது.

பாலாரிஷ்ட விதிகள்.

சந்திரன் கிருஷ்ணபக்ஷயுதனாகி விருச்சிகம் விருஷபம் மீனம்இவைகளிலும் பாவறைக்கூடியும் சுக்கிரன் ரு-சு-அ-கஉ-ல் பகை நீசத்துடன் ரவிகுசன் சனி பாம்புகூடினும் அல்லது உ-கஉ-மிடத்தினிற்கினும் ரவி சனி குசன் துலாத்தினிற்கினும் குருமுதலியோர் சேராமலும் பார்க்காமலுமிருக்கில் வயசு கஉ-அல்லது மீ கஉ-க்குள் சாதக மரணமாவனென்றும் சூரியன் சனி குசன் இவர்கள்கூடி சு-அ-ல் பகைநீச கோளாகியும் சுக்கிரன் பெலமற்று பாபிகளுடனும் இருக்கினும் சந்திரன் முதலானவர்கள் பகை நீசமரைவிடத்தி லிருக்கில் சாதகன் வருஷம்அ-மீ அ-க்குள் மரணமாவனென்றும் இரெண்டு பக்கங்களிலும் சூரியசந்திரர்களுக்கு உ-கஉ-லும் பாபர்கள் பகை நீசக்கோளாகிய இருக்கினும் பலவகையோறைக்கூடினும் சாதகன் வருஷம் சு-மீ சு-க்குள்ளாகவே தாய்தகப்பனுடன் சாதகத்துக்கு பாலாரிஷ்டமாகுமென்றும் சந்திரன் குருசேர்ந்து ரு-சு-அ-ல் இருக்கினும் அல்லது கேந்திரகோணத்தி னின்றாலும் இருபுறமும் பாவர்களைக்கூடி பகை நீசங்களை பெற்று பெலங்குறைவுட னிருக்கி

னும் அதிபகையாய் வாழினும் சூரியன் லக்கினத்தையாவது பெலமற்ற இடத்திலாவது நிற்கினும் சாதகத்துக்கு ௫ ௲-௱௲-க்குள் பாலாரிஷ்டகண்டமுண்டென்றும் அரியவேண்டியது அவைக்குறிய திசாபுக்திகளையுங் கண்டரிதல் வேண்டும் இவ்விதம் பாலாரிஷ்டருணத்துள்ள கிரகங்களை சுபராகிய குருமுதலிய சுபர்கள் பெலத்துடனும் சுக்கிரன்பெலத்துடனிருந்து நோக்கினும் சகலவித நோய்களும் நீங்கி ஆயுள்விருத்தியுடன் வாழப்படுமென்றுங்கண்டு கூறல்வேண்டும்.

ஆயுள்க்கணித திசாபுக்தி நிர்ணயங்களாவன.

சனியுடனும்சுக்கிரனுடனும் குசனுடனும் சுக்கிரனுக்கு அஷ்டமாதிப நின்ற ஸ்தானாதிபதியுடனும் உரியதும் துலாம் விருஷப மிவைகளினுடையவும் இருக்கும் கிரக சுபாசுப பெலன்படிக்கி உள்ள யெண்களையெடுத்து அந்தந்த இராசிகளின் யெண்களால் பெருக்கிய தொகையை ஒன்று படுத்தியும் ௬௰-ல் கொடுத்த சேடம் ஆயுசுயென்றும் பெருக்கிய தொகையை ௫-ல் கழித்த சேஷம் அவஸ்தை யென்றும் ௯-ல் கழித்த சேஷம் திசையாகவும் வந்த ஈவை ௫-ல் பெருக்கி ௯-ல் கழித்த சேஷம் புக்தியென்றும் இவ்வித அவஸ்தை திசாபுக்தி காலம் சவ்யாப சவ்யவிதியின்படிக்கிக் கண்டறிந்த காலமாரகமென்றும் ஆயுர்பாவ நிர்ணயங்கள் கூறப்பட்டனவாம்.

தனகுடும்பம் வாக்கு முதலியபலன்களாவன.

குசனையும் குருவையும் விருச்சிகத்தையும் குசனிருக்குமிடத்துக்கு இரண்டாமதிபனின்ற வீட்டுக்குடையவர்களைக் கொண்டு தன பாவ பலன்கள் சொல்லவேண்டிய தென்றறியவும்.

குசன் உச்ச சொக்ஷேத்திரங்களிலும் கேந்திரகோணத்தில் தனக்குறிய சுப பெலஸ்தானத்தில் பகை நீசமின்றி சுபர்களாகிய குரு நீங்கியவர்களைக்கூடி குரு கடகம் துலாம் விருஷப தனுசு மிதுனத்தினிற்கினும் குசனுக்கு ௨-ம் இடத்ததிபதி நின்ற இடத்துக் குறியவன் முன்போலக் குசனைப்போல் பெலத்துடனிற்கினும் சுப க்ஷேத்திர வாசனாகி ௯-அ-௧௨-ல் இருக்கினும் சாதகனுக்கு தனமானது கோடியாந்தரனாகி வாழ்வன் இதில் தனக்கு விரோதிகளிருக்கினும் நோக்கினும் பாபபெலத்துடன் பார்த்து அல்லது சேர்ந்தாலும் ஓர் பாபியாகின் லக்ஷாந்திரவறை ஸ்திதி யுள்ளவனென்றும்இருவித பாபிகளானாலும் சுபர்கள் பாபிகளாக கூடி யல்லது பார்த்தாலும் தச சகஸ்திரந்தர தனவந்தனென்றும் மூன்று பாபிகள் இரு

சுபர்களானுலும் மேற்கண்ட தனவந்தனென்றும் மேலே கண்டவர்களில் பாபபெலன் சாஸ்தியாகிக் கூடி இருக்கின் அல்பமான சில சகஸ்திரு ந்தர தனமுடையவ னென்றும் குரு சுக்கிரன் கூடில் சதாந்தரத்துக்குள் அல்ப தனவந்தனென்றும் குரு சுக்கிரனே பெலத்து அல்லது குசனுடன் பாபிகள் சேரில் அல்ப தனமுமின்றி றுணஸ்தனுகவாழ்வனென்றுங் கண்டறியவேண்டியது.

குசன் கூ-கூ-அ-கஉ-உ-கக-ல் இருந்தும் பகை முதலியநீசக்ஷேத்திர கெதிகளாகினும் மல்லது பாபிகளைக்கூடினும் பரபபெலனதிகமானுலும் சாதகத்துக்கு றுணமதிகமாகுமென்றும் உ-ல ரவிபுதன் அல்லது சந்திரன் முதலிய பாவர்கள் குரு விருக்கின் றுணமதிகமும் கஉ-ல் புதன் ரவி முதலியோருடன் உ-கஉ-ல் குசன் முதலியோரிருக்கினும் நோக்கினும் றுணஸ்தனென்றும் ஓர்சுபர்கள்கூடில் அல்பமான தனமும் றுணமுமுடையவன் யென்றும் உ-ல்சுபர்கள் சுபபெலத்துடனிருக்கில் றுணத்துக்கதிக தன முன்டென்றும் ஆனுலல்ப தன வந்தனென்றும் சுப பெலஞ் சாஸ்தியாகில் தனகுடும்பம் முதலிய விருத்தியுடனுவனென்றும் ரவி சனி முதலியர்கள் கன்னி விருச்சிகத்தில் நின்று குசன் முதலிய பாவறைக் கூடினும் நோக்கினும் குசனுக்கு இரண்டாமிடத் ததிபனின்ற வீட்டதிபன் பெலமற்று அல்லது சூரியன் புதனுக்கு இரண்டாமிடத்ததிபனின்ற வீட்டுக்குடையவன் பகை நீச முதலிய குசன் ரவி சனி பாம்பு சுக்கிரன் கூடினும் அவர்களுக்கு பனிரெண்டாமதிபனவ்வித மிருக்கினும் இரெண்டு முதலிய பாவரைக்கூடினும் அல்லது சுபராகினும்பாவர் இருக்கினும் நேத்திர ஊன பீடையுடையவனென்றும் சுபர் திருஷ்டி யுடனிருக்கில் நேத்திர பீடைகண்டு உடன் நிவர்த்தியாகுமென்றுங் கண்டறிந்தும் இவைகளில் குருசந்திரன் புதனுடன்கூடிய ரவிகள் சுபக்ஷேத்திர பெலத்துட னிருக்குமாகில் நேத்திர விருத்தி சுகத்துடனும் குடும்ப விருத்தியுடனும் வாழ்வனென்றும் அதிக மேன்பாடாகியும் விருத்தியை யடையும் என்றும் கண்டு கூறவேண்டியது.

• குசன் குரு இவர்கள் துலாம் தனுசு மகரம் கும்பம் மேஷம் மிதுனம் கடகம் சிம்மத்தில் சேர்ந்தாலும் அல்லது தனித்திருக்கில் அவரவர்களுக்குப்பகை நீசம் நீங்கிய இடத்திலும் பகை நீசமாகிலத் தலத்தோனும் முன் கூறிய இருவரும் அவருக்கவர் சமசப்த கேந்திரமானுலும் அசுபபகை நீசத்தோர்களில் சனி ரவி சுக்கிரன் பாம்பு

கள் சேருமனும் மிதுனத்தி னின்றுலும் சாதகனுக்கு லக்ஷாந்திர தனவந்தனுவனென்றும் இதில் ஓர்பாவறைக்கூடி அசுபபெலன் பெற்று இருக்கில் தசசகஸ்திர தனவிருத்தியும் இருவரு மியல்பில்லாத பாவரைக்கூடி இருக்கினும் நோக்கினும் தனமில்லான் சந்திரனுக்கு ரெண்டில் சனி யிருக்கினும் பூர்வார்சித தனத்தை யின்றி நூதனுர்சித முடையவனென்றும் இதில் குரு முதலியோரிருக்கினும் பூர்வார்ச்சிதத்தைச் சிலவுசெய்வானே அல்லது நூதனுர்ச்சிதமடையானென்றும் சூரியனுக்கு உ-கஉ-ல் இருக்கினும் இவ்விதமே பிதுரார்சிதம் தவிர வேறு ஆர்ச்சித விருத்தி இல்லானென்றும்மேலே கூறிய் இராசிகளில் சுபர்கள் பாபராகி இருக்கினும் பாவனரக்கூடினும் சகஸ்திராம்ச தனவந்தனென்றும் இதில் பாபர்களாகிய சனி குசன்கூடினும் தசசகஸ்திராந்திர தனமுடையவனென்றும் மிக்கவாக் செயமும் குடும்ப விருத்திகளு முண்டென்றும் இவ்வித இராசியில்சுபரே பெலம் பெற்று பாபதிருஷ்டி யின்றி யல்லது சேராமலாவதிருக்கில் லக்ஷாந்திர தனவந்தனென்றும் அதிக கீர்த்தி மூர்த்திகளுடனும் வாக்கு சாதுரியனுகி செல்வாக்குடன் சத்தியவந்தனுகி வாழ்வனென்று மிகவு மேலான சுகசௌக்கிய குடும்ப விருத்திகளையும் மிக்க மேன்பாடுகளையும் அடைந்துவருவனென்றும் அதிகபிரபலமாகி வாழ்வனென்றும் பாபரும் சுபருமாக கூடியிருக்கில் மிகவும்தனவிருத்தியில்லாமல் சம விருத்தியான தனத்தையும் குடும்ப சமவிருத்திகளையும் அடைந்து வாழ்வனென்றும் சமயோக வானுவனென்றறிய வேண்டியது.

விருஷபம் கன்னி மீனம் விருச்சிகம் மிவைகளில் குசனிருந்தும் ரவி முதலிய பகைவறை புதன் முதலியோறைக் கூடினும் குரு சனி அதிற் சேரினும் குசனுக்கு இரண்டாமிடத்ததிபனின்ற வீட்டதிபன் பாவருடன் பகை நீசம்பெற்றுலும் சாதகன் அல்பமான தனமில்லாதவனுகி மிகவருந்தியும் பூர்வாற்சிதங்களை இழந்தும் பலவகை குடும்பங்களும் நஷ்டமாகி சொல்பறெணஸ்தனுகி வாழ்வனென்றும் இதில் குசன் சோச்சங்களிருபாவரைக் கூடி பூர்ணசந்திரனல்லது சந்திரதிருஷ்டி சுக்கிரதிருஷ்டியானுலும் சில காலம் தனமின்றியும் பூர்வதனங்களையிழந்து பின் வயசில் தசசகஸ்திரத்துக்குள்பட்ட தனவந்தனுவனென்றும் இதிலதிகமாண சுபபெலத்துடன் தனக்குறிய பாவராணுலும் சுபராலுலுங்கூடில் லக்ஷாந்திரத்துக்குள்ளடங்கிய தனவந்தனுவனென்றும் இவருடன் ஒரு பாபிகூடின் தச சகஸ்திரங்

தாரத்துக்குள்பட்ட தனவந்தனென்றும் உ முதலிய பாவர்கூடில் சகஸ்தி ராந்தர்கத தனவந்தனுவனென்றும் பாபபலமே அதிகமாகி சுப பெலன் குறையில் சில ரெணஸ்தனென்றும் அல்பதனமுடையவனென்றும் கண் டரியவேண்டியது இதில் குசன் தனித்து சுபபெலக்ஷேத்திரமாகில் அல்ப தனவந்தனுவன் யென்றும் விருச்சிகத்தி லொருவருமின்றி யிருக்கினு நோக்கமில்லாவிடினும்அல்பதனவந்தனென்றுங் குசன் விருச்சிகம் இவை யில் சுபர்பெலத்துடன் கூடிஇருக்கில் அதிகதனம்படைத்துவாழ்வனென் றும் பாபரேவூழில் மிகவும் மேன்மையற்ற ரெணஸ்தனுகி பலவகை வ்ருத்தமடைந்தும் குடும்பவிருத்தி இல்லாமலும் பலவகை வருத்தமடை வனென்றும் சுபரும் பாவருமாகக் கலந்துநிற்கில் ரொணந்தனமிவைகள் சரியொற்றும் குடும்பம் அதிகவிருத்தியின்றியும் சமபெலத்துடன் வாழ் வன் வாக்கு சமவிருத்தியாகுமென்றரியவும்.

துலாலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு தனவிஷய கணிதங்கள் கணிக்கும் விதிகளாவன

குருவுடனும் குசனுடனும் குசனுக்கு ரெண்டாமிடந்ததிபதிநின்ற ஸ்தானதிபதியுடனும் விருச்சிகத்திலும் நின்ற கோள்களுடைய பெலா பெலப்படிக்குக் கண்டவெண்களை இராசி யெண்களாற்பெருக்கி வைத்துக் கொண்டு அத்தொகையை புதன் கூடிய பெலாபெலப்படிக்குள்ள தொகை யில் பெருக்கியும் பின் உச்ச கேந்திராதிவ வரவர் விதிப்படிக்குள்ள பெலன் சாஸ்தியாகில் உ தடவை சமத்துகையில் பெருக்கியதும் ஆக்ஷி யானுல் ஓரேதடவை பெருக்கியதும் நட்பாகி லதேதொகையும் பகையா னுல் அவ்வளவுதொகை கடனென்றும் நீசமானுல் சமத்துகை பெருக்கி யது கடனென்றுங் கண்டரிந்து சொல்லவேண்டியது.

சகோதிராதி பலன்கள்.

குசன் குரு குருவுக்கு மூன்றும் ராசிக்கதிபதிநின்ற இராசினுதன் தனுசு இவைகளின் பெலா பெல மூலபமாகவரிந்து கூறல்வேண்டும்.

குரு தனக்குறிய நட்பு சுட்சேத்திர உச்சகேந்திர ஸ்தானங்களில் சுபருடனேயும் இருந்து பெலத்துடனிருக்கினும் ஸ்திரமுபய விராசி களில் இருக்கினும் குருவுக்கு ௩-மதிபனின்ற ஸ்தானதிபதி யுடனுவது ஸ்தானத்திலாவது குசன் சனி யில்லாமலும் பாம்பு இவைகளில்லாமலிருக் கினும் நோக்காமலிருக்கினும சுப பெலமாய் ஸ்திரமுபயமிந்த இராசியி லிருக்குமாகில் சகோதிரபாவம் பேராவிருத்திகளுடன்பிரபலசகோதிரர்க ளுண்டென்றும் சகோதிரவனுகூலமுழ் உடன்பிரந்தோர்களதிக பிறபல

மாக வாழ்வர்களென்றும் ; கூடிய கிரகங்கள் நட்பாயிருக்கில் அதில் கூடிய கிரக யெண்களிற் பாதிகணக்குள்ள சகோதிரமும் ஆக்ஷிபாக விருக்கில் தசபங்கு கணக்குள்ள சகோதிரங்களும் உச்சம் பேரில் இரெட்டிப்புள்ள கணக்கு சகோதிரமென்றும் பகையாகில் வ-பங்குக்குறிய கணக்குள்ள சகோதிரலாபமென்றும் நீசமுதலியவையாகில் சகோதிர விருத்தி கிடையாதென்றும் மேற்கூறியஇடங்களில் சுபர்களே பெலமில்லாதவராகியிருக்கினும் பாபிகளாய்ப் பார்த்தாலும் சகோதிரதோஷம் பலவகைக்கஷ்டமும் சகோதிரமுண்டாகியும் சிலநாள் இருந்தும் மாரகத்தையடையுமென்றும் அப்படிக்கொற்ற சகோதிரங்களால் குடும்பதோஷமும் இவ்விதம் நடக்குமென்றும் மேலேகூறிய குறிவுடனும் குருநின்ற இராசிக்கு மூன்றுமதிப நின்ற இராசிநாதனுடனும் குசன் சனி முதலிய பாம்பு இருக்கினும் அல்லது தனுசுமுதலிய மூன்றுமிராசிகளிலு மிருக்கில் சகோதிரமிருதென்றும் இவர்கள் நட்புமுதலிய பெலன் சுக்ஷேத்திரஉச்சம் இவைகளிலிருந்தாலும் புதன் ரவிகூடி தனுசு முன்கூறியவர்களுடன் இருக்கினும் சகோதிர மாறிபமாக உண்டென்றும் அப்படிக்கொற்ற சகோதிரங்கள் கியாதிபெற்றிருந்துபின் ; சகோதிரநஷ்டமும் குடும்பதோஷமுமுண்டென்றும் அல்பமான சந்ததி உ-க்குள்ளாகிய சகோதிரமென்றும் இதில் சந்திரன் | சுக்கிரன் இரட்டையான பெண்ராசிகளினின்றாலும் பெண்சந்ததியே விருத்தியதிகமென்றும் அவ்விதசந்ததிவகையும் பலவாறாக நஷ்டமும் சுபர் திருஷ்டியல்லது சுபர் கூடிநிற்கில் லதிகமான பெண் சந்ததி விருத்திகள் அதிகமென்றும் மிக்கமேன்பாடுகளும் இஷ்டசித்திகளும்பாபர்களே பகை நீசம் முதலிய வர்க்கபெற்று இருக்கினும் சகோதிரவிருத்தி யடையமாட்டானென்றும்.

குசனுக்கு மூன்றுமதிபநின்ற இடத்ததிபதிநின்ற ராசிநுதன் குரு முதலிய சுபரைக்கூடியல்லது பார்வைபெற்றும் சுபக்ஷேத்திரமல்லது கேந்திர கோண இராசியிலிருக்கில் சகோதிரமான புருஷசந்ததி யதிகவிருத்தியென்றும் பாபர்களே இருக்கினும் சுபர்கள் பகை நீசபாவர்களாக இருந்தாலும் சகோதிரவிருத்தி கிடையாதென்றும் பலவகைதுக்கசோகாதிவருத்தமும் உண்டாகுமென்றும் சகோதிரநஷ்டபலன் அடையுமென்றும்மேற்கூறிய ஸ்தானம் ஸ்தானுதிபதிகளுடன் கூ முதலிய வதிக பாவர்களிருக்கில் சகோதிர தோஷமென்றும் உ பாவர்களிருக்கில் சகோதிர மானவைகளுண்டாகி வெகுவாய்மரணமும் பிதாவின் அன்யதராதிகளின் புத்திரானசகோதிரவிருத்திகளென்றும் ஓர்பாவர்களாகில்சகோதிரமிருவகைக் கதிக லாபவிருத்திகளேயுங் குடும்ப சுகசௌக்கியங்களு

மேன்பாடுகளும் தனதானிய பிரபல மேன்மைகள் உண்டாகும் ஓர் சுபர்கூடி நிற்கினும் நோக்கினும் ந-க்கு மேலாகிய இருவித சகோதிரலாபமும் உ-சுபர்கள் கூடிநிற்கினும் சுபபெலன் சாஸ்தியாகில் பல வகை சகோதிரவிருத்திகளும் ந-முதலிய சுபக்கிரகங்களுடன் இருக்கினும் நோக்கினும் பாவர்கள் கூடாமலும் சூரியனுடன் புதன்கூடி நிற்கினும் ச-க்கு மேலாகிய சகோதிர விருத்திகளும் இவர்களுடன் ஓர் பாவர் கூடினும் பாவருஞ் சுபருங்கூடி புதன் சனி கிரகங்கள் வீட்டினிற்கில் அல்பசகோதிர முடையவனென்றும்.

குரு குஜன் இவர்கள் உ-ந-சு-அ-கஉ-லும் கக-இவ்வித இடங்களில் சுபர்களுடன் கூடி பெலன்பெற்றிருக்கினும் சுபர்கள் பார்த்தாலும் சகோதிரம் அல்பமான விருத்திகளும் இவ்விதயிடங்களிலே பகைநீச க்ஷேத்திரமாகி வசிக்கில் சகோதிரநஷ்டமும் சகோதிரம் விருத்தியாகி வாறுதென்றும் குசன் குரு சுக்ஷேத்திர நட்பு இராசிகளில் பெலன் பெற்றிருக்கில் சகோதிரங்களானவை உ - முதலிய விருத்திகளும் பாம்பு முதலிய பகைநீசத்தோர் ஃஷ்டி சொன்ன ஸ்தானங்களிலிருக்கில் சகோதிரம் யேகமான அல்பவிருத்திகளும் சுபர்களுடன் ஓர் பாபிகள் பெலத்துக்கூடின் சகோதிரம் உ - முதலிய விருத்திகளும் அவை பிதாவின் பின் களத்திர வகைக்குண்டான சகோதிரமும் மேன்பாடுகளும் குடும்ப சுகசௌக்கியங்களும் உண்டாகுமென்றும் மேற்கண்ட சுபர்களுடன் உ-பாபர்கள் கூடி இருக்கினும் அல்லது மேலே கண்டஸ்தானங்களைச் சேரினும் நோக்கினலும் சகோதிரமானவை விருத்தியின்றியும் மறுமணம் பிதுர்வுக்குண்டாகு மூலிய சகோதிர விருத்திகண்டாகுமென்றும் பலபாவர்கள் கூடில் யெவ்வித சகோதிரவிருத்தி வாறுதென்றும் உடன் சந்ததியுண்டாகினு மரிக்குமென்றும் கண்டறியவேண்டியது சுபர்களாகிய சுக்கிரன் சந்திரன் புதன்கூடி யல்லது நிற்கினும் சகோதிரமானவை பெண்விருத்தியும் இதில் பெண்ணிராசியாகில் அதிக பெண்சந்ததியும் பரதாரம் பிதாவின் பின்றூர பின்னேதர தாரவகைக்கென்றும் அவ்வித தாரமூலமான சகோதிரலாபமூம் பூர்வபட்ச சந்திரனுகில் ஆண்சந்ததியுமுண்டென்றும் அவ்வித ஆண்சந்ததி மூலமான மேன்பாடுகளும் சுகசௌக்கிய மேன்மையுண்டாகுமென்றும் குரு ரவி முதலியதும் ரவியுடன் கூடிய புதனுகிய புருஷசந்ததி விருத்தியென்றும் சனி இராகு கேது முதலியோராகில் சகோதிர க்ஷயங்களுங் கற்பசேதமே கொடுக்குமென்றும் அப்படி சகோதிர தீர்க்கமா

னுங் குடும்பதுன்பத்தையும் விரோதத்தையுங் கொடுக்குமென் றுங் கண்டறிதல் வேண்டும்.

தனுசு சிம்மம் இவைகளில் குரு முதலிய பூர்வபட்ச சந்திரன் ரவி புதன் கூடி நிற்கினும் வேறுபாவர்கள் கூடியல்லது பாருமலும் பகை நீச சுபருடனிருக்கினும் சகோதிரமானவை பலவகை விருத் தியுடனிருந்து சொற்பகாலத்தின் பின்குடும்ப விருத்திக்குறைவை யடைவார்களென்றும் பலவிதமான மனோவருத்தமும் உண்டாகும் அந்தியகாலத்துள் சகோதிரர்கள் நஷ்டமடைவார்கள்.

இவ்வித ஸ்தானங்களில் பாபருடனே சுபர்கூடிநிற்கின் உ-முத லிய சகோதிர லாபமும் அவையின் விருத்திகளையுங் கொடுக்கப்படு மென்றும் அப்படிக்கொற்ற சகோதிரர்களால் மேன்பாட்டை யடைவனென்றும் பெண்சந்ததி விருத்தியடையப்பட மாட்டாதெ ன்றும் இதில் சனி சுக்கிரன் கூடினும் நோக்கினும் சகோதிரமானவை தன்பிதாவிற்கின்றி பரபுருஷர்களுக்கும் பிதாவின் மறுதாரமூலிய மாக அடையப்படுமென்றும் அப்படிக்கொற்ற சகோதிரம் அந்திய வரை ந-க்குமேல் நிலைக்கப்பட மாட்டாதென்றும் காணப்படும் அத்துடன் பாபசம்மந்த மதிகமாகில் பெண்சந்ததி தவிர புருஷ சந் ததிகள் நீற்கப்பட மாட்டாதென்றும் சகோதிரவகை மூலங்களினு லறிஷ்டத்தைக் கொடுக்கப்படுமென் றறியவேண்டியது.

குசன் குரு இவர்களும் குருவுக்கு மூன்றுமிடத் ததிபனின்ற இராசினுதனும் விருச்சிகம் தனுசு விருஷபம் இவைகளிலாவது பகை நீச இடங்களிலாவது சனி பாம்பு முதலிய பாவரைக்கூடி நிற்கி னும் நோக்கினும் குசன் மகரம் சிம்மம் மேஷம் இவைகளிலிருந்தும் சனிமுதலிய பெலமற்ற பகைக்கோளைக்கூடி நிற்கினும் குரு விருச் சிகம் மகரம் விருஷபம் மிதுனம் சிம்மம் கன்னி இவைகளில் பகை நீசபாவராகிய சனி புதன் பாம்பு இவைகளைக்கூடி நிற்கினும் நோக் கினும் பலவகையான வருத்தங்களுடன் மனதுக்குப் பல கவலைக ளும் சகோதிர நீர்க்கமிருதென்றும் சகோதிர முற்பத்தியாகி நஷ்ட மும் தனித்தாவது சுபருடனுவது மேலேகண்ட இராசிகளி லிருக் கின் சந்திரகேந்திரமாகவு மிருக்கில் சகோதிர விருத்திகளும் மிக்க வனுகூலமும் சகோதிரங்களால் யோகபலத்தை யடைவனென்றும் பாவர் சுபர் கலர்ந்திருந்தாலுமல்லது மேலேசொல்லிய குசன் விருச் சிகம் மகரம் மீனம் மேஷம் மிதுனம் கன்னி இவைகளில் சுபர்களை க்கூடி இருக்கினும் சுபபெலர்களாகி மித்துருவாகிய பாவர்கண்ணின்

ஞூம் குருவுக்கு ௩-மிடத்ததிபதி இவையான சுபபெலத்தைப்பெற்று நின்ஞூம் சகோதிர வனுகூலத்துடனும் சகோதிரவம்சம் பலவிருத்திகளுடன் வாழ்ந்துவரப்படு மென்றும் பிரபல யோகஸ்தர்களாகியும் அதிககீர்த்திமூர்த்தி புகழ்ச்சியும் மடைவர் சுபரும் பாவருமானபடியால் சாதகனுக்கு சமவித சகோதிரம் பின்காலம் சகோதிர குடும்பம்தோஷம் பலவருத்தமுண்டாகி உடன்சுகமடைவான்.

மேஷம் கடகம் துலாம் கும்மம் மீனம் இவை குரு குசன் சேர்ந்தாலு மல்லது தனித்து நிற்கினும் சுக்கிரன் ரவிசந்திரன்ரவிபுதன் முதலியோறைக் கூடிய பாவர்களுக்கு இணையுள்ளவர்களோடு சுப க்ஷேத்திர பெலத்துட னிருக்கினும் பகை நீசமின்றியும் சனி குசன் பாம்பு முதலியோறை கூடி யல்லது பாற்காமலு மிருக்கினும் சாதகனுக்கு பெண்ஞசிகளிற்கூடிய சுக்கிரன் புதன் சந்திரனுகினும் சகோதிர அதிகவிருத்திகளும் ரவிமுதலிய குரு இவர்கள் கூடினுலும் நோக்கினுலுஞ் சாதகனுக்கு புருஷ சகோதிர மதிகமாய் விருத்தியென்றும் அவையில் புருஷ இராசியிலும் பெண்கிரகத்தோடு கூடினுலும் நின்ஞூம் குருவுக்கு மூன்றுக் குடையவனின்ற அதிபன் மேற்கண்டபடி யெப்படி வலுத்து நிற்கப்படுகிறதோ அவ்விதம் நேரப்படுமென்ற சகோதிர விருத்தியுடன்புருஷ சந்ததி முதலிய வகைகள் விருத்திகளும் குசன் முதலியோர் மிதுன மீனம் தனுசு துலாமிவைகளில் நிற்கினும் பெண்பிறசை சகோதிர விருத்திகளுண்டென்றும் இதில் இருக்குங் குசன் குரு இவர்களுடன் பாபக்கோள்க்களாகிய சனிமுதலியோரிருக்கினும் நோக்கினும் பகை நீசனுகி சுபசம்மந்த வீக்ஷணியமின்றி இருந்தாலும் சகோதிர விருத்தி கிடையாதென்றும் இதில் புதன் சுக்கிரன் அல்லது ரவி சந்திர னிவர்கள் கூடில் பிதாவின் மருதாரவசாத் புத்திரபாவமானவை சாதகன் சகோதிரமென்றும் வேறு எவ்வித சகோதிரமும் விருத்திக்கி அடையப்படமாட்டாதென்றுங் கண்டறிய வேண்டியது இவ்வித இராசிகளில் சனியுடன குரு கூடினுலும் குசனுடன் சுக்கிரன் புதன் ரவி கூடினுலும் குருவுடன் இராகுகூடி இருந்தாலுஞ் சந்திரன் பாற்தல்லது குசகுருவுடன் கூடி நிற்கினும் சகோதிர மூன்றுக்கு மேற்பட்டவை விருத்தியுண்டென் றறிய வேண்டியது.

இவர்களைத் தவிர மாரியவேறு எந்த கிரகங்களுடன் சேர்ந்த குரு குசனுகில் சகோதிர விருத்திகளே கிடையாதென்றும் பலவகை கஷ்ட நஷ்ட துன்பங்களையுங் கூறல்வேண்டியது.

சகோதிர பாவகுணித விபறம்.

குசன் குருவுடனும் குருவுக்கு மூன்றுமிடத் ததிபதி நின்ற ஸ்தானம் ஸ்தானுதிபதியுடனும் குசனுக்கு மூன்று மதிபதி நின்ற ஸ்தானுதி பதியுடனுங் கூடிய கிரக யெண்களேயும் தனுசுவில் நின்ற கிரக யெண் களேயும் அந்தந்த இராசி யெண்களால் பெருக்கியுஞ் சுபா சுபப்படிக்கிக் கண்டுள்ள தொகைகளே ஒன்று சேர்த்து குரு நின்ற இராசிக்கி மூன்று மிடத் ததிபதி நின்ற இராசினுதன் பெலன் யெவ்வளவோ அவைக்குள்ள அந்த கிரக யெண்ணில் கொடுத்த சேஷம் சகோதிர மென்றும் அந்த யெண்ணேயே குசனுக்கு மூன்றுமிடத் ததிபதி நின்ற இராசினுதனின்ற இடத்ததிபதி யெண்ணிற் கொடுத்த சேஷம் சகோதிர விருத்தியென்றும் அதில் முன் கூறிய கிரக பெலா பெலத்தின் மேலெடுத்த யெண்களேயும் புருஷகிரகம் ஸ்திரீகிரகம் கொடுத்த யெண்களேயும் பாகப்படி கண்டாரிந் தவை ஸ்திரீ புருஷனென்றுங் கண்டுரைக்கவேண்டும் இவ்வித பதினொரு மிடமான சிம்மம் சூரியன் சூரியனுக்கு பதினோரா மிடத்ததிபதி நின்ற இராசினுதனுடன் கூடிய கிரக யெண்களே இராசியெண்ணுற் பெருக்கி குரு பெலனுக்குறிய யெண்ணிற் கொடுத்த சேஷம் முன் சந்ததியான சகோதிரமென்றும் சுக்கிரனின்ற இராசி னுதநின்ற வீட்டதிபனேயுங் கூட்டும்படி கணக்கில் நேரிட்டால் - சாதகனைக்கூட்டிய சகோத்திரமென் றும் அந்த ஸ்தானுதிபன் இந்த கணக்கிற் சேருமையாலுஞ் சாதகனைச் சேர்க்காத சேஷக்கணக்கு சகோதிரமென்றும் அவ்வித சகோதிர மாற்க மூலிய வனுகூலபலனேயும் பெற்று அந்திய காலவறை மேன்மையடைந்து வரப்படுமென்றுங் கண்டு கூறவேண்டும்.

மாதுரு கிரகவாகனம் பூமி வியாபாரம் இவைகளைப்பற்றிய பலன்கள்.

சந்திரன் சனி இவர்கள் கேந்திர கோண சுக்ஷேத்திரங்களிலுந்தனக் குறிய நட்பு ஆக்ஷீ உச்ச க்ஷேத்திர வாசனுகியும் சனிநின்ற இராசிக்கி ச-மிடத்ததிபதிநின்ற ரரசினுதன் பெலன் பெற்று சுப சம்மந்தனுகி ஸ்தானுதிபன் பெலத்துடன் கேந்திர கோணமும் தனக்குறிய சுபக்ஷேத் திர பெலத்துடனிருக்கில் சாதகனுக்கு மாதுரு அதிக காலமான விருத்தா வஸ்தையான வருஷபரியந்தம் ஆயுள் விருத்திகளையடைவனென்றும் அதிக மேன்பாடுகளும் பூமிமுதலிய கிரகவாகனங்களும் பலவித கட்ட டங்களும் மிகவும் பிரபலமாகச் சேற்கநேரும் பார்ப் பசு மாடுகளும் மிக

பிரபலமாகச் செய்யப்படுவன் என்றறியவேண்டியது இவ்வளவு பெலனு மிருந்து சனிக்கி நான்கா மிடத்ததிபதி நின்ற இராசிநாதன் பெலமற்று இருக்கில் மாதுருவற்க நஷ்டமு முண்டாகுமென்றும் அரியவும்.

சனியும்சனிக்கி நான்காமதிபதி நின்ற இராசிக்கதிபதி நின்ற இராசி நாதன் பெலத்து இவர்கூடி மித்துருவாகி நட்பாக்ஷி உச்ச ஸ்தானங்களில் தனக்குறிய சுப பெலத்துடனிருக்கினும் பெலத்த கேந்திர கோண இரா சியில் தனக்குறிய சுபா சுபர்களுடன் கூடி பெலத்து நிற்கினும் சுக்கிரன் சுக்ஷேத்திர கேந்திரத்துட னிருக்கினும் சந்திரன் முதலியோர் பெலத்து நிற்கில் சாதகனுக்கு மாட மாளிகை கூட கோபுரமுள்ள கிரகவாகனம் பூமி பிறபலங்களும் மாதுரு வற்கதீர்க பிறபலமும் இதில் விருத்தா வஸ் தையில் மாதுரு மாரகமென்றும் இதில் சனி நின்றதற்கு நான்காமதிபதி நின்ற ஸ்தானதிபதி பகைநீசபெலமற்று இருக்கில் மத்திமவயதில் மாதுரு மரணம் சனி சந்திரனுடனே பகைநீசமுதலிய இடத்திலும் பாவரான பகைவறைக் கூடிநிற்கினும் அ-ச-ல் இருக்கினும் பாலியத்திலேயே தாய் மரணமென்றும் சந்திரனுக்கு நாலாமதிப நின்ற இராசிநாதன் சுக்கிரன் இவர்கள் பெலமற்றும் பகைபாவருடன் கூடிநிற்கில் தாய் பாலியத்திலே யேமரண மென்றும் இதில் சனியுங்கெட்டு சந்திரநீசம் நான்கு அ-இவை களில் தனக்கிணக்கமில்லாதபகைவறைக் கூடிநிற்கினும்தாய்பிறந்தவுடன் மரணமும் ஓர் சுபர் நோக்கினும் பாலிபா வஸ்தையில் மரணமென்றரிய வேண்டியது யென்றும் அவ்வித வகையினால் துக்கசோகங்களுண்டாகு மென்றரியவேண்டியது.

மேறகண்ட சனி சந்திரன் சனிக்கு நான்காமதிபநின்ற இராசிக்கதி பதியுடன் தனக்குறிய சுபபெலன் பெற்ற இருவிதச்சுபரோடிருக்கில் தாய் யெவ்வனவஸ்தையில் மரணமென்றும் பலவிதமான கட்டட பூமி பிறபலமும் வாகனங்கள் பலவற்றுடன் பெரும்மேன்மையாக உண்டாகிய யோகவானுவனென்றும் தாய்வழி மாத்திரங் கெடுமென்றும் அரியவேண் டியது ஷ பிதாவுக்கு இரண்டுதாரயோகவான் என்றும் ஓர்பாவர் மேற் படியோருடன் கூடிநிற்கில் பிதாபல தாரயோகவானென்றும் பாலியத்தி லேயே தாயானவள் மரணமாவளென்றும் அவ்விதமான தாய்வம்சமும் வரவரக்ஷயிக்குமென்று மரியவேண்டியது இவ்விதமிருந்து சுக்கிரனுக்கு நான்காமதிபதி நின்ற இராசிநாதனும் பெலமற்று இருக்கினும் சுக்கிரன் ரு-சு-அ-களில் பகை நீசமல்லது பாவருடன்கூடினும் வாகனமில்லாமலும் பக்ஷிகளைப்போல் சஞ்சரித்து வாழ்வனென்று மரியவேண்டியது சனி

துலாந் தனுசு மகரம் கும்பம் மிதுன கடக மிவைகளில் தனக்குறிய சுப க்ஷேத்திர வாசனுகியும் சனிக்கு நாலாமதிபதி நின்ற இராசிநாதன் பெலத்து மேற்கண்ட இராசியிலிருக்கினும் சந்திரன் பெலத்து ச-அ-நீங் கிய விடத்திலும் சனியுடன் அல்லது பார்வையாகிக் குரு முதலிய சுபர் கள் நின்றாலும் சந்திரனுக்கு நாலாமதிபதி நின்ற இராசிநாதன் சுக்ஷேத் திராதி சுப சம்மந்த பெலத்துடனிருக்கினும் சாதகனுடைய மாதுரு குடும்ப விருத்தியுடன் மேலாகி பிரபல விருத்திகளும் வாகனம் பூமிக ளுடனும் வாழ்ந்தும் மாதுருவிருத்தாவஸ்தையில் மரணமடைவளென் றும் அதில் ரவி புதன் தனக்குள்ள பகைவருடன் அல்லது சிம்மம் மக ரம் இவைகளிருக்கினு மாதுரு பாலிய மரணமல்லது விரோதியாகியும் பிதாவானவ னிருவிததாரத்தை மணப்பனென்றும் உ-பாபிகள் கூடின மாதுருயெவ்வனத்தில் மரணமும் ஙு-பாபிகளாகின் ஜெனனகாலமே மாதுருமரணமும் மாதுரு குடும்பக்ஷபமும் பலவகை துக்கசோகங்களு மநேகவித வருத்தங்களேயும் அடைவனென்றும் கிரகவாகனம்பூர்வவிருத் தியும் பின்க்ஷபமாகியும் நேருமென்றும் பலவகை விவாதபலன் நடக்கும் யென்றும் மாதுவம்சக்ஷயமுண்டாகுமென்றறிய வேண்டியது.

சந்திரன் பகை நீசமல்லது நாலுயெட்டினிற்கினும் சந்திரனுக்கு நான்காமதிபதி நின்ற இராசிநாதன் கெட்டும் மற்றய சனி முதலியோர் பெலத்து வாழில் மாதுரு யெவ்வன மரணமும் சந்திரன் ஒன்றே மேற் கூறியபெலமில்லாத இடத்தினின்றும் மற்றவைகள் பெலத்துநிற்கில் தாய் வார்த்திகமரணமும் சுக்கிரனுக்கு நான்காமதிபதி நின்ற ஸ்தானுதிபதியு மற்றமூவரும் பெலத்துநிற்கில் கௌமாராவஸ்தையில் மரணமென்றும் சுக்கிரன் சனி வலுத்து மற்ற மூவர் கெடினும் கௌமாரவயதில் தாய் மரணமென்றும் சனியுங்கெட்டும் சந்திரனும் பெலமற்று சனிக்கி நான்கா மதிபதி நின்ற ஸ்தானுதியும் மகரமும் பாவக்ஷேத்திர கிரகசம்மந்தமாகி பகைமுதலியோரைக்கூடினும் பெலமற்று நிற்கினும் பாலியாவஸ்தையி லேயே தாய்போய்விடுவளென்றும் தாய்வகையும் அழியுமென்றும் அவ் வகையாற் றுக்கசோகமும் வாகனமுதலிய வகைக்ஷயமும். மேலேகூறிய கிரகங்கள் ஸ்தானங்களில் பாவர் முதலிய சிலபகையோரைக் கூடினுமல் லது செவ்வாய் பாம்பு சனியைக்கூடினுனும் தாய்பாலியத்திலேயே மரண மாவளென்றும் இதில் சுக்கிரன் மகரம் இவையில் பகை நீசமானகிரகங்க ளாகிய யல்லது குச நீங்கியபாவர் கூடினும் நோக்கினும் தாய்பாலியமா ரகத்துடனும் பூமிகிரகவாகன விருத்தியின்றியும் பலவகைப்பொருள்சே தத்துடனும் அலைவனென்றும் இதில் குருஅல்லது ஒரு சுபர் கூடினும்

நோக்கினும் மாதருபெவ்வன மரணமாவனென்றும் இரண்டு சுபர்களா கிய விரோதமில்லாதவர்களைக் கூடினால் கௌமாரவயதில் தாய்மரணமென் றும் ந-முதலிய சுபருடன் அல்லது அவர்களுக்கேற்ற பாபர் சுபராகிவர்க ளுடன் கூடினும் தாய் விருத்தாவஸ்தையில் மரணமாவளென்றும் கண் டறியவும்.

இதிற் கூடியபாவருஞ் சுபராகிப் பகைபெற்றகோளாகிய சனி பாம்பு சேர்ந்து கூடினுலுமல்லது பார்த்தாலும் சனி ந-சு-அ-களில் நின்றாலும் சூரியனல்லது சுக்கிரனைக்கூடி கடகம் மேஷம் சனிக்கு பத்தாமதி நின்ற இராசிநாதனுடன் அல்லது சந்திரன் வசாத் பத்தாமதிபதி நின்ற இராசி நாதனுடன் பகை முதலிய நீசமும் அல்லது தனக்குறிய விரோதிகளைக் கூடில் தாய் கருமஞ்செய்யப்பட மாட்டானென்றுங் கண்டறிதல் வேண் டும்.

பாபருஞ் சுபரும் சமதுல்யராகிச் சேர்ந்திருக்கில் சாதகனுடைய கௌமாரதிசையில் தாய்மரணமென்றும் சிலநாள்வாகனம் பூமிகிரகங்களை யும் சிலநாளவைகள் ஒன்றும் விருத்தியின்றி யடைவனென்றுங் கண்டறி தல் வேண்டும்.

அதாவது இதன்மேலேசொல்லிய சனியும் சனிக்கு நான்காமதிபதி நின்ற இராசிநாதனும் சுக்கிரனும் இவர்கள் நின்றஇடத்தில்சவ்வியஇராசி யதிகமானால் முன்வயதில் கிரகவாகனம் பூமிகன்று காலியதிகமாகயிருந்து பின்வயதில் பலவித கஷ்டமும் அபசவ்ய இராசிகள் அதிகமானால் முன்வயதி லொன்றுமில்லாமல் பின்வயதில் கிரகவாகனம் பூமிகன்று காலிகள் சேருமென்றுங் கண்டறியவேண்டியது.

விருச்சிகமும் மீனம் மேஷம் விருஷபம் சிம்மம் கன்னி இவை களில் சனி சந்திரன் சனிக்கு நான்காமிடத்தாதிபதி நின்ற இராசி நாதனும் பகை நீசமாகினும் பகையுள்ள பாவர்களைக் கூடினாலும் அல்லது நோக்கமிருக்கினும் தாய் பால்யத்திலேயே மரணமாவா ளென்றும் தாய்வழி நஷ்டமும் பலவகை வருத்தங்களையுங் கொடுக் கும் இதில் சுக்கிரனும் பாவனாகி இருக்கில் கிரகவாகனக்ஷேத்திராதி குறைவுகளும் பலவகை வருத்தங்களும் கஷ்டபலனையுஞ் சுகமின்றி யும் அடைவன் யென்றும் இவ்வித மேலேகூறிய ஸ்தானங்களில் பாவரு னிருந்தாலும் ஓர் சுபர்களானவர்கள் கூடிநிற்கினும் சந்தி ரன் சனி நட்பு முதலிய சுபட்சேத்திரங்களில் பாவர்களைக்கூடி ஓர்

சுபரான குருகூடி யல்லது பார்த்தாலும் தாய் பிணியுள்ளவளாகி பாலியவஸ்தையிலயே மரணமென்றும் மேலேகூறிய கிரகங்களுடன் பாவராகிய சனி பாம்பு குசனிவர்கள் தனக்குறிய க்ஷேத்திரங்களை விட்டு விரோதம் நீசம் முதலாகிய பெலக்குறைவான இடங்களிற் பகையுடன் கூடினும் அந்தஸ்தானாதிபதிகள் பெலமற்றுநிற்கினும் சாதகனுக்கு மாதுருபாலிய மரணமும் சுக்கிரன் வலுத்தும் சுக்கிரனுக்கு நான்காமதிபதிநின்ற இராசிநாதன் சுபபெலத்துடனிருக்கில் சாதகனுக்கு கிரகவாகனம் பூமிமுதலிய பலசெல்வங்களானது யேராளமாகினும் மாதுரு பாலியத்திலேயே மரணமாவளென்றும் அறியவேண்டியது மேற்கண்டதில் புதனுக்கு நி-மிடத்ததிபனின்ற இராசிநாதன் சுபபெலத்துடனிருக்கில் மாதுருவம்ச விருத்திகளும் உண்டாகும்க்ஷை ஸ்தானம் கிரகம்பெலன்கெட்டுபகைவருடன் பாவருடன் கூடினல் தாய்வழியும் விருத்தியில்லாமல் பலவாறாக சிதறி நசித்துவிடப் படுமென்றும் பிதுருவுக்கு பலதாரயோகனென்று மிவைகளா லறிந்துக்கொள்ள வேண்டியதென்றும் கூறல்வேண்டும்.

ஸ்திரவிராசியிற் சந்திரன் மற்றப்பகைவருடன் சத்துரு அஷ்டமமிவைகளில் பகை நீசம்பெற்று பாவரைக்கூடி நிற்கினுந் தாய் பாலிய மரணமாவள் இரெண்டுவித ஸ்தானதிபனாகிய சனியும் சனிக்கி நாலாமதிபதி நின்ற இராசிநாதனும் பகைமுதலிய நீசம் பலபாவரைக்கூடி இருக்கினும் மேற்கூறிய மகரம் இவைகளில் பாவரிருக்கினும் தாய் பாலியமரணமும் பிதாவுக்கு மறுதார யோகனென்றுங் கண்டுகூறவேண்டியது.

சரவிராசிகளில் சனி சந்திரன் முதலியோரும் சனிக்கு நான்காமதிபனின்ற இராசிநாதனும் சரத்திலும் இருக்கினும் சுபட்சேத்திர சுபபெலத்துட னிருக்கில் சாதகனுக்குவிருத்தாவஸ்தையில் மாதுரு கருமமும் பிதுருவகை யரிஷ்டங்களும் பலவகை துக்கசோகமும் மாதுருசந்ததி க்ஷயமின்றி விருத்தியடைந்தும் அவ்விதவகை மூலமான தனமுதலிய கிரகவாகன க்ஷேத்திரபலன்கள் சாதகனுக்குக் கிடைக்குமென்றும் மிகசுகத்துடன் வாழ்வனென்றும் அறியவேண்டியது.

மேற்கண்ட சனி சந்திரன் முதலிய மூவரும் உபயவிராசிகளிலிருக்கினும் சுபரைக்கூடினும் சுபட்சேத்திர பெலத்துடனிருக்கில்

மத்திமாயுள்க் காலத்திலேயே தாய்மரணமென்றும் இம்மூவரும் இருவர் ஸ்திரஞ்சரமாகில் அல்பத்தில் மத்திமவயதில் தாய் மரணமும் ஸ்திரம் ஸ்திரமாகில் அல்பத்தில் அல்பத்திலும் ஸ்திரமுபயமாகில் அல்பத்தில் தீர்க்கவயதுவரை தாய்க்கிபெலமும் உபய உபயமாகில் மத்திமத்தில் மத்திமவயதிலும் உபபஞ்சரமாகில் மத்திமத்தில் பூரணவயது உபயத்தில் ஸ்திரமாகில் மத்திமத்தில் அல்பமும் சரசரமாகில் தீர்க்கத்தில் தீர்க்கவயதிலும் சரமுபயமாகில் தீர்க்கத்தில் மத்திம வயதென்றும் சரத்தில் ஸ்திரமாகில் தீர்க்கத்தில் அல்பவயதில் தாய்மாரகமென் றறியவேண்டியது ஆகையால் இந்த வயதுகளை அந்தந்த சாதாகன் ஆயுள்பாகமுதற் கண்டறியவேண்டியது.

இதில் மேலேகூறிய மூன்று கிரகங்களாகிய சனி சந்திரன் சனிக்கி நான்காமதிபநின்ற இராசிநாதனும் ஸ்திரமல்லது உபயங்களில் தனக்குறிய பகைபெற்று பாம்பு சனி முதலியோரைக்கூடி இருக்கில் தாய்முதலிய கருமங்களுக்கே சாதகன் பாத்தியமின்றி யடைவன் என்றும் இதில் புதன் முதலியோராகினும் கும்பம் விருஷபம் கன்னி விருச்சிகம் இவைகளில் சந்திரனிருக்கினும் பரசொத்தும் பாவிஷய கருமபாத்தியம் பரபுத்திரனுவன் சுபர்வீடின்றி பாபர்வீடாயவ்வீட்டதிபனும் சனிக்கி நான்காமதிப நின்ற ஸ்தானுதிபன் பரகிரகசம்பந்தம் பகை நீசமல்லது சனி சந்திரன் பாம்பு புதனைக் கூடி நிற்கினும் விருச்சிகம் தனுசு கும்பம் மிதுனமிவைகளி லிருக்கினும் பரனுக்கு பிறந்தவனென்றும் பிதாப்ரபலதாரமுடையவனென்றும் அவ்விதமனையாள்கள் பரபுருஷனைக்கூடி யனுபவிப்பர்கள்யென்றுங் கூறல்வேண்டுவனவாம்.

வித்தியா பாவம்.

சனியும் சனி நின்றதற்கு நான்காமதினின்ற இராசி நாதனும் புதனும் புதனின்றதற்கு நான்காமி ராசிநாதனின்ற ஸ்தானுதிபனும் உச்சசொக்ஷேத்திர விராசிகளிலல்லது சர முபயமாகினு ம்சுபக்ஷேத்திர பெலத்துடன் இருக்கினும் நோக்கினும் சுபபெல சம்மந்தமாகி யல்லது பார்த்தாலும் சாதகனுக்கு வித்தையினுல் சீவனம் உண்டு இவர் கடகம்சிம்மம்ரவி சந்திரன்குசன் சுக்ஷேத்திரஇடம்குரு இவர்களுடனிருக்கில் ராசபார்ஷையுண்டாகும் அதனுலிலாப மடைவன்

புதன் வீட்டிலல்லது புதனை கூடினும் கணிதபாஷைதாதிநூலரிவன் சுயபாஷையுள்ளவன் குரு சுக்கிரனாகில் ராசவித்தையிலும் வேதாதி காவ்ய நாடகாலங் காறவித்தை சாஸ்திர பரிசயமுடையவன் சந்திரன் புதன் இவருடன் சனி கூடிநிற்கினும் நோக்கினும் கணிதாதி சோதிஷமும் வியாபாற இயல் புக்குரிய வித்தைகளையுஞ் செய்வன் குசன் இராகு பாம்பாகில் அன்யபாஷை பிரபல வித்துவானாகிச் செயஞ் செய்து வாழ்வனென்று மிகவு மேன்மைகளுஞ் சுப சந்தோஷனாவன் மேற்கூறிய நால்வரில் இருவர் பெலமற்றும் இருவர் வலுக்கில் சமவித்தை புரிவன் பெலமுடைய கிரகம் யெவருடன் கூடியதோ அதற்கு இசைந்த வித்தையும் மூவர் பெலக்கில் ௩-பாகவிருத்தி யுள்ள வித்தையும் நால்வரும் பெலத்து நிற்கில் அநேக வித்தையும இதில் சுக்கிர சம்மந்த பெலத்துடனிற்கினும்நோக்கினும் சங்கீததாதி வித்தை மேன்மையும் ஷை சனி புதன் சுக்கிரன் ரவி இவர்களுடன் தனுசு விருஷபம் சிம்மம் இவைகளிலிருக்கினும் சங்கீத வித்தியாதி மென்மையுடைய வல்லவ னென்றும்.

மேற்கூறியநால்வரில் ௨-அல்லது மூன்றுபெயர் சனிக்கும் புதனுக்கும் நான்காமதிபதி நின்ற இராசிக்கு கேந்திர கோணத்திலும் துலாத்துக்கு ௭-௮-௧௨-ல் இந்த இடங்களாய் வரில் விவாதவித்தை புரிந்து இராசாங்க சீவன யோகவானாவனென்றுங் கண்டறிய வேண்டியது.

இதற்கு மாருபட்டுப் பகைநீசமல்லது பாப க்ஷேத்திரங்களிலிருக்கினும் சாதகனுக்கு வித்தியா பாகமானவை குறையுடன் யெவ்விதவித்தையின் விஷயமும் பிற பலத்துவமின்றி யடைவன் யென்றும் ஸ்தானாதிபதியும் புதன் சனி இவர்கள் பெலமற்ற இடங்களில் பகைநீசமிவர் அல்லது கூடி யோர் பார்த்தோர் பகை நீசர்களாகினும் பாபர்களாகினும் யெவ்வித வித்தைகளும் விருத்திக்கி வாருதென்றுங் கண்டறிந்து கூறல்வேண்டும்.

இவ்வித சனி புதனுடன் கூடினும் மேஷம் துலாம் மகரம்இவைகளிலிருக்கினும்அவையிற் புதனல்லது சனிகூடினாலும்வியாபாரமுயற்சிபெருவனென்றும் புதன் சுக்கிரன் இவர்கள் கடகம் மகரமிவையில் சந்திர சுக்கிர கேந்திரத்தில் ஒன்று நீங்கிய கேந்திரமாயும் குசனைக்கூடி நிற்கினும் நோக்கினும் வியாபார சீவனமுடையவ னென்

றும் அவ்வித வியாபாரமூலிய புகழ்ச்சிகளை யடைவனென்றுங்கருதி யுரைக்கவேண்டியது.

மாதுரு பாவாதிகளுங் கிரகாதிகளின் கணிதங்களும் பாஷாந்திர கெணிதமும் கூறப்படும்.

சனியுடனும் மகரத்திலும் புதனுடனும் சனிக்கும் புதனுக்கும் நான்காமதிபதி நின்ற இராசிநாதனுடனும் கூடிய யெண்களை பெலாபெலப்படிக்கு அவரவரிராசி யெண்களிற் பெருக்கி சனிக்கிநான்காதிப நின்ற இரா்சிநாதனுடைய சுபத்திற்குறியயெண்ணிற்கொடுத்த சேஷம் பாஷை வித்தை யென்றும் அதில் யெந்த கிரகத்தினல்விசேஷபெலத்துடன் கொடுக்கும் யெண்ணதிகமோ அவ்வித கிரகத்திற்குறிய வித்தை பிரபலவா்னவனென்றும் மேலேகண்டு ஒன்றுசேர்த்த யெண்களையும் சுக்கிரன் சுக்கிரனுக்கு நான்காமதிபதி நின்ற இராசிநாதர்களின் சுபாசுப பெலத்துக்கேற்ற யெண்ணையுங் கூட்டிசுக்கிரனுக்கு நான்காதிபதி நின்ற வதிபன் யெண்ணிற் கொடுத்த சேஷம் யெவ்வளவோ அத்தனை ஸ்தானமுள்ள கிரகாதி பூமியென்றும்இவர்களுடனுங் குசனுடனுங்கூடிய யெண்களையுஞ் சேர்த்துபார்க்கில்பூமி பயிற்விருத்தி யென்றும் மேலேகண்டதுகைகளுடன் சந்திரன் சந்திரனுக்கு நான்காதிபநின்ற இராசிநாதனுடன் கூடியவர்களின் பெலாபெலயெண்ணை சூரியன் பெலாபெலனுக் குறிய யெண்ணிற் கொடுத்த சேஷம் மாதுருவென்றும் அவ்வெண்களை யொன்று சேர்த்து ௫-ல்பெருக்கி ஒன்பதில் கழித்த சேஷம் திசையிலும் இவை ௫-ல் பெருக்கி ௬-ல் கழித்த சேஷம் புக்தி யென்றும் சவ்யாபசவ்ய லக்ஷணமூலியமாக கண்டரிந்து திசாபுக்தி காலங்களில் மாதுருகருமமென்றுங் கூறப்படும்.

புத்திரபாவ பலன்கள்.

புத்திரஸ்தானம் சனி புதக்ஷேத்திர மாதலால் புத்திராரிஷ்டம் இந்த லெக்கினத்திற்குண்டென்றும் இதில் கிரகசார ஸஞ்சார ரீதியால் புத்திரபாவங்கள் கூறப்படும்.

சனியும் புதனிவர்களும் சனிக்கு ஐந்தாமிடத் ததிபநின்றஇராசிநாதன் குரு குருவுக்கு ஐந்தாமிடத்ததிபதி நின்றஇராசிநாதனிவர்

களைவர்களின் பெலத்தின்மேல் புத்திரபாவங் கூறப்படுமென்றும் அவ்விதமாகக் கூறவேண்டிய விஷயங்களைக் கீழே உரைப்போமாக.

மேற்கூறிய ஐவரும் தனித்தல்லது சேர்ந்து பகைநீசம் நீங்கியதும் மகரம் கும்பம் மிதுனம் கன்னி இவ்விடங்கள் நீங்கிய இடத்திலும் ரவி சந்திரன் சுக்கிரன் குரு குசனிவ்வித கிரகங்களின் வீட்டினின்றாலும் சுப சம்மந்த யுதர்களல்லது சுபதிருஷ்டியுடன் தந்தமக்குரிய க்ஷேத்திரம் நட்போருடன் கூடி நிற்கினும் நோக்கினும் ஜாதகன் புத்திரகுடும்ப விருத்தியுடையனுகிப் பவிப்பனென்றும் புத்திர கரும முண்டென்றும் ஐவர்களுக்கும் மியல்பில்லாத இடத்திலும். பகை நீச க்ஷேத்திரகெதியுடன் பெலமற்றுப் பகைவருடன் அல்லது பகை நீச க்ஷேத்திரங்களி நிற்கினும் நோக்கினு பாவவரைக்கூடினும் புத்திரர்களானவர்கள் இன்றியும் கருமபுத்திரரின்றியும் பலவகை வருத்த மடைவனென்றுங் கூறப்படும் மேற்குறித்த ஐவர்களையும் பியத்து தனித்தனியாக ஒவ்வொரு கதிகளாய் விபரம்வருமாறுகூறப்படும்.

சனி சுக்ஷேத்திர உச்சமான சுபட்சேத்திரங்களில் பகை நீசமின்றியும் குரு கேந்திரகோணமல்லது விருச்சிகங் கன்னிஇவைகளினின்றாலும் புதன் * கேந்திரமல்லது பணபரவாகனுகி ரவியைக்கூடி நிற்கினும்சனிபெலமற்று குசன்வீடல்லது ரவிகிரகத்தில்வாசஞ்செய்தும் சனிக்கும் குருவுக்கும் ஐந்தாமிடத்தாதிபதி நின்ற இராசிநாதன் புதன்சனியின்றி மற்றய ரவி குரு குசனிவர்களாலும் சுபக்ஷேத்திர வாசர்களாகி நிற்கினும் சாதகனுக்குப் பலவித புத்திர விருத்தியுடன் கரும புத்திர னுண்டென்றும்.

இவர்கள் பாபக்ஷேத்திரங்களில் பாவருடன் கூடினலும் சனி புதனுகினும் பகை நீசத்துமின்றி பெலத்துடனிருக்கினும் புத்திரர் கிடைக்கமாட்டாதென்றும் இதில் சனி பாம்பு வலுத்து சந்திரதிருஷடியல்லது சந்திரனைக்கூடில் குருபுத்திரனின்றி அன்யர்களுக்கு உதித்த புத்திரனென்றும் அவ்விதபுத்திரன் தனக்குண்டானவனுகி பாவிப்பன்யென்றும் சுக்கிரன் பெலத்து மேலேகண்ட பாவறைக்கூடியும் சனி யேழாமதிபதி நின்ற இராசிநாதன் சபட்சேத்திரகெதனுகி பெலத்துடன் கும்பம்மிதுனம்விருச்

* கேந்திரமென்றவையைத்தவிர பணபரமானவை என்னவெனில் லக்கினமுதல் உ-ரு-அ-கo-ஆகும் ஆபோக்கிலியம் ங-சு-கூ-கஉ-ஆகும்.

சிகம் கன்னி மேஷமிவைகளில் தனக்குரிய சுபரைக்கூடி நிற்கினும் நோக்கினும்மருதாரபுத்திர லாபங்களால் கருமபாவஞ் சாதகனுக்குலபிக்குமென்றும் அதில் சனிமுதலிய பகைவர்கூடியலலது பார்க்கில் அவ்வித புத்திரனும் குடும்பவிருத்தியின்றி மரித்துவிடுவன் யென்றும் சனி யல்லது சனி நின்ற பஞ்சமாதிபநின்ற ஸ்தானாதிபதி ஸ்திரிவிராசியிலிருக்கிலும் குருவசாதபஞ்சமாதிபநின்ற ஸ்தானாதிபன் பெண்ராசியல்லது பெண்கிரகங்களுடன் கூடிநிற்கினும் முதற்பெண்ணேசெனிக்கப்படுமென்றும் இதில்பெண்கிரகத்தோராகிய அமரபட்ச சந்திரன் சுக்கிரனிவர்கள் அதிக பெலத்துடன் சனி குரு இவர்களுக்கு பஞ்சமாதிபனின்ற ஸ்தானாதிபதிகளாகிவரில் பெண்ணேசாஸ்தி அபிவிருத்தியடையுமென்றும் குருகுசன் ரவி முதலியோர் ஷெ ஸ்தானாதிபதிகளாய் வலுத்தும் சுபட்சேத்திரகெதியுடனிருக்கில் புருஷசந்ததிகள் அதிகவிருத்தியடையுமென்றும் இருவகை பாபருஞ் சுபருமாக விருக்கில் சிலகாலம் புத்திரலாபவிருத்திகளும் சிலகாலம் புத்திரவிருத்தியின்றி யடைப்படும் பெண்இராசிகளிற் சிரிதும்புருஷ இராசிகளிற் சிரிதுஞ் சஞ்சரிக்கில் ஸ்திரீ புருஷ புத்திரலாபமும் உண்டென்றுங் காணல்வேண்டும்.

சனி கும்பம் மேஷம் மிதுனம் சிம்மம் இவைகளில் பாம்புமுதலிய பாவருடன் புதனைக்கூடினும் புதன்பகை நீசசத்துருக்ஷேத்திரமல்லதுசத்துருவுடன்கூடினும் பெரும்பாவகிரக சம்மந்தமானாலும் குருபெலமற்றும் பாபருடன்கூடினும் சனி குரு இவர்களுக்கு பஞ்சமாதிபனின்றஸ்தானாதிபதி பகைநீசட்சேத்திரம் சனிபுதன்வீடுஅல்லது இவருடன்கூடிநிற்கினும் கும்பம் மிதுனம் விருச்சிகம் கன்னி இவைகளில் சனி புதன்கூடி பாம்பு முதலியோர் சேர்ந்திருந்தாலும் பகைபெற்றோரைக் கூடினும் புத்திரன் கிடையாது இவைகளில் குருசந்திரகேந்திரமாகி புதரவியுடன்விருச்சிகம் கன்னி கும்பம் மிதுனமிவைகளிலிருக்கினும் இரண்டு சுபர்கள் பெலத்துடன் மேலேகண்ட ஸ்தானங்களிலிருக்கும் புதன் சனி இவர்களுடநின்றாலும் அல்ப புத்திரரும் அகாலத்திலும் முன்பெண்களுண்டாகி வருந்தி காலதாமதத்தின்மேல் புத்திரலாபமுண்டென்றும்.

மேற்சொல்லிய சனி புதனிவர்களுடன் மேலேகண்ட இராசிகளில் மூன்றுவகைச் சுபர் கூடில் ஒருவருக்கொருவர் சமதுல்ய மல்லதுமைத்திரர்களாகி நிற்கினும் நோக்கினும் புத்திரவிருத்தி பிரபலத்துடன் உண்டென்றும் சுபர்கள் ஒருவருக்கொருவர் பகைநீசாதி அபெலராகி இருக்கினும் நோக்கினும் புத்திரபாவங்களுண்டாகி உடனுக்குடன் நஷ்டமும்

அவைகளாற் பலவித துன்பங்களையும் அடைவனென்றும் இவர்களுடன் பாவரே கூடிநிற்கினும் நோக்கினும் புத்திரவிருத்தி கிடையாதென்றும் பாவரே சுபராகிவாழில் காலாந்தரத்தின்மேல் புத்திரவிருத்திகளுண்டாகு மென்றும் சுபரும் பாவருமாகிக்கலர்ந்து நிற்கில் அல்பமான வேக புத்திர நிருந்தும் பிரயோசனமின்றி வாழ்வனென்றும் கூறப்படும் மென்றறிய வேண்டியது பாப சுப சம்மந்த ஸ்தானஞ் சுபக்ஷேத்திரமானல் புத்திர பாவமானவை பின்றூரமூலியம் காலதாமத மிவ்விதம் புத்திரலாபமுண் டாகு மென்றும் புத்திர விரோதங்களையும் அடைந்து வாழப்படுவனென் றும் அரியவேண்டியது.

சனி குரு துலாம் விருச்சிகம் தனுசு மேஷம் மிதுனம்சிம்மம்இவை களில் கூடினூலும் அல்லது தனித்து நின்றூலும் அவர்களுக்கு பஞ்சமாதி பனின்ற ஸ்தானுதிபன் பெலத்துடன் கடகத்திலாவது துலாம் தனுசு மிதுனமிவைகளில் அல்லது கேந்திரகோண கெதனுகினும் சுபவீக்ஷணிய மல்லதுசுபறைக்கூடினும் பெலாட்டியர்களாகிஇருந்தும் மேற்கூறியபூரண சந்திரன் சூரியன் குசன் குரு இவர்களுடனல்லது இவர்களின் வீட்டி னின்றூலும் பெலத்துடனிருக்கில் பாம்பு புதன் சனியைக் கூடாமலிருக் கில் புத்திரவிருத்தி யோராளபுத்திரர் உண்டென்றும் வெகு புத்திரயோக வானுகியும் வாழ்வனென்றும் அரியவேண்டியது

மேற்கூறிய சுபர்களில் ஒருவர் பெலமுற்றும் மேலேசொல்லிய ஸ்தா னங்களில் சனிக்கி ஐந்தாமிடத் ததிபதி நின்ற இராசிநாதன் குருவுக்கு ஐந்தாமிடத்ததிபதி நின்ற இராசிநாதனிவர்கள் பெலத்துடன் சனி புதன் வீட்டிலிருந்தால் சுபர்களாகியும் மற்றயஇடத்திலிருக்கில் சுபர்களானூலு மல்லதுசுபரேபாபரானூலும் சுபக்ஷேத்திர சுபவாசபெலத்துடன் அல்லது ரவி புதனைக்கூடினூலும் நட்பாக்ஷி உச்சக்ஷேத்திரத்தில் பெலத்துநிற் கினும் நோக்கினும் ஜாதகனுக்கு புத்திரவிருத்தி பலவகை இல்லா மல் உ-முதலிய புத்திரயோக மேன்மைகளும் குடும்ப சுப சந்தோ ஷமும் இஷ்டகாரிய செயசித்திகளும் வஸ்திருபரண பூஷிதனுகி வாழ்வனென்றும் கண்டறியவேண்டியது.

சனியல்லது குருவுடன் பாம்பு புதன் ரவியுடன்கூடி யல்லது அவர்வீட்டில் இருக்கில் சாதகத்துக்கு புத்திரவிருத்தி கிடையாதெ ன்றும் இந்தபாவர்களுடன் ஓர்சுபருடன்கூடிநிற்கினும் பலசுபர்கள் கூடினூலும் அந்த சுபர்களானவர்கள் பெலமற்றபாபத்துவமுடைய

வருயிருக்கில் புத்திர உற்பத்தியுண்டாகி உடனுக்குடன் நஷ்டமும் பலவிதமான வருத்தமும் குடும்பதுக்கமும் பலவிதகஷ்ட பலனேயுங் கொடுக்கப்படும் யென்றும் அறியவேண்டியது.

மேலேகண்ட ஸ்தானதிபர்களுடனும் ஸ்தானத்திலும் பாவர்களுடனும் கூடினும் பலவகை வருத்தமும் ஞானதிபீடைகளும் உண்டென்றும் பலவகை வருத்தங்க ளுண்டாகுமென்றும் மேற்கண்ட பாவர்களுடன் ஓர் சுபபெலத்தோராவது இரு சுப பெலத்தோர் மேற்கண்ட விராசிகளில் இருக்கினும் நோக்கினும் யேக புத்திரத்துவமான அல்ப புத்திரயோக பிரபல்லிய முண்டென்றும் மூன்று முதலிய சுபர்களுடன் கூடிநிற்கினும் நோக்கினும் சாதகனுக்கு புத்திர பலவித விருத்திகளுடன் பெண்கிரகங்களுடன் இருக்கில் பெண் சந்ததி விருத்தியும் புருஷகிரக சம்மந்தமாகில் புருஷசந்ததி விருத்திகளும் மேன்மைகளுங் குடும்ப சுகசௌக்கி முண்டென்றும் கூறப்படும்.

இதில் சனி குருவுடனும் இக்கிரகம்களுக்கு ஐந்தாமிடத்ததிபதி நின்ற இராசிநாதன் இவர்கள் தங்களுக்குரிய பகைநீச க்ஷேத்திர கெதிஇருவகையாரும் இருவகையார் சுபட்சேத்திர பெலத்துடன் இருக்கினும் நோக்கினும் அல்ப புத்திரயோகமென்றும் மிகவுமேன்மையான தனதானிய கிரகவாகன விருத்திகளும் இஷ்டசன்மான வெகுமானமும் தேவதாபக்திகளும் புண்யஸ்தலதெரிசனமும் உண்டாகும் இதில் மூன்றுவகைக் குரியோர் சுபபெலத்துடன் இருக்கில் சாதகனுக்கு புத்திரவிருத்தி ௩-க்கு மேலான குடும்பங்களுடன் மிகவும் பிறபுலராகி வாழப்படும் அதிக ஞானதி மேன்பாடுகளுண்டென்றும் குடும்ப சுப சந்தோஷமும் இஷ்டகாரிய வெற்றிகளும் உண்டென்றும்.

நான்கு வகையான கிரகசுபபெலங்களுடன் இருக்கில் சாதகனுக்கு பிரபலமான பலவித புத்திரபாவ மேன்பாடுகளும் குடும்ப சுப சந்தோஷ உத்தமபலனாக நடக்குமென்றும் தனதானிய விருத்திகளும் நூதன கிரக பலிதமும் அதிகமேன்மையும் உண்டாகும் இவ்வித கிரகசுபபெலத்துடன் குருபுதன் முதலிய சுபர்கள் கும்பம் கடகம் மிதுனம் துலாமிவையி லொன்றில சனி கேந்திரமான துலாமாகவுஞ் சுக்கிரன் பெலத்தும் கேந்திரகோண சுபக்ஷேத்திரவிட

மாகி தனக்குரிய வகையுள்ள சுபசம்மந்த மித்துருவையுடையோரு டன் கூடிநிற்கில் சாதகன் விசேஷ அஷ்டமாசித்தி வல்லவனாகி பிர பலத்துவ நித்தியத்துடன் உலகத்தில் யுகாந்திரக்கணக்குள்ள ஆயு ளைப்பெற்றும் விதியை நிகற்றும் யோகியாகிப் பின் சித்தனாகி முனி வனாத்திரிவன் இதில் சனி யல்லது வேறு எவ்வித புதன் பாவரொருவர் பார்க்கவல்லது சேரில் விசேஷ ஆயுர்தாயம் நூருவரையென் றும் சுபத்துவமில்லாமல் சனி முதலியோர் பார்த்தாலும் அல்லது சேர்ந்தாலும் பிரயோசனமற்ற ஞானியாவன் சனியில்லாமல் ரவி கூடினாலும் பார்த்தாலும் சிலவகையரிவன் யாகயெனாதி கருமானுஷ் டானியாவன் புதன் சந்திரனாகினும் குசனாகினும் சாதாரண யோகி யாகி முற்றும் பெருமல் வீணில் தேகத்தை யொழிப்பனென்றும் சந்திரன் புதன் சுபராகிக் கூடினால் யோகியாகி விதியைமாற்றுவன் சிலகாலஞ் சஞ்சரிப்பனென்றும் பாவராகி யல்லது பாபசம்மந்த மல்லது பார்த்தாலும் ஞானவானில்லாமல் முரடனாகித் தன்னுடன் கூடியோர்களைப்பற்றி விசேஷ ஞானம்போல பிரருக்கு உபதேசிப் பனென்றும் மேற்கூறிய வகைகளை இவ்வித நூர்ப்பயிற்சி மூலமாக அரிந்து சொல்லவேண்டியது.

மேற்கூறிய புத்திரஸ்தானமல்லது மேலேகண்ட குரு சனி இவர்களுக்கு ஐந்தாமிடத்ததிபதி நின்ற இராசினாதன் பாம்பு முதலிய பாபர்களைக்கூடி நிற்கினும் நோக்கினு மல்லது மேலேகண்ட கிர கங்களுக்கு ஐந்தாமிராசிக் கதிபதி நின்ற இராசியிற் பாம்புமுதலிய பாவர்களிருக்கினும் நோக்கினும் சாதகனுக்கு புத்திராறிஷ்டங்க ளில் பாம்பு தோஷமுண்டென்றும் அதில் குருமுதலிய சுபக்கோள் பாற்கினும் நோக்கினும் சாதகனுக்கு புத்திர விருத்திகளும் குடும் பம் பின்னால் கிடைக்கப்படும் புத்திரபாவமே விருத்திக்கு வரு மென்றும் குடும்பமேன்மையும் சுகசௌக்கியாதி பிரபல சவுக்கியங் களை யடையப்படும்.

குரு முதலியவர் சனி இவர்களுட னல்லதுபுதனுடன் புதன் வீட்டினிற்கினும் பாவரைக்கூடினும் ரு-கா-எ-அ-கஉ-கூ-இவைகளி லிருந்தும் பாவரைக்கூடினும் பகைநீசர்களாகி குசன் பெலன் கெட்டாலும் பகைநீசமானாலும் தன் குடும்ப விருத்தியான புத்திர ரின்றி சிவீகாரயுதனவன் யென்றும் குருபெலத்து ரு-கூ-க-ல் தனக் குறிய பெலத்துடன் பாவர் வீடாகினும் சிவீகாரமல்லது ஆத்மாபி

மான புத்திரலாப விருத்தியுண்டென்றும் குடும்ப சுகசௌக்கியங்களும் மிக்க மேன்பாடுகளும் இஷ்டசித்திகள் பின்பாகத்தின் லடைவனென்றும்.

சனி புதன்கூடி யவரவர்களின் சொக்ஷேத்திர ஸ்தானங்களிலாவது திரிகோணத்திலும் இருந்தும் குரு சுக்கிரன் பூரண சந்திரன் முதலியோர்கள் தனக்குரிய க்ஷேத்திரமில்லாமல் பாபக்ஷேத்திரத்தில் பெலமற்று இருக்கினும் புத்திரரின்றி அன்யபுத்திரன் அபிமான புத்திரனிவர்களை யடைவனென்றும் அவ்விதவகை மூலியவிருத்திகளும் இதிலோர் சுபர் கூடினாலும் பார்த்தாலும் காலாதீதத்தின்மேல் மருதார புத்திரயோகவானென்றும் மிக்க பிரபலவானாகி வாழ்வனென்று மறியவேண்டியது.

புத்திரபாவ கெணிதங்களறிய வேண்டியது.

குரு சனி இவர்களுக்கு ஐந்தாமிடத்ததிபதி நின்ற இராசிநாதனிவர்களுடனும் மேற்கண்ட கும்ப மிதுனம் சனி குருவுக்கு ஐந்தாமிடத்ததிபதி நின்ற ராசியிலுங்கூடிய கிரக சுபாசுப பெலனுக்குரிய யெண்களை ஒன்று படுத்தி அந்தந்த இராசி யெண்ணிற் பெருக்கி அவ்விராசி இடபெலத்துக்குரிய யெண்களையும் கிரக பெல யெண்களையுங்கூட்டி சனிக்கி ஐந்தாமதிபநின்ற இராசி நாதனுடைய பெலனிக்குரிய யெண்ணிற் கொடுத்தசேஷம் புத்திர பாகமென்றும் இதில் சுபா சுபபெலத்தின்மேல் தீர்க்க சந்ததிகளைக் கூறுவோம் இத்துகைகளுடன் யேழாமதிபதி குசன் மேஷம் குசனுக்கு ஐந்தாமிடத்ததிபதி நின்ற இராசிநாதனுடன் இவர்களின் சுபாசுப பெலத்துக்குறிய யெண்களை அவ்வவ்விராசி யெண்ணிற் பெருக்கி இடபெலத்துக் கிசைந்த துகையை யெடுத்து மேலே கூட்டி வைத்த துகையுடன் சேர்த்து உ-ல் அரணஞ்செய்த சேஷம் பின்தாரமுள்ள புத்திரர்களென்றும் சுபாசுப ஆண்பெண் கிரகங்கள் குடுத்த துகை இவ்வளவென் றறிந்தவை ஸ்திரீ புருஷ தீர்க்கமென்றுங் கண்டறியவேண்டியது குடும்ப சுகசௌக்கிய இயல்பிற்குறிய பலன்களையும் தெளிவுட னறிந்துக்கொள்ள வேண்டியது இவ்விதமறிந்த இரண்டுகணக்கான மொத்ததுகையை ரு-ல் பெருக்கி ஒன்பதிற் கழித்தசேஷம் திசையிலும் வந்த ஈவை ரு-ல் பெருக்கி ஒன்பதில் கழித்த சேஷம் புக்திகாலத்திலும் தீர்க்கபுத்திர லாபமென்றுங் கண்டறியவேண்டியது.

மேற்கண்ட துகைகளை பனிரெண்டினாற் பெருக்கி கூ-ல் கழித்த சேஷம் மிச்ச மில்லையானால் பிதாவுக்கதிக யோகமுள்ள புத்திரர்களென்

றாம் ௬-க்குள் மிச்சமானால் பிதாவுக்குச் சரிபானாலும் கொஞ்சமங்க போகவானவனென்றும் ௩-மிச்சமானால் தரித்திரனாகி புத்திரன் பூர்வார்ச் சிதத்தை யழிந்தும் பலவித கஷ்டநஷ்டத்தை யடைவனென்றும் பல வித வருத்தங்களையும் அடைவனென்றும் மனதுக்குத் துன்பமடைவன் யென்றறியவேண்டியது,

சத்துருரோகம் ராஜதெண்டனாதிமுதலிய ஞாதிபகைகளைப் பற்றிய பலன்களாவன.

குரு சனி இவர்களுக்கு ஆறுமதிபதி நின்ற இராசிநாதனும் ௬-௮-௯-இவ்வித ஸ்தானங்களில் பகையுடைய பாம்பு முதலியோரைக் கூடினும் சந்திரன் ரவி இவர்களுடனும் அல்லது சுக்கிரன் கூடினாலும் சுக்கிரன் சந்திரன் முதலியோர் ௩-௬-௮-௧௧-இவ்வித இடங்களி னின்றாலும் மேலே சொன்ன நான்கு ஸ்தானாதிபர்களும் துலாம் அல்லது சுக்கிர சந் திரனுடன் கூடினாலும் ௬-௮-ல் சுபர்களும் பாவர்கள் கேந்திரகோணத் தில் வலுத்து இருந்தாலும் சந்திரன் சுக்கிரன் மீனம் விருச்சிகம் அல்லது சனி கிரகத்தில் தனக்குறிய பகையோருடன் சனி பாம்பு கூடி னாலும் பெரும்பிரபல நோய்களா லரிஷ்டப்படுவன் இவர்கள் ஸ்திரவிராசி யாகில் நீண்டகால முபாதிகளும் உபய விராசிகளாகில் மாதக்கணக்கிலும் சரவிராசிகளால் தினக்கணக்கிலும் வியாதிசம்பவங்களால் பீடையடைந் தும் பலவகை வீருத்தங்களையு மனுபவிப்பன் இதில் ரவி கூடிநின்று பாப பெலத்துக் கதிகாரியாகி நிற்கினும் சவ்யராசி முதற்பாகமாகினும் சிரசு நேத்திர ரோகத்தையும் அபசவியம் பிற்பாகமாகில் உடல்களில் அங்க ரோக ஊஷ்ண சம்மந்த நோய்களும் சந்திரனாகில்கண்டம் கபாதிநோய்கள் சித்தபேத பாதைகளையும் குசனாகில் அக்கினி ரெத்தநோய்கள் வெட்டு முதலிய விரணநோயும் புதனாகில் இடுப்புமுதலிய உதராதி நோய்களையும் வாயுவு வாதநோயும் குருவாகில் மார்பு மூற்சாதி சுவாசநோய்களையும் சுக் கிரனாகில் கால்முதலிய செலசீத பக்ஷவாதாதி நோய்களையும் சனியாகில் கால் முதலிய பித்தவாத நோய்களையும் இராகுவாகிலும் ஷை நோயும் விஷநோயும் கேதுவாகில் விரணரெத்த விஷபாதைகளையுங் கொடுக்கப்படு மென்றுங் கண்டறியவேண்டியது.

இதில் சனி பாம்புகளுக்கு வாறுமதிப நின்றஸ்தானாதிபதி ரவி மதி யைத்தவிர்த்தோரல்லது சுக்கிரனைத்தவிர்த்தோராகில் ௩-௬-௮-௧௧-இவ்வித இடத்ததிபனும் துலாம் தனுசு மேஷம் கும்பம் சிம்மம் கடகம் இவை

களிலிருக்கினும் நோக்கத்துடன்வலுத்தாம் சனிபாம்புக்குஅஷ்டமாதிபதி கள் பெலமுற்ற சுபர்கள்வீட்டிலும் அவ்விடத்துக்கதிபர்கள் பகைமுதலிய பாபக்ஷேத்திர தெதனுகினும் பாவரைக்கூடினுலு மவனுக்கு இராசதெண் டனையுண்டாகும் இரண்டுபேரும் பாவர்களைக்கூடினுல் பெரும் அவமான மும் ராசதெண்டனையும பலவகை வருத்தத்தையும் மனேதுக்கமும் சிவவறையுள்ள ராசதெண்டனையால் பிராணபயமுண்டாகும் மூன்றுமுத லிய பாபர்கள் கூடினுலும் அப்படியே பாபர்கள் சுபத்துவர்களாய் கூடி னுல் இராசதெண்டனையல்பமும் சத்துருவாலெப்பொழுதும் விவாத முடையவஞ்கிப் பயிப்பனென்றும் பலவித சத்துருக்களாலயே பொருளழிவும் சாதிவிரோத முண்டாகுமென்று மனக்கவலையும் அடைவன.

ஆறு யெட்டு இந்த இடங்களில் சனிசுக்கிரன் குருஇருக்கினும் குசனைக் கூடியல்லது குசன் பார்த்தாலும் பலவித சத்துருவும்ரோண சத்துருக்களால் விவாதமும் பொருள்சேதத்தையும் அடைந்து பல வகையான வருத்தமடைவனென்றும் இதில் சனி குசன் வலுத்துக் கூடி மீனம் விருஷபம் சிம்மம் தனுசு கன்னி இவைகளினின்றுலும் இராச விரோதமும் பலவகையான கஷ்டநஷ்டங்களை யடைவனெ ன்றும் அவ்வித கஷ்டநஷ்ட சத்துருதுன்பங்களால் பலயில்லி சூரி யாதிபாதையடையப்படுமென்றும் மனதுக்கு அநேகவிதகஷ்டமும் க்ஷேத்ராதி பாதையால் மனதேகாதி வருத்தமும் குடும்ப உபத்தி ரவ முண்டென்றும் அரியவேண்டியது இதில் ஓர் சுபர்கள் கூடினும் நோக்கினும் அல்பமல்பமான விரோத சத்துருவுண்டாகி உடனுக் குடன் நிவர்த்தியாகுமென்றும் இருவகை முதலிய சுபராகின் சத் துருமித்திரு மிருந்துவந்தாலும் சாதகனே செயத்தடைவ னென் றும் கூறப்படும் இதில் இருசுபரென்றது சுபஸ்தானஞ் சுபகிரகமெ ன்றி யூகித்து அரியவும்.

குரு முதலிய சனி கேந்திரகோண விராசிகளில் இருந்தும் பெ லத்துடன் சொட்க்ஷேத்திர உச்சனுனலும் பெலத்த சுபட்க்ஷேத் திர மல்லது உ-கக-ல் இவ்வித இடங்களிலிருக்கினும் குசன் ரவி முத லியோர் கன்னி துலாம்விருஷபம் மீனமிவைகளிலாவது அவர்களின் பகை நீசட்க்ஷேத்திரத்தி நின்றுலும் சாதகனுக்கு அதிகக் கடனுள் ளவனுகியும் ரோணத்தினுல் துன்பத்தையும் அடைவன் அவ்வித ரோணங்களினுல் ராசதெண்டனை செயில் முதலிய வகையும் யேற்ப

டப்படுமென்றும் ரொணத்துன்பங்களினால் பலவிதவருத்தங்களையும் அடைவனென்றுங் கண்டரியவேண்டியது.

மீனம் விருஷபம் இவைகளில் சுபர் முதலிய ரவி புதனிருந்தும் ௨-௧௨-மிடத்தில் பாபரிருக்கினும் அல்லது குரு சுக்கிரன்முதலியோரிருந்தாலும் ருணஸ்தனாகியும் சிலகாலம் ருணமில்லாதவனாவன் இதில் ஒருவர் ௨-௧௨-லும் மற்றொருவர் கேந்திரகோணத்தி லிருந்தாலும் சிலநால்ருணமும் சிலநாள்ருணமில்லாதவனாகியும் பவிப்பன் மேற்சொல்லிய ஸ்தானங்களில் பாவரும் ௨-௧௨-ல் சுபருமிருந்தால் ருணந்தீர்ந்தும் யோகமும் மேலான தனவானாவனென்றும் குரு சனிக்கி ௨-௧௨-ல் வுடன் சுபரிருந்தால் ரொணமதிகமும் தனம் அல்பனாவன் இவ்விருவர் பக்கத்திலும் பாவரே இருந்தால்ரொணமில்லாமல் தனவானாவன் இவர்களுக்கு ௬-௮-ல் சுபரிருக்கினும் நோக்கினும் ரொணஸ்தனாவன் பாபரிருக்கில் ரொணஞ் சத்துரு நிற்கமாட்டாது இவர்களுக்கு விசேஷ கோணகேந்திரத்தில் சுபரும் மறைவு இடத்தில் பாவருமிருக்கினும் தனவந்தனாவன் ரொணம் நிவர்த்தி செய்வன் பாவருஞ் சுபருமாக மேலேசொன்ன ௨-௧௨-௬-௮ இவைகளில் இருக்கில் சிலநாள் ரொணத்துடையவனாகியும் சிலநாள் ரொணமில்லாதவனாவன் யென்றும்சவ்யராசியானால் செனனமாரப்பமுதற்காலம் ரொணமும் பிற்காலஞ்சுகமும் ரொணமில்லாதவனாகியும்அபசவ்ய இராசிகளில் மேலே கண்டவர்கள் சஞ்சரித்தால் முதல்வயசுகாலம் தனமும் பின்வயசில் ரொணமும் சமராசிகெதியராகில் மத்தியராகில் மத்தியவயதில்ரொணத்தையும் அடைந்துபலவருத்தமடைவனென்றுங் கண்டுகொள்ளவேண்டியது.

ரொணங்களும் ரோகங்களையும் பற்றிய கணிதங்களாவன.

சனி குருவுடனும் சனி குருவுக்கு ௬-௮ மதிபதிநின்ற ராசிநாதனுடனும் கூடிய கிரகங்களின் சுபாசுபபெல யெண்களையும் மீனம் விருஷபத்தில் கூடிய கிரகபெலாபெல யெண்களையும் கிரகமில்லாவிடில் இராசி யெண்களையும் கூட்டி ௮-ல் பெருக்கி ௧௦ கழித்தசேஷம் ருணமும் ௯-ல் பெருக்கி ௧௧-ல் கழித்த சேடம் தனமும் அரியவும்.

மேலேகூடிய தொகையை ௫-ல் கழித்த சேடம் அவஸ்தை காலத்தில் ரோகபாதையும் ராசவிரோத தெண்டனைகளையும் மேலேகண்ட

துகையை ௫-ல் பெருக்கி ஒன்பதில்கழித்த சேடம் திசையிலும் வந்த ஈவை ௫-ல் பெருக்கி ௯-ல் கழித்தசேடம் புத்திகளிலுங் கண்டகாலம் ரோகங் கடன் இராசதெண்டனை இவைகளை கொடுக்கப் படுமென்றும் அறியவேண்டியது. இவைகளை சவ்யம் அபசவ்யம் சவ்யாபசவ்யம் அபசவ்ய சவ்யரீதிக்கி மேஷ லக்கினத்திற் சொல்லியபடி கணக்கிட் டரியவேண்டியது. யென்றுங் கூறப்படும்.

களத்திர பாவ பலன்கள்.

சுக்கிரனையும் குசனையும குசனுக்கு யேழாமதிபதி நின்றஇராசி நாதனையும் மேஷத்தையும் சுக்கிரனுக்கு சப்த்தமாதிபனின்ற இராசி நாதனையுங் கொண்டு இந்த பஞ்ச பூத மூலமாயுரைக்க வேண்டும் என்று அரியவேண்டியது.

சுக்கிரன் சுபட்சேத்திர கெதனாகியும் சந்திரனுடன் கூடியல்லது சந்திரன் குரு கேந்திரசமேதனாகியும் பெலத்துவேறுதனித்திருந்தாலும் பாப சம்மந்த திருஷ்டி இன்றியும் மேஷத்தில் பாவரில்லாமலும் சுத்தமல்லது சுபசம்பந்த தத்துவமாகியும் குசன் குசனுக்கு சப்த்தமாதிப நின்ற ஸ்தானாதிபதி பெலத்து பகைநீசாதிதுஸ்தானத்துவ மில்லாமல் கிரகங்களைச் சேரநோக்க மில்லாமலிருக்கில் சாதகனுக்கு களத்திரமேகமென்றும் ஷெயோகமும் பிறபலசுகத்தையும் அடைவன் இவர்களிலிருவருக்கு மேல்புட்டோர் சந்திர புதன் க்ஷேத்திரம் அல்லதுஅவர்களுடன் சுபபெலத்துடன் கூடினாலும் சாதகன் களத்ரமூலியதனம் மேன்மேலான லாபத்துடனும் பிறபல விருத்தியுடன் மிகுந்தயோகவானாகியும் செய்ததை யடைந்தும் ஓர்பாவரில்லாத ரவிமுதலிய புத சுக்கிரன் உச்சமும் சந்திர குரு கேந்திர திரிகோணத்திலும் நட்புட்சேத்திரமானாலும் சந்திரகுடும்பம் சுபட்சேத்திரமாகி சுபபெலமானாலும் களத்திர மூலியதன முடையவல்லபனாவன் யென்றும் இதில் ஓர்பாவர் கூடினும் நோக்கினும் களத்திரதனமழிந்தும் அக்கிருத்தியனாவனென்றும் தனதானியக் குறைவு பின்னஷ்ட மடைவனென்றும் சனிமுதலிய சரவிராசி சொக்ஷேத்திரய உச்சகேந்திரமாகிப் பகைநீசர் உச்சனாகிய சுக்கிரனைப்பார்த்தாலும் தனமானது பலவகை நஷ்டமும் மருதார முண்டென்று இருவிதபாபபெலத்துடையவர்களாகினும் சுபர்கள் இருவர்கூடினாலும் தனித்து ஒருவனைப் பாபபெலத்துடன் பகைநீசமல்லதும் பாவனாயிருந்தாலும் தாரமிரண்டென்றும் அவ்விததாரவகை நஷ்டமும் ஓர் சுபர்பாவியாகில் மனைவியின் ஞேஷமும் பலவராகின்

தாரமிரண்டுக்கு மேலுண்டென்றும் பலசுபர்கள் பாவராகினும்இரண்டுக்கு மேற்பட்ட தாரனென்றும் அவ்வித தாரவியோகத்தால் பலவகை வருத்தங்க ளுண்டாகுமென்றும் மனக்கவலைகளும் குடும்பமூலிய வருத்தமும் உண்டென்றும்.

மேற்கூறிய ஐவர்களாவது ஐவரில் மூன்றுபெயர்களாவது தன் சுட்சேத்திரமானதிலும் தனக்குரிய சுபபெலத்துடனிருக்கில் யெவ்வளவு பெயரைக்கூடினாலும் தாரமொன்றென்றும் பகை நீசபாபசம்மந்தத்தோருகின் தாரத்வயாதியென்றும் பாவர்களுடன்கூடி கேந்திரகோணமில்லாமல் இருக்கினும் அவர் பாவக்ஷேத்திர கெதர்களாகி தனக்குரிய அசுப பெலத்துடன் ஒருவரைக்கூடினாலும் தாரத்வயமென்றும் அவர்களுடன் சுபர்கள் கூடினாலும் தாரதுவயமென்றும் மேற்கூறிய இடங்களில் சுபசம்மந்தராகினும் ஸ்தானதிபதியும் பெலத்துடனிருக்கில் தாரம்பலவகையில் மனைவி யொன்றே வழிவிருத்தியடைவளென்றும் மேலேசொல்லிய ஸ்தானங்களில் தாரமூலியவத்தினால் குடும்பவிரோதமும் பாபர்களானவர்கள் தனக்குப் பெலன்னதிகமான இடத்தில் இருந்து சுபரைக்கூடினால் மிரெண்டு முதலிய தாரமும் பாவரைக்கூடினால் தாரமொன்றும் பாபர்களுடன் பாபக்ஷேத்திர பெலமற்று மறைவுமுதலிய ௰௧-௩-௨-௰௨-௮-௬-இவைகளிலிருக்கில் தாரநாசனாகியும் இவருடன் சுபர்கூடிப் பெலத்துடனும் சுபர்நோக்கினாலும் தாரமொன்றென்றும் அரியவேண்டியதுசுக்கிரன் முதலிய ஐவருவதுமூவராவது தனக்குரியசுபட்சேத்திர பெலத்துடன்துலாம் தனுசு கும்பம் இவைகளிருக்கினும் பெலமுற்று சுபரைக்கூடினாலும் தாரமொன்று இதில் பாவர் கூடியல்லதுநோக்கி முன்னவர்களுக்கு பெலமற்ற பகை நீசட்சேத்திரமாகில் கூடிய கிரகபெல சங்கைப்படி தாரமிரண்டுக்கு மேற்சொல்லவேண்டுமென்றும்.

மூவருக்குக் குறைந்தவர்களிந்த இராசியிலும் மற்றய மூவரோ நால்வரோ பகை நீசபாபபெலத்துடன் பாவரைக்கூடியல்லது பார்க்கினும் தாரமிரண்டு முதலியவகையென்றும் இவர்கள் அபபெல சுபட்சேத்திரமானால் தாரமொன்றென்றும்.

மேற்கூறிய ஐவர் மூவர் மீனம் விருஷபம் மிதுனம் கடகம் இவைகளிலிருந்து தனக்குரிய சுபபெலட்சேத்திர பெலத்துடன் அதிககிரகமிருக்கினும் ஒருவர்க்கொருவர் பெலசமமென்றாகில் தாரம்ஒன்றென்றும் பாபபெல சமமென்றாகிப் பகை நீசாதிபலபாவரைக் கூடினாலும் பார்த்தா

லும் தாரமிரண்டுக்கு மேல் யென்றும் ஸ்தானாதிபதியோர் பகை க்ஷேத்திர கெதி பெலமற்று சுபர் திருஷ்டி இல்லாமல் சனி மேஷம் விருச்சிகம் கடகம் இவைகளிலிருக்கினுந் தாரமிருன் யென்றும் விவாகமே இல்லை யென்றும் இதில் ஓர் சுபர்சேரவாவது பார்த்தாலும் தனக்கிணைபாவர் பெலத்துடனிருக்கில் தாரமிரண்டுமுதலியவகையென்றும் தாரதேகவரிஷ்டமும் புத்திரவரிஷ்டமும் கொடுக்கப்படுமென்றும்.

சிம்மம் கன்னி விருச்சிகம் மகரம் மேஷமிவைகளில் மேற்கூறிய ஐவர் அல்லது மூவர் பெலத்துடன் தனக்குரிய சுபக்ஷேத்திர கெதியாகியும் பெலத்துடன் இருக்கினும் பாவரை கூடினாலும் தார மொன்றென்றும் சுபபெலனதிகமானல் மனையாளதிக ரூபலாவண்ய முடைவளாகிதன விருத்தி சுகியாகியும் பாபபெலமதிகமாகினும் இவர்கள் பாவராய்வலுத்து நின்றாலும் மிகவும் பிரபலமும் குடும்ப சுக சௌக்கியங்களும் மிக்கவனு கூலபெலமுஞ் சுகத்தையும் அடையப்படும்யென்றுங் ஆனல்மத்தியகாலந் தனவிருத்தி இல்லாமல் பலவகை கஷ்டநஷ்டமும் மனதுக்குவருத்தமும் உண்டாகுமென்றும் யென்றும் இதில் சுபபெலனின்றி மேற்சொல்லிய ஐவரில்மூவராவது பெலமற்றுபகைநீசமானாலும் பகைநீசக்ஷேத்திரவாசனானாலும் பாவருடனிருக்கினும் தார மிரண்டுமுதல் பகுதாரனென்றும் அவ்வகை ஓர் தாரவகையால் விரோத வருத்தக்குரைவுகளையும் அடையப்படுமென்றும் மேன்பாடுகளும் அற்பமாகுமென்றும் பலவகை வருத்தங்களையுங் கொடுக்கப்படுமென்றும் மனக்கவலைகளும் சத்துரு விவாதமும் குடும்ப விருத்திகுறைவுகளடையப்படும் யென்றும் சுப க்ஷேத்திர சுபத்துவமும் பாவருடனுங் கூடினாலும் முன் தாரமரணமும் பின் மனைவிகிடைக்கப் படமாட்டதென்றும் மேற்கூறிய ஐவரல்லது மூவருடன் சனி பாம்பு கூடினாலும் குசன் பெலத்துடன் கூடினாலும் தாரமிரெண்டென்றும் முன் சொல்லியவர்கள் பாபனும் கூடியவர்களும் பாவரானாலும் தாரமிரெண்டுக்கு மேற்பட்ட தாரமென்றும் அதற்கு இயல்பாக ஸ்தானமும் குசன் சனி ரவி வீடாகியும் மல்லது சுபராகில் சுபருக்கு பகைநீச வீடாகவும் சேர்ந்தால் தாரமிரெண்டும் பெலனுக்கிசைந்தபடி உ-க்குமேலுந்தார யோகமென்றும்

ரவி சனி இருவர்கள் மேற்க்கண்ட ஐவரல்லது ந-பெயரைக் கூடினாலும் அல்லது சுபர்களாய்க்கூடினும் தனக்கு விரோதிகளாகக் கூடினாலும் பார்த்தாலும் கூடியகிரகபெலனுக்குரிய உ-முத

லிய தாரனென்றும் பாபனானாலும் சுபரானாலுந் தனக்குரிய சவுமிய ரூகி பெலத்துடனிருக்கினும் நோக்கினும் மேற்கண்ட மூவர் அல்லது ஐவர் தனித்து தனக்குரிய சுப க்ஷேத்திர சுப பெலத்துடனிருக்கில் தாரமொன்றே குணரூபவதியாய் உயர்குலமாகுவள் என்றும் இதில் சனி பாவனாய் சேரில் விபசார ஸ்திரீயாவளென்றும் பாம்பு கூடினாலும் பாவராசியானாலும் விபசார ஸ்திரீயென்றும் சுபதிருஷ்டி பார்க்கில் ஆசார ஹீனமும் அல்ப ஒழுக்கமானவளென்றும் கண்டரிய வேண்டியது குசன்முதலிய பெலன் அஷ்டமகரும கதிவசாதானால் நெருப்புமுதலிய விரண நோயால் மனைவி இறப்பள் ரவியாகில் ஆயுதம் தற்கொலையாவள் இராகு கேதுவானால் சூலை மரணம் விஷமரணமாவள் சந்திரன்முதலிய புதனானால் மிருகத்தினாலிரப்பள் சுக்கிரனால் செலத்தாலிரப்பாளென்றும் குருமுதலிய சவுமியக் கிரகமானால் வியாதியால் மரணமாவளென்றும் அரியவேண்டும்.

களத்திர கெணித பாவங்கள்.

சுக்கிரனுடனும் மேஷத்திலும் குசனுடனும் குசனுக்கு சப்தமாதிபனின்ற இராசிநாதனுடனும்சுக்கிர சப்தமாதிபனின்ற இராசிநாதனுடனும் கூடிய சுபாசுப யெண்களின்படி தனித்தனி இராசியெண்ணாற் பெருக்கி கூட்டிகொண்டு சுக்கிர சத்தமாதிய நின்ற இராசிநாதன் பெலனுக்குரிய யெண்ணில் கொடுத்த சேஷம் தார விவாகமுடையவன் சுப பாபபெலத்துக்குரிய யெண்களை விவாகம் காந்திருவம் பைசாசம் முதலிய ஏழுவகை விவாகங்களையுங் கண்டு கூறவேண்டியது.

மேற் பெருக்கிகொண்ட மொத்தத் தொகையை கூ-ல் கழித்த சேஷமும் ஈவை௩டு-ல் பெருக்கி கூ-ல் கழித்தசேஷமும் திசாபுக்தியில் விவாகம் பின்தாரம் பார்க்கவேண்டுமானால் குசனுக்கு பதினோராமிடத்தாதிபதி நின்ற இராசினாதனுடன் கூடிய யெண்ணை அந்த இராசியெண்ணாற் பெருக்கியும் முன்பெருக்கிக் கூட்டியமொத்தத் தொகையுடன் சேர்த்து கூ-ல் முன்போலவே கொடுத்துக் கண்ட சேடம் பின்தார விவாகமும் சுக்கிரன் குசனுக்கு அஷ்டமாதிபனின்ற ஸ்தானாதிபதி இருந்த இராசிநாதனுடன் கூடிய கிரக பெலாபெல யெண்களின்படிக்கி கொடுத்து மேலே பெருக்கிய தொகையுடன் கூட்டி முன்போலவே கூ-ல் கழித்த சேஷம் திசாபுக்தியில் களத்திர மாரகமென்றுங் கண்டரியவேண்டியது.

பிதுர்பாக்கியாதியும் உபதேசாதி பலன்களறியவும்.

ரவியையும் புதனையும் புதனுக்கு கூ-மிடத்ததிபதி நின்ற இராசி நாத நின்ற ஸ்தானாதிபதியையும் சனி ரவிக்கு கூ-மிடத்ததிபதி நின்ற இராசிநாத நின்ற ஸ்தானாதிபதியையும் மிதுனத்தையும் பார்த்து பிதுர்பாக்கியமுதலிய பலன்கள் கூறப்படுமென்றுமறியவேண்டியது.

மேற்கூறிய ஆறு பெலகிரகங்களும் தனக்குரிய பெலத்துடன் கேந்திரகோண கெதருகியும் சுக்ஷேத்திர உச்ச நட்புகளிலும் சுபசம் மந்தத்துடன் பெலத்து நிற்கினும் நோக்கினும் ஹிதர பாபபெலத் துடன் கூடவல்லது பார்க்காமலும் குசன் புதன் பிரபலத்துடனி ருக்கினும் பிதுரார்ச்சிதம் யேராளமான விருத்தியுடன் அதிகயோக பிறபலமாகி வாழ்ந்தும் பிதுர் விருத்தாவஸ்தைவறை பிதுர்பெல வானாகியும் மிக்க குடும்ப விருத்தியுடன் தருமதயா பிரபலவானாகி சத்மந்திரத்தியானியாவன் இதில் ரவி சனி புதவசாத் கூறிய கிரகங் கள் பெலமற்று மற்றப்பெயர்கள் பெலத்துடனிருக்கில் பிதாபாலிய மரணமாய் விடுவன்யென்றும் சத்விஷயதருமமும் மிகவும்யோகவா னவனென்றும் பிதுரார்ச்சித தனமுடையவனவனென்றும் மற்றய மூவர் பெலமற்றும் இரவி முதலான மூவர்பெலத்துட னிருக்கில் பிதுர் விருத்தியுடனும் வம்சவிருத்தியுடனும் இருந்தபோதிலும் பிதுர்பாக்கியம் தனம் யோகம் உபதேசாதி தருமமிவைகள் ஒன்று மின்றி யடைவனென்றும் இவர்களுடன் யெந்த வகுப்பின் ஓர்சுபர் பெலத்துடன் கூடினாலும் இரெண்டு சுபர் மத்திம பெலவானானாலும் அவ்வகைக்கு சமவிருத்தியும் மத்திமாயுளில் பிதுர்கருமமும் செய்வ னென்றும் அவ்வித பாவங்கள் சம விருத்தியடையுமென்றும் கண் டறியவேண்டியது.

ஸ்தானாதிபத்திய மூலமான ஜீவகிரகமும் தேககிரகமான கடைசியா திபநின்ற ஸ்தானாதிபனும் இருவரும் சுபட்க்ஷேத்திர சுபபெலஸ்தர்க ளாகி மேன்மையுடன் சுபபெலன் பெற்றுமிருக்கில் பிதுர்ஆயுள்விருத்தா வஸ்தையில் மரணமும் குடும்ப அபிவிருத்தி தனதானியாதி குடும்பவிருத் தியுண்டென்றும் அவ்வித மூலிய சுகசௌக்கிய பிரபலமுண்டென்றும் மேலான மேன்பாடுகளும் அதிக சுகசௌக்கிய வெற்றிகளும் உண்டாகு மென்றும் கூறப்படும் இதில் சுப பெலக்காருடன் பாவர்கூடினால் கௌ மாரத்தில் மரணமானது பிதாவுக்குண்டாகு மென்றும் அதிபதிகள் பாவ ராகி அந்தஸ்தானமல்லது கிரகங்களுடன் கூடினால் யௌவனம் பிதுர்

மரணமும் பாபிகள் பெலமற்றும் சுபர்கள் பாபிகளாகியும் பெலமற்றுமிருக்கில் பாலியத்திலேயே பிதுர் மரணமும் பிதுர்வம்சசொத்து விருத்தி இல்லாமலும் குடும்ப க்ஷயத்துடனும் பலவாறான துக்கமடைவனென்றும் பாபக்ஷேத்திர கெதியில் பாபபெலத்துடன் இருக்கில் பிதுர்பாலிய மரணமும் பலவகை குடும்ப துக்கங்களையும் அனுபவிக்கப்படுமென்றும் மனதுக்கு வருத்தமும் உண்டாகுமென்றுங் கண்டறியவேண்டியது.

ஸ்தான விவரணத்தின்பேரில் கூறப்படும்.

சூரியன் விருஷபம் மிதுனம் துலாம் இவைகளிலும் மீனத்திலும் புதனைக்கூடினும் கூடாமல் தனித்தாலும் பகை முதலிய பாவரைக்கூடியும் புதன் பெலமற்ற மறைவிடங்களில் நீசமுதலிய அபெலத்துடனிருக்கினும் ரவியை சனி முதலிய பாபிகள் கூடினாலும் ரவி புதவசாத் ௯-மிடத்ததிபதிநின்ற இராசிநாதன் பாபக்ஷேத்திர கெதனானாலும் பிதா செனித்த பிரசைக்குத் தெரியாமல் மரணமாவன் இதில் ஓர் சுபர்கூடிப்பாபர் பகை மத்திபனானாலும் ரவி முதலியோர் பாபக்ஷேத்திரகெதமடைந்தாலும் பாலியத்திலேயே பிதா மரணமாவன் சனி குசக்ஷேத்திரத்தில் ரவி புதன் இருந்து பகைநீசக்கோளுடன் சுபர்பார்வையற்றும் இருக்கில் பிதாபாலிய மரணமாவன் ரவி முதலியவர் நட்பாட்சி உச்சக்ஷேத்திரமானாலும் சனி குசனைக்கூடியும் மிதுனம் கும்பம் மேஷமிவையில் பாவரிருந்தும் ரவிக்கி இரண்டுபக்கம் பாவிகள் சஞ்சரித்தால் பிதாபாலியத்திலேயே மரணமாவன் ரவி முதலியோர் பெலத்து ரவி சனி புதவசாத் ௯-மிடத்ததிபதி நின்ற இராசிநாதர்கள் பகை நீசாதி அபலராகி பலபாவர் மத்தியல்லது கூடினாலும் பாலியத்திலேயே மரணமென்றும் இவர்கள் ஓர் சுபருடன் பெலத்தும் ரவி புதன் மூலியத்தோர் பெலத்து சுபக்ஷேத்திர கெதியில் பாபிகள் கூடினாலும் பார்த்தாலும் பிதாயௌவனத்தில் மரணமும் மேற்கூறிய ௯-பேரில் இருவரும் பெலத்து ௨-பேர்களைச் சுபர் கூடி பகை நீசமானாலும் யௌவனத்தில் பிதுர்மரணமும் ௩-பெயர் பெலத்து மூவர்பெலமற்றாலும் கவுமாரத்தில் பிதுர்மரணமும் ௨-முதலான கிரகம் வலுத்துநிற்கில் வார்த்திகத்தில் பிதுர்மரணமும் பாவருடன்கூடி பாபபெலனதிகமானால் பாலிய மரணமும் சனி குசன் புதன் முதலியோர் மூன்றதிகாரத்துக்கு மேற்பட்டு பகை நீசமல்லது பாவரைக்கூடினால் பிதுர்கரும மிவன்கையாற் செய்யானென்றும் அறியப்படும்.

மேஷம் கடகம் சிம்மம் விருச்சிகம் இவைகளில் சூரியன் முதலிய சனி இவரிருந்தும் தனக்குறிய ஸ்தானாதிபதிகளும் பெலத்துடன் சுப

பெல சம்மந்தனுகியும் புதன் ரவியைக்கூடினும் விருத்தாவஸ்தையில் பிதுர் மரணமும் இதில் பாபரதிகமும் ஆறுபெயர்களில் மூவர் பெலத்துடனும் இருக்கில் கௌமாரத்தில் பிதுர் மரணமும் பிதுர்சொத்து விருத்தியும் இதில் ரவி புதன் சனி இவர் பகை நீசவதிக பாபபெலத்துடனிருக்கில் பாலியம் பிதுர்மரணமென்றும் இதில் ஓர் குரு முதலியோருடன் சந்திரன் சுபக்ஷேத்திர கெதகேந்திரத்தி லிவர்களிருக்கினும் இந்தவீட்டதிபன் பெலத்துநிற்கில் விருத்தாவஸ்தையில் பிதுர் கருமமென்றும் குடும்ப க்ஷயமுண்டென்றும் மேலேகூறிய ஆறுபெயரில் இருவர் முதலியர் மேற்படி இராசிகளில் பெலமற்று பகை பாவரைக்கூடில் பாலியம் பிதுர் மரணமும் இருவர்பெலத்தும் நால்வர் மேற்படி இராசிகளில் பகை நீசகெதருகி அசுபபெலத்துட னிருந்தாலும் பாலியமரணம் பிதாவுக்கு யென்றும்.

மூன்றுபெயர் சுபபெலத்துடன் வலுத்தும் ரவி முதலியோர் பகை நீசமானுலும் யௌவனத்தில் பிதுர்கருமமும் மூவருடன் பாவர்களேபாப பெலத்துடனும் ரவிமுதலியோர் பெலமற்ற இடத்திலும் இருக்கில் பாலியம் பிதுர்கருமமும் மூவர்கள் தனித்தனி யல்லது மேற்கூறிய இடத்தில் இருக்கினும் சுபபெலனும் மற்றமூவர் சுபபெலத்துட னிருக்கில் பிதுர் கௌமாரவயதில் பிதுர்மரணமும் உண்டாகுமென்றும் நான்குவகையோர் முதல் யெவ்வளவு பெயர் வலுக்கினும் சுபரைக்கூடி சுபக்ஷேத்திர கெதியுடன் ரவிமுதலியோர் தனக்குறிய சுபக்ஷேத்திரமிருந்தாலும் சுபர்பார்த்தாலும் பிதாவிருத்தாவஸ்தையில் மரணமும் புதன் மிதுன மிவை வசாத் மேலேகண்ட ஆறுபெயரில் மூவர் முதலாகபெலத்து நிற்கின்பிதுர் குடும்பவிருததி பிதுர்பாக்கியாதி பிரபல செல்வவானுவன் என்றும் அதிக கீர்த்தி மூர்த்தி புகழ்ச்சிகளு மிகவும் பிரபலத்துடன் வாழ்வார்கள் யென்றும் அதிகயோகவானுவன் இருவர்பெலங் குறைந்தும் புதன் மிதுனம் பாபசம்மந்த பெலமற்றிருக்கில் பிதுர் தனுதி விருத்தியில்லாமலும் தரித்திரனுவனென்றும் பாபகருமியாவன் என்றும் கண்டறியவேண்டியது.

கன்னி தனுசு மகரம் கும்பம் இவைகளில் ரவி முதலிய புதன் சனி இவர்கள் பெலத்துடன் சந்திரசுபகேந்திர வீக்ஷணியர்களாகி தனக்குறிய க்ஷேத்திரவாசனுகியும் ஆறுபெயர்களில் மூன்று முதலிய மேற்படி இராசிகளில் தனக்குறிய சுபபெலத்துடனிருக்கினும் குரு சம்மந்த நோக்கமானுலும் பிதா விருத்தாவஸ்தையில் மரணமும் பிதுர்பாக்கிய பிறபல சுகவந்தனுகியும் பிதாவுக்குப்பின் செல்வமில்லாமலும் அடைவன் யென்றும்

இதில் மூவர் பெலத்தும் சனி ரவி புதன் இவர்களில் இருவர் பெலமற்ற மறை பகை நீசபாவசம்மந்தராகி இருக்கினும் பிதாபாலிய மரணமும் பிதுர் சொத்து விருத்தியுள்ளவனுகியும் நான்கு முதலியோர் பெலத்தும் மேற்படி ராசி கெதராகி ரவி புதன் சனி முதலியர் பாவக்ஷேத்திரம் பாபி களைக் கூடினுலும் பிதாகௌமாரவயதில் மரணமும் பிதுர்வம்சக்ஷயமும் தனமல்பவானென்றும் சனி ரவி புதன் முதலியோர் பெலத்தும் மூன்று முதலியோர் பெலமற்று இருக்கில் பிதா யெவ்வன மரணமும் மூன்றுமுத லியோர் பாபபெலத்துடன் பாவிகளைக்கூடி சத்துரு நீசபகையோருனுலும் சனி புதன் பெலமற்றும் சுபசம்மந்த திருஷ்டி இல்லாமலிருக்கில் பிதா ஜெனன புத்திரன் புத்திபூர்வத்துக்கு முன் மரணமென்றும் கெற்பமர ணத்தையும் அடையப்படுவனென்றும் மேற்கண்ட அறுவர்களில் மூன்று முதலியோர் துலாம் தனுசு மகறம் மீனம் விருஷபம் மிதுனம் சிம்மம் இவைகளில் சுக்கிரன் முதலிய சந்திரனைக்கூடி யல்லது பார்த்தாலும் பாவ ராசி திரிகோணத்தில் பாவசம்மந்தனுனுலும் உபயம் சரமிவ்வித இராசிக ளில்பெலமுற்று பாவரைக்கூடினுலும் பிதா மருதாரசம் யோகவானுகி வாழ்வனென்றுங் கண்டறிவேண்டியது.

மேற்கண்ட ஸ்தானங்களில் குருசுக்கிரன் ரவிமுதலியோர்களில் இரு வர் பெலமற்றும் பகைநீசக்கோளுடனிருக்கில் சு-பெபரில் உ-முதலிய பெயரை பாவர்கூடியவர்களுக்கு பத்தாமிடத்ததிபதி நின்ற இராசிநாதன் பாபக்ஷேத்திர நெதியுடன் சுபர்திருஷ்டி இல்லாமல் பாவர் திருஷ்டி யல் லது கூடினுலும் பிதா அனுசாரனுகி சாதிப்ருஷ்டனுகி தனத்தை இழந்து குடும்பமிழந்து பரதேசவாசனுவனென்றுங் காணவேண்டியது.

பிதுர்பாவ கெணித பாவங்களின் றிசாகாலங்கள்.

மேற்கூறிய அறுவகைக் கிரகத்தினுடன் கூடிய கிரக சுபாசுபத்திற் கிசைய கிரக யெண்களை இராசியெண்ணுற்பெருக்கிய தொகையுடன் புதன் ரவிக்கு யெட்டாமதிபதி நின்ற இராசிநாதன் யெண்ணையும் யிராசி யெண் ணையும் பெருக்கி ஒன்ருகச் சேர்த்து டு-ல் வகுத்தசேஷம் சவ்பாபசவ்ய ரீதியாய் வரும் அவஸ்தையுள்ள வயதுகாலத்திலும் மேற்பெருக்கிவைத்த தொகையை கூ-ல் கழித்த சேஷம் திசையிலும் வந்தாவை டு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷம் புக்தியிலும் பிதுர்கருமம விதியுறைத்தல் வேண்டும் இவைகளையெல்லாம் சவ்யாபசவ்ய விதிப்படிக்கு அறிந்துகூறுவதுயென்று சொல்லப்படும்.

கருமமிராச்சிய முதலிய பாவபலன்கள்.

சந்திரனையும் குருவையும் கடகத்தையும் சந்திரனுக்கு தசமாதிப நின்ற ஸ்தானாதிபதி நின்ற இராசிநாதனையும் குருவுக்கு தசமாதிபதிநின்ற ஸ்தானாதிபதி நின்ற இராசினாதனையும் இவ்வைந்து பேர்களின் பெலா பெலன்களைக்கண்டு சொல்லவேண்டியது.

சந்திரன் பூர்ணபலவானாகி கேந்திரகோண உச்சனாகியும் சுபட்சேத்திரத்திலாவது பெலத்தும் அவர் கேந்திரத்தில் குருவும் ஐவகையான பெலத்தோர்களும் தனக்குரிய பெலவானாகியும் மூவருக்குமேற்பட்ட பெலத்துடன் இருக்கினும் அவர்கள் நின்ற ஸ்தானாதிபதி பாபனாகினும் அவர்களுக்குரிய சுபக்ஷேத்திரகதியுடன் வலுத்தும் இருக்கினும் சாதகனுக்கு கடகம் மீனம் கன்னி இவைகளில் குருவிருந்தும் பெலத்துஇருக்கில் ஜாதகன் இராச்சியாதிபனாகியும் குருபெலந்து சுட்சேத்திர உச்சத்திலிருக்கினும் சாதகனுக்கு விசேஷ சத்விஷயகருமனா மாவன் அமரபக்ஷ சந்திரனாகி பத்தில் பாம்பு முதலிய பாவரைக்கூடி நிற்கில் சத்கருமமில்லாதவனாகியும் பலவித துஷ்டகருமவானாகியும் இராசாதிபனாகி வாழ்வன் என்றும்.

சந்திரன் குரு சுக்கிரன் முதலியோர் பெலத்தும் சுட்சேத்திர உச்சாதி நால்வகைப் பெலத்துடன் கேந்திரஸ்திதியுடனும் பாபட்சேத்திர பாபசம்மந்த திருஷ்டி இன்றியும் இருக்கினும் முன்கூறிய ஐவகைப் பெலக் கிரகத்தில் ௩-முதலிய கிரகம் பெலவான்களாகில் இராசாதிபனாகுவன் யென்றும் மிகவுமேலானோனாகுவன் இதில் ஓர் கிரகம் பகையுடன் அல்லது ஒருவருக்கொருவர் விரோதியாகிக் கூடினாலும் தனக்கு ௬-௮-௧௨-ல் பகைபாவர் இருக்கினும் பொருந்திக்கையில்லாமலும் அவர்களிருபக்கங்களில் பாவரிருக்கினு எவ்வளவு அரசபூபதியானாலும் அவனுக்கு பூபதித்துவமின்றியும் அவ்விதமிருக்கினும் ரெணக்கிருஸ்தனாகி பூமியை யிழந்துவிடுவர் யென்றும் பலகஷ்டங்களை யனுபவிப்பன் மேற்கூறிய ஐவரில் மூன்று முதலியோறை ஒவ்வொருவரும் மூன்றுவகைப் பெலனுக்கதிகனாகியும் இருந்தும் கடகம் மகரமிவைகளில் சுக்கிரன் அல்லது புதன் ரவி இருந்தும் பெலத்தும் குருபெலத்துடனிருக்குமாகில் ஜாதகன் சிலபூமி கிராமாதிபனாகி வாழ்வனென்றும் மிக்கவனுகூலமும் பிறபலவானாய் வாழ்வன் யென்றும் இதில் ஓர்வகைப்பாவருடனும் பகையுடனுங் கூடினாலும் சாதகனுக்கு சில கிராமாதிபதியாகி வாழ்வன் இரு

வகைப்பாவருடன் அல்லது இருவகைப் பாவபெலத்துடனிருக்கின் அல்ப பூமியாதிபனாகி வாழ்வன் யென்றும்.

கடகம்முதலிய இடத்தில் சனி குசன் பாம்பு இவர்களிலெவரேனும் பகை நீசக்கோளாகி இருந்தால் மேற்கூறிய ஐவகைப்பெயர்கள் பெலமற்றும் மல்லது பாபக்ஷேத்திரம் பாவமத்தியகதியானாலும் பூமிமுதலிய ஆதிபதியில்லாமல் வாழ்வன்யென்றும் பாபபெலத்துடன் இருந்தும் முன்கூறியவர்கள் பகைநீச நட்புமாகி பாபக்ஷேத்திரகதியுடன் இருக்குமாகினும் சந்திரன் குரு நீசம் பகைகளில் பாபமத்தியகதனானாலும் பூமிமுதலிய ஆதிபத்தியமின்றி அசத்கருமவானாகியும் வாழ்வன்யென்றும் மனக்கவலையடைந்து வரப்படுவனென்றும் குருசந்திரனுடன் கூடி துலாம் கன்னி கும்பம் மேஷம் விருஷபம் கடகமிவைகளில்லாவது சிம்மம் இவையிலாவது சுக்கிரன் புதன்முதலியவர்களைக் கூடி அவரவற்களுக்கேற்ற சுபபெல ஸ்தானமாகில் கிருமாதி பூமியதிபனும் பிறபலவானாகியுங் கீர்த்தி சத்கரும வானாவான்.

ரவி சனி குசன்முதலியோருடன் சந்திரன் அவர்களுக்கு பிரதிக்கி பித்தியாதி ஸ்தானாதிபன் இவர்கள் விருச்சிகம் தனுசு மகரம் மேஷம் மிதுனம் சிம்மம் இவைகளில் பெலத்தும் தங்களுக்கு உரித்தான ஸ்தானங்களிலிருக்கில் சாதகன் மிக பூமிமுதலிய கிரகவாகன பிறபல முடையவனென்றும் சுபர்களில் விடங்களினும் சந்திரன் முதலிய ஐவகை பெலத்தாரர்களில் ௨-க்கு மேற்கொண்டவர்கள் பாபத்துவத்தை யடைந்திருந்தாலும் குசன் சனி முதலியோர் கடகம் சிம்மம் விருச்சிகம் விருஷபம் இவைகளில் சந்திரன் குசன்முதலானவருடன் பாப க்ஷேத்திரம் பகை இடமாகினும் சாதகனுக்குப் பலவித வருத்தமும் மனதுக்குக் கவலை கருமக்குறைவு தனதானிய நஷ்டமும் பூமிமுதலியவகைகள் விருத்தி இல்லாமலும் வருந்தமடைவனென்றும் குடும்பசோகமும் இவர்களுடன் ஓர் சுபர்கள் பெலத்து நிற்கினும் குசன் சந்திரன் முதலானவர்கள் பகைநீச சத்துரு சம்மந்தமானாலும் அந்த இடத்ததிபன் சுபக்ஷேத்திர கெதியல்லது சுபருடன்கூடி நோக்கமாவது அடைந் திருந்தாலும் பெலங்கினும் சாதகனுக்கு பூமிகிரகவாகனாதி சமயோகவானாகியும் அவை சவ்யமானால் பூர்வ வயதில் பூமிமுதலிய செல்வமிருந்து க்ஷயமும் அபசவ்யமானால் முன்னில்லாமல் பின் காலத்தில் பூமிமுதலிய செல்வமும் சவ்யாப சவ்யமானால் பூர்வ வயதில் உத்

திர பாகத்தில் செல்வமான பூமிமுதலிய ஆதிபத்தியமும் அபசவ்ய சவ்யமானால் உத்தர வயதில் பூர்வபாகத்தில் தனாதி பூமி விருத்தி யுடையவனாவன் யென்றும் சுபர்களானவர்களுடன் சந்திரன்முத லிய இருவகைக்கி மேற்பட்டவர்கள் அவரவர்களுக்குரிய ஸ்தானம் நட்புமுதலிய இடத்தில் இருக்கினும் மறைவாகியதும் பகை நீசமில் லாத பாப க்ஷேத்திரமில்லாமலு மிருக்கில் சாதகனுக்குப் பலவகைப் பூமியாற் சிதயோகவானாவனென்றுங் கீர்த்தி மூர்த்திகளும் மறைவிட மானதில் சுபருடனும் மற்றைய இடத்தில் சுபருடன் பாவரும் பகைநீசாதி அதில் பெலமில்லாத பாவரானாலும் சத்துரு கிரகசம பெலனானாலும் சாதகனுக்கு பூமிமுதலிய ஸ்திதியிருக்கினும் விருத்தி யின்றி அடைவனென்றும் பலவகை வருத்தமும் மனதுக்குக் கவலை களும் பலவகை நஷ்டமுண்டாகுமென்றும் அரியவும்.

ஐவர்களுடைய பெலன்களுக்குரியவர்களுடன் இருவர்களுக்கு மேற்பட்ட பெலத்துடன் கேந்திர கோணமானதிலும் தனக்குரிய பகை பாப க்ஷேத்திரமில்லாமலும் சுக்கிரன் குரு சந்திரன் ரவிமுதலி யோருடைய ஸ்தானங்களாகி பெலத்துடனிருக்கினும் அல்லது புதன் இராசியில் பெலத்துடனிருக்கினும் இராசத்துவம்போலொற்ற பூமிமுதலிய மேன்பாடுடன் மேலான வதிகாரபெலத்துடன் அரிய வேண்டியது.

சீவன பலன்.

சனியுமக்கிரகம் நின்ற பத்தாமதிபதி நிற்கும் ஸ்தானாதிபதியும் குரு சந்திரன் சந்திரனுக்குத் தசமாதிபதி நின்ற ஸ்தானாதிபதி யையுங் கொண்டு சீவனஞ் சொல்லவேண்டியது இவ்வைந்துபேர் களில் இரெண்டுக்கு மேற்பட்ட கிரகங்களானவர்கள் கடகம் சிம்மம் அல்லது சூரிய சந்திரனுடனாவது சனி புதன் வீட்டில் நிற்கினும் பெலத்துடனாகினும் சூரிய சந்திரனில் ஒருவர் பெலத்துடன் கூடினா லும் சாதகனுக்கு ராசவதிகார சீவனமுள்ளவன் சூரிய சந்திரன் கேந்திரகோண பெலத்துடனும் குருமுதலிய கேந்திரம் பகைநீச பாபக்ஷேத்திர கதிகளில்லாமல் பார்தாலும் சீவனமானது இராசாக் கள் மூலியத்தாலுண்டாகும் குருமுதலியோர் சூரியசந்திர னிவர் களுக்கு தசமாதிபதி நின்ற ஸ்தானாதிபதிகள் தனக்குரிய குரு சூரி யன் சந்திரனுடனல்லது இவர்களின் வீட்டிநிற்கினும் பெலவானா னாலும் அரச சீவனமுள்ளவன்.

இதில் சந்திரன் முதலியோர் பெலத்துங் தனக்குரிய சுபக்ஷேத்திர கெதியுட னிருக்கினும் இராசசீவனமுடையவனென்றும் இதில் குருமுதலியோர் வலுத்து நிற்கினும் சுக்கிரன் புதன் அல்லது ரவி சனி புதன் இவரைக்கூடினுலும்விவகாறவித்தையால்சீவனஞ்செய்து அரசனவன்.

குருவாகிப் பெலவானுனல் வேதாதிசாஸ்திர சீவனமும் சுக்கிரனுகில் லக்ஷண்யஞாதி ஸ்திரீதன சீவனமும் சந்திரன் ரவியானல் இராசவதிகாறமும் இவர்கள் பகைநட்பு நீசமுனல் அடிமைத்தொழிலும் குரு ஷேயாக விருந்தாலும் அடிமைத்தொழிலும் புதனுகில் கணிதாதி பண்டிதமும் புதனுடன் சந்திரனல்லது சுக்கிரனுனலும் துலாம் கன்னி மகரத்திலிருக்கினும் வியாபார சீவனமும்.

குசனுகில் அடிமையும் குசன் பெலவானுகிக்கூடி நிற்கில் பூமி சீவனலாபமுண்டென்றும் அறியப்படும் சனி பாம்பு ஆகில் க்ஷத்திருதி பலஹீனத்தொழிலாவனென்றும் இதில் இந்த கிரகங்களானது தனக்குரிய சுக்ஷேத்திர உச்ச கேந்திரமாகினும் அவையானஇடம் சந்திரன் சனி குரு இருப்பது கடகம் சிம்மம் கன்னி தனுசுகும்பம் மீனம் விருஷபமாகில் தானொரு பிறபு அதிகாரியாகி எவருக்கும் கீழ்ப் படியாமல சீவனஞ் செய்வன் இதில் மற்றுப விராசிகளாகிய மேஷம் மிதுனம் விருச்சிகம் துலாம் இவையாகில் ஒருவன் கீழ் அரசவதிகார சீவனமுண்டென்றும் இதனுள்ளேயே பகை நீசமானுலும் மற்றய இராசியாகிய மகரம் விருச்சிகம் மேஷம் தனுசுவிலும் பாவரல்லது சுபர் பாவரானுலும் சந்திரன் சனி இருவருக்கும் மிரண்டுபக்கம் அல்லது கூடப்பாம்பு முதலிய பாவர்கள் பகைக்கோள் கூடினுலும் சந்திரன் சனி பெலமற்று இருந்தாலும் சாதகன் அடிமை சீவனம் ஹீனத் தொழிலிவைகளைப்புரிந்து சீவனஞ் செய்யப்படுவனென்றும் பலவித கருமக்குறைவும் நேருமென்றும் அறியப்படும் மென்றவாறு.

லாபவிரய பலன்களாவன.

சூரியன் சூரியனுக்கு பதினொருமிடத்ததிபதி நின்ற இராசிநாதன் சிம்ம மிவைகளைக்கொண்டு லாபபலன்களைச் சொல்லவேண்டியது.

சூரியன் சுக்ஷேத்திர உச்ச ஸ்தானத்திலும் அல்லது கேந்திரகோணமாய் தனக்குரிய சுபமித்துருக்ஷேத்திரத்தில் சுபகிரகசமேதனுனலும்அல்

லது தனுசு விருச்சிகம் இவைகளிருக்கினும் புதனுடன் கூடில் லாபமதிக முள்ளன் சூரியனுக்கு லாபாதிபநின்ற ஸ்தானாதிபதி பெலத்தும் சுபருட னிருக்கினும் லாபமதிகமும் புதனுக்கு பனிரெண்டாமிடத்ததிபதி நின்ற இராசிநாதன் ௬-௮-௰௨-மிடத்தில் பகைநீசமும் பாபவீக்ஷணமல்லது பாப ரைக் கூடி இருக்கின் வெகுவாய் லாபமதிகமும் சிலவு அற்பமுண்டா கும் இவர்கள் சுபபெலத்துடனிருக்கினும் பெலவானானாலும் விரயமதிகம் ரணமுள்ளவனென்றும் கன்னியிலும் புதனுக்கு பனிரெண்டாமிடத் ததிபனும் பெலவானாகியும் கேந்திர கோண கெதனாகியும் சுபருட னிருக் கினும் புதன் சுக்ஷேத்திர உச்சனானாலும் அன்யதேசமூலிய தனவிருத்தி லாபத்தையுஞ் செயத்தையும் அடைந்து சுகவானவன் பென்றும் அதிக கீர்த்தி மூர்த்தி புகழ்ச்சிகளும் அசனசயன போக போக்கியாதி மேன்பா டுடன் வாழ்வன் குரு முதலியோரிருக்கின் ரணமில்லான் சுகியாவன் ரவி முதலிய சனியிருக்கில் தனமில்லான் விரய மதிகம் பூர்வாற்சித நஷ் டஞ் செய்வனென்றும் மிகவு மத்திமனவன் பாம்புமுதலிய சனி தனத்தி லிருக்குமாகில் சிலவிட மனம் இராது ஆகாரணச்சிலவும் பலவகைதுக்கத் தையும் அதிக நஷ்டத்தையும் அடைவனென்றும் குசனிருக்கினும் ஷே பலனும் பூமிநஷ்டமடைவன் சந்திரன் சுக்கிரனிருக்கில் அசனசயன சுக முள்ளவன் பலவகை விரயமும் சுக்கிரன் தனித்துநிற்கில பல நஷ்டம் அசுகி அகால அசனசயன போகியாவான் சுபர்திருஷ்டியிருக்கில் மிகவும் சுகியாய் வெளிக்கி பிரபலனவன் குடும்பத்தைப்பார்க்கில் அல்பத்துவ மடைவனென்றும் அரியவேண்டியது.

லாபவிரய கணிதங்களானவையும் சீவனத்திலுண்டாகும் தனலாப கணிதங்களும் அறியவும்.

சூரியன் சூரியனுக்கு பதினோராமிடத்ததிபதி நின்ற இராசிநாதனுட னும் சிம்மத்திலும் புதனும் கூடிய யெண்களை சுபா சுப பெலன்படிக்கு யெடுத்துக்கொண்டு அந்தந்த இராசி யெண்களாற் பெருக்கிய துகையை ௮-ல் பெருக்கி ௧௦-ல் கழித்த சேஷம் லாபமென்றும் புதனுடனும் புத னுக்கு பனிரெண்டாமிடத்ததிபதி நின்ற இராசிநாதன் இருக்கு மதிபனு டனும் கன்னியிலும் உரிய யெண்களை கிரக சுபா சுபப்படிக்கு யெடுத் துக்கொண்டு அந்தந்த இராசி யெண்ணால் பெருக்கியது மருபடி ௯-ல் பெருக்கி ௧௧-ல் கழித்த சேஷம் விரயமென்றும் லாபவிரயப் பங்கையள விட்டுக் கடனும் சொல்லவேண்டியது.

மேற் பெருக்கிய சூரிய புதன் துகையுடன் சந்திரன் துகையும் சந்திரனுக்கு தசமாதிபநின்ற ஸ்தானதிபதி நின்ற அதிபன் சுபாசுபப்படிக்கு இராசி யெண்களாற் பெருக்கி சீவன வதிகாரத்தில் சாதனுக்குரிய யெண்ணிற் கொடுத்த சேஷம் முதல் சீவனரம்பமான மாத தனலாபமென்றும் ஐவகைப் பெலத்தில் எவ்விதபலன் சாஸ்திபோ அதில் உச்சமதிகமானல் சமத்துகை இரண்டுதபாப் பெருக்கியும் ஆக்ஷிபானல் சமத்துகை ஒருதடவை பெருக்கியும் நட்பானல் அதே தொகையும் பகையானல் மூன்றிலொருபாகத்துகையும் நீசமானல் ௩-ல் ஒருபாகத்துகையும் அந்தியகால வறை சீவனவிஷயமாய் மாதலாபமென்றும் மற்றய முயற்சிகளுக்கு மொத்த தனபாவத்தைப்பற்றி உ-ம் பாவத்தில் சொல்லிய கணிதப் பிறகாரங் கண்டறிந்து சொல்ல வேண்டியது.

கடகம் கன்னி கும்பம் மேஷம் இவைகளில் சுபராகியவர் குரு சந்திரனிவருடனவது இவரின் இருபக்கத்திலாவது புதனுடன் அல்லதுபுதனுக்கு கஉ-மிடத்ததிபதிநின்ற இராசி நாதனிருக்குமிடம் அல்லது உபய பாரிசமான வெவ்விடத்திலாவது கேது ரவி முதலியோர் கூடிநிற்கினும் பார்த்தாலும் அன்யதேசவாசஸ்தனகி மிகவுமேன்மையுடனும் அன்யஸ்தலலாபத்தையும் பெருவன் சுபர்சேரின் தேவதாபக்தி கெங்காஸ்நாநாதிதேசாடன யோகவானவன் இவருடன் சனி சுக்கிரன் கூடினலும் பார்த்தாலும்பெலத்து சுபத்துவத்துடனிருக்கில் மிகவும்மேலானயோகசாதனைகள் வனகிரி சஞ்சாரஸ்தனகியும் பெரியோர் தெரிசனபெலமும் உண்டாம் இதில் பாவரிருக்கினும் நோக்கினும் மத்தியில்யோகத்துவ முதலியவகைகள் கெடுமென்றும் பலவகைவருத்தமும் தேகரோகாதியம் அன்யதேச மரணமாவனென்றும் சொல்லப்படும் என்றறியவும்.

இந்தத்துகை கணிதங்களை சவ்யாபசவ்ய மூலமாகவே யனுஷ்டிக்க வேண்டியது.

மேற்கூறிய சூரியபுதவசாத் சொல்லியதில் புதவசாத் பெருக்கி கண்டயெண்களை கூ-ல் கழித்த சேஷம் திசையும் ௩-ல் பெருக்கில் கூ-ல் கழித்த சேஷம் புக்திகளிலும் தேசாடனம் தூரயாத்திரை வனகிரி சித்தயோகி முதலிய பிரயோசன லாபகாலத்துவ மென்றும் இவைகளையும் சவ்யாபசவ்ய விதிப்படிக்கே யனுஷ்டித்து திசாபுக்திகளைக் கண்டறிய வேண்டியது.

விருச்சிகலக்ன குணகுண பலன்.

விருச்சிகலக்கினத்தில் பிறந்தசாதகன் மாதுருபிதுரு விசுவாசி போகப்பிரியன் யார்பேரினும் அன்பு பக்ஷமுடையவன் சீவகருணையுள்ள வன் நல்ல வசன நைச்யன் யெடுத்தகாரியத்தில் பிடிவாதஞ் சாதிப்பவன்.

ச-வது வயது மாதத்துக்குள் கண்டவிரணநோயும் ரு-வது வயதில் கால் பலநோயும் கo-வது காலத்தில் சுரபாதை கஉ-கஅ-களில் அக்கினி அக்கினி சமானமானதை சO - சுரசன்னி கெண்டமும் உண்டாகும் இந்த இலக்கினத்தை சுபதிருஷ்டியுட னிருக்கில் ஷ அO-வரை ஆயிசு யென்றுங் கண்டறியவேண்டியது.

பங்குனிமீ அமரபக்ஷ பாட்டிமையில் சனிவாரம் ஹஸ்த நக்ஷத்ரம் பகலிலும் ஈசுவர பதவியடைவனென்று கூறப்படும்.

இந்த விருச்சிகலக்ன சாதகத்துக்கு காரகமாரக யோகாவ யோகதிசை அந்திர்தசாபாவ விதிகளைக் கூறப்படும்.

விருச்சிகத்துக்கு குரு ரவி சந்திரன் பிரபலபோக காரகர்களாகும் குருதிசை மூன்றில் ஓர்பாகமும் நான்குவகையினுல் இன்ன பாகமென்ப தையறிந்து அந்த பாகத்தில் பொருள் நஷ்டம் தேசாடனம் தேகரோக கெண்டம் குடும்பதுக்கம் முயற்சிஹானி இவ்விதமானகஷ்டநஷ்டபலன் கள் நேருமென்று யறியவும் சனி சமயோகவா னுலும் ஓர் பாகத்தில் மாரகனென்றும் சுக்கிரன் மாரகனென்றும் குசன் சுபனென்றும் ரவி சுக்கிரன் கேது இராகு மாரகமென்றும் பெயருதும் இதில் புதன் சுக்கிரன் கேது சனி குரு இருவர் சம்மந்தவசாத் ஓர்பாகத்தில் மாரகத் துவம் கொடுக்கப்படும் அதாவது இராகு சனி சுக்கிரன் கேது இந்த காலங்கள் மாரகம் முதலிய வறுமைத்துன்பங்கள் கொடுக்கப்படுவார்க ளென்றும் அறியவேண்டியது மேற்கண்ட திசாபுக்திகாலங்கள் ஒவ்வொ ன்றிலும் தேகாதிரோக கெண்டங்களும் பொருள்சேதமுந் தனதானியக் குறைவும் பொருள்சேதமும் குடும்பதுக்கமும் மனதுக்குப் பலவிதகவலை களையுங் கொடுக்கப்படுமென்றும் அறியவேண்டியது.

யோகசுபதிசைகளும் அந்தர் திசைகளுங் கூறப்படும்.

குருதிசை சந்திரன் சனி ரவி இராகுவும்.
சனிதிசை சுக்கிரன் குசன் இராகுகுருவும்.

சூரியதிசை சந்திரன் குரு இராகு புதனும்.
சந்திரன்திசை குரு இராகு குசன் சுக்கிரனும்.
குசன்திசை குரு சனி சந்திரனும்.

இவைகள் பிரபலயோக காரகத்துவ முள்ளவைகளாம் அபசவ்யத்தில் பாம்புகளின் திசை சனிகுசன் குரு இவ்வித புக்திகாலங்களிலும் மிகவும் பிரபலவரசத்துவ யோகமும் அதிக மேன்பாடுகளும் தனதானிய கிரகவாகனதி வியாபாரபலிதமும் பிரபுசன்மான பூசிதமும் மிகுதியான பிரபலத்துவம் களத்திரபுத்திர குடும்பமேன்மைகள் அதிக சௌபாக்கியபலன்கள் இடம் பொருளேவலானவைகளுடன் கூடிய மிகுந்த யோக பாவபலன்கள் நடக்குமென்றும் அறியப்படும் மற்றய திசாபுக்திகளும் குசன்றிசையில் ஓர் பாகமும் பலவகை பொருள்நஷ்ட ஸ்தானபேதமான மேற்கண்ட பலனே நடக்கும்.

மாதுரு அரிஷ்டம்.

சந்திரன்றிசை சுக்கிரன் சனி இராகுவிலும்.
கேதுதிசை புதன் ரவி சுக்கிரனிலும்.
சுக்கிரதிசை குரு சனி கேதுவிலும்.
சனிதிசை தனது சுக்கிரன் சந்திரன் இராகு புக்திகளிலும்.

புதன்றிசை சுக்கிரன் சந்திரன் இராகு சனியிலும் மாதுருகருமகிலேசம் கும்பதுக்கம் மனக்கவலை பொருள்சேதம் மாதுருவர்கநாசம் பலவித வருத்தங்களும் சததுரு துன்பமும் மாதுரு தேகாரிஷ்ட பாதைகளையுங் கொடுக்கப்படுமென் றறியவேண்டியது.

பிதுரு அரிஷ்டம்.

ரவி திசை சனி சுக்கிரன் இராகுவிலும் சந்திரதிசை மேற்படிபுக்திகளிலும் இராகுதிசை தனதுரவி மதியிலும்சுக்கிரனிலும் குருதிசைசனி சுக்கிரன் இராகுவிலும் சனிதிசை தனது சுக்கிரன் பாம்பிலும் சுக்கிரதிசை புததிசை ரவி குசன் இராகு சனியிலும்.

பிதுருகருமம் பிதுருவர்க கஷ்ட நஷ்ட துக்கசோகம்பொருள் சேதம் விவாதம் பலவகை வருத்தங்கள் சத்துரு துன்பம்பிதுருவருக்க இடுக்க துஷ்டி பலவிதவிரயஞ்சோக மிவைகளைக்கொடுக்கப்படுமென்றறியவேண்டியது.

சகோதிர வரிஷ்டம்.

இராகு இராகுதிசை சனி சுக்கிரன் ரவிகளிலும்
சனி திசை தனது கேது சுக்கிரனிலும்
கேது திசை இராகு சுக்கிரன் சனி ரவியிலும்
சுக்கிரன் திசை சனி ரவி குசன் குருவிலும்
ரவி திசை சனி சுக்கிரன் புதனிலும்

சகோதிர நஷ்டம் மேற்படி குடும்பவகை துக்கசோகம் பொருள் சேதம் தனதானியக்குறைவு பலவகை மனதுக்கு வருத்தம் பெந்துகலகம் மனோபயம் விவ்விதமானமேற்படி வகையானசகோதிரவரிஷ்டங்களைக் கொடுக்கப்படுமென்றும் அவ்விதவகை மூலிய மனதுக்கு அசந்துஷ்டி கொடுக்கப்படுமென் றரியவும்.

களத்திரலாப வரிஷ்டம்.

சுக்கிரன்றிசை தனது சந்திரன் புதன் வியாழம் இதில் தனது இராகு சனி இவைகளில் தேகபீடையும் சந்திரதிசை சனி சுக்கிரனிலும் இராகுதிசை குசன் புக்தியிலும் மேற்படி பாவ விரோதபலனும் இராகுதிசை குரு சனி ரவியும் சுக்கிரன் பாம்பு கெண்டமும் குரு திசை சனி புதன் சுக்கிரனும் சனி இராகுகண்டமும் சனிதிசை புதன் சந்திரன் குருவில் சுபரும் தனது பாம்பு ரவியிற் கண்டமும் புதன் திசை சுக்கிரன் குரு சந்திரனில் சுபமும் தனதுபாதியிற் கண்டமும் புதன் திசை சுக்கிரன் குரு சந்திரனில் சுபமும் தனது சனி இராகு வாகில் கெண்டமும் இந்த பிரகாரம் மேற்சொல்லிய திசா புக்திகாலங்களில் களத்திராதி விவாகமும் பின்சொல்லிய புக்திகாலங்களில் பலவித நஷ்டம்தேகரோககெண்டமும்பொருள்தேசமும் பலவகைகளத்திர சம்மந்தாதி துக்கபலன்கள் நேரும் களத்திரமான துக்கங்களையும் கொடுப்பார்கள் என்றரியவேண்டியது.

புத்திரலாபமும்புத்திரவரிஷ்டங்களுக்குமுறிய திசாபுக்திகளாவன.

குரு திசை தனது சனி புதன் சந்திரனிலும்
சனி இராகுதிசை குரு சுக்கிரன் ரவியும்
சுக்கிரன் புததிசை சந்திரன் புதன் கேதும்
சூரிய றிசை குரு புதன் சுக்கிரனிலும்

புத்திர லாபங்களும் குடும்ப சுபசோபனாதி உத்தம பலன் நடக்குமென்றும் இஷ்ட பிறபுவனுகூலமும் பிறபு சன்மான பூசிதமும் இஷ்ட சித்திகளும் இவ்வித உத்தமபலன் நடக்கும்.

மேற்கண்ட திசைகளிலும் சந்திரன் குசன் இராகு இந்தத் திசைகளிலும் ரவி சனி சுக்கிரன் பாம்பு இவர்கள்புக்திகளிலுண்டாகும் பிறசைகளின் மரணாதிதுக்க சோகபாதைகளும் பணச்சிலவும் சத்துருமூலிய மனோவருத்தமும் பலவித கவலைகளும் மனசுக்குஅசந்துஷ்டி இவ்வித பலன் நடக்குமென்றரியவும்.

விருச்சிக லக்கினம்.

விருச்சிகலக்கினம் க-வது ஆயுர்பாவவிதிகள்.

குசன் கேந்திரகோணத்தில் அவனுக்கேற்ற சுபபெலத்துடன் சுக்ஷேத்திராதி உச்சஸ்தானங்களிலும் பெலத்தும் புதன் கேந்திரமில்லாமல் சுக்ஷேத்திர சுபக்ஷேத்திர கெதனாகியும் சந்திரன் ரவி குரு இவர்கள் தனக்குபெலமுள்ள ஸ்தானத்திலும்இருந்தும் புதனுக்கு அஷ்டமாதிபதி நின்ற ஸ்தானாதிபதியுங் குசனும் தனக்குள்ள சரவிராசியாகியும் மேலேகூறிய கிரகங்கள் பெலத்துடனிருக்கினும் நோக்கினும் மேற்கூறிய குசநின்றஸ்தானாதிபதி யெந்த இடத்திலிருக்குறானோ அந்தஸ்தானாதிபதி தத்ஸ்தானத்துக்கு கேந்திர சுப பெலமான ஸ்தானத்துடனும் மேலே கூறிய குசவசாதும் லக்ன அஷ்டமாதிப நின்ற ஸ்தானாதிபதியும் சீவசரீரமென்று ஆயுர்பாவத்துக்குரைக்கின்றமையால் இவைகள் அதிபதிபு மிராசியும் ஒரேஸ்தானமானாலும் அவை சிவத்துவ சுபக்ஷேத்திரமாகியும் பாவராகினும் சுபபெலத்தைப்பெற்றும் சரஞ்சர மிவ்வித இராசியிலிருக்கில் சாதகனுக்கு ஆயுர்பாவ வரு௱உ(-யென்றும் இதில் ஓர் பகையோர் நீசபாவர் கூடினாலும் அல்லது முழுப்பார்வையாகினும் சரஸ்திரவிராசியானாலும் சாதகனுக்கு ஆயுர்பாவ வருஷம் ௱-யென்றும்.

இருபாவருடன் சரமுபயமாகின் வரு௯0-யென்றும் அவ்வித ஸ்தானாதிபர்கள் யேற்கனவே பெலமற்றும் பகை நீசக்கோள்க்கள

கினும் பின் பெலமுடன் ஸ்திர ஸ்திரமாகில் ௵ ௭௨-யென்றும் ஸ்திரசரமானால் ௵ ௬௬-ஸ்திரமுபயமானால் ௵ ௬௧-யென்றும் உபயாது பயமானாலும் லக்கினாதிபதி பெலக்குறைவானாலும் ௵ ௫௪-யென்றும் உபயந்திரமாகினும் சிலபாவருடன் சீவ சரீராதிபர்கள் கூடி பாபருடன் கூடியல்லது பார்த்திருந்தாலும் அவ்வித இராசி கேந்திரமல்லது சுபக்ஷேத்திரமானாலும் ஜாதகனுக்கு ௵ ௪௨-வரை ஆயுள் என்றுங் கொள்ளவேண்டியது.

மேற்கூறிய சீவசரீராதிபர்கள் பாவராயும்பெலமற்ற பாபக்ஷேத்திர கெதியிலும் பகை நீசக்கோளுடன் உபயராசி ஆரோகணமும் அல்லது ஸ்திரவிராசி ஆரோகணத்திலு மிருக்கினும் குசன் குரு முதலியோர் பெலமற்று இருந்தாலும் பாவரைக்கூடினாலும் சுபபெலன் ஒருவர்பெற் றிருந்தாலும் சாதகனுக்கு ஆயுள் அகாலதோஷத்துடன் ௵ ௩௬-னுள் ளும் இவர்களுடன் பாபிகளாகி . சரீரசீவனுதனிவரில் ஒருவர் பெலமற் றும் பகை நீசமானாலும் குசன் , அவரோகண இராசியில் ஸ்திரமல்லது கடகமிவைகளில் நிற்கினும் சுபபெல வீக்ஷணிய சம்மந்தமில்லாம லிருக் கினும் ௵ ௩௨-க்குள் யென்றும் குசன் வலுத்தும் சுபர்கள் பெலமற் றும் பகை நீசருகி மிகவும் சரீரசீவர் ஒருவருக்கொருவர் பகையானாலும் சீவனுதன் ஆரோகண உபயத்தி நிற்கினும் ௵ ௨௭-என்றும் ஆரோகண சரம் சரீரஸ்தனும் குசன் சனிமுதலிய பாவருடன் பின் அவரோகணம் ஸ்திரம் ஸ்திரம் சரமானாலும் ௵ ௨௧-க்குள் யென்றும் ஆனாலிவர்கள் யெவ்வித ஸ்திரஞ்சரமல்லது உபயமாகி சுபாவருடன் கூடினாலும் பூரண சுபக்ஷேத்திரத்திலாவது சுபவீக்ஷணிப மானாலும் ௵ ௬௩-பென்றும் க்ஷீணராகினும் யிவர் சுபராய் சுபர் பாபராய்க்கூடினாலும் ௵ ௧௮-க்குள் தோஷமடைவனென்றும் துலாந்தனுசு இவைகளில் பாம்பு முதலிய பாவ ரெவரானாலும் சுகவீக்ஷண சம்மந்தமில்லாமல் ௧-௮-௭-ல் குசன் முத லிய ரவி சனி இவர்நின்றாலும் சாதகனுக்கு பாலாரிஷ்டனாகி வபசு ௪-க் குள்ளாகவே மாரகமடைவனென்றும் இதில் சுபசம்மந்த திருஷ்டியுட னிருக்கில் ஆயுசு விருத்தியடைந்து ௵ ௬௪-வரை கிரகத்துக்கு இயல் பானபடிவிருத்தியை யடைவனென்றுங் கூறப்படும் இதில் சரீர சீவாதி பதிகள் ஒருவர்களாய் சுபவீக்ஷணிய பெலனும் அல்லது தனித்தனி யான்வரானாலும் பெலமுற்றச் சுபத்துவ பெலனடையாவிடில் மேலே

ஆரோகண மெனிலென்ன் வென்றால் லக்கினம் முதல் ௬-இரா சிக்குள்ளென்று மற்ற ஆருவிராசி யவரோகணமாகும்.

கூறிய ஹூ சுசு-தீர்க்கமடையாது பாலிநத்திலேயே மரணமடைவனெ ன்றும் கூறப்படும்.

குச புதன் குரு இவர்கள் ஆரோகண சாஸ்திரவிராசியிலாவது அவ ரோகண சாஸ்திரமாவனுலும் அவரவர்களுக்குறிய இபல்புள்ள ஸ்தானமாகி பெலத்துடன் விசேஷமானவராகியும் சுபக்கிரக சுபசம்மந்தயுதர்களானு லும் பெலத்துடனிருந்தாலும் அல்லது பார்த்தாலும் சாதகனுக்கு பூரண யத்தில் பூரணவயதென்றும் புதன் குசன் சந்திரன் ரவி குருசம்மந்தமல் லது நோக்கமானுலும் கேந்திரகோண இராசியிலிருந்துஞ் சுபபெலத்துட னிருக்கினும் பெலவானைக்கூடினுலும் ஷெ கண்ட பூரண வயதென்றும் அவையில் விருச்சிகமும் சுபக் கிரக சந்மந்த வீக்ஷணியதுட நின்று லும் ரவி புதன் கூடியும் தனுசு கன்னி கும்மம் விருஷபம்மிதுனத்தி லாவது சுபபெலத்துடனும் குரு சந்திரன் குசனிவர்கள் துலாம் விருச்சிகம் மகறம் மீனம் மேஷம் இவைகள் தனக்கு இயல்புள்ள பெலமுடைய ஸ்தலங்களிலும் சந்திர பெலத்துடன் கேந்திரத்தி லிருந்தாலும்.

குருபுதன் முதலியவரைக்கூடி கடகம் சிம்மம் கன்னி இவை ளினின்று குசன் விருச்சிகம் மேஷம் மகறம் கன்னி விருஷபம் சுப ரைக்கூடி யல்லது பார்வை இடப்பட்டும் புதன் ரவியுடன் கூடியும் சனி தனக்குரிய சுபக்ஷேத்திரபெலத்துடனிருக்கினும் ஜாதகனுக்கு மேற்கூறிய பூரணவயதென்றும் இதில் ஓர் பாபரல்லதுசுபரானுலும் பகைநீசரைக்கூடி யல்லது பார்வையிடப்பட்டாலும் பூரணத்தில் மத்திமவயதென்றும் இதில் ரண்டு பகைபாவருடன்கூடியும்பெலத்த சீவனசரீராதிபர்வலுத்து பகையாயாவர் வீடானுலும் அல்லது அவ ரைக்கூடி ஸ்திரலிராசியில் நிற்கினும் பெலமுற்றுப்பார்த்தும் விசேஷ சுபர் திருஷ்டியல்லது ஸ்தானபெலமானுலும் பூரணத்தில் அல்பவய தென்றும்இருபாவக்ஷேத்திரகெதியுடன் மேற்கூறிய கிரகங்கள்குரித் தபடி இருந்தும் சீவ சரீரர்கள் பெலமற்று பாபக்ஷேத்திரஞ் சரவி ரசிகளில் நின்றுலும் மத்திமத்தில் பூரணவயதென்றும்.

ஸ்திரத்திலிருக்கில் மத்திமத்தில் மத்திமவயதென்றும் இவர்களும் மேலேசொல்லிய புதன் ரவியுஞ் சந்திரன் குரு குசனிவர்கள் மகர கும் பம் மீனம் மேஷம் விருஷபம் இவைகளிலிருக்கினும் அல்லது கேந்திர கோண இராசிகளினின்றுலும் பகையோரைக் கூடினும் சுபர் கேந்திர கோண ஸ்திரீயாகில் ஹூ;மாகிய மத்திமத்தில் அல்பவயதென்றும் சுப

பெலன் அற்றும் பகைநீசக்கோளுடனானும் பெலமில்லாது உபயராசி ஸ்திரவிராசி இவைகளில் நிற்கினும் அல்பத்தில் பூரணவயதென்றும் ஜீவ தேக கிரகங்களுக்கு இருபக்கத்தில் பாபத்துவத்தோருல நெருக்குண்டு பகை பாவரைக்கூடி பாபக்ஷேத்திர கெதனுகி குசன் சனி முதலியோர் மறைவிடங்களிலிருக்கினும் அவை ஸ்திரஞ்சரமிவ்வித இராசிகளானாலும் அல்பத்தில் மத்திமவயதென்றும் மேற்சொல்லிய கிரகங்கள் ஸ்திரமுபய மாகியும் குரு சனி பெலமற்றும் பாபமத்தியிலும் துலாம் தனுசு இவை களில் பகை யல்லது பாவர்களிருந்தும் பெலமற்றுமிருக்கினும் ரவிபுதன் இவர்கள் கேந்திரமாகியும் இருக்கினும் சாதகனுக்கு பாலியமான அல்பத் தில் அல்பவயதில் யேமாரகமென்றும் காணல்வேண்டியது.

குசன் பகை நீசக்ஷேத்திர கெதனுகியும் பாபர்மத்தியும் ரவி சனி முதலிய பாபர்கள் கேந்திர மல்லது அஷ்டமத்தில் வலுத்தும் சந்திரன் குரு பெலஹீனத்துவமல்லது பாபிகளைச்சேர்ந்தாலுஞ் சாதகனது ௵ ௰-குள் ளல்லது ௰-மாதத்தினுள் மாரகமடைப்படுமென்றும்குசனுடன் கூடியவர்களும் சந்திரனிருக்கும் ஸ்தானதிபதியும் பகைவர்களாகி ௬-௮-இவைகளிலும் பாவறைக்கூடி குசன் பெலமற்று இருக்கில் ௵ ௪-க்குள்ளாகவே பாலாறிஷ்டம் ௪-மீ ௪-தின மென்றும் வருவிக்கக் கூடுமென்றும் இவ்வித ஸ்தானங்கள் பெலமற்றும் பகைநீசாதி பெல முற்ற சுபராகியு மிருக்கினும் அவரோகண ஸ்திர விராசியிலிருந்தாலுஞ் சாதகன் ௬-௵ ௬-மாதத்தினுள்ளாகவே மாரகமாவனென்றும் சந்தி ரன் பகை நீச க்ஷீணனுகியும் மறைந்தும் பாவரைக்கூடியும் ஆரோகண ஸ்திர விராசிகளிலும் இருந்தும் சுபர் திருஷ்டி இல்லாமலிருக்கில் விசேஷ பெலவானின்றி ௵ ௨ மீ ௨-இவைகளிலேயே மறணமும் அடைபப்படும் குடும்ப மாதுரு பிதுரு முதலானவர்களுக்குப் பீடை யும் இதில் சுபர்கள் நோக்கில் சாதகனுக்கு பாலாறிஷ்டம் நீங்கிப் பின் உடனே மாதுரு அல்லது பிதுரு அவ்வித மாரகங்களை கொடுக்கப்படு மென்றறியவேண்டியது.

ஆயுர்பாவகணித விதிகளாவன.

குசனுடனும் குசனின்ற ஸ்தானதிபதி பெந்த ஸ்தானத்திலிருக் கிறனே அந்த ஸ்தானதிபதியுடனும் புதனுடனும் புதனுக்கு அஷ்ட மாதிபதி நின்ற ஸ்தானதிபதியுடனும் சனியுடனும் மிதுனத்திலும் நின்ற கிரகங்களின் சுபாசுப பெலன்படிக்கு யெண்களைத் தனித்தனி பெலாபெலப்படிக்கு யெண்களை யெடுத்து அந்தந்த இராசியெண்களாற்

பெருக்கிய தொகைகளை ஒன்றுசேர்த்துக்கொண்ட தொகையைமொத்த இடம் கேந்திரகோணாதி அஷ்டம பெலன்களை யரிந்து அத்தொகைகளை யொன்றுபடுத்திய தொகையில் பெலன்களுக்கிசைந்தபடி கூட்டி குறைத்துமுள்ள தொகை மொதத்தை ௰௨0-ல் கழித்த சேஷம் ஆயிசு யென்றும் மேலேகண்ட மொத்தத் தொகையை கூ-ல் கழித்த சேஷம் திசையாகவும் இதில் வந்த ஈவை ௹-ல் பெருக்கி கூ-தில் கழித்த சேஷம் புக்தியும் இவ்வித திசாபுத்தி காலங்களில் சாதக மாரக மென்றும் இவைகளையெல்லாம் சவ்யாபசவ்ய ரீதிப்படிக்குக் கண்டறிந்தவவை ஆயுளுந் திசாபுக்தியாகவுங் கண்டறியவேண்டியது.

சனி புதன் இவருடனும் இவர்களுக்கு அஷ்டமாதிபதி நின்ற ஸ்தானாதிபதிகளுடனும் கூடிய கிரகயெண்கள் படிக்குக் கண்டறிந்து இராசியெண்ணாற் பெருக்கிய தொகைகளை வயதில் கொடுத்து தனித் தனி யரிந்த சேஷவயது கொண்ட காலங்களென்றுங் கூறப்படும்.

தனகுடும்பம் வாக்குநேத்திர முதலியபாப யெண்களை கூறப்படும்.

குரு பெலவானாகியுஞ் சுபக்ஷேத்திரமல்லது தனக்கியல்புள்ள பாவக்கிரகத்திலிருந்தாலும் அவை கேந்திரகோண இராசியாகியும் தனுசுவுக்கும் குருவுக்கு மிரண்டாமிடத் ததிபர்கணின்ற இராசிநாதர் ரீவ சீரஸ்தானாதிபர்கள் பெலத்துந் தனக்குறிய சுபக்ஷேத்திர கெதியுடனிருக்கினும் பெலமுரினும் பாவக்ஷேத்திரம் பாவரைக்கூடாமலிருந்தாலும் ப்ராண சரீராதிபர்களுக்கு சத்துரு ரீசத்துவமில்லாமலிருக்கில் சாதகனுக்கு பிரபலதனவானாகியும் அனேகதனங்களைப்படைத்து வாழ்வன் இதில் ஓர் பாவரல்லது பகை ரீச சுபர் கூடினும் அவர்கள் வீட்டினின்றாலும் அவர்கள் பார்த்தாலும் சாதகன் பூர்வதன பிரபலனானாலும் பல வாறுகச் சிதரி கடன் முதலிய தொந்திரவுகளை யடைவன் யென்று மனதுக்கு கஷ்டநஷ்ட துன்பமான தனவானாகி வாழ்வனென்று மனதுக்குக் குறைவும் பலகஷ்டங்களை யடையப்படுமென்றுங் கூறப்படும் குடும்பமுன் விருத்தியாகவிருந்து பின் பலகவலை யுடையவனாவன் குடும்ப க்ஷயமு முண்டாம் குருவுமத்த பாவ ரீவசரீராதிபதிகளுந் தனுசு இவைகளுடன் நான்கு வகைகளும் அதற்குரிய பெலன்களுடனே கிரகங்களிருக்கினும் நோக்கினும் சாதகனுக்கு அதிக பொருள் செல்வமு மிகவு மேன்மையுடன் பிரபல யோகவானாகி வாழ்வனென்றும் பிரபு சன்மான

பூசிதம் சத்துரு செயமும் குடும்பவிருத்தியை யுடையவர்களாகி சுக மடையப்படுமென்றும் அறிக.

சீவசரீராதிபர்களும் குரு இவர்கள் முதலாரேகணமென்ற ஆரு இராசிகளுக்குள் சவ்யர்களான பெலவான்களாகி தனுசு கும்பம் மீனம் இவைகளில் அவரவர்களுக்கு சுபக்ஷேத்திர சம்மந்த சுபபெலத்துட னிருக்கினும் பெலமுற்று வாழ்கினுங் குரு கேந்திரத்தில் சந்திர நின்று னும் பிரபல பெலவானுகி இருக்கினும் அவரேகணத்தில் கேந்திரகோண உச்ச சொக்ஷேத்திர பெலத்துடன் சுபரிருக்கினும் இவர்கள் பாபிகளா னல் பகை நீசாதிகளல்லது தனக்கு இயல்புள்ளோராகின் சொந்த கிரக வாசர்களாகியும் குருவுக்குந் தனுசு இவைகளுக்கு பாபத்துவசம்மந்த மில்லாமலிருக்கினும் சாதகனுக்கு பிரபல ஐசுவரிய வந்தனுகியும் பிது ராற்சித முதலானவையுடன் விருத்தியடைவன் இதில் சீவசரீரஸ்தா னுதிபர்களுக்கு ஒன்பதாமதிபதி நின்ற இடத்ததிபன் பெலவானுப் சுப க்ஷேத்திர உச்சாதி கேந்திரகோண சுபராசி கெதனுகி பெலத்து நிற் கின் மாத்திரம் பிதுராற்சிதம் யேராள இராசயோகஞ் சொல்லப்படும் அவ்வித ஸ்தானுதிபர்கள மறைவிடம் முதலானதும் பகை நீசாதி தனக்கு இயல்பில்லாதவர்கள் வீட்டில் நிற்கினும் பிதுரார்சித தன மில்லாதவன் இவர்களுடன் சுபபாப சமபெலமானுல் சமஸ்திதிபிது ரார்ச்சிதம் உண்டு பாபர் பெலத்தும் ஸ்தானுதிபதி பெலமற்று இரு க்கில் பிதுரார்சித மெல்லாம் ரொணத்திற்குள் ஐயக்கியப்பட்டு பல வகை நஷ்டமடைவனென்றும்.

குரு பெலமற்றுமரைந்தாலும் தனுசு சீவசரீரர்கள்ஒன்றுக்கொ ன்று ஐக்கிய பத்தியர்களாகினும் ஒருவராகிச் சுபபெலன்பெற்ருலும் அவ்விதமிருந்து தனக்குரிய நட்பாக்ஷி யுச்ச சுபராசிகெதராலும் லக்ஷாதிகாரியான யோகவானுவன் யென்றும் இதில் நால்வரும் பெ லமானுலும் தேக பிருனுதிபர்கள் பெலத்துடனிருக்கினும்அவர்கள் வசாத்பாக்கியாதிபர்களுஞ் சுபக்ஷேத்திரகெத பெலவானுகில் சாத கன் பூற்வார்சிதம் சுயாற்சிதம் இவைகள் அளவிடக்கூடாததாகவெ குபிறபல தனவானுகி வாழ்வன் குரு பெலன் கெட்டு மற்றயவர்கள் வலுத்தால் தனமாத்திரமுண்டு பிரபுத்துவ மின்றியும் குடும்ப விரு த்தி இல்லாமலுங்கிருபணனுகிப் பலவிதக்கவலையடைவன் பொருளை மாத்திரங் காப்பாற்றுவன் யென்றும் இவ்விதமான ஐவர்களினும் தனக்குரிய சுப பெலத்துடனிருக்கினும் நட்பு முதலியோருய் பா

வர்கூடினாலும் ஐசுவரியந்தனுகிதசசகஸ்திரக் கணக்குள்ள தனத்தை விருத்திசெய்வன் யென்றும் இவைகளில் தனக்குரியசுபபெலத்துட னில்லாமல் பாபக்ஷேத்திரம் பாவாதிபராகி பெலமில்லாம லிருக்கில் அல்பதனமும் ருணமுமுடையவன் யென்றும் இதில் பாவபலன்க ளில் குடும்பவிருத்திகளையும் அடையமாட்டானென்றறியவேண்டியது.

தனபலன்.

குரு, தனுசு, கும்பம், மீனம், விருஷபம் இவைகளில் சுக்கிரன் சனி, பாம்பு இவறைத்தவிர்த்த சந்திரன் புதன், ரவி குசன் இவரைக் கூடினாலும் தனித்தாலும் ஒன்றேடொன்று பார்வையாகவல்லது கேந்திரமானாலும் உ-கஉ-ல் ரவி புதன் குசன் சந்திரனிவரில் யெவர் தனக்குரிய சுப பெலத்துட னின்றாலும் சாதகனுக்கு விசேஷதன மும் குடும்பவிருத்தியும் மிகுந்த பிரபலவானாகியும் தனதானிய விரு த்திகளுடன் வாழ்வன் யென்றும் இதில் ஒருவருக்கொருவர் பொரு ந்தாத இடம் கிரகமிவைகளைக் கூடியும் மல்லது சனி சுக்கிரன் பா ம்பு இவரைக் கூடினாலும் இதில் ஈ-பாவருக்கு மேலாயின்றனமே இல்லாத தரித்திரனாகியும் அல்லது தனமிகுந்தால் அதிகரோணபா த்திபனாகியும் வாழ்வனென்றும் அவைமூலமானபலகவலைகளும்மன துக்கு வருத்தமும் அடைவன் குடும்ப விருத்தி யடையானென்றும் இவர்களுடன் பாபர்கள் சுபர்கள் கூடினாலும் பாவர்களே தனித்து அவர்களுக்கு இய்ல்பான இடமானாலும் மத்திமதனமும் பூர்வார்ச் சிததனமுமுண்டென்றும் இவையுடன் சீவ சரீராதிபர்கள்வலுத்து நிற்கின் மிகப்பூர்வார்ச்சிதாதி தனவந்தனென்றும்.

மிதுனம் கடகம் சிம்மம் விருச்சிக மிவைகளில் குரு தனித்தாலும் அல்லது தனக்குறிய சுப பெலத்துடன் இருந்தும் சுபக்ரக வாசத்துடன் இருக்கில் யேராள தனவந்தனென்றும் பாவருஞ் சுபருமாகிக் கலர்ந்து பகை நீசத்துருகிரக சம்மந்தமானல் தனமில்லாத ரொணஸ்தனாகியும் குடும்ப விருத்தி இல்லாதவனாகவும் வாழ்வன் பாபசுபசம்பந்தமானல் அல்பதனமும் ருணமுதலிய விவாத வகையால் நஷ்டமுண்டாகிப் பின் சேருமென்றும் மகரம் மேஷம் கன்னி துலாமிவைகளில் குருவிருக்கி னும் தனித்தாலும் சுபரைக் கூடினும் பாவர் இயல்பிலலாத பாபத்துவ முடையவராலும் பலவிஷய தனநஷ்டம் மனக்கவலை குடும்பக்ஷயமுடை யவனென்றும் சிவசரீராதிபர்கள் வலுத்து இவர்களுடன் கூடினல் பிறபல

தன முடையவனென்றும் பாவரதிகமானுல் முன் யோாளமான தன மிருந்து பின் பலவித கஷ்ட நஷ்ட துன்பமடைவனென்றும் மனதுக்கு துக்கமும் குடும்ப சோகமும் உண்டு தனமுடையவ னென்றும் பாபர்க ளின்றி சுபர் பெலத்துடன் கூடினுல் முன் தனமுங் கைகூடா தென்று மனத்துன்பமும் பலவகைப் பொருள் சேதமாவனென்றும் பாவர்கள் தனித்துப் பெலவானுகக் கூடினுலும் வலுத்து நிற்கினும் பிறபல தனவந் தனவன் குடும்ப சீவ விருத்திகள் கிடையா தென்றும் சுபரும் அல்ப பாவருமானுல் குடும்ப விருத்திப் பிரபலமும் தனவிருத்தியில்லாதவனுகி யும் ஆகுவன் ஆகையால் இவைகளில் குரு வலுவில்லாமல் மறைவிடங் களில் நின்ருல் பூர்வார்ச்சித தனம் விருத்தியடையாது ஸ்தானசரீர சீவாதிபர்களும் பெலனற்று இருக்கில் சுயாற்சிதமும் கிடையாது இருவ ரும் பெலவானுனல் பிதுரார்ச்சிதம் சுயாற்சிதம் இவை இரண்டுவகைப் பொருளும் பிறபலமுண்டு இருவரில் ஒருவர் பெலமில்லாதவரானுல் ஓர் வகையான தனங் கிடையாது இவ்வித மறிந்து தனபாவங் கூறல் வேண்டும்.

நேத்திர பலன்.

குரு ரவியும் இவைகளுக்கஷ்டமம் சந்திராஷ்ட மல்லது இவர் களுக்கு இரெண்டு பக்கங்களில் பகை நீசாதி குசன் ரவி சனிக்ஷே த்திரங்களில் பாம்பு குசன் சனி இவரைப்பகையுடன் அந்த வீட்டி நின்ருலும் துலாந் தனுசு இவைகளில் ரவிமதி இவர்பகை நீசராய் குசன் சனி பாம்பு முதலிய புதனைக்கூடினுலும் சுக்கிரன்பெலமற்று மேற்கண்ட இராசிகளில் நின்ருலும் அவறைப்பாவராகிய ரவிகுசன் சனி இவர்கள் நின்ருலும் சேரினும் சுக்கிரன் ரவிபெலமற்று விருச் சிகம் துலாம் சிம்மம் கன்னி இவைகளில் ஓர் பாவறைக் கூடினு லும் நேத்திரமில்லாதவனுகி நேத்திரரோகத்தினுல் அவரவர்களுக் குரிய திசை புக்திகாலத்தில் கண்போம் பீடைகாணுமென் றும் இதில் பாவரின்றி ஓர் சுபர் பகைமுதலிய அபெலனுட னிரு ந்தாலும் சாதகனுக்கு நேத்திர ஹீனமும் இதில் பல பாவருடன் சுபத்துவ பெலமுடைய பாவராகினும் அல்லது சுபரானுலும் சீவசரீரத்துவ வதிகாரிகளின் கேந்திரகோண சுபபெலத்துட னிருக்கி னும் நோக்கினும் நேத்திர பீடையுண்டாகிச் சுகத்துவமுள்ள நேத்திர அரோகியாவன் சனி சுக்கிரன் பாம்பு நீங்கியவரிருக்கினும நேத்திர ரோக மத்திய காலத்திலுண்டாகி நிவர்த்தியாகு மென்றும் கண்டறியவேண்டி

யது இதில் ரவி புதன் சுக்கிரனால் விருத்தாவஸ்தையில் நேத்திரம்போம் சனி பாம்பு ஜென்மகாலமே நேத்திரஊனம் பாலியாவஸ்தை மற்றகிரகம் பாவராகிக்கூடினாலும் பார்த்தாலும் மத்தியகாலத்தில் நேத்திரம்போகு மென்றும் சுபர் திருஷ்டியானால் மறுபடி நேத்திர விருத்தியுண்டாகும்.

தனபாவத்தைக்குரித்து கணிதமார்க்கங்களாவன.

குருவுடனும் தனுசுவிலும் குருவசாதன சீவசரீரர்களுடனும் அவர்களுக்கு பாக்கியமான ஒன்பதாமதிபதிநின்ற ஸ்தானாதியிருக்கு மிராசிநாதனுடனும் கூடியகிரக பெலாபெலன்களை தனித்தனி யந்தந்த இராசி யெண்ணாற் பெருக்கிக்கொண்டு அத்துகையை ஸ்தானபெலத்துக்கிசைந்த படி பிரித்துக்கொண்டு கேந்திராதிபெலனையுடைய கிரகம் மூன்றுக்கு மேலாயின் சமத்துகைபோட்டுப் பெருக்கியும் மூன்றுக்குள்ளான லீதே துகையில் கூ-ல் க-பங்குத்துகையால் பெருக்கியும் நி-க்கு மேலான பெல மானால் உ-தடவை சமத்துகையாற் பெருக்கிக்கண்டவையும் க-க்குள் பட்ட பெலமானால் அதேதுகையையுங் கண்டவை சுவர்ணபாகலாபதன வந்தனென்றும் நீசம் பகைபெலன் மேற்கண்டபடிக்குக்கண்டு பெருக்கி யவை ருணமென்றும் நட்பானாலதே துகைசமதன மல்பமுடையவ னென்றும் இதில் குசன் மேஷம் இவையுடனும் இவைவசாத் ஒன்று மிடத்ததிபதிநின்ற இராசிநாதர்களுடன் கூடிய இன்னான்குவகை யெண் களை பெலப்படிக்கி இராசியெண்களாற் பெருக்கிக்கூட்டியும் முன்கண்ட பெலன்போல அதிகந்தாழ்ச்சி செய்தவையை பெருக்கிக்கண்டவைகள் ருணமென்றும் அறியப்படும் முதற்றன குணிதக் கிரகயெண்களை கூ-ல் கழித்த சேஷதிசையில் தனபிறபலமும் பின் கூ-ம் மிடம் மேஷம் குச னைக்கூட்டிய யெண்களை கூ-ல் கழித்தசேஷம் ரொணமுண்டென்பதான திசைபுக்தியென்றுங் கண்டறிந்து கூறல்வேண்டும்.

சகோதிராதி பலன்.

சனி குசன் மகரம் இவைகளுக்கு ந-மிடத்ததிபதிபனின்ற இராசி நாதர்கள் இந்த மூன்றும்பாவத்துக்கு உடலுயிற்போன்ற சீவசரீராதிபர்க ளாதலால் இவ்வைவரையும் பதினொன்று பதினோருமிடத்ததிபதிநின்ற ரா சிநாதர்களுக்கு மூத்த சகோதிர ஸ்தானாதிபதி நின்ற இராசிநாதன் எந்த இடத்திலிருக்கிறானோ அவை அந்த பாவத்திற்கு உடலுயிரென்றுங் கொள்ளவேண்டியது இவைகளை யறிந்து பெலாபெல யூகித்தலின்மேல் இவ்வேழு பாவங்களையும் குறித்து பலன் கூறவேண்டுவனவாம்.

குசன் யெவ்விதமிருக்கினும் சனியும் சனிமூலமான ப்ராண சரீரர்
களும் பெலத்தும் அவர்கள் பெலவானாகியும் சுபரான பெலமானால் சுப
க்ஷேத்திரத்திலேயே நின்றும் ஆறு இராசிகளுக்குள் உபயம் அல்லது ஸ்தி
ரத்தில் தனக்குறிய சுபக்ஷேத்திரமான விருச்சிகம் தனுசு கும்பம் மீனம்
இவைகளில் சனி பாம்பு குசனை இருபாவர்கள் சேராமலும் உபயமேயா
னால் யேராளமான பல சகோதிரமானாலும் பிரபலத்துடனும் அதிகயோக
மும் குசன் தனித்து மூன்றிலிருக்கினும் சகோதிர விருத்தியுண்டாகும்
சீவசரீராதிபர்களில் ஒருவர் பாவக்ஷேத்திரமல்லது தனக்கு விரோதிகளு
டன்கூடி பெலமற்று சரவிராசியல்லது ஸ்திரத்தி லிருந்தாலும் சனிபகை
நீசஞ்சத்துருஸ்தான கெதனானாலும் பாம்புமுதலிய பாவர் மூன்று பதி
னொன்றிலிருக்கினும் அதற்குறிய சீவசரீரகாரகர்கள் பெலமற்று இருக்கி
னும் சுபர் முதலிய திருஷ்டிகளில்லாம லிருக்கில் சகோதிர மில்லாதவ
னாகியும் குடும்ப விருத்தியில்லாத சகோதிரனாகியுஞ் சகோதிரமூலமான
பலவித துக்கமும் மனக்கவலைகளையும் அடைந்துவரப்படும் என்றுங்
கருதவேண்டியது இவர்களுடன் பாவர்களுஞ் சுபருங்கலக்கினும் மகரம்
கன்னி யிவைகளில் பாபசுப சமபெலத்துடன் இருந்து தத்பாப சீவசரீ
ராதிபர்கள் வெகுவான பெலத்துட னிருக்கினும் சுபசம்மந்த திருஷ்டி
யானாலும் சகோதிரங்கள் அடுத்தவைகள் நஷ்டமடைந்தபின் பிரபல
மான அனேக சகோதிரங்கள் விருத்தியுண்டாகு மென்றும் சகோதிர
சீவ சரீராதிபர்கள் பூரணபெல சுபக்ஷேத்திர வாசிகளானால் மிகவும் பிர
பலமான சகோதிரற்களால் யோகபாவ முதலிய பெருஞ்செல்வ வந்தனா
வன் யென்றும் சீவசரீர காரகர்களுக்கு முன்பின் பாவர்களோ பெலத்து
நிற்கினும் நோக்கினும் சகோதிரங்களானவைகள் யாவும் பலவாறாகி நஷ்
டமும் அத்துடன் புதன் சனியுடனல்லது புதன் சனிகிரகத்தில் வாசஞ்
செய்தாலும் அப்படிக்கொற்ற சகோதிரனல்லது சாதகன் பிரகுடும்ப புத்
திரனாகி சிவீகாரம் அபிமானம் தொள்ஹித்ரம் இத்தியாதி பாகங்களை
யடைவன் அவ்விதமில்லாவிடில் சகோதிரமின்றியும் சாதகன் மாதுரு
கருமங்களுக்கு பாத்தியமின்றியும் போய்விடுவன் சீவசரீராதிபர்கள்
தனக்குறிய சுபக்ஷேத்திர சம்மந்தத்துடனும் சனி குசன் முதலியோர்க
ளானவர் கேந்திரகோணமான விருச்சிகம் கும்பம் மீனம் இவைகளிலும்
தத்ஸ்தானாதிபதி பெலத்தும் கேந்திரகோண சுபக்ஷேத்திர கெதனாகியும்
சரயிராசிகளி நின்றும்சூரியன் புதன்குரு இவைகளை யல்லது பூர்வபட்ச
சந்திரனைக் கூடினாலும் பார்த்தாலும் அவை சரயிராசியான மகரம் மே
ஷம் கடகம் துலாமிவைகளானால் சகோதிரம் மருதாாம் பிதுரு
வுக்கு முண்டென்றும் அவைமூலிய மேன்மை அல்லாமலும் பலவித

மான சு-குடும்பத்திற்கு மேலான சகோதிர வம்சங்களை யுடைய வனுகியும் வாழ்வன் இதில் இருவாஸ்திரராசி உபயராசிகளில் மூன்று பெயர் இருந்தாலும் சகோதிரங்களநேக விருத்தியில் பிதுருவுக்கு பலதாரவகையால் விருத்தியுண்டென்றும் மேற்கண்ட சுபபெல கிரகங்கள் ஸ்திரத்திலேயே நின்றகால் சாதகனுடைய பிதுருவுக்கு ஒரேதாரவம்ச சகோதிரம் விருத்தி யொழிய வேரில்லை ஸ்திரசரமானல் மருதாரமென்ற ஓர் தாரவம்ச சகோதிரக்ஷயமும் மற்றவகை தார வம்ச க்ஷேமமுண்டாகும் ஆகையா லவைகளுக்குரிய சகோதிரங்கள் மூலிய அபிவிருத்தி நேர்ந்து பலவித சுகத்தை யடையப்படுவனென்றும் குடும்ப மேன்மைகளையு முண்டாகும்.

மேற்கண்ட சீவசரீராதிபர்கள் பெலனற்றும் தனக்கு இயல்பில்லாத இடத்தில் சுப கிரக சம்மந்த மல்லது திருஷ்டியாகியும் தனுசு மகரம் மீனம் மிதுனம் கடகம் கன்னி துலாமிவைகளில் நின்றாலும் அவ்வீட்டதிபர்கள் புருஷக்கிரக சம்மந்தமாகிக் குரு ரவி குசன் இவர்களைக் கூடினலும் குசன் சனி இவர்கள் சுபக்கிரக ஸ்தானமானதில் பெலத்தும் அவ்வதிபனும் பெலத்து நிற்கினும் நோக்கினும் சகோதிர பிற ,ல விருத்தியுடனும் மிகுந்த யோகத்துடையவர்களாகியும் புருஷ சந்ததி ௩-க்கு மேலும் சந்தித்தியடையுவனென்றும் அவைகளால்மேன்பாட்டைவன் அவைகளின் சில வம்சக்ஷயமுமுண்டாகும் ஷ க்கிரகம் பெலமற்றிருந்தவர்கள் நின்ற ஸ்தானதிபதிகள் பெலத்தால் தனக்கு மாருபாடான பிதுரு மருதார புத்திரர்களான சகோதிர மடைவன் குசன் சனி இவர்கள் ஸ்கிரமுபயமரன கும்பம் விருச்சிகம் விருஷபம் சிம்மத்திலும் தனுசு மீனம் கன்னி மிதுன மிவைகளில் குசனல் சனியைப் பார்க்கப்பெற்றும் சுபர்திருஷ்டி இவரிலொருவருக் குற்றாலும் சுபபெலனுடைத்தானவராகினும் சீவசரீரகார காதிபர்கள்இவர்களின் மறைவற்ற இடத்திலும் சுபக்ஷேத்திர சுபராகி ஸ்திர சரவிராசிகளில் இரண்டு முதலிய கிரகத்துடன் கூடியும் உச்சசொ க்ஷேத்திர சம்மந்தமாகியும் இருந்தும் புதனுடன் ரவி பெலத்து நின்றாலும் அவை சரவிராசியானல் புருஷ சந்ததி சாஸ்தியான ௩-முதலிய சகோதிர விருத்தியும் ஒன்று இரண்டுக்குள் பட்ட பெண் சந்ததி வகையையு மடைவன் யென்றும் அவைகளால் கீர்த்தி மூர்த்தி புகழ்ச்சிகளை யடைவார்கள் யென்றும் அவ்விதமான சகோதிர விருத்தியுடன் ஒரேதார பிதுர்வானலும பரஸ்திரீ சம்போக முடையவனென்றும் சாதகனுக்கு மேலே சொல்லிய ரவி

புதன் சனி குசனிவர்களுக்குப் பகை நீசத்துவ கெடுதல் பலன் சாஸ்தியாகினும் சவ்பாதி நாலாகின்படிக்கி அவர்களுக்கு இபல்பில்லாத பெலனைப் பெற்றாலும் சுபவீக்ஷணியம் அல்லது சம்மந்தமில்லாதிருந்தாலும் சனி குசன் மேஷம் கடகம் சிம்மம் கன்னி இவைகளிலும் துலாத்திலும் பல பாவரைக்கூடி யந்த ஸ்தானாதிபர்கள் பெலமற்றும் கூடி இருக்கினும் பார்த்தாலும் சகோதிரவிருத்தி யில்லாமலும் குடும்ப க்ஷபமடைவனென்றும் அவைகளால் பலவாரான வருத்தங்களையுங் கொடுக்கும் சகோதிரங்கள் இருந்தாலும் மத்திப வயசுகளில் தன் குடும்பத்துக்கு இயல்பில்லாமலும் மிகவுங் கடூரமான மரணத்தையும் அடையப்படுமென் றறியவேண்டியது.

மேலேகூறிய சிவசரீராதிபர்கள் பெலமற்றுபாபக்ஷேத்திரம் பாவர்களுடன்கூடி யல்லது வீக்ஷணிக்கப்பட்டாலும் சனி குச னிவர்கள் லக்னாதி சு - இராசிகளுக்குப் பின்னான மேஷம் விருஷபம் கடகம் துலாம் கன்னி இவைகளிலாவது அல்லது சிம்ம மிதுன மிவைகளிலாவது தனக்குறிய சுபரில்லாமல் பாவருடனே பகை நீசாதிகளைப் பெற்றுமிருக்கினும் தத்ஸ்தானாதிபதி பெலமற்றுப் பாவரைக் கூடினாலும் மகர கன்னிகள் பெலமற்ற நீசரல்லது அசுபக்தோர் புதன் சனி இவயைக்கூடி நிற்கினுங் நோக்கினும் பலவிதமான வருத்தங்களையும் சகோதிர மின்றியும் தரித்திராதி பாதைகளையும் மனோகவலைகளும் சகோதிராதிவம்ச நஷ்டமும் இவ்விதமான பலவருத்தங்களையடையப் படுமென்றும் அடிமையாளின்றியும் இவனே பலருக்கு அடிமையாய்த் திரிவனென்றும் அரியவேண்டியது மேலேகூறிய குசன் சனி இவர்களும் சுபட்சேத்திர சுபகெதியிடன் பெலவானாகியும் குரு மிதுனம் தனுசு கடகம் இவைகளிலும் சனி மகரம் கும்பம் துலாம் விருஷபம் மீனங் தனுசு இவைகளிலாவ திருந்தும் சுபராகிய சுக்கிரன் புதன் இவரையல்லது பூர்வபட்ச சந்திரகேந்திர சமேதனானாலும் சாதகனுக்கு மேற்சொல்லியமகற மீனம் இவைகளிற் சுபர்நின்றும் அல்லது பாவரிருக்கினுஞ் சுபசம்மந்த திருஷ்டியுடன் ரவிபுதன்கூடி நிற்கினும் நோக்கினும் சிவசரீராதிபர்கள் பெலவானாகி நின்றாலும் அத்துடன் ஸ்தானங்கிரகம் அதிபதி இம்மூன்று பெலன்களையும் பெற்றும் ச்ரவிராசிகளில் நின்றால் யோராளமான சகோதிரபிசைகளானது தசமத்துக்குமேற்பட்ட சகோதிரமுண்டென்றும் இதில் சுக்கிரன் அபெலனாகிக்கூடி நிற்கினும் சந்திரன் கூடினாலும் நோக்கினாலும் தகப்பனுக்கு தாரயோக பெலனான உ-முதலிய பலதார வகையுள்ளவனாப்

அந்த தாரவகை புத்திராதிகளான சகோதிரனுடையவன் யென்றும் சூரியன் சனி இவ்விதமாக யெந்தலக்கினத்திற்கும் அல்லது இதன் திரிகோணலக்னத்துக்கு முக்கியம் கூடினுலுமல்லது இந்தலக்கினத் திற்கே கூடி நின்ருலும் தகப்பன் சாதகன் முகம்பார்ப்பன் சாதகன் தகப்பன் முகமரிவதற்கு முன்னமே பிதா மரணத்தையடைந்து விடுவன் அதாவது ஓசையாகவுமிருக்கவேண்டும் இந்த விருச்சிகத்துக்கு இவ்விதமானபடி நிற்கின் சகோதிர விருத்தியுண்டு பிறபலருனுலும் கும்பட்சயமுடையவர்களாகி வாழ்வர்கள் இதில் மேற்கூறிய ஸ்தானம் ஸ்தானுதிபதி ஜீவ சரீராதிபர்கள் சுபராய்க் கெட்டும் பகை நீச சம்மந்தமானுலும் ௩-௬-௮-௧௦-இவைகளில் தனக்கு இயல்பில்லாத இடத்தில் நின்ருலும் பகைபாவ ரிருபக்கத்தில் நெருங்கினுலும் சகோதிரமில்லை யென்றும் ஓர் சுபர் இப்படி நெருங்கியவர்களைப் பார்த்தாலும் இந்த மூவரில் இருவர் சுபட்சேத்திர பெலமிருந்தாலும் அந்த இடத்தாதிபன் யெவ்வளவு பெலனுடனிருக்கிருனே அத்தனை பெலனுக்குரிய கிரணமுள்ள சகோதிரவிருத்தியுண்டென்றும் அரியப்படும் சுபபெலன் வலுத்து நிற்கின் விசேஷமான பிரபலத்துடன் இராசயோக வல்லபரான சகோதிரமும் மத்திமவயதில் மிருதமடைவர்களென்றும் அவையால் பலவித துக்கசோகமும் சிலனுளடிமை முதலிய விருத்திகளும் சிலனுளடிமை இன்றியும் ஆவன் சுபபெலமே சாஸ்தியானுல் அவர்கள் கிரணத்திற் கிசைந்த சகோதிரலாபமும் விருத்தியும் இதில் பெண்புருஷபாகமும் கிரகசமஸ்தமான மிவைகளுக் கிசைந்தபடி சொல்லவேண்டியது அவ்வித சுப பெலத்தால் அந்தியகாலவரை சகோதர விருத்தி அடிமையான விருத்தி யிவ்விதமான யோகபாவங்களைக் கூறவேண்டியது.

சகோதிர பாவ கெணிதங்கள்.

குசனுடனும் சனி மகர மிவைகளுடனும் இவைகளுக்கு மூன்ருமிடத் ததிபதி எந்த வீட்டிலிருக்கின்ருனே அவ்வதிபதியுடனும் கூடிய யெண்களை பெலாபெலப்படிக்கு தனித்தனி இராசியெண்களிற் பெருக்கி அந்தந்த கிரகங்களின் பெலனுக்குரிய துகைகளிற் கழித்து தனித்தனி வைத்த சேஷம் சுபா சுபஸ்தான பெலன்கள் முதலிய வீக்ஷணியபெலத்திற் கிசைந்தபடி தள்ளிக்கண்டவைகளில் நிற்குந் தனித்தனி கிரகயெண்களை பெண் புருஷகிரகங்கள் கொடுத்தவையுந் தீர்க்கத்தையும் அரிந்து சொல்வதே சகோதிரகணிதமாகும் அத்தொகைகளை தனித்தனி ரு-ல்

பெருக்கி கூ-ல் கழித்த சேஷமும் வந்த ஈவை ௹-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷமான திசாபுத்திகளில் சகோதிரலாப விர்த்தியென்றும் அவையவைகளுக்கு யெட்டாமிடத் ததிபதி நின்ற இராசிநாதன் உடன் கூடிய யெண்களேயும் பெலாபெலப்படிக்குக் கண்டறிந்தவைகளை தனித் தனி மேற்கண்ட கிரக யெண்களுடன் கூட்டி ௹-ல்பெருக்கி கூ-ல்கழித்த சேஷம் சகோதிர நஷ்டமென்றும் இவைகளில் மேற்கண்ட தொகைகளை யெல்லாம் ஒன்று சேர்த்து ௹-ல் கழித்த சேஷம் ஒன்ருனல் செலத்தின் சம்பந்தத்தால் சகோதிர மரணமென்றும் உ-ஆகில் மணகல் முதலிய வஸ்துவினலல்லது மிருகாதிசீவ ஜீகளால் மரணமென்றும் ௩-ஆகில்அக் கினி முதலிய ஆயுதம் ஊஷ்ணங்களால் ரெக்தவிரண மரணமடைவன் குலக்கு சமானமான தாப மரணமென்றும் ச-ஆகில் க்ஷுத்திராதி தேவதை முதலிய மனுஷிய சீவனுலும் விஷத்தால் மரணயேதுவென்றும் ௹-ஆனல் யேற்கனவேயுள்ள நாள் வியாதிகளால் மரணமடைவனென்றுங் கூறப்பட்டிருக்கிறது இவைகளை யெல்லாம் சர்வலக்னங்களுக்கு முறைப் படி பார்த்தரியவேண்டியது யென்றுங் கொள்க.

கிரகம் வாகனம் பூமி வியாபாராதி வித்தை தாய் இவைகளைப்பற்றிய பலன்.

சனி சுக்கிரன் புதன் கும்பம் இவைகளுக்கு நான்காமதிபதி நின்ற இராசிநாதனைக் கொண்டுரைக்க வேண்டும் புதன் குரு இவர்களுக்கு நான்காமதிபதி நின்ற இராசிநாதனைக்கொண்டு வித்தைகளையும் சந்திரன் புதனிவர்களுக்கு நான்காமதிபதி நின்ற இரரசிநாதனைக் கொண்டு வியாபாறமும் சுக்கிரன் சனி இவர்களுக்கு நான்கா மதிபதியைக் கொண்டு கிரகம் பூமி வாகனங்களையும் சந்திரன் சனி கும்பம் இவைகளுக்கு நான்காமதிபதி நின்ற இராசிநாதனைக்கொண்டு மாதுருபலத்தையுங் கூறவேண்டும் இவைகளுக்கு கூறிய இரண்டிரண்டு ஆதிபத்தியங்கள் அவ்விதபாவங்களுக்கு சீவனென்றும் சரீரமென்றும் பெயராகும் ஆகையால் அவ்விதமான அவ்வவ்வ பாவங்களுக்கு சீவனம் சரீரமும் உரிய ஆதிபதிகள்பெலனுகில் அவ்வவ பாவப்பிறபலமும் அவ்வவ சீவ சரீரமானேரில் ஒருவர் கெடினு் அற்பமும் இருவரும் கெடில் அந்தபாவ மொன்றுமே பலனடைய மாட்டா னென்றும் பாவப்பொது விதியைக்கூறினம் ஆகையால் இவைகளை யாராய்ந்து விதியுணர்த்தி விதிஞாலுறைக்க வேண்டும் இவ் விதி நூலில் யெண்களை யரிந்து அவைமூலமாக நடத்தாதவறையில் நூற் பயனிழந்து பார்ப்பவழி திகைத்து ஒன்றிருக்க வொன்றைப்புகன்று

மாருபாட்டின்மையால் ஒன்றுரைக்க ஒன்று நடப்பவையாகவும் சில வற்று சரியொற்று சிலவற்று பயனற்றும் போகின்றமையால் அவ்வழி பிரஜா துரைத்த இக்கிரந்தநூலைக் கணிதகண்டித பாவஸ்படநூலென வரிந்து நடக்கவேண்டியது.

மாதுருபாவம்.

சனி சந்திரன் கும்பம் சனிக்கு நான்காமதிபதிநின்ற இராசிநாதன் சீவனென்றும் கும்பத்துக்கு நான்காமதிபதி நின்ற இராசிநாதன் சரீரமென்றும் பெயராகும் இந்த ஐந்தி னதிபத்தியக் கிரகங்களுக்கும் தங்கள் தங்களுக்குரிய சுப பெலத்துடன் கேந்திர கோண சமத்துவ பெலனைப் பெற்றும் மேலான சுப ராசி சுபக்ரக சம்பந்த மல்லது பார்வையுடனிருக்கினும் அதில் பெல முற்றவர்களாய் மூன்று வகைவாற் சுபபெலத்தைக் கூடினும் மாதுரு விருத்தியும் விருத்தாவஸ்தை தாய் மரணமும் மாதுரு வகை பிர பல விருத்தியுடன் ராசயோக வல்லபராகியும் அதிக மேன்மையுடனும் பிரபலராகியும் வாழ்வார்கள் சந்திரன் நீசமாகி அ-ச-இவையிற் க்ஷீணபெல பாவருடன் கூடி மேற்கூறிய மூன்று வகைப் பெலனுடனிருந்தாலும் குசன்சேர்ந்தலது நோக்கினும் தாய்க்கி பலவித தேகரோகெண்டமுண்டாகி நீங்கும் இவர்களுடன்சுபரின்றி தனித்திருக்கில் பகையான இட சம்மந்த மானல் தகப்பனுக்கு மருதார மாதாவிற்குங் குடும்பஞ் சாதக மிவர்களுக்கு விரோதமும் ரோகசரீரியாவள் பாப பெலம் அதிகமானலும் மேற்கூறிய ஐவரில் மூவர்கள் பெலமற்றுப் போனலும் அவரிருக்கு மிடம் பாப க்ஷேத்திர மானலும் தாயானவள் பாலிய மரணமும் பிதாவுக்கு மருதாரமுடைய சாதகனவன் இவர்கள் பகைநீச க்ஷேத்திர யுதர்களாகியும் சந்திரனும் நீசம் பகையில் சு-அ-கஉ-ச இவைகளிலிருக்கினுந் தாய் சிசு முகம் பார்க்காமலல்லது சிசுதாய்முகம் பார்க்காமல் மரணமாவர்களென்றும் இதில் சனி பாம்பு குசன் கூடினல் மாத்திரும் இவ்விதம் அடைவன் யென்றும் அதிலும் பாவர் சுபரானல் மத்திமவயதில் தாய்மரணமும் சுபராகினும் பாவரானல் கூடினலும் பெலன் கெடினும் பாலியத்திலயே தாய் மரணமென்றும் புதன் குரு ரவி முதலியோர் கூடி யல்லது பெலத்துட னிருக்கிறதில் சுக்கிரன் புதனிவராகில் யெவ்வனத்தில் தாய் மரணமாகி விடுவ ளென்றும் குரு ரவியானல் விருத்தாவஸ்தையில் மரணமாவளென்றும் பெலமற்ற ரவி, சந்திரன் புதனகில் கவுமாரா வஸ்தையில் மரணமாவளென்றும் இவ்விதங் கூறல்வேண்டியது.

மேற்கண்ட ஐவர்களும் பெலனன்றும் சிம்மத்தில் பாவரிருந்தும் சந்திரன் சனி வனுவுடனிருக்கினும் மாதும் ஹீனனாகி மாதுரு மரண காலத்தில் இல்லாதவனாகி யடைவனென்றுங் கண்டு சொல்ல வேண்டியது மேற்கண்ட சிவசரீராதிபர்கள் ஒன்றாகினும் பெலவானாகிச் சுப க்ஷேத்திரத்தினிற்கினும் அவ்வதிபன் பெலவானாகி கேந்திர கோண நட்பு முதலிய மூவித உயர்பெலனைப் பெற்றிருந்தபோதிலும் தாய் கவுமாருவஸ்தை வரையிற் ஆயுள் தீர்க்க மடைவனென்றும் ஆகையா லவ்வித கிரகங்களுடனே அந்த ஸ்தானாதிபதி பெலவானாகிநிற்கினும் நோக்கினும் யெவ்வனத்திலயே தாய் மரணமாவளென்றும் அவ்வித மடையாவிடில்தாய் பாலிய மரணமுண்டாகும் பாப க்ஷேத்திரம் இருபுரம் பாபமத்தில் பெலனற்றும் ஸ்தானாதிபதிகள் பெலனின்றியும் இருக்கில் தாய் உடனேமரணமாவளென்றும் அதாவது சாதகன் செனித்தவுடனென்றும் சுப கிரகவாசத்திலும் குரு சனி பெலத்தும் சந்திரன் சுப க்ஷேத்திர வனுவில் நிற்க்கில் வயோதிக காலம் தாய்மரணமென்றுங் கூறப்படும்.

இட விசேஷ ஸ்தானமும் கிரகங்களையுங் கூட்டி மாதுருபெலனரியவும் சிவசரீராதிபர்கள் ஒன்றாயல்லது சுபமித்துருவாகி தனக்குரிய பல நன்மையிலும் சனி சந்திரனிவர்கள் தனுசு மகரம் மீனம் விருஷபம் கடகம் சிம்மம்இவைகளில் அவரவர்களுக்கு இணையுள்ள சுபக்ஷேத்திரத்திலும் பெலவானாகி தனக்குரிய சுபர் பகையாலும் பாவராலும் கூடவல்லது திருஷ்டி இல்லாதிருக்கில் தாய் விருத்தாவஸ்தை வரையில் தாய் தீர்க சீவியாவள்யென்றும் சுபபெலமதிகமானல் தாய்வழி வம்ச விருத்தியுடனும் பிரபல யோகத்துடனும் வாழ்ந்துவரக் கடவர்கள் மிக்க மேன்பாடுகளையும் அடைவர் இவைகளுடனே அதிக கிரகம் பாவகிரக சம்மந்தத்துடன் சுபக்ஷேத்திரத்தி லிருக்கில் அல்லது பார்த்தும் இருபக்கம் பாவர் கூடினாலும் மேற்சொல்லிய சந்திரன் முதலியோர் பகை நீசாதி அபெல பாப க்ஷேத்திரமானாலும் பெலமற்றிருக்கில் தாய் பாலியத்திலேயே மரணமாவள் க்ஷியோர்கள் சமமான பாப சுபக்ஷேத்திரங்களில் பகை நீசாதி அபெலராகியும் சம சுப அசுபருடன் அல்லது பாவராகி தனித்து நின்றாலும் பாப பகை சேத்திரவாசமானாலும் யெவ்வனத்தில் மரணம் உபய விராசிகளிலும் அதிகத்தோர் பெலத்தும் பாபிகள் பெலத்தும் சுபபார்வை யல்லது கூடி இருக்கில் கவுமார காலத்தில் மரணமும் சரஸ்திர விராசிகளில் பெலத்து நிற்கில் கௌமாரத்தில் மரணமாவள்.

மேஷம் மிதுனம் கன்னி துலாம் விருச்சிகம் கும்பம்இவைகளில் சந்திரன் சனி நிற்கினும் பாவரைக்கூடினும் பகை நீசத்துவராகினும் சிவசரீராதிபர்கள் விரோதம் பகை நீசக்ஷேத்திரஸ்தானம் அமர்ந்து இருந்தாலும் தாய்பாலியத்திலயே மரணமாவளென்றும் அசுப பெல னில்லாமலும் சுபர் பெலத்தும் மிருக்கின் தாய் விருத்தியும் மாதா வார்த்திக திசையில் மரணமாவளென்றும் சுபக்ஷேத்திரமாகி பாபரு டன் கூடியும் அல்லது இரெண்டு பக்கமும் பாவக்ஷேத்திர சம்மந்தத் துடன் இருக்கில் மற்றய இராசிகளி லெவ்வித மிருக்கினும் தாய் பா லியம்விட்டு யெவ்வனத்தில் மரணமாவளென்றும் சுபகிரத்துடன் பா பட்க்ஷேத்திரத்திலும் அந்த அதிபன் பெலத்தால் கவுமாரவயதில் தாய்மரணமும் அதிபதி பெலக்காவிடில் யெவ்வனத்திலயே மரணமா வளென்றும் அரிக.

இவைகளை யெல்லாந் தனித்தனி கிரகபெலனுக்குரிய எண்களை அந்தந்த இராசி யெண்ணற்பெருக்கி கூ-ல் கழித்த தனித்தனிவந்த சேஷமான திசாபுக்திகளில் தாய் மரணகெண்ட காலமென்றும்இந் தத்துகையாவையும் ஒன்றுபடுத்தி ரு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சே ஷதிசையும் வந்த ஈவை ரு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷம்புக்திகா லத்திலும் தாய் மரணமாவளென்றுங் கண்டரியவேண்டியது.

கிரகவாகன பலன்.

சுக்கிரன் சனி இவர்கள்பெலத்தும் இவர்களுக்கு நான்காமிடத்ததி பதிகள் பெலத்தும் கேந்திரகோண சுபக்ஷேத்திரத்தில் வசிக்கினும் சுப பாவரைக்கூடினும் பலவகை பிரபலவாகனம் யெப்பொழுதும் உள்ளவ னுவன் இவர்கள் பெலமற்றும் பாவருடன் கூடினும் நோக்கினும் ஸ்தா னம் பகை நீசக்கோளிருந்தாலும் கிரகவாகனமின்றி யலேவன் சுபபாவ சம்மெளனமாகி கலர்ந்தாலும் தனித்து பாவட்சேத்திர வாசனுனலும் சிலநாள் பூர்வவாகனமிருந்து பின் வாகனங் கிரகம் இழந்துபோகும் சுப க்ஷேத்திரத்தி லிருந்து சில இணையுள்ள பாவரைக்கூடினும் நட்புள்ள பாபிகளாகி மேற்கண்ட ஸ்தானத்திலிருக்கினும் வாகனமானது சிலநாள் பூர்வமில்லாமல் நூதன வாகனமுடையவனுப் வாழ்வன் பின்காலத்தில் நூதனமாகியும் கிரகமுதலிய வகைகள் சேர்ப்பனென்றும் குசனுடன் ஸ்தானுதிபதியும் குசனுக்கு சுசமாதிபதியும் பெலத்துட னிருந்தும் சந் திரன் சுக்கிரன் சனி இவரைக்கூடினும் பூமிமுதலிய பலவித வியாபாரு

மும் தனதானியாறபலமும் அதிகயோகமுள்ளவனுகி வாழ்வன் பூமிகிரக வாகனமுண்டுஇவர்களிருக்கும்க்ஷேத்திரமும் சிவசரீராதிபர்கள்வாழுமிட மதிகமாக சுபசரமானுலும் பரவஸ்திர இராசியானுலும் பல இடங்களில் பூமி கிரகவாகனஞ் சம்பத்து அதிகாரமுள்ளவனுகி வாழ்வன் இதில் ரவி குசன் பாம்பு பகைவருடன் கூடிநிற்கினும் நோக்கினும் பூர்வார்ச்சிதபூமி கிரகவாகனங்கள் பலவாருக விவாதசத்துரு ரோணமுதலிய பலவித துக்கசோகத்தினுல் நஷ்டமடைந்து இழந்து விடுவன் இரெண்டு பாபியில்லா மலொரே பாபருகினும் இரண்டு முதலிய சுபர்கூடினுலும் ஸ்தானுதிபதி சிவசரீராதிபர்கள் அதிகமாக உபயசரமிவைகளில் நிற்கில் தனமானதும் பூமி கிரகவாகனங்கள் முன்னின்ற நஷ்டம்போலவடைந்து பின் செய லாபத்துடனும் மாடமாளிகையுடனும் அதிக பிரபலத்துடன் ராசயோக வல்லபனுகி வாழ்வனென்று மிகவு மேன்பாடுகளுந் தனதானிய யோகவானுவன் சிவசரீராதிபர்களும் சுக்கிரன் சனி கும்ப மிவைகளில் பாவரும் பாவக்ஷேத்திர மாகியும் சுபரானுல் பகைவராகியும் அபெலத்துடனிருக்கினும் ௬-அ-௧௨-இவைகளிலும் நீசம் பகைகளிலும் இருபுரம் பாவட்சேத்திர மல்லது பாவரிருந்தாலும் வாகனமின்றியும் பூமி கிரகவாகனசம்பத்து இல்லாமலும் பலவாரான கஷ்டநஷ்ட துன்பமும் அடைவன்.

புத சந்திரவசாத் நான்காமதிபதிகள் ஒருவருக்கொருவர் அனுகூல சுபராகி ௪-எ-௧0-இவைகளானதில் அல்லது துலாம் கன்னி விருஷபம் கும்பம் இவைகளிலிருந்தாலும் அசுப ரஷ்டாதிபர்கள் கூடவல்லது நோக்காமலிருக்கில் பிரபல வியாபார வல்லபனுகி கீர்த்திபெற வாழ்வன் இதில் அசுபர்களானுலும் சிவசரீராதிபர்கள் பெலனற்றுலும் சகலவித மான வியாபாரமும் கைகூடாமல் கஷ்டமடைவனென்றும் பொருள் சேதம் பலவகை கஷ்டநஷ்ட துன்பமுண்டாகு மென்றும் அறிய வேண்டியது சுபபாவ சம்மந்தத்துடன் சமபெலன் பெற்றுலும் வியாபாரம் லேசான விருத்திகளை யடைவனென்றுங் கூறப்படும்.

வித்தியா பலன்.

புதன் குரு இவர்களுக்கு சிவசரீராதிபர்களும் கும்பம் இவைகளுடனும் பெலனுற்ற குரு கூடினும் மேற்கூறிய கிரகங்கள் ஸ்திரவிராசிகளிலும் அல்லது சரமானுல் ஆரோகணமான ஆறு இராசிசரத்திலும் சுபபெலத்துடன் கூடி இருக்கில் சாஸ்திராதியும் இராசவித்தையிலும் தரும சாஸ்திராதிகளிலும் வல்லபனுகி பிரபலயோக முடையவன் இதில் பகை

யுடனும் பாவராகிக்கூடினாலும் பாவக்ஷேத்திரமானதிலும் பகையுடன் தனக்குறிய பாவரும் குசன்வீட்டில் குரு சூரியனிவ ரிருக்கினும் சுக்கிரன் இந்தஇடத்திலனேகரைக் கூடினாலும் பார்த்தாலும்அவ்வளவுசாஸ்தியான வித்தையில்லாமல் சுயபாஷை நாடகாலங்காதி பாஷை ராச பாஷையல்ப்பம் புரிவன் இதில் பாவர்களும் பெலத்து உச்சசுட்சேத்திர நட்பானாலும் சுபர் நட்பு அல்லது பகையாயிருந்தாலும் மேற்கண்ட வித்தையுண்டு ரவி பெலவானுகி உச்சத்துடன் தனக்குறிய இடத்தினின்றாலும் பரம்பரையான பிதா அதிக வல்லபனாகி வித்தையிற் சிறந்தவனாவன் பாவகிரகங்கூடில் பிதுர்வம்சமென யூகிக்கவேண்டும்.

இவர்களுடன் பாபிகளும் பெலமற்று பகைநீசாதி காரிகளாகியும் சுபரும் பெலமற்றும் சீவசரீரம் பெலமற்றிருக்கினும் ரு-அ-கஉ-இவ்வித இடங்களானாலும் வித்தை யெவையும் தேறாது.

முதற்பாறவிற் கூறியபடி நால்வர் பெலத்து கேந்திரகோண சுபக்ஷேத்திரத்திலாவது அல்லது பாபக்ஷேத்திரமானாலும் தனக்கு இணைமித்துரு இவ்வித இடத்திலிருந்தும் பெலமுற்றிருக்கில் சுக்கிரனானால் பலவித இராஜவித்தையும் சுயபாஷையும் கற்றுவல்லபனாய் வழக்குரைப்பன் பாபக்ஷேத்திரம் பாவகிரகம் பார்த்து அல்லது பகைவீடானாலுஞ் சேர்ந்தாலும் அவைகளில் தேறாதவனாகி யாவற்றிலும் அல்பமல்பந்தெரிய அறிவன்.

புதனாகில் கணித பண்டிதாதி வித்தையறிவன் பாபபெலன்பேரில் முடிவில்லாதவனாகக் கணிதமல்பஞ் செய்வன்.

சந்திரன் ரவியானால் தர்க்காதிவாத வித்தைபுரிவன் ரசாயன எந்திரங்கள் உரியவித்தை புரிவன் பாம்பு குசனாகில் சனியானாலும் மந்திரம் முதலிய பில்லி சூனியங் கருத்தொழில் புரிவன் சுபரானால் ஞானநி சத்கரும வித்தையும் குரு சுக்கிரனாகில் உபதேச விதியான வித்தைகளிலும் பாடஞ்சொல்லுங் கல்விகளையும் உடைத்தானவனாவ னென்றறியவேண்டியது.

மாதுருபாவதி கணித பாவங்களாவன.

சந்திரனுடனும் சனி கும்ப மிவையுடனும் இவைகளுக்கு நான்காமதிபதி நின்ற இராசிநாதனுடனும் பெலத்துக்குரிய கிரக யெண்களை

தனித்தனி அந்தந்த இராசியெண்களாற் பெருக்கியும் கூ-ல் கழித்தசே ஷமும் வந்த ஈவை ஐந்தில் பெருக்கி கூ-ல கழித்த சேஷமான புக்தி களிலும் மாதரு கெண்டங்கள் கூறப்பட்டன இதில் மொத்த தொகை களை யொன்றுபடுத்தி கூ-ல் கழித்த சேஷமும் இதில் வந்த ஈவை ரு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷம் திசாபுத்தி காலம் மாதரு கருமமென் றுங் கண்டரியவேண்டியது.

குரு புதன் சனி கும்பம் இவைகளுடனும் இவர்களுள் குரு புத னுக்கு நான்காமதிபதி நின்ற இராசிநாதனுடனும் கூடிய கிரகங்களின் பெலாபெலப்படிக்குக் கண்டரிந்த யெண்களை ஒன்றுபடுத்தி குருவுக்கு நான்காமதிபதி நின்ற இராசிநாதன் பெலனுக்கு இசைந்த யெண்ணிற் கொடுத்த சேடம் எத்தனையோ அத்தனை பாஷையில் வல்லபனென்றும் அரியவேண்டியது.

புத்திரபாவ பலன்கள்.

குருவையும் மீனத்தையும் கடகத்தையும் சந்திரனையும் கொண் டும் இவைகளுக்கு ஐந்தாமிடத்தாதிபதி யெந்த இராசியிலிருக்கிறானோ அந்த ஸ்தானாதிபதியையுங் கொண்டு புத்திரபலன் சொல்லவேண்டியது.

குரு மீனம் மகரம் துலா மிதுனம் மேஷம் இவைகளைத் தவிர்த்த இராசிகளில் சுபகிரக க்ஷேத்திரத்தில் மித்துரு க்ஷேத்திர கிரக சம்மந்த மல்லது தனித்தும் தனுசு மீனம் கடகமிவைகளில் சனி பாம்பு புதனில் லாமலும் பெலவானாகியும் இருக்கினும் பூர்வபக்ஷ சந்திரனாகி குரு கேந் திரகோண கெதனாகியும் தனுசு மீனம் கடகம் விருஷபம் இவைகளிலும் கன்னி யிவ்விடத்தில் சூரியன் புதன் சுசன் பெலத்தும் சந்திரன் சுக்கி ரன் முதலிய சுபரும் குரு மீனம் இவை வசாத் சிவசரீராதிபதி பெலவா னாகி பாபக்ஷேத்திர சம்மந்தமில்லாமலிருக்கினும் சுபரை கூடினும் குரு சந்திரன் சுபருடன் கன்னி இராசி சிம்மராசி இவைகளில் நிற்கினும் பெலத்தோறைக் கூடினாலும் புத்திரர் பிறபல விருத்தி யுடையவர்களாகி யும் மேலானோனாகியும் வாழ்வர் அவர்களுடன் கூடிய புருஷகிரகம் எவ் வளவு யென்றறியப்படுகிறதோ அவ்வளவு இலக்கமுள்ள புத்திரவிருத்தி யெனிறும் பெண் புத்திர விஷயங்களையு முன் சொன்னபடிக்கே கண்ட ரிந்து சொல்லவேண்டியது.

மேலேகுரித்த ரு-இராசிகளில் குரு விருந்தும் மீனம் கடகம் மிவை களில் சனி சூரியனை விட்ட புதன் பாம்பு இவைகளிருக்கினும் நோக்கி

னும் அவ்வீட்டதிபர்களும் சீவ சரீராதிபர்களும் பெலமற்றும் பகை நீசாதிபாவர்களுடன் கூடினாலும் பாபபெலனையடைந்திருந்தாலும் புத்திர தோஷமும் சிவீகாருதி புத்திர பாவாதிகளை யடைவனென்றும் யிவ்வித பாவர்களுடன் சந்திரன் குருபெலமற்றும் பகை நீசசுபரல்லது சனிபாம்பு முதலியவரைக் கூடிநிற்கினும் நோக்கினும் புத்திரகருமஞ் சாதனுக்கு கிடையாதென்றும் குரு சந்திரன் சீவசரீராதிபர்களில் லதிகமானோர் மகற கும்பம் மிதுனங் கன்னி இவைகளிலும் அவரவர்களின் பகை நீசாதி இடங் கிரக மிவைகளுடன் கூடிநிற்கினும் நோக்கினும் பாவரே வந்த ஸ்தானத்தில் அல்லது இடத்தில் பாவரு மில்லாமல் இவர்களில் சுபர் நோக்கமில்லா திருக்கில் புத்திரபாவமே கிடையாதென்றும் இவர்களில் சிலர் பகை நீசம் கேந்திர இடங்களாகி குரு அல்லது சந்திர னிருக்கி னும் ரு-கூ-இவைகளைச் சுபர் திருஷ்டியும் பெலத்தும் மேன்மையுடனும் சரீராதிபன் உச்சத்திலந்த வசுபருடன் கூடி பெலத்தும் அவ்வீட்டதி பன் கேந்திரங்களில் நின்றாலும் சாதகனுக்கு சுக்கிரனல்லது சந்திரன் சீவனல்லது சரீராதிபத்தியம் அவர் சம்மந்தம் பெற்று பகையுடைய கிர கத்தோடு மறைவிடமான ௬-௬-அ-௧௨-இந்த இடங்களினின்றாலும் சந் திரன் புதனிவர்களி லெவர்கள் கூடினாலும் அவை சாஸ்திர விராசிகளா னாலும் முதல்தார வம்சத்துக்கு புத்திராதி விருத்தியடையாமல் துதிய மனைவி வகையால் புக்திரலாப குடும்பசுக மடைவனென்றும் அவ்விதம் முதல் தாரங்களுக்கு புத்திரபாவ முண்டானாலும் தாயுடன் மரணத்தில் முதல் சிசுமரணம் பின் தாயனு மரணாதி பாதையடையப்படும் மென்றுங் குடும்பத்தில் பலவித துக்கசோக முண்டாகும் பின் தாரசுதனாற் கரும மும் உண்டாகும் இதில் குருவுடன் பாவர்களாய் பாவக்ஷேத்திர கெதி யுட னிருக்கினும் சீவசரீரகாரகர்கள் ஸ்திரமுபய விராசிகளில் பகை நீசத் துவாதி சுபரும் பெலமுற்ற அசுபரைக் கூடினும் புத்திரவிருத்தி பின்தா ரம் வந்தும் விருத்தியடையானென்றும் சீவசரீரர்கள் தனித்து சுபக்ஷேத் திர வாசமானாலும் பாபர்கள் சுபர்கள்கூடி நின்றாலும் பார்த்தாலும் குரு வுடன் பாவசுப சம்மந்த வீக்ஷணமானாலும் அகால புத்திருடன் மரு வம்ச களத்திர மூலமாக புத்திரரை விருத்தி யடைவனென்றும் அவ் வித குடும்பமூலிய சுக சௌக்கியங்களு மிகுந்த வனுகூலம் உண்டாகும்.

தனுசு மீனம் கடகம் துலாம் இவைகளில் பாவரிருக்கினும் ஸ்தா னாதிபதிகளான சுக்கிரன் சந்திரன் குரு இவர்களும் சீவசரீராதிபர்களும் பெலமற்று பாவக்ஷேத்திரமான கன்னி மிதுனம் மகறம் கும்பம் விருச் சிகமாகி நிற்கினும் நோக்கினும் பகைவரைக் கூடினும் குரு சந்திர னிவர்

கள் பகை நீசத்துவத்துடன் இருக்கினும் சாதகனுக்கு புத்திரபாவலாபமு மின்றி அன்னிய கரும பாத்திபனாகிப் பலவகை வருத்தங்களையடைவனென்றும் மனதுக்கு துக்கசோகங் குடும்பசோகமும்மேற்கூறிய அருவகையார்களில் மூன்றுக்குமேல் சுபபெலனு மற்றவைகள் அசுபபெலத்தைப் பெற்றிருந்தபோதிலும் பாபக்ஷேத்திர கெதியுடனிருக்கினும் நோக்கினும் புத்திர விருத்திகளுக்கும் மறுதாரமூலமான குடும்ப விருத்தியுடையவனென்றும் இரெண்டு சுபர்களிருந்து கூடினும் பார்த்தாலும் சாதகனுக்கு முன் களத்திரவகைகளாலேயே குடும்ப புத்திரயோக மேன்பாடாகிய சுகசௌக்கியங்களும் இஷ்டகாறிய செயசித்திகளும் அதிக மேன்பாடுகளும் உண்டாகுமென்றும் சொல்லப்படும்.

குரு சீவசரீராதிபர்கள் விருச்சிகம் தனுசு மீனம் மேஷம் மிதுனங்கடகம் இவைகளில் பெலத்துடன் தனக்குரிய சுபக்ஷேத்திர கெதியுடனிருக்கினும் நோக்கினும் பெலத்துடன் பார்த்தாலும் புத்திரபாவமானது அதிக விருத்தியுடனுங் குடும்ப க்ஷேமத்துடன முதல் களத்திரமூலமான புத்திரபாவ லாபமும் செயமுமுண்டாகும் இவர்கள் பாபக்ஷேத்திரம் பாவர்களுடன் கூடினாலும் பகை நீசத்துவர்களானாலும் இருக்கில் புத்திர விருத்திகிடையாதென்றும் இவைகளில் சில சுபமத்தியத்துடன் சுபர்கள்கூடினாலும் பார்த்தாலும் சுக்கிரன் சந்திரன் பெலமற்றுக்கூடினாலும் தாரம் இரெண்டாவது வகையினால் புத்திரலாபமுண்டென்றும் குடும்ப சுகசௌக்கிய மேன்பாடுகளு முண்டாகுமென்றும் குரு சரீரசீவாதிபர்கள் மகர கும்பம் கன்னி இவைகளில் இருந்து பாவருடன் சனி பாம்பு ரவியைக்கூடாத புதனைக்கூடி நின்றாலும் ஸ்தானாதிபர்கள் பெலமற்று பகைவீடானாலும் சாதகனுக்கு புத்திர விருத்தி கிடையாதென்றும் சில சுபசம்மந்த மல்லது சுக்கிரன் சந்திரன் கூடினால் மறு தாரவகையால் பின்காலத்தில் புத்திரலாபமுண்டு அல்பபுத்திரயோகவானென்றுங் கண்டறியவேண்டியது.

விருஷபம் சிம்மம் துலாமிவைகளில் சுபரான குரு சுக்கிரன் சந்திரன் ரவி குசனிவரிருக்கினும் நோக்கினும் பெலமுடைய ஒருவருக்கொருவர் பகை நீசாதி சத்துரு வில்லாமலும் அசுபரானாலும் சுப பெலத்துடனிருக்கினும் புத்திர விருத்தியோராளமானதால் முதல் தார வம்சத்திற்கே பிரபலமும் சுபரின்றி பாவக்ஷேத்திரத்தில் சனி புதன் பாம்பு இவ்வறைக் கூடினாலும் பார்த்தாலும் புத்திர ரிருந்து

சரியான வயது காலங்களில் விருத்திபோல் காண்பதது கடைக் காலத்தில் புத்திரகருமமடையமாட்டானென்றும் பாவருஞ் சுபரும் புதனல்லது சுக்கிரன் ரவி கலந்தாலும் அல்லது இவர்கள் பார்த்தா லும் பெலத்துடனிருந்தாலும் சாதகனுக்கு பின்மனையாள் மூலமான புத்திரலாபசேயத்தை யடைந்துவரப்படுவனென் றரியவேண்டியதீ.

புத்திரபாவ கெணிதம்.

குருவுடனும் மீனத்திலும் இவைகளுக்கு ஐந்தாமிடத் ததிபதி யெந்த வீட்டிலிருக்கின்றானோ அவ்வித அதிபனுடனுங்கூடிய கிரக யெண்களை தனித்தனி பெலனுக்குள்ளபடி யெண்களை இராசியெண் களிற் பெருக்கி அந்தந்த கிரக பெலா பெலனுக்குரிய யெண்ணிற் கழித்த சேஷம் புத்திரபாவமென்றும் அதில் ஸ்திரீ புருஷகிரகமரிந்து பாகித்துக் கண்டவை பெண் ஆண்யென்றும் பின் மொத்தமான யெல்லாத்துகைகளையும் ஒன்றுபடுத்தி வைத்ததை அந்தந்த கிரக மிருந்த இராசிகளைக் கூட்டி ௯-ல் வகுத்த சேஷம் உபயம் முதலாக யெண்ணிக்கொண்டு உபயமீந்தால் கரு-லும் ஸ்திரமானால் க0-சர மானால் ரு-லும் கழித்துக் கண்டவை புத்திர பாவ விருத்தியென் றும் மேற்கண்ட நால்வகைத் துகைகளைப் பெருக்கிக்கண்ட மொத் தத்தை கூ-ல் கழித்த சேஷம் திசையிலும்வந்த ஈவை ரு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷம் புக்தியிலும் புத்திர லாபமென்றும் இதில் குரு வும் மீனத்து மஷ்டமாதிபதி நின்ற ஸ்தானாதிபதி யெந்த வீட்டிலி ருக்கின்றானோ அவ்வதிபனுடன் கூடிய யெண்களை பெலப்படி ராசி யெண்ணாற் பெருக்கி மேற்கண்ட துகையுடன் சேர்த்து கூ-ல் கழித் தசேஷம் திசையிலும் வந்த ஈவை ரு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷம் புக்திகாலங்களிலும் தனித்தனி இராசி கிரகமிவைகளைக் கண்டறிந்த திசாபுக்திகாலங்களில் புத்திர மரணதுக்கத்தைக் குரிக் கப்படுமென்றும் புத்திர வரிஷ்டமும் யோகபங்கங் கொடுக்குமென் றறியவேண்டியது.

சத்துருரோக ராஜதெண்டனைகளைப்பற்றிய பலன்களாவன.

குஜன் மேஷம் இவைகளையும் இவைகளுக்கு ஆறுமிடத் ததி பதி நின்ற இராசிநாதனுடனுங் கூடிய பெலா பெலன்களை யாராய் ந்து சத்துருரோக ரோணுதி ராஜதெண்டனைகளைக் கூறப்படும்.

குசன் சனிக்கி ஆறு எட்டாமிடத் ததிபதிகள் நின்ற இராசி
நாதனைக் கொண்டு இராஜதெண்டனை றுணத்தையும் சந்திர சூரிய
ஷஷ்டாதிபதி நின்ற இராசிநாதனைக்கொண்டு தேகரோகாதி பாதை
களையும் குரு குசன் சஷ்டாஷ்டமாதிபதி நின்ற இராசிநாதனைக்
கொண்டு இராஜதெண்டனைகளுங் கூறவேண்டியது.

இதில் முதலாவது ரோகத்தைபற்றிக் கூறப்படும் ரோகபாதை
க்கி ஆறுமிடம் குச னிவர்களுடனும் ரவி சந்திரன் கூடினும் சூ அ-
இந்த இராசியிலும் கக-னிலும் இருக்கினும் கேந்திரவலுவில் நின்று
லும் சீவசரீராதிபர்கள் பெலத்து ரவி குஜன் சந்திர னிவரைக்கூடி
சூ - அ - நி - கக — இந்த வீட்டில் இருக்கினும் சுபதிருஷ்டி சம்
மந்த மில்லாமல் பகை நீசராகினும் பாவராகிய சூரியனைக்கூடி நிற்
கில் சிரபாதை நேத்திரான பித்தச் சூடான ரோக சரீராதி பதி
யாகி சந்திரனுடன் கூடினால் சீபாதி சிலேஷ்மண சம்மந்த நோய்
களென்றும் குசனுகின் இரெக்தவிரணதி ஆயுத சம்மந்தமான
கட்டி பிளவை முதலியரோகமும் புதனுகில் உதராதி தேகரோகமும் சித்
தக்குறைவையும் கொடுக்கப்படும் குருவாகில் மேகவாயு உதரவாயு மயக்
கரோகமும் சுக்கிரன் ஜெல சம்மந்தனோய் நேத்திரநோய் ஸ்திரீ மூலிய
மாணரோகமும் சனியாகில் பித்தவாயு சுரசன்னி முதலியதும் இராகு
வாகில் பித்தமயக்க மூர்ச்சை விஷரோகமுகம் கேது விஷரோகம் சித்த
பிரமை முதலிய ரோகங்களையுங் கொடுக்கப்படுமென்றும் அறியவேண்
டியது சேர்கையில்லாவிடினும் மேலே சீவசரீராதிபர்கள் சூ—அ—க—நி-
இவைகளிலும் குசன் இவர்களைக்கூடி நிற்கினும் அவர்களுக்கே இவ்வித
நோய்த்துன்ப முண்டாகும் சுபராசியல்லது சுபத்ருஷ்டியுட னிருக்கி
னும் சேரினும் இவைகளவரவர்களுக்கேற்ற திசாபுக்திகளில் கொடுத்து
நிவர்த்தியாகும் சுபர்களே பாவராகிக்கூடினலும் பாவரிருக்கினும் பாவ
ட்சேத்திர கெதியடைந்தாலும் தீராவியாதியஸ்தனு யதனுலேயே மரண
மடைவனென்றுங் கண்டுகொள்ள வேண்டியது.

* இருணம் ராசதெண்டனை பலன்.

குசன் சனியும் அவர்வசாத் ஷடாஷ்டமாதிபதி நின்ற இராசிநாதர்
கள் பெலத்துடன் சுபக்ஷேத்திர கெதனுகியும் பாவராகியும் தனுசு கும்
பம் கடகம் சிம்மம் இவைகளிலும் மேஷ மிதுனம் இவைகளில் குசன்
சனி இவர்களுடன் பாவர்களு மிருக்கினும் சந்திரன் முதலிய சுப வீக்ஷ

* இருணம் என்பது கடனுகும்.

ணிய மில்லாதிருக்கில் சாதகனுக்கு இராசதெண்டனையும் இருணசம்மந்தமும் பலவாறான தனமிருந்தபோதிலும் உண்டாகும் இதில் சீவசரீராதிபர்கள் பெலத்து மல்லது சுபர்வீட்டில் சுபதிருஷ்டியுட னிருக்கின் அப்படிக்கொற்ற இராசதெண்டனை நீங்கி இருணமுஞ்சிலவு மதிகமாக நடக்குமென்றும் மேற்கூறிய கிரகம் நால்வரும் ஒன்றாகவாவது தனித்தாவது நின்று விருச்சிகம் தனுசு மீனம் விருஷபம் மிதுனம் சிம்பம் இவைகளில் தனக்குறிய பகைவருடன் கூடினாலு மல்லது வீக்ஷணியம் பெற்றாலும் வீக்ஷணிக்கப்பட்ட கிரகம் அதிக பெலவானாகில் இராசதெண்டனையும் பலவகை விரோதபலனையுங் கொடுக்கப்படும் குருவும்பெலன்கெடில் இருணமுடையவனாகியும் பலவகை வருத்தங்களையும் அடையப்படும் என்றும் அறியவேண்டியது மேலேகூறிய கிரகங்கள் பெலத்துடன் சுப கிரகஸ்தான சம்மந்தத்திலும் பெலவானாகியும் கேந்திரகோண கெதனாகியும் அதிக பெலவானாகி சீவ சரீராதிபர்கள் சுபட்சேத்திர கெதியுடனும் குசன் முதலியோர் பெலத்திருக்கில் சத்துரு ரோகபெலவானாகி ரொண சம்மந்தத்தை யுடையவனாகியும் பலவித வருத்தங்களை யடையப் படுவனென்றும் அநேக கிரகவாகனாதி யோகங்களும் பூர்வார்ச்சித சம்மந்தமானவைகளும் நஷ்டமும் ராசமூலமான விரோதவிவாத நஷ்டமும் ராச தெண்டனைக் குறியவகை நடக்கும் ஆனாலவர்களுக்கு இருபக்கங்களிலும் பாவராலும் பாவட்சேத்திர கெதியடைந்திருந்தாலும் சத்துரு இராச தெண்டனைகளானது பயங்காட்டி யவரவர்களுக்குறிய திசாபுக்திகளிலுண்டாகி நிவர்த்தியாகுமென்றும் குடும்பவருத்தங்களை யடைவனென்றறியவேண்டியது.

குரு குச னிவர்களுக்கு ஷடாஷ்டமாதிபன் கேந்திரகோணமானசுப பெல கெதியுடன் பாபக்ஷேத்திரத்திலாவது அதாவது சனிவீடு மேஷம் மிதுனம் முதலிய இடங்களில் பகை முதலியோருடனாவது இருக்கினும் நோக்கினும் சத்துருக்களால் பலவித விவாதமும் பொருள் நஷ்டம் இருணம் இராச விரோதத்தால் நஷ்டமும் சத்துரு துன்பமும் ரோகபயம் மனதுக்கு வருத்தம் உண்டாகும் இதில் சனி சுக்கிரன் முதலிய பகையோருடன் கூடினாலும் சனி சுக்கிரன் சந்திரன் இவர்கள் வீட்டினின்றாலும் பெண்கள் மூலியமான குறைவு இராசதெண்டனை பயம் முதலிய துன்பங்களை யடைவன் அந்தக் கிரகங்களுடன் கூடியும் பார்த்தும் இருக்கும் ஸ்தானாதிபதி இவ்வித திசாபுக்தி காலங்களில் கொடுக்கப்படும் என்றும் அறியவேண்டியது அவ்வித திசாபுக்திநாதன் சுவயமாய் பெலமுடைய சுபனானாலும் சுபட்சேத்திர கெதியடைந்தாலும் அல்பமாக

அவுமான பயம்போலக் காண்பித்து உடன் நிவிருத்தியானது பொருட் செலவினால் உண்டாகும்.

* இருணவிஷய கணிதம்.

குரு குசன் மேஷ மிவைகளுடன் இவைகளுக்கு ஷஷ்டாஷ்மாதி பன் யெந்த ஸ்தானத்தி லிருக்கிறானோ அவ்விடத்ததிபனுடன் கூடிய கிரகயெண்களை ஒன்று ஒன்றாக அவ்வித இராசி யெண்களாற் பெருக்கிய துகையை அவரவர்களின் றனியொற்ற பெலாபெலன்களாகிய கதிரென்னுங் கிரகயெண்ணிற் கொடுத்த சேஷம் எதுவோ அதைப்பார்த்த பின் குருவுடனும் தனுசுவிலும் குருவுக்கு உ-கக மிடத்ததிபதி நின்ற ராசிநாதனுடன்கூடிய கிரகபெலாபெலன்களுக் கிணையுற்றபடி எண்களை எடுத்துக்கொண்டு அந்தந்த ராசி எண்ணாற்பெருக்கி ஒன்றுசேர்த்து அத்துகையை அந்தந்த கிரக எண்களில்கொடுத்த சேஷமும் அரிந்தவை தனலாபமென்றும் முன்சொல்லியவை இருணமென்றும் பெயராகும் ஆகையால் இருணசங்கைக்கும் தனலாபசங்கைக்கும் சரிபார்த்தவையில் தனத்துக்குஇருணம்சாஸ்தியானால் இருணஸ்தனென்றும்தனஞ்சாஸ்தியானால் தனவந்தனென்றும் அரியவேண்டியது.

களத்திர பாவபலன்கள்.

சுக்கிரனையும் விருஷபமும் இவைகளுக்கு சப்த்தமாதிபதி நின்ற ஸ்தானாதிபதி யெந்த இராசியில் இருக்கிறானோ அந்த இடத்ததிபதியையும் சுக்கிரனின்ற ஸ்தானாதிபதி யெந்த இராசியிலிருக்கிறானோ அவனுக்கு சீவனென்றும் அவ்விடத்ததிபன் எந்த ராசியிலிருக்கிறானோ அவை சரீரமென்றும் பெயராகும் ஆகையால் அவைகளையரிந்து களத்திர பாவ பலன்களையரிந்து கூறல்வேண்டியது களத்திரகாரகனான சுக்கிரனுக்கும் விருஷபத்துக்கும் யேழாமிடத்ததிபதிநின்ற இராசிநாதன் இவர்களாகிய நான்குபெயர்களுந் தனக்குரிய சுபக்ஷேத்திரமான தனக்குரிய கேந்திர முதலிய ராசிகளாகியும் தனக்குரிய சுபக்ஷேத்திரசுபபெலத்துடன் க-உ-ஆன கிரகங்கள் மித்துருவாகியும் சுக்ஷேத்திர உச்சநட்பு ஸ்தானத்தில் பெலத்தும் சுக்கிரனுடன் மூவிதவகை பெலனும் பாபக்ஷேத்திரமல்லது சம்மந்த வீக்ஷணமில்லாதிருக்கில் அதில் குரு பெலவானானால் சத்களத்திரம் யேகமென்றும் பிறபல குடும்பமேன்மையுந் தருமதேவபிரும் மணபக்தியுள்ள களத்திர தீர்க்கமேகமென்றும் உபயமல்லதுசரத்தினிற்கினும்

---

* இருணமெல்பது கடன்.

முன்போலாம் ஸ்திரமாகில் உபயமனைவியென்றும் மேற்கண்ட சுபர்கள் ஓர்பாவக்ஷேத்திர மல்லது அவர்களிலிருவர் பகைநீச அபெலனைப்பெற்றிருந்தாலும் ஓர்பாப சம்மந்த மல்லது வீக்ஷணமானாலும் சுபபாபத்துவமாரி இருக்கினும் சிவசரீராதிபர்கள் பெலனற்று ௩-௬-அ-௧௨-இவைகளுக்குரிய பலனைகொடுக்கும் ஸ்தானம் சுபரானாலும் மற்றகேந்திரகோணம் ௨-இந்த ஸ்தானங்களில் பாபர்களுடன்கூடினாலும் ஷியோர்கள் பாவராயிருந்தாலும் சாதகனுக்கு சுக்கிரன் விருஷபத்தில் பாம்புடன் அல்லது ரவி குசன் சனி இவர்களில் எவரைக்கூடினாலும் அல்லது இவ்விரண்டு பக்கங்களிலும் இவ்வித பாபர்கள் இருக்கினும் பகையோரைக் கூடினாலும் சாதகனுக்கு களத்திரம் ௨-யென்றும் பலபாவ பெலத்தோர் கூடில் பலவித களத்திரமாகிய பகுகளத்திரலாபமும் இவர்களுக்கு தசமாதிபதி நின்ற ஸ்தானாதிபதி நின்றவதிபன் பெலத்துடன் இருக்கில் சாதகன் களத்திரமூலமான தனலாபமேன்மைகளும் மனோவாக்செயமும் கிரகவாகனக்ஷேமமும் மேன்மையான உத்தம பலன்னடக்கும்மேற்சொல்லிய ஸ்தானம் அதிபதி பாபக்ஷேத்திரம் பகை நீசஸ்தானத்தில் இருக்கில் சாதகனுக்கு களத்திர வம்சத்தால் சாதகன் பொருள் நஷ்டமும் ஸ்திரஸ்தானமானதாவது கிரகமாகவாவதிருக்கில் சாதகனுக்கு களத்திரவகைமூலமாகவும் பிரயோசன மடையான் சாதகனுக்கும் களத்திரவகைக்கும் நஷ்டமின்றியும் நடக்குமென்றும் இருவர்வகையாலும் அவரவர்களுக்கு மாருபாட்டிற்குரிய பலனடையப்பட மாட்டாதென்றும் அரியவேண்டியது.

இனி தனித்தனி கிரக இராசிமுதலிய தாகிய பாவங்கள் கூறப்படும்.

இந்த பாவத்துக்கு சிவசரீராதிபர்கள் தனக்குறிய பெலமுற்ற சுபத்தோடு இருக்க பாபரைக்கூடவல்லது நோக்கமின்றியு மிருந்தும் சுக்கிரன் விருச்சிகம் தனுசு கும்பம் மேஷம் கடகம் இவைகளில் தனக்குறிய பாவர்களானாலும் அல்லது சுபரானாலுங் கூடியிருக்கினும் நோக்கினும் அவ்வித கிரகங்களுக்கு ஒருவருக்கொருவர் மித்துரு சத்துருவில்லாமல் சமனாகியிருக்கில் சாதகனுக்கு ஒரேதாரமென்றும் இவ்விதம் உபயராசிகளிலிருக்கில் வெகுதாரமென்றும் ஸ்திரவிராசிகளி லிருக்கினும் தாரமிரண்டு அல்லது முதற்றாரம் மரணமாகிவிடு மென்றங் கண்டறிய வேண்டியது பின் விவாகமுயல்வுங் காலதாமதத்தைக் குறிக்குமென்றும் அறியவும் மேற்கூறிய கிரகங்களுடன் பாவரல்லது ரவிகுருகூடி யல்லது பார்த்தா

லும் யேழாமிடத்தில் பாவர்களிருக்கினும் சுக்கிரன் மேற்கண்ட இராசிகளில் பகைவர்திக பெலத்தோருடன் சுக்கிரன்கூடி சரவிராசியிலும் புதனல்லது சனி விருஷபத்தி லிருக்கினுங் குசன் முதலிய பாவர்கள் கூடியல்லது பார்த்தாலும் ஸ்தானுதிபதிகள் நீசம் பெற்றாலும் பகை முதலி பாவரைக் கூடினும் தத்ஸ்தானுதிபதிகள் ஸ்திர விராசியிலும் பாவ க்ஷேத்திர கெதர்களாகி நின்றாலும் ஜாதகனுக்கு கிரகங் கூறிய பெலனுக்குறிய உ-முதலிய பெரு தாரவகை கூறப்படுமென்றும் பாப சுப சம்மந்தங் கலர்ந்தும் குரு வீட்டினின்று பெலத்திருக்கினும் ஒருவருக்கொருவர் தனக்குரிய சம சுபத்துவமுடையவர்களானாலும் ஜாதகனுக்கு சீவகளத்திரமென்றும் மேற்கூறிய சீவகளத்திர மூலிய குடும்ப மேன்பாடுகளும் தனதான்ய பிறபல யோகமும் குடும்ப சுக சௌக்கியமும் அசன சயன போக போக்கிய சுகமும் உண்டாகும் விருஷபத்திலாவது சுக்கிரன் சுக்கிரனுக்கு எ-மிடம் சீவ சரீராதிபர்களிவர்களுடன் சனி பாம்பு குசன் ரவி தனக்குரிய அசுப பெலக்காரருடன் கூடினும் சுபராசி பாபபலன்களைப் பெற்றிருக்கினும் சப்தமம் சுத்தமாகி அதிபதிபெலமற்றிருக்கில் சாதகனுக்கு களத்திரம் உ-முதலிய வெகுதாரமும் புதன் சனி கூடி அவர்களைச்சேர்ந்தாலும் மல்லது பார்த்தாலும் களத்திரம் தேக ரோகமும் தேவதாதி பாதைமுதலிய அபல சரீரமென்றும் அரியவேண்டியது.

சீவ சரீராதிபர்களும் சுக்கிரனும் விருஷபம் மிதுனம் சிம்மம் கன்னி இந்த இராசிகளில் குரு சந்திரன் புதனிவர்களைக் கூடியல்லது முழு வீக்ஷிணியமாகி பகை நீசமல்லது பாவறைக்கூடியல்லது பாபர் மத்தியிலும் வீக்ஷணித்துடனிருக்கினும் சாதகனுக்கு தாரம் வெகுவென்னும் இரெண்டுமுதலிய தாரஸ்த்னென்றும் ௸ தாரவகையால் பலவித மனோவருத்தங்களும் சத்துரு மூலியவருத்த மிவைகளைக் கொடுக்கப்படுமென்றரிய வேண்டியது.

மேல்படி இராசியிலிருக்குஞ் சீவசரீராதிபர்களுடன் பகைநீசத்தோரான பாவரிருக்கினும் நோக்கினும் சாதகனுக்கு தாரதோஷமும் சனி புதன் வீட்டில் பகை நீசவிதத்தில் ௸ சீவசரீராதிபர்கள் இருக்க சப்தம விராசியானது பகை நீசக் கோளல்லது சுத்தமாயிருக்கினும் சுக்கிரன் சனி புதன் முதலியவர்கள் கிரகத்தில் பகைநீசக் கோள் என்னும் பாப பெலத்தைப் பெற்றும் சுப சம்மந்த வீக்ஷணியங்களில் லாதிருக்கில்சாதகனுக்கு விவாக மடையப்படமாட்டதெ

ன்றும் சுபசம்மந்தம் திருஷ்டி இவை இருக்கில் காலதாமத விவாவகமும் பாபிகள் தனக்குமேலோர் பார்க்கில் சீக்கிர விவாகமாகிஹுடன் களத்திர சோகம் மிதுனத்தி லிவ்விதம் சுக்கிரனுடனிருக்கினும் தாரம் பலவிதமான உ முதலிய தாரங்களென்றும் சு-க்கு மேற்பட்ட கிரகத்துடன்மேலேகூறிய கிரகங்கள்பகைநீசாதி பாபர்களானுலும் சமம்பெற்றிருக்கினும் சீவசரீராதிபர்கூடினுலும் பெலத்துநிற்கினும் தாரமொன்றென்றும் அவை மூலிய வனுகூலமும் சுக சௌக்கியபலனடையப் படுமென்றறியவேண்டியது.

சீவ சரீராதிபர்களும் சுக்கிரனிவர்கள் துலாமகறம் மீனம்இவைகளினின்று தனித்தால் தாரமிரெண்டென்றும் இருபாவர் சமத்தோருடன் அல்லது மித்துருவுடன் கூடினுல் தாரமொன்றும் ஓர் பகைவர் சுபருடன் பாபரிருபக்கங்களிலு மிருந்து பகை நீசத்தோரைக் கூடினுலும் சுக்கிரன் பல சுபருடன் ஓர் பாவர் கூடினுலும் மற்றய சீவ சரீராதிபர்களின் சப்தமத்தில் சுக்கிரன் பாப சம்மந்தமாகியும் அதி பாவரைக் கூடினும் அசுப கிரகத்துடனின்றுலும் பாபர் மத்தி பாபக்ஷேத்திரத்தில் சீவ சரீராதிபர் நிற்கினும் ஜாதகனுக்கு பொகு தாரஸ்தனென்றுங் கண்டறியவேண்டியது.

தாரவிஷய கணிதம்.

ஜாதகனுக்கு மேற்கூறிய சீவ சரீராதிபன் யெந்த வீட்டிலிருக்கிறுனே அவர்களுடனும் சுக்கிரன் மேஷமிவைகளுடனும் கூடிய கிரக சுபாசுபத்துக் கிசைந்த தனித் தனி யெண்களை இராசி யெண்களாற் பெருக்கிய தொகையை தனித்தனி வைத்து அவரவர்களின் கிரண யெண்ணிற்குரிய வகையை மாத்திரமெடுத்து அவரவர் கிரக பூரா வெண் பேருக்கு கொடுத்துவந்த பெயரை தனித்தனி எழுதி சுபத்தில் யெத்தனை யெண் பெலவத்தானது வரும் பெயரேஅதைக் கூட்டிக் கண்டவை தாரமென்றும் பின் அவரவர்கள் யெண்ணிற் கிசைந்தபடி கண்டறிந்தவை குணரூபமான சத்குடும்பாதியும் தனலாபமுள்ள களத்திர மென்றும் ஆருய்ந்து கூறவேண்டும் இத்துடன் சக-மிடத் ததிபதி நின்ற இராசிநாதன் யெந்த இடத்திலிருக்கிறுனே அவருடன் கூடிய பெலா பெலனுக்கு இசைந்தபடி யெண்களை ராசி யெண்ணிற் பெருக்கி பெலத்துக்கு இசைந்ததை யெடுத்து அவரவர்கள் பூராவான கிரண யெண்பேருக்கு கொடுத்துக் கண்டவை பின்

தாராதி வம்ச பலன்களையுங் கூறப்படுமென்றும் மேலே கண்ட தொகைகளை தனித்தனி கூ-ல் கழித்த சேஷம் திசையிலும் வந்த ஈவை நு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷம் புக்தி யென்றும் கண்டரிந்த காலத்தில் விவாகங்களென்றும் சீவசரீராதிபருக்கு பகையானவர் அஷ்டமாதிபர்களாய் வந்தவருடன் கூடிய கிரக யெண்களை யெடுத்துக் கொண்டு பெலன்படி இராசி யெண்ணாற் பெருக்கிய தொகையை கூ-ல் கழித்த சேஷம் திசையிலும் நு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷம் புத்தியிலும் களத்திர தோஷங்களென்றும் மேலே கண்ட தொகைகளை யெல்லாம் வொன்று சேர்த்து நு-ல் கழித்தசேஷம் இன்ன பூதகாரண மரணமென்றும் இப்படிக்கி சவ்பாதி யரிந்து கூறவேண்டுவ தவசிகமாயிருக்கிறது.

பிதுர்பாக்கிய பலன்கள்.

பிதுர்பாக பலனுக்கு சந்திரன் ரவி கடகம் இவைகள் சீரமென்றும் இவை கூ-மிடத்ததிபதி யெந்த இடத்தி லிருக்கிறானோ அவ்விடத் ததிபன் நிற்குமிடஞ் சீவனென்றும் சீவக்கோளென்றும் பெயருருஞ் சீவ சீரமிவைகளுடைய பிரபல பெலனரிந்துகூறவேண்டியது சீவனுக்கும் உடலுக்கும் எப்பொழுது குறைவுண்டாகிறதோ அப்பொழுதே அந்த பாவங்களும் பிரயோசனமற்று இழந்துவிடும் ஆகையால் இம்மூலமாகவே பலன்கள் கூறப்படும் சீவ சீரத்துவங்களைப் பற்றி பலவித அருவகை வாயுக்களைக் கூறப்பட்டது இதில் பிரதான சீவனைது சந்திரனுக்கு கூ-மிடத் ததிபதி யெந்த இடத்தி லிருக்கிறானே அவ்வீட்டதிபன் ஜீவன் குரு யெந்த இடத்திலிருக்கிறானோ அந்த ஸ்தானாதிபன் சீரம் என்றும் பெயராகும் இந்த இரெண்டு பெயர்களும் ஒருவருக்கொருவர் பேதமில்லாமலும் சத்துருவில்லாமலு மிருக்கில் தான் பிதுர் விருத்தி கூறப்படும் பகையானால் பிதுர் நாசவர்க்க நாசம் பரஸ்பர விரோதமானல் பொருளுங் கிடையாது பிதுராயுளும் விருத்தியை யடையான் ஓர் பகைப் பாவரானல் பிதுர் மாரகம் பாலியம் தனலாபமுண்டு சமனும் பகையுமானல் பிதுர் பொருளில்லான் பிதுரு விருத்தியுண்டு இருவருஞ் சம பெலக்காரருனல பிதுர்பொருள் அல்பமுண்டு பாபபெலமதிகமானல் பிதாவு முடனே மரணமாவன் பொருளுமில்லை சுபபெலமொன்றும் பாபபெலனென்று மானல் ஆஸ்தியுண்டானல் பிதுர்கிடையாதுபிதுரிருக்கில் பொருள்கிடையாது இருவருஞ் சுபபெலமானல் விருத்த

காலவரை பிதுர்தீர்கம்தனபிரபலம் சமம்ஒன்று நட்புஒன்றுசுக்ஷேத்திரமானல் பிதுர்பாக்கியவிசேஷமும் பிதா சிலகால மிருப்பனென்றும் இவ்விதமாக பிதுர்பலன் சொல்லவேண்டியது.

சந்திரன் சீரசிவாதிபர்க ளிவர்களும் கடகத்தி னிற்கினும் சுபரல்லது பாவருனும் மேன்மையுள்ள சுபபெலத்தை யுடையவருகினும் பிறபலம் பெற்றிருக்கினும் குரு முதலிய சுபகோள்க்கள் பார்த்தாலும் சாதகனுக்கு பிதுர்பாக்கிய விருத்தியும் பிதுரு குடும்ப பிறபலமும் பிதுர்வம்ச விருத்தியாகுமென் றறியவேண்டியது சத்பிதுருகி மேன்மீம பொருந்தி தேவதாபக்தி முதலிய நல்விஷயவானென்றும் சந்திரன் சீர சீவாதிபர்களிவர்கள் தனக்குறிய ஸ்தானமில்லாமலும் பாபமத்தியம் பாபசம்மந்தர்களாகியும் அல்லது அவர்கள் தனித்து பாபகிரகஸ்தலத்திலும் பகைநீசாதி முதலிய அபெலங்களுடனே இருந்தும் கடகம் மீனம் இவைகளிலும் இவைகளுக்கு இருபக்கங்களிலாவதும் பாம்பு குசன் ரவி முதலிய பாவரிருக்கினும் சந்திரன் குரு முதலியோர் பெலமற்றவர்களாகி பகை நீச பாபசம்மந்த மடைந்தாலும் சாதகனுக்கு பிதுரார்ச்சிதமில்லாமலும் பிதுருவம்ச நஷ்டமும் தருமதான மில்லாதவனுவ னென்றும் இவை வசாத் ரவி பெலமற்றும் பகை நீசாதி கெதியிலு மிருந்தும் சத்துரு கிரகத்தைக் கூடி இருக்கினும் ஜீவ சீராதிபர்கள் பாபர்களான ரவி யல்லது சனியாகிப் பகை முதலியோருடன் கூடி நிறகினும் சாதகனுக்கு பாலியத்திலயே பிதுர் மரணமென்றும் பிதுர்வம்ச விருத்தி வரவரக்ஷயிக்கு மென்றும் பலவகை வருத்தங்களுந் தனதானியக் குறைவுகளும் இவ்விதபலனடையுமென்றும் இதில் ஓர் சுபர்வீடானுலும் சுக்கிரன் முதலிய சுபக்கோள் பார்க்கவல்லது கூடினுலும் கடகமீனம் இவைகளில் சுபர்கள் சுபவீக்ஷணமானுலும் சாதகனுக்கு யௌவனவஸ்தையில் பிதுர்மாரகமென்றும் இருவகைச் சுபருடன் சீவசீராதிபர்களும் வலுத்து சுபட்சேத்திர சுபகெதியும் ஸ்திரவிருசிகளி லிருக்கில் கவுமாரவபதில் பிதுர்கருமமும் பிதுர்வம்ச முதலிய பாக்கிய விருத்திக ளுண்டென்றும் சுபபெலனதிகமாகி உபபஞ்சாமிவ்வித இராசியில் இந்த நான்கு பெயர்களும் பெலத்துட னிருக்கிற் சாதகனுக்கு வயோதிக காலத்தில் பிதுர் கருமமென்றும் சீவ சீராதிபர்களில் ஒருவர் பெலத்தும் ஒருவர் பெலமற்றிருக்கில் பாலிய மரணமாவன் பிதாவென்றும் பிதுர்வம்ச பிரபல விருத்தியுடன் இருந்து வரப்படுமென்றுந் தனதானிய மேன்மைகளும் இஷ்டசித்திகளும் அசனசயன யோக போக்கிய பாக்கிய விருத்தியை யுடையவனுவனென் றறியவேண்டியது.

0

சந்திரன் ரவிமுதலியோருஞ் சிவசரீராதிபர்களும் விருச்சிகம் தனுசு மீனம் மிதுனம் கடகம் இவைகளில் தங்களுக்கு இயல்பான சுபட்சேத்திரங்களில் சுபசம்மந்த திருஷ்டியுடன் பெலத்தும் சிவ சரீராதிபர்களின் கேந்திரகோணத்தில் பெலத்து நிற்கினும் பிதா விருத்தாவஸ்தையில் மாரமாகவன் இவர்கள் சு-அ-கக-இடங்களில் தனக்கு பகை நீசட்சேத்திரமல்லது பாவக்கிரகங்களுடன் கூடிநிற்கினும் பாலியத்திலேயே பிதுர்மரணம் பாபசுப சமபெலத்துடன் அசுபட்சேத்திரத்திலிருக்கில் எவ்வனத்திலயே பிதுர் மரணமென்றும் சுபட்சேத்திர வாசனுகில் கௌமாரவயதில் பிதுர் மரணமென்றும் பலவகைக் குடும்பபாக்கிய பிறபலமுடையவனென்றும் பிதுர் மேன்மையான வம்சஸ்தனுவனென்றும் அறியவேண்டியது இதில் சிவ சரீராதிபர்களும் பகை முதலிய அபெலத்துடன் றனக்கு இயல்பில்லாத ஸ்தலத்திலும் ரவி கெட்டு சு-அ-களில் அல்லது ரு-கூ-ல் இருக்கினும் பாம்பு சனி முதலியோர்கூடி யல்லது பாபமத்தியில் சிவசரீர முதலியோரிருந்தாலும் பிதா கெற்பகாலமே மரணமாவ னென்றும்.

மகரம் கும்பம் மேஷம் விருஷபம் இவைகளில் சிவசரீராதிபர்கள் நின்றும் பகை நீசமில்லாத பெலமுடைய பாவராஹுலும் சுபர் பாபராய்க்கூடினுலும் வார்த்திகதிசையில் பிதுர்மரணம் பிதுர்வம்ச தனமல்பமுடையவனென்றும் சுபர்கள்கூடி நின்ருலும் ரவி சனி முதலிய பாபமத்தியமாகிப் பெலக்குறைவானுலும் பிதாபாலிய மரணமும் ஓர் பாபர்கூடினுலுந் தனக்குசுபரானுலும் உபயம் ஸ்திரமிவ்வித இராசிகளில் பெலத்தாலும் பாலிய மரணம் பிதாவிற்குண்டாகும் பாபசுபர் கலர்ப்புடன் ;பெலமுடையோர் கூட அல்லது பார்த்தாலும் எவ்வனத்தில் பிதுர் கருமமும் பூமி முதலிய ஸ்திதி யல்பமென்றும் குடும்ப பலவித வருத்தங்களு முண்டாகு மென்றறியவும் மேற்கூறிய இராசிகளில் தங்கள் தங்களுக்குறிய வகையோடுங்கூடிய பெலமற்ற இடங்களில் சுபபெலத்தையுடைய கிரகங்களைக்கூடி நிற்கில் சாதகனுக்கு முன் பாகம் பூர்வார்ச்சித சொத்துக்க ளிருந்தும் வரவர நஷ்டமடைந்து ரொணமுதலிய பலவகைத்துன்பங்களை யடையக்கடவன் யென்று இதில் பூர்வபட்ச சந்திரன் குரு கேந்திரத்திலும் சுட்சேத்திராதி நட்பு உச்சஸ்தானத்தி லிருக்கினும் பிதுர் பூர்வார்ச்சிதங்கெட்டு மறுபடி விருத்தியுண்டாக்குவான் பாபகிரகங்களாகியும் சிவசரீராதிபர்கள் பெலமற்றும் பாபட்சேத்திரத்தில் தனக்குறிய பெலனை இழந்தும் இருக்கில் பூர்வார்ச்சித மில்லாமலும் பிதுர் சொத்துக்களில்லாமலும் பல வாறான கஷ்ட நஷ்டத்தடைவன் சிவ சரீராதிபர்கள் பெலத்துடன் அசுபட்சேத்திர மின்றி சுபட்சேத்திரத்தில் பாபர்களைக் கூடினுலும் ரவி கேந்

திரமல்லது ரவி வீட்டில் இருக்கினும் குரு நோக்கமல்லது குரு வீட்டி லிருந்தாலும் ஜாதகனுக்கு பின்வயதுகாலங் இழந்த பொருளுஞ்சுயார்ச் சித பிறபலஞ் செய்வன்.

பிதுர்பாவ பலன்களின் கணிதங்களும் பிதுர்மாரகா திசாபுக்தி காலநிர்ணய கணிதங்களும் கூறுவாம்.

ரவியுடனும் கடகத்திலும் சந்திரனுடனும் இவர்களுக்கு ஒன்பதா மிடத்ததிபதிநின்ற இராசிநாதனுடனுங் கூடிய கிரகயெண்களை சுபாசுப விதிப்படி ஆராய்ந் தெடுத்தும் அத்தொகையை தனித்தனி இருக் கும்இராசி கிரண எண்களாற் பெருக்கி அத்தொகையை பலனுக்கு ரியவகையை மாத்திரம் எடுத்து மற்றவையைத் தள்ளுபடி செய்தும் அந்த தொகையை அவரவர்களின் கிரணவெண் பெருக்கு கொடு த்துவந்த பெயருள்ள சுபபலத் தொகையை ஒன்று கூட்டில் பிதுர் வம்ச விருத்தியுள்ள சகோதரமென்றும் அதில் பெண்ணுன் கிரகங்கள் பார்த்தும் அறியவும் இதில் ஸ்திரவிராசி கிரக வெண்ணுனல் இதற்கு முன்னுள்ள பிதுர்வம்ச விருத்தியென்றும் உபயமானல் தற்காலத்தில் விளங்கும் பிதுர் வம்சமென்றும் சரமானல் இனிமேலுண்டாவதுடன் கூடிய பிதுர் சந்ததியென்ற சங்கையைச் சொல்லவேண்டியது மேலே கூறிய சு-வகை கிரகபெலாபெல எண்களை யொன்றுபடுத்தி குருவின் பெலனுக்கு இசைந்த கிரண வெண்ணிற்கொடுத்த சேஷமும் குசனுட னும் குசனிருந்த வீட்டாதி பெந்தஸ்தானத்தி லிருக்கிறனே அவ்வதிப னுடனும் விருச்சிகத்திலும் குருவுடனுங் கூடிய கிரகவெண்களைபெலன் படிக்கி இராசி யெண்ணுற்பெருக்கிய தொகையைச் சந்திரனுடைய பல எண்ணிற்கொடுத்த சேஷமும் அறிந்து கண்டவையில் முன்சவு பிதுர் பூர்வார்ச்சிதமும் பின்சவு சுபார்ச்சிதமும் இவ்விரண்டுக்குமுள்ள தாரதம் மிய பாகத்தை யறிந்துகொள்ள வேண்டியது.

முதற்கூறிய சு-வகை கிரகபெலனுக்குரிய பெலன்களை தனித்தனி இராசி யெண்ணிற்பெருக்கியதை கூ-ல் கழித்த சேஷம் திசையும் வந்த ஈவை ருி-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷம் புக்தியிலும் தனித்தனி கண் டறிந்த திசாபுக்திகாலம் சவ்யாதி யறிந்துபார்த்தவை பிதுர்மாரக திசை யென்றும் அத்தொகைகளை யொன்றுபடுத்தி கஉ-ல்பெருக்கி கூ-ல்கழித்த சேஷம் தனித்தனியறிந்ததையும் வந்த ஈவை ருி-ல் பெருக்கி கூ-ல்கழித்த

சேஷம் புக்திகளிலும் பிரபல ராசயோகங்களின் ஆரம்பங்களையுங் கூறப் படும் இவைகளையெல்லாம் சவ்யாதிவகையாய் அறிந்து பார்த்துக்கொள்ள வேண்டியது.

மேற்கண்ட அறுவகைத் தொகையை கஉ-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷம் ரு-க்குள் வந்தால் பிதுரார்ச்சித விருத்தி கிடை.யாது சு-க்குள்ளானல் சமம் அல்பம் பிதுரார்ச்சிதம் கூ-க்குள்ளாகில் பிதுரார்ச்சித மேராளமாகவுண்டென்றும் இவ்விதியாக அறிந்து கூறவேண்டியது எந்த திசை புக்திகளின் மூலமாக கடைப்பாகமாக வரப்படுகிறதோ அவையே பிதுர் கருமாதிகாரமெனக் கண்டுகொள்ளவேண்டியது இதில் அறுவகைக் கணக்கில் ரு-க்குமேல்பட்ட கணக்கு ஒற்றுமையாகி ஒரே திசை புக்தியாய்வரில் அதிலேயே பிதுர்மாரகங்களைக் கொள்ளவேண்டியது தனித்தனி வந்தால் பிதாவுக்கு தேகநோயாலடையுங் கண்டமென்றும் தனித்தனி வருங்கணக்கில் கண்டதிசாபுக்தி யெதுவோ அது பிதுர் மாரகமென்றுங் கண்டறிந்துகொள்ளவேண்டியது.

கர்ம இிராச்சிய மிவைகளைப்பற்றியபாவ பலன்கள்.

இரவியையுங் குருவையும் சிம்மத்தையும் இவைகளுக்குத் தசமாதி பதி நின்ற ஸ்தானதிபநிலையும் பெலாபெலன்களையறிந்து பலன்கள் கூறவேண்டியது.

இரவி நின்ற இராசிக்கு தசமாதிபதி நின்ற ஸ்தானதிபதி சீவனென்றும் சுக்கிரனின்ற ஸ்தானதிபதிசரீரமென்றும் பெயராகும் சீவசரீராதிபர்களிருவரும் சுபராகி ஒரே கிரகாதிபனுகியும் சுக்ஷேத்திர உச்ச கேந்திர சுப நட்புக்களிலும் குரு பெலவானுகியும் வலிமை பெற்றும் பூரண பெலத்துடன் குசனும் தனக்குரிய சுபபெலத்துடன் க-ரு-கக- இவ்வித இராசிகளிலும் பகை நீசமானலும் சுபகேந்திர சம்மந்தத்துடனிருக்கினும் நோக்கினும் பெல முற்றவர்களின் சம்மந்தமடையினும் சீவசரீராதிபர்கள் ஒருவர் அல்லது சம மைத்திரத்துடன் இருக்கினும் நூதனமான அநேக பூமிக்கதிபனுவன் அரசத்துவமு ண்டாகும் இதில் குசன் சு-அ-ல் இருக்கினும் ரவிபெலத்தும் சீவ சரீராதிபர்கள் பெலனைப் பொருந்தினும் பிதுரார்ச்சித பூமி ராசத்துவ சமானனுவான் ரவியும் பெல மற்றிருக்கில் அவ்விதம் நாசத்துவ பூர்வார்சிதமும் வரவர இரணமும் அகார்யதுர் நடத்தையினுல் அபயெசஸ் பெற்றுயாவையும் இழந்து விடுவன்கர்மஹீனனுவன் என மிகவுங் கீர்த்தி மூர்த்திகளும் பிரபுத்துவ சன்மானக் குறைவுகளையும் அடைந்துவரப் படுவனென்றும் கூறவேண்டும்.

சீவ சரீராதி அறுவகையுடையவர்கள் எல்லோரும்பெலத்து தங்கள் தங்களுக்குறிய க்ஷேத்திர சுபபெலன்களோ டடைந்திருக்கினும் ராசாதிபனுகியும் பூர்வ பரம்பராதி ஸ்திதிவந்தனுகி வாழ்வனென்றும் இஷ்டசித்திகளும் மிகவு மேலான கரும சிரத்தைகளைப் பொருந்தி வாழ்வன் பூபதியாவன்.

சீவ சரீராதிபர்களுடன் நால்வர் பெலமுற்று கேந்திரகோணத்திலும் தங்கள் தங்களுக்கு பெலனுள்ள சுபக்ஷேத்திரங்களிலும் வலுத்தும்குசன் அவர்களுடன் பகை முதலிய அபெலனின்றியுங் கூடியிருக்கில் சாதகனுக்கு இராசயோகமும் சிலபூமி விர்த்தி கிராமாதிபனுவன் இவைகளை சனி அல்லது பாவர்கூடினுலும் பார்த்தாலும் யோகபங்கமாகி சில அல்ப பூமியைப்படைத்து வாழ்வன் பாபர் மத்தியில் மேலேகூறிய கிரகங்களிலிருக்கினும் தசமத்தில் பகைநீசசுபர் அல்லதுபாபரிருக்கினும் நோக்கினும் ரவி முதலிய குரு மேஷ மிதுன மகர சத்துரு ஸ்தானம் நீசம் பகை பாம்பு பாப மத்தியனுனுலும் பூமி இராது இருக்கினும் இழந்து விடுவன் விவாத நஷ்டம் சத்துரு இருண மரசர் பந்துக்களிவர்களால் பாகஞ் செய்யப்பட்டு பொருளை இழந்து விடுவனென்றும் பலவகை வருத்தங்களையும் அடைந்து வரப்படுவனென்றறிய வேண்டியது பாப பெலமே அதிகமானுல் பெலனுனது குறைந்து பிதுரார்ச்சிதமிழந்து ஸ்தானங் கெட்டுவிடும் ரவி குரு இவர்களும் குசனும் தனுசு மகர மீனம் விருஷப மிவைகளில் தங்களுக்குக் குறித்துள்ள சுப க்ஷேத்திரங்களிலும் குசன் உச்சக்ஷேத்திர வாசனுனுலும் தசமமான சிம்மத்திற் பாபரின்றி இருக்கில் அனேகக் கிராமம் பூமி இவைகளுக்கு அதிபனுவன் சரீர சீவாதிபர்களும் பெலமுற்று விசேஷ பெலவானுகியும் கேந்திர கோணத்திலிருக்கினும் நோக்கினும் அகண்ட மண்டலாதிபனுனவன் இவரிருவர்களும் பலமற்றும் மேற் சொல்லியபடி மற்றய கிரகங்கள் பெலத்துடனிருக்கில் ஜாதகனுக்கு ஏராளமில்லாமல் சில பொருளுடன் தர்மகர்ம ஞானஸ்தனுவன் தசமத்தில் கஉ-ல் பாவரானவ ரிருக்கில் கர்மஹீனனுய் பொருளுடைய ஸ்திதிவந்தனுவன்.

மேற்கூறிய ரவி குரு குசன் உபயம் ஸ்திர மிவ்வித இராசிகளில் பகை முதலியவகை இல்லாமலும் அவை க-ச-கக-அ-க0 - இவ்வித இராசிகளானுலும் சுபபல வதிகாரஸ்தர்களாகியும் அதிக பெலமுடையவராகியும் அவர்கள் மித்துருக்களாகி இருக்கில் சாதகனுக்கு பல

பூமி கிராமாதி ஆதிபத்தியச் சிறப்புடனுவன் இதில் ரவி குசனிவரில் ஒருவர் அபலராகி சனியுடன் குரு முதலிய சீவ சரீராதிபர்கள் கூடினும் நோக்கினும் அவ்வகையான பூமிகளுடைய பிரபுவினிடத்தில் சீவனஞ் செய்யும் பிரபு வாவனென்றும்.

மேற்கூறிய ரவி குசன் குரு இவர்கள் தங்களுக்குரிய சுபக்ஷேத்திர கெதியுடன் பெலத்தும் சீவ சரீராதிபர்கள் பலமற்று பாபக்ஷேத்திர மல்லது பாபிகள் கிரகத்தில் வாசஞ் செய்யப்பட்டாலும் பூர்வார்ச்சித நஷ்டமுடையவனுவனென்றும் மேற்கூறிய மூவர்கள் மகரம் மேஷம் கடகம் கன்னி துலாம் இவைகளில் தனக்குரிய சுபபெலத்துடனிருந்தும் சுபல மில்லாமலும் பாபர் மத்தி, பாபிகளைக் கூடாமலும் ஆதி பத்தியாதி கெடாமலிருந்தும் சீவ சரீராதிபர்கள் ஸ்திர முபய வலுவில் ஆரோகணத்தில் அவரோகணத்தில் சர ஸ்திரங்களில் நின்றாலும் மிகவுமேன்மைப்பெற்ற பூமி கிராமாதிபதியாவன் ஒருவர் பெலனற்று ஒருவர் வலுத்திருக்கில் பூமி கிராமாதிபதி பெயருண்டா மாதிபத்திய முடையான் இருவருங் கெடில் இராசத்துவங் கிடையாது அல்ப பூமியிருந்தும் பிரயோசன மில்லாதவன் இருவரும் நட்பு சமபெலத்துடனிருக்கில் சிறிது பூமியுள்ளவனுகி வாழப்படுவனென்றும் மிக மேன்மைகளுந் தனதானிய பிரபல முடையவனுவனென்றும் சொல்லப்படும்.

மேற்கூறிய மூவர்களும் சர விராசி ஆரோகணத்திலும் ஸ்திர விருசிகளான அவரோகணத்திலும் உள்ள ௩-௬-௮-௧௧ - இவைகளில் தங்களுக்குரிய சுப பெலத்துடன் ரவி பெலவானுகி இருக்கில் பூர்வார்ச்சிதாதி கிராமாதி பூபதித்துவம் சிலநாள் கிருஷிணித்து பின் மேன்மைக்கு வரும் பாபக்ஷேத்திர பகைவருடன் கூடினுல் இருப்பது அழிந்துவிடும் குரு சுக்கிரதி சுப க்ஷேத்திரத்திலுந் தனக்குரிய சுப பெலக்காரருடனிருக்கினும் ஜாதகனுக்கு பூர்வார்ச்சித விருத்தியு முண்டு சுயார்ச்சித விருத்தியும் ஏராளமாக உண்டாகும் இதில் பாப க்ஷேத்திரத்தில் இருந்து சுப மத்திய மல்லது சேர்க்கையுடன் வலிது பெற்று மிருக்கினும் குசன் சீவ சரீராதிபர்களாகினும் வேறு கிரகமானுல் கேந்திரகோண சுபபெலத்தைப் பெற்றிருந்தாலும் சாதகனுக்கு ஏராளமான பூமியாதி முதலிய வகைகள் பூர்வார்ச்சிதம் இல்லாதழிந்து பின் சுயத்தார் சேர்க்க வல்லபனுவன் என்றும் சீவ சரீராதிபர்கள் சனி ரவி புதன் இவர்களாகி அபெலத்துவ பகை பாவ

க்ஷேத்திரத்திலும் ரவி ௩-அ-௧௨-இவைகளிலும் பகை நீசாதி க்ஷேத்திரத்திலும் இருந்துவரினும் பெரும் பாப மத்திப கெதியுடனிருக்கினும் குரு முதலியோர் சுபமாகி மறைந்தாலும் ஜாதகனுக்கு கரும சிரத்தையாகிய வெண்ணமிருந்தாலும் விருத்தியடையான் பலவாறு துக்கமடைவன் பூமி முதலியதையு மிழந்து நிற்பனென்றறியவேண்டியது.

சீவனபாவபலன் கருமம்.

இரவி குருவசாதும் சுக்கிரனின்ற ஸ்தானாதிபதியும் இருக்கிற இடத்தில் சனி பாம்பு முதலிய சுப நீச பகையோராகினும் சிம்மத்தில் கும்பத்தில் பாம்பு முதலிய பாவரிருக்கினும் சத்கருமஞ் செய்யான் ஈனனாவன் அயோக்கியதை அகிருத்தியன் தனக்குக் கீழ்ச்சாதியினது அசனன் மயக்காதி பொசிப்பன் சாதிபேதமாவன் சண்டாளக்கிரியை யுடையவன் குரு முதலிய சுபட்சேத்திரங்களில் மேற்கூறிய கிரகங்கள் பெலவானாகினும் சுபனோக்க மிருக்கினும் அவ்வித ஹீனாதிக்கிரியை யிழந்து சத்கருமியாகி வாழ்வன்.

ஜீவன பலன்.

இரவி சிம்மம் குரு இவைகளும் இவைகளுக்கு பத்தாமிடத் ததிபதி நின்ற இராசிநாதனையுங் கொண்டு சீவன பலன் சொல்லவேண்டியது சீவ சரீராதிபர்களும் குரு ரவி இவர்கள் கடகம் சிம்மம் மேஷம் மீனம் தனுசு இவைகளில் பெலத்துடனிருந்தும் ஸ்தானாதிபர்கள் வலுத்தும் கேந்திரகோண கெதியுடன் இருந்தும் சுபபெலத்துடனிருக்கினும் நோக்கினும் சீவ சரீராதிபர்களும் மேற் கண்ட ஸ்தானங்களிலேயே பலமுரியவர்களா யிருந்த சாதகனுக்கு இராச சீவனவதிகார பிரபலத்துடன் உலகெலா மேய்க்கும்படி இராசயோகஞ் செலுத்துவனென்றும் இதில சுபராய் மாறியபெலத்துடன் ஆரோகண மவரோகணமாறி இருக்கில் சிலநால் சீவனவதிகாரபிரபல மிருந்து பின்பங்கப்படு மென்றும் அறியவேண்டியது.

கடகம் சிம்மம் ராசிகளிலேனும் அல்லது சரத்துக்கு ௬-அ-௧௧-லேனும் திரத்திற்கு ௫-௬-௧௦-லேனும் மேற்சொல்லியவர்கள்பலமற்று பாபமத்தியம் சேர்க்கையுடனிருக்கில் சிலசொல்ப ஜீவனமான அடிமையாவன் இந்த இடங்கள் சுபர் வீடாய் சுப பெலசம்மந்தத்துட

னிருக்கில் அல்ப பாபராகுலும் சில வகையான இராச சீவன மின்றி பிறபு மூலியத்தால் கெவருவமுள்ள சீவனமாகும் ச-எ-உ-களிலிருக்கினும் புதன் சுக்கிரன் வீடாகிற் பிரபல பெலத்துடனிருக்கில் சீவசரீராதிபர் வலுத்துநிற்கினும் சாதகன் சுயாதிகார புருஷனுகி வித்தைகளால் அரசர்மெய்க்க சீவனஞ்செய்வன் க-ரு-கஉ-ல் ஆகவிருக்கில் அவை குசன் குரு சந்திர க்ஷேத்திரமானுலும் இவர்களுடன் மேற்கூறிய இராசிகளில் சீவசரீராதிபர்கள் பிரவேசித்து பெலக்கினும் பூமிஸ்வயமான சீவனயோக பிரபலத்தை யடைந்து மிகவுமேன்மையுடையவனுவன் இவைகள் புதன் சுக்கிரன் சனிக்ஷேத்திரமானுல் வியாபார முதலிய வாணிபத்தொழிலால் யோகவானுவன் கும்பம் விருச்சிகம் விருஷபமானுல் ஹீனத்தொழில் செய்து சீவனஞ்செய்வனென்றும் மேற்கூறிய சீவசரீராதிபர்கள் பெலத்து இரவி மதி வீடல்லது ரவி மதியுடன் பெலத்து மிருக்கில் சாதகனுக்கு இராசபிரபு இவர்களால் பிரபலசீவனமுண்டாகும் இதில் பெலமற்று பகை நீசத்துடன் கூடினும் பாபர் கூடினும் இராசதத்துவ இடங்களில் தாழ்மையுடன் மானக்குறைவான சீவனஞ்செய்வது விருத்தியடையான் விரோதமாவன் குசனுடன் அவன் க்ஷேத்திரத்தில் பெலத்துக்கூடினுலும் பார்த்தாலும் பூமிமுதலிய அதிகாரமுண்டு மேஷத்திலிருக்கில் தனமுதலியதின்றி பரமனுஷருக்கு அரசனுகிபலபெயரை யேவல்கொண்டு சீவனஞ்செய்வன் புதனுடன் கூடில் புதன் வீடாகினும் வாணிபம் முதலியதுடன் ஜீவனஞ்செய்வன் துலாங் கன்னியானுலும் தனுசுமீனம் விருஷபம் ஆனுலும் வாணிபனுவன் மிதுனம் விருச்சிகம் மகரமானுலும் மற்றவெவையானுலும் பரதபண்டிதாதி கணிதத்தால் சீவனம் செய்வன் சுபக்ஷேத்திர சுபபெலனுனல் உலபெலாமெச்ச கணிதவைத்தியாதி பிரபல சீவனஞ்செய்வன் குருவானுல் சாஸ்திரபரிசயம் தருமசாஸ்திர விவகாரியாய் அரசரையுமெதிர்த்து வாதித்து பிரபல யோகனுவன் இவர் மகரம் மீனம் மேஷம் மிதுனம் துலாமிவற்றில் சீவசரீரர்களைசுபமாக கூடினுலும்பகையுடன் கூடினுலும் இவ்வித சாஸ்திரபரிசயங்கள் அல்பமாகி கேவலவிஷய பிரவேசனுகி சாந்த சீவனமும் சூத்திராதி தாழ்மையான பௌரோகிதனுவன் பாபக்ஷேத்திரமானுல் சுயம் பாகாதிகளில் ஸ்திரீவசிய சீவனமுடையவனுகி வாழ்வன்.

சுக்கிரனுடன கடகம் மீனம் மிதுனம் மகரம் கும்பம் இவைகளானுல் நடநாடகாதி பிரபந்தமும் வசியமேன்மையும் மிகவும் வல்லபனுகி சீவனஞ் செய்து வருவன் விருஷபம் விருச்சிகம் துலாம் சிம்மம் கன்னியானுல் ஜலவஸ்த்து வியாபாரமுள்ளவன் இதில் பகை நீசமல்லதுசனி

முதலிய பாவரைக் கூடினால் கூட்டிவிட்டும் பெண்வகையிலும் மானக்குறைவான தொழிலாலுஞ் சீவனஞ் செய்வன்.

சனியுடன் கூடினாலும் அவை சுக்ஷேத்திர உச்ச சுபக்ஷேத்திரமானால் கானத் தொழிலானாலும் அதிகாரமுடையவனாகியும் சிலம்பாதி குஸ்தித் தொழிலால் வல்லபனாகி செயம் பெற்றுவாழ்வன் பெலமற்ற பகை நீசக்ஷேத்திர கெதியுடனும் பாப மத்தியஸ்தனாகில் இதிலும் ஹீனனாகியும் அல்பமான தொழில்களைப்புரிந்து மயக்காதி புலால் நாற்றவகையில் சீவனஞ்செய்வன் பாம்பானால் கீழ்க்குலத்தொழிலும் பலவகையான பொருள் களவு தொழிலும் குறைவுள்ளவனாகியு மந்திரமுதலிய பில்லிசூனியத் தொழிலாலுஞ் சீவனமும் உண்டாகும். விருச்சிகம் மேஷம் விருஷபம் இவையலாத மற்றய இடமானால் பலவகைத்தொழிலும் இழிவனாகி அடிமைபூண்டு சீவனஞ்செய்து வாழ்வனென்றறிய வேண்டியது.

இலாப விரய பலன்கள்.

புதன் சுக்ஷேத்திர உச்சஸ்தானத்திலும் சுபர்முதலிய க்ஷேத்திரவாசனாகியும் பாப மத்தியமில்லாமலும் சுப சம்பந்தத்துடன் பெலத்தும் தனுசு கன்னி கும்பம் விருஷபம் கடகமிவைகளிலும் பெலவானாகியும் அல்லது சிம்மத்திலிருக்கினும் பெலத்துடன் கேந்திரகோண பெலத்துடன் இருந்தும் பகை நீசாதிபர் சம்மந்த மின்றியும் சந்திரனின்ற ஸ்தானாதிபதியும் சுக்கிரனின்ற ஸ்தானாதிபதியும் சுபபெல கேந்திரகோணத்தில் பெலத்துடனிருக்கினும் புதனின்ற ஸ்தானாதிபன் சுக்கிரன்சுக்கிரனுக்கு கக-மிடத்ததிபதி இவர்கள் பெலமற்றும் பாபக்ஷேத்திர பாவ சம்பந்தத்துடனிருக்கினும் நோக்கினும் லாபமே மேலானவிருத்தியுடன் அவரவர்களின் திசாபுக்திகாலத்தில் விசேஷ தனலாபயோகத்தையடையும்படி கொடுப்பார்களென்றும் மிக்க இராசயோக வல்லபர்களாகியும் வாழ்வர் துலாத்தில் சுபரிருக்கினும் நோக்கினும் அன்னியதேசமூலமான பிரபல லாபயோகத்தையும் மனோ விசேஷபாகங்களையும் மிகவுஞ் சிரேஷ்டமாக கொடுக்கப்படுவர்கள் என்றும் பாவரிருக்கினும் பகை நீசரிருக்கினும் சுயஸ்தானத்திலேயே லாபமுண்டாகும் சுத்தமாகில் ஸ்தானாதிபதி சுக்கிரனுக்கு மேற்கண்டபடி பலன் சொல்லவேண்டியது.

புதன் சந்திரனின்ற ஸ்தானாதிபதிகள் பெலமற்றபகை நீசமல்லது பகை பாவருடன் கூடினாலும் பாபமத்தியில் இருக்கினும் சுக்கிரனுக்கு

விரயாதிபதிநின்ற இடத்ததிபன் கேந்திரகோண சுபக்ஷேத்திர பல மற்றும் அல்லது உ-கக-ல் இருக்கினும் விசேஷலாபமுமின்றி செல வதிக முற்று இருண முதலிய தொந்தரவை யடைவன் பரதேசவாச சஞ்சாரனுவன் புதன் சுக்கிரனிவர்களும் இவர் வசாத் கூடியவர்க ளும் சமராசிகளானதில் பாப சுபர் கலப்பானுலுந் தனித்தாலும் அ வை சுபக்ஷேத்திரமானுல் மிகவும் தன வரும்படியுமுண்டு செலவு மதிகம் அந்திய காலத்துக்கு தன மிஞ்சாது இருவரும் பாவ க்ஷேத் திரத்திலிருக்கினும் பாப சுபரை யல்லது பாவரைக் கூடினுலும் லாப மில்லான் விரயமுமின்றி பூர்வார்ச்சித ஜீவனலாபனுகி வாழ்வர்பகை நீசாதி முதலிய வகையைப்பற்றி பாபக்ஷேத்திரம் பாவகிரக மிவை களைக் கூடின் பரதேச கெதனுகியும் எவ்விதவிருத்தியுமின்றி காலந் தள்ளுவன்.

இலாபவிரய் கணிதங்களாவன.

புதன் கன்னி இவையுடனும் சந்திரனின்ற ஸ்தானுதிபதியுடனும் புதனுக்கு பதிஞேராமிடத் ததிபதிநின்ற இராசிநாதனுடனுங்கூடிய எண்களை தனித்தனி சுபாசுப பலன்படிக்கு எடுத்து அந்த இராசி யெண்ணுல் பெருக்கிய தொகையை அ-ல் பெருக்கி கO-ல் கழித்த சேஷம் ஆதாயம் சுக்கிரன் விருஷபம் இவைகளுடனும் இவைகளு க்கு பனிரெண்டாமிடத் ததிபதிநின்ற இராசிநாதனுடனுங் கூடிய யெண்களை சுபாசுபப்படி யெடுத்து இராசியெண்ணிற் பெருக்கியதை மறுபடியும் கூ-ல் பெருக்கி கக-ல் கழித்த சேஷம் விரயமென்றும் பெயருகும் லாபத்திற்கும் விரயத்துக்கு முரிய பங்கை ஈடுசெய்து பார்த்தால் ஆதாயம் விரயம் ரொக்கஸ்திதி விருத்தி கடன் இவ்வித பலன்களை யறிந்துகொள்ளவேண்டியது புதவசாத் உரைத்த எண் களை தனித்தனி கூ-ல் கழித்தசேஷம் திசையிலும் வந்த ஈவை டு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷம் புத்தியிலும் பிரபல லாபமுண்டாகு மென்றும் சுக்கிரவசாத் சொல்லியதையும் இவ்விதமே பார்த்தறிந் தால் திசாபுக்திகாலம் விரயமதிகமாக நடக்கும் தேசாடனமதிகமா குமென்ற விபரமறிந்து கொள்ளவும்.

தனுசு லக்கின குணாகுண பாகம்.

இந்த லக்கினத்தில் செனித்தவன் மூத்தவர்கள்மேற் பிரியன் இளையவர்களுக்கு பயப்படுங் குணத்தன் கீர்த்தியுடையவன் தேக சுகி நல்ல போக சித்தியுடையவன் சத்துருக்களை செயஞ்செய்வன் பாலியாரம்பத்திலேயே அனேகவிதமான தன் பாலியத்திற்கு இசை வில்லாத வித்தையையுங் காரியங்களையும் செய்வன் தேச சஞ்சாரப் பிரியன் கஉ-கடு-கூஉ-சO-இந்த வயசு மாத காலங்களில் நேத்திராதி பலவகைவியாதி அரிஷ்டிக்கும் மேற்கண்ட வயதுகளில் தேகரோக கண்டங்களுண்டாகப் படுமென்றறிய வேண்டியது சரியான மத்திய கால வயசில் பலவகை யலேச்சல்களையும் பொருட்சேத தொந்தரை களையும் பெண்களால் பலவித வாதங்களாவன கனக் குறைவுகளை யும் அடைவன் என்றும் கொள்ளவேண்டியது.

தனுசுலக்கின சாதகனுக்கு காரகமாரக யோகாவயோக திசாபுக்திகளைக் கூறப்படுகின்றனவாம்.

இரவி புதன் குசன் சிலபாகம் அதியோகபலனையும் இவர்கள் இவைக்கேற்றபடி தனுசு கன்னி மேஷம் சிம்மம் இவைகளிலிருக்கில் இவர் திசையில் சுக்கிரன் குரு ரவி இராகு புக்தியில் அதிக இராஜ யோக பிரபலராவர்கள் என்றும் மிகவு மேன்மையுடன் பிரபல யோகமழிக்கப் படுவர்கள்.

கேது திசையில் உ-ல் ஓர் பாகத்திலும் ஷை பலனே நடக்கும் குரு திசையிலும் கூ-ல் ஒருபாகத்திலும் மேற்படி விசேஷபலன் நடக்குமென்றும் அதியோக வல்லபர்களாவார்க ளென்றும் இந்தத் திசை புக்தி காலங்களில் கிரகவாகனம் பூமி கன்று காலிபொருள் கள் சேர்க்கையும் தனதாணிய கிரகவாகனம் பூமி கன்று காலி விசேஷ பலன்களை யவர்களுக்கேற்ற தனுசு கடகம் முதலிய மீனம் சிம்மம் கன்னி இவைகளில் குரு முதலிய யோகக்கோளிருக்கில் இராஜ யோகமும் மிகுந்த மேன்மையும் ரவியைக்கூடாத புதனுகில் இருவர் திசையும் அவயோகமும் யோகபங்கத்தையுங் கொடுக்கப்படுவர்கள் என்றும் குரு ரவி புதன் குசன் கேது இவர்கள் தனக்கு விரோத சத்துருவுடன் பலக்குறைவுடன் மாறுதலான பெலன்களைப் பெற்றிருக்கில் யோகபங்க முடையவர்களாவார்கள்

சனி சுக்கிரன் இராகு மாரகர்களாவார்கள் புதனும் ஓர் பாகத்தில் மாரகம் கொடுக்கக் கடவன் இவர்கள் மகரம் விருஷபம் கடகம் துலாம் விருச்சிகம் இவைகளிலிருக்கினும் சுபபெலரில்லாதஇடத்து பகை நீசமல்லது பாபக்கோளுடன் கூடி நிற்கில் அவர் திசைகளில் இராகு குசன் சந்திரன் சனி சுக்கிரன் இவ்வித புக்திகளில் மாரகங்களைக் கொடுக்கப்படுவார்கள்.

சுக்கிரன் சந்திரன் கேது ஓர்பாசும் அவயோகங்களையும் பெலக்குறைவு தேகாரிஷ்ட வுபாதிகளையுங் கொடுப்பார்கள் ஆதலால் இந்த திசைகளில் பொருள் சேதமுந் தனதாணியக் குறைவும் மனதுக்கு கஷ்டநஷ்ட துன்பங்கவ் குடும்பகளத்திர புத்திருதி மாரணதுக்கசோகம் இவைகளை இராகுதிசையிலும் இராகு பாவருடன் கூடிய குரு சனி இவ்வித திசைகளிலும் களத்திர புத்திர மரணகிலேசத்தையும் பலவித மாரக வருத்த மாதுரு பிதுரு மரணசோகங்களையும் கலகவிவாதமான பொருள்சேதம் பந்துபகை இவைகளைமேற்கூறியஒவ்வொருதிசைகளிலும்ராகுசனிசுக்கிரன்சந்திரன்சுயபுத்திகளில் கொடுத்து வருவார்களாகையால் இந்த திசாபுக்திகளைக் கெடுதற் பலன்களாகக்கூறவேண்டியதுந் தவிர தேகாரிஷ்டரோக கண்டதுன்பங்களுடன் பலவகைக் கவலைநேருமென்றும் அறியவும்.

மாதுரு அரிஷ்டம்.

சந்திரதிசை சனி புதன் சுக்கிரனிலும்.
இராகுதிசை இராகு சனி சுக்கிரனிலும்.
குருதிசை சனி சுக்கிரன் சந்திரன் பாம்புகளிலும்.
புத சுக்கிரதிசைகளில் சந்திரன் சனி இராகு குருவிலும்.

மாதுரு நிரியாணம் மாதுரு வம்சக்ஷயம் பொருள்சேதம் மனதுக்குப் பலவகை வருத்தங்கள் அலைச்சல்கள் இஷ்டமூலிய விரோதம் மனதுக்குப் பலவிஷய கஷ்டபலன் நடக்கும்.

பிதுரு அரிஷ்டம்.

இரவிதிசை சனி சுக்கிரனிலும்.
இராகு குசன் திசைகளில் சுக்கிரன் குரு சனியிலும்.
சனி குருதிசைகளில் சனி குரு சுக்கிரன் இராகு ரவியிலும்.

கேது சுக்கிரதிசைகளில் சனி இராகு புதன் கேது சுக்கிரன் புத்தி காலத்திலும் பிதுரு மரணம் பிதுர்வம்ச துக்கம் பலவகை வருத்தம் அலேச்சல் மனதுக்குத் துன்பம் குடும்பகவலைகள் விரோதம் இவ்வித மான பலவிதத் துக்கசோக பலன்கள் நடக்குமென் றறியவேண்டும்.

சகோதர வரிஷ்டம்.

சனி இராகுதிசைகளில் குசன் பாம்புகள் புதன் சுக்கிரன் இந்த புக்தியிலும் கேது குசன் திசைகளில் பாம்புகள் சுக்கிரன் சனி புக்தியிலும் சுக்கிரன் திசை சுக்கிரன் குசன் பாம்புகள் சனி புத்தியிலும் இந்த காலங்களில் சகோதர வகை மரணதுக்கசோகமும் சகோதர மாரகமும் பலவித கஷ்டநஷ்ட துன்பமும் அலேச்சல்களும் மனோவருத்தங்களும் துக்கசோக சகோதரவகையால் கிலேசாதி விவாதவிரோத மனோவருத்தம் சகோதரங்களுக்கு இராஜதெண்டனை பலவிதவருத்தம் தேசபிரஷ்டாதி பிரஷ்டத்துவங்களைக் கொடுக்கும் சுபபல கிராசிகளிலிருக்கினும் சுபர் நோக்கினும் அல்பந்தோன்றி உடனுக்குடன் நிவர்த்தியாகி விடுமென்க.

களத்திர வரிஷ்ட காலங்கள்.

சனி பாம்புகளின் திசைகளில் சுக்கிரன் பாம்புகள் சனி புக்தியிலும் குரு திசையிலும் பாம்புகளுடன் கூடியவர்கள் திசையினும் சந்திரன் குரு சுக்கிரன் பாம்புகளிலும். சுக்கிரன் திசையில் குசன் பாம்பு சனி புக்தியிலுங் களத்திர மாரகங்கள் களத்திரபிரஷ்டசமான துக்கம் பலவகை வருத்தங்கள் ஷெ வகையால் பலவித துன்பயோக வருத்தம் இவ்வித கொடிய விஷமான கெண்டங்களு முண்டாகும்.

புத்திர வரிஷ்டம்.

குசன் பாம்புகள திசைகளிலும் குரு திசையிலும் சனி சுக்கிரன் சந்திரன் பாம்புகளிலும். சனிதிசை பாம்புகள் சனி சுக்கிரனிலும். சுக்கிரன் திசை சனி குரு பாம்புகளிலும். ரவிதிசை பாம்புகள் சனி சுக்கிரனிலும் களத்திராதி புத்திர நஷ்டம் பலவகை துக்கசோக வருத்தங்கள் அநேகவித மரணசோகம் தேகாரிஷ்ட கண்டம் புத்திரநாச பலன்களைக் கொடுக்கப்படும் புத்திரரிருக்கில் புத்திரனுக்குஞ் சாதகனுக்கும் கலகங்களை யுண்டாக்குமென் றறியவேண்டும்.

களத்திரபாவம் புத்திரபாவங்களுக்குப் பீடைசொல்லிய திசைகளிலேயே குரு புதன் சந்திரன் சுக்கிரனிந்த புத்திகாலங்களில் களத்திர புத்

திர லாபங்களைக் கொடுக்கும் இவைகளுக்கேற்ற சுப பலக்காரர்களையுங் கண்டறிந்து பலாபலன்களை நிச்சயித்துரைக்கவேண்டும்.

க-வது ஆயுர்பாவ பலன்கள்.

இந்த ஆயுர்பாவத்திற்கு சனிநின்ற ஸ்தானாதிபன் சரீரமென்றும் சந்திரனுக்கு அஷ்டமாதிபதி நின்ற ஸ்தானாதிபதி சீவனென்றும் குரு தனுசு இவைகளையும் பார்த்து ஆயுர்பாவஞ் சொல்லவேண்டியது.

குரு சந்திரன் இவர்கள் தனுசு மீனம் விருஷபம் கடகம் சிம்மம் கன்னி யிவைகளிலிருந்துஞ் சுபக்ஷேத்திர சுப பலத்துடன் பிரபல பெலவானாகியும் ஆறு இராசிக்குள் உதயத்திலும் சு—இராசிக்குமேல் உபயம் ஸ்திரமிவைகளிலும் பெலவானாகியும் சீவசரீராதிபர்கள் மிகபிரபல சுப க்ஷேத்திரஞ் சரஞ்சரமென்னும் இராசிகளாகியும் கேந்திரகோண இடங்களாகியும் அவர்களுடன் ரவி புதன்கூடி வலுத்தும் சுக்ஷேத்திராதி பலமுடையவர்களாகியும் சந்திரன் கேந்திரத்தில் குருவும் இவ்வித சவ்யாதி பலன் பெற்றிருக்கினும் ரவி புதனிவர்கள் தனுசு கன்னி சிம்மம் மேஷம் மிதுன மிவைகளில் நிற்கினும் சனிமுதலிய பாவர்கள் சேரவல்லது பாராமலுமிருக்கில் சாதகனுக்கு ஆயுர்பாவ வஷ ாஉ0-என்றும் இவர்கள் சரஸ்திரராசிகளில பாபராகியும் விருச்சிகம் மகரம் கும்பம் இவ்விடத்தில் தங்களுக்கு பகை நீசக்ஷேத்திரத்தில் இருபக்கமும் பாவர்கூடிநிற்கினும் நோக்கினும் வயசு வஷ ா - என்றும் உ-ல் பாபர்களுடன் கேந்திரகோண இராசிகளிலும்பாவக்ஷேத்திர மாகியும்பகைவருடன்கூடி சரசரமானாலும் சரமுபயமாகினும் குரு ரவி புதன். உ-கஉ முதலியதை விட்டுமற்றய. இராசிகளி லெவ்விட்மானாலும் சீவசரீராதிபர் பலப்பிரபலத்துடன் கேந்திராதி உ-ஈ-கஉ-இவைகளில் தனக்குரியநட்பாக்ஷி முதலிய க்ஷேத்திரமாகியும் இருக்கில் ஜாதகனுக்கு வஷ-அசு என்றும் இவர்களுக்கு இருபுறம் பாபராகியுமல்லது பாபக்ஷேத்திர கெதியில் பெலக்குறைவுடனிருக்கினும் அவைஸ்திரஸ்திரம் அல்லது ஸ்திரமுபயமானாலும் வஷ—எ0 என்றும் பாபர் சுபரிவர்களுடன்கலந்து கேந்திரகோணமல்லது உ-கஉ மிடம் இவைகளிலும் சீவசரீராதிபரிருந்தும் குரு புதன் ரவி முதலியோர் கும்பம்சிம்மம் மேஷம்இவையிலிருக்கினும் அல்லது சுபக்ஷேத்திர வாசத்துடன் பலவானாகினும் ஈ—முதலிய இடங்களில் சனி குசன் பாம்புகளிவர்கள் சேர்ந்தாலும் யாவர் பார்க்கினும் ஜாதகனுக்கு வஷ-சுகூ-க்குள்ளென்றும் சீவசரீராதிபர்கள் பெலமற்று மற்றமூவர் மாத்திரம் வலுக்கில் வஷ-சஉ-

குள்ளாகவே மரணமென்றும். சிவசரீராதிபர்களிலொருவர் பெலத்தும் ரவி புதன் குரு தனித்து கேந்திரகோண இராசியில் அல்லது சுபவீக்ஷண்ணியஞ் சந்திரகேந்திர பலத்துடனிருக்கில் வஂ-சுசு என்றும் ரவி பகை நீசமாகி மற்ற குரு முதலியோர் கக-க௦-எ-நு-ல் இருக்கில் சாதகனுக்கு வஂ-சு௦-என்றும்

குரு முதலிய சந்திரன் க-உ-ரு-சு-அ-இவைகளி லாவது சந்திரன் பிறந்து உபயம் ஸ்திர மிவைகளில் சிவசரீராதிபர்கள் பெலவான்களாகி வலுப்பெற்றிருக்கில் சாதகனுக்கு வஂ நிச - க்குள் ளென்றும் குரு சந்திரன் இவர்கள் பெலமுற்ற ச-கூ-கஉ-இந்த இராசிகளில் சுபக்ஷேத்திர கெதியுடனும் மற்றய சனிமுதலியோர்கள் பலத்துடன் இருந்து சிவசரீராதிபர்களைக்கூடினாலும் அவர்களே சிவசரீராதிபர்களானாலும் சாதகனுக்கு வஂ சஅ-என்றும் குரு பகை நீச இடங்களிலும் பூரண சந்திர கேந்திரத்தில் பெலத்துடனும் இருந்து சுப பலத்தோர் லக்கினாதி கேந்திரத்திலுற்று பாவரைக்கூடினாலும் வஂ ச௦-க்குள்ளென்றும் அவர்களுடன் பாம்பு முதலிய அசுபர்களிருந்தும் பகை நீசக்கோளைக் கூடினாலும் சந்திரன் பெலமற்றும் குரு கேந்திரத்தி லில்லாமல் குரு ரு-சு-அ-கஉ-இவைகளி லிருக்கினும் சாதகனுக்கு வயது வஂ ருஉ-க்குள்ளென்றும் சிவசரீராதிபர்கள் ஆரோகண ஸ்திரவிராசிகளிலும் அல்லது அவரோகண சரவிராசிகளிலாவது இருந்து சுபர்களாகியும் பாபமத்தியமாகி குரு சிவசரீராதிபர்கள் நின்றாலும் ஜாதகனுக்கு வஂ உசு - க்குள்ளென்றும் சிவ சரீராதிபர்கள் பகை நீசராகியும் குரு சுப க்ஷேத்திரத்திலும் சந்திர கேந்திரமாகி ரவி புதன் பாபரைக்கூடி பாபபல னடைந்திருக்கினும் சாதகனுக்கு வஂ உக-க்குள் கண்டமென்றும் குரு பகை நீச இடத்திலும் மறைவாகி அபல சுபர் பலமான பாபரில் எவரைக்கூடினாலும் சிவ சரீராதிபர் பலமற்றிருக்கில் ஜாதகனுக்கு வஂ கஅ-க்குள் மரணமென்றும் சுக்கிரன் அமர பக்ஷனாகி கேந்திரகோணத்தில் வலுத்தும சிவசரீராதிபர் பெலமற்றும் அல்லது சந்திரனாகினும் வஂ கஉ - க்குள்ளாகவே மரணமடைவனென்றும் விருச்சிகம் மகரம் இவைகளில் சனி பாம்பு முதலிய ரவி குசனுடன் இரண்டு பாவர்கூடி சு-அ-இலக்கின மிவைகளில்இருந்து குரு முதலியோர் பகைநீச இடங்களிலும் பலமற்று நிற்கினும் உடன் மரணமானது வஂ உ-மீ-உ-க்குள் ஆகுமென்றும் சூரியவசாது மேற் கூறியபடி யிருக்கில் தகப்பன் மரணமும் சந்திர வசாதிருக்கில் தாய் மரணமென்றுஞ் சொல்லப்படும், இவைகளில் குரு பலவானாகி கேந்திர கோணத்திலிருக்கினும் பாபரைக்கூடினும் சுக்ஷேத்திர உச்சம் நீங்கிய

ருக்கினும் இரவி சனி முதலிய பாவர் தனுவிலாவது மிதுனத்
து இருக்கில் ரு-ஆ-ரு-மீ த்துக்குள் பாலாரிஷ்ட மென்றும்
வையில் குருவுக்கு மறைவிடத்தில் பூரணசந்திரனும் இரவி சனி கேந்திரத்தில் பாவரைக்கூடியும் குரு சுக்ஷேத்திர உச்ச இடங்களில் பெலத்துடன் கூடி இருக்கில் மாதா பிதாக்கள் பாலியத்திலேயே மரணமாவர் தாய் பால் உண்ணுன் தேகாரிஷ்ட நோய்களால் வருந்திப் பின் சாதகன் ஆயுள்விருத்தி யடைவனென்றும் அறியவேண்டும்.

குருவுடனும் குரு நின்ற ஸ்தாநாதிபதி எந்த இடத்திலிருக்கிருனே அவனுடனும் தனுவிலும் சனி சந்திரன் எவ்விடத்தி லிருக்கிருனே அவைக்கு அஷ்டமாதிபதி நின்ற ஸ்தாநாதி பதியுடனும் கடகத்திலும் இரவி புதனுடனும்கூடிய கிரக சுபாசுப பலத்துக்கொத்த எண்களை இராசி எண்களாற் பெருக்கி அவரவர்களின் பலனை யெடுத்தும் கூ-ல் கொடுத்த சேஷம் திசையிலும் வந்த ஈவை ரு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷம் புக்திகளிலும் தேகாரிஷ்டரோக கண்டமுண்டென்றும் சவ்யாப சவ்யாதிநான்கில் எந்தத் திசைபுக்தி கடையாக வருகிறதோ அக்காலம் மாரகமென்றும் மேற்கூறிய கோட்களின் எண்களை யொன்று சேர்த்து ரு-ல் கழித்த சேஷம் சவ்யாதி வகையாலறிந்த காலம் அவஸ்தையில் தேகவியோகமும் மேலேகண்ட மொத்தத் தொகையை ா-ல் கழித்த சேஷம் சவ்ய வகையா லறிந்த ஆயுளொன்றுங் கண்டு நிச்சயிக்க வேண்டியது.

தனகுடும்ப பலன்கள்.

சனி குரு இவர்களும் இவர்களுக்கு இரண்டா மதிபன் எந்த இடத்திலிருக்கிருனே அந்தஇடத்ததிபனையுங் கொண்டுதனபாவஞ் சொல்லவேண்டியது மேற்சொல்லிய நால்வர்களும் மகரத்திலேனும் அல்லது சுக்ஷேத்திராதி சுபபலனைப் பெற்றேனும் இந்த ஐவரும்சுப சம்மந்தத்தோடு கேந்திர கோண சுபக்ஷேத்திர கெதியுடன் பெலத்தும் அவர்களுள் பாபராஞலுஞ் சுபராஞலுமே பகைமுதலிய அதிக குரூர பெலக்காரருடன் சேராமலும் உபயபாரிசம் பாவர்களில்லாமலும் இருக்கின் சாதகனுக்குஅனேக தனமென்னுங் கோடியாந்திர ஸ்திதிகளுடன் பிரபலம்பொருந்தி வாழ்வன் இதில் உபயராசிகளில் மேற்சொல்லியதில் அதிக கிரகங்களிருக்கில் சிலகாலம் பிரபல தனத்துடன் இருந்து சிலகாலந் தாழ்மையாகிவிடும் இதில் அவரோகண ஸ்திர

விராசிகளில் இருக்கில் எப்பொழுதுமே பிரபல தனவந்தனவன் சுபரா
இல் சிலநாள் தனவந்தனாகியும் சிலநாள் இருணவந்தனவன் பாபிகளே
யானல் ஒரேவித தனவிருத்தி யற்பமுடையவனவன் ஆரோகண ஸ்திரத்
தில் சுபரிருக்கில் தன பிரபல்யம் முன்னோர்களால் இல்லாமல் வெகுகா
லத்தின் பின் இவனல் பிரபலத்துடன் தனர்ச்சிதஞ் செய்வன் இதில்
சரத்தில் இருக்கில் அன்யனிடம் அபகரித்த தனமானது உடனேபோய்
பழய ஸ்திதிக்கும் ஹானியுண்டாகிவிடு மென்றறியவும்.

மேற்கூறிய குரு சனி இவர்கள் கூடியும் சுக்ஷேத்திர உச்சமான
தனுசு மீனம் கும்பம் துலாம் கடகமிவைகளிற் சேர்ந்து சந்திரகேந்திர
பலத்துடன் உ-ல் குசன் அல்லது புதன் இரவி இவர்கள் கூடினும் சுப
பலமுடையவர்கள் பெலமுற்றும் பாம்புகள் சனிமுதலிய பகையோரைக்
கூடாமலுமிருக்கில் சாதகனுக்கு தனமானது பூர்வார்ச்சிதத்துடனே பல
முற்றுப் பிரபலிக்கும் லக்ஷாந்திரமான பொருள்களென்றும் இதில் சனி
யேனும் அல்லது இரவியேனும் பலமற்று பகை நீசக்ஷேத்திரத்தேனும்
அல்லது அந்த க்ஷேத்திரத்தை யடைந்த கிரகத்தோடேனு மிருக்கினும்
ஓர் பாபரைக் கூடினும் தச சகஸ்திராந்தர்க்கத் தனமுடையவனென்றும்
இரண்டு பாவர்களாகினும் குரு சனி இவர்கள் தனித்து மகரம் மேஷம்
மிதுனம் சிம்மம் கன்னி விருச்சிகம் இவைகளில் ஒன்றிலிருந்தும்புதன்
சுக்கிரன் முதலியோரைக் கூடினலும் அல்லது பார்த்தாலும் குரு சீவ
சரீராதிபர்கள் சுக்ஷேத்திராதி கேந்திரகோண உச்சகெதியில் சுபட்சேத்
திர பலத்துடனிருக்கினும் சாதகனுக்கு தச சகஸ்திரத்துக்கு மேற்கொ
ண்ட லக்ஷாந்திரவரை தனர்ச்சிதஞ் செய்வனென்றும் இவைகளில் பாவ
ருடன் கூடினலும் இருபக்கரிலும் பாவரிருந்தாலும் சகஸ்திர தனமு
டைய பிரபலவானவனென்றும் மேற்கூறிய சனியுஞ் சீவசரீராதிபர்க
ளும் பலத்துடன் உ-கக-கட-ல் இருக்கினும் அவ்விடமானது அவர்க
ளுக்கு உயர்வுள்ள ஸ்தானமாகி பெலத்தும் சுபகேந்திர கெதியுள்ளோர்
திருஷ்டி இருக்கினும் சேர்ந்திருக்கினும் அவர்கள் சுபரானலும் பாவரா
னலும் பெலமுற்றுக்கூடி இருக்கில் சாதகனுக்கு லக்ஷாதி தனயோகவா
னனலும் முடிவில் பொருளை யழித்தும் தசசகஸ்திர தனவிருத்தியாகி
னும் சிதறுதலாகி வாழப்படுவனென்றும்.

குரு சனி பகை நீசக்ஷேத்திர இடத்தில் கேந்திரகோணமானலும்
சுபரல்லது சரீரசீவாதிபர்கள் கூடினலும் பார்த்தாலும் தனமானது சக
ஸ்திராந்தமானவை விருத்தியை யடையுமென்றுங் குடும்ப சுகசௌக்

கிய குறைவை யுடையவனுகி வாழ்வனென்றும் குரு சனி ௩-௬-௮-௯௨லாயினும் அல்லது லாபகேந்திரகோண ராசியாகினும் பகை முதலிய பாவக்ஷேத்திரத்தி லிருக்கினும் இருபக்கங்களில் அல்லது உ-ல் சனி ரவி குசன் பாம்புகள் கூடினுலும் தனம் பிரபலமாக இருந்தபோதினும் பின்னழிந்து விடும் பூர்வதனமும் கிடையாதென்றும் சுபரிருந்து பாபர்கூடினல் பூர்வதனம் விருத்தியும் சுயதனமழிந்துவிடு மென்றும் பலவகைக் குடும்ப நஷ்டமாகுமென்றும் சிவசரீராதிபர்கள் சுபட்சேத்திரமில்லாதிருக்கினும் குரு சனி பெலத்தாலும் சுயதனம் கிடையான் அன்னிய தனத்தை யாள்வன் குரு சனியும் பலன் கெடில் அன்னியதனமுங் கிடையாது இருணவந்தனுய் வாழ்வனென்றும் குரு உபய ராசியில் சிவசரீருதிபர்களைக்கூடி பெலத்துடன் கேந்திர ஸ்தியாய் சுபட்சேத்திரத்திலிருக்கினும் பலமுடைய கிரகங்கள் பார்த்தால் அல்லது கூடினும் சாதகனுக்கு லக்ஷத்துக்குள்ளடங்கிய தனமானது விருத்தியுண்டாகும் குசன் சனி ரவி வீடாகிய சிம்மம் மேஷம் விருச்சிகம் மகரம் கும்ப மிவற்றில் சிவசரீராதிபர்கள் பலத்துடன் மேன்மை பெற்றுஞ் சுபகேந்திர சம்பந்தத்தோருகி இருக்கினும் நோக்கினும் சாதகனுக்கு ௧0௲-ம் பொன்னுக்குள் அடங்கிய தனமானது பிரபலவிருத்தியை யடையப்படுவர்க ளென்றும் அதிகமேன்பாடுகளுமிதில் குசன் ரவி யிவருவது சிவசரீருதிபர்களுக்கு விரோதிகளானவர்கள் சேர்ந்திருந்தாலும் பார்த்தாலும் தனர்ச்சிதம் செய்து பின் பாதொரு பிரபலமில்லாதே இழந்துவிடுவனென்றும் பொருள் சேதமும் குரு சனிஇவர்கள் சுக்கிரனைக்கூடினுலும் பார்த்தாலும் பாம்பு முதலிய பாவர்கள்கூடி அல்லது பார்க்கினுந் தனமான பூர்வ விர்த்தியும் நஷ்டமாகிவிடுமென்றும் பலவாருன கஷ்ட நஷ்டம் தனமூலமாக ஏற்படுமென்றும் இவ்வித கிரகத்தில் குரு அல்லது சனி கேந்திரகோணம் அல்லது ரவி மதி வீட்டிலிருக்கில் அனேகவித நஷ்டத்தினல் பூர்வார்ச்சித தனங் கிடைக்கப்படு மென்றும் குசன் பாம்புகளாவது அல்லது சிவசரீருதிபர்களாவது சனி குரு இவருடனுவது இவர்களுக்கு இருபாரிசத்திலுங்கூடி இருக்கினும் பொருளானது பலவித கஷ்டநஷ்ட துன்பத்துடன் நஷ்டமடைந்தும் பின் தரித்திரனுகவும் வாழப்படுவ னென்றும் அறியவேண்டும்.

மகரத்தில் சந்திரன் முதலிய சுபருடனும் குருமுதலியோர் பார்வையுடனும் கேந்திரமானுலும் சனி முதலியோர் பெலத்த சுபக்ஷேத்திரத்திலிருக்கினும் பிரபலதனமானது பூர்வார்ச்சிதவிருத்தியுண்டென்றும் சனி குரு கும்பம் விருஷபம் மிதுனம் சிம்மம் கன்னி விருச்சிகம் இவைகளி

லிருக்கில் பூர்வார்ச்சித தனத்தால் பலவிவாத விரோதம் முதலிய நஷ்டத்தை யடைந்தும் பின் சவுக்கியத்தையடைவனென்றும் மேற்சொல்லிய கிரகங்கள் பாபக்ஷேத்திரத்திலும் பாவருடனே கூடினும் பகை முதலியபோரானாலும் அவ்விதமான பொருளும் விர்த்திக்குவாராமலே அழிந்துவிடுமென்றும் கஷ்டநஷ்ட துன்பம் தேகாரிஷ்டாதி விரோத முண்டாகுமென்றும் அறியவேண்டும்.

குடும்பம் வாக்கு இவைகளைப்பற்றிய பலன்களாவன.

சனி ரவி கூடி யல்லது சுக்கிரனுடனே பாம்பு முதலியோர் இருந்தாலும் சுக்கிரனில்லாதபாவர்களெவராவது, உ-ல் இருக்கினும் குடும்ப விருத்தியில்லான் பிசகுரைப்பன் வாக்குமுதலிய குறைவும் பலவாறாகிய கஷ்டநஷ்ட துன்பங்களும் மனதுக்கமும் பலவாறாகிய வாக்குதிக்குதல் முதலிய வருத்தமடைவன். இந்த ஸ்தானத்தில் சுபரிருக்கினும் நோக்கினும் சத்தியவசனன் குடும்ப பிரபலமுடையவன் அதிகமான மேன்மையுடன் வாக்கு சித்தியுடன் யாவரும் வசியமாய் வாழ்வன். உ-ல் இரவி இருக்கினும் நோக்கினும் யுக்தியுடையவன் தீர்க்கவாக்குடையவன் விரோதமும் குடும்ப துக்கமடைவன். சந்திரனாகில் மிருதுவாக்கு வசியன் ஆவன் குசனாகில் திக்குதலடைவன் தயிரிய வாக்கன் கடுஞ்சொல்லானாலும் யாவரும் பயமுடையவர்களாவார்கள் புதனாகில் சவுமியவாக்கும் நிச்சயமில்லான் சம்சயமுடையவன் குடும்பம் சமவிருத்திபடையும் குருவாகில் வாக்குஸ்புடமும் கூழானவனும் குடும்பசுகயமுண்டாகும் சுக்கிரனால் யாவரையும் வசியஞ்செய்வாக்கன் அதிமேன்மை குடும்ப விருத்தியுண்டாகும் சனியாகில் தாமதஞ்செய்வாக்கனவன் குடும்பமுந் தாமத விருத்தியுண்டாகும்.

பாம்புகளாகில் விஷவாக்கும் பகையும் உளறுதல் முதலிய வகையுண்டாகும் சிவசரீராதிபர்கள் சனிபுதன் பாம்பாகி இரண்டிலிருக்கினும் நோக்கினுமல்லது கடகத்தில் பெலமற்றிருக்கினும் ஊமையாகுவன் வாக்குகெடும் இரவி அமரபக்ஷமத்திபாகி யல்லது சுக்கிரனாகி உ-கஉ-ல் இருக்கினும் இவைகளை நோக்கினும் விரோதபகைவருடன் கூடினும் அவர் இடுக்கமுள்ளகிரகங்களில் வாசஞ்செய்தாலும் அவர்களுக்கு இருபுறமும் பாம்புகள் சனி குசன் நெருக்குண்டு கூடினும் நேத்திரம்கெடும் இதைக் குருமுதலிய சுபக்கோள் பார்க்கினும் கூடினும் அல்பங்கண்டு உடனுக்குடன் நிவர்த்தியாகி விடுமென்றும் இதிலிருவகைப் பக்கத்தில் ஓர் புறமாக பாவரிருக்கினும் நோக்கினும் அப்பக்கத்துடைய நேத்திரங்

கெடும் இதில் பாவர்கள் சுபராய் பெலத்திருக்கினும் சுபராகினும் நேத்திராதிபாதை இல்லாமல் சுகமாயிருப்பன் சுபர் பாபராகினும் பாவரே கூடினும் நேத்திரம் விர்த்தியில்லாமல் மறையு மென்றறியவேண்டும்.

தன்பாவ கணிதங் கணிக்கும் விபரமாவன.

குருவுடனும் சனியுடனும் மகரத்திலும் இவைகளுக்கு இரண்டாமிடத் ததிபதி யெந்த வீட்டிலிருக்கின்றானோ அவர்களுடனுங் கூடிய கிரக எண்களை சுபா சுபப்படி இராசி யெண்களால்பெருக்கி கூ-ல்கழித்த சேஷம் திசையிலும் வந்த ஈவை நி-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷம் புக்திகளிலும் தனித்தனி கண்டறிந்த ஒவ்வொரு திசாபுக்திகளிலும்தனமானது அதிக பிரபலத்துடன் வாழ்ந்து வரப்படுவன் என்றும் அதிக யோக பிரபலமும் பலவித தனலாப வெற்றிகளும் உண்டாகும் இப்படி முன் பெருக்கிய தொகைகளையொன்று படுத்திவைத்துக்கொண்டு ரு-பலனுக்குமேல் ஓர் கிரகங்கள் வலுவாகில் சமத்தொகை உ-முறை பெருக்கியும் ரு-பலனானல் ஓரே முறை சமத்தொகையால் பெருக்கியதும் உ-க்கு மேலான பலனாகில்மேலே முழுத்தொகையும் கீழே கால் பாகத்தொகை வைத்துப்பெருக்கியும் உ-க்குள்ளானல் அ-ல் ஒருபங்குத் தொகையால் பெருக்கியும் கண்டறிந்து க-குட்பட்ட தொகையானல் வந்ததொகையையே வைத்துக்கொண்டும் சவ்யாப சவ்யக் கணக்குப்படி அறிந்தவை இவ்வளவு சொர்னரூப னென்றும் இதில் குருநின்ற பனிரெண்டாமிடத் ததிபதி நின்ற இராசி நாதனைபற்றி கணக்கு சேர்த்துபார்க்கில் வருஷலாபமென்றும் சூரியனின்ற ஸ்தானாதிபதியின் கணக்குகளைக்கூட்டிப் பார்க்கில் மாதலாபமென்றும் சந்திரனுடனே கூடிய கிரகவெண் கணிதத்தை முன்கூறிய தொகையிற் கூட்டிக்கழித்த சேஷம் தனலாபமென்றும் பெயராகும் இவ்விதந் தனலாப கணிதமறிந்து கொள்ளவேண்டும்.

மேலே கூறிய தனவிஷயத்தில் சீவசரீராதிபர்களுடனாவது சீவ சரீராதிபர்களாவது இரவியானாலும் சனியானாலும் இவர்களுடைய வீட்டினின்றாலும் பூர்வார்ச்சித தனமென்றும் சந்திரன் புதனாகில் தாய்வழி தனமென்றும் குருவாகில் இராசமூலிய சுயார்ச்சிதமென்றும் குசனாகில் சகோதரார்ச்சிதமென்றும் சுக்கிரனாகில் ஸ்திரீமூலியார்ச்சிதமென்றும் பாம்புமுதலியோராகில் அன்யார்ச்சிதம் சுயராச்சிதப் பொருள் தனலாபமென்றுங் கண்டுகூறவேண்டியது. இவர்களின் கிரகத்திலிருக்கினும் இவ்விதமே நடக்குமென்றறியவேண்டும்.

சகோதர பாவ பலன்கள். 319

சனி குசன் கும்பம் இவைகளையும் இவைகளுக்கு மூன்றுமிடத்ததிபதிநின்ற இராசிநாதர்களையுங் கொண்டு சகோதரபாவ பலன்கள் சொல்லவேண்டும்.

சனிக்கு மூன்றுமிடத்ததிபதி நின்றஇராசிநாதன் சீவனென்றும் குசனின்ற இராசிநாதன் சரீரமென்றும் பெயராகும். இவர் புதக்ஷேத்திரம் அல்லது சனிக்ஷேத்திரங்களில் பாவருடனே கூடினும் பகையோர்களுடன கூடினும் பாம்புமுதலியகோட்க ளிருக்கினுங் கூடினும் சீவசரீராதிபர்கள் சனி யல்லது புதனுகி பலமற்ற (௩) (௬) (௮) (௰௨) பகை நீசவிடங்களில் பாபரைக் கூடினும் சனி மூன்று ஐந்து முதலிய புதன் வீட்டில் இரவிமுதலிய பகைபாவரைக்கூடினும் குசன் பாம்புடன் கூடி கன்னி மிதுனம் கும்பம் மேஷம் துலாம் இவைகளில் இரவியைக் கூடினும் அல்லது புதனைக் கூடினும் பகையோருடன் சம்மந்தப்பட்டானும் சனியுடன் குசன்கூடி சுபபலதிருஷ்டி இல்லாமல் (௩) (௫) (௭) (௮) (௰) (௧௧) இவைகளி லிருக்கினும் அவர்களின்இரு பக்கங்களை யடுத்தும் பாம்பு முதலிய பகையோரிருந்தாலும் சகோதரமே கிடையாது. இப்படிக்கிருக்கும் கிரகங்களில் சீவசரீராதிபர் பெலத்தும் பகை நீசமுதலிய பெலக்குறை வில்லாமல் கேந்திரகோணத்தில் குருமுதலிய சுபக்கோட்கள் சேரினும் அல்லதுபார்க்கினும் அல்பமான ஏகசந்ததி விருத்தியுடையவனுவன்என்றும் சந்திரன்பலமுற்றிருக்கினும் நோக்கினும் பெண்சந்ததி அல்பமான ஏகசந்ததியுடையவனென்றும் சுக்கிரனிருக்கினும் அவ்விதமே பெண்சந்ததியென்றும் குரு குசன் இரவியாகில் புருஷ சந்ததியென்றும் அவைகளின் குடும்பம் விர்த்தியடையுமென்றும் சீவசரீராதிபர்கள் பகைநீசக்ஷேத்திரம் பகைபாவருடன்கூடினும் நோக்கினும்அப்படிக்கொத்த சந்ததிகள் பலவாருகி விருத்தியின்றிப் போய்விடு மென்றும் அறிய வேண்டும்.

மேற்கூறிய கோட்கள் சுபமித்துரு க்ஷேத்திரங்களில் பெலத்தும் கேந்திரகோணத்தில் இருக்கினும் பாவர் சுபர்கலந்திருக்கினும் அல்பமான (௨) முதலிய புருஷசந்ததி ஸ்திரீ சந்ததி இவைகளுடன் விருத்தியை யடைந்து வருவன் குருமுதலிய சுபரே கும்பம் மேஷம் துலாம் இவைகளிலாவது கேந்திரகோண சுக்ஷேத்திராதிபவிடங்களி லிருக்கும் சனியுடனுவது குசனுடனுவது சுபர்கள் கூடியும் அவ்வ

கைச் சத்துருத்தவ இராசிக் கிரகங்களில் சேராமலும் ஒருவர்க்கொருவர் மைத்திரராய் தனுசு மகரம் மீனம் சிம்மம் கன்னி இவைகளிலிருக்கினும் பிரபலமான புருஷன் ஸ்திரீ இவைகளுள்ள பகுசகோதரயோகவானென்றும் இதைப்பாவர் பார்த்தாலும் கூடினாலும் அபகீர்த்திமுதலிய குறைவுள்ள சகோதரங்களென்றும் பலவகை வருத்தமும் மனதுக்குத் துக்கசோகாதிகளும் அந்திய காலத்தில் சகோதரமேவிர்த்தியில்லாமலும் உரோகாதி சித்தப் பிரமையடைந்த சகோதரராவார்களென்றும் சொல்ல வேண்டும்.

இவைகளைத் தவிர கும்பம் மேஷம் விருஷபம் மிதுனம் கடகம் துலாம் விருச்சிகம் இவைகளில் சுபருடனே சனியேனுங் குசனேனுங் கூடினும் அல்லது நோக்கினும் சிவசரீராதிபர்கள் சுபக்ஷேத்திர பலவானுகில் உ-முதலிய சகோதர விருத்தியுடன் முன்னுக்கு வருமலும் களத்திர புத்திர குடும்ப க்ஷேமக்குறைவென்றும் மற்றய சகோதரவகைகள் விர்த்திக்கு வருமென்றும் பாபருஞ் சுபருமாகில் அல்பமான சகோதர விர்த்திகளுடனும் பெண்வகை யுண்டென்றும் அறியவேண்டும் இவ்விதமான இராசிகளில் பாம்பு சனி புதன் குசன் முதலிய பாவர்களே பலத்துடனிருக்கினும் அவைகளுக்குரிய சுபக்ஷேத்திர மின்றியும் சிவசரீராதிபர் பாம்புகள் புதன் சனி இவர்களுடன் கூடினாலும் சகோதரங் கிடையாது பெண் சந்ததியிருந்தாலும் அதுவும் அழிந்துவிடும் குடும்ப சந்ததி யில்லாமற் போய்விடும் சிவசரீராதிபர் பெலத்தும் சுப சம்பந்தமானாலும் திருஷ்டியானாலும் ஸ்தானாதிபதி பலமானால் சகோதரவம்ச விர்த்தியுண்டாகும் ஸ்தானாதிபதி பெலன் கெட்டும் சிவசரீராதிபர் வலுத்தால் அல்பமான சந்ததி ஏகவானாய் அந்திய விர்த்தியுண்டாகும் இதில் பாப க்ஷேத்திரமான பகை நீசத்தில் சுபரும் பாபரும் வலுப்பெற்றால் சகோதரங் கிடையாதெவ்வளவு உண்டானபோதும்அழிந்து விடுமென்றும் சுபர் சுபபெல கேந்திரகோண இராசியிலாவது மூன்று பதினோராமிடத்திலாவது பெலத்தும் பகை நீசமில்லாமலிருக்கினும் பிரபலமான பகு சகோதரலாபவான் குடும்ப விர்த்தியுடன் யோகமான சகோதரரைப் பெற்றுச் சுகமாகவாழ்வன் என்றும் பாப க்ஷேத்திரம் பாவருடனாகில் கர்மியாகியும்குடும்ப விர்த்தியில்லாமலும் பலபொருளைமாத்திரம் படைத்து பூதம்போல்வாழ்வனென்றும் அவ்வித குடும்பம் க்ஷயமுண்டாகுமென்றும் பாபருஞ் சுபருமாகில் சில நாள் சகோதர குடும்பவிர்த்தி இன்றியும்பின் க்ஷேமத்தையும்அடைவனென்றுங் கூறவேண்டும்.

சனி குசன் முதலியோர் மூன்றிலிருக்கினும் பாம்புகள் நிற்கினும் சனி ௫-௭-௧௦-௧௨ இவைகளி லிருக்கினும் புதனுடன் சுக்கிரன் கூடினும் ௩-௧௧ மிடங்களில் சந்திரன் அல்லது குசன் சனி பாம்புகள் இருக்கினும் இவர்கள் ௩-௫-௭-௧௦ இந்த ஸ்தானங்களை சனி குசன் பார்த்தாலும் பாம்புமுதலியோர் பார்த்தாலும் மிருந்தாலும் அனுசாரமடந்தை விதவை முதலியோரைப் போகித்துச் சந்ததி விருத்தி செய்து அவைகளால் மனோதுக்கங்களையு மனுபவிப்பன் சுபரிருக்கில் சுபஸ்திரீ போகவானவன்.

சனி குரு முதலியோரும் சிவசரீராதிபனாகிய குரு புதனுக்கு சிவசரீராதிபர்கள் கேந்திரகோண சுக்ஷேத்திரபெலத்துட னிருக்கினும் நோக்கினும் அடிமையாளும் மிகுந்த ஸ்திரீ சம்போகம் பிரபல யோகவானு மாவனென்றும் பாபக்ஷேத்திரம் பாவராகிப் பகை நீச முதலிய அபலனைப்பெற்றிருக்கினும் நோக்கினும் இவனே சிலருக்கு அடிமைசெய்வ னென்று மறிய வேண்டுமென்க.

சகோதர பாவஸ்தானாதிபர்களாகிய சனி சுக்கிரன் இவர்களுக்கு சிவசரீராதிபர்களும் விருஷபம் துலாம் கன்னி மிதுனம் கும்பம் மீனம் விருச்சிகம் இவைகளில் அமரபக்ஷச் சந்திரன் சுக்கிரன் புதன் சனி இவரானாலும் அல்லது இவரைக்கூடினாலும் இவர் இடங்களில் சிவசரீராதிபர்கள் இருந்தாலும் இவர்களின் கேந்திரகோணதிருஷ்டியினும் சேர்க்கையினும் சனி சுக்கிரன் குசனிவர்கள் நின்றாலும் சாதகனுடைய பிதாவுக்கு மறுதாரமும் பரதாரபோகியுமாகி அவ்விதவம் சபுத்திரராகிய சகோதரங்களையு மடைவனென்றும்அவர்க்கு மூன்று பதினொன்றில் பாம்புகள் சனிபாவரை விட்ட புதனிருக்கில் அந்த வகையினுஞ் சகோதர மில்லானென்றும் பரகர்ம பாத்தியஸ்தனாகி வாழ்வனென்றும் இவர்களில் யாரேனுஞ் சுபக்ஷேத்திரபலத்துடன் சிவசரீராதிபர்களைக் கூடினும் அல்லது பார்க்கினும் அப்படிக்கொத்தவம்ச சகோதரங் களானவை யுற்பவிப்பதில் மேன்மையுடன் பிதாவின் துதியதாரத்தால் சுகமடைவனென்றும் அவ்விதவம்ச மேன்மையையடைவனென்றுங் கண்டறிய வேண்டும்.

மற்றய விடங்களில் பாவக்ஷேத்திரம் பாவருடனிருக்கில் பிதாவுக்கு வெகுதார முண்டு சுப க்ஷேத்திரஞ் சுப பெலனாகில்ஏகதாரஸ்தன் பிதாவென்றும் அறிய வேண்டும்.

சகோதரபாவ கணிதவிதிகளைக் கீழே கூறப்படும்.

குசன் சனி கும்பம் இவையுடனும் சுக்கிரனுடனும் சுக்கிரனுக்கு கக-மிடத் ததிபதி நின்ற இராசிநாதனுடனும் குசன்சனிகும்பமிவைகளுக்கு மூன்றுமிடத்ததிபதி நின்ற இராசி நாதனுடனும்துலாத்திலும் கூடிய கிரக வெண்களைச் சுபா சுப பெலன் படிக்கு எடுத்து கொண்டு அந்த இராசி எண்களால் தனித்தனி பெருக்கி சுபா சுப பெலன்களுக்குத் தள்ள வேண்டியவைகளைத் தள்ளி நின்ற சேஷத்தை அவரவர்களின் கிரணவெண்களின் தொகைக்குக் கொடுத்துக் கண்ட ஈவை சகோதர மென்றும் உ - வ - ஞ. வரில்தள்ளுபடிசெய்தும் ஸ்திரீபுருஷ கிரகங்கள் கொடுத்து வந்தவைகளை யறிந்து சொல்லல் வேண்டும்.

முற்றுப் பெற்ற குடும்ப விர்த்தியுள்ள சகோதரமென்றும் உ-வ-முக்கால் - ஆனல் மத்திப காலத்தில் அழிந்துபோய் விடப்பட்ட சகோதரமென்றுங் கண்டு கொள்ள வேண்டும். அவ்வித சகோதர ஸ்தானங்களுக்கு எட்டாமிடத் ததிபதி நின்ற இராசி நாதனின் எண்களைப்பெலன் படிக்கு இருசியெண்ணாற் பெருக்கியதை மேலே கூறிய ஒவ்வொரு கிரகவெண்களிலுஞ் சேர்த்து கூ-ல் கழித்த சேஷமும் வந்த ஈவை ரு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷமும் வந்த ஈவை ரு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷமான திசாபுக்திகளில் சகோதர வரிஷ்டமென்றுங் கண்டறியவேண்டும்.

மாதுரு கிரகம் வாகனம் பூமி வியாபாரம் வித்தை இவைகளைப் பற்றிய பலன்களாவன.

குருவையும் மீனத்தையும் சுக்கிரனையும் சுக்கிரனுக்கு நான்காமதிபதி நின்ற இராசிநாதனையும் கொண்டு கிரகவாகன பலன்கள் சொல்லவேண்டியது.

குரு சுக்ஷேத்திர உச்சஸ்தானங்களில் பெலவானாகினுங் கேந்திர கோணத்திலும் சுக்கிரன் மீனம் மிதுனம் தனுசு இவைகளினும் ரிவசரீருதிபர்கள் தனக்குரிய சுபக்ஷேத்திராதி கேந்திரகோண பெலத்துடனிருக்கினும் நோக்கினும் மேற்கூறிய நான்காமிடத்திலும் சந்திரன் முதலிய சுபக்கோட்கள் தனக்குரிய சுபபெலத்துடனிருக்கினும் நோக்கினும் சாதகனுக்கு மாட மாளிகை முதலாகிய கிரகவாகன யோகபிரபலமும் மேன்

பாடாகிய இராச சன்மான வெகுமான மேன்மைகளும் இஷ்ட சித்தி களுஞ் சத்துரு செயமுமாம் இதன்றியும் குஜனும் குஜனுக்கு நான்கா மிடத் ததிபதி நின்ற இராசி நாதனும் பெலவானாகியும் குஜனும் ஓரைக்கு நான்கா மாதிபனும் பெலத்துடன் சுகேஷத்திராதி தனக்குரிய பிரபல ஸ்தானங்களில் பெலத்தும் சுபக்ஷேத்திரத்திலும் சுக்கிரன் வலுப் பெற்றும் குஜனுடன் மகரம் மீனம் விருஷபம் கடகம் இவற்றினும் விருச்சிகத்தினுஞ் சந்திர கேந்திர சுபதிருஷ்டியுடன் பெலத்து மிருக்கினும் நோக்கினுஞ் சாதகனுக்கு ஏராளமான பூமி ஜலாதார இடம் கூப தடாகாதி தோப்பு நிதி நிக்ஷேப பிரபலத்துடன் இராஜயோக வல்லபனாவனென்றும் மிகுந்த கீர்த்தி மூர்த்தி புகழ்ச்சிகளும் பாற்பசு கன்று காலி பூமி கிரகவாகன பிரபல லாபமும் மிகவு மேன்பாடுகளும் அசன சயன போக போக்கியாதி சுகசௌக்கியங்களுடன் மிகவும்மேன்மையை யடைந்து வாழ்வனென் றறியவேண்டும்.

சுக்கிரன் குரு கூடாமல் கேந்திர கோணத்திலாவது உ—கக — இவ் வித க்ஷேத்திரங்களில் பெலவானாகியும் அதிக சுபக்ஷேத்திர வாசத் துடனிருக்கினும் சத்துரு பகை இராசியில் இல்லாமலும் அவை களுக்கு இரண்டு பக்கங்களிலும் பாவர்களில்லாம லிருக்கில் சாதகனுக் குப் பலவகைப் பூமி கிரகவாகனந் தோப்புத்துரவுகளும் அதிகமான பிரபல வாழ்க்கையுமுண்டாகும். இதில் சீவசரீராதிபர்பெலமற்று பாபக்ஷேத் திரம் அல்லது பாபருடன் கூடினாலும் பகை நீசக்கோளுடன் சேர்ந்தா லும் பூர்வார்ச்சித மின்றியும் சுயார்ச்சிதம் அந்தியகாலத்தில் சில பொருட்களு மிழப்பனென்றும் சனி இரவி முதலியோர் மேற்கண்டவர் களுடன் கூடினும் பகை நீசராகிச் சேரினும் பாபர்மத்தியில் வசிக்கி னும் சாதகனுக்கு முன்னருச்சிதமுங்கிடையாமல் அந்தியகாலத்திலும் பொருளின்றி மிகவும் வருந்துவனென்றும் மேலே கூறிய கோட்கள் கேந்திரகோணத்தி லிருக்கினும் இரண்டுமுதலிய பாவரைக் கூடினும் சாதகனுக்குப் பலவகையான மேன்மையுள்ள லாபமும் கிரகவாகன சம் பத்தும் அயலாரால் செயமடைந்து வாழ்வனென் றியவேண்டும்.

மேற்காட்டிய சீவசரீராதிபர்களிருவரும் சுபராகினும் அல்லது பாவ ராகினும் சுபத்துவப் பெலனைப் பொருந்தினுங் கேந்திரகோண பெலவா னாகினும் அவரவர்களுக்கு நட்பாக்ஷி உச்சக்ஷேத்திரங்களிலும் சுபக்ஷேத் திரமித்துருவுடனும் பெலவானாகில் சாதகனுக்கு கெட்டிக்கட்டிடம் பூங் காவனந் தோப்புத் துரவு முதலானவை நூதனமாக இவனாற் சேர்ப்

பன் சனி இரவி இவரிலெவராயினும் சந்திரன், புதன், சுக்கிரனிவரி லெவராயினும், சீவசரீராதிபர்களாகிப் பெலவானுகியும் சுபக்ஷேத்திர கெதியடைந்தும் வலுப்பெற்று மிருக்கில் சாதகனுக்குப் பலவகை மேன் பாடாகிய தோட்ட முதலிய பிரபல கட்டடம் பூமி முதலிய பலவகைப் பொருள்களும் இராசர் புகழும்படி கீர்த்தியுடன் நிக்ஷேப பிரபலமும் இவ்விதமான பலவகை விருத்திகள் பூர்வார்ச்சிதம் அன்யார்ச்சிதம் ஸ்தி ரீயார்ச்சிதம் இவ்வழியாகக் கூடுமென்றும் அவ்வகையுள்ள அருச்சிதச் செல்வப் பெரும்புகழு முண்டாகும் இவர்களுக்கு இருபுறமாவது கூட வாவது சனி முதலிய பாம்புக ளிருக்கினும் நோக்கினும் பகை முதலிய கிரகங்கள் கூடினும் சீவசரீராதிபர்கள் பகை யல்லது பாபக்ஷேத்திர மடைந்தாலும் பூர்வார்ச்சிதம் அன்யார்ச்சித முதலியவகை கிடைத்தும் முன்னுக்கு வராம லழிந்துபோகு மெனவும் இதன்றியும் பல்வித துக்க சோகமும் பின்காலத்தில் ஷை வகையுள்ள பூமி முதலியதும் இல்லாமல் பலவாறுக வருந்தி யிளைப்பனென்வும் அறியவேண்டும்.

சுக்கிரவசாதும் குசன் வசாதும் உரிய சீவசரீராதிபர்களும் குசன் சுக்கிர னிவர்களும் பெலவானுகியும் தனுசு மகரம் கும்பம் மீனம் சிம் மம் துலாம் இவைகளிலும் சீவசரீராதிபர்கள் தங்களுக்குரிய சுபக்ஷேத் திர கெதியுடன் கூடியுங் குரு சந்திரன் முதலிய பிரபலத்தோர் வீக்ஷண சம்பந்த மிருக்கில் சாதகனுக்கு பூமி கிரகவாகனம் பலவகைக் கட்டிடம் தோப்புத் துரவுமுதலிய பிரபல யோகவானுவன் நூதனூர்ச்சித பிரபலஞ் செய்வன் அவர்கள் பகை சத்துரு பாவர் வீட்டினும் சனி பாம்புகண் முதலிய பாவரைக்கூடினும் இவர்களுபய பாரிசமானுலும் சுபரே பாவரா னுலும் பழய பொருளையும் இழப்பன் பலவித வருத்தமடைவன் சீவசரீ ராதிபர் பெலத்த சுபக்ஷேத்திரஞ் சுபருடன் றனக்குரிய மித்துருவைக் கூடினல் பழய பொருளான கிரகவாகனம் பூமி முதலியதை இழந்தபின் தன் சுயத்தால் அல்பவிர்த்தி யடைவனென்றும் மேற்கூறிய குசனுவது சுக்கிரனுவது ஒருவர் பெலமற்ற பாவருடன் இருந்தும் அல்லது பகை பாப க்ஷேத்திரத்திலிருந்தும் மற்றய மூவர் ஸ்தானமும் பெலத்திருக்கில் சிலநாள் கிரகவாகனம் பூமி முதலிய இயல்பின்றி வருந்திப் பின் விர்த்தி யடைவினென்றறியவும் குசன் சுக்கிரன் மேஷம் விருஷபம் விருச்சி கம் மிதுனம் கடகம் கன்னி இவைகளில் மேற்கூறியவர்களுக்குப் பகை நீசமில்லாத விடத்திற் பெலத்தும் சுபக்ஷேத்திர கெதியுடன் சீவசரீராதி பர்கள் இருக்கினும் பெலக்கினும் சிலநாள் வருந்திப் பின் கிரகவாகனம் பூமி இவைகளை யடைவன் இவைகளில் பாபக்ஷேத்திரம் பகை நீசமானு

லும் பாவரான சனி பாம்புகள் முதலிய தீக்கோட்களைக் கூடினும் உபய பாரிசம் பாவரிருந்தாலும் சாதகனுக்குப் பலவகை பூமி கிரக வாகன முதலியதாம் இன்றி வருந்தி மனவருத்தமும் அடைவன் அன்னிய கிரக வாசஞ் செய்வன் சுபரும் பாபருமாகினும் இரண்டுபெயர் பெலமற்றிருக் கினும் சிலகாலம் அன்னிய கிரகவாசஞ்செய்தும் சிலகாலம் சுயகிரக வாசஞ் செய்வனென்றும் அல்பவாகன முடையவ னென்றும் மேலே கூறிய குசன் சுக்கிரன் முதலிய சீரவாதிபர்களில் ஒருவர் பெல மற்றிருக்கினும் பாவரைக்கூடினும் ஆதியந்த மாகிய காலங்களில் கிரக முதலிய வாகனங்கள் இன்றி மத்தியில் அன்யரால் வாழ்ந் திழப்பனென்றும் மேற்கூறிய வகையில் எவராகிலும் இருவர்கள் பகை நீசம் அல்லது பாவக்ஷேத்திரம் பாவர் மத்தியமாகியும் இருக்கில் பல நாள் சுயகிரகாதி வாகனம் பூமியின்றி அன்னிய பிரபுமூலமாக சிலகாலஞ் சுகத்தையடைந்து வாழ்வான் என்றும் மூவர்கள் பாவக்ஷேத்திரம் அல் லது பாவர் வீட்டிலும் பகை நீச மிவைகளைப் பெற்றுவாழில் சாதகனுக் குப் பலவிதமான வருத்தத்துடன் உள்ள கிரகவாகனம் பூமி முதலிய யாவுமிழந்து வருத்தமடைவனென்றும் மனதுக்கு சுகமின்றி தரித்திர வானுகப்பவிப்பனென்றும் பழம் பொருளிருக்கினும் அவ்விதமான கிரக வாகனம் பூமிமுதலியவைகயும் இழந்து தவிப்பனென்றும் அறியவேண்டு மென்பதாம்.

மாதருபாவ பலன்களாவன.

சந்திரனையும் குருவையும் மீனத்தையும் இவைகளுக்கு நான்கா மிடத்ததிபதி நின்ற இராசிநாதனுடையனவும் கூடிய கிரக சுபாசுப பலன் படிக்குரியவகையை ஆராய்ந்து கூறுவது மாதருபலமாகும் குருவு க்கு நான்காமிடத்ததிபதி நின்ற இராசிநாதன் சீவனென்றும் புதனி ன்ற ஸ்தானுதிபதி சீரமென்றும் பெயராகும் இவையின்பெலன்களை யாராய்ந்து கூறல்வேண்டும்.

மேற்கூறிய சந்திரன் குரு மீனம் இவைகளின் வராத் சீவசீரா திபர்களும் மேற்கூறிய கிரகங்கள் பலவானுகியும் சந்திரன் ௬-௮-௧௨ நீங்கிய வீட்டிலும் தனுசு மீனம் மகரம் சிம்மம் மிதுனம் கன்னி துலாம் இவைகளில் ஆரோகணத்தில் ஸ்திரமுபய விராசியும்இவற்றில் அவரவர்களுக்குரிய சுபக்ஷேத்திரத்திலும் பெலத்தும் குரு புதன் முதலிய சுபர்களோடுகூடியும் இருபக்கங்களிலும் சந்திரன் குருமீனம்

இவைகளுடனே பாவர்களாவது சுபவிரோதிகளாவது இவர்கள் வீட்டிலாவது சேராமல் தனித்தாலும் அல்லது அவருடன் கூடாமலும் சரசரமான இடமாகில் மாதா அனேகநாள் விருத்தாவஸ்தை வரையில் தாய்வகை விர்த்தியும் இதில் சுக்கிரன் கூடினும் பார்க்கினும் பிதாவின்தாரம் இருவகையுள்ள மாதுரு பாகத்தை யடைவனென்றும் அவ்வகைகளால் விரோதவிவாதமனோ வருத்தமும் சுபக்ஷேத்திர கெதியுடனிருக்கினும் நோக்கினும் விசேஷமுள்ள சுகத்துடன் மேன்மைகளைப் பொருந்திய அன்னியமாதுருவகையால் சுகத்தையும் மேன்மைகளையும் அடைவனென்றும் குடும்ப ஒற்றுமையான மேன்மையும் இவ்வித இராசிகள் சரமானாலும் அல்லது சரமுபயமாகினும் சீவசரீராதிபர்கள் தனக்குரிய சரமுபயமானால் விருத்தாவஸ்தையில் தாய் மரணமும் சரஸ்திரமானால் கௌமாராவஸ்தையில் தாய்மரணமும் ஸ்திர ஸ்திரமானால் பாலியத்திலேயும் திரமுபயமானால் பாலியக்கடையிலும் திரகரமானால் எவ்வனத்திலும் மாதா மரணத்தையடைவ ளென்றும். சந்திரன் குரு இவர்கள் வசாத் சீவசரீராதிபர்கள் பகை நீசபாபக்ஷேத்திர கெதியுடன் ௩-௪-௮-௬-௧௨-ல் இந்த ஸ்தானங்களில் சந்திரனிருக்கவும் குரு பாம்பு முதலிய பகைக்கிரகம்அல்லதுபாபக்ஷேத்திர சம்மந்தமாயிருக்கினும் சந்திரன்பகை நீசத்துவமல்லது அக்கோளுடனும் குரு முதலியோர் பெலமற்றுமகரம் விருஷபம் சிம்மம் துலாம் விருச்சிகம் மிவைகளில் பகைநீச க்ஷேத்திரங்களில் இருக்க சந்திரன் சீவசரீராதிபர் பகை நீசக்ஷேத்திரம் மீனம் அல்லது ௮-௬-௧௨-இவைகளில் பலமற்றும் மேற்படி இடங்களுக்கு இருபக்கங்களினும் பாவரான சனி பாம்பு முதலோர்களிருக்கினும் அல்லது நோக்கினும் ஜெனனத்துடன் தாய்மரணமாவாள் மேற்கூறிய கிரகங்கள் மேற்கூறிய இராசியிலும் சீவசரீராதிபர்கள்பாபக்ஷேத்திரங்கெதியில் மறைந்தும் பகை நீசாதி முதலாகிய அபாவங்களைப் பெற்றிருக்கினும் நோக்கினும் பாலியத்திலேயே மாதா போய்விடுவள் சந்திரன் மீனம் இவைகளுடனே குசன் இரவி பாம்பு சனி இவர்களிருக்கினும் நோக்கினும் உடனே தாய்மரணமாகி விடுவளென்றும் சந்திரன் பாபருடனும் அல்லது சுபருடனுங்கூடாமல் தனக்குரிய சுபக்ஷேத்திர பலத்துடன் பகை நீசம் நீங்கிய இடத்திலும் இருக்கில் தாயானவள் விருத்தாவஸ்தைவரை விருத்தியாவளென்றும் சீவசரீராதிபர்கள் பாவ க்ஷேத்திரத்திலாவது பாவருடன்கூடினும் பாலியத்திலேயே தாய்மரணமாகிவிடுவள் இவர்கள் சுபர்பாபிகளுடன் கூடியும் உபயமானால் யௌவனத்தில் தாய்மரணமும் ஸ்திர

மாணுல்கௌமாரகாலத்திலும் சரமாணுல்விருத்தகாலத்திலும் மாதாவுக்கு மரணமென்றும் சுக்கிரன் அல்லது சந்திரன் புதன் சீவசரீராதிபராணுலும், சீவசரீராதிபர் புதன் சந்திரன் சுக்கிரன் சுக்ஷேத்திர வீட்டிலிருக்கினும் பாம்பு முதலிய பாவரைக்கூடினும் சாதகன்பிதாவுக்கு உ-முதலிய பலதாரபோக யோககுடும்ப விர்த்தியுடையவன் சனி பாம்பு கூடினும் நோக்கினும் மேற்படிவகையு மழிந்துவிடும்சீவசரீராதிபர்களுக்கு ரோகாதிபதி அஷ்டமாதிபதி யவருடன் கூடில் ரோகபாதையை யுடையவர்களாவார்க ளென்றும் அவ்வவ் கிரகங்களுக்குரிய அங்கங்களிலும் ரோகங்களைக் கொடுக்கு மென்றுமறிய வேண்டுமென்பதாம்.

வித்தியா பலன்.

புதன் புதனுக்கு நான்காமதிபதி நின்ற இராசிநாதன் குரு குருவுக்கு உ-ச-மாதிபதி நின்ற இராசிநாதன் இவர்களுடையபலாபலன்களை யறிந்து வித்தியா பலனுரைக்க வேண்டும்புதன் வசாத்சீவனும் குரு வசாத் சரீரமும் பார்த்தறிந்து கொள்ளவேண்டியது மேற்காட்டிய புதன் குரு இவர்கள் ச-ரு-எ-கூ-இந்த இடங்களிலும் இரவியை விடாத புதனுகிப்பெலத்தும் கேந்திரகோணமுடையவர்களாகியுந் தனக்குரிய சுபக்ஷேத்திர பெலனுடன் சூரியன் அல்லது சனி யிவரைக்கூடி சீவசரீராதிபர்கள் பலவான்களாகிய இடத்திலும் அவ் விதஸ்தானம் சிம்மம் கடகம் மிதுனம் மகரம் கும்பம் தனுசு இவைகளாணுலும் இராசவித்தையில் அதிகமான கீர்த்திவந்தனுகியும் பிரபலனுகியும் சுயபாஷா சிரேஷ்டனுகியும் யாவரும் புகழ வாழ்வன் இவ்விடங்களில் இருந்த ஸ்தானுதிபர்கள் பாவர் அல்லது விரோதியாய் கூடினுலும் பார்த்தாலும் இவர்களின் மத்தியில் சீவசரீராதிபர் அல்லது குரு புதனிருக்கினும் சாதகனுக்கு எவ்வித வித்தையும் பிரபல மின்றி யுழலுவன் குரு முதலியோராய் தனக்குரியசத்துருபாப க்ஷேத்திரமாணுல் சண்டாள வித்தை படிப்பன் சுக்ஷேத்திராதி சுப க்ஷேத்திரமிவைகளில் தனித்தாலும் தனக்குரியவர்களுடன் கூடினுலும் உயர்ந்த வித்தை சாஸ்திரதி வெகு பல வாத தர்க்கனுகியும் ஞானுதிபலநூலறிவன் சுக்கிரனுகில் உச்ச முதலிய சுப க்ஷேத்திரம் அல்லது தனக்குரிய இடத்தில் பாபசம்மந்த வீக்ஷணியமில்லாதிருக்கில் காவ்யநாடகாதி கீதத்தொழில்களும் மோகன சாஸ்திர பரிச

யமும் இராஜ மூலியமான வித்தையில் பிரபலமும் அடைவன் புதனுகில் கணிதம் பண்டிதம் ஜோதிட முதலிய மூவகைக் கலைகளையறிவன் சனியாகில் நீசவித்தை முதலியதைக் கற்பன் இருகு கேதுவாகில் எந்திர வித்தை கருவி சாஸ்திரம் பரிசயிக்க வல்லவனுவன் குசனுகில் பூசாஸ்திராதி அன்னிய வித்தையிலும் இரணசாஸ்திருதிகளையும் அடைவனென்றறிய வேண்டும்.

கன்னி துலாம் விருச்சிகம் இதில் மேற்கூறிய கிரகங்களான புதன் குரு சீவசரீரர்திபர்களாகித் தனித்தால் தனக்குரிய வித்தைகளிற் சிற்சில அல்பங்கொடுத்து அவைகளால் சீவனஞ்செய்து வருவன் சம்பந்தமான கிரகங்கள் அந்தந்த இடத்துக்கு சுபத்துவமுடையவராகிக்கூடில் கிரகங்களுக்கு ஏற்பட்ட வித்தையில் சிலவற்றில்லாமல் அதினுல் கீர்த்தியையுந் தன் விர்த்திகளையும் பரதேசங்களால் கொடுக்கப்படும் பகை நீச பாவருகியும் பாப மத்திய கதியிலிருக்கில் வித்தை யபிவிர்த்தி யடையமாட்டாவாம் மீனம் மேஷம் விருஷபம் இவைகளில் புதன் குரு தனித்தாலும் ஜீவசரீராதிபர் தனித்தாலும் சுயவித்தை யுடையவன் பிரபலமடையான் பாவர் சேரினும் சத்துரு ஸ்தானுதிபர் கூடினும் கணக்கு முதலிய சுயத்தொழில் உண்டாகும் இதரபாஷை விர்த்தி யடையானென்க சுக்ஷேத்திராதி சுப பெலத்துடன் இருக்கில் மேன்மையுள்ள கிரகத்தால் அவர்களுக்கு மேலே சொல்லிய வித்தை பிரகாரஞ் சொல்ல வேண்டு மென்பதாம்.

மாதுருபாவாதிகளின் மாரக திசாபுக்தி கர்மகணிதம்.

சந்திரன் குரு மீனம் இவைகளுடனும் இவைகளுக்கு நான்காமதிபதி எந்த இருசியிலிருக்கிருனே அவருடனுங்கூடிய கிரக யெண்களைப் பலா பலன்படிக்கு இருசியெண்ணுற் பெருக்கிய தனித்தனித் தொகைகளை கூ-ல் கழித்த சேஷம் திசையிலும் வந்த ஈவை நு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷம் புத்திகளிலும் மாதுரு கருமமென்றும் இதில் சீவசரீராதிபருக்கு அஷ்டமாதிபதி நின்ற ஸ்தானுதிபதியின் பலன்களுக்கிசைய இருசியெண்களாற் பெருக்கிய தொகையை கூ-ல் கழித்த சேஷம் திசையிலும் வந்த ஈவை நு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷம் புக்தியிலும் மாதுரு கரும நிச்சயமும் முன்சொன்ன காலங்களுக்குரிய கிரகபலன்களுக்கிசைய பார்த்துப் பலன் சொல்லவேண்டும்.

புத்திரபாவ பலன்கள்.

குருவையும் மேஷத்தையும் குசனையும் இவைகளுக்கு ௫-மிடத்ததிபதி நின்ற இராசிநாதனையுங்கொண்டு புத்திரபலன் சொல்லவேண்டும் இரவி நின்ற ஸ்தானாதிபதி சரீரமென்றும் குசனுக்கு ஐந்தாமிடத்ததிபதி நின்ற ஸ்தானாதிபதி ஜீவனென்றும் பெயராகும் சீவசரீராதிபர்கள் ஒருவராகி அதில் புதன் சனி பாவராகில் புத்திரரில்லை யென்றும் சுபருடன் சுபக்ஷேத்திர கெதியுடனிருக்கினும் நோக்கினும் பிறந்து இறப்பார்களென்றும் குசன் குரு இவருடனாவது இவராவது மேஷம் சிம்மம் ௨-௧௨-இவ்வித இடம் சப்தம மிவைகளில் பாம்புகள் சனி குசன் புதன் முதலிய பாவர்களிருக்கினும் நோக்கினும் பாவ மத்திய கெதமானாலும் பலவித புத்திர சோகமுண்டு இதில் சுக்கிரன் கூடினும் விருஷபம் துலாம் கடகம் கன்னி மிதுனம் மீனம் இவைகளில் சீவசரீராதிபர்கள் குருகுசன் முதலியோர்கள் பாவரைக்கூடினும் பகை பாபர் மத்தியனாலும் புத்திரரே கிடையாது கிடைக்கினும் உடனுக்குடன் மரித்தும் பலவித கஷ்டநஷ்ட துன்ப சோகத்தையடைந்து வாழ்வன் என்றும் மேற்கூறியகுரு சுக்கிரன் புதன் சீவசரீராதிபர் இவர்களில் எவரேனும் பலவானாகி சீவசரீராதிபர்கள் கெடாமல் ஒருவர்க்கொருவர் வித்தியாச விரோதமில்லாமல் இருந்தும் பெலவானாகியும் பாவரைக் கூடினாலும் அல்லது தனித்து நிற்குமிடம் பாவக்ஷேத்திரமானாலும் அயல்மனை அல்லது பின்னோரத்துக்கென்றும் முன் களத்திரத்துக்கு முன் பிறப்பதெல்லாம் மரணமாகி அனேகநாள் புத்திர விஷயத்தால் வருந்தி இளைத்துப் பல துயரமடைவன மேற்படி கிரகங்கள் சுக்ஷேத்திர சுபக்ஷேத்திர பலத்தால் புத்திரலாபம் அல்பவிருத்தியாகுமென்றும் கொள்க அதாவது மிகுந்த புத்திரோர்ப்பத்தியில் மரண மதிகமெனவும் உயிர்வாழ்தல் அல்பமெனவும் பொருள்கொள்க. இவற்றோடு பலவகைவருத்தங்களையும் கொடுக்குமென்றும் அறிந்து சொல்க சீவசரீராதிபர்கள் குரு இரவி சுக்கிரன் சந்திரன் குசனாகியும் குசன் இரவி இவர்கள் தனக்குரிய சுபக்ஷேத்திர பெலத்திலும் பாம்புகண் முதலியோரைக்கூடாமல் மகரம் மேஷம் விருச்சிகம் தனுசு சிம்மம் இவைகளில் நிற்கினும் குரு குசன் முதலியோர் சனி புதன் வீடாகிய கன்னி மகரம் கும்பம் மிதுனம் இவைகளல்லா விடங்களில் இருக்கில் புத்திரர் மிகவும் பிரபலத்துடனும் அதிகமான புத்திர லாபமுமாம் கேந்திர கோண கெதியுடன் வலுத்திருக்குமாகினும் அவ்விதியே கொண்டு புத்திர பாவங்கள் அதிக விருத்தியையும் குரு குசன் முதலியோர் தனுசு மேஷம் மிதுனம் கடகம் விருஷபம் சிம்மம் இவைகளிலிருக்கினும் வி

சேஷ புத்திரலாப செயமும் மிகவு மேன்மையுமுண்டாம் சீவசரீருதிபர் களும் வலுத்திருக்கில் அந்தியம் வரை செனித்த புத்திரர்கள் பிரபலவிர் த்தியையடைவர்களென்றும் மிகுந்த கீர்த்தி மூர்த்தி புகழ்ச்சிகளுந் தன தானிய கிரகவாகன புத்திரபௌத்திர சம்பத்துடன் வாழ்வார்கள்இதில் சந்திரன் சுக்கிரன் புதன் மீனம் இவ்வித கிரகங்களின் இடத்திலும் இவ் ர்களுடன் சீவசரீருதிபரும் குரு குசனிவர்கள் கூடி வேறு பாவரில்லாதிரு க்கின் மிக மேன்மையான பின்முரா முதலிய் பருதாரமிவைகளுக்கு ஏரு ளமான புத்திரலாபமுண்டே யொழிய முதல்தாரத்துக்கு புத்திரபாவங் கெடும் மேற்கூறிய ஸ்தானத்திலிருக்குங் கிரகங்களுடனலல்து இட ங்களில் பகைநீசர்கள் சனி பாம்புகள்முதலிய பாவர்களும் புதனு மிருக்கில் பிறந்து மரணமாகும் கன்னிமிதுனம் மகரம் கும்பம்இவை களிலிருக்கினும்பாவக்ஷேத்திரம்பகை நீசஇடத்திலிருக்கினும் புத்திர னேகிடையாது இவற்றைச் சுபபலத்துடன் சீவசரீராதிபர்கள் இரு க்கினும் நோக்கினும் துலாம் விருச்சிகம் தனுசு மகரம் கும்பம் விரு ஷபம் இவைகளில் சீவசரீராதிபர் பாவரைக்கூடில் அங்ஙனமாகியஸ் தானங்கள்தங்கள் தங்களுக்குப்பெலமுடைய இடங்களாகில் சாத கனுக்குப் பின்மனைமுதலிய அடுத்த தாரங்களுக்கும் காலாதீதத்தின் மேற்புத்திர விர்த்தியும் இராஜயோக பிரபலத்துடனும் மேன்மை யைப்பொருந்தி வாழப்படுவர்களென்றும் சீவசரீராதிபர்களும்பகை நீச சத்துருக்ஷேத்திரகிரக * சம்மேளனமாகியும் அதிபாவரைக்கூடி யும் பெலமற்றிருக்கினும் குரு குசன் சனி புதன் சந்திரன்இரவிஇந்த க்ஷேத்திரங்களில் பகை நீசம் அல்லது பாபத்துவங்களைப்பொருந்தி இருக்கினும் சாதகன் பலவிதகஷ்டநஷ்ட துன்பமும் பொருட்சேத மும் அன்யபுத்ரசுவீகாராதியைப் பொருந்தினும் பகையல்லதுமரண மும் அதனல் துக்கத்தையும் அனுபவிப்பனென்றும்பலவகைக்குடு ம்பதோஷமுமாம்அவற்றினும் அந்தஇடத்ததிபர்களைக்கூடினும்அல் லதுபார்க்கினும்மகரம்கும்பம்மிதுனம்கன்னியிவற்றிலிருந்து பாம்பு கள்புதன் சனி முதலியவர்கள்கூடினுலும்சுவீகார புத்திரனுவனென் பதாம்.

மேற்கூறிய சீவசரீராதிபர்துர்ப் பெலராகியும் பகைநீச க்ஷேத்திரம் பாப சம்பந்தனுகியும் இருந்தும் அதில் பாவர் கூடியிருக்கினும் சீவசரீ ராதிபர்களுக்கு அஷ்டமாதிபன் இரவி குசன் சனி புதன் இவைர்களி

* சம்மேளனம் - சேர்க்கை,

லெவரேனுங் கூடினும் அல்லது இவர்களினிடங்களிலிருக்கினும் எவ்வித தாரங்களுகிகும் புத்திரனே கிடையாமல் வருந்தி இளைப்பனென்றும் இதிலும் தசமாதிபன் பெலமற்று சீவசரீராதிபதி சனி பாம்புகள் புதனிவராகில் புத்திரனிருக்குமாயினும் ஆபத்துக்குதவானென்றும் சுபக்ஷேத்திர சுப வீக்ஷண்ய சம்பந்த பெலனாகிலும் மற்றய இடங்களில் பெலமுற்றிருக்கினும் புத்திர கருமனவனென்றும் சீவசரீராதிபர்களுக்கு ௫-மிடத்ததிபதிக்கும் இவர்களுக்கும் பகையான சுபராகில் சமத்துவ தாய் தந்தை விரோதியாகி பலர் பழிக்க வாழ்வனென்றும் அசுபராகிய சனி பாம்பு முதலிய பகைவர் நீச க்ஷேத்திரகெதியாய் ஓர் வித சுபரும் பாராமல்கூட்டுறவுமுதலானவையில்லாமல் பகைமுதலிய வகை பெற்றிருக்கில் பிறந்தவன் தகப்பனுக்குப்பிள்ளையாக மாட்டான் பரனுக்குப் பிள்ளையாகியும் சாதி பிரஷ்டனாகியும் அகிருத்திய விபசாரித்துவ ஜெநகனென்றும்உலகமிகழும் புத்திரனையடைவ னென்றறியவேண்டும்.

பாம்பு சனி புதன்முதலியோர் மாத்திரங் கூடி தனித்திருந்து மேஷம் மகரம் மிதுனம் சிம்மம் துலாம் கன்னி இவ்விடங்களில் இருக்கினும் நோக்கினும் வேறு சுபர்களைக்கூடாமலும் பகை நீசமுதலியவர்களைக்கூடினும் பார்க்கினும் குருகுசன்முதலிய சீவசரீராதிபர் பகை நீசம் பாபர்மத்தியம் பாபருடன் பாபக்ஷேத்திரகெதி அல்லது மகரம் கும்பம் மிதுனம் கன்னி விருச்சிகம் இவைகளில் தனித்தாலும் கூடினாலும் புத்திரர் கிடையாது அன்னியபுத்திரர் கருமத்துக்குட்படுவர் மேற் கண்ட பாபருடன் சுபர் கூடினும் கேந்திரகோணத்திலிருக்கும் குரு குசன் சுக்கிரன் இவருடன் அல்லது சந்திரன் இரவி இவருடைய க்ஷேத்திரங்களிலிருக்கினும் புத்திரர் பலவாறாக செனித்து மரணமடைந்தும் மறுதாரவம்சபுத்திர கருமம் அகாலத்தில் பலிக்குமென்றும் புத்திர தோஷமுண்டென்றும் புத்திர வகைக்கிலேசமுண்டாகும் இவ்விதமிருந்து சீவசரீராதிபர்கள் வலுப்பெற்று சுபக்ஷேத்திர கெதியுடனிருக்கில் சுகமான புத்திர விர்த்தியும் பின் பனையாளுக்கு விர்த்தியான புத்திரரால் அகாலத்தில் சுகமடைவனென்றும் சீவசரீராதிபர்களுக்கு ௯-௮-மிடத்ததிபர் சனி சந்திரன் சுக்கிரனிவராகினும் பாம்புகளாகினும் பகை நீசமுதலிய வகையடைந்து கூடினும் பெலத்தாலும் புத்திர ஸ்தானங்களிலிருக்கினும் குடும்பத்திலிருக்கினும் குருவசாத் சீவசரீராதிபர்வசாது இருக்குமிடம் ௨-௫-௯-௧௧-௭-ல் ஆயினும் புத்திர பரமனுஷனால் கோளகன் குண்டகன் என்ற புத்திரனுவான் குசன்கேது இரவி இவர்கள் பெலத்துடன் குரு சுக்கிரன் பூரணசந்திரன் வீக்ஷணிய

சேர்க்கையின்றி மேற்கண்ட இடங்களிலிருக்கில் கோளகனுன புத்திரனென்றும் பாவராகினும் பாவரைக்கூடி பாவக்ஷேத்திர வாசனுகில்மனைவி தன் சுய புருஷனை விட்டு பிறனிடத்தில் பிரவேசித்து புத்திரனைப்பெறுவளென்றும் தன்சுய புருஷனிடம் எவ்வளவு நாள் பிரவேசித்தாலும் புத்திரர் கிடையாதென்றும் அறிக. இவருடன் ஓர் சுபர் கூடவல்லது நோக்கினும் சந்திரன் சுக்கிரன் இவர் வீடாகினும் மறுமனையாங் வகை புத்திர விருத்தியுண்டென்றும் அறிந்துகொள்க.

புத்திரபாவ கணிதங்களாவன.

குருவுடனும் மேஷத்திலும் குசனுடனும் இவைகளுக்கு ஐந்தாமிடத்ததிபதி நின்ற இராசிநாதனுடனுங்கூடிய கிரக சுபா சுப பெலன்களுக்குரியபடி யெண்களை இராசி யெண்களாற் பெருக்கிய தனித்தனி தொகைகளை மறுபடி தொகைகளை பெலத்துக்கிசைய தள்ளிய மிச்சத்தை அவரவர் எண்கள் பேருக்குக்கொடுத்த ஈவுகளை சுபாசுபர் வீதப்படி கண்டறிந்தவையில் ஸ்திரீ புருஷக்கிரகங்களின் எண்தெரிந்து புத்திரலாபம் அறியவேண்டும் மேற்கண்ட தனித்தனி தொகைகளை கூ-ல் கழித்த சேஷம் திசையிலும் வந்த ஈவை டு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷம் புத்தியிலும் புத்திர லாபமுண்டு.

மேலே பெருக்கி வைத்த தொகையுடன் சிவசரீருதிபர் முதலாகியவர்களுக்கு அஷ்டமாதிபதி நின்ற ஸ்தானாதி பதிகளின் எண்களைக் கூட்டி கூ-ல் கழித்த சேஷமும் வந்த ஈவை டு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷமுங் கண்டறிந்தவைகளின் திசாபுக்தி காலங்களில் புத்திர துக்கம் மரணம் முதலிய பல வகைக் கஷ்ட பலன்கள் கொடுக்கப் படுமென்றறிய வேண்டும்.

தனுர்லக்ன சாதகனுக்கு
சத்துருரோக முதலியதும் இராசதெண்டனை முதலிய
சோரபயங்களைக் கூறப்படும்.

ஆறுமிடம் சுக்கிரன் இவைகளுக்கு ஆறுமிடம் ஆறுமிடத் ததிபதி இவர்கள் நின்ற இராசி யதிபனையுங் கொண்டு ஷ்டி பலன்கள் கூற வேண்டும் சத்துரு பாவத்துக்கும் சோரபாவத்துக்கும் சுக்கிரன் நின்ற இராசிக்கதிபதியும் அவன் நின்ற வீடும் சத்துரு பாவத்துக்குச்

சீரமென்றும் சுக்கிரன் சுக்கிரன் நின்ற ஸ்தானத்துக்கு ஆறுமிடத் ததிபதி எந்த வீட்டிலிருக்கிறானோ அவன் சீவனென்றும் பெயராகும் உரோகம் இராசதெண்டனைகளுக்குச் சுக்கிரனின்ற ஸ்தானாதிபதி சீரமென்றும் சனிக்கு ஆறுமிடத் ததிபதி யெந்த இராசியிலிருக்கிறானோ அவ்வதிபனு மவனுறைவிடமும் சீவனென்றும் பெயராகும்.

உரோகம் இராஜதண்டனைகளுக்குச் சுக்கிரன் நின்ற ஸ்தானாதிபதி சீரமென்றும் சனிக்கு ஆறுமிடத்ததிபதி யிருக்கு மதிபன் ஜீவனென்றும் பெயராம்.

இவைகளையறிந்தபின் ௬-௮-௧௧-௨-இவ்வித இடங்களில் சுபர்கள் ஷஷ்டாஷ்ட மாதிபதியாகியும் அவர்கள் சுப பலத்தைப் பெற்று மேற்கண்ட இடந் தவிர மற்றய இடங்களில் பெலவானாகியும் பாவத்துவம் பெற்றவர்களாகி சனி குசன் பாம்புகள் இவர்களுடன் சீவசீருதிபர்கள் இருக்கினும் அவை சுபக்ஷேத்திர மானாலும் அவ்வித இடமானது கடகம் சிம்மம் விருஷபம் தனுசு விருச்சிக மிவைகளாகியும் ௮-௧௧-௬-௪-மிடமானாலும் சுபக்கோட்களுடைய வீக்ஷணமில்லாதிருக்கில் சாதகனுக்கு இராச தெண்டனையும் சத்துருக்களால் பலவித பாதையைப் பெறுவனென்றும் ஷஷ்டாஷ்டமாதிபன் நின்ற ஸ்தானாதிபதி சீரம் ஷஷ்டமாதிபதிக்கு ஆறுமிடத் ததிபதி நின்ற இராசிநாதனிருக்குமிடஞ் சீவன் இவ்வித மறிந்துகொள்ளவேண்டும் சீவசீருதிபர்கள் குரு சனியானாலும் இரவியானாலும் பகை நீசாதி சுபக்ஷேத்திர வாசர்களானாலும் அந்த இடம் சிம்மம் மகரம் தனுசு இவைகளானாலும் இராஜதெண்டனை சத்துரு பயம் பலவகைக் கஷ்ட நஷ்ட துன்பம் பொருட்சேதமாகும் சுபவீக்ஷண்யம் பெற்றிருக்கில் இவைகள் யாவும் அல்பமாக அவரவர்க்குரிய திசாபுக்தி கால நியமங்களில் காண்பித்து நிவர்த்தியாகும் பின்னால் இராசாக்களாலேயே அனுகூலம் பெறுவனென்றும் மேற்கூறிய ௬-௮-௧௧-௪-இந்த இடங்களில் சுக்கிரன் குசன் இரவி இவ்வகைக் கோட்களுடன் பாம்பு சனி இவர்கள் கூடியவர்க்கேற்ற இடம் பெலனாவாகியும் சீவசீருதிபர்கள் சனி பாம்பு குசன் இவர்களானாலும் எக்காலத்தும் இராஜவிரோதம் நஷ்டம் பகை சத்துரு குசன் இவர்களானாலும் எக்காலத்தும் இராஜவிரோதம் நஷ்டம் பகை சத்துரு தேகரோக வுபாதிகளையும் இவர்கள் சுபரானாலும் கேந்திரகோணகெதியுள்ளதும் தனக்குரிய சுபக்ஷேத்திரமானாலும் சுபபலனுடன்கூடினாலும் சத்துருரோகங் கிடையாதென்றும் இவருடன் லக்கினாதிபதி

கூடினாலும் லக்கினாதிபதி சீவசரீராதிபனானாலும் பகை ரோக முதலிய வை இவனைப் பீடைசெய்தேவரும் சீவசரீராதிபர்கள் இரவி சந்திரன் நின்ற ஸ்தானாதிபதி அல்லது ச-க-ரு - இவ்வித ஸ்தானாதிபர்களானா லும் இவைகளிலிருக்குமாயினும் இவ்வித ஸ்தானாதிபர்களைக்கூடினாலும் அவைகள் அவர்களுக்குப் பகை முதலிய க்ஷேத்திரமானாலும் சாதகனு க்குப் பலவித கஷ்ட நஷ்ட ரோகஞ் சத்துருபயம் பொருட்சேதம் இ ராசவிட்வரம் சோராக்கினி பயங்களைக் கொடுக்கும் இதில் சனிவசாத் சீவசரீராதிபர்கள் பெலவான்களாகிக் கேந்திர கோணம் இரவி சந்திர லக்கின ஸ்திதியானாலும் அவைகளுக்கு அல்லது லக்கினவசாத் இவை களுக்கு க-ச-ரு-கூ-௰-இந்த இடங்களில் பாப பலமுடையவரும் கூ-அ-கக-ரு-உ-கஉ-இவற்றில் சுபரிருக்கில் எப்பொழுதும் நோயும் பல வித கஷ்டநஷ்ட துக்கமும் பொருட் சேதமும் சோராக்கினி பயமுண் டாகும்.

மேற்கூறிய சீவசரீராதிபர்கள் இரவியின்வீடும் இரவியுமாகி பாப பெலத்திலும் பாவராகி க-ச-எ-௰-ரு-கூ-இந்த இடங்களிலாவது உ-கஉ-லாவ திருக்கின் அவனுக்கு பிதுரு மூலிய சத்துருவும்இராஜவிரோ தமும் பொருள் நஷ்டமும் சிரோநேத்திராதி ரோகபாதைகளையும் அதற் குரிய பிதுர்வம்சங்களிலும் மேற்கூறிய பலனையே கொடுக்குமென்றறி யவும்.

சூரியனாகி சுபபலன் பெற்று மேற்கூறிய இடங்களில் இருக்கில் மேற் கண்ட உபாதிகள் அல்பமாகக் காட்டி நிவர்த்தியாகிவிடும் லக் கினாதி பதிக்கு ஜீவசரீராதிபர்கள் பலமுற்றிருக்கில் சத்துரு இராசா க்களை செயிக்க வல்லவனாய் வாழ்வனென்றும் இவருடன் சந்திரன் கூடினாலும் சந்திரன் ஜீவ சரீராதிபராகினும் இவர் கூடினும் பாவரா னாலும் மேலே கூறிய இடங்களில் இருக்கில் பலவித விபாத விரோ தமான துன்பமும் தேகாரிஷ்ட கபநேத்திராதி நோய்களும் காணும் அவர்களினதிகார காலங்களில் தேகபாதை இராச பிரபு விரோ தங் கொடுக்கும் குசன் கூடினும் பாம்பு முதலியவர்கள் கூடினும் இரண்டு பாபருக்கு மேலானவர்கள் மேலேகூறிய இடத்திலிருக் கில் சாதகனுக்குப் பலவிதநோயும் இராசபயம் சத்துருகிலேசம் இரு ணபாதைபு மடைவன் மேற்கூறியவர்கள் சீவசரீராதிபர்களானால்இரு ணமின்றி ரோகமரிஷ்டித்துப் பலவிதவாதங்களையும் குடும்ப சத்துரு க்களையுங் கொடுக்கப்படும்.

குருவாகினும் அல்லது ரவியாகினும் பிரபல ரோகத்தோடு இருணவந்தனாகித்துன்பமடைவன் இவர்கள் பாபக்ஷேத்திரமென்றும் ௬-௮-௩-இந்த இடங்களிலிருக்கில் இராசதெண்டனைகளை கொடுக்கும் குசன் கேதுவாகி தனக்குரிய சுபக்ஷேத்திர கெதியாகிநிற்கினும் நோக்கினும் இரக்தம் அக்கினி இவ்விதபாதை கொடுக்கப்படும்இராசதெண்டனையுண்டாகும் சுபட்க்ஷேந்திரமானால் மேற்படி பலனையாம் அசுபக்ஷேத்திர மானால் சுப பலன்களையும் இராசவனுகூலமுஞ் சத்துருசெயமுமுண்டாகும் தனியான பாம்புகள் சீவசரீராதிபராகிக் கடகம் சிம்மம் அல்லது இரவிசந்திரன் லக்னாதிபதியுடன் கூடி அந்த இடம் ௬-௮-௨-௧-இவ்வித இடமானால் சாதகனுக்கு அவர்களினதிகார காலங்களில் இராசதெண்டனையாதி பலவகை துக்கசோகமும் ரோகாதிபாதைகளையுங் கொடுக்கப்படுவர்கள்.

பாபக்ஷேத்திரத்தில் பெலமற்ற பாவரும்சுப க்ஷேத்திரத்தில் சுபாதிகாரம் பெற்றுசுபரிருந்தும் மேற்கண்டவர்களைப் பார்க்க அல்லது கூடினாலும் அவ்வித இராச தெண்டனை சத்துருவினாலபஜெயம் மனோதுக்கம்ரோகசாட்டியபீடைகளின்றி அல்பத்துடநிவர்த்தியாகி விடும்சுபர்கள் பாபாதிபர்களாகிமேற்காட்டியஸ்தானத்திலிருக்கினும் பாவரிருக்கினும் சோரசத்துரு துன்பமும் ரோகபயமுமுண்டாகும்.

சுபர்கள் சுபக்ஷேத்திரத்திலும் பாவர்பாவ க்ஷேத்திரமாகி சீவசரீராதிபர்கள் பெலனற்று மிருக்கில் சத்துருவில்லை அனு கூலமும்இருணமுமிலாமலும் எவ்விதரோகபாதைகளும்இன்றிசுகமடைவன் மேற்காட்டிய ஸ்தானங்களில்எவரிருக்கினும் நோக்கினும் சீவசரீராதிபர்கள் பெலமற்று நின்றக்கால்சோரசத்துரு முதலிய துன்பமில்லாமலும் ரோகாதிபாதைகளில் லாமலும்சுகமடைவர் இதில்ரோக சீவசரீராதிபதி இரவியானால் பித்தகாங்கை சிரசுநேத்திரம் இவைகளில்நோயுண்டாகும்

சந்திரனாகில் முகம் * சரம் இவைகளிலும்ஜலசம்பந்தகபசிலேஷ்பனாதிநோயும் குசனாகில்மார்பு தோளிவைகளில்வலிமுதலிய எரிவு விரணாதி பின்பாரிசங்களிலுங் கொடுக்குமென்றும்.

புதனாகில் சைத்தியம் சித்தப் பிரமை ரோகமும் இடுப்பு நோய்களைக் கொடுக்கப் படுவனென்றுங் கொள்க.

---

* சரம் - தொண்டை.

குருவாகில் சிலேத்துமாதி சித்தப் பிரமை உதர நோயும் சுக்கிர ளுகில் குறியிடம் அடிவயிறுகளிலும் சீதாதி சல ரோகமும் சனியா கில் கால்நோயும் பித்தவாதம் முதலிய அண்டநோயும் இராகுவாகில் * க்ஷுத்திர முதலிய சைத்திய பித்தமூலாதி நோயும் கேதுவாகில் பலவகை சத்துருநோய்களும் விரண இரக்த நோய்களேயுங் கொடுக் கப்படு மென்பதாம்.

இரவியானால் பிதுர்வம்ச பந்துவிரோதம் இராசாக்களாலும்சந் திரனுகில் மாதுரு வகையாற் சத்துருத்வம் வைசியர்களாலும் குசனு கில் க்ஷத்திரியர் ஆந்திரர் முதலிய சத்துருவும் புதனுகில் வைசிய சத் துருவும் உடன் விரோதமும் குருவாகில் புத்திரர் பிராமண சத்துரு வும் ராச சத்துருவும் சுக்கிரனுகில் பெண் சத்துருவும் மேலான சாதியினும் சனியானுல் கீழ்க்குலம் அன்ப சத்துருவும் ராகு கேது வாகில் நீச சத்துருவையும் உரைக்கவேண்டும்.

ராசிகளுக்கு இசைந்த படி சத்துருக்களேயும் ௫-கூ-குரு சுக்கிர க்ஷேத்திரமாகி மேற்கூறியசத்துருரோகாதிசிவசரீராதிபர்களிருக்கில் ராசப்பிரபு புத்திரசத்துருவும் பிராமணவிரோதமும் புதன்சந்திரன் வீடானுல்செட்டிமுதலிய மூன்ருங்குலசத்துருவும்இரவி வீடானல் அவைஇராச சத்துருவும்அந்தஇராசியதிபதிகளுக்குரிய சாதியானசத் துருக்களேயும் ரோகங்களேயுங் கூறல்வேண்டும்.

இவைகளுக்கு கணிதமாவன.

சத்துருரோகாதிகளுக்கு முன்கூறியசிவசரீராதிபருடனும் அவ் வித ஸ்தானங்களிலும் கூ-மிடத் ததிபதி இவர்களுடனுங் கூடிய கிரகவெண்களே பெலனுக்கிசைந்தபடி அந்தந்த இராசியெண்களாற் பெருக்கியதை ௫-ல் கழித்த சேஷத்திசைந்த சாதி சத்துருவென் றும் ௩-ல் கழித்த சேஷம் வாதம் பித்தம் சிலேஷ்பணமென்னும் ரோகமும் (சதை) (தோல்) (எலும்பு) இவ்வித சம்மந்த வியாதிக ளென்றும் கூறல்வேண்டும் அந்தத் தொகைகளே தனித்தனி கூ-ல் கழித்த சேஷத்திசையிலும் வந்தஈவை ௫-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷம் புத்தியிலும் இந்ததிசாபுக்திகாலங்களில் அவரவர்களுக்கு இசைந்த நோய்களேக்கொடுக்கப்படுமென்றுங்கண்டறிந்து சொல்ல வேண்டியது.

---

* க்ஷுத்திரம-பில்லி சூனியம்.

களத்திரபாவ பலன்கள்.

இலக்கினாதி சப்தமத்தை அவ்வதிபனையும் சுக்கிரனையும் இவைகளுக்கு சப்தமாதிபதி நின்றஸ்தானாதிபதி யினையுங்கொண்டு களத்திரபாவங்கூறல்வேண்டும்.

இந்த களத்திரபாவத்திற்கே சுக்கிரனுக்கு ஏழாமிடத்ததிபதி இருக்குமிடஞ்சீவனென்றும் இலக்கினாதி சப்தமாதிபதிநின்ற ஸ்தானாதிபதி சரீரமென்றும் பெயராகும் லக்னத்துக்கு ஏழாமிடத்ததிபதி குருமுதலிய சுபக்கோளாகியும் சவ்யசக்கர பெலத்துடன் சுக்கிரன் முதலியோருடன் இவருக்கு இரண்டுபக்கங்களிலும் பாம்பு குசன் சநி முதலிய பாவரின்றியும் வலுத்தும் சுப சம்பந்தம் கேந்திரகோணந் தனக்குரிய சுபக்ஷேத்திர பெலத்துடனிருக்கினும் நோக்கினும் சந்திரன் புதன் சுக்கிரன் பாவரில்லாமல் சீவசரீர ஏகாதிபத்தியபெலனாகி சுக்ஷேத்திராதி மித்துருக்ஷேத்திர கெதியிலிருக்கில் ஜாதகனுக்கு தாரமொன்றும் மேலான குலமும் பிரபலசுகசௌக்கியயோகமுந் தனதானிய கிரகவாகனபலிதமும் பெற்ற களத்திரவகையால் யோகமுண்டென்றும் இதில் சுக்கிரனும் பூர்வபட்ச சந்திரனுமாகில் மிகவும் மேன்பாடாகிய பிரபலத்துடன் வாழ்வனென்றும் மேன்மையான ரூப களத்திரம் வருமென்றும் சீவசரீராதிபர்கள் பாவரானாலும் பகைமுதலிய க்ஷேத்திரம்பாவர் மத்தியிலிருக்கினும் நோக்கினும் அல்லது சுக்கிரன் களத்திரஸ்தானாதிபனொருவனாகினும் அவருடன் பாவர்களிருக்கினும் அங்ஙனமாகிய பாவர் பகை க்ஷேத்திரம் பாபக்ஷேத்திரமானாலும் தாரமிரண்டாவது வெகு தாரமென்றும் இதில் சீவசரீராதிபர்கள் இரவியாகினும் பலவகைப் பாவருடன் கூடினும் இரவி பகை சத்துரு க்ஷேத்திர மல்லவருடனுங்கூடி நிற்கினும் அங்ஙனமாகிய இடங்கள் ௪—௭—௧௧—௨-௮-ஆகினும் துலாம் மகரம் கும்பம் கடகம் கன்னி இவைகளில் புதன் கூடிநிற்கினும் பிதுர்வம்சத்திலும் ௨—முதலிய பகுதாரமுடையவன் சாதகனுக்கும இரண்டு தாராதி பகுதார விவாகனென்றும் பாலிய வயதிலேயே கிழக்கு வடகிழக்கு இந்த திசையினின்றுந் தாரம் வரும் அந்த தாரத்துக்கு தேகாரிஷ்டரோக துன்பமுடைமையென்றும் அறிக. இரவி சரஸ்திரவிருசியிலும் சீவசரீரரானாலும் பகை முதலிய கிரகமின்றி தனித்தாலும் தனக்குரிய சுபர்கூடிப் பகை முதலிபது மில்லாதிருக்கில் சாதகனுக்குத் தாரமொன்றென்றும் தாரமனுகூலியுமாவள் சமமான பகை நீசக்கோட்கள் கூடினாலும் அல்லது பார்த்தாலும் சாதகன் களத்திரம் கோபிரோகியாய் அக்ருத்திய விஷய பிர

வேசித முடையவளாய் வாழ்வளென்றும் ஜாதகனுக்கு முன்னமே தார நாசமுஞ் சொல்லவும் வேண்டும். இதில் இரவியானவன் க-ந-நி-சு-கூ-இந்த ஸ்தானத்திலும் மேஷம் மிதுனம் தனுசு விருச்சிகம் இவைகளில் நின்றும் சிவசரீருதிபர்களைக் கூடினும் அவர்கள் தனக்குரிய சுபருள லும் பாவருளுலும் இணையுள்ள கிரகமாகில் சாதகனுக்கு தீர்க்கதார மொன்றென்றும் மற்றும் அன்னியவகை சம்பந்தமுடையவனென்றும் பலவித மேன்பாடுகளுஞ் சுகசௌக்கிய மில்லாத தாரமாகி வாழ்வனென்றும் பற்பல இடசஞ்சாரமும் உண்டாகும் இருவகை சுபருடன்கூடினும் தாரமிருக்க தாரமுள்ளவன் அவை சரமானல் விரைவில் விவாகமும் சீக்கிரத்திலேயே களத்திர நாசமென்றும் பலவித மேன்மைக்குரிய வகையினுல் கஷ்டநஷ்டமு முண்டாகு மென்க அவை ஸ்திரவிராசியாய் சுபக்ஷேத்திர பெலத்துடன் இருக்கில் சாதகன் பிரபலமான ஓரேதார முளனுவன் பாபக்ஷேத்திரமானுல் காலதாமத விவாகம் விவாகபங்கம் இவ்வித பலவகை வருத்தமு முண்டாகும் உபயவிராசியாகினும் பலவகை தாரபோகன் ஸ்தானபேதமானதாரனென்றும் தெற்கு தென்மேற்கு இவ்வித திசை சமீபங்களி லில்லாமல் மிகுதூரத்தில்அன்னியவகையாய் தாரம் வரும் அதுவும் அயல்வகையாறே யாகும் ஸ்திரமானுல் வடக்கு மேற்கு தூரத்தில் தாரமின்றி சமீபமான இடத்தில் தாரம் வரும் தாரத்துக்கு அடங்குவன் சரமாகில் தெற்கு தென்மேற்குத்திசை தாரமானது தேகாரிஷ்டமுடையதாகி வருமென்றும் இரவி சிம்மம் மீனம் விருஷப மிந்த இருசிகளிலும் கo-கஉ-இவ்வித இருசிகளான இடங்களிலிருக்கினும் சனி புதன் முதலியோரைக்கூடினும் அவை ஸ்திரவிருசிகளல்லது நீச வீடானுலும் தாரம் பலவகைக் காலத்திலு முடிவின்றி யடைவனென்றும் பலவகை வருத்தமாகிய பலனைக் கொடுக்கப்படும் சரமானுல் தாரமிரண்டென்றும் உபயமாகில் பலதாரமென்றும் சுபர்கூடினும் நோக்கினும் ஷெ தாரமூலிய பலவகை வருத்தங்களையும் அடைவனென்றும் மனக்கவலைகளையுஞ் சத்துருத்துவ தாரமாகி இவளை இழந்துவிடுவனென்றும் அறியவேண்டும்.

சந்திரன் சுக்கிரன் புதன் சிவசரீருதிபருகி புதன் சனி பாம்பு இவ்வித க்ஷேத்திரவாசமானுல் பலவகை வருத்தமுங் களத்திர மூலிய துக்க சோகமும் அவற்றிலிருப்பவர்களுக்குப் பகை நீசக்ஷேத்திர வாசமானுலும் அதையே களத்திர ஸ்தானமாக வந்து மேற்கூறியவர்கள அந்தஸ்தானங்களிலிருந்தாலும் அவ்வீட்டதிபரைக் கூடினுலும் தாரமிரண்டு முதலிய பலவகைத்தார லாபமுடையவன் சனி குசன் முதலியவர்கள் பாவ

ருகிக் கூடினும் அவர் சரவிருசியா யிருக்கில் ஸ்வயஸ்தானத்திலும் வடகிழக்குத் திக்குகளிலும் தென் மேற்கிலும் இரண்டுவித தாரத்தை விவாகஞ் செய்வ னென்றும் அந்த தாரமூலியமாக சிலவகைப் பொருளுந் தன லாபமும் மேன்மைபான தாரமாகினும் சாதகனிடம் போக யிச்சையை யடையாள் பற்பல இடத்திலும் அடைய வெண்ணுவள் புத்திற நின்றியும் வருந்துவள் அதிகாமி மோகியாகி வாழ்வள் என்றறிய வேண்டும். அவ்வித இடங் குரு சந்திரன் ரவி இவர்களின் வீடாகினும் தனக்குரிய பகை நீசமின்றி இருக்கினும் பாவரைக் கூடாமலிருக்கினும் ஏகதாரமே யுடையவன் சுகுணி தேவதாதி மேன்மையான பக்தியாகினும் தரித்திரமல்பமுடையவளானாலும் பின் பிரபலமேன்பாடுகளு முடையவர்களாகியும் வடமேற்கு தென் கிழக்கு இவ்வித திசைகளிலிருந்து தாரம் வரும் இவருடன் (௨)முதலிய சுபர்கள் பகைக்ஷேத்திரமின்றி சுபக்ஷேத்திர பெலத்துடன் இருக்கில்ஜாதகனுக்கு தாரமானது ஏகவிர்த்தியுடன் பிரபல குடும்பவதியாவள் அவை தெற்குதிசையிலுங் உண்டாகும் மேற்கிலும்வரும் அவர்கள் பாபராகிக் கூடினாலும் பாபபகைக்ஷேத்திரகளில் பாவரைக்கூடினும் தார மிரண்டுக்கு மேற்பட்ட தாரமென்றும் அவை மேற்கும் தெற்கும் இவ்வித திசையென்றும் அவர்களுஞ் சீவசரீராதிபருடன் பாவர்கூடினும் நோக்கினும் பகைபாப க்ஷேத்திரத்திலிருக்கினும் பலவகைதாரமானது கருமைமுதலிய அவரூபியாகியும் ரோகாதிபாதை யுள்ளவளாகியும் குடும்ப விரோதமுடையவளாகி வாழ்வளென்றறியவேண்டும். தனித்து களத்திர ஸ்தானஞ் சுபக்ஷேத்திர பெலத்துடன் ஸ்திரவிராசியாகில் தாரமிரண்டு முதலிய பகுதாரமும் பரஸ்திரீ சம்போகன் சுபபெலத்துடன் சரமுபயத்தில் சுபராகில்தாரமொன்றுடையவன் மிகவுமேன்மை யுடன் வாழப்படுவனென்க.

குசன் சனி குரு முதலியவர் வீட்டிலாவது பாம்புகளின் வீட்டிலாவது சீவசரீராதிபர்கள் பலனற்று சுபராகினும்பலத்திடையசனி குசன் பாம்பு இரவி இவர்கள் கூடினும் நோக்கினும் பகை நீச க்ஷேத்திர கெதியுடன் ௨-கஉ-எ-கக-இந்த இடங்களிலுங் கும்பம்சனியாகினும் புதன் மிதுனமாகினும் குசன்மேஷ மாகினும் பாம்புகள் சீவசரீராதிபராகி மேலேகூறிப இடங்களிலிருக்கில் சாதகனுக்கு விவாகங்கிடையாது பலவாறான வருத்தமும் குடும்ப விர்த்தி இல்லாமலும் வாழ்வன் இவ்வீட்டதிபருடனாவது குரு சுக்கிரன் இரவி சந்திரன் க்ஷேத்திரவசமாகி அவை கஉ-௨-அ-நீங்கிய இடமாகினும் விவாகம்

சீக்கிரமும் சுகமும் பலவானுகியும் அதிக மேன்மையுள்ளவனுகியுங் கீர்த்தி மூர்த்தி புகழ்ச்சியுடன் ஒரே தாரயுக்தனுகி கிழக்கு வடக்கு திக்குகளிலிருந்து தாரம் குடும்பம் சொந்த பாத்தியத்தையுடன் சமீப ஸ்தானம் ரூபமேன்மையான தாரமுண்டாகும் இவைபாபக்ஷேத்திரமானுலும் பாவரைக் கூடிநிற்கினும் பலவகைப் பொருள் கஷ்ட நஷ்டமும் களத்திரவிரோதத்தினுல் பலவகை உ-முதலிய தாரவம்சமாவன் ஓர்வகை தாரம் பரபுருஷகெமனத்தை யுடையவளாவள் மற்றய புதன் சனி வீடாகி இவர்களைக் கூடினும் சிவசரீராதிபராகிக்கூடியல்லது மேற்கண்ட ஸ்தானத்தி லிருக்கினும் இருணியாகியும் அவரூபியாகியும் புத்திர விஷயத்திற்காக உ-முதலிய தாரங்களை யடைவனென்றும் அவ்வித வகையாலும் தேகாரிஷ்ட ரோககண்ட துன்பமுடையவனுகியும் பலவகைவருத்தமும் அடைந்துதரித்திரவதியான தாரயோகனுகி பின்புத்திரவிருத்தியில்லாமலும் துக்கம் அடைவன் சுபக்ஷேத்திர சுபசம்மந்த திருஷ்டியுடனிருக்கினும் நோக்கினும் இவர்களின் மத்தியில் கூடினும் சாதகனுக்கு புத்திர விஷயமாகவும் பகைவிஷயமாகியும் ரோக விஷயமாகியுஞ் செய்த தாரமூலமாக பின்னனுகூலத்தையுஞ் சுகத்தையும் பிரபலத்தையும் அடைந்து வரப்படுவனென்றும் அறியவேண்டுமென்பதாம்.

களத்திரபாவ கணிதங்களாவன.

சுக்கிரன் சுக்கிரனுக்கு ஏழாமிடத்ததிபதி எந்த இடத்திலிருக்கிறுனே அந்த இடத்ததிபனுடனும் இலக்கினத்திற்கு ஏழாமிடத்ததிபதி எந்த வீட்டிலிருக்கிறுனே அவ்வதிபனதில் நின்றவன் இவர்களுடனும் லக்கினத்துக்கு ஏழாமிடத்தில் நின்ற கோள்களுடனுங் கூடிய கிரக எண்களை த்தனித்தனி சுபாசுப பெலன்களின்படிக்கு ராசியெண்களையுங் கிரக வெண்களையும் பெருக்கியதொகையை பலன்படி வைத்துக் கொண்டவை போக மற்றய சேஷங்களை அவரவரின் பூரணமாகிய எண்களில் கொடுத்த ஈவு சுக்கிரன் சந்திரன் குருவாகில் தாரம் மேன்மை யென்றும் புதன் சனி கிருஷ்ணபக்ஷ சந்திரன் பாம்பு ரவி இவர்களின் ஈவில் ச-ல் க-தாரவிவாகமும் மற்றவை பல தாரபோகமும் சனி பாம்பு தனித்தனி ஒருவருடனுங் கூடாமல் பாபராகி கொடுத்துவந்த ஈவாகில் விவாகமே கிடையாதென்றும் அறியவேண்டிய தென்க. மேலேகண்ட தொகைகளில் சுபர்களின் எண்களாற் பெருக்கியதை கூ-ல் கழித்த சேஷம் திசையிலும் வந்த

ஈவை 12-ல் பெருக்கி 27-ல் கழித்த சேஷம் புக்திகாலத்திலும் களத்திரவிவாக காலமென்றும் மேலே கண்ட தொகையுடன் அந்தந்த கிரகங்களுக்கு எட்டாமிடத்ததிபதி பாவரானவர்களின் எண்களையும் மேற்கண்ட விதிப்படிக்கு 27-ல் கழித்த சேஷந்திசையிலும்இதில் வந்த ஈவை 12-ல் பெருக்கி 27-ல் கழித்த சேஷம் புத்தியிலும் களத்திரமாக கருமங்களைக்கொடுக்கப்படுமென்றறிய வேண்டியது.

பிதுர் பாக்கியாதி பலன்களாவன.

சூரியனையும் 9-மிடத்தையும் இவைகளுக்கு ஒன்பதா மிடத்ததிபதி நின்ற இராசிநாதன் எந்த வீட்டிலிருக்கிறானோ அவ்விராசியையும் அவ்விராசிநாதனையுங் கொண்டு பிதுர் பாக்கியாதி பலன்களை கூறல் வேண்டும்.

ஒன்பதா மிடத் ததிபதி நின்ற இராசிக்கு ஒன்பதா மதிபதியெவனோ அந்த கிரகம் சீவ னென்றும் இருக்கு மிராசிசீவராசியென்றும் ஐந்தாமிடத்ததி பதிநின்ற இராசிநாதனிருக்கு மிடம் சரீர கிரகம் சரீர விராசி யென்றும் பெயராகும்.

இவ்விதஞ் சீவசரீராதிபர்கள் கேந்திரகோண சுப பெலத்துடன் சரமுபய மிந்த இராசிகளிற் பெலவான்களாகியும் பிரபல பெலத்துடனுமுடையவராகியும் இரவி சனி நீங்கியவர்களாகி இருக்குமாயினும் ஒன்பதாமதிபதி ஒன்பதாமிடம் இவைகளான ஸ்தானங்களில் அதற்குரிய சுபக்ஷேத்திரகெதிகளுடன் பெலமுற்று நிற்கினும் நோக்கினும் பாப வீக்ஷணிய மத்தியில் இல்லாதிருக்கினும் சாதகனுக்கு அதிக மேன்மையான தனலாபயோகம் பூர்வார்ச்சித விர்த்திகளும் அதிக பிரபல வாழ்க்கைளும் மனோவாக்கு செபசித்திகளும் பிதா செல்வாக்கும் விருத்தாவஸ்தைவரையுள்ள ஆயுளையுடைய பிதாவாகி பிரபல் விருத்தியுடன் வாழப்படுவனென்றும் கொள்க.

அவைகள் அசுபக்ஷேத்திரமாகி அசுப பெலத்துடன் பாபரைக்கூடி மத்திய கெதியில் பாபவீக்ஷணியமாகினும் பகை நீசக்கோளாகியும் சீவ சரீராதிபர்கள் பகை நீசாதி பாபக்ஷேத்திர கெதியுடன பாபபெலன் பெற்றும் சனி இரவியாகவிருனும் பிதாவானவன் பாலியகாலத்தில் மரணம் குடும்பக்ஷயம் பலவகை பிதுரார்ச்சித விர்த்திகளுங் கிடையாமல் பலவகை வருத்தமடைவனென்றும் மனக்கவலைகளும் யோகபாவக் குறைவு

களும் தனதானிய நஷ்டமும் இவ்விதங் கெடுதலான பலன்களை யடைவனென் றறியவேண்டும். சீவசரீராதிபர் பெலமற்றும் பாபக்ஷேத்திர பாபராகின் பிதுர் பாலிய மரணமாகினும் பிதுர்பாக்கியாதி தன மேன்பாடு உள்ளவள் சீவசரீராதிபர்கள் தங்களுக்குரிய பெலன்களுடனும் ஸ்தானாதிபதி முதலானோர் பெலனற்று பகை நீசோதிமுதலிய பாவங்களை அடையில் அவ்வித பிதுர்பாக்கிய முதலானவைகளை இழந்தும் பிதுர் மாத்திரஞ் சந்ததி விருத்திகளையும் தரித்திரரா யனுபவிக்கப்படுவர்கள் இருவர்களும்பெலவானாகில் பிதாவும்ஆயுள்விர்த்திகளும் வம்சபிரபலமும் யோக மேம்பாடுகளும் அதிகமான சுகசௌக்கிய மேன்மைகளுடன் ஓர் வகைகளுக்குங் குறைவின்றியனுபவித்து மிகமேன்மையாய் வாழ்வன் என்றும் இருவகையார்களும் பெலமற்றுப் பகை நீசாதிகளுக்குரிய விரோத பலனைப்பெற்று வாழில் பிதுருவினாலுஞ் சுகமில்லை யோகமுமின்றி வம்சநஷ்டத்தையும் அனுபவித்துப்பலவகை நஷ்டமுமுண்டாகுமென்றும் அறியவேண்டுமென்பதாம்.

சீவசரீராதிபர்களும் ஸ்தானம் ஸ்தானாதிபதிகள் ஸ்தானத்துள்ளே இவ்வைந்து பெயருடன் குருமுதலிய சுபக்கோட்கள் இருக்கினும் அவ்வித ஸ்தானங்கள் சரமுபய விராசியாகியவர்களுக்குரிய சுபபெலத்துடன் சீவசரீராதிபதி காரகாதிபத்தியம் பெற்றவர் ஸ்தானாதிபதி இந்நால் வரும் சுபராய் ஈ பெலன்களுக்குக்குறையாது. பிரபல பெலவான்களாயிருந்து அவ்விதக்ஷேத்திரமான உ-ரு-எ-கூ ஒன்று இவ்விடங்களாகியும் அவ்வித ஸ்தானங்கள் மிதுனம் தனுசு சிம்மம் கும்பம் இவ்வித இடங்களாகினும் அவ்வதிபர்கள் சரகெதியிலும் பாபமத்திய சம்பந்த திருஷ்டி இல்லாமலிருக்கில் சாதகன் பிதாபிரபல ஐஸ்வரியவந்தனாகியும் பிரபல போகவானாகியும் வெகுகாலமாயுள் விர்த்தியுடன் மிகவும்பிரபலவானாகியும் பிதுர்பாக்கிய விர்த்தியும் விருத்தாவஸ்தைவரை பிதுராயுள் விர்த்தியும் அதிக சுகத்துடன் யாவருந்தம் மேலாகி வாழ்வனென்றறியவேண்டு மென்பதாம்.

இதில் சனி புதனாகியல்லது சனி புதக்ஷேத்திரங்களாகிபெலனற்றாலும் பிதுர்பாலியத்து மரணமாவன் இத்துடன் முன்னான பிதுர்வம்ச சந்ததிக்கு தத்துமுலிய வகையைப்பெறுவனென்றும் அறியப்படும் சுக்கிரன் சந்திரன் சீவசரீராதிபர்களாகினும் பாபர் மத்தியனானாலும் அவை விருச்சிகம் மீனம் கன்னி துலாமிவைகளில் ரு-உ-கூ-அ-கூ இந்த ஸ்தானமானாலும் பிதாவின் மற்றப தாரமான்வை தீயமுதலிய வெகு தார

வம்ச குடும்ப விர்த்தியுடையவன் பிதா கௌமாரா வஸ்தையில் மரண மாவன் பிதுர்வம்சம் சமவிர்த்தியுண்டென்றும் பாம்புமுதலியோர் கூடிநிற்கினும் பெலமானாலும் பிதா பாலியத்திலேயே மரணமாகி விடுவ னென்றறிய வேண்டும் பிதுர்வம்ச க்ஷயமுமாம் இரவியுடன் மேற்கூறிய அதிபதிகளிருக்கினும் பிதாசிசுவுற்பவகாலத்திலேயே மரணமாவன்பிதுர் பொருளதிக மில்லான் அல்பமுடையவன் என்றும் குருமுதலிய சுபரா கின்பிதா விருத்தாவஸ்தைவரை பிரபல சுகசீவியாகிபிதுரார்ச்சித விர்த் தியையடைந்து வாழப்படுவனென்றறியவேண்டும் பாவர்கள்சுபர்களாகிப் பெலன் பெற்றும் சீவசரீராதி ஐக்கிய ஏகரானாலும் பிதா ஆயுள் விர்த்தி யாகினும் தனவிருத்தியை அடையப் படமாட்டானென்றும் சுபர்கள் பாப பெலத்துடையவராகினும் பெலமற்று இருக்கினும் தனம் பிதுர் பாக்கிய பிரபலமானாலும் பிதா பாலியத்திலேயே மரிப்பனென்றும் அறியவேண்டும்.

௪-௯-௧௧-௧௨- இந்த ஸ்தானங்களிலாவது அல்லது மேஷம் விருஷ பம் கடகம் மகரம் இந்த இராசிகளிலும் சுபர் பெல்த்து நிற்கினும் சீவ சரீராதிபராகினும் அவ்விடத்ததிபர்கள் சீவசரீராதி சுப பெலத்துடனிருக் கினும் சுபக்ஷேத்திர சுப பெல கெதியானாலும் பிதா அல்ப தனவந்தனா கினும் விருத்தகாலம் வரை ஆயுள் விருத்திகளுங் குடும்ப சுப சௌக்கிய வானாகி மேன்மையோடு வாழ்வனென்றறியவேண்டுமென்பதாம் இவ்வித ஸ்தானங்களில் சுப பெலத்துடனிருக்கினும் தரித்திர பிதாவே ஒழிய வேறு பிரபலமில்லான் ஆயுள்விர்த்தியுண்டு சுபராகியும் அல்லது சுக்ஷேத் திர சீவசரீராதிபர்கள் ரவி குரு சுக்ஷேத்திர வாசம் பெற்றிருக்கினும் நோக்கினும் பெலமான பூஸ்திதியும் இராசமூலிய யோக சீவனமும் வெ குதிறவானாகி வாழப் படினும் பிதாவினால் விரோத பாவம் சாதகனுக்கு நேருமென்றும் அவற்றிற்குசன் சனி பார்க்கில் விருத்தா வஸ்தையில் பிதுர்மரணம் அதியோகமின்றி வாழுவன் பிதுர் பாக்கிய விருத்திகிடை யாதென் றறியவேண்டியது.

குரு சந்திரனாகில் பாலியமரணம் பிதா தனவந்த யோகவானுவனெ ன்றும் சுக்கிரன் புதனாகில் யவ்வனகாலவயதில் பிதுர்மரனமாவன் சம விஷயதனம் பிதுர்பாக்கிய முடையவன் என்றும் இரவி குசனாகில் கௌ மார வயதில் பிதுர்மரணமாகினும் தனப்பிராப்தி முதலிய யோக வானு வனென்றுங் கண்டறியவேண்டுமென்பதாம்.

பிதுர்பாவ குணிதமாவன.

இரவியும் இரவிக்கு ஒன்பதாமிடத் ததிபதி நின்ற இராசிநாதனுடனும் இலக்கினதி ஒன்பதாமிடத் ததிபதி நின்ற இராசிக் கதிபதியுடனும் மேற்கூறிய கூ-மிடத்திலும் கூடியகிரக எண்களை தனித்தனி பெலனுக்குரிய கிரக யெண்களால் இராசி யெண்களைப் பெருக்கியும் அவரவர்கள் பஞ்ச பெலனுக்குரிய வைபோக பாக்கி யெடுத்துக்கொண்ட தொகையை கூ-ல் கழித்த சேஷம் திசையினும் வந்த ஈவை நி-ல் பெருக்கி ஒன்பதில் கழித்த சேஷம் புத்தியிலும் பிதுர்கண்டமும்கிரமப்படி இதில் கூடயான திசை புக்தியெதுவோ அதில் பிதுர்கருமமுமுண்டாகும் மேற்கண்ட இராசிக் கிரகங்களுக்கு நி-ச-மிடத்ததிபதி யுடனுற்ற கிரகவெண்களை முன்போலவே கண்டு கூட்டி மேற்கண்ட ஒவ்வொருவர்களுக்கும் வந்திருக்கிற தொகைகளையும் ஒன்றுசேர்த்து தனித்தனி கூல் கழித்த சேஷம் திசையிலும் வந்த ஈவை முன்போலவே பெருக்கிக்கண்டறிந்த சேஷமும் திசாபுக்தி காலம் பிதாவுக்கு யோகாவயோகம் அதாவது பாப பெலத்தோர் எண்களாகில் யோகபங்கமும் சுப பெலத்தோரெண்களாகில் பிரபல உத்கிருஷ்ட யோகவானுகி வாழ்வனென்றறியவேண்டிய தென்பதாம்.

இரவி பலவானுகி குரு சுக்கிரர் சுக்ஷேத்திர ஸ்தானங்களில் பெலத்திருக்கினும் நோக்கினும் குருவசாத் கூ-மிடத்ததிபதி குரு ரவியாகியவிவர்கட்கே சிவசரீருதிபனுனுலும் அவர்களுடன் கூடிய கிரகவெண்களுக்குரிய இராசி யெண்களாற் பெருக்கிய தொகையை கூ-ல் கழித்த சேஷமும் கண்ட திசாபுக்தி காலங்களி லெல்லாம் அப்துார்ய சோம பவுண்டரீகாதி யாகஎக்ஞங்களால் கீர்த்திபெறுவன் பாவருனுல் பரக்ஷேத்திராதியான கேவல மந்திர ஹோமங்களைப் புரிந்து நிஷ்பலமடைவன் அதில் சனி பாம்பு குசனுகில் அக்கினியில் பிருணத்தியா சாதிக்குரிய கொல்லன் தட்டான் முதலிய கம்மியனுகி எப்பொழுதும் அக்கினி முன் தபசிகளைப்போல வாழ்வன் பொய்வேஷம் பூண்பன் புதன் முதலியோர் ஆகில் தினதிவை சுவ தேவாதி யெஞ்ஞம் செய்து பரிசுத்தவானுவன் என்றறிய வேண்டும் இதில் சிவசரீருதிபர் பேதம் விரோத முதலிய வகைபைப் பெறில் ஒருவகை யானதையும் அடையாமல் கிருதக அதர்மியாகி வாழ்வன் பிறர்க்குபதேசிப்பன் என்றறிய வேண்டியதென்பதாம்.

கர்மராச்சிய பலன்கள்.

குருவையும் குருவுக்கு தசமாதிபதி நின்ற ஸ்தானாதிபதியையும் இலக்கினத்துக்குத் தசமாதிபதி நின்ற ஸ்தானாதிபதியையுங் கருமாத் கரும ஸ்தானாதிபதி நின்ற வதிபதி ஸ்தான மிவைகளைக்கொண்டு கரும விருச்சிய பாவ பலா பலன்களைச் சொல்லவேண்டும் கர்மத்திற்கு குருவுக்கு தசமாதிபதி நின்ற இருசி நாதன் சரீரமென்றும் சென்ம வசாத் கருமாதிபதி நின்ற ஸ்தானாதிபதி நின்ற இடத்ததிபன் கருமத்திற்குச் சீவனென்னுஞ் ஜென்மாத் தசமாதிபதி நின்ற ஸ்தானாதிபதி இராச்சிய பாவ சீவனென்றும் குரு வசாத் தசமாதிபதி இருச்சிய பாவ சரீரமென்றும் பெயராகும் மேற்கண்ட ஸ்தானாதிபதிகள் துர்த்தானம் சனி சத்துரு நீசக்ஷேத்திரம் பாப சம்பந்த முடைவர்களாகி குரு முதலியவர்கள் பலமற்றும் தசமத்தில் பாம்பு சனி முதலிய விவர்கள் சமான பாவர்களிருக்கினும் நோக்கினும் ஸ்தானாதிபதி சீவசரீருதி கரும சீவசரீருதிபர்கள் இருக்கினும் நோக்கினும் பாவர் மத்தி சம்பந்த திருஷ்டியுடனிருக்கினும் நோக்கினும் சாதகனுக்கு கர்ம சிரத்தையின்றி பாப கருமங்களும் அசத்தான தொழிலும் புரிவனென்றும் பலவித வருத்த துக்கனாகி ஹீனகருமங்களைச் செய்யப் படுவனென்றும் பலவகையில் தன் சுயகருமங்களை இழந்து விடுவனென்றும்மனதுக்கங்களும் பலவிதவகையலைச்சல்களும் பொருட் சேதமு முண்டாகுமென்றும் அவ்வகை மூலமாய் குடும்ப அகிருத்தியங்களை யடையப்படு மென்றறிய வேண்டும் இதில் சுபர்கள் இருக்கினும் நோக்கினும் அவ்விதமான சில கர்மம் சிரத்தையோடு சிலநாள் செய்தும் சிலநாள் கருமசித்தை யின்றியும் அடைவனென்றும் சிலநாள் அவைகளுக்கு விரோதமான கருமங்களையும் அடைந்து வருவன் என்றும் கூறப்படும் மேலே கூறிய கர்ம சீவசரீருதிபர்கள் பலவான்களாகியும் பிரபலவானாகியும் சுபக்ஷேத்திர சுபக்கிரக கதியுடனிருக்கினும் நோக்கினும் பிரபல சுபரானாலும் மேன்மையான கர்மசிரத்தை முதலான மேன்பாடுகளும் அதிக வனுகூலமும் சத்கருமச் செய்கைகளை யடைந்து வருவனென்றும் மேலான அனுகூல பாகத்தையும் பிரபல சுகங்களையும் அடையப்படுவனென் றறியவேண்டும் பாப சுபசம்பந்தங்களுட னிருக்கினும் நோக்கினும் சாதகன் சிலநாள் சத்கருமியாகியும் சிலநாள் அசத்கருமி யாகியும் வாழப்படுவ னென்றும் கண்டறியவேண்டும் இவைகளில் சுபபலனதிகமாகில் அதற்குரிய சுபபலத்தின் கரும சிரத்தைகளையும் பாப * கிரக பலனதிகமானல் பாபத்

---

* கிரகமூலமல்லது மூலமென்றால் எந்த பாவசீவசரீரங்கள்காண எக்கிரகம் வருகிறதோ வந்தக்கிரகமும் இருக்கு மிடமும் மூலமாகும்.

தொழிலே புரிவனென்றும் கண்டறியவேண்டும் மேற்கண்டசீவசரீராதிபர்கள் பெலனற்றுவது அல்லது ஸ்தானாதிபதிகள் பெலமற்றிருக்கில் கள்ளவேஷமான கருமங்களைச் செய்து வரப்படுவனென்றும் பலவித மனோவருத்தங்களையும் அடையப்படுவனென்றும் அறிய வேண்டுமென்பதாம்.

இதில் தசமாதிபதி குரு சீவசரீராதிபர் களிவர்கள் பெலவானாகியுஞ் சுபராகியும் கேந்திரகோணமானதிலும் சீவசரீராதிப ரேகராகியும் பெலமுற்றும் மேன்மை யானோராகியும் அவ்வித க்ஷேத்திரம் தனுசு விருஷபம் சிம்மம் மேஷம் இவைகளாகியும் பெலத்தும் பாப கிரக சம்பந்த திருஷ்டி இல்லாமலுற்று அவை உ-௲-ரு-ய-க-இவ்வித இடங்களானாலும் அவற்றிற் சீவசரீரஐக்கியபத்திய முடையவர்கள் இரவியானால் நல்லகருமங்களையுஞ் செய்வதுடன் சிம்மம் மேஷம் தனுசு இவைகளில் இரவிபெலத்துடனுமிருக்கில் இராச சீவன பிரபலவாழ்க்கையும் பலருக்கு வதிகாரியாகி வாழ்வனென்றும் அறிய வேண்டும் அவை சீவசரீர இடங்களுக்கு துர்த்தானமானால் சிலநாள் இராஜசிவனமிருந்து பின்னஷ்டத்தையடைவனென்றும் அவைகேந்திரகண்டகஸ்தானமாகில் சீவனத்திலுற்றே மரணமாவனென்றும் சு-அ-இடமானால் சீவனத்திலேயே தெண்டனையுங் கொடுங்கோல் துன்பமுமடைவனென்றும் அவையினால் மரணசமானபாதைகளுமுண்டாகும் க-ரு-கூ-இவ்வித இடத்திலாவது ஸ்தானாதிபதிகளாவது சுபர்களாகியிருக்கில் பலவிதமான வருத்தங்களின்றி மிகவும் மேன்மையான இராச சீவனத்தாலதிகமான இராசயோகத்துடன் பிரபலமான மேன்மையுடையனும் பிரபுத்துவங்களை யடையக் கடவன் அவை உச்சகேந்திர இடமானால் அனேகருக்குத் தலைவனாகியும் சுப க்ஷேத்திரமானால் சிலருக்குத்தான் தலைவனாதலன்றியும் ஒருவரின் கீழ்ப்படிந்து வாழப்படுவனென்றும் அறியவேண்டியது மேலும் ச-௲ எ-அ-இந்த ஸ்தானஇடமும்விருஷபம் கன்னி துலாம் மீனம் மிதுனம் கடகம் இவையாகியும் இதில் புத சந்திரக்ஷேத்திரமல்லது விவருடன் கூடில் வியாபார மூலமானதிலும் குசன் சுக்கிரனாகில் பயிர்த்தொழிலென்றும் ஷை கிரகங்கள் குரு இரவி யுடனாவது அவர்களின் றனது வீட்டிலாவதிருக்கில் இராச மூலியமான சீவனமும் துலாத்தில் கேது இருக்கில் வியாபாரத்தினாலும் சனி இராகிருக்கில் கீழ்க்குலத் தொழிலாலும் புதன் குரு விருப்பது மீன கன்னியாகில் வித்தை முதலான

வைகளாலும் சீவனமுடையவனென்றும் சந்திரன் தனித்து மேற்கூறிய ஸ்தான கெதியிலிருக்கில் வியாபாரமும் இராசாங்க சீவனமும் உண்டாகும் மேற்கூறியவர் குரு இரவியின் வீட்டிலிருக்கில் இராசாங்க மூலசீவனமென்றும் குசன் புதக்ஷேத்திர மல்லது இவருடன்கூடினும் பலவிதமான தொழிலும் சிலவித்தை முதலானவைகளும் பலவிததந்திர மந்திராதி வித்தைகளால் மேன்மையடைவன் அவர்கள் துர்த்தான கெதியுடன் இருக்கில் வித்தையின்றியும் பலவிதவாத முறையறிந்து பொய்த்தொழிலுடன் சீவனம் புகுவனென்றும் சுபட்சேத்திர பெலனுகில் மேன்மையானகல்விகளும்சயனுதி சுகசௌக்கியங்களும் பிரபுத்துவங்களும் இவ்வித மேன்மைகளுண்டென்றும் தனலாபமும் குசனுகில் பூமி மூலிய சீவனம் மிக்கமேன்பாடுகளும் சுபக்ஷேத்திரபெலத்துடனிருக்கில் அதிக விர்த்திகளும் இவர் குரு இரவி சனி சேத்திரமாகில் ஓர் பிரபுவினுக்குட்பட்டு சீவனஞ்செய்வன் இவர் வீட்டிலவர்மாறி யிருக்கில் சாதகன பிரபுத்து வத்துடன் வருமை இன்றிபிரபலயோகமும்அடைவனென்றும் அதிகசுகசௌக்கியங்களும் மனேபிரபலமும் புதன் கேந்திர திரிகோண பெலத்துடனிருக்கில் பலருக்கு மதிகார புருஷனுகியும் ஸ்திரீ மூலிய தனலாப போகவானுவன் குரு வாகில் சாஸ்திராதி வேத மூலிய சீவனமும் அதிக மேன்மைகளையும் அடைந்து வாப்படுவனென்றும் பிரபல சுக சௌக்கியங்களையுங் கூறுக பாவராகினும் பாவக்ஷேத்திரகெதியிலிருக்கில் பலவித கஷ்டநஷ்டமும் அல்பவித்தையுமுடைத்தாய் இலேசானசஞ்சார சீவனஞ்செய்வ னெனறும் சுக்கிரனுகில் பலவகைவித்தையினுல் மிகவு மேன்மைகளும் வசியனுகி சீவனமும் சிலகாலம் வியாபார மேன்மைகளும் தனதானிய லாபமும் சுகபலன் கணடக்குமென்றும் பாவ சுக்கிரனுல் ஸ்திரீ வம்சமாகச் சில வியாபார மேன்மைகளும் இஷ்ட சித்திகளும் சில அடிமையான சீவனமும் சனியாகில் மிகவு மேன்மையின்றி அடிமைத் தொழில் தாழ்குல முயற்சிகளும் சிலவகையினுல் மேன்மைகளும் இவைமூலமான சீவனமேன்மையின்றியு மறிக பாம்பு முதலியோராகி இவ்வித விராசிகளிலும் மேன்மையுள்ள கிரகத்துடனிருக்கில் சீவனமேன்மைகளும் உரித்தாய் வாழப்படுவ னென்றும் பாபராகியவர்களானுல் சிலவகை அல்பமானசீவன வடிமை மூலமாக சீவனஞ்செய்வன் சுபக்கிரகங்களானுல் அவ்வித வடிமை புகுந்து இருக்கினும் சாதகனுக்கு மேன்மையான தனபிரபல யோகமும் தனலாபமும் அவ்வித வகைமூலிய அடிமைக்குள் அதிகாரியாகி வாழப்படுவ னென்றும் மிக்க மேன்மைகளுந் தன தானிய

விர்த்திகளும் குடும்பத்தால் பலவகை வருத்தமும் குடும்ப மத்திம மேன்மை களாகவும் அடைந்து வரப்படுவ னென்று மறிக.

மேலே கூறிய கர்மாதிபதி முதலியவர் பிரபல சுபர் களாகியுங் கேந்திரகோண பலத்துடன்ராச்சிய சீவசரீராதிபதிபெலத்திருக்கினும் நோக்கினும்சாதகனுக்குபிரபலமான ராசத்துவ பூபதியாகி மேன்மைகளும்பிரபல சுகசௌக்கியங்களுமறிக அவைகள்தனக்குரிய குரு முதலிய மித்துரு சுபக்ஷேத்திர உச்சாதி பிரபலமான விடமாகின் தானியதன மேன்மைகளும் பிரபல பூமி தேசாதிபனுகி வாழ்வனென்றறியவேண்டும் இவ்வித இராசிகளிற் பெலமுற்றும் பிரபல விருத்தியுடனிருக்கினும் நோக்கினும்இவ்விதமான காலங்களில் பிரபலஇராசயோகத்துடன் தனதானிய பிரபல விருத்திகளும் சில ராச்சியாதிபத்தியம் உண்டாகுமென்றும் இவ்விதமான கருமாதிபதி சு- பெலனுக்குமேலாகிற் பிரபலவிருத்தியுடனும் பெலவானுகி. குரு ரவிக்ஷேத்திரங்களிலும் இருக்கினும் நோக்கினும் சாதகனுக்கு சில கிராமாதிபத்தியமான இராசாங்கமேன்மைகளும் தனதானிய விருத்திகளும் இராச வல்லபனுவன் பாபராஞலும் பாபக்ஷேத்திரந் திருஷ்டிகளுடனிருக்கினும் நோக்கினும் சாதகனுக்குப் பிரபலமில்லாதபூமிமுதலிய கிருமம் உண்டென்றும் பாபத்துவமாஞல் சாதகன் சில கிராமாதிகளுக்கு சொந்தமில்லாதவனுகி வாழப்படுவனென்றும் சுக்கிரன் பூரண சந்திரன் பெலத்துடன் இருக்கினும் நோக்கினும் சீவசரீராதிபர்களாகியு மேற்கண்ட இராசிகளில் பெலத்திருக்கினும் நோக்கினும் சாதகன் சொந்தமான கிரகங்களுடனும் சொந்த கிராமமேன்மையுடனும் வாழ்வன் மேற்கூறிய கிரகங்கள் பலமற்று இருக்கில் சாதகன் பூமிமுதலிய யாவையும் இழந்து விடுவனென்றும் பலவகைவருத்தமும் பலவித கஷ்ட நஷ்டங்களு மடைவன். குசன் புதனுகில் பூர்வார்ச்சித விர்த்தியான பூமி கிராமமாஞலும் பலவித இருணம் பூர்வார்ச்சிதத்துடன் உண்டாகு மென்று சனி பாம்பு முதலியோர் இருக்கினும் நோக்கினும் சாதகனுக்கு பூமி முதலிய பூர்வார்ச்சித குறைவும் பலவகை நஷ்ட துன்பமும் பொருள் சேதமும் பலதனப்பொருளுண்டாகாமல் தரித்திரத்தை யடைவ னென்றும் நஷ்டமும்பலவகை வருத்தமும் மனக்கவலைகளும் மத்திம பலனடக்கும் சாதகனுக்கு பலவிதப் பொருட்களி ருணத்துக்குள் மூழ்கி விடுமென்றும் சீவசரீராதிபர்கள் சனி முதலிய பாபராகிய சுப பெலன் பெற்றிருக்கினும் நோக்கினும் சாதகன் முன் காலம் இருணசம்மந்த இராச்சியக்குறை

வும் முன்னுண்டாகிப்பின் பிரபலயோக வானுவனென்றறிக முன் கூறிய சிவசரீராதிபதி சுபராகிபாபத்துவ க்ஷேத்திரமல்லது பாப வீட் சணிய கெதியாகினும் முன் பூர்வார்ச்சித ராச்சியமூலமானது முன் பிரபலத்துடன் இருந்து பின் வயது காலம் இருணமுதலிய தினுலும் சத்துரு இராசாக்கள் முதலிய அகிருத்திய வகைகளாலும் பலவித விவாதங்களாலும் பொருளழிந்து திரிந்து பலவகை வருத்தமடை வனென்றும் கூறவும் இவர்களானேர் பாபரல்லது சுப ராகினும் பிர பலத்துவமான பெலத்துடைய சரீர சிவாதிபதிகள் பாபராகி கெதி யானுல் பிதுர் பூர்வார்ச்சித பூமி இவைகளாற் பலவித் பிதுரார்ச்சி தம் பூர்வார்ச்சிதம் முதலிய வார்ச்சிதங்களுந் தனதானியமும் நஷ் டமும் இருணமும் பலவித மேன்மைகளுங் குறைந்து பின் யோகவா னுகி மிகவும் பிரபல சுக சௌக்கியங்களும் போன பொருள் பூமி முதலாகிய மேன்மைகளுங் கிடைக்கும் இஷடசித்திகளும் அப்பொ ருட்களைத்தானே திருத்தி வாழ்வனென்றும் மிக்கமேன்மைகளையும் சுயார்ச்சித முண்டாகு மென்றும் சொல்லப்படும் என்பதாம்.

இலாபவிரய பலன்கள்.

சுக்கிரனையும் லாபாதிபதியான பதினேரா மிடத்ததிபதி சுக- மிட மிவைகளையும் இவைகளுக்கு பதினேராமிடத் ததிபதி யெந்த இராசியிலிருக்கிறுனே அவ்வீட்டதிபனின்றதைக் கொண்டு லாப முரைக்க வேண்டும் சனியும் லக்கினத் பனிரெண்டாமிடம் அந்த இடத்ததிபதி இவைகளுக்குப் பனிரெண்டாமிடத் ததிபதி நின்ற இராசிநாதனைக் கொண்டு விரயபலன்களையுங் கண்டறியவேண்டியது

பதினேராமிடத்ததிபதி நின்ற யிராசிநாதன் லாபத்திற்குச் சிவ னென்றும் லாபாத் லாபத்துக்கதிபதி நின்ற இராசிநாதன் சரீரமென் றும் பெயராகும் இவ்வித பெலாபெல மூலமாக லாபபாவத்தையும் பன்னிரண்டா மிடத்ததிபதி நின்ற யிராசிநாதன் எந்தவிடத்திலிருக் கிறுனே அவை விரயசிவனென்றும் பன்னிரண்டுக்குப் பன்னிரண்டா மிடத்ததிபதி நின்ற இராசிநாதனைக்கொண்டு விரய சரீர மென்றும் பெயராகும் குரு வசாத் பனிரெண்டா மிடத்ததிபதி நின்ற யிராசி நாதனைக் கொண்டுள்ள ஸ்தானுதிபதி சிவனுதி வுத்தியோகங்களுக்கு ச்சிவனென்றும் குரு வசாத்லாபாதிபதி நின்ற ஸ்தானுதிபதி சீவன விஷயாதிகளுக்கு சரீர மென்றுங் காணவேண்டியது.

இவ்விதம் முன் கூறிய லாபஸ்தானமதிபதி சீவசரீராதிபரிவர்கள் பெலத்துடன் கேந்திரகோணந் தனக்குரிய சுபபெல க்ஷேத்திரங்களில் இருக்கினும் சுபஸ்தலவாசராகியும் பெலத்தும் சீவசரீர ஐக்கியபத்திய பலன்களுட னிருக்கினும் நோக்கினும் இதற்கு விரயாதிபதி பெலமற்று மிருக்கில் சாதகனுக்கு தனவிருத்தியும் பிரபல சுகங்களுடன் ரொக்க தனமுடையவனுகி பிரபல கீர்த்தியடைவ னென்றும் அபகிருத்திய செலவில்லாம லிருக்கப்படுவனென்றும் மேன்பாடுகளும் முண்டாகும் அவர்கள் சுபராகினும் பாபபெலத்துடனிருக்கினும் நோக்கினும் சீவசரீராதிபதியாகிய லாபாதிபதிகள் பெலமற்று இருக்கினும் நோக்கினும் பலவகையான சீவனத்தாழ்மையும் பொருளச்சேதமும் பலவகை வருத்தங்களும் இருண சம்மந்தமான வருத்தமும் தரித்திரனுகி பரதேசவாசியாகி விடுவன் விரயாதிபதி சுபனுகினும் லாபாதி சனி முதலிய பாபசமான முடையவர்களாகினும் பெலமற்று இருக்கினும் பூர்வார்சித இருணத்துடனுந் தனலாபமில்லாமல் விரயமே அதிகப்படும் பல இடசஞ்சரிப்புகள் உண்டாகுமென்றும் மனக்கவலைபடையவன் லாபவிரயாதிபதி ஒருவனுகியும் பாவரானல் பொருளுமில்லான் செலவு மில்லான் மற்றய கிரகங்களாகிச் சுபராகினும் நோக்கினும் மிருக்கினும் சத்விஷய விரயமும் உண்டாகும் பிரபலமான வியாபாராதி பலவகைச்செல்வ யோகவானுகினும் மனக்கவலையுடனுறைவன் என்பதாம்.

லாபவிரய கணிதங்களாவன.

லாபஸ்தானத்தையுடைய கிரகபெலனும்சீவசரீராதிபர்களுடனும் லாபஸ்தானுதிபதியுடனும் உரிய பெலாபெலங் கிரகங்களுக்குரியவெண்களையும் இராசியெண்களையும் அவரவர்களுக்கு உச்சவிராசியாகில் பெருக்கியும் ஆக்ஷி இராசியாகில் ௩-ல் உ-பங்கு எடுத்தும் நட்பாகில் அதற்குரிய பெல்னில் அரைப்பங்கெடுத்து கிரகபெலவெண்ணிற் கூட்டியும் பகையாகில் நாலில் ஒருபங்கும் நீசமானல் கிரகவெண்ணிலேயே முழுவதையுந் தள்ளுபடிசெய்து கூட்டியும் கொண்ட கிரகவெண்களை கூ-ல் பெருக்கி க0-ல் கழித்த சேஷம் லாபம் மேற்கண்ட மொத்தத்தொகையை கூ-ல் கழித்தசேஷம் திசையில் வந்த ஈவை ௫-ல் பெருக்கி ஒன்பதில் கழித்த சேஷம் புக்த்திகளிலும் லாப மதிகமென்றும் விரயாதிபதி முன்கூறியமூலமாக சீவசரீராதி பெலன்களையுங்கூட்டி கூ-ல் கழித்த சேஷம் திசாபுக்தியில் விரயமதிகமென்றும்இதில் விரயஸ்தான

மதிபதி சீவசரீராதிபதி யவர்களில் பெலனெடுத்தும் சம்மந்த பல முத லியதை ஒன்றுசேர்த்து ப-ல் பெருக்கி கக-ல் கழித்த சேஷம் மேலே திசாபுக்தி காலங்களில் இவ்வளவு மிச்சமான பங்கு விரயமென்றும் லாபமெத்தனை பங்கோ அதற்கு விரயஞ் சாஸ்தியானுல் கடனுடையவ னென்றும் லாபஞ் சாஸ்தியாகவும் விரயப்பங்கு கம்மியானுல் ரொக்க தன முடையவனென் றறியவேண்டும் மேற்கண்ட விரய சீவ சரீரமூல மான திசாபுக்தி காலங்களில் தேசாடன முயற்சி வெற்றிகளும் பலவித சுக பலன்களுங் கொடுக்குமென் றறியவேண்டுவ தென்பதாம்.

மகரலக்கினம்.

குணகுணபலன்கள் சொல்லுவதற்குமுன் திசாபுக்தி யோகாவயோக பலன்களாவன.

மகரலக்கினத்தில் ஜெனித்த ஜாதகனுக்கு சுக்கிரன் புதன் இரு வர்களும் யோக காரகர்களென்றும் அவ்விதம் யோககாரர்களானுலும் அவர்கள் திசையிலொருபாகத்தில் அல்பக் கெடுதியான பலன்களைக் கொடுக்கப்படுவர்களென்றும் புதன் சுக்கிரன் இருவரில் புதன் விருஷ பம் கன்னி கும்பம் இவைகளிலும் சுக்கிரன் விருஷபம் மீனம் கடகம் மகரம் இதிலிருக்கில் இயல்பான ப்ராபல்ய யோககாரகர்க ளென்றும் அளவிடக்கூடாத பிரபலயோகங்களையும் செயத்தையுங் கிரகவாகனபூமி கன்று காலி நிதி நிக்ஷேபம் புத்ர களத்திர இராஜயோக வதிகாரங்களை யளவிடாமற்கொடுப்பார்கள் புதன் மாத்திரமாகில் அரைவரிசை பலன் தான் கொடுக்கப்படுவனென்றும் மிருதியான பிரபலமடையான் இரு வருங்கூடி லுண்டாகுமென்னினும் இதிலும் மகரம் விருஷபம் கடகம் துலாம் கும்பம் இவைகளில் மேற்கூறியவ ரிருக்கினுமல்லது. அவ்விராசி களில் தனித்தாலும் அவ்வித இடங்களான து அவர்களுக்கு உச்சகேந்திர கோண சுபக்ஷேத்திரமாகில் அதியோகத்தையும் குஜன் சந்திரன் சனி இராகு குரு இவ்வித புக்திகளிலுங் கொடுக்கப்படுவர்கள் இன்னமும் குசன் சந்திரன் கேது சனி இவர்களின்றிசைகளிலும் இவர்கள் மகரம் கும்பம் மேஷம் துலாம் கடகம் கன்னி முதலிய சுபக்ஷேததிர கெதியாகி பகைநீசமின்றி சுபபெலத்துடனிருக்கினும் அவர்களின்றிசையில் சனி இராகு திசை பின்பாகமும் குசன் கேதுவும் பின்பாகமு முன்பாகமும் சந்திரன் முழுமையும் அதியோகமான இராசயோக பலனைக்கொடுக்கப்

படுவர்களென்றும் பலவித தனதானிய சம்பத்தும் கிரகவாகனம் பூமி இராஜயோகமுதலிய மேன்மைகளேயும் சனி இராகு சுக்கிரன் புதன் குரு சந்திரன் சுயபுக்திகள் நீங்கிய இவ்வித புக்திகளில் பிரபல இராச யோகங்கொடுக்கப்படுவர் களென்பதாம் மற்றைய புக்திகளிலும் பாகங் களிலும் பலவித விவாதம் இரரசவிரோதம் பொருள் சேதம் தேகநோய் கண்டம் பலவகை துக்கசோகவரிஷ்டம் களத்திரபுத்திராதி குடும்பகுத கம்முதலிய கஷ்டபலன்களேயே கொடுக்கப்படுவார்களென்றறிக. இவ் வித காலங்களே நிதானித்து உரைக்கவேண்டும்.

அவயோகதிசைக ளாவன.

சூரியனுடன் அல்லது சிம்மம் கும்பம் மிதுனம் துலாம் ௩-௬-அ-கஉ-கக இவ்வித இடங்களிலாவது பகை பாபபெலத்தோர்களானவர் திசைபுக்திகளிலும் சனி திசை பின்பாகமும் பாம்புகளின்திசைகள்முன் பாகமும் குசன்றிசை பின்பாகமும் புதன் றிசையில் மற்றியபாக முதன் பாகவிவைகளிலும் பலவிதமான பொருள்சேதம் கலகம் துக்கசோகம் பொருள்நஷ்டம் ஸ்தானசஞ்சாரமும் பலவித கஷ்டம் மனோதேக ரோக பாதை இருணமிவைகளேக்கொடுக்கும் குருதிசையிலும் விசேஷித்து கொடுக்கப்படுமென்றும் அவயோகத்தன்மை முன்னிருக்கும் நன்மை யானவையும் சீவனுதிபொருளுங் கைவிட்டிழக்கப்படுமென்றும் இவர்க ளேசுபராகில் விசேஷயோகபலன்களாக நடந்துவரப்படுமென்றும் இதில் சுக்கிரன் ரவி இராகு கேது சனி இவர்களின் புக்திகளிற் குறைவானநஷ் டபலன்கள் அடையப்படுமென்றுங் கண்டறிந்துக் கொள்க.

சாதகவரிஷ்டம்.

குரு பாம்பு குசன் ரவி சனி இவ்வித திசையிலும் பாம்புஇரவி சுக் கிரன் சந்திரன் குசன் சனி இவ்வித புக்திகளிலும். பலவகை துக்கமும் ஸ்தான பிருஷ்டம் பொருள்சேதம் தேகரோகாதி கண்ட துன்பம் இரு ண துக்க கிலேசம் இராஜதெண்டனேகள் சீவனுதிக் குறைவு பல கஷட பலன்கள் அந்தந்த திசாநாதனுடைய காலங்களி லுண்டாகும் ௩-௬-அ-கக-கஉ-பகை நீசாதி சத்துரு பாப க்ஷேத்திரங்களி லுற்றோர்களு மவற்றின் அதிபதி இவர்களின் திசாபுக்திகளி லுற்றோர்களு மவற்றின் அதிபதி இவர்களின் திசாபுத்திகளிலு மிதே பலனைக் கொடுக்கப்படுமெ

ன்றும் பலவகை வருத்தபலன் நடக்கும் மற்றப ஸ்தானநிபதி காலங்களில் விசேஷ உத்தம சுகபல நடக்கு மென்றும் அறியுவேண்டுமென்பதாம்.

மாதுரு அரிஷ்டம்.

இரவிதிசை சுக்கிரன் இராகு சனி புத்தியிலும்.
சந்திரன் குசன்றிசை பாம்பு குரு சனியிலும்.
குருதிசை பாம்பு சுக்கிரன் சனியிலும்.
சனிதிசை சுக்கிரன் மதி பாம்பிலும்.

சுக்கிரன் பாம்பு திசைகளில் சந்திரன் பாம்பு சனி குரு புத்திகளிலு மாதுரு வரிஷ்ட துக்க கருமமும் வம்ச கரும சூதகம் பீடை பலவிஷய கஷ்ட பலன்கள் கொடுக்கப்படு மென்று மறியவேண்டு மென்க.

பிதுரு அரிஷ்டம்.

இரவி குருதிசை பாம்பு சனியிலும்.
சனி இராகுதிசைகளில் சுக்கிரன் ரவி குருவிலும்.
சுக்கிரன்றிசை குசன் பாம்பு சனி புத்திகளிலும்.

பிதுரு கருமம் வம்சதுக்க க்ஷபம் பொருள் சேதம் இவ்விதகஷ்ட பலன் நடக்கும்.

சகோதர வரிஷ்டம்.

இராகுதிசை குசன் கேது குரு புத்திகளிலும்
குருதிசை புதன் ரவி குசபுத்திகளிலும்.
கேது குசன்திசைகளில் சுக்கிரன் ரவி சுயபுத்திகளிலும்.
சுக்கிரதிசையில் குசன் பாம்பு சனி குருவிலும்.

சகோதிர துக்க வரிஷ்டம் பலவகை வருத்தங்கள் மனக்கவலை மேற்கண்ட சகோதரி சகோதர வழிகளில் கஷ்டம் பொருள் சேதாதி பலவகை வருத்தமும் சத்துருக்களால் துன்பமும் பரஸ்தல சஞ்சாரம் தனக் குறைவுகளும் இவ்வித வருத்த பலன் நடக்குமென்றுங் கண்டறிய வேண்டும்.

களத்திர வரிஷ்டமும் லாபமும்.

சுக்கிரன் திசையில் சனி புதன் சந்திர னிவ்வித புக்திகாலங் களத்திர லாபமுண்டாகும் ரவி குசன் குரு புக்தி களத்திர வரிஷ்டம் சந்திரன் திசை சுக்கிரன் புதன் குரு களத்திர லாபம் சனி பாம்புகளில் களத்திர தோஷம் பாம்புகள் திசை பாம்புகள் சுக்கிரன் சனி களத்திர பீடையும் குரு சந்திரன் புதன் களத்திர லாபம் சனிதிசை புதன் சுக்கிரன் சந்திரனில் களத்திர லாபம் சுக்கிரன் ரவி பாம்புகள் களத்திரதோஷமும் புதன்திசை சுக்கிரன் சந்திரன் குரு இவர்களில் களத்திரலாபம் பாம்பு சனிகளில் களத்திர பீடையான காலங்களென்றும் அறியப்பட வேண்டும்.

புத்திரலாப வரிஷ்டகால திசாபுக்திகளாவன.

சுக்கிரன் திசையில் சந்திரன் இரவி குரு பாம்பு புத்திகளில் புத்திரலாப முண்டாகும் புதன் குசன் கேது இவ்விதபுக்தி புத்திர வரிஷ்டமுண்டாகும் இரவிதிசை பாம்பு சனி குரு இந்த புக்தி புத்திர தோஷமுண்டாகும் பாம்பின்திசை குசன் சனி புதன் இந்த புக்தி புத்திரவரிஷ்டமும் சுக்கிரன் சந்திரன் இவர்களின் புக்திகாலம் புத்திரலாபம் நேரும் சனிதிசை குருதிசை பாம்பு மதி குரு புதன் இவைகளில் புத்திரலாப யோகமும் இரவி குசன் புதன் பாம்புகளில் புத்திரவரிஷ்டங்கொடுக்குமென் றறியவும்.

மகர லக்கின குணகுண பலன்களாவன.

மகர லக்கினத்தில் பிறந்தவன் தனக்குத் தெரியாததாகவும் காணுவிடத்திலும் மச்ச மறுவுடையவனென்றும் நேத்திரம் நிகளமுடையவன் வாசனை புஷ்பாதிகள்மேல் அதிக பிரியமுடையவன் ஸ்திரமான புத்தியுடையவன் அபிமானமுள்ளவன் சுகசரீரமுடையவன் சிகப்பு சரீரன் ஸ்திரீகள் மேற் பிரியன் பக்ஷி சீவவஸ்துக்களை சங்கரிக்க யெண்ணமுள்ளவன்.

க0-ல் சுரம் முதலிய பாதையுண்டாம் ச-அ-௲உ-அன்ய தேசவாசம் ௲எ-ல் சர்பாதி விஷபாதை யுண்டாகும் ஆகையாலிந்த மகரலக்கினத்தைச் சுபர்கள் நோக்கில் ஆயுள் சுஎ-வரை யுள்ளவனென்றும் கண்டறிய வேண்டும் தைமாதம் கிருஷ்ணபக்ஷம் பஞ்சமி உத்திரட்டாதி

ஞாயிற்றுக்கிழமை காலையில் பரமசிவனுகிய கடவுளடியினையைச் சேருவ னென்றுங் கண்டறிய வேண்டுவனவாம்.

மகர லக்கினத்தின் பிறந்தவர்களுக்கு முதலாவது ஆயுர்பாவ பலன்களாவன.

சனி இரவி புதன் சுக்கிரன் குரு இவர்களையும் மகரம் சிம்மம் தனுசு இவ்வித இருசி கிரக பலன்கள் மூலமாக பலன்சொல்ல வேண்டுவதாம்.

லக்கினதிபதி லக்னம் அஷ்டமாதிபதி பாக்கியர்திபதி ௯-மிடம் ௰-மிடத்ததிபதி ௰-மிடம் இவைகளைக்கொண்டு ஆயுர்ப்பாவ பலன்கள். கூறவேண்டியதென்பதாம்.

சனி இலக்கினதிபதி யிவரிருக்கிற ஸ்தானதிபதி சீவனென்றும் எட்டுக்கு எட்டாமிடமான மூன்றுமிடத்ததிபதி நின்ற ஸ்தானதிபதி சரீரமென்றும் பெயரரகும் சீவசரீருதிபரும் சனி லக்கினதிபதிஇவர்கள் ௧-௯-௰ இவைகளிலும் மகரம் துலாம் விருஷபம் இந்த இராசிகளிலும் பெலவானுகியும் சீவசரீருதிபதி பிரபல மாகியும் கேந்திர கோண சுப க்ஷேத்திரபெலத்துடன் சீவசரீருதிபதி சனி குரு இவர்கள்சரஞ்சரமிவை களாக மிகவு மேன்மையுடனிருக்கினும் நோக்கினும் சாதகனுக்கு மேன் மையான ஆயுளானது ௲ ௱-வரையுடையவனென்றும் பிரபலமான இந்த நான்கு கிரகங்களுஞ் சுபபெலத்துடனிருக்கிற்றுன் மேற்கண்ட வருஷம் ௱-க்கு மேற்பட்ட ஆயுளென்றும் பெயராகும்.

அவ்விதமான கிரக மூலமாக மிகவு மேன்பாடுகளும் இராச சன் மான வெகுமான முடையவனுகி வாழப்படுவ னென்றுங் கண்டறிய வேண்டியது இந்நால்வர் தீர்த்தானபகை நீசாதி பாபரல்லது விரோதிக ளாகி ரவி சனிகூடி யல்லது சமசப்தமஸ்தானங்களிலும் குருவுடன் சுக் கிரனும் கேந்திரகோண பாபரும் ௩-௯-அ-ல் சுபரும் அவை பாபக்ஷே த்திரம் பகை நீசர் வீடானுலும் பலவகை வருத்தமும் பொருள்சேதம் தனதானிய நஷ்டம் பாலியத்திலயே மாதம் ய-வருஷம் ௰-க்குள சா தகன் மாரகமாவனென்றுங் கண்டறிய வேண்டியது.

மேற்கூறிய சீவசரீருதிபதிகளும் லக்கினதிபதிசந்திரன் முதலியோ ர்கள் கேந்திர கோண ஸ்தானமாகிய ௪-௭-௰-இவைகளானது மேஷம் தனுசு கடக மிவைகளாகியும் சரவிருசி கதியிலயே இருக்கினும் சுப

க்ஷேத்திர சுபபெலத்துட னிருக்கினும் நோக்கினும் பெலவான்களானு லும் சாதகனுக்கு மேன்மையான ஆயுள் ௵ ௮௪-வரை யென்றும் அ வ்விடம் ஸ்திர விருசியாகியும் பகை நீச பாபக்ஷேத்திரமானாலும் அசுப பாப சம்மந்தமாகினும் அவை மேஷம் சிம்மம் விருச்சிகம் முதலிய பாபக்ஷேத்திர மானாலும் சீவசரீருதிபர்களி லொருவர் பெலமற்று இரு க்கினும் சாதகனுக்குப் பலவகை பாலாரிஷ்டாதி பாதைகளும் வரு ஷம் ௩௨-க்குள்ளாகவே மாரகமாகி விடுவனென்றுங் கண்டறிக.

அவை பெலனற்ற விடம் உபயமாகில் ௵ ௪௨-க்குள் ஆயுள்தீர் க்க மென்றும் அவை ஸ்திரமாகி சீவசரீருதிபரை யல்லது லக்கினாதிபதி யை குருகூடி யல்லது குருவே யானாலும் இரண்டு சுபர் பெலத்து கேந் திரகோணமானாலும் ஜாதகனுக்கு ௵ ௭௨-வரை யாயுளென்றும் அவ் விதஞ் சுக்கிரனாகில் ௵ ௬௬-வரை ஆயுளென்றும் புதனாகில் ௵ ௫௪- வரை யென்றும் பூர்ண சந்திர பெலனாகில் ௵ ௱-என்றும் க்ஷீண சந் திரனாகில் பாலியம் ௵ ௨௫-க்குள்ளாகவே ஆயுளென்றுங் கண்டறிய வேண்டியது. இவ்வித சுபபெலக்காரர்கள் பாபிபாகி பகைநீச பாபக்ஷே த்திர கெதியுடன் ௩-௬-௮-௧௧-௨-இவ்வித க்ஷேத்திரத்திலும் விருச்சி கம் மிதுனம் சிம்மம் தனுசு மகர மிவ்வித இராசிகளாகி பகை நீசாதி பாப பெலத்துடன் கூடி நிற்கினும் நோக்கினும் பாம்பு குசனாகியு மல் லது அவர் சமான பாபிகளாகிப் பகைவருடனுற்றும் சீவசரீருதிபதியும் அவருற்ற ஸ்தானம் ஸ்தானாதிபதி இவர்கள் பெலமற்று இருக்கினும் பாப கெதியுடன் தனக்கு இணையில்லாத பாவரைக்கூடினாலும் சாதகனு க்கு பாலியவயதிலும் பாலாரிஷ்டம் உள்ள வயது ௭-மாதம் ௭-க்குள் ளானதிலும் ஸ்திர விராசியில் பெலமற்று இருக்கில் மேற்கண்ட வயசு மாத நாளுக்குள்ளாகவே மரணமும் ரவி வசாத் சீவசரீருதிபர் பாபபெல த்துடன் ௮-௧௧-௭-ல் அல்லது ௬-ல் இருக்கின் மேற்கூறிய பாபக்கோ ளாகின் சாதகன் பிதுரு முதலியவர்கள் அவரு மவர் வம்சமும் தனம் இழந்துவிடுவனென்றும் சந்திரன் மாதுரு சீவசரீருதிபதி வசாத் மேற் கூறிய ஸ்தானங்களில் பகை பாவர்முதலியோ ரிருக்கினும் நோக்கினும் மாதுரு வம்சாதி தாய் முதலியோர்களுக்கே மரணாதி துக்கமும் பலவித வருத்தமும் சோகத்தையும் அனுபவிப்பனென்றுங் கண்டறியவேண்டி யது. இவைகளும் மேற்கூறிய இராசிகளும் சரமாகி சீவசரீர வாயுளாதி பர்களும் குருவும் பெலத்துடன் இருக்கினும் மேற்கூறு தொழிந்த இ ராசிகளானாலும் சுபபெலத்துட னிருக்கினும் நோக்கினும் ௵ ௯௬ -

வரை வாயுளும் ஷ கிரகங்கள் பாப பெலத்துடன் துர்த்தான அதிகராய் சுப ஞொருவருகி இருக்கில் ஷூ ௩௨—வரை யென்றும் இருவகை சுபருகில் ஷூ ௪௬—யென்றும் சுபர் மூவருகின் ஷூ ௩௮ - யென்றும் நான்கு பெயர்களாகின் ஷூ ௬௬—வரை யென்றும் பாப சம்மந்தஞ் சேர்ந்தாலும் அல்லது பார்த்தாலும் பாலியமான ஷூ மாதம் ௩—க்குள்ளாகவே மரண மாவனென்றும் பலவகை கஷ்ட நஷ்ட பலன் நடக்குமென்றுங் கண்டறிய வேண்டியது. அவை உபய விராசிகளாகில் பெருஞ் சுபபலன் ஒன்றுக்கு ஷூ ௩௪-யென்றும் முக்கால் ஆகில் ஷூ ௪அ-யென்றும் ௨-பெலனுகில் ஷூ உ௪-க்குள் ளென்றும் ௮-பெலனுகில் ஷூ ௧௨—க்குள் யென்றும் கண்டறியவேண்டியது முழுப் பாவராகில் ஷூ ௧௬ மாதங் ௧௬—க்குள் ளென்றும் முக்கால் பாபருகில் தினம் ௨௨-அல்லது ௨௨-மாதத்துக்குள்ளாகவே மரணம் யென்றும் அறை பாபருகின் ஷூ ௨ ஷூ ௧0-க்குள்ளாகவே வாயுட் கண்டமும் இருவித பாபர் கூடின் சொன்னகாலத்தில் பாதிகுறைந்துக் கண்டநாள் மாதம் வருஷங்களுக்குள் சாதகன் மரணமாகி விடுவனென்றும் அறியவேண்டும்.

ஆயுர்பாவ கெணிதங்களாவன.

ஆயுர்சீவசரீருதிபதியுடனும் சனி அட்டமம் அவ்வதிபதி குரு லக்னம் அவ் வதிபதியிவர்களுடனும் ௬-௧0-க்குடையவர்களுடனுங்கூடிய கிரகபெல சுபாசுபத்துக்குரிய வெண்களை இராசியெண்களால் முன் போலவே பெருக்கிக்கண்டவைகளை ஒன்றுபடுத்தி ௱—ல் கழித்த சேஷம் ஆயுளென்றும் மேற்கண்ட யெண்களை தனித்தனி ௬-ல் கழித்த சேஷமும் வந்த ஈவை ௫-ல் பெருக்கி ௬-ல் கழித்த சேஷமும் உள்ளதிசா புக்தி காலங்களில் தேகரோக கொண்டவுபாதிகள் நேரிடுமென்றும்கடையுள்ள திசாபுக்திகாலம் மாரகம் கொடுக்கப்படுமென்றும் மனதுக்கு வருத்தமும் மனக்கவலைகளும் உண்டாகு மென்றறிக.

உ-வது தனகுடும்ப வாக்கு நேத்திராதி பலன்களாவன.

சனி இரவி குரு இவர்களையும் இவர்களுக்கு இரண்டாமிடத்ததிபதி நின்ற இராசிநாதனையும் இரண்டாமிடத்தையுங் கொண்டு தனபலனுரைக்கவேண்டியது.

குருவுக்கு இரண்டாமிடத்ததிபதிநின்ற இராசிநாதன் தனவகைக்கு சீவனென்றும் இரண்டாமிடத்ததிபதிக்கி இரண்டுக்குடையவன் எந்த

வீட்டிலிருக்கிறனோ அந்த இடத்ததிபன் சரீரமென்றும் இரவி வசாத் இரண்டாமிடத்ததிபதி நின்ற இராசிநாதன் நேத்திரபாவத்துக்கு சீவனும் சுக்கிரன் வசாத் இரண்டாமிடத்ததிபதி நின்ற இராசிநாதன் சரீரமென்றும் பெயராகும் புதனுக்கு இரண்டாமிடத்ததிபதி நின்ற இராசிநாதன் வாக்கு பாவத்திற்கு சரீரமென்றும் குரு நின்றஸ்தானாதிபதி சீவனென்றும் சொல்லப்படும்.

இவ்விதமறிந்தபின் அந்தந்த பாவங்களுக்குரிய சீவசரீராதிபர்கள் பெலவான்களாகியும் கேந்திரகோண கெதியுடனும் சீவசரீர ஸ்தானங்களுக்கு கேந்திரகோண சுபக்ஷேத்திரத்திலும் உ-கஉ-இவ்விரண்டு ஸ்தானங்களிலும் குரு சந்திரன் முதலியோரிருக்கினும் சுபபெலத்துடன் வேறுயெவ்வித கிரகமிருக்கினும் பெலவான்களாகி நிற்கினும் நோக்கினும் ஸ்தானாதிபதி சுபராய் தனக்குரிய மித்துரு சுகக்ஷேத்தி வாசஞ் செய்யினும் உடனுற்றுவல்லது நோக்கமுடையவர் குருமுதலிய சுபராகின் விசேஷவாக்கு பலிதம்செயம் குடும்ப விர்த்திகளும் பலவிதமான தனலாப யோகசாதகனாகியும் மிகவுமேன்மையுடன் வாழ்ந்து வரப்படுவனென்றறியவும்.

பாபபகை க்ஷேத்திரகெதியிலும் பெலமற்று இருக்கினும் நோக்கினும் சீவசரீராதிபர்கள் தனக்குரிய சுபக்ஷேத்திர மில்லாமல் பகைகளும் பாபமத்திய பாபக்ஷேத்திரமாகினும் சீவசரீராதிபர்களே வெவ்வேறாகி விரோதமுடையவரானாலும் மனதுக்குப்பலவகை துக்கமும் தனதானிய விருத்தியின்றியும் மனக்கவலையுடனுங் குடும்ப க்ஷயத்துடனும் பலவகையான வருத்தமுதலியவகைகளை யனுபவிக்கப்படுவனென்றும் அந்தந்த பாவங்களுக்கும் அபாவமுண்டாகு மென்றறிக.

இனி ஒவ்வொரு விஷயங்களையுந் தனித்து ஆராய்ந்து ஸ்தான கிரகமூலமாகக் கூறப்படும்.

மேற்கூறிய தன சீவசரீராதிபதிகள் பெலவான்களாகி க-எ-கூ-இவ்வித இடங்களிலுங் கும்பம் கடகம் தனுசு இவைகளிலிருக்கினும் இவ்விடங்களிலிருக்குங் கிரகங்களுக்கு இரண்டாமிடத்ததிபதி நின்ற இராசிநாதர்கள் கேந்திரகோண சுபக்ஷேத்திர கெதியுடனிருக்கினும் தனஸ்தானாதிபதி பெலத்து மிருக்கினும் மேற்கண்ட சுபபெலன்களோடு பெருஞ்சுபர்களாகினும் உச்ச சுக்ஷேத்திராதி வீடுகளில் பெலன்பெறினும்சாதக

னுக்கு மேன்மையான கோடியாந்திரதனவந்த யோகவனுவனென்றும் இவையில் ஐந்துகிரகங்களும் பிலக்காமல் அபெலராக இவருவரும்மற்ற மூவரிலிருவர்சுபராகி சீவசரீராதிபதி பெலக்கினும் சாதகனுக்கு அநேக தனமும் வாக்கு நாணயமும் குடும்பவிர்த்தியுடன் வாழ்வன் சகல பாக்கியமுங் கைகூடிவருமென்றும் மேற்கூறிய கிரகங்கள் சுபபெலனுன சந்திரன் இரவி சுக்கிரனிவர்களாகி பெலத்து மேஷம் விருஷபம் கடகம் சிம்மம் தனுசு மீனம் இவைகளில் பெலவான்களாகி இவர்களே சீவசரீருதிபர்களாகி கேந்திரகோண இராசிகளிலிருக்கினும் சுபரைக்கூடினுலும் பெலவான்களாகி வாழினும் சாதகனுடைய குடும்ப விர்த்தி இன்றி லக்ஷாந்திரத்துக்கு மேற்பட்ட தனமுள்ளவனுவன் அதிக இராசயோக வல்லப முடையவனுகி வாழ்வன் யென்றும் கீர்த்திமூர்த்தி புகழ்ச்சிகளும் மிகவும் மேலானேனுகி வாழ்வன் சனி குசன் முதலியபாவர்கள் இவ்வித சுபபெலத்துடை யவர்களாகி இருக்கில் மத்தியகாலத்தில் தன விர்த்தியுடனும் குடும்பம் பலவாரான விருத்தியுடனும் லக்ஷாந்திர தனவந்தனுவ னென்றும் அவர்கள் பெலத்துடையவர்களாகியுங் கேந்திர கோண பெலத்துடன் உ-ரு-சு-கூ-கக-கஉ-இந்த இடங்களிலிருக்கில்சகஸ்திரம் யென்ற சங்கையிலுள்ள தனவந்தனென்றும் அவர்கள் பெலவான்களாகியுங் கேந்திரகோண கெதியுடனிருக்கினும் நோக்கினும் சாதகன் சகஸ்திராதி தனமுடைய னுவனென்றும் அவை பாபக்ஷேத்திரமானுலுஞ் சீவசரீருதிபர்கள் புதன் குரு சனி யானுலும் கூ-க-ரு-இவைகளிலிருக்கினும் சகஸ்திராந்தா தனமுடையவனுவன் இவர்களே பபார்களாகியும் சீவசரீருதிபர்கள் பெலமற்றுங் கேந்திரகோண கெதியில்லாத விடத்தில் சு - அ - கக - கஉ இவ்வித இடங்களிலிருக்கில் பலவித இருணமும் பூர்வார்ச்சித தனமும் அழியுமென்றும் இரவி சந்திரன் பாம்புகள் சீவசரீராதிபராகியல்லது அவருடன்கூடி உ-ரு-கக- குரு வீடு அல்லது குருவுடன் கூடினுலும் பாபர் மத்தியானுலும் பலவகைப் பூர்வார்சித தனமுமிருந்தா லழிந்துவிடும் குரு புதன்குசனுகிப் பெலமற்றிருக்கில் தன்னுலும் உடன் பிறப்பு ஞாதியோருலும் பொருளழிந்து விடுமென்றுஞ் சுபர் திருஷ்டியல்லது சுபர் வீட்டிலிருக்கின் அவ்வித தனம் கிடைக்கிறது பலவகைவாதத்தின் பேரிலும் கிடைக்கும் குடும்பமான இரண்டாமிடத்ததிபதி வசாச்சீவசரீராதிபர்களும் பெலத்துடன் குரு சுக்கிரன் சந்திரன் சுக்ஷேத்திர விராசி கிரகங்களுடன் கேந்திரகோண பெலமுள்ள சுபஸ்தானங்களாகி இருக்கினும் நோக்கினும் சாதகனுக்கு குடும்ப விருத்திகளும் பிரபல சுகசௌக்கியங்களும் வாக்பலிதமு முண்டாகும் இதில் சீவசரீ

ராதிபர்கள் பெலமற்ற உ-ரு-சு-அ-கக-கஉ இவ்வித இடங்களுள் தனக்கு இணையில்லாத பகை இடமாகியும் பாப க்ஷேத்திரங்களில் பெல மற்றிருக்கில் குடும்ப மியாதொரு விர்த்தி இன்றி வரவர க்ஷயமும் பலவகை வருத்த பலன்களேயுங் கஷ்டங்களேயும் அனுபவிக்கப் படுவனென்றும் வாக்குஞ்செல்வமு மழிவதாவன்ஓர்சுபருடன் கூடில் சிலகாலங்குடும்ப விர்த்தியுடன் வாழ்வன் பலவகை துக்கமனுபவிப்பன் பின்வரவர குடும்பக்ஷய முண்டாகு மென்றுங் குடும்ப மேன்மை இன்றிப்பலவகை வருத்தங்களே யனுபவிக்கப் படுவனென்றும் அறிக.

இரண்டு முதலிய சுபர்கள் கூடினும் இரண்டு முதலிய சுபபெலத்துடனிருக்கினும் சாதகனுள்ளவரை குடும்ப விர்த்தியானாலும் சில காலத்திலழியுமென்றும் அறியவேண்டும்.

மகரலக்கின நேத்திர பலன்களாவன.

நேத்திர சிவசரீராதிபதிகள் ரவி சந்திரனுகி கேந்திர கோணம் நீங்கிய உ-ரு-கஉ-கக-அ-சு இவ்வித இடங்களிலிருக்கினும் அவ்வித இடம் துலாம் விருச்சிகம் மேஷம் சிம்மம் மகாம் மீனம் இவைகளாகி பெலக்குறைவுடன் பாவரைக்கூடினும் பகை நீசாதி பாபக்கோட்க்கள் அல்லது இவ்விதஸ்தான சம்மந்தம் பெற்றுஇருக்கினும் பிரபலபகை நீசக்கோளானாலும் சாதகனுக்கு நேத்திரவீனம் நேத்திரரோகத்தை யுடையவனுவனென்றும் அவைகளால் பலவித ரோககெண்ட வுபாதிகளும் வருத்தங்களும் உண்டாகுமென்றுங குடும்ப பீடையும் வாக்குப் பிரழ்வும் பலவகை வருத்த பலன்களேக் கொடுக்கப்படுமென்றும் மனோபரதாதிகளும் பலவித துக்கசோகாதி பாதைகளேக் கொடுக்குமென் றறிக.

சுக்கிரன் சனி பாம்பு குசன் இவர்களாகில் சிலசிலகாலங்களில்நேத்திரங்களுக்கு உபத்திரவம் முதலிய பலவகைவருத்தங்களே கொடுத்துநீங்கும் கண்புகைச்சல் நீர் முதலிய ரெக்த உறைவு வக்கிரப்பார்வை அரை திருஷ்டி முதலானவைகள் நேத்திரத்தில அல்பகாலங்களில் தோன்றி வயோதிகம் கவுமாரமென்ற வயதிலுண்டாகி நீங்கிவிடும் புதன் சுக்கிரன் பாவராகி நேத்திர சிவ சரீரங்களானாலும் அல்லது ஸ்தானுதிபதிக ளானாலும் நேத்திர சிவ சரீரஸ்தானங்களிலிருக்கினும் அது அவர்களுக்குப் பகை முதலிய க்ஷேத்திரம் பாப இடங்களாகியும் பகை நீசத்துவ பாவரைக் கூடினும் பெலமற்று இரு

க்கினும் சீவ சரீராதிபராகி மேற்கூறிய ஸ்தானங்களில் நின்றாலும் சாதகனுக்கு வெண்படர் நேத்திரமும் நேத்திர ஊனமுதலிய பலவகைதொந்திரவுகளும் மாலைக்கண்ணனுகி வாழ்வன் அவை சரமுபய இராசியாகின் சிலநாளுண்டு சிலநாள் சுகம் நேரும்பாபக்ஷேத்திரஸ்திரவிராசிகளாகில் அவை யெப்பொழுதுமே இருந்துவருமென் றறியவேண்டியது மற்றவர்களாகி இவர்களே சுபபெலத்துடையவர்களாகில் பெலவானனசுக நேத்திர வனுகூல முடையவனுவான்.

தனபாவ கெணிதமும் காலமுதலியதுந் திசாபுக்தி மூலமாகக் கண்டு கூறப்படும்.

குருவும் சனியுடனும் உ-மிடம் உ-மிடத்ததிபதி நின்றதற்கு உ-மதிபதியுடனும் அவ்விதஸ்தானங்களிலும்உரிய சுப பாபகிரகபெலயெண்களை யெடுத்துக்கொண்டு அவைகளை தனித்தனி ராசிபெல யெண்களால் பெருக்கிக் கண்டவைகளை கூ-ல் கழித்த சேஷ திசையிலும் வந்த ஈவை நு-ல் பெருக்கி கூ-ல்கழித்த சேஷம் புக்தியிலும் தனங்கிடைக்குதல்குடும்ப பிரபலம் உண்டாகும் வாக்கு ஜெயமாகும் அவரவர்களுக்கும் ஸ்தானங்களுக்கு வெட்டாமதிபதி நின்ற இருசிநாதனுடனு முரியவிருசி எண்களைப் பெருக்கி கூ-ல் தனித்தனி கழித்த சேஷம் திசையிலும்வந்த ஈவை நு-ல் பெருக்கி ஒன்பதில் கழித்த சேஷம் புக்தியிலும்இருணம்குடும்ப நஷ்டம் பொருள் சேதம் பலவித கஷ்டநஷ்ட துக்கமும் பொருளால் பகை சோர சத்துருவும் அனேகவித மரண சமானபாதை யுண்டாகுமென்றறியப்படும்.

சகோதர பாவபலன்.

சகோதர பாவத்துக்கு மூன்று பதினோராமிடத்ததிபதிநின்றஇராசிநாதன் சீவனென்றும் ஸ்தானுதிபதி யிருக்குமிடத் ததிபன் சரீரமென்றும் பெயராகும் காரகனுகிய குசன்வசாதும் இவ்விதமே கண்டு சீவசரீர நிர்ணயஞ் செய்துக்கொள்ள வேண்டியது. ஸ்தானுதிபதி பெலன்களும் குசன்பெலன்களையும் ங-கக-மிடங்களிலிருக்கும் கிரகபெலன்களை யூகித்து சகோதர பலன்கள் உரைக்கவேண்டுவனவாம்.

மேற்கூறிய சீவ சரீராதிபர்கள் சனி பாம்பு குசனுகினும் ங-கக-மிடங்கள் பகை நீச க்ஷேத்திரம் பகையாகியும் சீவ சரீராதிபர்களே

ஒருவர்க்கொருவராவது ஸ்தானமாவ்து பாபத்துவம் பகை முதலிய இடங்களாகியும் பெலமற்று இருக்கினும் பாப மத்திய கெதியுடன் அவ்வித ஸ்தானங்கள் விருச்சிகம் மேஷம் கும்பம் கன்னி மிதுனம் இவைகளாகி பாபபெலன்களே யுடையதாகினும் அசுபபெலத்து டன் சீவசரீராதிபர்கள் மேற்கூறிய ஸ்தானங்களில் பகை நீச பலனு டன் கூடி இருக்கினும் அல்லது பார்த்தாலும் சாதகனுக்கு சகோத ரங் கிடையாது சுபர்களாகி இவ்வித பலமற்ற பகைபாப க்ஷேத்திர கெதியிலிருக்கில் பிறந்திறந்து அந்தியகாலஞ் சகோதிரமில்லாமல் வா ழ்வனென்றும் அவைகள் சுபர் அல்லது பாபர்களுக்கு உரிய சுப பெல க்ஷேத்திர மல்லது நட்பு ஆக்ஷி இடங்களாகி பெலத்துடனிரு க்கினும் கேந்திர கோண பெலவான்களாகியும் பாவர் நீங்கிய சுபர்க ளானுலும் சீவசரீராதிபர்கள் ஐங்கிய புத்தியர்களாய் பெலத்தும்சம பெல கிரகமாகிச் சேரினு மல்லது நோக்கினும் அவர்கள் புதன் சனி யல்லது கிரகங்களானுலும் சகோதர விர்த்தி பிரபலமுள்ளவன்புதனு கில் இருவகை சுபபெலன் பெற்ருல் சிலனுள் இராஜயோக வல்ல பர்களான சகோதிர ரிருந்து மரிப்பர்கள் அபெலமாகில் பெலமற்று சகோதரமின்றி ஒண்டியாவ னென்றறியவேண்டும். அவர்கள் விருஷ பம் கடகம் விருச்சிகம் கும்பம் கன்னி இவைகளாகில் பெண் சந்ததி இருக்கினும் மத்தியகாலத்திலேயே குடும்ப க்ஷயத்துடன் அடையு மென் றுரைக்கவேண்டும்.

மேற்கூறிய சீவ சரீராதிபதிகள் பெலவான்களாகியும் தனுசு மக ரம் மீனம் சிம்மம் இவைகளில் கேந்திரகோண பெலத்துட னிருக் கினும் நோக்கினும் அல்லது சகோதர காரகவசாத் பெலத்துடனி ருக்கினும் சாதகனுக்கு சகோதரபலமுமடைவன் மேற்கூறியகிரகங் கள் மேன்மையுடன் இருக்கின் சகோதரவசாத் ஜீவசரீராதிபதியுட னுள்ளோர் குரு ரவிபூரணசந்திரன் குசன்முதலியோராகிஇருக்கினும் நோக்கினும் அவை சுக்ஷேத்திர உச்சகேந்திர கோண பெலத்துடன் இருக்கினும் சாதகனுக்கு புருஷ சந்ததியுள்ள சகோதரங்கள் அதிக விருத்தியும் மிகுந்த வனுகூலமும் பிரபல சுகசௌக்கியங்களும் மனே வாக்ஜெயம் உள்ள பலவகை சகோதரங்களால் மிகுந்த மேன்மைக ளும் பிரபல சகோதரங்களே யுடையவனுவன்.

சந்திரன் சுக்கிரன் சனி கேது முதலியோராகில் பெண்சகோதிர மே ஜாஸ்தியான விர்த்திகளும் பிரபல சுக சௌக்கியங்களுடனும்

மிருதியான மேன்மையுடன் வாழ்வர் பாம்பு புதனுகில் சகோதர விர்த்தி இன்றி யடைவன் இதில் மீனம் மிதுனம் கன்னி மகரம் கடகம் தனுசு இவைகளிலும் கக-எ-ௐ-கூ- இந்த ஸ்தானங்களிலும் ஷெசுபரும் பாபரும் இருக்கினுங் சாதகன் சகோதரம் பிதாவின் பலதாரிமாகிய உ-முதலிய தாரங்களுக்கு உண்டாகுமென்றும் மிக்கமேன்பாடுகளும் அவ்வித இராசிகளில் மேற்கூறிய கிரகங்கள் இருக்கினும் புதன் சந்திரன் சுக்கிரன் இரவி முதலியோர் சகோதர சிவ சரீராதிபதிகளாகின் சாதக சகோதரர் பிதாவின் பரநாரியல்லது துதீயம் முதலான தாரங்களுக்குண்டான வர்களென்றும் அவை சுபக்ஷேத்திர பெலமாகினும் அவ்வித இடங்களில் ரவி குரு முதலிய சிவசரீராதிபதிகள் பெலவான்களாகில் சகோதர சந்ததி பிரபலமானது அதிகமுடையவன் அவர்கள் ஒருவருக் கொருவர் விரோதிகளானுலும் இணையில்லாத பாவர்களானுலும் சகோதரங்களா லனுகூல மின்றி விரோதாதி பலவகை வாதங்களை யடைந்து வாழப்படுவனென்றும் பலவகை வருத்தமடைவன் அவைகளுக்குரிய சிவ சரீராதிபதிகள் சு-அ-கூ-க0-கஉ-இவ்வித இடங்களாகினும் அவை ரவி புதன் சுக்கிரன் குசக்ஷேத்திர மானுலும் சகோதர விர்த்தியாகினும் குடும்ப விர்த்தியின்றி பலர் போகிபும் பலவகை கஷ்ட நஷ்ட பலன்களையும் அடைவனென்றுங் சொல்லப்படும் அவைகள் சுபகேந்திர திரிகோணம் பெலத்துடன் இருக்கினும் நோக்கினும் சுக்ஷேத்திராதி தனக்குரிய சுப பெலக்ஷேத்திரமானுலும் சகோதரங்களால் பிரபல கீர்த்தியும் அதிகமான சன்மான வெகுமானத்துடனிருந்து வரப்படுவனென்றுங் கண்டறிக.

பாபசம்மந்தக் களிப்புடன் ஜீவசரீராதிபர் களிருக்கினும் சிவசரீராதிபர்கள் சுபராகி பாபட்சேத்திரமானுலும் சுபட்சேத்திரத்தில்சிவ சரீராதிபர்கள் பாபரானுலும் சகோதிரமுண்டு அனுகூலமின்றியும் சகோதிரமிருக்கு மிடத்தில் சாதகன் வசிக்காமலும் அதிக வனுகூலத்தைப் பொரமலும் வாழப்படுவர்கள் காரகவசாத் சிவசரீராதிபதியும் ஸ்தான மூலிய சிவசரீராதி பதிகள் பெலவான்களாகி ௐ-க்கு மேல் பட்ட பெலத்துடன் இருக்கில் ஜாதகன் சகோதிரர்கள் பிரபல இராசயோக முடையவர்களாகி வாழ்வார்கள் யென்றும் பிரபல சுக செளக்கியனுவன் மூன்றுக்கு கீழும் உ-க்கு மேலுள்ள பெலவானுகில் சகோதிர சமத்துவயோக முடைவர்களாகும் சகோதிர மூலியதனுதிலாபம் உடையவன் சகோதிரார்ச்சித சொந்தனுவன் உ-க்குள்ப்பட்

ட பெலனானுலுங் குறைந்தபாப பெலமுடையவர்களானுலும்சகோ திரர் தரித்திராகிப் பலவகை வருத்தமடைந்தும் பொருள் விர்த்தி யின்றியு மனக்கவலையுடனும் அனேகவித நஷ்டங் கீழ்குலசம்மந்த ஹீனர்களாகுவார்கள் பெண்ணாகில் இவ்வித சாதிசள்ளுண்டவளாகியும் அல்லது தரித்திரியோகி யல்லது விபசாரியாகி வாழ்வனென்றுங் கொள்க.

சகோதிரபாவ கெணிதங்களாவன.

மீனத்திலும்குருநின்றமூன்றுமிடத் ததிபதிநின்றஇராசிநாதனுடனும் ககமிடத் ததிபதிநின்ற இராசிநாதனுடனும் ஸ்தானத்திலும் குசனுடனும் குசனுக்கு மூன்றுமிடத்ததிபதிநின்றஇராசிநாதனுடனுங் கூடியகிரக சுபா சுபவெண்களைக்கண்டு அந்தந்த கிரகமுள்ள இராசியுச் சமானுல் பெருக்கியும் ஆகூியானல் அந்தத்தொகையில் ஔ-பாகம் கூட்டியும் நட்பானல் பாதிஇராசிபெலனுக்குரியதைக் கூட்டியும் பகையானல் கால்பங்கு கூட்டியும் உள்ள தொகைகளை யவரவர் பூராவானவெண் பெருக்கு கொடுத்துக்கண்ட ஈவில் பாபராகில்சகோதிர மில்லையென்றும் சுபர்களால் கொடுத்த ஈவு யெத்தனையோ அவ்வளவு சகோதிரமென்றும் அவைகளையும் பெண் ஆண் கிரக இராசிபெலன்களையறிந்து கூறவேண்டியது. அப்படியில்லாவிடில் அவைகள் பிரழ்ந்துபோய்விடும் மேற்கண்ட வெண்களை தனித்தனி கூல் கழித்த மிச்சம் திசையிலும் வந்த ஈவை நூல் பெருக்கி கூல் கழித்த சேஷம் புக்தியிலும் சகோதிர லாபம் அவரவர்களுக்கு அஷ்டமாதிபதி பெலாபெல வெண்களை முன் போலக்கூட்டிக்கழித்துக்கண்ட சேஷந் திசாபுக்திகளில் சகோதிர நஷ்டம் பலகஷ்டம் துக்கபலன் எனக்காண்க.

மகர லக்கினத்தின்
ச-வது மாதுரு கிரகவாகன வித்தியா பலன்.

சந்திரன் குசன் மேஷம் நானகா மதிபதிவிவர்கள் எந்த வீட்டிலிருக்கிறரோ அந்த ஸ்தானுதிபதிகளுடைய பெலாபெலனறிந்து கூறுக மாதுரு பாபத்துக்கு நாலாமிடத்ததிபதி நின்ற ராசிநாதன்சிவனென்றும் நான்கிற்கு நான்காமதிபதி எந்த வீட்டில் இருக்கிறனே அந்த இராசி நாதன் சரீரமென்றும் பெயராகும்.

கிரகவாகனங் கன்றுகளுக்கு சுக்கிரனுக்கு நான்கா மதிபதிநின்ற இராசிநாதன் சிவனென்றும் லக்கினதியாக நான்காமதிபதிநின்ற இராசி

நாதன் சரீரமாகும் புதன் வசாத் நான்காமதிபதிநின்ற இருசிநாதன் வித்தைக்கு சீவனென்றும் இரெண்டாமதிபதி நின்ற இராசிக்கி நான்காமதிபன் சரீரமென்றும் பெயராகும் இவ்விதமாக பாவம் எடுப்பமுன் சீவ சரீர பெலன்களைக் கண்டறிந்து பலன் கூறவேண்டுவதாவசிகமாதலால் இங்ஙனம் முதலில் சீவசரீர நிரூபணம் கூறப்பட்டனவாம்.

அந்தந்த பாவங்களுக்கும் சீவசரீருதிபதிகள் ஐக்கியபத்திய சுப ருகிப்பெலனுள்ளவராகியும் ஐக்கியமின்றி வெவ்வேறு கிரகங்களானாலும் அவரவர்களுக்கு வனுகூலமித்துருவாகி சுப பெலக்ஷேத்திர கெதியாகியும் பாபசம்மந்த திருஷ்டிகளில்லாமலும் பெலத்தும் மேன்மையுடனிருக்கினும் சுப கேந்திராதி ஸ்தான பெலனுடனிருக்கினும் மாதுருவம் சாதி பாவத்துக்கு பிரபல விர்த்திகளும் மிகமேன்மையும் அனேகவிதமான விர்த்திகளையும் அடைந்து வரப்படுமென்றும்இஷ்டசித்திகளையும் மிகவும் பிரபல சுகசௌளக்கிய பலன்களாகவே நடந்து வரப்படுமென்றுங்கண்டு கூறவேண்டுவனவாம் அவை பாபக்ஷேத்திரமாகி பாபபெலத்துடன் சம்மந்த மல்லது திருஷ்டி களாகில் அவர்களுக்குரிய சுபவிர்த்திக்கிசைந்த பலவிர்த்திகளையும் மேற்கூறிய பாவப்பிரபல யோகத்தையும் கூறப்படுமென்றறிய வேண்டுவனவாம் மாதுரு சிவசரீராதிபதி பெலத்துடன் கேந்திரகோணமான இடத்திலும் ஸ்தானுதிபதி சந்திரனிவர்கள்பெலத்துடனும் பகைநீச பாபக்ஷேத்திரமின்றி சுபதிருஷடியுடனிருக்கினும் அவ்வித இடங்களானது விருஷபம் மகரம் மீனம் சிம்மம் முதலிய இடங்களாகி ரு-கூ-க-எ-ய-ஆகினும் அவை சரமல்லது உபயமாகில் மாதாவகை பெரும்பாலும் விர்த்தியுள்ளவர்களாகியும் விருத்தாப்பிய காலவரை மாதுரு விருத்தியடைவன் சுப பாபக்ஷேத்திரமாகி மித்துருவின் வீடாகவு மிருக்கவேண்டும் அவ்வித மாதுருகாரகனுகிய சந்திரன் வசாத் ஜீவசரீராதிபர்களின் பெலன்களை யுத்தேசித்தும் இவ்விதமே ஜீவசரீராதிபதிகளும் பெலவானுகில் பூரணவயதையுடைய மாதாவென்றும் இவையே பாபக்ஷேத்திரமாகியும் சிவசரீருதிபதி ஒருவர்க்கொருவர் பகை பாபிகளாகியும் பாபக்ஷேத்திரம் துர்த்தானங்களிலும் பகைவரைக்கூடி நிற்கினும் நோக்கினும் ஸ்தானுதிபதி சந்திரனுகி பெலமற்றிருக்கினும் அவை, ஸ்தானவசாதும் லக்னவசாதும் அ-கந-கூ-ய-ஆன இடமாகியல்லது நான்கானுலும் ஷ ஸ்தானுதிபதி பெலன் கெட்டுஞ் சிவசீராதிபர்க ளிவ்வித இடங்களிலிருக்கினும் மாதா உடன் மரணமாவள் அவை யாவது பாலியத்திலேயே மாதுரு மரணமாவளென்றும் அவை ஸ்திரவிருசியாகில் பாலியத்தில் பாலியமென்றும்உபயவிராசியாகில் பாலியத்தில்

மத்தியகால வயதிலும் சரமானல் பாலியத்தில் பூரணகால வயதிலும் தாய் மரணமாவளென்றும் மேற்கூறிய சீவசரீராதிபர்கள் பெலமற்ற இடங்களிலும் பகை நீசாதி இன்றி சம பெலக்காராகி ௩-டு-உ-௬-௧௧- இந்த வீடுகள் விருஷபம் மிதுனம் கன்னி துலாம் விருச்சிகம் தனுசு இவ்வித இராசிகளானாலும் இவைகளில் சுப சம்மந்த பெலத்துடன் குரு சுக்கிரிருக்கினும் அல்லது சந்திரன் சனியானாலும் அவை இருப்பிடம் ஸ்திரவிராசியாகில் யவ்வனத்தில் முதலிலும் உபயவிராசியாகில் யவ்வனத்தில் மத்திமம் சர விரு சி யாகில் யவ்வனத்தில் பூரணவயதிலும் இவர்களே மற்றய இடத்தில் பகைநீச அசுபராகியும் ஜீவசரீருதிபதிகள் பெலமற்று பாப பலனையடைந்தவருகின் ஜாதகன் பாலியம் சிசு இவைகளிலேயே தாய் மரணமென்றும் சுபராகில் கௌமார வயதில் தாய் மரணமென்றும் அதாவது அவன் வயதில் நான்கில் ௩-வது பாகமென்றும் அசுபராகில் ௪-ல் முதற்பாகத்திலேயே ஜாதகமாதுரு மரணமும் பாம்புமுதலிய புதன் அபெலாய்க் கூடில் கற்பத்தினுலேயே தாய் மரணமாவளென்றும் ௧உ-௬ இவ்வித இடங்களில் சீவசரீராதிபதிகள் தனக்குரிய சுபபெலத்துடன் ஸ்திரவிராசியிலிருக்கில் விருத்தாப்பிய வயதில் தாய் மரணம் சரவிராசியில் விருத்தாப்பிய முதலிலேயே தாய் மரணம் உபயமாகில் விருத்தாப்பிய மத்தியில் தாய் மரணமென்றுங் கண்டறிந்து கூறவேண்டியது அவ்வித சீவசரீராதிபதிகளும் அவர்கள் வசாத் நான்காமதிபதிகளும் சுக்கிரன் புதன் கிருஷ்ணபக்ஷ சந்திரன் சனி முதலிய இவர்களாகினும் இவர்கள் சீவசரீராதிபர்களாயும் மிதுனம் தனுசு கன்னி மீனம் இவைகளாய் அல்லது சென்மம் ஜீவசரீராதிபதி இவர்கள் வசாத் மாதுரு ஸ்தானதிபதியாயாவது அல்லது அவ்விதஸ்தானத்திலிருக்கில் பிதுருவுக்கு இரண்டு முதலிய பெருதாரமென்றும் சாதகனுக்கு சபத்நீ மாதுருவகை யுண்டென்றுஞ் சொல்லப்படும் சுப பெலந்திருஷ்டி சம்மந்தம் பெலனதிகமானல் ஏகதாரம் பிதாவிர்க்கென்றுங் காண்க.

கிரகவாகன பலன்.

கிரகவாகன சீவசரீராதிபர்கள் சுபபெலத்துடன் மகரம் மீனம் விருஷபம் கடகம் கன்னி தனுசுவான லெப்பொழுதும் வாகன பிரபல யோகவானென்றும் சுபக்ஷேத்திரமாகி உபயம் அல்லது சரமாகினும் அவை உ-ச-எ-௧0-௧உ இவ்விடங்களாகி சுபபெலஸ்தானமாகினும் அவர்கள் குரு சுக்கிரன் பூரணசந்திரன் முதலியோரதிபதி யல்லது சீவசரீரா

திபர்களாகி பெலத்துடன் சுபவர்க்க பெலமேறிநிற்கில் அனேகமான வாகனங்கிரகங்கள் சம்பாதனையுடன் பூரணஞ்செய்வன் அவை சரவிராசியாகி மேஷம் மகரம் கடகம் துலாம் இவையிலாவதும் ௬-௫-௮-௧௧-௨-௧௨ இவ்வித இடங்களாகில் பழையவாகனம் பூமிகிரக விருத்தியுண்டு இவர்கள் பாபராய் துர்தானுதிபத்தியம் பெற்றிருக்கில் பூர்வாச்சிதம் வாகனம் வீடிருந்துமவைகளை நஷ்டஞ்செய்துவிடுவன் சிலநாளனுபவித்துப் பின் இந்த சாதகன் அனுபவிக்கமாட்டான் ஸ்திரவிராசியாகியும் ௭-௲-௯-௪-௬ இவ்வித இடமாகில் பின்காலத்தில் கிரகவாகன பிரபலவிருத்தியும் அனேகவிததனலாபயோகவானென்றும் அறிக அவையே குசன் இரவி சனி க்ஷேத்திரம் பாபபெலனாகியும் சீவசரீராதிபதி கெடினும் விரோதத்தினாலும் ருணாதிகளாலும் பலவிதப்பொருளும்நஷ்டமாகும் முன் இருக்கிற கிரகவாகனமும் நஷ்டமாகிவிடும் பின் அவை மூலமாக அதிக யோக பிரபலியமுண்டாம்.

வித்தியா பலன்கள்.

வித்தியா ஜீவசரீராதிபதிகள் பெலத்துங் கேந்திர கோண சுக்கிர குரு இரவி முதலிய புதக்ஷேத்திரங்களிலும் பெலவானாகியும் சுக்ஷேத்திர சுபபல க்ஷேத்திரங்களிலும் வலுப்பெற்று மிருக்கினும் சீவசரீராதிபதிகள் புதன் சுக்கிர குரு முதலிய சுபராகி பெலமுற்று இருக்கில்கீழே கூறிய வித்தையில் வல்லவனென்றும் குசன் சனி பாம்பு முதலிய பாவர்களாகி மகர கும்பம் துலாம் மேஷ மீனம் விருச்சிக ஸ்திதியராய் சீவசரீராதிபராகி பெலமற்று பாப க்ஷேத்திர கெதியுடனிருக்கினும் அவை ௨-௲-௮-௬-௧௨-௧௧ முதலிய துர்த்தனமாகி பாவராகிப் பெலக்குறைவுடன் பாப மத்தியில் பகை முதலிய அபெலன்களைப் பெற்றிருந்தாலும் வித்தைகிடையாது வெளிக்கி வித்தியாவந்த வேஷதாரியாகி வாழ்வன் இவர்கள் சுபராகில் வித்தை பிரபலமான தன்மையானாலும் குடத்திலேற்றிய விளக்கைப்போலாவன் சுபக்ஷேத்திர சுபகெதியாகில் அதிமேதாவியாகி சகல வித்தியா புத்தியூகனாகி மேலான பிரபலம்பெறுவன் சுபஸ்தானத்தில் பாபரே பெலமாகி நிற்கினும் நோக்கினும் அல்லது பாபஸ்தானத்தில் சுபரே பெலமாகி நிற்கினும் நோக்கினும் அதி வல்லவனாகியும் வித்தியாகிரிபை பெலனில்லாதவிடினும் மிகுந்த கீர்த்திகளையும் பிரபலத்தையும் ஓர் விஷய வித்தைகளில் வல்லபனாகக் கியாதிபெறுவன்

அவ்விதம் பெலமுற்றவர்களில் இரவியாகில் இராசவித்தை முதலியதும் கருவி யெந்தர வித்தையுங் கற்று பிரபலனாவன் சந்திரனாகில்

கணிதாதி வித்தையும் வைத்திபாதியும் காவிய சாஸ்திரமறிவன் குஜனை கில் பூவிஷய சாஸ்திரமுந் அன்யபாஷை பலவித்தையும் அறிவன் புதனாகில் கணிதபண்டித சாஸ்திரமறிவன் குருவாகில் வேதசாஸ்திராதி உபதேசவந்தனாகி யல்லது இராஜவித்தையின் பிரபலமுடையனுவன் புராணாதி சொல்வன் சுக்கிரனாகில் காவியாதி லக்ஷணமும் பூராணமும் சங்கீதாதிநட நாடகப்பிரிய வித்தையுடையவன் சனியாகில் ஹீனகுல வித்தைகளையும் அன்ய பாஷாதிகளறிவன் இராகு கேதுவாகில் பலவித பாஷைகளிலும் இராச பாஷாதிகளையும் எவ்வித பாஷைகளையும் யுத்த சாஸ்திராதி அறிவனென்றுங் கூறுக.

மேற்கூறிய பாவங்களின் கெணிதமுங் கூறப்படும்.

அந்தந்த பாவ சீவசரீராதிபர்களுடன் கூடிய வெண்களை சுபபாப பலன்படிக்கி ஆராய்ந்தெடுத்து ஸ்தானத்திலும் அதிபதியுடனும் உரிய கிரகவெண்களையும் இராசிபலனுக்கு இசையவெண்களையும் உச்சமானல் பெருக்கியும் ஆக்ஷியானல் கூட்டியும் நட்பானல் பாதிகூட்டியும் பகையானல் கால்பாகங்கூட்டியும் நீசமாகில் ஒன்றுங் கூட்டாமல் கிரகத்துகையை மாத்திருந் தனித்தனி கூ-ல் கழித்த மிச்சம் வருதிசையிலும் வந்த ஈவை டு-ல் பெருக்கி கூ-ல் கழித்த மிச்சம் புத்திகாலத்திலும் அந்தந்த பாவம் விருத்தியாகிப் பிரபலமுண்டாகுமென்றும் அவரவர்களுக்கும் அஷ்டமாதிபதிநின்றவதிபனுடன் கூடிய வெண்களையும் பெலன்படி முன்போலவேகூட்டியல்லது பெருக்கி கூ-ல் கழித்து முன்போலவே கண்டறிந்த சேஷ திசாபுக்திகாலங்களில் விசேஷ தனலாப யோகமுங்கெட்டு அவைகளால் கஷ்டநஷ்ட துன்பமுணடாகி அந்தந்தபாவங்களுக்கு அபாவமுண்டாகு மென்றறிய வேண்டியது.

புத்திரபாவ பலன்கள்.

குரு சுக்கிரன் ஐந்தாமதிபதியையும் அவ்வீட்டினின்ற கோளையுங் கொண்டு புத்திரபாவபலன் சொல்லுக.

புத்திரபாவத்துக்கு ஐந்தாமதிபதிக்கி ஐந்தாமதிபன்எவ்விடத்திலிருக்கிருனே அவ்வதிபன் சீவனென்றும் குருவுக்கு ஐந்தாமிடத்ததிபதி நின்ற இராசிநாதன் சரீரமென்றும் பெயராகும் இவ்விதமான புத்திர சீவசரீராதிபதிகளும் மேற்கூறியகுரு சுக்கிரன் ஐந்தாமிடத்

ததிபர்களும் உ-க-ச-நு-கூ-கம இவ்வித இடங்களில் புதன் சனி முத லியோர் ஸ்தானுதிபதி யல்லது சிவசரீருதிபர்களாகாமலும் மகரம் கும்பம் கன்னி மிதுனம் நீங்கிய இடங்களிலும் பிரபலபெலத்துட னிருக்கினும் நோக்கினும் அதில் குரு சுக்கிர பூரணசந்திரன் குசன் முதலிய இரவியாகின் புத்திர விருத்தியடைவ னென்றும் மற்றய விடங்களானல் புத்திர தோஷமென்றும் சுக்கிரன் புதன் சந்திரன் உ-நு-எ-கக இவ்வித இடத்தாதிபராகி சிவசரீராதிபராகினும் அவை களிலிருக்கினும் அவர்களின் திருஷ்டியாகினும் ஸ்தானுதிபதிகள் மேற்கூறிய இடங்களான மீனம் கன்னி மிதுனம் தனுசு முதலிய இரெட்டை இராசிகளிலிருக்கினும் ஜாதகனுக்கு மருதாரத்தால் புத் திரருண்டென்றும் பாவராகிக்கூடின் பெண்சந்ததி தவிர புருஷ சந் ததி கிடையாதென்றும் அவர்கள் சனி பாம்பு புதன்இவருடனுவது இவர்களின் சுக்ஷேத்திர இடங்களிலாவது பாவர் முதலியரான் சீவ சரீருதிபர்கள் கூடினும் நோக்கினும் புத்திரரே கிடையாது சிவீகா ருதி தெத்தையுடையவனுவன் சுபர்திருஷ்டிசம்மந்தம் இவை யிருக் கினும் அந்த இடம சரமுபயவிராசியானல் காலதாமதத்தின் பேரி லும் பொகுதாரத்தின் பேரிலும் புத்திரபாக்கியம்அல்பமானவாணை யும் பெண் பிரஜை விருத்திகளையும் அடைவன் சந்திரன் சுக்கிரன் சீவருசியாதி பத்திய மல்லது அவருடன் கோணத்தில் பெண்இராசி கிரகத்துடனல்லது திருஷ்டியுடனிருக்கினும் கேது சனி புதன் கூடி யல்லது நோக்கினும் ஷெ யோருக்கு இரபுரத்திலிருந்தாலும் பெண் ணேபிரபலமுடைய புத்திரபாவமாவன் பாபபெலனுகில்அதுவுமுண் டாகி மரணமாகும் இரவி குரு குசன் இவர்கள் புத்திரதிதானுதி பத்தியமல்லது சீவசரீருதிபதிக ளாகியும்பிரபல பெலத்துடன் இருக் கினும் நோக்கினும் சுபபெலத்துடன் சிம்மம் தனுசு கும்பம்மேஷம் துலாம் விருச்சிகமாகில் சனி புதக்ஷேத்திரம் நீங்கியவிடத்தில் சீவசரீ ருதிபதிகள் பெலத்தும் பூரண சந்திரனுகினும் பூலபுருஷபிரசைகள் அதிக கீர்த்திவந்தராகி பிரபலமான யோகவான்களாகி வாழ்ந்துசுக சௌக்கியவான்களாவார்கள். இவர்கள் துர்த்தானத்தில் சுபபெலத் துடனிருக்கினும் அவை ரு-அ-கக-எ பாபக்ஷேத்திரமாகி சுபக்ஷேத் திராதி பெலன்களைப் பெற்றாலும் சிலநாள்வரை புத்திரரிருந்து தோ டமாவார்கள் புத்திரிவிதவை தோடமடைவர் பலவகைபுத்திரசோ கமடைவன் புத்திரரிருக்கில் பலவகைரோகமுங் குடும்பதுக்க முதலி யவருத்த மனேகஷ்டங்களையும் இராஜதெண்டனைகளையு மடைவர்க

ளென்றுங்கண்டு கூறவேண்டியது அவர்களைச் சுபவீக்ஷணியாதிபெலன்பேரில் ஏகமானகரும சந்ததி வெகுநாளைக்கிப்பின்னுண்டாகும் சீவன்வலுத்தும்சரீரம் பாவராகில் சிலநாள்புத்திரரை வைத்துக்காப்பாற்றி புத்திரருக்கு சாதகன் கருமஞ் செய்வானேஒழியசாதகனுக்கு புத்திரரால் கருமங்கிடையாதென்றுங் கண்டறியவேணடியது.

சீவசரீருதிபதிகள் குசன் குரு அல்லது இரவி பூர்ண சந்திரனுகினும் ஸ்தானதிபதியாகி பெலமுற்ற க-ச-டு-எ இவ்வித ஸ்தானங்களில் பெலத்துங்கேந்திர கோணகெதியுடன் கடகம் சிம்மம் தனுசு மீனம் மேஷம் இவைகளிலிருக்கினும் பெலத்த சுபர்கள் திருஷ்டியல்லது சேர்க்கையானுலும் புத்திர ரனேகருடன் புருஷவருக்கஞ்சாஸ்தியாகியும் புத்திரரால் பிரபலசெல்வயோகத்தையுஞ் சுகத்தையு மிகவுமேன்பாடுகளையும் அடைவனென்றும் பிரபல சுகசௌக்கிய மேன்பாடுகளை யனுபவிப்பனென்றுங் கூறவேண்டியது.

உ-ரு-கூ-கo இவ்வித இடங்களிலும் மிதுனம் விருஷபம் விருச்சிகம் கும்பமாகில் அதில் சீவசரீராதிபதிகளாவது மேற்கூறிய புத்திர ஸ்தானுதிபதிகளாவது பெலத்துடனிருக்கினும் நோக்கினும்முன்ஜெனன நஷ்டமும் காலதாமதத்தின் பேரில்புத்திர விருத்தியடைவனென்றும் அவையிற் சந்திரன் புதன் சுக்கிரனிவராகில் மருதாரவம்ச புத்திர ரென்றும் அவைகளால் மேன் பாடுகளையுஞ் சுகசௌக்சியங்களை யனுப விப்பனென்றும் சு-அ-கக-கஉ இந்த இடங்களில் சீவசரீருதிபதிகள் பெலத்துடன்இருக்கினும் கன்னிமிதுனம் மகரம் கும்பம் மேஷம் விருச்சிக மிவ்வித இராசியாகி அவ்வதிபர்களுடன் பெலத்தும் கேந்திர கோண கெதியுடன் பிரபல சுப பெலனைப்பெற்று இருக்கில் காலதாமத பெருதாரவகை புத்திரரும் சுயபுத்திராகினு மத்தியகால மரணமும் புத்திர விரோதமும் புத்திரரு ரோகியல்லது புத்தியில்லாதவர்களாகியும் பலவகை புத்திர கவலையடைவனென்றும் இவர்களை பகை நீசாதி பாபபெலத்துடனிருக்கினும் நோக்கினும் பர புத்திர கருமம் சுய புத்திரரில்லான் சகோதிரம் முதலிய வகையாரால் ஜாதகனுக்கு கரும மென்றுங்கண்டு சொல்லவேண்டியது சுப வீக்ஷணிய அற்பசம்பந்த மானுலும் சிவீகாராதி புத்திரரால் கருமமுடையவ னென்றுங்காண்க.

புத்திர கெணிதங்கள்.

புத்திர சீவசரீராதிபர்களுடனும் புத்திர ஸ்தானமவ்வதிபதி இவருடன் கூடிய சுபா சுபப்படிக்குள்ள கிரகவெண்களை அவரவர் கிரண வெண்பெருக்குக் கொடுத்த ஈவை குரு ரவி குசன் சுக்கிரன் பூரணசந்திரனிவர்கட்குச்சரியான கிரகங்களை யெடுத்து அவரால் வந்த ஈவு புத்திர சங்கை யென்றும் இதில் ஸ்திரீ புருஷ கிரகவெண்களைக் கண்டறிந்து சொல்லவேண்டியது முன் கிரக சங்கையும் இராசி பெல சங்கைகளையும் பெருக்கி அவரவர்களுக்கு மேற்பட்ட கிரக வெண்ணிற் கொடுத்த சேஷமும் ஓர்வகை புத்திர ரென்றும் அவைபால் மேற்கூறிய பிந்து மிச்சங் கொடுத்தவர்கள் சுப பாபத்துக்கு இசைந்தபடி புத்திரவிர்த்தியும் வந்த மிச்சத்தை யவரவர்களின் கிரண வெண்பெருக்குக்கொடுத்து வந்த ஈவு சுப நுக்கிசைந்து வந்ததை ஒன்றுயக் கூட்டியவை புத்திர தீர்க்க யோகமும் புத்திரி தீர்க்கமும் சுக்கிரன் அமரபக்ஷ சந்திரன் கேது இவர்களினீவாகில் புத்திரிகளென்றும் கண்டு கூறுக.

மேற்கூறிய கிரகவெண்களை யெல்லாம் தனித்தனி பெலத்துக்கிசைந்த இராசி வெண்களாற் பெருக்கி சு-ல் கழித்த சேஷம் திசையிலும் வந்த ஈவை ரு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷம் புக்த்தியிலும் புத்திர லாபமும் ஜெபமும் அதிக யோகமும் உண்டாகும் அந்தந்த கிரகவசாத் எட்டுக்குடையவனின்ற இராசி நாதர் பெலன்களுக்குரிய வெண்களைக் கூட்டி முன் போலவே கழித்துக்கண்ட மிச்சம் உள்ள திசாபுக்தி காலங்களில் புத்திராதியோக நஷ்டமும் பலவித வருத்தமும் புத்திர தோஷமான துக்கங்களான கால மென்று மறிக.

சத்துரு உரோகம் இராசாங்க தெண்டனை பலன்கள் கூறப்படும்.

சந்திரவசாத் ஆராமிடத்ததிபதி நின்ற இராசிநாதன் சீவனென்றும் லக்னவசாத் ஆராமதிபதி நின்ற வதிபன் சரீரமென்றும் உரோக விஷய சீவசரீராதிபர்களென்றும் சனி வசாதும் லக்னவசாதும் ஆராமிடத் ததிபதி நின்ற இராசிநாதர்கள சீவசரீரம் சத்துரு இராசதெண்டனுதி களுக் கென்றுங்கண்டு கூறவேண்டியது. மேற்கூறிய பாவங்களுக்கு ஜீவ சரீராதிபதிகள் பெலன்களுடைய சுபர்களாகி சூரிய சந்திரரல்லது ரு-லக்கினுதிபதி களாகினும் இவ்வித கிரகங்களதிபதிகளுடன்கூடி மேற்கண்ட

ஸ்தானங்களில் பெலத்தும் சுபக்ஷேத்திர பெலத்துட னிருக்கினும் நோக்கினும் சாதகனுக்கு பலவித பிரபு இராச விரோதமும் கடன் முதலிய இராச தெண்டனுதி பாதைகளையும் அடையப்படுவனென்றும் மனக்கவலையும் பிணி முதலிய பலவகை கஷ்டநஷ்டங்களை யனுபவிப்பவனென்றும் அறிக.

மேற்கண்ட பாவத்துக்கு ஜீவசரீராதிபதிகள் குரு சுக்கிராதி சுபர்களாகியும் கேந்திர கோணத்திலிருக்கினும் நோக்கினும் விரோத மிருக்கினும் அவைகள் உடனுக்குடனிவர்த்தியாகி விடும் எப்போதும் ரோக சரீரனாகி வாழ்வன் இருணமுடையவனுவன். குசன் பாம்பு முதலியோராகில் இராஜாங்கத்தால் விரோதமும் பலவகை தேகாரிஷ்ட கண்டமும் பொருள் சேதமும் கொடூரதெண்டனைகளை யடைவனென்றும் விஷாதி பாதையுள்ள சரீரஸ்தனென்றும் அறியப்படும் புதன் முதலியோராகின் பலவித சத்துருவிருத்தியு முரோகாதி விர்த்திகளும் நிவர்த்தியாகிவிடும் மேற்கூறியசிவசரீராதிபதிகள் பெலவான் களாகியும் க-ச-ந-எ-கூ-ய-இவ்வித இடங்கள் அவரவர்களுக்குரிய சுபக்ஷேத்திர பெலத்துட னிருக்கினும் ஸ்தானுதிபதிகள் பெலத்தும் மேற்கண்டஸ்தானுதிபர்களுடன்கூடினும் நோக்கினும் ஜாதகனுக்கு பலவித நோய்த்துன்பமும் சத்துரு மேலான வதிகாரி பிரபு இவர்களால் விரோதமுண்டான போதிலும் ஜாதகன் யாதொன்றுக்கும் அஞ்சாமல் பலவித வருத்தங்களை யனுபவிப்பனென்றும் அவ்வித ஸ்தானங்களிலும் கன்னி மகரம் கும்பம் மீனம் விருஷபம் மிதுனம் சிம்மம் இவ்வித இராசிகளாகி அவ்விடங்களில்மேற்கண்ட கிரகங்கள் சுபராகி இருக்கின் சத்துருவனுகூலமுண்டாகும்பகை முதலியஅபெலன்களுடன் சுபரிருக்கில் சத்துரு இருணம் முதலியவைகளும் இராஜ தெண்டனைகளும் நிவர்த்தியாகி சுகமடைவன் பாபராகி கொடிய கோள்க்களாய் கேந்திர கோண இராசியாகிய முன்கூறிய இடங்களாகியு முரில்சாதகனுக்கு பலவிதவற்பர்களின் விரோதமானதும்பெண் விஷயம் பரகெமனம் திருட்டு பொய்வார்த்தை இவ்வித விஷய கெடுதல்களால் பெரும் பாலுங் கஷ்ட நஷ்டங்களை யனுபவிப்ப னென்றும் இருணங்களை யுடையவனுன போதிலும் பிரபல கீர்த்தியை யடைந்து சுகமனுபவிப்பன் சுபர்களானுல் இவ்விதமும் பாபரானுல் அந்திய காலவரை கடன்முதலிய விரோதமுடையவனுகி வாழ்வனென்றறிய வேண்டும்.

மேற்கூறிய ஸ்தானந்தவிர ௩-ரு-அ-௯-௧௨-௨-இவ்வித இடங்களிலும் மேஷம் கடகம் துலாம் விருச்சிகம் தனுசு இவ்வித இராசிகளில்

ஷெ கிரகங்கள் பெலவான் களாகியுங் கேந்திரகோண பெலத்துடனிரு க்கினும் நோக்கினும் இவ்வித இராசிகள் பெலத்த சுபக்ஷேத்திர மாகினும் பெலமுள்ள சுபர்கள் ஜீவசரீராதிபர்களானல் விரோத மிராஜதெண்டனை நிவர்த்தி கடன் முதலியதுடன் வாழ்வன் இவைகள் மேற்கண்ட பாவஸ்தானதிபதி யல்லது சிவசரீராதிபதிக ளெந்த பாவாதி காரியாகி இருக்கிறார்களோ அவர்கள் மேற்கண்ட இராசிஸ்தான மிவை களிலிருக்கில் பலவித வருத்தங்களையு மனக்கவலைகளையும் கொடுத்து நிவர்த்தியுண்டாகப் படுமென்று மேற்கண்டவர்கள் பகை முதலிய அபெல க்ஷேத்திரங்களாகில் சத்துருமுதலியோ ரிலேசானவர்களாகியும் அவர்களே வனுகூலியாகவும் வாழப்படுவர்களென்றும் பாபர்கள் மேற் கண்ட இராசி ஸ்தானமிவைகளில் ஸ்வக்ஷேத்திராதி உத்தமபெலன்களை யுடையவர்களாகிக் கேந்திரகோண பெலவான்களாகினும் சத்துரு கொ ரேமானவர்களாகியும் பிரபலத்துவமுடையவர்களாகி இருப்பர்கள் அவர் களால் விரோதம் தாழ்சாதி சத்துருவும் பலவகை மனவருத்தமும் இருணம் முதலியவைகளையடைந்தும் அவைகளால் தாழ்மைகளையடை யப்படுவன் இருணத்தாலும் விரோதத்தாலும் தேசம்விட்டுச் செல்லுவ னென்றும் பலவகை வருத்தங்களை யனுபவிக்கப்படுவனென்றும் அறிய வேண்டியது அவையே பகை நீசாதி க்ஷேத்திராதி இடமாகினும் பகைத் துவ பாபிகள கூடினும் கடினமான சிறைகளையும் கடினமாயதிகரித்தும் பீடிப்புமுள்ள இருணத்தையடையப்படுவனென்றும் அவையினல் பெ ரும்பாலு மூழ்கிவிடுவனென்றும் அறிக இதில் சுபர்கள்கூடினும் அல் லது நோக்கினும் பலவித விவாதவிரோதம் இருணம் முதலிய பீடிப்புக ணீங்கி சுகமுண்டாகும்.

ரோகபாவம்.

உரோக சிவசரீராதிபதிகள் சூரியனகினும் வந்தஸ்தானதிபதி கூடி யும் அல்லது ஸ்தானத்திலிருக்கினும் அவ்விதம் சூரியன் சந்திரன் லக் கினதிபதி மேற்கண்டவர்கள் நின்ற ஸ்தானதிபதி இவர்களுடன் சிவசரீ ராதிபதி ஸ்தானதி இவர்கள் இரவியுடன் கூடினலும் அல்லது இரவியா னலும் சாதகத்துக்கு பலவிதமான சிரம் நேத்திரங் கபாலநோயும் சுர முதலியவையும் சந்திரனகில் கபாதி சீதநோய் செலகண்டம் இழுப்பு முதலிய ரோகமும் குசனகில் இரெக்தவிரணகாயம் மிருகாதி ஆயுதம் நெருப்பு முதலிய ரோகமும் புதனகில் மூலாதிக்ஷயம் இளைப்பு பீனி சாதி வாதநோய் நேத்திரநோயும் குருவாகில் பீளை முதலிய பெரும்

ரோகம் உதரவலி வலிப்பு முதலிய நோயும் சுக்கிரனகில் நேத்திரம் செலரோகம் மூத்திரகிருச்சாதி குரிநோயும் சனியாகில் க்ஷயரோகம் க்ஷ்ஃத்திராதி பித்தவாதசூலை சித்த அசுவாதினுதிநோயும் இராகுவாகில் பகை விஷாதி மேகவாயுவு விரணநோய்களும் கேதுவாகின் ரெக்தகாசாதி மூலம் முத லிய உஷ்ணரோகங்களையு முண்டாக்குவார்களென்றுங் கண்டறிக.

இவ்வித வியாதிக்குரிய சீவசரீராதிபதிகள் தனக்குரிய சுபருடன் கூடி யல்லது பார்வையிடப்பட்டாலு மிருக்குமிடம் உபயமான தல்லது ஸ்திரவிராசியானுலும் இவையில் மேற்கண்டரோகங்கள் மத்திய காலத்தில் மிக நோயாலழிந்து நிவர்த்தியாகும் சரவிராசியாகினும் அல் லது சுபபெல விராசியானுலும் அவ்வித ரோகமெக்காலத்திலும் விடா மல் தொந்தமா யிருந்துக்கொண்டிருக்குமென்றும் அறிக. பாபவீக்ஷ ணிய பெலத்துடன் இருக்கினும் பாபரிருக்கினும் இவ்வித ரோகங்களா னது பலவாறுன காலங்களிலும் இருந்துவரப்படுமென்று மனக்கவலை களும் பிணிசரீரனகியும் வாழ்ந்துவரப்படுவ னென்றறிக.

களத்திரபாவ பலன்களாவன.

களத்திரபாவத்துக்கு சப்தமாதிபதியையும் சுக்கிரன் சுக்கிரனுக்கு * ஏழாமிடத்ததிபதி நின்ற கோள்க்களையுங்கொண்டு களத்திரபலன் சொ ல்லவேண்டியது. ஏழாமிடத்ததிபதி நின்ற ஸ்தானபதிசீவ னென்றும் பாவாத்பாவாதிபதிநின்ற ஸ்தானதிபதி சரீரமென்றும் இவ்விதமே கார கவசாதும் பார்த்தறிக இந்த பாவத்துக்கு சீவசரீராதிபதி ஒரேவித கிரக மாகியும் அல்லது இருவர்களும் சுபமித்துருக்களாகியும் ஸ்தானதிபதி ஸ்தானத்திலிருப்பவர்கள் பெலவான்களாகியும் கேந்திரகோண சுபக்ஷே த்திரவாசமானவையுடனும் அந்த சீவசரீரஸ்தான வசாத் பிரபல பெலத் துடனிருக்கினும் நோக்கினும் அவ்வித கிரகங்கள் குருவினுக்கு இனை யுள்ள சுபகிரகங்களாகி யிருக்கினும் நோக்கினும் சாதகத்துக்கு விவாக மேன்மையானது உத்தமகாலத்திலும் உத்தம களத்திர சுகத்துடனும் மேன்மைகளைப் பொருந்தி வாழப்படுமென்றும் இஷ்டகாரியம் மனோ வாக் ஜெயசித்திகளும் களத்திரமூலமாகப் பலவித சுகாதி போகபோக்கி யங்களை யனுபவிப்பனென்றுங் கூறுக. சுபர்கள் பாவரானுலும் பகை முதலிய அசுபக்ஷேத்திர கெதியுடனிருக்கினும் பாப மத்தியஸ்தானங்க ளிலும் ஸ்தானம் அதிபதிகாரர்கள் பெலமற்றும் சீவசரீராதிபதிகள் அசு

* ஏழுக்கு ஏழாம் வீடு என்க.

பக்ஷேத்திரங்களிலிருக்கினும் நோக்கினும் களத்திரநஷ்டமும் பலவா றுன களத்திரசங்கமங்களும் பெருகளத்திர சாதகனுகியும் வாழ்வன் பாபரேபாவரானுல் களத்திரவகை தரித்திராதி பலவித மனோவருத்தமும் தனதானியக்குறைவும் களத்திரமின்றிப்போகுதல்லது காலதாமதவிவா கம் களத்திரமரணம் பல களத்திரமென்னும் பெருதாரவிவாகம் அகிரு த்திய களத்திரமாகும்.

ஸ்தானுதிபதியும் சிவசரீராதிபதியும் குரு இரவி குசனுகிலும் உ-டு-எ-கூ-க-இந்தயிடங்களில் சுபக்ஷேத்திரந் தனக்குரியபெலமுடையசுப க்ஷேத்திரங்களாகியுங் கேந்திரகோண பெலத்துடன் வனுத்தும் அவை தனுசு மேஷம் சிம்மம் மீனம் இவ்வித இடங்களாகியும் அவரவர்களின் மித்துருக்ஷேத்திரங்களிலும் இருந்தும் களத்திரஸ்தானுதிபதி ஸ்தா னவசாத் சிவசரீராதிபதிகள் சுப பெலத்தையுடையவராகி இவ்வித க்ஷேத்திரபெலங்களிலிருக்கினும் ஜாதகனுக்கு உத்தமகளத்திரம் ஒன் னென்றும் அவைகளால் மிகவுஞ் சுகசௌக்கியமுண்டாகும் ஷெகிர கங்கள் பகைநீசத்துவ பாபக்ஷேத்திரமாகியும் அபெலர்களாகி பாப சம்மந்தத்துடனும் சிவசரீராதிபதிக ளவ்வித மிருக்கினும் மேற்கூ றிய சுபர்கள் பாபரான பெலத்தோரானுலும் ஜாதகனுக்கு பெருதா ரமென்னும் உ-முதலிய தாரமுடையவனென்றும் அவைகளால் மன வருத்தம் ஜாதகனுக்கு களத்திரதோஷமும் சுபர்பாபராகின் களத் திரமூலம் அபகீர்த்திகளும் மனவருத்தமும் இவ்விதமான களத்திர மென்றும் பாபர் சுபராகி மேற்கூறிய இடங்களில் பகை பாவராகின் பலவித விவாகமுடையவனென்றும் பெருதாரவானென்றும் குடும்ப க்ஷயங்களும் மனவருத்தமுடையதாவன் பாவர்கள் சுபராகியும்பெல வான்களானுலும் களத்திரங்களுக்குள் சாதகன் அடங்கியும் களத்திர தோஷமும் பலவகை வருத்தங்களும் அடைவன் மேற்கூறிய இராசி யிலும் ஸ்தானத்திலும் பாபருஞ் சுபருங்கலர்ந்திருக்கினும் நோக்கி னும் சிலகாலங் களத்திரமுண்டென்றும் சிலகாலங்களத்திர மில்லாத வனுவனென்றறிய வேண்டியது அனேக காலஞ்சென்றபின் விவாக முண்டாகுமென்றும் அவ்வித களத்திர மூலமாக வனுகூலமடைய மாட்டான் ஜாதகன் களத்திரமீது அதிப்பிரீதி யடையவனுவனென் றறிக.

மேற்கூறிய களத்திர சிவசரீராதிபதிகளும் ஸ்தானுதிபதியும்கார கனிவர்கள் பெலமுடையசுபக்ஷேத்திர கேந்திரகோணகெதியுடனும்

உ-ச-எ-கூ இந்தஸ்தானம் தனுசு கும்பம் கடகம் கன்னி இவைகளில் அவரவர்களுக்கு கேந்திரகோண இராசிகளாகியும் சுபக்ஷேத்திரமாகியும் பாபசம்மந்த திருஷ்டிகளின்றியும் மேற்கூறிய கிரகங்கள் தங்கள் தங்களுக்குரிய சுபக்ஷேத்திரங்களாகியும் இருக்குமாயின் ஜாதாகனுக்குப் பலவிதமான பொருட்சேதமும் களத்திரவிருத்தியேகமென்றும் குரு புதன் இவர்களாகில் களத்திரமூலமான விசேஷ தனலாபமும் களத்திர விர்த்தி யேகமென்றும் அவை மூலிய வனுகூலங்களையும் களத்திர மூல கீர்த்தி மூர்த்தித்துவாதி பிரபலமும் இவ்வித சுகமான களத்திரமென்றுமறிக சுக்கிரன் இரவி முதலியசந்திரனுகில் உ-முதலிய பெருதாரனுகியும் முன் களத்திரத்தைவிட பின் களத்திரமானது மிகவுமேன்மையுடன் வாழ்ந்துவருவன் அவ்வித களத்திரங்களானது மிகவும் பிரபல ஸ்தானமும் பாலியாதி விவாகமாகுகையும் இவ்விதமான சுகபல னடக்குமென்றும் ஹிதரமான சனி பாம்பு குசன் முதலியோராகில் காலதாமத விவாகமும் பாலியமுண்டாகில உடன் மரிக்குமென்றும் மனதுக்கு இணையில்லாத தாகவும் பிரியமில்லாததான களத்திரங்களென்றுஞ் சொல்லுக.

மேற்கூறிய ஸ்தானந்தவிர ங-டு-க0-கக இவ்வித க்ஷேத்திரமாகியும் அவை மீனம் மேஷம் மிதுனம் துலாம் கன்னி விருச்சிகம் இவைகளாகியும் இவ்விடங்களில் சுபராகிய குரு இரவி குஜன்முதலியோர்கள் சுபபெலத்துடன் சிவசரீராதிபதிகளாகியுங் கேந்திரகோணத்திலும் பாப பெலாதி சம்மந்த வீக்ஷணியம் பகைநீசாதிஅபெலமின்றியுமிருக்கினும் மேற்கூறிய கிரகங்களானுல் களத்திரமிரண்டும் பெருதாரசம் யோகனென்றும் சுக்கிரன்சந்திரனுகில் உ-க்கு மேல்ப்பட்ட தாரமென்றும் சனியாகில் காலதாமத விவாகமும் புதனுகினும் அவ்விதமே தாமதமும் பாம்பானுல் விவாகமே கிடையாதென்றும் சனி புதன் பாபியானவர்களாகிக் கூடினுல் விவாகமில்லாதவ னென்றும் சுபர்களே பாவராகின் உண்டான களத்திரம் பலவும் மரணங்களும் பகையுடையவர்களாகுவார்கள் என்றும் களத்திரமூலிய அசுகமேதவிர சுகமடையமாட்டானென்றும் மனக்கவலைகளும்களத்திரங்களால் துக்கசோகாதிகளை யடைந்து வரப்படுவனென்றறிக.

பாபரே சுபராகில் முன் களத்திரமும் பின்களத்திரமும் தீர்க்கவிர்த்திகளை அடைந்துவரப்படும் களத்திரவகையினுல் பலவகைவருத்தமும் துன்பமும் நடந்துவரு மென்றறிக. நீசம் முதலியபகைபாப

க்ஷேத்திரங்களாகியும் அவர்கள் பாபராகி இருக்கினுங் களத்திரமொன்றே விருத்தியாகினும் குடும்ப விருத்தியின்றி யாவன் சுபராகில் பெருகளத்திர முள்ளவனுவன் சுபரே பாபரானுலும் பாபர் சுபரானுலும் இவ்விதமான தாரமே பெருதாரமென்றும் அவைகளால் சுக சௌக்கிய தனுதிமுதலிய லாப முடையவனுவன் பாம்புமுதலிய க்ஷீணசந்திரன் சனி இவர்கள் சிவசரீரமூலமாகி இருக்கினும் நோக்கினும் பரசம்யோக மனையாளாகி வாழப்படுவள் அவ்விதமனைவியாலே பிரபல யோகமடைந்து சுகத்துடன் வாழ்வனென்றுங் கண்டுக்கொள்ள களத்திரமூலமாக விசேஷ சுகசௌக்கியபலனடக்கும் ௬-அ-௧௨- இவ்விடங்கள் விருச்சிகம் மீனம் மிதுனம் தனுசு கன்னி மகரம் இந்த இராசிகள் களத்திர சிவசரீரமல்ல தவ்வதிபர்களாகி நின்றுலும் ஸ்தானுதிபதிகள் கூடியல்லது அவ்விடங்களி லிருக்கினும் நோக்கினும் அவ்வதிபர்கள் சிவசரீரமல்லது களத்திர ஸ்தானுதிபர்களாகி அவர்களுக்குரிய சுபக்ஷேத்திரங்களிலும் *சுக்ஷேத்திராதி பெலன்களைப் பெற்றிருக்கினும் ஜாதகனுக்கு மிகவும் கொடுமையான களத்திரமாகினும் களத்திரஞ் சிவவிருத்தியுடன் களத்திர சுகமுண்டாகு மென்றும் அதிக கீர்த்திமூர்த்தி யடையான் களத்திரமூலிய அபகீர்த்தி யுடையவனுவன் அந்தஸ்தான மல்லது அதிபதிகள் புதன் குசன் சனி பாம்பாகில் இவர்கள் பெலத்தால் மேற்கூறிய ஜாதகன் களத்திரவகையான குடும்ப விருத்திகளையும் புத்திர விருத்திகளையும் அடையப்படமாட்டானென்றும் அவ்வித களத்திரங்களினுலும் சுகமடையான் விபசாராதி அகிருத்திய தாரமுடையவனுவன் அவர்களே சுபர்களாகியும் சுபக்ஷேத்திர வாச சம்மந்த திருஷ்டியுடனிருக்கில் சாதகன் களத்திரமானது விசேஷ குடும்ப மில்லாவிடினும் மேகதாரனுகி சத்களத்திர வந்தனுகி வாழ்வன் சுபர்கள் சுபராகிருக்கினும் மேற்கூறியபடி தாரம் ஒன்று பிரபலவம்ச மனையாலென்றும் அவ்வித தாரத்தி னு லனேகவித தனலாபாதி சுகசௌக்கியங்களை யனுபவிப்பனென்று மறிக.

சனி முதலிய பாபகிரகமானுலும் அவர்களிருக்குமிடம் பாபக்ஷேத்திர விராசிகளாகியும் சிவசரீராதிபதிகளும் பெலமற்று பகை பாபர் புதன் சனி க்ஷேத்திரங்களிலிருக்கினும் பெலமற்று அசுபர் வீட்டில்

---

* அந்தந்த பாவங்களுக்குஞ் சிவசரீர மூலமென்ன வெனில் பாவாதிபதியும் அவன் நின்ற விடமுமேயாம்.

அபெலனுகியும் இருக்கின் விவாகம் கிடையாதென்றும் அறிக அவை களே சுபக்ஷேத்திர மல்லது ஸ்தானாதிபதிகாரகர்கள் சீவசரீராதிபர்க ளாகி சுபபெலத்தைப்பெற்று மேற்கூறிய பாபக்ஷேத்திரம் புதன்சனி இவர்களின் சுக்ஷேத்திர இராசிகளில் தனக்குரிய மித்துரு வீடாயிரு க்கினும் நோக்கினும் ரூபதாரனுகியும் காலதாமத விவாகத்தையும் அங்கியகாலத்தில் விவாக களத்திரமின்றியும் அடைவனென்றுங்கூற ப்படும்.

களத்திர வம்சங்களால் அல்பலாபத்தையுங் களத்திர வம்சக்ஷய த்தையும் அடையப்படுவன் என்க மேற்கூறிய சீவசரீராதிபதிகளுக்கு ஷஷ்டாதிபதி யல்லது அஷ்டமாதிபதிகள் நின்ற ஸ்தானாதிபதிகளா னவர்கள் களத்திரஸ்தானமான எ-கக-உ இவ்விடங்களிலும் மல்லது சுக்கிரனுடன் சுக்கிரனுக்கு எ-கக-உ-இவ்விடங்களிலு மல்லது சீவ சரீராதிபதிகளுடன் கூடி யல்லது நோக்கினும் களத்திரத்துக்குபிணி முதலிய பாதையுண்டு சனி பாம்பு கூடி யல்லது நோக்கின்தேவதை ப்ரதி பெந்தாதி உபத்திரவமுண்டென்றும் குருபுதனுகில்புத்திரதோ ஷமுடையதாரமென்றும் சந்திரன் சுக்கிரனுகில் அதியோக களத்திர மென்றும் இரவி சனியாகினும் உரோக தாரமென்றும் கூறப்படும் இவ்விதமே சுப பாபத்துவங்களறிந்து களத்திர பெலாபெலன்களை க் காண்க.

களத்திரபாவ கணிதம்.

மேற்கூறிய ஸ்தானாதிபதி ஸ்தானம் சுக்கிரன் இவர்களுடனும் சீவசரீராதிபதிகளுடனுங் கூடிய கிரக சுபா சுப பலனுக்குரியவெண் களை தனித்தனி யெடுத்து உச்சமானுல் ராசி பலனுக்குரிய வெண்க ளால் பெருக்கியும் ஆக்ஷியாகில் கிரகங்களுக்குரிய வேணகளாலயே வைத்துக்கொண்டதை யவரவர்களின் வெண் பேருக்குக் கொடுத்து வந்த ஈவில் அவ்வித களத்திர சீவசரீரங்களுக்கு க-எ-கக-க்குடைய கிரகஞ் சுபருள்ளவர்களின் ஈவைத் தாரமென்றும் மற்ற ஈவுவந்தால் பரதார போகனென்றுங் கூறுக ஆகையால் மேற்கண்ட வெண்களை தனித்தனி ஒன்பதில் கழித்த சேஷம் திசையிலும் வந்த ஈவை நு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷம் புக்தியிலும் வந்த திசா புக்தி காலங்களில் களத்திர லாபாதி சுக சௌக்கியங்களும் களத்திர மூலமான மேன்பாடுகளும் அதிக வனுகூலங்களும் இஷ்ட வசிய ஸ்திரீ போகங்கள் விசேஷமுண்டாகு மென்றும் அவர

வர்களும் அஷ்டமாதிபதி நின்ற வதிபன் பல வெண்களைக் கூடச்சே ர்த்து கூ-ல் கழித்த சேஷமும் வந்த ஈவை டு-ல் பெருக்கி முன்போல வே கழித்துக் கண்ட சேஷமும் திசைபுக்திகளிலும் களத்திரதோஷ மென்றும் களத்திரங்களால் பலவித வாதமும் களத்திர வகை க்ஷய மும் களத்திர விரோதங்கள் இவ்வித பலனடக்கும் மென்றறிய வேண்டியது.

பிதுர்பாக்கியம் உபதேசாதி பலன்கள்.

இரவியையும் புதனையும் ஒன்பதாமிடம் அதிபதி இவைகளையும் இவர்களுக்கு ஒன்பதாமிடத் ததிபதி நின்ற இராசி நாதனுடனும் கூடிய கிரகபெலரீதியாய் பிதுர்பாக்கியம் உபதேசாதிபலன்களையரிக பிதுருவுக்கு இரவிக்கி ஒன்பதாமதிபதி நின்ற இராசிநாதன் சீவனெ ன்றும் இலக்கினத்துக்கு ஒன்பதாமிடத்ததிபதி நின்ற இராதிநாதன் சரீரமென்னுங்காண்க சீவசரீர மூலகிரகங்களுக்கு ஐந்தாமதிபதி உப தேசாதிகளுக்கு சீவனென்றும் ஐந்தாமதிபதியே சரீரமென்றும்பெய ராகும் அவர்களுக்கு ஒன்பதாமதிபதி பாக்கியத்திர்க்கு சரீரமென் றும் அவர் நிற்குமிடத்ததிபன் சீவனென்றும் பெயராகும் ஆகையா லிவ்விதம் ஒவ்வொரு பாவங்களுக்குஞ் சீவசரீரகற்பிதஞ் செய்தபின் ஒவ்வொரு பாவ சீவசரீராதிபதிகள் ஏகரானால் அவர்களின் நலம் தீங் கினுக்கிசைந்தபடிபலன்களை கொடுப்பார்களென்றும் தனித்தனிகிர கமாகினும் ஓரிராசியில் மித்துருவான சுபர்களாகினும் ஒருவராகி சுப பெலத்துடையவர்களானாலும் வெகுவான மேன்மையுடன் வல்ல பத்துவமான அதர்க்கிசைந்தபாவபலனை விருத்தியுடன் அதிகமான மேன்மைகளையும் பிரபலத்தையும் அடைவன் அக்கிரகங்கள் கணித த்திற்கிசைந்துவருங் காலமான திசாபுக்திகளில் மேன்மையான அத ற்குரிய பாவத்தை விருத்திசெய்வார்களென்றும் மற்றயக் காலத்தில் விருத்திசெய்யப்பட மாட்டார்களென்றும் அவர்களின் பலாபலனுக் கிசைந்தபடி அவ்வித பாவங்களை அல்ப மத்திம பூரண மென்ற கண க்கின்படி அளவிட்டுக் கூறல்வேண்டும் அந்தபாவங்களுக்கு இணை யான சீவசரீராதிபதிகள் பெலமற்றாலும் பகை நீசாதி பாவரானாலும் அசுபராகினும் அவ்வித பாவத்திர்க்கு கிசையுள்ள பலனையடையான் அவைகள் பூர்வகாலமாக இருக்கினும் ஜாதகன் காலத்தில் அவைகள் வலுவற்றுக் குறைந்த தாயும் நஷ்டத்துடனும் போய்விடும் ஆகை யால் இவைகளை நிதானித்தறிதல் வேண்டும்.

மேற்கண்ட சீவசரீராதி பத்தியமுள்ளவையான கிரகசம்போக மொன்றுன பூர்ணபெலக்கோள்களின் பெலாபெலன்களறிந்துரைக்கவும் மேற்கூறிய சீவசரீராதிபத்தியம் பெற்ற கோட்களும் ஸ்தானம் அதிபதி காரகள் இவ்வைந்து கோட்களும் பூரணமான அவரவர்களுக்குரிய பெலன்களோடு கூடியும் சுப மித்துருக்ஷேத்திர வாசராகி இருக்கினும் சுபதிருஷ்டியல்லது சம்மந்தம் பெறினும் சாதகனுக்கு அதற்குரிய பாவமானது பூர்வ பிரபலமும் மென்மேலும் அதிகமான ப்ராபலியத்தையடைந்துவரப்படுமென்றும் அதிகமேன்பாடுகளும் மிகவுங்கீர்த்தி மூர்த்யுடன் வாழ்வர் குருவாகி ௩-க்கு மேல்பட்ட பலன்களுடனும் இருக்கின் பிதுரார்ச்சித ப்ராபலியபிரபல ராசயோகமும் தேவர்களுக்கு இணையுள்ள அற்புதனுகியும் மேன்மையான யோகங்களே யடைவன் இவ்விதமே ஒவ்வொரு கிரகங்களுக்கு முரிய பெலன்களே யாரு்ய்ந்தறிக.

மேற்கூறிய ஸ்தானகாரக சீவசரீராதிபதிகள் பெலவான்களாகியும கேந்திரகோண கெதியிலும் சுப பெலத்துடன் இருந்தும் பாபக்ஷேத்திர பாபகெதியில்லாமலும் சம்மந்த திருஷ்டியில்லாமலும் குருவாகி ஜீவசரீருதிபதிக ளேகமானவராகியும் சுபர்களாகியும் வெவ்வேருனல் சுபமித்துருக க-உ-௫-அ-க0 இந்த இராசிகள் தனக்குரிய சுபபலக்ஷேத்திரங்களாகி இருக்கினும் பிதுர் ஜீவசரீரதிடவானுகி வாழ்வன் சரவிராசிகளிலேயே மேற்கூறிய ஐவகை கிரகபெலன்களுடன் இருக்கினும் ஜாதகன் பிதாவிருத்த காலவரை ஆயுள் விருத்தியுள்ள வனுவான் அவ்வித கிரகங்களே பாக்கிய ஜீவசரீரர்களானுல மிகவுமோ..மான தனவிருத்தியையுடைய பிதாவாகியும் பிரபல கீர்த்தியுடனும் மிக்கமேன்மையான இராஜத்துவமுடைய யோகவானுய் பிதாவாழ்வனென்றும் புகழுடையதாகியும் பெரும் பிரபலயோகவானுகிய பிதாவாகவும் கூறுக சரசரமே இருசிகளாகிய சுபமுடையதாகில் வார்த்தீக பூரணத்தில் பிதாமரணமடைவனென்றும் சரஸ்திரமாகில் வார்த்தீகமுதலிலேயே மரணமென்றும் சரமுபயமாகில் வார்த்தீகமத்தியில் மரணமென்றும் ஸ்திரஸ்திரமாகின் பாலியத்திலேயே மரணமென்றும் ஸ்திரமுபயமாகில் பாலிய மத்தியில் மரணமென்றும் ஸ்திரஞ்சரமாகில் பாலிய பூர்ணத்தின் வயதில் மரணமென்றும் உபயாதுபயமாகின் மத்திம மத்திமத்திலேயே மரணம் என்றும் உபயம் ஸ்திரமாகில் மத்திம வல்பத்திலேயே மரணமென்றும் உபயமுஞ்சரமுமாகில் மத்திம தீர்க்கவயதிலேயே பிதாவுக்கு கருமமுண்டாகு மென்றறியவேண்டியது.

௩-எ-கக-கஉ இவ்வித இடங்கள் சுபக்ஷேத்திரமான பெலத்துடன் இருக்கின் அவை சரசரமானுல் மத்திம வயதின் பூரணத்திலேயே மரண

மும் சரஸ்திரமானுல் மத்திம மத்திமவயதில் மரணமென்றும் சரமுபய மானுல் மத்திம அல்பத்தில் மரணம் என்றும் ஸ்திரஸ்திரமாகில் பூரணக் கடையில் பிதுர்மரணமும் ஸ்திர சரமாகில் பூர்ணமத்திம வயதிலும்ஸ்தி ரமுபயமாகில் பூரண வல்பத்திலும் உபயாது பயமாகில் முன் கூறிய விதிப்படிக்கிக் கண்டறிய வேண்டுவனவாம் ௬-௯-அ இவ்வித ஸ்தானங் களில் பிதுர்முதலிய பாவ சிவசரீருதிபர்கள் பெலமுற்றுஞ் சுபக்ஷேத்தி ரத்திலும் இருக்கினும் அவ்வித பாவஸ்தானுதிபதிகள் தனக்குரிய சுப க்ஷேத்திர பெலன் பெற்றிருக்கினும் ஜாதகனுக்கு மேற்கூறிய ஜீவசரீ ராதிபர்களல்லது பாவஸ்தானுதிபர்கள் பெலமுற்றும் தனக்குரிய இடங் களிலிருக்கில் அவை சரசரமாகில் பிதுர்வம்சக்ஷயமும் பிதாவுக்குப் பல வித நோய்கள் இருணங்கள் இவைகளால் வருந்திப் பின்வயதில் விருத் தியாகினும் கவுமாரவயதில் பிதுர்கருமமும் ஸ்திரமாகில் யவ்வனவய தில் கருமமும் பிதுர்வம்ச தனமுள்ளவனென்றும் உபயமாகில் பாலியத் திலேயே மரணமென்றும் அவர் பாபருனும் பாபசம்மந்தம் அல்லது பிதுர்ஸ்தானமான ஒன்பதாமதிபதி இரவி சனி முதலிய பாவராகினும் பாலியத்திலேயே தகப்பன் மரணம் தகப்பன் வழி சொத்துக்களில்லாத வனுகி வாழப்படுவனென்றும் பாவர் சுபராகினும் அவைகள் தனக்குரிய சுபக்ஷேத்திர பலன்களுடனும் சுப பலமைத்திர சம்மந்த திருஷ்டி களையடைந்து பெலவான்களாகில் பிதாவிருந்த வயதுவரை ஆயுளுடை யவனுகினும் குடும்பம் பிதுருள்ளவரை க்ஷயமும் பலவகை வருத்தங் களையும் துன்பத்தையும் மனதுக்கங்களையும் பலவகை கஷ்டநஷ்டம் சொத்து இல்லாதவனுகியும் லோக இருணத்தையும் அடைந்து வரப் படுவனென்றறிக.

மேற்கூறிய ஜீவசரீராதிபதிகள் அபெலராகி சனி இரவி பாம்புகளா கியும் ௯-௫-அ இவ்வித இடங்கள் அசுப பாப க்ஷேத்திரமாகியும் பகை நீசாதி பாப பெலன்களுடனும் பாப மத்தியமாகி இருக்கினும் கற்பமா னது முதற்கொண்டு அதிவாலிபம் என்ற குழவிப் பருவத்திலேயே தகப்பன் மரணமாகி விடுவனென்றும் அவைகளை சுபர் திருஷ்டி சுப க்ஷேத்திர பெலனுடனும் சுப பாப சம்மந்தமாகி இருககினும் நோக் கினும் சுபர்சள் பாபத்துவம்பெற்றும் மேற்குறித்த இடங்களிலிருக்கில் இந்த ஜாதகன் பிதா பாலியவயதில் மரணமாவன் தன்மமுதலானவை கள் விசேஷ பிரபலமாக இருந்து வரப்படுமென் றறியவேண்டும்.

உபதேச சிவசரீராதிபதிகள் விசேஷ சுபமானதாயும் ௫-௯-௩-௧-௧0 இவ்வித இடங்கள் குருவீடாகி இருக்கின் பிரம்ம வித்யாதியோகமார்க்க

அஷ்டமாசித்தியான உபதேசமும் புதனுடன் அல்லது புதன் வீட்டிலிருக்கினும் ஞானவானுகி விவேகமான உபதேசாதிக் கிரகமும் சுக்கிரனுடன் அல்லது சுக்கிரன் வீடாகில் பெண்தேவதாதி உபதேசத்தையும் மேன்மையும் அடைவன் சனி பாம்பு முதலியோராகினும் அவர் வீடானுலும் பல சில்லரை தேவதை நீசத்தொழில் உபதேசம் இவ்விதபாபோபதேசனுகி வாழ்வனென்றும் அறிக.

பிதுர்பாவாதி கணிதங்கள்.

சிவசரீராதிபதியுடனும் ஸ்தானம் அதிபதி இவர்களுடனுங் கூடிய கிரக சுபாசுப வெண்களுக்கு இசைந்தபடி உச்சமான கிரகத்துக்கு இராசி எண்ணுற் பெருக்கியும் மற்ற ஆக்ஷிக்கி ௬-ல் ௩-பங்கு சேர்த்தும் நட்புக்கு ௨-பங்கு சேர்த்தும் பகைக்கி கால்பங்கு சேர்த்தும் கூட்டிக்கண்ட தனித்தனி எண்களையும் அவரவர்களின் பூராவான வெண்களின் பேருக்குக் கொடுத்துக் கண்ட ஈவு சுபத்துவம் தெரிந்த கிரகவெண்களின் ஈவு எவ்வளவோ அத்தனை பிதுர்வம்ச உடன் பிறப்போரென்றும் சுக்கிரன் சந்திரன் புதன் கன்னி மிதுனம் மீனம் தனுசு விருஷபம் துலாம் இந்த இராசியில் கிரகமிருக்கிறதாயினும் மேற்கூறிய கிரகங்களாலும் கொடுத்துவந்த ஈவாகி லவ்வெண்களை பாட்டன் பின் தாரங்களுக்கு உதித்த பிதுர் சகோதிரங்களென்றும் அல்லது பாட்டன் மறுதாரமுடையவனென்ற விதிகளையறிந்து கூறல்வேண்டும் மேற்கண்ட வெண்களை தனித்தனி கூ-ல் கழித்த சேஷமும் வந்த ஈவை ௫-ல் பெருக்கி ஒன்பதில் கழித்த சேஷம் திசாபுக்திகாலங்களில் பிதுர் பிரபலம் யோக மேன்மைகளையுஞ் சுகசவுக்கியங்களையும் அடையக்கடவன்.

அந்தந்த கிரகங்களுக்கு அஷ்டமாதிபனின்ற வதிபனுடன் கூடிய வெண்பெலத்தைக் கூட்டி ச-ல் கழித்த சேஷந்திசையிலும் வந்த ஈவை ௫-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷம்புக்தியிலும் பிதுர்வம்ச கஷ்டதுக்க மரண கருமசூதகமும் பலவித இடுக்கமும் பொருள்சேதம் பலவ நைவருத்தமும் பிதுருவம்சத்தால் உண்டாகுமென்றும் கண்டறியவேண்டியது கடைத்திசைபுக்தியிலு மெவை விசேஷ பாபபெல திசாபுக்தியோ அந்தக்காலம் பிதுருகருமமென்றும அதிக யூகத்துடன் கண்டறிந்துகொள்க.

கருமவிராச்சிய பலன்.

குரு வசாத் கருமாதிபதியான பத்தாமிடத்ததிபதி நின்றுதி இராச்சியத்திற்கு சரீரமென்றும் ஜென்மவசாத் பத்தாமிடத்ததிபதி நின்ற

ராசிநாதன் இராச்சியபாவத்துக்கு சீவனென்றும் பத்தாமிடத்ததிபதி நின்ற கோள்கருமத்திற்கு சீவனென்றும் ஏழாமிடத்ததிபதிநின்ற இராசிநாதன் கருமபாவத்துக்கு சரீரமென்றும் சுக்கிரனையும் பத்தாமிடத்தையும் அதிபதியையும் இவைகளைக்கண்டு கருமம் இராச்சியபலன்களையும் கூறப்படும்.

சீவன பாவம்.

சனிவசாத் ௰-மிடத்ததிபதிநின்ற இராசிநாதன் உத்தியோகாதி ஜீவனத்துக்கு சரீர காரணர்களென்றும் பத்தாமிடத்ததிபதிக்கி ௰-மிடத்ததிபதிநின்ற இராசிநாதன் உத்தியோகாதி ஜீவனங்களுக்கு ஜீவகாரணஸ்தர்களென்றுங் கூறுவாம் மேற்கூறிய பாவங்கள் மூன்றிற்கும் ஜீவசரீராதிபர்கள் பெலமுற்ற சுபராகியுங் கேந்திரகோண உச்சாதியான தனக்குரிய சுப பெலக்ஷேத்திரங்களிலும் ஸ்தானாதிபதி காரகர் பத்தாமிடம் இவைகளின்கூட சுபசம்மந்த திருஷ்டி முதலிய பெலன்களுடன் உத்தம கிரகங்களாகி வேறு எவ்வித அசுபசம்மந்தமுமின்றி பெலத்தும் மேன்மையுடனிருக்கினும் பாபக்ஷேத்திரம் பாபமத்திய இடங்களின்றியிருக்கினும் சுபர்களாயல்லது சுபக்ஷேத்திரமானாலும்அவரவர்களுக்குரியமித்துருக்ஷேத்திரமாகியும் பெலத்தும் இருக்கில் ஜாதகன் பிரபலமான ஜீவனஉத்தியோகமும் இராச்சிய சீவசரீராதிபதி ஸ்தானாதிபதி குரு ரவியல்லது குஜனாகில் முன்கூறிய பிரபல பெலங்களுடனிருக்கினும் சுபவீக்ஷணியமானாலும் விசேஷ பிரபலத்துடைய மேன்மையுடன் அனேக இராச்சியாதிபனாகியும் பிரபலவானாகியும் கீர்த்திமூர்த்தியுடன் வாழ்வன் இத்துடன் கருமவசாத் கூறிய ஜீவசரீராதிபதிகளும் ஸ்தானாதிபதிகளும் மேற்கூறிய சவுமிய சுபராசி சுபக்ஷேத்திரங்களில் வாசஞ்செய்யில் விசேஷ சத்கருமமுடைய மேன்மையும் பிரபல கீர்த்திவந்தனாகியும் அதிக மேன்பாடுடன் அரசனாகிவாழ்வன் மேற்கூறிய ஜீவன உத்தியோகமூலமான ஜீவசரீராதிபதிகள் பெலவான்களாகியுங் கேந்திரகோணாதி உத்தம பெலத்துடனிருக்கில பிரபல ஜீவனயோகனாகி எவ்வித பிரஜைகளுக்கும் மேலானவதிகாரஞ்செய்து புகழுடன் ஜீவனஞ்செய்வன் மேற்கூறிய காரணவேதுவில் யார்வகை மூலத்தால் சீவசரீர சித்தாந்த மேற்படப்பட்டதோ அவர்களின் பாபசுபத்துவம் முதலியதும் சத்துரு மித்துரு வாதிசம பெலங்களின் விஷயங்களையுங் கண்டு இவைகளின் பாவங்களைக் கூறுக. மேற்கூறிய கிரகங்களின் பாபசுபத்துவங்கள் அறிவதில் பாவராகியும் மிகவும் அப பெலன்களுடனும் இருக்கின் அந்த பாவங்க

ளால் குறைவும் கெடுதலையும் அவ்விதபாவமே அபாவமென்றுங் கூறப் பட்டனவாம்.

இராச்சிய சீவசரீராதிபதிகளும் ஸ்தானாதிபதிகளும் பெலவான்க ளாகியும் அதில் சுபபெல குரு சனி அவர்களாகிலும் பெலமுற்று தனக் குரிய உ-க்குமேற்கொண்டஸ்தான பெலன்களுடன்எ-க-இவ்விடங்களில் பூரணசந்திரனாகி இருக்கினும்நோக்கினும் சாதகனுக்கு விசேஷமானபிர பலத்தையுடைய இராச்சியவதிபனாகியும்இயாவரையு நிகர்க்காமல் வல்ல பனாகியனேக இராச்சியங்களையும் நூதன நூதனமாகச்சேர்ப்பன் அவை யாவது க-ரு-கூ-க0-இவ்விடங்களாகியும் மேற்கூறிய பெலன்களுடனும் இருக்கில் விசேஷகிருமாதி இராச்சியங்களையும் அனேகவிதமான பிரபல அங்கங்கள் குதிரை யானை பல்லக்குமுதலிய விசேஷ அகண்ட இராச்சி யாதி பனாகிவாழ்வன் சுக்கிரனல்லது சந்திரனாகினும் மேற்கூறியஸ்தான பெலன்களுடனும் முன் கூறிய பெலப்படிக்கும் இருக்கின் அனேகவித இராச்சியாதிபனாகினும் ஓரரசனுக்குள்ளடங்கி பூசக்கிரக குடைபிடித்து வாழ்வன்.

புதனல்லது ரவியாகினும் அல்பமான கிருமமுடைய சிற்றரசனுக்கு ங்கீழுற்ற வதிபனாவன். க்ஷீணசந்திரனாகில் சாதாரண விவசாய பிரபல யோக வானாகி வாழ்வன் பாம்பு குசன் முதலியோராகில் ஒன்று மின்றி பூமி முதலியவகை இன்றியும் அலைவன் சுபரேபாவராகி இவ்வித பெல னாகில் பூர்வார்ச்சித விசேஷ அரசத்துவயோக ராயிருந்தும் மத்தியில் கெட்டு விடுவர்கள் க0-ரு-எ-சு-அ-இவ்வித வீட்டில் சுபகிரகங்கள்பெல முற்ற வரானாலும் சிலநாள் வரைதான் இராச்சியாதிபனாகினுங் கிடையா மல் திண்டாடிப்பின் அடைவன் கஉ-க-உ-இவ்வித இடங்களில் சுபர் பெலத்து இருப்பராகினும் சீவசரீராதிபர்களும் வலுவுடனிருக்கில்ஜாத கன் முன்னார்ச்சித இராசத்துவாதி மொத்தபூமி அதிபதித்துவ மில்லா மல் இவன் நாளில் புதிதாக சிவீகாராதி அபிமானம் பெண்வழி இவை கள் மூலமாய் பூமி கிராமம் இராச்சியாதி பத்தியங்கிடைக்கும் க0-எ-மி டமாகினும் இவையில் பாதி லாபம் அபிமானாதி சிவீகாரம் பெண்வழி இவைகளால் பூமி முதலிய வீடுகள் கிடைக்கும்.

ஜீவ சரீராதிபதி சுபராகியும் ஸ்தானாதிபதி ஸ்தானத்தி லிருப்ப வர்கள் அசுபராகியுங் கேந்திரகோண யிடங்களில்பிரபல பெலத்துட னிருக்கினும் நோக்கினும் பெண்வழியினாலும் சிவீகாராதிகளாலும் பிரபல தனம் முதலிய வதிகார ஆதிபதித்துவங் கிடைக்கும்.

பாவர்களே பாவராகியும் சீவசரீராதிபதிகளும் பாவராகி இருக்கில் பிறர்பூமி பிறர் இராசாங்கத்துக்கு ஆசைப்பட்டு தன்கைப்பொருளையுந் தோற்றுப் பலவித கஷ்டநஷ்ட மடைவன் சுபரும் பாவருமாகக் கலர்ந்திருக்கின் பலநாள் பரபொருளில் விரயஞ்செய்தபின் னிவனுக்கு சில வல்பலாபங் கிடைக்கும் சுப பெலபிரபலமுடையவர்கள் குரு சுக்கிரன் சனி ரவி இவர்களாகி தனுசு மகரம்மேஷம் கன்னிகும்பம் துலாம் இவைகள் அவரவர்களுக்குரிய சுப க்ஷேத்திர பெலத்துடன் உ-க்கு மேலான பெலன்களை சீவசரீராதி ஸ்தானம் அதிபதி இவர்களுக் கிருக்கில் இவனுக்குஇனமாகவும் பிரிய வசியத்தின் பேரிலும் அயல்மன்னர்கள் இனமாக அனேக தனங்களையும் பூமி கிருமங்களையும் அனுபவிக்கும்படி தியாகமாகக் கொடுத்து அவைகளால் லாபத்தை யடைவனென்றுங் காண்க.

மேற்கூறிய ஜீவ சரீராதிபதியும் ஸ்தானாதி முதலியோர்கள் தனதுச்சம் பெலமித்துரு க்ஷேத்திராதிகளாகியுங் குருமுதலிய சுக்கிரனாகியும் இருக்கி லேராளமான பூமி விருத்தியுடன் வாழ்வன் அவர்களே அபெலமுடையவராகியும் பெலமற்று இருக்கினும் ஸ்தானம் அதிபதி சீவாதிபர்கள் பாப க்ஷேத்திரமாகியும் பெலமற்ற கூ-அ-கஉ இவைகளல்லது இவைகளுக்கு இணையான பாபக்ஷேத்திர மாகினும் பூர்வார்ச்சிதமிருந்து அழிந்து போய்விடும் இரவி சந்திரன் குரு வல்லாத கிரகங்கள் எவரானாலும் சுபபெல சீவ சரீராதி ஸ்தானம் அதிபர் இவர்களாகியும் பெலத்துட னிருக்கினும் பூர்வார்ச்சித மின்றி சுயார்ச்சிதமாகவே விசேஷ பூமி கிரகவாகனாதிகளையும் இராஜவனுகூல வதிகாரத்துவங்களையும் அடைவன் இரவி சந்திரன் குரு இவர்களுடன் அல்லது இவர்களேமூலமுடையவர்களாய் இவர்களேசீவசரீராதிபெலத்துடன் இருக்கில் விசேஷ பிரபல வரசத்துவம் பெற்றுவாழ்வனென்றும் புதன் சந்திரன் சுக்கிரனாகி கேந்திரகோணமான க-சு-எ க0-ரு-கூ-உ-இவ்விடம் தனக்குரிய சுபக்ஷேத்திர பெலமாகி ஜீவசரீராதிபர்களாவது மூலகாரணஸ்தராவது புதன் சந்திரன் சுக்கிரன் கேது இவர்களி லெவராகினும் பெலக்கினும் பெண்வகைப் பொருள்கள் பூமி கிரகவாகனாதி தன பிரபலமடைவன் சீவன விஷய வசாத் சீவசரீராதிபதிகள்பெலத்துடன்கேந்திரகோணவானாய் ரவி சந்திர குருமூலமாகவும் இவர்களே சீவ சரீராதிபத்தியம் ஸ்தானம் அதிபதித்துவத்துடன் அவர்களின் சுக்ஷேத்திர இடங்களில் பகை நீசாதி இன்றி சீவசரீர ஐக்கியத்துட னிருக்கினும் நோக்கினும் பெலத்து ரு-கூ-க0-கஉ-உ

இவ்விடம் ரவி குரு மதி இவர்களின் வீடாகி இருக்கின் ராஜாங்கங்க ளில் விசேஷ பிரபல கீர்த்திபெற்ற ஜீவன உத்தியோக முடையவனு கியும் யாவரும் மெய்க்க வாழ்வன் அதிக பாபர்வீடு பகைபாவரான சனி பாம்பு இவர்கள் கூடினுமல்லது நோக்கினும் மத்தியஸ்தானத்தி லிருக்கினும் சுபர்கள் பாவராகிக் கூடியல்லது பார்த்தாலும் இரா ஜாங்க வடிமை கீழ்த்தொழில் புரிவன் அல்ப ஜீனமுடையவனுவன் ஜீவசரீராதிபர்களும் பெலமற்று பகைபாபராகி பாபக்ஷேத்திரமாகில் கடுமையான வல்பத்தொழிலுங் கருமஹீனமும் குறைவானஜீவனஞ் செய்வன்.

மேற்கூறியவர்கள் கூ-அ-கஉ-ஙு-இவ்விடங்கள் சுபராகி இருந்தும் பகைபாபத்துவம் பெற்றுல் ஜீவனம் பிரபலமாக இராசாங்கத்திலிருந்து மத்தியில் குற்றமுடையவனுகி இராஜாபராதியாகி ஜீவனத்திலிருந்து விலக்கப்பட்டும் தெண்டனைகளையும் அடைவன் அதில் ஜீவ சரீராதிபதி கள் சுபபெலவதிபராய் மாத்திரும் வலுக்கில் சீவனம்போய் மருபடி கிடைக்கும் அனுகூலம் பெருவன் குற்றம் முதலிய தாழ்மை நிவர்த்தி யாகும்.

மற்றய உ-ரு-௬-எ-கக-இவ்விடமாகியும் சீவ சரீராதிபதிகளு மூல காரணஸ்தரும் சுப பெலமுடையராகின் அதிலும் புதன் சந்திரன் முத லியவர்களாகி பெலத்திருக்கில் மிகவும் பிரபல வாணிபத்துவம் மொத்த மான கண்டிராக்ட்டு ஒப்பந்த சம்மந்த மிவ்வித வியாபாரம் புகுந்துவேலை செய்து அனேக அடிமைமுதலிய பிரபலத்துடன் சுவயமுயற்சியுடனும் வல்லப கீர்த்தியாவன் அபெலராகினும் பகைபாபக்கோளாகினும் மேற் கூறிய இடங்களில் மேற்கூறிய கிரகமிருக்கில் வியாபாரிக்குள் கூட்டு முதலிய அல்ப வியாபாரமும் பின் மேன்பாடாகிய பிரபல மடைவன்.

மேற்கூறிய இடங்களில் அசுபர்களே சுபராகி ஜீவ சரீராதிபர்கள் மூலகாரணத்தரும் அல்பாதி பெலன்களைப் பெற்றிருக்கினும் முதல் விருத்திபோல் வியாபாராதி ஜீவனங்களில்காண்பித்து நஷ்டமாகிப் பின் பிரபல வானுவன் அமரபக்ஷ சந்திரனுகின் அடிமை செய்து ஜீவிப்பன் கூ-ஙு-கஉ-கக-இவ்விடங்களில் சுபர்களே சுபபெலனுகியும் * சீவசரீராதி மூல கருத்தாக்களும் பெலக்கில் சுவய ஜீவன வல்லபனுவன் குருவாகி இருக்கின் சாஸ்திராதி உபதேச ஜீவனம் இரவி சந்திரனுகில் இராசாங்க

---

* அந்த ஜீவன பாவாதிபதியேயாம்.

ஜீவனம் புதனாகில் வியாபாராதி ஜீவனம் சுக்கிரனாகில் புராணாதி வித்தியா ஜீவனம் சனியாகில் வைத்திய மாந்திரீகாதி ஜீவனம் பாம்பாகில் விவாதம் பேசல் முதலிய க்ஷுத்திர முயற்சிகளால் ஜீவனஞ் செய்து வருவனென்றும் பகைபாவத்துவ அபெலகிரகமானால் அடிமைமுதலிய அதம ஹீனஜீவனஞ் செய்தும் கூ-அ-கக-ல் பகை சத்துரு க்ஷேத்திர சிவ சரீராதிபர்கள் சனி பாம்பு முதலியவர்களாகில் திருட்டு மான ஹீனம் கீழ்க்குலத்தொழில் புரிந்து ஜீவனஞ் செய்வனென் றறியவும்.

இராச்சிய ஜீவனாதி பாவ பல கணிதமும் காலவிதிகளுங் கூறுகின்றனவாம்.

அந்தந்த பாவஜீவ சரீராதிபதிகளுடனும் ஸ்தானம் அதிபதி இவர்களுடனுங் கூடிய சுபாசுபபெல கிரகங்களுக்குரிய வெண்களை உச்சமானால் அந்த கிரகமிருக்கும் இராசி எண்ணாற் பெருக்கியும் ஆக்ஷியானால் அவ்விராசி யெண்ணில் ஒ-பங்கு சேர்த்தும் நட்புக்கு உ-பங்கு சேர்த்தும் பகை வ-பங்கு சேர்த்தும் உள்ள ஒவ்வொரு தனித்தனி கிரக வெண்களை சேர்த்த தொகையை அவரவர்களின் பூராவான வெண்பெருக்கு கொடுத்த ஈவு சுப ஈவை யெடுத்து கூட்டி முன்போல் கழித்து நின்ற சேஷ திசாபுத்திகாலம் அந்தபாவத்தின் பலன் அந்தஜாதகனுக்கு அடையவேண்டுவதில் பிரபல திசாபுக்தி யென்றும் இராசாங்கமோ அல்லது பூமியோ உத்தியோகாதி ஜீவனமோ அவை பிரபல உன்னதமாகு மென்றும் கிரகங்களின் தனித்தனி முன்போல் வந்த தொகையை கூ-ல் கழித்துக் கண்ட சேஷம் திசையிலும் வந்தஈவை டு-ல் பெருக்கி கூ-பதில் கழித்துக் கண்ட சேஷம் புக்திகாலங்களிலும் இராசாங்கம் பூமி உத்தியோகாதி பிரபலங்களுண்டாகுமென் றறிக.

அந்தந்த பாவசிவ சரீராதிஸ்தானம் மூலகாரண மிந்தகிரகம் ஸ்தானம்நாதனுக்கு எட்டாமிடத்ததிபதி நின்ற இராசிநாதனுடன் கூடியோர் முதலிய கிரக சுபாசுப வெண்களை முன்சொல்லிய இராச்சியாதி ஜீவன கிரக வெண்களுடன் தனித்தனி சேர்த்து முன்போலவே கழித்துக் கண்ட சேஷம் திசாபுக்தி காலங்களில் இராசாங்க உத்தியோகாதி ஜீவனங்களுக்கு பங்கம் குறைவு நஷ்டாதி துன்பங்களென்று காண்க.

இலாபவிரைய பலன்.

சென்மாதி லாபாதிபதி இராசிநாதனிருக்கு மிடத்ததிபன் லாபத்திற்கு ஜீவனென்றும் குருவுக்கு பதினோராமிடத்ததிபதி நின்ற இராசி

நாதன் லாபத்திற்கு சரீரமென்று ஜென்மாத் பனிரெண்டாமதிபதி நின்ற இராசிநாதன் விரயத்துக்கு ஜீவனென்றும் குருவுக்கு பனிரெண்டாமிடத்ததிபதி நின்ற இராசிநாதன் விரயத்துக்கு சரீரமென்றும் பெயராகும்.

லாபத்துக்கு பதினோராமிடத்தையும் அவ்வதிபதியின் பெலத்தை யுணர்ந்து லாபபலனும் பனிரெண்டாமிடம் அதிபதி இவைகளின் பெலாபெலமோர்ந்து விரயத்தையுங் கூறப்படுமென்றறிக லாபத்திற்கு சீவசரீராதி ஸ்தானம் அதிபதி இவர்கள் சுபபெல கேந்திரகோண சுபக்ஷேத்திரங்களிற் பெலவானுகியும் சுபமத்திய க்ஷேத்திரங்களிலும் இருக்கின் சாதகத்துக்கு லாபபிரபலமானதுடன் மிகவுமேலான பதிவியும் ஸ்திரப்பொருள்களின் பிரபலமும் இவ்விதமான உத்தமயோகசாதகனுவனென்றறிக மேற்கூறிய லாபத்துக்கு சீவசரீருதி ஸ்தானுதி பெலத்துடைய கிரகங்கள் சுபராகியும் தனக்கு இணங்காத பகைவர்களின் சுக்ஷேத்திர இடங்களிலும் பாபபலனைப்பெற்று இருபாரிசங்களிலும் அல்லது கூட வல்லது நோக்குங் கிரகங்கள் பகை பாவராகி இருக்கினும் விரயமதிக முள்ளவன் லாபமற்ப முடையவன்யென்றும் லாப விருத்தியையடையானென்றறியவேண்டும்.

லாப சீவசரீராதிபதியும் ஸ்தானம் ஸ்தானுதிபதி முதலியவர்கள் ஐக்கிய பத்தியர்களாகி பெலத்துடனும் மேற்கண்டவர்கள் தனக்குரிய சுபக்ஷேத்திரமான க-ச-ரு-கூ-எ-க0-இவ்வித இடங்களிலும் பெலவான்களாகி இருக்கினும் மேலாகிய சுபர்களாயல்லது பாவர் சுபராகி வாழினும் பனிரெண்டாமிடத்ததிபதி ஸ்தானம் சீவசரீராதி இவ்வித கிரகங்களானோர்க ளிருக்கினும் நோக்கினும் ஜாதகனுக்கு விரய விவாத மதிகமுள்ளன் சு-அ-கஉ-ரு இவ்வித இராசியில் மேற்கூறிய கிரகங்கள் இருக்கின் சாதகனுக்குப் பலவித லாபதிகமென்றும் விரயமற்பமென்றும் பனிரெண்டாமிடத்ததிபதி முதலிய சீவ சரீராதிபதிகள் லாபாதிபதிக்கி அதிகமான பெலத்துடையவனுகியு மற்றய லாபாதிபதி ரு-சு-அ-கஉ இவ்விடங்களிலிருக்கினும் பெலமற்ற பாவர்களானுலும் அவ்வித கிரகங்கள் பகை நீசமுடையவர்களானுலும் பஞ்சபெலன்களில் குறைவாகி இருக்கினும் சாதகனுக்கு லாப மற்பமாகியும் சிலவு சாஸ்தியாகவும் இருண்ஸ்தனுகிப் பலவித ஸ்தானப்ருஷ்டமும் பரதேச யாத்திராவந்தனுகித் திரிவனென்றும் அவர்கள் சுபபெலமுடைய சுபர்களாகியிருக்கின் சத்விஷயமான நற்கரும விஷயத்திலும் தானுதி தனவினியோகனுகியும் கீர்த்தி மூர்த்தி புகழ்ச்சி தேவதாலய

தருமமிவைகளால் தனச்சிலவும் அனேகவித ப்ராபல்ய வந்தனுகி வாழ்வன் அவ்வித விரய ஆஸ்பதமுடைய கோள்க்கள் சனி பாம்பு குசன் முதலாகிய பாவர்களாகி பெலக்தாலும் அல்லது இவர்போலொற்ற பாவர்களாகிச் சுபர் இருக்கினும் துஷ்கருமங்களிலும் பலவித அவ்யா கிருதம் முதலியவகையாலும் பர இருணங்களுக்கு ஒற்றுக்கொள்ளல் பெண்விஷயம் சத்துரு மதுபானதி நீசத்தொழில் முதலிய அசப்பிய கருமங்களில் இவன் பொருள் யாவுமழியப்படுமென்றும் அவ்வித காரணங்களால் இருணம் முதலிய துன்பங்களிலாழ்ந்து வருந்துவனென்று மனக்கவலைகளையும் அடைந்து வாழ்வனென்றறிக.

லாபவிரயங்களின் குணிதங்களாவன.

லாப பாவஸ்தானம் அதிபதி சீவசரீராதி வதிபர்கள் உடன்கூடிய கிரக சுபாசுப பெலன்களுக்குரிய வெண்களை முன்கூறிய உச்சாதி முதலிய வகைகளுக்குக் கூறியபடியுள்ள இராசி யெண்களால் தனித்தனி பெருக்கி யல்லது சேர்ந்தத் துகைகளை அ-ல் பெருக்கி கO-ல் கழித்த சேஷம் லாபப் பங்கென்றும் அறிந்தும் அவரவர்களின் தனித்தனி யுள்ள வெண்களை முன்போலவே பாவாதிபதி இருக்குமிராசி உச்சமானுல் பெருக்கியும் அல்லது அதனதின் பங்குள்ள இராசியெண்களைக் கிரக வெண்களுடன் கூட்டிய துகைகளை கூ-ல் கழித்த தனித்தனிகிரக சேஷந் திசையிலும் அதில்வந்த ஈவை டு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷம் புக்திகளிலும் அதிகமான லாபங்களைக் கொடுக்க வதிபர்களென்றும் பனிரெண்டாமிடம் அதிபதி சீவசரீராதிபதி இவர்களின்கூட சஞ்சரிக்கும் கிரக சுபாசுப் பெலன்களை முன்போல சேர்த்து கூ-ல் பெருக்கி கக-ல்கழித்த சேஷம் விரயமான சிலவு பங்கென்றும் மேற்கூறிய கிரக வெண்களை தனித்தனி முன்போலவே கண்டறிந்து கூ-ல் கழித்தசேஷந் திசையிலும் வந்த ஈவை டு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷம் புக்தி காலங்களிலும் விரயஞ்சாஸ்தி யென்றும் பரதேச யாத்திரை பலவித வருத்த முதலிய துக்காதிவாதைகளையுங் கொடுக்கப்படுமென்றும் இதில் பாவருடைய வெண்ணுல் கிடைத்த திசாபுக்தி பாபத்துவமான மேற்கூறிய திசாபுக்தியில் கஷ்ட துக்காதி தேசாடனம் இருணம் முதலிய பல வருத்தமும் சுபர் மூலமாகில் விசேஷலாபம் பிரபல சுக மேன்பாடாகிய உத்தம பலன்களென்றுங் காண்க மேற்கண்ட லாபத்திற்கும் விரயத்துக்கும் முன் சொல்லியபடி கண்டறிந்த வெண்களின் பாகங்களை யறிந்து விரயப்பங்கு லாபபங்கு அதிகமானுல் ரொக்க முதலிய தனவிருத்தி

பொருள் விருத்தி யுடையவ னென்றும் லாபங்குறைந்து விரய மதிக மானல் இருணுதிகளுள்ளவ னென்றும் லாபமும் விரயமுஞ் சமஞன பங்காகில் அந்திய காலவரை லாபத்திற்கும் விரயத்திற்கும் சரியாகி கைப் பொருளொன்று மின்றி அடைவனென்றுங் காண்க.

கும்பலக்கினம்.

கும்பலக்கினத்தின் குணகுணுதி பாவ வாரம்பபாவன.

கும்ப லக்கினத்தில் பிறந்தவன் கெருவியாவன் மணத்திடமுடைய வன் எவ்விதமான வருத்தங்களுக்கும் சத்துருக்களுக்கும் அஞ்சமாட் டான் சரீரங்கனமும் கருமை கலர்ந்த நிறமுடையவன் ஸ்தூல சரீரி தெரிந்தளவில் உள்ளவித்தையால் மானியாகி கியாதி பெருவன் பித்த ரோகமுடையவன் செய்நன்றி மரவாதவன் பெண் மோகியாவன் ௭௨-௧௧-இந்த வயசு மாதகாலங்களில் வாகனம் தவருதல் முதலிய கெண்ட மும் திடீரென்ற உபாதிகளாற் றுன்ப முடையவனுவன் ௧௬-வதுவயதில் சத்துருமுதலிய பலவகை வருத்தங்களால் கெண்டம் இந்த இலக்கின த்தை சுபர் திருஷ்டி இருக்கினும் சுபரிருக்கினும் ஆயுள் ௵ ௮0-வரை யுள்ளவன்.

சித்திரை மாதம் பஞ்சமி குருவாரம் இரவில் ஈஸ்வரன் பதவியை அடைவன் பென்றுங் கூறப்படும்.

ஸ்தூல சரீரமில்லாவிடில் நாவு நேத்திரம் முதலிய ஓர் அவைபவங் களில் குரையல்லது அதிகமான அடையாள முடையவன் யென்றறிய வேண்டுவனவாம்.

கும்ப லக்கின ஜாதகர்களுக்கு திசாபுக்தியும் யோகாவயோகாதி பலன்களுங் கூறப்படும்.

ரவி திசையில் குரு சனி புதன் இவர்களாகிய புத்திகாலங்களி லும் இந்த திசாநுதன் கேந்திரகோண கெதனுகி உச்ச சொக்ஷேத்திர விராசிகளிலும் தனக்குரிய சுப க்ஷேத்திர செலத்துடனும் புக்திநாத னும் இவ்விதமான திசாநுதனுக்கு கேந்திரகோண உச்ச சொக்ஷேத்

திர பெலத்துடனிருக்கினும் நோக்கினும் ஜாதகனுக்கு பிரபல விராஜ யோகமாம் இவைகளையே யெல்லா திசாபுக்திகளிலும் உபயோகித்துப் பார்க்கவேண்டுவனவாம்.

சந்திரதிசையில் ஸ்தானபெலத்து கிசைந்தபடி யொருபாகத்திலும் சுக்கிரன் அல்லது குரு இந்த புக்திகளிலும் திசானுதன் மதி மேஷம் விருஷபம் கடகம் கன்னி கும்பம் மீனம் இந்த இராசிகளிலும் இவைகளுக்கு கேந்திரகோணுதி பத்தியம் அல்லதுஇருக்குமிடம்இவைகளில் உற்ற புக்திகளில் மிகவு மேன்மைகள் உண்டாகுமென்றும் அறிய வேண்டியது.

குஜதிசையில் ௩-ல் ஒரு பாகமும் மேஷம் விருச்சிகம் மிதுனம் மகரம் கன்னி துலாம் இந்த இராசிகளில் இருக்கும்இராகுதிசையிலும் சந்திரன் குசன் ரவி குரு சனி இவ்விதமுடைய கிரகங்கள் திசாநாதனுக்கு கேந்திரகோண இடத்தில் சுப பெலன் பெற்றவர்களாகி தனக்குரிய இடங்களிலிருக்கினும் மல்லது மித்துரு இடங்களானும் கும்பம் தனுசு கடகம் சிம்மம் விருஷபம் துலாமிவைகளிலிருக்குங் குருதிசை யொருபாகமானவை குரு சனி சுக்கிரன் புதன் இவ்விதபுக்திகளிலும் துலாம் விருஷபம் கும்பம் தனுசு இவைகளிலிருக்குஞ் சனி திசையிலோர் பாகமானவை புதன் பாம்பு சந்திரன் குரு புக்திகளிலும் மிதுனந் தனுசு கன்னி இவைகளிலிருக்கும் புதன் திசையில் ஓர்பாகமாகிய சுக்கிரன் சந்திரன் பாம்பு இவ்வித புக்திகளிலும் விருஷபம் துலாம் மீனம் கும்பம் இவைகளிலிருக்கும் சுக்கிரன் திசை முழுமையும் சந்திரன் பாம்பு சனி புதன் புக்திகளிலும்.

இவ்வித பெலன்களுக்குரிய திசாபுக்திகாலங்களில் மிகவும் விசேஷமான தனலாபாதி ஜெயங்களும் எத்தன காரிய சித்திகளும் அனேக வித விவாதஞ் செய்தொழில் இவைகளால் பெருங் கீர்த்தி பிரபலமும் அனேகவித கட்டிடம் பூமி கிராமம் வாகனம் பாற்பசு கன்று காலி களதிகபிராபல்ய மேன்பாடுகளுஞ் சத்துரு ஜெயமும் விவாகாதி சுப சோபன் கல்யாண சந்தோஷம் முடிவுபெராத பெருக் காரியங்களுங் கை கூடுதல் இப்படிக்கி யனேகவித சுகபலன்களைக் கொடுக்கும்.

இவ்வித முன்னுரைத்த திசாபுக்திகளுள் சுக்கிரன் புதன் சனி பாம்பு இவர்கள் யோககாரகர்களின் மூலத்திரி கோணமான கும்பம் துலாம் கன்னி விருச்சிகம் இவ்வித ராசிகளில் எந்தகிரகங்களிருக்கப்

படுகிறதோ அவர்களில் குரு சந்திரன் ரவி இவர்களாகில் அவர்களுள் தங்கள் தங்களுக்கு பகைவரான கிரக மூலத்திரிகோண இராசிகளை நீங்கி மித்துருவுடையவர்களின் மூலத்திரிகோண விராசியிலிருக்கில் அதியோககாரகர்கள் என்றும் பெரும் பிரபலவான் களென்றும் மிக வுமேலான உத்தம இர்ராஜயோகாதி அதிபதித்துவங்களைக் கொடுக்கும் யோக காரகர்கள் யென்றும் பெயராகும்.

மாரகதிசை யாவன.

குசன் திசை ஓர்பாகமும் பாம்பின் திசையில் குசன் பாம்பு துர்த்தான கெதியானவர்களின் புக்தியிலும் குரு திசை சனி பாம்பு சுக்கிரன் இவ்வித புக்தியிலும் ரவி திசையில் பாம்பு சனி புக்திகளிலும் அவரவர்களின் ஸ்தானபெலத்துக்கிசைந்த மாரகராவார்கள்.

அவயோகதிசை.

குசன் சந்திரன் திசை மற்றோர் பாகமான பாம்பு சுக்கிரன் ரவி புக்தியிலும் பாம்பு திசை அவஸ்தானம் மேஷம் விருஷபம் மகரம்சிம்மம் துலாம் இவைகளிலிருக்கும் திசை பாம்பாய் துர்தானகெதியிலிருக்கும் அல்லது அவ்விதபாவியுடன் கூடும். சுபர் புக்தியானசுக்கிரன் குரு பாம்பு ரவி இவ்வித புக்திகளிலும் குரு திசையில் தனது சுக்கிரன் பாம்பு சனி இவ்வித புக்திகளிலும் சனி திசை தனது பாம்பு சுக்கிரனிலும் புதன் பாம்பு திசைகளில் குசன் ரவி பாம்பு சனி புக்திகளிலும் கஷ்டநஷ்டம் இருந்த பொருள்களுங் கைவிடுதல் இராஜதெண்டனை ஜெயில் காரகிரக பிரவேசங்களுக்குரிய பாதை இருணம்மானக் குறைவு பலவிதமான் பாதைகள் ஸ்தான பிருஷ்டம் பலவாரான பொருளும் போய் இருக்க இடமின்றியலையும் நஷ்டம் குடும்ப மரணம் பரதேசவாசம் ஆத்மா ஆத்மசமான மரணம் தேகத்தில் பலநோய்கள் அனுசரித்தல் தான்பலகவலைகளால் வருந்துதல் புத்திரகளத்திரமரணம் அல்லது உயுருடன் மரிக்கல் பலவித துக்கசோகம் முதலியவைகளும் தேகரோகாதி கெண்டங்களையும் அடைவனென்றுங் கூறப்படும்.

பிதுருகண்டம்.

ரவி திசை பாம்பு சுக்கிரனிலும் மதிதிசை குசன் பாம்பு சனியிலும் பாம்பின்றிசையில் தனதுசனிபாம்புகளிலும்சனிதிசை பாம்புரவிசனி புக்திகளிலும் சுக்கிரன்றிசை தனது பாம்பு சனியின் புக்திகளிலும்

பெலனுக்கிசைந்தபடி மாரகங்களை யடைவன பிதா பிதுர்சந்ததிபல வாராக நஷ்டமுண்டாகும் குடும்பவிஷய துக்கமிவ்வித பலன்களாக நடந்து வரப்படு மென்றறிய வேண்டியது.

மாதுரு கெண்டம்.

ரவிதிசை பாம்பு சுக்கிரன் புக்திகளிலும் சந்திர திசை சனி பாம்பு * புகரிலும் பாம்பின்றிசை தனது சுக்கிரன் சந்திரனிலும் புதன்றிசை சுக்கிரன் சனி பாம்பு புக்திகளிலும் சுக்கிரன்றிசை தனது சந்திரன் சனிபாம்பிலும் இவ்வித பாபத்துவ சம்மந்த திசாபுக்தி காலங்களில் மாதுருகர்மம் மாதுருவர்க்கதுக்க சோகாதி பலவகை வருத்தமும் பொருள்ச்சேதம் மாதுருசமானத்தார் சம்பத்து முதலிய வாகனாதி இவைகள் சேதமுண்டாகும்.

சகோதராதி லாபாரிஷ்டம்.

❁ பாம்புதிசை சனி குசன் புதன் புக்தியிலும் குரு திசைபுதன் பாம்பு ரவி புக்தியிலும் புதன்றிசை பாம்பு சனி சுக்கிரனிலும் ரவி புகர்திசை புதன் குசன் பாம்பு புக்திகளிலும்சகோதரநஷ்டம் சகோதர வரிஷ்டம் மேற்காட்டிய வகை துக்கசோகாதி ஸ்தானபேதம பலவகை வருத்தம் மனக்கவலை பொருள்ச்சேதம் விரோதத்துவங்களுண்டாகும் என்றறிய வேண்டியது.

களத்திர லாபாரிஷ்டபலன்.

ரவியின்றிசை குரு சந்திரனிலும் இராகு மதி இவர்களின் றிசையில் பாம்பு குரு புதன் புகர் புக்திகளிலும் குரு குசன்றிசை குரு புதன் சுக்கிரன் பாம்பு புக்திகளிலும் சனியின் றிசையில் புதன் சந்திரன் பாம்பு புக்திகளிலும் புதன்றிசை சுக்கிரன் சந்திரன் குரு சனி புக்திகளிலும் சுக்கிரன்றிசை தனது சந்திரன் பாம்பு புதன்புக்திகளிலும் களத்திர விவாக சுப சோபனம் பலவகை களத்திரசமானஸ்திரீ சேருதல் களத்திர போகபோக்கி மேன்பாடுகளும் மேற்கண்டதிசைகளிலும் குஜன்றிசை பாம்பு சனி இரவி புத்தியிலும் பாம்பின் திசையில் புதன் சுக்கிரன் இரவி புக்தி குசன் புக்திகளிலும் குருதிசை

---

* சுக்கிரன். ❁ இராகு கேது.

தனது சனி சுக்கிரன் பாம்பிலும் சனியின்திசை பாம்பு சுக்கிரன் சந்திரனிலும் சுக்கிரன் றிசையில் பாம்பு குசன் சனியிலும் இரவியின்றிசை பாம்பு சனி புகரிலுங் களத்திர நஷ்டம் களத்திரப்ருஷ்டம் தள்ளுண்டல் விரோதம் பொருள் சேதம் மனதுக்குக் கவலை பலவித வருத்தம் களத்திரவகை துக்கசோகாதிகளுங் ஸ்திரீ களால பலவித மான தேககெண்டம் சிரை முதலிய சீவனக்குரைவு மானக்குரைவு இவ்வித பலன் கொடுக்கும்.

புத்திரலாபாரிஷ்டபலன்

சந்திரன்றிசை புகர் குரு புக்திகளிலும் குசன்றிசை பாம்பு சனி புகரிலும் பாம்பின்றிசை குரு சுக்கிரன் * கதிர் இரண்டிலும்குருவின் றிசை தனது புதன் சுக்கிரன் மதியிலும் சனியின் றிசையில் புதன் புகர் குருவிலும் சுக்கிரன்றிசை தனது மதி குரு புதனிலும் இவ்வித திசாபுக்தி காலங்களில் புத்திரலாபமும் களத்திரத்திர்க்கு கெற்பமேன்மையும் பிரபல சுகசௌக்கியங் களனேகவித தனலாபமும் மேற்கூறிய திசாபுக்திகளிலும் சுக்கிரன் பாம்பு சனி இரவி இவ்வித புக்திகளும் புத்திர நஷ்டத்தையுங் களத்திராதி குடும்ப துக்கசோகங்களையும் கொடுக்கப்படுமென்றும் பலவித மனோவருத்தமும் குடும்ப துக்கசோகாதிகளும் உண்டாகும் இவ்வித கும்பலக்கினம் விருஷப லக்கினம் இவைகளுக்கு மொத்தமாகவே புத்திர விருத்தி கிடையாதென்றும் அவ்விதம் உண்டாகினும் புத்திர மரணங் கெற்பசேதமும் களத்திராதிகளுக்குத்தேகாரிஷ்டமும் பலவகை வருத்தங்களையும் அனேக கஷ்ட நஷ்டத்தையும் கிரகபெலன்களால் காலதாமத புத்திர லாபத்தைப் பின் களத்திரங்களா லடையப் படுவனென்றறிய வேண்டியது.

கும்பலக்கினத்திற் பிறந்தவர்களின் ஆயுர்பாவாதி துவாதசபலன்கள் கூறுகின்றனவாம்.

லக்கின இடத்ததிபதி சனியும் சந்திர லக்கினவதிபதியையும் ஆயுளுக்கு சீவசரீராதிபதிகளையுங் கொண்டு ஆயுள்பாவபலன்கள் கூறப்படும் சனி நின்ற வீட்டதிபனின்ற இராசிநாதன் சீவனென்றும்எட்டாமிடத்ததிபதி நின்ற இராசிநாதனும்நின்ற இடமும் சரீரமென்றுங் கண்டு கூறல் வேண்டும் சாதகனுக்கு இவ்வித சீவசரீராதிபதிகள் குரு

* இரவி சந்திரன்.

சந்திரன் முதலிய சுபக்கிரகங்கள் கேந்திரகோணமானது தனக்குரிய பெலன்களை யுடைய ௪-௧-௭-௰-௯-௫-இவ்வித இடம் கும்பம் மீனம் கடகம் துலாம் இவ்வித வீடுகளாகியும் அவரவர்களுக்கு உறிய சுப க்ஷேத்திர இடங்களிலும் இருந்து சீவசரீராதிபதிகள் பெலமுற்ற சுப இடங்களில் ஒருவருக்கொருவர் மித்துரு சுபராகி துலாம் மிதுனம்; மேஷம் கடகம் இந்த இராசிகளிலு மிருக்கினும் பாபர் பகை முதலிய தாழ்குலக்கோளுடன் கூடியல்லது நோக்கமின்றி இருக்கினும் சாதகனுக்கு மிகவுமேலான கீர்த்தி வந்தனாகியும் விசேஷ யோகவானாகியுந்தைரிய திடகாத்திர ஆகிருதி இவைகளுள்ள சரீரஸ்தனாகியும் ஆயுள் ௵-௱௨௰-வரை தீர்க்கமுடையவனாகி வாழ்வன் இதில் மேலேகூறிய கிரகங்களிலிருவர் பெலமுற்று சீவசரீராதிபதி பெலமற்றும் பகை நீசாதி பாம்பு முதலிய கோள்க்களை கூடி யிருக்கினும் அவை பாபர் மத்தியில் இருக்கினும் வயசு ௵-௬௬-க்குள் மாரகமென்றும் குரு வல்லது பூரணசந்திரன் சீவசரீராதிபதிகளாகியும் சரவிராசிகளிலேயே நிற்கினும் சுப பெலனாகில் ௵-௮௪-வரையென்றும் சுக்கிரன் சீவசரீராதிபதியாகி பெலம் உற்றவராகியும் முற்கூறிய கிரகங்கள் தனக்குரிய பெலத்துடன் இருக்கினும் நோக்கினும் சாதகனுக்கு ௵-௭௨-வரையும் புதன் அமரபக்ஷசந்திரனிவர்கள் சீவசரீராதிபதிகளாகிபெலமுற்ற இடம் சுபக்ஷேத்திராதி பெலத்துடன் இருக்கினும் சாதகனுக்கு ௵-௫௪-க்குள்ளாகவே மாரகமடைவனென்றும் இரவி சனி பாம்பாகில் ௵-௧௨-க்குள்ளாகவே மரணமென்றும் குசனாகில் ௵-௩௨-க்குள்ளும் பூரணசுபராகிய குரு சந்திரன் பெலமற்ற அசுபக்ஷேத்திரத்தோராகின் பாலியமரண ௵-௨௪-க்குள்ளாகவே மரணமடையப் படுவனென்றறிக.

மேற்கூறிய சந்திரன் குரு சனி முதலிய சீவசரீராதிபதிகள்இவர்கள் ஐவர்களும் பெலவான்களாகி தனக்குரிய சுபக்ஷேத்திரங்களிலும் மகரம் விருஷபம் சிம்மம் துலாம் இந்த விராசிகளில் பெலத்துடனும் தனக்குரிய இடங்களிலும் சமமானவருடன் கூடி இருக்கினும் நோக்கினும் சாதகனுக்கு ௵-௯௫-வரை யென்றும் அவ்வித ஐவர்களில் நால்வர் பெலத்துடன் தனக்குரிய சுபக்ஷேத்திர கெதியுடன் இருக்கினும் கேந்திரகோணமாகியும் பாபசம்மந்தமின்றி இருக்கினும் சாதகனுக்கு ௵-௮௧-வரை ஆயுளென்று மவை பாபர் சம்மந்தம் பெற்று பகை க்ஷேத்திரமானாலும் சீவசரீராதிபதிகள் வெவ்வேறானவர்களாகி

னும் ஷு-சுo-க்குள்ளென்றும் சனி பாம்பு கூடியல்லது பகை நீசக் கோளானாலும் அவ்வித இடம் கன்னி விருச்சிகம் மகரம் இவ்விடமல்லது மிதுனமாகினும் ஷு-சக-க்குள் ஆயுளென்றும் மூன்று கிரகங்கள் பெலமுற்றிருக்கினும் சீவசரீரம் அதில் பெலத்துடன் கூடி ௬-அகக இவ்விடம் அல்லது கேந்திரகோணம் உரிய இடங்களாகியும் இருக்கினும் ஷு-௬உ-வரை யென்றும் கோண இடங்களாயி சுபராகினும் க-௫--சு இந்த இடங்களிலிருக்கினும் சாதகனுக்கு ஷு-௫சு-வரை யென்றும் அவையே சரவிராசியாகில் ஷு-சுசு-வரையென்றும் பகை நீச இடமானால் ஷு-உஅ-வரை யென்றும் உ-கஉ இந்த வீட்டுகளில் சனி பாம்பு முதலியபாவரும் சீவசரீராதிபதி விரோதமல்லது பகை நீசாதி சுபக்கோளானாலும் சாதகனுக்கு ஷு-உக க்குள் ஆயுள் யென்றும் குசன் பாம்பு முதலியோர்கள் சீவசரீராதிபராகி முற்கூறிய ஐவர்களில் இருவர்கள் வலுத்திருக்கினும் ஷு-௬அ-வரை யென்றும் அவர்களே ஒருவருக்கொருவர் பகைத்துவாதி பாவர் சுபராகி இருக்கின் ஷு-கஅ-க்குள்ளாகவே மாரகமாகியும் ஐவர்கள் ஒருவர் பெலத்தும் மற்றவர் பெலமற்று இருக்கினும் அ-உ-கஉ-சு இவ்விடங்களில் சனி பாம்பு குசன் இரவி முதலியபாவரிருக்கினும் நோக்கினும் வருஷம் கஉ-க்குள்ளாகவே மரணம் யென்று அவர்களைச்சுபர்கள் நோக்கினும் இருக்கினும் சீவசரீராதி பெலத்துடைய சுபக்ஷேத்திர கெதி இருக்கினும் வருஷம் ௬உ-வரை பெலமானவாயுளுடையவனென்றும் கூறப்படும்.

சனி சீவசரீராதி பெலமற்று சந்திரன் கிருஷ்ணபக்ஷத்தனாகி உ-கஉ-அ-௬-இந்த இடங்களிலும் சந்திரன் பெலமற்ற விருச்சிகம் கும்பம் துலாம் மேஷம் இந்த விராசிகளிலிருக்கினும் சுபபெலத்தோர் சென்மலக்கினத்தைப் பார்க்காமலும் இருக்கினும்நோக்கினும் சாதகனுக்கு வருஷம் க0 மீ க0 க்குள்ளாகவே ஆயுளுக்கு கெடுதலும் பாலாரிஷட முடையவனென்றும் பாப பெலத்துடன் கூடிய கிரகங்கள் அசுபபெலமுடையவராகியும் இருக்கினும் நோக்கினும் வருஷம் ௫-அல்லது மீ ௫-க்குள் மரணமாகும் சனி ஒன்றுக்குடையவர்கள் பெலமற்றும் மிதுனம் தனுசு கன்னி விருச்சிகம் என்னும் அ-உ-கஉ இவைகளில் மேற்கூறிய கிரகமிருக்கினும் சீவசரீராதிபதிகள்மெலமற்றுஇருக்கினும் சாதகனுக்கு நாள் ௬0-க்கு ளல்லது மீ -௬0-க்குள் பாலாரிஷ்ட வுபாதிகளால் மரணமடைவ னென்றறியவேண்டியது.

க-எ-அ-உ-கஉ இந்த இடங்களில் குசன் இரவி சனி பாம்பு இவர்களிருக்கினும் பார்க்கினும் சீவசரீராதிபதி பெலமற்று இருக்கினும் ஒன்றுக்குடையவர்கள் பெலமற்று பகை நீசாதிபெரினும் சென்மகாலத்திலயே வலதுபாலியத்தில் பாலாரிஷ்டமுண்டாகும் யென்றும் இரவிவசாத் க-அ-கஉ-உ இவ்விடங்களில் சனி முதலிய பாவரிருக்கினும் அவ்வதிபர் பெலன் கெடினும் பிதுர்வுடன் சிசுவுக்கு அரிஷ்டமென்றும் சந்திரன் வசாத் மேர்கூறிய இடங்களில் மேற்கூறியபாவரிருக்கினும் மாதுருவுடன் சிசுவுக்கு அரிஷ்டமென்றும் சுபர் திருஷ்டி இருக்கினும் சுபக்ஷேத்திர கெதியிலிருக்கினும் மேற்கூறியவைகளுக்கு அரிஷ்டங்கள் முதலானவைகள் நிவர்த்தியாகிவிடும் யென்றறிய வேண்டியது.

ஆயுர்ப்பாவ கெணிதங்களாவன.

மேற்கூறிய ஜீவ சரீராதிபதிநின்ற விராசி கிரகவெண்களையும் சனி லக்கினதிபதி அஷ்டமாதி இவர்களுக்குரிய பெலனுக்கிசைந்த கிரக வெண்களையும் எடுத்துக்கொண்டு முன்போலவே உச்ச சொக்ஷேத்திராதி ஐவகைகளுக்குச் சொன்னப் பிரகாரம் பெருக்கியோ வல்லது சாஸ்திசெய்தோ வல்லது பெலன்படிக்கிக் குரைத்துள்ளவெண்களை இராசிபெலனுக் குரிய வெண்களையும் கூட்டி யல்லது முன்போலுரைத்த விதிப்பிரகாரங் கண்டுள்ள சுபகாரகத்வ கிரகவசாத் உள்ளபாவப்படிக் கூட்டி ௱உ0-ல் கழித்த சேஷம் வயதென்றும் மேற்கண்ட மொத்தத் தொகையை ரு-ல் கழித்த சேஷம் சவ்யாதியாய் பாலிய எவ்வன கவுமார வார்த்திக மரணமென்று மறிக இவ்வைந்து காலப்பருவ வயதுவரை அச்சாதகன் ஆயுளை யனுபவிக்கப் படுவனென்றும் மேலேகண்ட மொத்தத் தொகையை கூ-ல் கழித்த சேஷம் திசையிலும் வந்த ஈவை ரு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷம் புக்தி காலங்களிலும் ஜாதகத்துக்கு பூரண கண்டங்களென்றும் மேலே கண்ட சீவ சரீராதிபதிகளுக்கு சு-அ-கக-இவ்வித வதிபரல்லது இவைகளுக் குரிய ஜீவ சரீராதிபதிகளின் கணக்கை முன்போலவே யெடுத்து அரிந்துக் கண்ட திசாபுக்திகாலங்களில் இராஜதண்டனையால் கண்டம் பகை முதலிய ரோகம் விஷம் அக்னி ஜெலம் யுத்தசத்துரு மானக்குரைவான சங்கதிகளாலே தன்னாலாகவே சூலை மரணாதிகளைச் செய்துக் கொள்ளும்படியான கெண்டங்களேர்ப்படும் சுபதிருஷ்டி சம்மந்த பலன்களால் இவைகளை யெல்லாம் பயம்காண்பித்து நிவர்த்தியாக்கப்படுமென்றறியவேண்டியது

உ-ம் பாவம் குடும்பம் நேத்திராதி முதலான வான்கிக் பலனுந் தனபலன்களுங் கூறுவோமாக.

குடும்பபாவத்துக்கு இரண்டாமதிபதி யெந்தவீட்டி லிருக்கிறனே அவ்வதிபன் சீவனென்றும் குருவிர்க்கும் குசனுக்கு மிரண்டாமிடத் ததிபதி நின்ற இராசிநாதன் எந்த வீட்டிலிருககிறனே அவையே சரீர மென்றும் பெயராகும்.

இதில் குரு பூரண சுபபெலன் பெற்று சுபனுகியும் உபயம் சரமிவ் வித இராசியில் உ-டு-சு-கூ-ம்க-இந்தவீடுகள் மீனம் தனுசு மிதுனம் கட கம் துலாம் இவ்வித இராசிகளாகியும் அவை சுபக்ஷேத்திர பெலத்து டன் தனக்கும் பகைச் சுபரல்லது பாவர் கூடாதிருக்கினும் அவை சுப பெல க்ஷேத்திரங்களாகியும் பெலத்துடனிருக்கினும் இலக்கினத்திற்கு உ-ந-இவ்விடங்களிலும் குருவுக்கு உ-கஉ-இவ்விடங்களில் சனிபாம்பு முதலிய கொடிய கோள் அல்லது பாவர் கூடாதிருக்கினும் நோக்கா திருக்கினும் அவைகளுக்கு ஜீவ சரீராதிபதிகள் ஐக்கிய சுபம் அல்லது சுபமித்திரர்களாகியும் பெலத்துடனிருக்கினும் கேந்திரகோணுதி சுப க்ஷேத்திர பெலத்துடனிருக்கினும் ஜாதகன் குடும்பம் பிரபல விருத்தி யுடன் அனேக பந்தாணுதி தனங்களும் மேலானகீர்த்தியுடையவ ராவார் கள் சீவசரீரபெலன் கெடில் முன் குடும்பம் பிரபலத்தோர்களாய்புண்ணி யத்தராய் பிரபல பிரஜாவிருத்தியுடனிருந்து வரவர க்ஷயிக்கும் சீவசரீர மாத்திரம் வலுத்தும் உ-கஉ-ல் பாவராகினும் அதிபதி ந-சு-அ-கஉ- இவைகளினுமுறில் மகரம் மேஷம் விருச்சிகம் கன்னி மிதுனம் இவைக ளாகி பகை நீசாதி அசுபபாபக்கோள் சம்மந்தமாகியிருக்கினும் பெலன் கெடினும் தனம் முதலியதிருந்து ரொணத்துடன் குடும்பம் மூழ்கியும் பலவிதத் துக்கவனுபவமும் தனநஷ்டமும் இருக்கினும் பிரபல பிரஜா விருத்தியுடனும் செனக்கட்டை யுடையவனுவன் சீவ சரீரகிரகமிராசி இவையின் பெலனுங் கெடில் குடும்பவிருத்தியும் பொருளுமின்றி தேசா டனத்துடன் மிகுந்த கொடூரியாகித் திரிவன் சிம்மம் கும்பம் மேஷம் மிதுனந் தனுவாகினும் இவ்விராசிகளில் மேற்கூறிய கிரகங்கள் பெலத் துடன் இருக்கினும் நோக்கினும் பெலமுற்றிருக்கினும் காலதாமதத் தின் மேல் குடும்பவிருத்தியடையினும் முன்வயதில் பலவகை கஷ்ட நஷ்டமும் பலவாரான தனநஷ்டமும் பலவாரான அசுகங்களையடைந்து பின் வனுகூலமும் குடும்ப அல்பவிருத்தியும் அடைவன் மேலே கூறிய இராசிகள் ந-சு-கஉ-இவ்விடங்களாகி சனி பாம்பு க்ஷீணம் பெற்ற அசு

பக்கோள்களாலும் அல்லது சுபக்கோள் பகை நீசாதி பாபத்துவம் பெற்றுஞ் சீவசரீராதிபதிகள் பெலனற்று இருக்கினும்குடும்பவிருத்தியே யின்றியும் பலவகைக் கஷ்ட நஷ்ட துன்பத்துடனுவன் அசுபர்கள் சுப ராகி மேற்கூறிய உ-கஉ-மீனம் மகரம் கடகம் சிம்மம் கன்னி இந்தஇராசி களிலிருக்கினும் அவ்வித சிவ சரீரகிரகம் அசுபராகி ஐக்கிய சுபம் பெற் ருலும் தனத்திலும் குடும்பத்திலும் பிரபலத்துடனிருக்கினும் பின்கா லத்தில் குடும்பம் விருத்தியடையான் குடும்பத்தினல் துக்கமும் குறை வும் அவமானதிதுன்பங்களும் அடைவன் சுபராகிப் பார்வீட்டில் சனி பாம்பு முதலிய கோள் கூடவல்லது நோக்கத்துடனிருக்கினும அவ்விதி யேயாம்.

வாக்குநேரத்திரபலன்.

குரு இரவி இவர்களுக்கு இரண்டாமிடத்ததிபதி நின்ற இராசிநா தர்கள் சீவசரீரம் நேத்திரபலனுக்கென்றும் புதனுக்கும் உ-க்குஉ-மிடத் ததிபதி நின்ற இராசினுதன் எந்தவீட்டிலிருக்கிருனே அவையே வாக்கு வித்தை முதலானவைகளுக்கு சீவசரீரமென்றும் குரு சனி இவர்களுக் கும் இரண்டாமிடத்ததிபதி நின்ற இராசிநாதன் எவ்விடத்திலிருக்கி ருனே அவையே தனமென்னும் பொருளின் பலனுக்கு சீவசரீர கிரக மிராசிகளென்றும் பெயராகும்.

குரு இரவி இவர்கள் உ-ங-சு-அ-கஉ-இவ்விடங்களில் இருப்ப பதோடு அவை இரவி மதி குஜன் பாம்பு இவ்வித கிரகங்களின் வீடாகி பாபபுதனுகியும் இரவியை விட்டிழந்த புதனுகியும் சீவசரீராதிபதிகள் இரவி சனி யல்லது குசன் பாம்பு இவ்வித பாபாதிபத்தியமாகி அபெ லத்துட னிருக்கினும் நோக்கினும் ஸ்தானமதிபதி சனி இரவி இவர் பாவர் வீட்டிலும் பகை நீசாதி அசுப பெலனும் அவர்களுக்கு இர ண்டு பனிரெண்டா மிடங்களில் பாம்பு சனி முதலிய பாவரும் சீவ சரீராதிபதி பகை பாப இடமாகில் நேத்திரமே கிடையாவாம் நேத் திர ஊனமுண்டாம் குசனுகில் ரோகத்தால் நேத்திரம் போகும் சனி பாம்பாகில் நீர் முதலிய மேகவாதநோயால் நேத்திரம் போ கும் இரவி மதி பாவராகி இருக்கினும் முன் சொல்லிய வகை யால் ஆதிபத்திபராகி சீவசரீருதிபர்களானுலும் ஜெனனமுதலே நேத்தி ரம் போகும் சுக்கிரன் புதனுகில் மத்தியகாலம் நேத்திரம் போய்ப் பின் கிடைத்த போதிலும் இரவிலாவது சிலகாலத்திலாவது நேத்திர பீடை சேரும் உ-மிடத்ததிபதி வசாத் சீவசரீருதிபதி பெலனற்று அசுபராகி

பாபக்ஷேத்திரகெதியும் முன்கூறிய கிரககெதியுட னிருக்கில் வலதுகண் போய்விடும். சுபதிருஷ்டி பெலத்துடனுகில் அல்ப ஊனபீடையுண்டாகும் கஉ-மி-ட வசாத் முன்போலவே இடக்கண் பலன்களைக் கூற வேண்டியது.

வாக்கு சீவசரீராதிபதி குரு புதர்களாய் பெலவான்களாகினும் அல்லது பூர்வபக்ஷ * மதி புகரானுலும் பாபசுபர்கள் உ-கஉ-இவ்விடங்களிலின்றியும் சுபக்ஷேத்திர பெலமுறில் விசேஷவாக்குஞ் சத்தியவந்தனுகியும் பிரபலவானுகியு மெங்கும் வாக்கினுல் செல்வன் பாபபகைக்ஷேத்திரமானுல் வாக்கு நாணயமின்றியும் பலவகை கஷ்டநஷ்டமும் வாக்கு பலமின்றித் துன்பமடைவன் யென்றறியவேண்டியது.

இராண்டாமதிபதி பெலவான்களாகி கேந்திர கோண இடம் க-உ-ரு-எ-கக இவ்விடங்கள் தனுசு கும்பம் விருஷபம் மிதுனம் கன்னி இவ்விடங்களாகிக் கேந்திரகோண பெலத்துடனும் அசுப சம்மந்த மின்றி சுபர்கள் தனக்கு இணையுள்ளவராகி பாபக்ஷேத்திர இடங்களிலின்றியும் இருந்தும் உச்ச சொக்ஷேத்திர பெலங்களுடன் இருக்கினும் அத்தன விஷய சீவசரீருதிபர்கள் பெலமுடையோராகி குரு வல்லது சனியாகி இருக்கினும் அவர்கள் சரஸ்திர விருசியாகின் கோடியாந்திரமான விசேஷதனம் படைத்து வாழ்வன் ஸ்திர ஸ்திரமாகின் லக்ஷாந்தராதி கணக்குடைய தனவந்தனுகி பிரபலமடைவன் சரசரமாகில் தசசகஸ்திராதியான தனமுடையவனுகி வாழ்வன் உபயாதுபயமாகில் சகஸ்திராதி முதலான தனமுடையவனுகி வாழ்வன் சரமுபயம் ஸ்திர சரமாகினும் தசசகஸ்திராதி தனவந்தனுவன் சரமுபயம் ஸ்திரமுபயமாகில் சகஸ்திராதியும் அதற்கு கீழாதனம் படைத்து வாழ்வன் அவைகள் விரோத பாப க்ஷேத்திரமாகின் சதாதி தனமடைவன் சீவசரீருதிபரே இளைத்தும் ❁ ஸ்தானம் பெலமற்றும் உ-கஉ அசுப பாப க்ஷேத்திரமாகிதத் ஸ்தானுதிபதிகள் கெடினும் தரித்திரனுகி இருணவந்தனுவன் ஙு-சு-அ இவ்விடங்கள் பகை பாப இடங்களாகியும் சீவசரீருதிபதிகள் பெலத்துடனும் குரு சனி இவர்களிருக்கினும் இருணத்தையுடையவனுமாகியும் பலதுன்பமடைவன் தனலாபத்துக்கு மேற்கூறிய கிரகத்துக்கு இணையுள்ள பெலத்துடைய சுக்கிரன் உ-கஉ-இவ்விடங்களில் மேற்கூறிய பெலன் போலிருக்கில் குருவிற்கு கூறிய பலமும் தனவிஷயத்தில் முக்கால்ப்பங்கென்றும் புதனுகில் அரையும் மற்ற கிரகமாகில் க-ஞ-ஒ-வ-

* சந்திரன் (தத்ஸ்தானம்) அந்தவீடு. ❁ ஸ்தானங் உ-வது இடம்.

என்றமுறையே உள்ள கடன் பலன்களையும் கொடுக்கும் இதில குரு சனி கேந்திர கோணத்திலும் சுப பெலத்துடன் அவர்களின் பக்கங்களில் பாவரின்றி சுபர் இருக்கினும் அல்லது ஒருவருமின்றி சுத்தமாகியிருக்கினும் பிதாவின் பூர்வார்சித தனமெல்லாம் நஷ்டமாகி அரசருக்கும் பகையர்களுக்கும் இருணத்துக்கும் வம்பாயழிந்து தவிப்பன் தனத்தால் உயிர் சேதம் இராசதெண்டனையும் நேரும் அவ்வித குரு சனி சீவசரீராதிபதி இவர்கள் பெலன் பெற்ற கும்பம் விருஷபம் மிதுனம் முதலிய தனக்குரிய சுப மித்துரு இடங்களில் பகை பாபரைக் கூடாது பெலன் பெற்றிருக்கில் இவன் பொருள் மேற்கண்ட விஷயத்தில் சிலவடையாது நன்மை விஷயச் சிலவுடன்கீர்த்தி பெருவன் அவ்வித குருவையல்லது சனியைப் பகைக்கோளான இரவி பாம்பு முதலியவர்களல்லது பகை பாவர் கூடவல்லது நோக்கில் தர்மத்துக்கும் அரசர்கள் இருணம் பகையாராலும் நஷ்டமடைந்த போதிலும் குரு ஜீவசரீர பெலத்துடன் நோக்கவல்லது சனியைக் கூடில் இப்பொருள்கள் அழிந்து பின் யாரும் புகழக்கிடைக்கும் பிரபல யோகவானுவனென்றறிய வேண்டியது.

துர்த்தான கெதியுடன் குரு சனி இருக்கினும் பகை பாவர்கள் முதலிய அசுபக் கோள்களைக் கூடி முன்கூறிய இடங்களினின்றாலும் பெலமற்றவராணலும் சீவசரீருதிபதி கெடினும் தனமின்றித் தரித்திரமடைவன் சுபராகி பெலன் கெடில் முன்தனவந்தனுகி பின் இரப்பன் புதன் சந்திரன் சுக்கிரன் இவர்கள் பெலமுற்று கேந்திர கோணகெதியும் ஸ்தானதிபதி பெலத்துடனிருக்கினும் சீவசரீருதிபதி பெலன் கெடின் பூர்வ தனபிரபலவானுகி மிகவுங் கீர்த்தியோடு அடைவன்பின் பொருள் இல்லான் சீவசரீருதிபதி பெலத்தும் அவ்வித இடத்தோரல்லதுவதிபதி இருப்போர் பெலனற்றிருக்கில் பூர்வார்ச்சிதமொன்றும் பிரபலமின்றி சுயார்ச்சிதஞ் செய்வன் குரு அமரபக்ஷ சந்திரன் அல்லது பாவரைக் கூடி கேந்திர கோணம் நீங்கிய கெட்டவிடங்களில் அல்லது ரவி குசன் பாம்பு வீட்டினிற்கினும் பெலமற்ற பாவர்கள் கூடவல்லது இருபக்கங்களில் நின்றாலும் பூர்வார்சிதப் பொருளால் சீவனமின்றி பொருள்கள் இலமுதலிய யாவையு மிழந்தும் தன் சுயார்ச்சிதமும் கெட்டு விருத்தி இன்றியும் தன் குடும்பத்தோர் பெண்சாதிகள் முதலியோரெல்லாம் தனத்தால் மானபங்க மடைந்தும் அவர்களாலும் இஷ்ட இதரர்களின் அனுசரணையாலும் பொருள்களைத் தோற்று கடன் காரணுகியாவரும் இகழ இராசதெண்டனை இருணத்தால் தெண்டனைமுதலியதும் தனத்

கால் ஜீவனை இழக்கும்படிக்குள்ள துன்பமடைவன் சுபராகிய பூரண ந்தி குரு அல்லது பாவர் சுபத்துவம் பெற்றோர்களாகி நோக்கினும் இருக்கினும் அவ்விதம் மேலேகூறிய பாதைக ளுண்டாகிறதைப் போலொற்ற பயங்காண்பதும் கடையில் மிகவும் பிரபலமான தன லாபமடைந்து மன்னர்சமான யோகவானாகி வாழ்வன்யென்றறிய வேண்டியது.

தனம்முதலான பொருள்கள் வரும்வகையும் நஷ்டமூலமும் உரைக்கின்றது.

ஜீவசரீராதிபர்கள் இரவியாகில் பழயதனமும் மதியாகில் தாய் வழியும் வாணிபம் தேவதாவழியும் குஜனாகில் சகோதிரம் பூமியரசரா லும் புதனாகில் வாணிபம் பெந்து வித்தையாலும் குருவாகில் அரசர் வித்தை மேன்மையாலும் சுக்கிரனாகில் பெண் அரசர் சத்துருவாலும் சனியாகில் ஞாதிவாணிபம் அடிமையாலும் பாம்பாகில் அன்னியர் பரதேசம் புத்தரோண தனமும் அவரவர்கள் அவ்வகை பாவங்களு க்கு உரிய சுப பெலமேன்மை பெற்றவராயிருக்கின் அவரவர்களுக்கு கேற்றபடியுள்ள மூலவர்க்கத்தால் பொருளையளிக்கப் படுவார்கள் பெலமற்ற அபெலராகியும் பாப பகைத்து வாதிகளைப்பெற்றவராகின் அவர்க்கிசைந்த மூலவர்க்கத்தால் பொருளழிந்து பலவாராகிய கஷ்ட துன்பத்துக் குரியவனாகி அவக்கியாதியான பெயர் பெருவன் வாக்கு க்குடைய ஜீவசரீராதிபதிகள் பெலமற்ற வராகியும் சனி புதன் பாம்பு இடங்களிலும் ௨-ய்௨-இவைகளில் பெலமற்ற பாவர்கள் இருந்தும் சுபதிருஷ்டி சம்மந்தம் பக்கங்களிலாவ தில்லாதிருக்கில் ஊமை யாகி விடுவன் சுபர்திருஷ்டி சம்மந்தமாகின் உளருதல் வாக்கிலூன முடை யவனாவன் ஜீவசரீர பெலத்துடன் சுபத்து வத்துடன் இருக்கின் ஜாதகன் வாக்கு விசேஷமேன்பாட்டையும் அவர்களுடன் அல்லது ௨-மிடத்திலாவது அவ்வதிபத்திய ஜீவசரீரங்களுக்கு ௨-வதிடத்தில் குசன் சனி பாம்பு இவரிருக்கி லெவ்விதமாவது வாக்கின் அடையா ளம் நாவில் ஓர் மருகரணை உண்டை இரெட்டை நாவுடைய வனா வன் குரு இரவி முதலிய சுபபெலன் வாக்கினுக் கிருக்கின் யாவரையு நிகர்க்காமல்ப் பேசத்தைரிய வாக்கன் சுக்கிரன் மதியாகில் யாவரும் வாக்கினால் வசியம் கோமன வாக்கன் புதனாகில் பிரசங்க வாக்கன் குசனாகின் யாவரும் இகழும் வாக்கன் பாம்பாகினு மவ்விதமும் விஷங் கொடிய வாக்கன் சனியாகிற் றுமதவாக்கன் யென்றறியவும்.

காலகணிதங்களாவன.

மேற்கூறிய ஒவ்வொரு பாவங்களுக்குஞ் சீவசரீரம் ஸ்தானம் அதிபதி இவ்வசாத்து தனித்தனி ஒரோருபாவ கிரகங்களுடன்கூடிய கிரகங்களுக்கும் ஸ்திதியின் இராசிகளுக்கும் பெலாபெலனுக் குரிய வெண்களை முன் கூறிய பாவப்பிரகாரம் பெலனுக்கிசைந்தபடி பெருக்கியோ வல்லது பெல பிரகாரம் கூட்டியோ தள்ளியோகண்ட இலக்கங்களைத் தனித்தனி ஒன்பதில் கொடுத்த மிச்சந்திசையிலும் வந்தவை ௫-ல் பெருக்கி ௬-ல் கழித்த சேஷம் புக்திகாலங்களிலும் அந்த கிரகம் யெவ்வகை பாபசம்மந்தமோ அவர்களின் சுபா சுப பெலனுக்கிசைந்தபடி பாவம் அபாவங்களைச் சொல்லவும் மேற்கூறிய கணக்கு எந்த கிரகமூலத்தால் யெடுக்கப்பட்டதோ அந்த கிரகமானது இந்த இரெண்டாம் பாவ சீவசரீராதிபதிகளுக்கு சுப பாபம் கண்டும் பெலாபெலனுக்கிசைந்தபடி வைத்து அந்தீக்கணக்கினுல் கண்டறிந்த திசாபுக்திகாலங்களில் சுப பாப பலன்களை யறிக.

௩-வது சகோதராதி பாவங்களாவன.

குசனின்ற இராசிக்கி மூன்றுமிடத்ததிபதி நின்ற இராசி நாதன் சகோதராதி வகைக்கி சீவனென்றும் புதனுக்கு மூன்றுமதிபதி நின்ற வீட்டதிபன் சரீரமென்றும் பெயராகும் பாவ வசாத் மூன்றுமிடத்ததிபதியும் சீவசரீராதிபதிகளு முன்கூறிய ஸ்தானுதிபதிகளும் இவர்கள் தனக்குரிய சுபக்ஷேத்திர கெதிகளுடன் மேஷம் சிம்மம் தனுசு மீனம் சுக்கிரன் வீட்டுகளி லிருக்கினும் சுக்ஷேத்திராதி உச்சத்துவ முதலிய சுப பெலன் பெற்றும் தனக்கிணை பாவராகினும் ௨-௪-௫-எ-௯-௧0-௧௨-இவ்வீடுகளினின்றுலும் ஜாதகனுக்கு எராளமானவிசேஷசகோதரம் ௩-க்கு மேற்பட்ட பெகு சகோதிரனுனுலும் தாரங்களவர்களுக்கு பலவாகியும் குடும்ப துக்கசோகாதி பலவித வருத்தமும் குடும்பக்ஷயத்துடையவராவார்கள் மேற்கூறும் அவ்வித கிரகங்களை சுப பெலக்கோள் கூடியலது பார்க்கினும் மேன்மை யுடைய கிரகங்கள் இடங்களினிற்கினும் சில சகோதர சந்ததிகள் வெகு உத்பத்தில் வ-அரிக்கால் பங்குள்ள சகோதிர குடும்பவிருத்திகளையடைவார்களென்றும் பாப பெலனுரில் சகோதிர நஷ்டமும் சகோதரங்களால் பலவகை துக்க தனநஷ்டவிரோதம் அடைவனென் றறியவும் ௧-௩-௬-(அ) (௧௧) இவ்வீடுகளில் குசன் சீவசரீராதிபதி முதலியோர்களிருக்கி

னும் அசுபர் பெலக்கொடுங்கோள்க்கள் மேற்கூறிய கிரகம் முதலிய ஸ்தானங்களுக்கு (உ) (கஉ) லாவது உடனுறைதலுற்றாலும் சகோதரமே தீர்க்கமடையப்படமாட்டானென்றும் சிவசரீராதிபதிபெலக்கின் சகோதரபெலத்துடன் குடும்பவாழ்க்கையும் மிகவும் அனுகூலமும் அடைவன் இதில் பின் (ரு) மிடத்திலாவது * முன் மூன்றுமிடத்திலாவது அவ்வதிபதி மூல சிவசரீராதிபதிகள் இவர்களுடன் சனி இரவி யல்லது புதன் சனி சந்திரன் இருக்கினும் அல்லது இவர்களைப் பார்க்கினும் இவர்களுக்கு ரு-டு-எ-இவ்வீட்டு களினின்றாலும் அவை விருச்சிகம் தனுசு மிதுனம் மீனம் இவ்விராசி யாகிடின் ஜாதகன் குடும்பத்திலும் சகோதரம் புருஷரல்லது பெண்ணாகினும் அவர்கள் விசேஷ விபசாரத் துவர்களாகியும் பலவிதமான குடும்பம் சாதகன் இவர்களுக்கு மானக்குரைவுகளையும் அடைய விபசாராதி அக்கிருத்திய கர்த்தாவாகி வாழினும் சகோதர குடும்பம் க்ஷயமாகியும் புருஷ குடும்ப புத்திராதி சந்ததிகளை யடையாமலும் அப்படிக்கிருக்கினும் மத்தியில் சகோதர நஷ்டபாகத்தையும் அடைய நேருமென்பதாம் மேற்கூறிய ஸ்தானம் அதிபதி சிவசரீராதிபதிகள் இவர்கள் பெலமற்றும் குசன் சிவசரீர பெலமின்றியும் ரு-கக-டு-கூ-நீங்கிய இடங்களில் பெலத்துடன் சொக்ஷேத்திராதிகளுடன் இருக்கினும் குருமதி சுக்கிரன் இவர்களின் மத்தியல்லது கூடிய இடம் மிவர்களுக்கு அனுகூலமான இடங்களாகியும் பெலத்துடன் இருக்கின் உ-முதலியசகோதர விருத்தி யடைவன் சகோதரரால் அல்பவனுகூலியாவன் மேற்கூறிய இடங்களில் குசன் சொக்ஷேத்திர உச்சாதி சுபபெலன் பேரில் அல்பமான க-முதலிய சகோதரவிருத்தியுடையவனுவன் பகை பாபாதிபெலன் கெட்டிருக்கில் சகோதரமே விருத்தி கிடையான் சகோதரமில்லான் இந்த கும்பலக்கினத்தில் செனித்தவர்களுக்கே சகோதர விருத்தி கிடையாதாகும் அவ்வித சகோதரம் இருக்கினும்அகாலவிவாவகம் புத்திராரிஷ்டம் இவ்வித மனக்கவலை நேரும் கிரகங்களின் பெலன்களையும் யூகித்து பலன் சொல்லவும் மேற்கூறிய குசன் சகோதர சிவசரீராதிபதிகள் இவ்விதமுடையவர்கள் தங்கள் தங்களுடன் கூடியிருக்கும் கிரகங்கள் புதன் சனி பாம்பு குசனுகியல்லது இவ்விதகிரகங்களின் சொக்ஷேத்திரவீடுகளிலிருக்கினும் அவை வகை பாபக்ஷேத்திரமாகினும் அவ்வித சாதகனுக்கு சகோதிர விருத்தி யில்லாமலும் பலவாராகிய கஷ்டநஷ்ட துன்பங்களையும் பொருள் சேதாதி குடும்ப

* கக-மிடத்திலாவது.

ச்சேதங்களை யடைவனென்றும் அல்பமான சகோதர சந்ததிகளும் கடுமையாபத்துக்களால் மரிக்குதென்றும் அறியவேண்டியது மேற்கூறிய கிரகங்கள் நிற்குமிடங்கள் கன்னி மிதுனம் மகரம் கும்பம் மேஷம் விருச்சிகம் இவ்வீடு அவரவர்களுக்கு சொக்ஷேத்திராதிஉச்சவீடின்றிப்பகை முதலிய பாவக்ஷேத்திரமாகியும் உ-ரு-கக-அ-சு இவ்விடங்களானாலும் சுபசம்மந்த திருஷ்டி யில்லாமலிருக்கில் சகோதரமே கிடையாவாகும் தீர்க்கமடையார் அவ்வீட்டில் நிர்க்குங்கோள் குசனாகி கன்னி விருச்சிகம்முதலிய பெண்ணிராசியிலிருக்கில் அல்பமான பெண்ணுண்டாயிருக்கினும் மத்தியில் குடும்ப விருத்தி இல்லாமலும் தேகவியோகமாவள் ஆண் இராசிகளில் மேற்கூறிய கிரகம் பாபத்திவ அபெலத்துடனிருக்கில் சகோதரமே விருத்திவராது சுபபெல சுக்ஷேத்திராதி முதலான இடமாகில் ஆண் சந்ததி பலவித விருத்தியடையுமென்றறிக.

சகோதர பாவாதி குணிதங்களாவன.

மேற்கூறிய குசன் புதனிவர்களுடனு மேற்கூரிய சீவாதிபர்கள் ஸ்தானாதிபதியாவதுடனும் தனுசு மேஷம் அல்லது ங-கக மிடத்தினிற்கினும் கிரகசுபாசுப பெலனுக்கிசைந்ததாயும் சகோதிர சீவசரீர கிரக சம்பந்த சுபாசுப வெண்களைத் தனித்தனி அவ்விதஸ்தான பெல வெண்களுக்கிசையக் கூட்டியல்லது பெருக்கிய வெண்களை அந்தந்த கிரக வெண்களின் சுபாசுப பெலத்துக்கிசைந்த கிரகவெண்களில்கொடுத்துக்கண்ட ஈவுகளைக்கூட்டி சீவசரீர வசாத் சுபாசுபப்படிக்கி மேலே கூட்டிய வெண்ணை பாகித்துக்கண்டதை சகோதிர விருத்தியென்றும் அவ்வெண்ணை ஆண் பெண் கிரக சங்கைப்படிக்கி பெண் ஆண் சகோதிர விருத்திசந்ததிகளைக் கண்டறிதல் வேண்டும் மேலே கிரக வெண்களை கூ-ல் கழித்த சேஷந் திசையிலும் வந்த ஈவை ரு-ல் பெருக்கி ஒன்பதில் கழித்த சேஷம் புக்திகளிலும் சகோதர விருத்தி முதலான மேன்மையான லாபமுண்டாகும்.

முன்கூறிய கிரகங்களுக்கு கூ-அ-இவ்வதிபர்களுடனும் அவர்நிர்க்குமதிபதியுடனுமுரிய கிரகபெலாபெலனுக் கிசைந்தபடியுள்ள வெண்களைமுன்போலவே ஒன்பதிலும் பின்வந்த ஈவை ரு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷங்கள் திசாபுக்திகாலங்களில் சகோதராதி வகைகளின்றுக்கக் கிலேசாதி பலவகை கஷ்டநஷ்டங்களும் மனக்கிலேசமும் பல

வகை கஷ்டநஷ்டங்களும் மனக்கிலேசமும் பலவகையான பாதைகளை யும் அடையப்படு மென்றறிய வேண்டியது.

ச.வது மாதுருவாகனம் பூமி வித்தை வீடு முதலாகிய பலன்கள் கூறப்படும்.

சுக்கிரனின்ற இடத்திற்கு நான்காமிடத்ததிபதி நின்ற இராசிநா தன்மாதுரு கிரகவாகனங்களுக்கு சீவனென்றும் நான்கிர்க்கு நான்கா மதிபதி நின்ற இராசிநாதன் மேற்கூறிய கிரகவாகனங்களுக்கு மாத்தி ரம் சீரமென்றும் சந்திரனுக்கு நான்காமதிபதி நின்ற இராசிநாதன மாதுருபாவத்துக்கு சரீரமென்றும் வித்தைக்கு புதனுக்கு நான்காமிட த்ததிபதி நின்ற இராசிநாதன் சீரமென்றும் குசனுக்கு நான்காமிட த்ததிபதி நின்ற இராசிநாதன் பூமி பாவத்துக்கு சரீரமென்றும் இவை களுக்கெல்லாம் சீவன் சுக்கிரனென்றும் கண்டறியவேண்டியது இவ்வி தம் ஒவ்வொருபாவங்களுக்குஞ் சீவசரீரமறிந்துரைக்கிற் பலன்கள்சித் திபெருமென்றுங் கூறிய நான்காமிடத்ததிபதி கேந்திரகோணமான க- ச-ரு-எ-இவ்விடங்களில் தங்களுக்குரிய சுபகேந்திர கோணமாகியும் சுக்ஷேத்திராதி உச்சம் முதலிய பிரபல பெலன்பெற்றும் குருவல்லது பூரணசந்திரன் சுக்கிரன் இவர்கள் கேந்திரகோண கெதியாகியும்நட்பு முதலியசுபபெலமுரிய இடங்களைப் பெற்றும்இருக்கினும் அவர்களின் உபயபாரிசமாவதுஉடனுவது பாம்பு சனிமுதலிய பாபபெலனுடைய வராயிருக்கும் கிரகங்கள் கூடாமலிருக்கினும் சீவசரீர பெலத்துட நடனிருக்கின் அந்தசாதகன் நரவாகனதி பிரபலவாகன யோகமும் நரேந்திரனைப்போல் அரசாதி பூமிகளைப் படைத்தும் யானை குதிரை பசு முதலியதுடையவனுகியும் மாதா வெகுநாள் வாயுளுடனிருப்ப ளென் றும் நல் கீர்த்தி புத்தியும் அடைந்து எவ்வித பகைவரையுஞ் செயித்து வாழ்வனென்றறிக.

அவ்வித கிரகங்களிருக்குமிடம் மீனம் மேஷம் மிதுனம் கன்னி துலாம் தனுசு மகரமிவ்விடங்களாகி அதில் பாம்பு முதலிய கோள்க்கள் உபயபாரிசம் அல்லது கலர்ந்து அவ்வித சுக்கிரன் குரு மதிமுன்சொன் னவர்கள் பூரணபெலனுன சுக்ஷேத்திராதி பெலன்களைப்பெற்றும் இருக் குங் கிரகங்களுடன் மேற்கூறிய பாம்பு முதலிய கோட்கூடினுலும் அல் லது நோக்கினும் சாதகனுக்கு வாகனங்கள் சிலநாள் சுயவாகனமும் சில

நாள் அன்னியர்களின் வாகன முண்டென்றும் அவ்விதமான வாகனங்களால் மிகவுந்துன்ப நஷ்டத்தையும் அடைவனென்று சொல்லவேண்டியது வாகன சிவசரீருதிபதிகளும் அவ்விதம் பாம்பு குசன் முதலியோராகி பாப பெலன்பெற்றிருக்கினும் ஒருவருக்கொருவர் பகைவரால் அவருக்கவர் கூ-அ-கஉ-முதலிய பகை பாபக்ஷேத்திரங்களி லிருக்கில் பலவராகிய வருத்தமும் முன் வாகனங்கள் ஏரியபிரபுவாக இருந்தும் தானனேகர்களுக்கு வாகனம் முதலியவைகொடுத்ததுபோக மற்ற இதரர்களிடம் தான் வாங்கும்படிக்கி வேர்ப்படுமென்றும் சுக்கிரன் பெலமற்றுப் பகை நீசாதிகோளுடன் அபெலனுகி இருக்கினும் நோக்கினும் வாகனங்கள் இன்றித்திரிவன் சுக்கிரன் முதலியவர்கள் சிவசரீருதிபதி சனி சுக்கிரன் முதலிய கிருஷ்ண பக்ஷ சந்திரன் முதலியகோளாய் க-டு-கூ-கக-கஉ-ச-இந்த வீட்டுக்களின் சுக்ஷேத்திர சுபருகியவருடன் குசன் அல்லது பாம்பு முதலியோரிருந்து குருமுதலிய சுபக்கோள்கணேக்கத்துடனிருக்கில் மாடுசகடு முதலிய வாகனத்தின் பேரிலேயே பிரியமும் உயர்ந்த பல்லக்கு முதலிய வேகமான வாகனங்களி லேருவானுகில் அதனுலேயே தேககெண்ட இம்சையான தவருதலை யடைவன் அவ்வாகன சிவசரீரிகளுக்கு கூ-அ-மிடத்ததிபதியாவது அவ்வித விரண ரெத்தரோக காரகரான குஜன் பாம்பு இவர் சேருவாரேயானுல் வாகனத்தின் பேரிலேரிசவாரி செய்வதினுலயே பிராண பயம் அங்க ஊனமுண்டாகுமென்றும் அவர்களுக்குரிய திசாபுக்தியில் இவ்வித பலனடக்கும்.

மேலேகண்ட சிவசரீராதிபதிகள் பெலமற்றவராய் அசுப பாபக்ஷேத்திரங்களில் ங-கூ-அ-கஉ-கக இந்த இடங்கள் விருச்சிகம் சிம்மம் கன்னி மகரம் மேஷம் இந்த வீடுகளாகியும் அவ்விடங்களில் சுக்கிரன் முதலியவர் பெலமற்றவரா யிருக்கினும் பெலன் கெடினும் ச-எ-கக இவ்விடத்தில் பகைநீச அசுபக் கோள்கள் கூடியிருக்கினும் வாகன மில்லான் சனியே சிவசரீராதிபனுகி பெலமற்ற பகை பாபருடன் அல்லது அவர்களின் வீட்டிலிருக்கினும் பாம்பாகி இருக்கினும் இவ்விதமே பலருடைய வாகனங்களுஞ் சாரதியாய் பிரருக்கு ஊழியனுவான் வாகன் பிரபலமும் சுவயவதிகாரத்துடன் கிடையாது கிருஷ்ணபக்ஷ சந்திரன் புதன் ரவியாகில் தான் வாகனம் வைத்திருக்கினும் இவனுக்குதவாது பிரருக்கு உதவச் செய்வனென்றறியப்படும்.

இவ்வித கிரகங்கள் பெலன் கெட்டு ரவி குசன் சனி வீட்டில்பகை பாப சம்மந்தமும் உபயபாரிசம் அவ்வித பாவரிருக்கினும் ஸ்தானுதிபதி

வலுப்பெற சாதகனுக்கு வாகனம் மாடுமுதலியது பிரபலமாகச் சேர்ந்த போதிலும் உடன் மரணத்தையடையும் நல்ல பிரியமுள்ள வாகனங்கள் நிலைக்காது பல கஷ்டநஷ்ட துன்பமடைவனென்றறிக அவரவர் திசா புக்தி காலங்களில் மேற்கூறிய பலனடக்கும்.

மாதுரு பாவ பலன்கள்.

சுக்கிரன் சந்திரன் இவர்கள் ௬-௯-௪-௮-௧௨ இந்த இடங்களில் பல பெலன்களுடன் கேந்திர கோணவதிபராய் சுபக்ஷேத்திரம் பெற்றாலும் சுப கெதியுடன் உச்சம் முதலிய இடங்கள் கேந்திரகோண ஸ்திதியுடன் இருக்கினும் அன்னைபாவத்துக்கு ஜீவசரீராதிபதிகள் பெலவான்களாகியும் சுப பெல ஸ்தானத்திலுற்றாலும் இவ்வகைச் சுபர்கள் விருஷபம் கும்பம் கடகம் துலாமிந்த இராசிகளில் பெலவான்களாகி குருகேந்திரகோணம் பெறினும் ஜாதகன் மாதா பிரபல வதிகாரரில்மனைமகலாய்தான் பல பெயர்களைவதிகாரஞ் செய்யவுமிகவுங் கீர்த்திகளோடுங் கூடி விசேஷயோகத்துடன் பிரபல சுகங்களைப் பெரப்படுமென்றுமிருந்த கீர்த்தி மூர்த்தி புகழ்ச்சிகளும் அதிக சுக சௌக்கிய வரசினரை ஒப்புற்று நடப்பர்களென்று மிகுதியான மேன்பாடுகளையும் அடையப்படுமென்றுங் கண்டுகொள்க அம்மாதா இவன் பிதுர்குடும்பஞ் சார்ந்தநாண் முதல்யோகம் குருமுதலிய புதன் இவர்கள் சீவசரீர பெலத்துடன் ௪-௭-௧௦ மேற்கூறிய விடங்களி லிருக்கினும் மாதா ஒழுக்கமும் விசேஷ கீர்த்தியுள்ள குடும்பமும் பிரபல மேன்பாடுகளையுந் தனதானிய கிரக வாகனாதியோகமு முடையன் மேற்கூறிய இடங்கள் விருஷபம் கடகம் கன்னி துலாம் தனுசு இவ்விராசியாயவது சுபக்ஷேத்திரமும் அவரவர்களுக்குடைய பாபசம்மந்த மில்லாதிடங்களாகின் மாதுருவழி தனம் பிரபல லாப வரசத்துவங்களுடன் வாழப்படுவனென்றுங் கண்டறிய வேண்டியது.

அவ்வித சுபக்கிரகங்களுக்கு உபயபாரிசம் பாபரான பாம்பு சனி குஜன்முதலியோரிருக்கினும் அல்லது சந்திரன் சுக்கிரன் ஜீவசரீராதிபதி இவருடன் கூடினும் முதற்பாகமாய் கூறிய இடங்களி னின்றாலும் ஜாதகன் மாதா கோபியாயும் பிதா பலதாரமென்ற உ-முதலிய மனைவியரை மணப்பனென்றும் சந்திரன் சுக்கிரன் இவர்களுக்கு நான்காமதிபதி சீவசரீராதிபதி இவர்களிருவரி லெவரேனும் சனி புதனுகிலும் அல்லது சனி புதன் பாம்பு வீட்டினின்றாலும் இவர்களைக்கூடினும் அவ்வித ஜாத

கன் தந்தைக்கு பலதாரமுடையவன் அவைபாவது உ-முதலிய வெத்தனே தாரமாகினுஞ் சரியே அவ்வித ஜாதகன் சபத்தினி வம்ச புத்திர புத்திரி முதலான சந்ததி க்ஷயமும் அவ்வித மிருந்தாலும் அவர்களின் வம்சங்கள் மிக விசனமுறும்படிக்குள்ள அல்பகாலங்களில் குடும்பக்ஷயமடைவார்கள் அவ்வித சனி புகர் புதன் இவர்கள் குரு பூரண பெலவானுட னல்லது அவர் திருஷ்டி பெரவும் அவருடைய சக்ஷேத்திர சுப பெலன் பெற்றாலும் சபத்தினி வம்ச புத்திரன் புத்திரி முதலிய வம்சம் அல்ப மல்பமாக விருத்திக்கு வரப்படு மென்றுங் கண்டு சொல்லவும்.

ஜீவ சரீராதிபதி சந்திரன் சுக்கிரன் முதலியோர் பகை நீசத்திலுள்ள கோளுடன் அல்லது பாம்பு தனக்குப் பகைவரான கிரகங்களுடன் கூடியிருக்கில் மாதாவானவள் சொல்ப கெட்ட நடவடிக்கையும் பலரையும் புணருவளென்றும் அவ்வித மூலக்கிரகங்களே பெலன் கெட்டு குஜன் இரவி சனி க்ஷேத்திரங்களிலும் கன்னி விருஷபம் இந்த இடங்களிலிருக்கினும் பிதாவுக்கு உ-முதலிய பலதார முடையவளுவனென்றும் பாபராலுஞ் சுபராலும் பெலத்திருக்கின் ஜாதகன் மாதுரு வேகமே பிதாவின் றூரமென்றுங் காணப்படும் சுபரான சவுமிய நைசர்க்கிரக கிரகங்களாகின் மாதுரு முதலானோர்கள் விசேஷ ஆசாராதி மேன்மையும் நற்குண நற்செய்கை யுடையவளாவாள் இரவி கிருஷ்ண பக்ஷ மதி முதலியோராகின் கடுமையாயும் பாவியாகியும் கொடியவளாவாள் யென்றும் ச-கஉ-அ-இந்த இடங்கள் விருச்சிகம் மகரம் சிம்மம் குஜன் சொக்ஷேத்திர இடமுள்ள வீடுகள் அல்லது பாம்பின் இவர்களின் சொக்ஷேத்திர இடங்களாகிப் பகை நீசாதி அசுப பெலத்துடையவ ராலும் மேற்கூறிய வீடுகளில் சந்திரன் பாம்பு முதலிய பாவருடன் கூடி யிருப்பக்கமும் பாவர்கூடி இருக்கில் சீவசரீராதிபதிகள் பெலமற்றவராய் அசுபத்துக்குரிய பெலனுடன் இவர்கள் சந்திரனுடனுவது கடக ஸ்தான மிவைகளுடனுவது உபயபாரிசங்களிலும் பகைபாவர் கூடி இருக்கிற் றுய் சிசுவுடன் அல்லது கெற்பத்தினுல் மரணமடைவளென்றும் பலவகைக் கஷ்டமும் மாதுருசந்ததி யழிந்துவிடும் சிசுவிலேயே தாய் போய்விடுவாள் இப்படி இருந்த கிரகங்களுடன் குரு சுக்கிரன் முதலிய சுபபெலத்தோர் சுபராகி இருக்கினும் நோக்கினும் உபயபாரிசங்களி னின்றாலும் தாய் பாலியத்திலும் ஜாதகன் ஜெனிப்ப முன்னும் உள்ள துயரரோகதுன்பங்கள் எவ்வித பிரபலமாக வரினும் உடனிவர்த்தியாகிவிடும் மாதுருஸ்தானுதிபதி சீவசரீராதிபதிகள் கும்பம் விருஷபம்

மீனம் தனுசு கன்னி இந்த விராசியிலிருக்கினும் நோக்கினும்பாபத்துவ சம்மந்த திருஷ்டி முதலானவைக ளில்லாதிருக்கில் உபயபாரிசமான இடங்களிலும் பாபர்களின்றி இருக்கில் மாதாவகை பிரபலத்துவமான குடும்பமேன்மையுடன் மாதுரு அனேகநாள்வரை ஜீவனுடனும் மிகவும் விருத்தியான குடும்பத்திலுதித்தவ ளாகினும் சிலநாள் வருந்திச் சிலனுள் யோவதியாகி வாழ்வள் யென்றும் சனி பாம்பு முதலிய பாவ ராஹுலும் அல்லது பாபத்திற்கு இணையுள்ள சுபராகினும் மேற்கூறிய சந்திரன் சுக்கிரன் மாதுரு சீவசரீராதிபதி இவர்களுக்கு ௨-௯௨-மிடத்திலாவது சந்திரன் சுக்கிரனிவருடன் கூடினும் அல்லது இவர்களுக்கு எட்டாமிராசிகளிலிருக்கில் தாய்பாலியமரணமும் மாதுரு சந்ததிசேதப்பட்டும் பலவகையான மனோகிலேச விசனம் மாதுருவகைக்குண்டாகும் சந்திரன் சுக்கிரன் சீவசரீராதிபதி இவர்களுக்கு ௧-எ-௧௧-இந்த இடங்களில் மேற்கூறிய பாவரிருக்கின் பிதாவிற்கு பலதாரமென்னும் ௨-முதலிய தாரயோகத்தையும் வம்சத்தையும் அடைவனென்றும் ஸ்தானுதிபதி சுக்கிரன் சந்திரன் சீவசரீராதிபர்கள் இன்னல்வரும் தந்தமக்குரிய பெலன்களாகிய கடகம் மீனம் தனுசு விருஷபம் இந்த இடங்களில் சீவசரீரபேதமின்றி இருக்கின் தாய் விருத்தையென்னும் பருவம்வரை ஆயுளுடையவளாவாள் சுக்கிரனுவது சந்திரனுவது ஒருவர்பெலமற்று மற்ற மூவர் பெலக்கில் கவுமாரப்பருவ வயது வரையில் தாயின் ஆயுளென்றும் சந்திரன் சுக்கிரன் இருவர்கள் பலமற்று மற்றிருவர் பலத்திருக்கின் யவ்வன வயதுவரை மாதாவிர்க்கு ஆயுள் சீவ சரீராதிபதி மாத்திரும் வலுப்பெரின் பாலிய வயதிலென்றும் சீவசரீராதிபதியும் பெலமற்றும் பாவராகின் சாதகன் செனிப்பவே தாய்போய்விடுமென்றும் அறியவேண்டியது ௨-௬-௰-௧௧-௩-இந்த இடங்களில் குருமதியல்லது சுக்கிரன் புதன் இவர்களி லெவரேனும் சீவசரீராதிபதிகளாகி மாதுரு ஸ்தானமான ௬-எ-௰-இந்த வீட்டிலிருக்கில் தாய்வழியான பொருளுக்கும் தாய்வழி பெண்வழிகரும பாத்தியதை யடைவன் மாதுரு பெண் இந்தவழியான கிரகம் பூமி பொருள் இவ்வித வஸ்துக்கள் சாதகனுக்கு சேருமென்றும் அறியவேண்டியது.

அவர்களுடன் அல்லது அவர்களுக்கு ௨-௯௨-இந்த வீடுகளில் பகைபாவர் இருக்கினும் நோக்கினும் மாதுருவழியாய்ப் பொருள் சேருதல் போலத் தோன்றிக் கிடையாவாகும் சனி புதன் வீடுகளில் மேற்கூறிய கிரகங்களிருக்கில் மாதுருவழி சந்ததிகெடும் பொருளும் போகும் அவ்விதவதிபரே பெலன்கெடினும் சுக்கிரன் மதிசீவசரீராதிபதி பெலன்

கெடினும் மாதுருவம்ச விர்த்தியும் இன்றிப் பொருளுமின்றி அடைவன் சூரிய சந்திரன் சுக்கிரனிவர்களுக்கு ௮-௯-௬-௧௨-௨-இவ்விடங்களில் பாம்பு குசன் முதலிய கொடியபாவர் இருக்கினும் இருவித பாவர் சேரினும் தாய் வழிகெடும் தாயின் கெற்பத்தி லெல்லாம் வாதைய டைவள் தானுற்றீங்கு நேரும் பிதாவுக்கு ௨-முதலிய பலதாரயோக னென்றும் மேற்கூறிய கோள்க்கள் தனுசு கும்பம் கடகம் துலாம் இவைகளிலிருக்கில் மிகவும் கீர்த்தி யோகங்கள் தாய்வழி இவைகளா ல்மிகவுமுண்டாகு மென்றும் பிரபல கீர்த்திமூர்த்திகளும் மனோவாக் ஜெயமும் இவ்விதமாக உயர்ந்த பலன்களைத்தரப்படும் மேற்கூறிய இடங்களிலும் பாவசந்திர சுக்கிரன் முதலியோருடன் சனி பாம்பு முதலியோர் சென்மலக்கினம் விருஷபம் கும்பமானுலும் அவைகளு க்கு ௪-௭-௮-இவ்விடங்கள் சிம்மம் விருச்சிகம் மகரம் இவ்வித இடங் களாகி மேற்கூறிய கிரங்கள் இருக்கில், தாயானவள் அவக்கியாதி யுட னும் அபகீர்த்தியுடனும் அடைவள் தாயானவள் குலையான திடீரே ன்று மரண மடைவள் குசன் கூடி மேற்கண்ட விடத்தில் இருக்கில் யவ்வன வயதில் தாய்திடீரென்று மரணமாவள் குரு * அரவு முதலி யோர் அவ்வித அபெலராகில் கெற்பத்தினுல் தாய்போம்.

பூமிமுதலிய கிரக பலன்கள் கூறப்படும்.

பூமி சீவசரீராதிபதிகளும் நான்கிலிருப்போர் அவ்வதிபதியுங் காரகனுக்கிய குஜன் வசாத்துள்ள கிரக பெலன்களை யூகித்து பூமி பலன்கள் கூறல் வேண்டியது சீவசரீராதிபதி குரு வல்லது பூர்வபக்ஷ சந்திரனுகியும் சுக்கிரன் பெலத்துங் கேந்திரத் திரிகோண விராசியில் விருச்சிகம் மிதுனம் கடகம் துலாம் தனுசு இவ்விராசிகளில் இருந் தும் அவ்விடங்களானவை ௪-௫-௯-௧0-௧௧-யென்ற விடங்களாகியும் இருபுரம் பாவர்களின்றியும் சீவசரீராதிபதி தனக்குரிய சுப க்ஷேத்திர கெதிபினும் பெலத்தும் இருக்கினும் நான்கில் சுபரான சனி பாம்பு முதலிய கொடியபாவரானுலும் இவர்களுக்குச் சரியான கிரகங்கள் சுபரே பாவராகி யிருக்கிற கிரகங்கள் அவ்விராசிலாவது அதிபதியுட னுவது சீவசரீராதி பதியுடனுவது கூடாமலிருக்கில் ஜாதகன் பிரபல பாரம் பரையான பூமிகள் மேலானவிர்த்தியுடன் சேர்ந்து வருவ னென்றும் அதிக கீர்த்தி மூர்த்தி புகழ்ச்சிகளும் விசேஷ பூபதியாகி வாழ்வன் மேற்கண்டவர்கள் பாப க்ஷேத்திரமான ௩-௮-௧௨-மிடங்க ளாகி அவை விருச்சிகம் மகரம் மேஷம் கன்னி இவ்விடங்களில் சனி

* இராகு கேது.

பாம்பு குசன் முதலிய பாவருடன் கூடியிருக்கில் பூர்வார்ச்சித பூமி தவரதை முதலிய யாவும் ஜாதகன் செனித்தமுதலே யிழந்து விடுவன் யென்றும் சுக்கிரன் புதன் ஜீவசரீராதிபதியாகிப் பெலவானும் கேந்திரகோணமாகிய கும்பம் மீனம் விருஷபம் மிதுனந் துலாம் இவ்விராசிகளில் பெலத்தும் தனக்குரிய சுப க்ஷேத்திர மாகியுமிருக்கின் விசேஷ பூமியான வைகளும் பலவியாபார வாணிபத்துடனும் பெண்மூலமான பூமிகட்டெடாதி பலவகையும் புத்திரியல்லது தாழ்வழி களத்திரவழியால் தனம் பூமிகளுங் கிடைக்கும் வாணிபத்தாலும் பொருளையும் பூமிகளையும் படைப்ப னென்றும் புதன்றனித்த பெலமானல் சிலகாலம் பூமிமுதலிய பிரபல முண்டு சிலகாலங் கிடையாவாகும் புதன் சுக்கிரன் மற்றய ௩-௬-௮-௧௨-இவைகளிலும் நீசம் பகையுள்ள இடத்திலும் பாப சம்மந்த மல்லது இவர்கள் இருபக்கங்களி லிருக்கில் பிரந்த சாதகன் பொருள்யாவும் பூமியும் பலவிதமாய் வந்தவையும் இழந்து தவிப்பன் சுக்கிரன் புதன் துலாந் தனுசு மிதுனம் மீனம் இவைகளில் மீனம் நீங்கியவிடத்தில் புதனும் கன்னி நீங்கியவிடத்தில் சுக்கிரனும் உச்ச சொக்ஷேத்திர இடத்தில் பாம்பு இரவி முதலிய கோளுடன் புதன் சுக்கிரன் கூடினும் ஜீவசரீராதிபதிகளுக்கு ௬-௭-௮-௧௨-இந்த இடங்களில் குஜன் சுக்கிரன் முதலியவர் பகைவீடு நீசவீட்டி லிருக்கினும் ஜாதகனுக்கு பூமிகளால்ப் பலவகை பொருள் நஷ்டம் இருந்து மில்லாதவனுகி குடி இருக்கக்கூட இடமின்றி பலவகை விவாதங்களாலவுமானதி இடம் பொருளேவல்கள் இன்றி வருந்தி தேசமிழிவ னென்றும் இதில் கடனுலவன் பூமிகள் நஷ்ட மடைவன் மேற்கூறிய சுக்கிரன் கேந்திரகோண சுக்ஷேத்திரத்திலும் நான்கில் பூரணச் சந்திரன் அல்லது குரு புகரிவரிலெவர் நிற்கினும் விசேஷ பெலமான குரு முதலியவர் சுக்கிரனை வீக்ஷணம் பெரச்செய்யில் குருவின் றனதுவீடாகிய தனுசுவின்இரவிபுதன் கூடினும் அல்லது வேறு இடங்களில் சுகக்ஷேத்திர சுபவீடாய் சந்திரகேந்திர மல்லது குரு நோக்க மிருக்கின் போன பொருளும் அவுமானமுமின்றி திரும்ப கடனுலழிந்த பூமி வீடு முதலியதும் அனேகவிதமான பிரபலலாபமும் அசாத்திய கருமங்கள்யாவுங் கைகூடுதல் பிரபலகீர்த்தியுடனும் கிடைக்கும் பாலியத்திலயே இவ்வித துயரமடைவன் மேற்கூறியவர்கள் பாபவிடமாய் கெடுதலுண்டாகிஜீவசரீராதிபதி பெலன்கெட்டு இருக்கினும் பூர்வார்ச்சிதாதியாவும் நஷ்டமாகிப் பலவகை கஷ்டநஷ்ட துன்பமடைவனென்றும் பலவாரான வருத்தங்

களையும் அடைவனென் றறியவேண்டியது இருக்கும் பூமிகளையும் இழப்பன் சனி குசன் சீவ சரீராதிபதிகளாகிச் சுபராகி பெலமுற்ற கேந்திரகோண பெலத்துடன் தனக்குரிய சுபபலன் பேரில் அன்னியர் களின் பூமி கூடும் பரம்பறை பிரபலவானின்றி நூதனப் பிரபலமடைவன் பாம்பு குசன் பெலனுடன் ச-எ-க0 கோணத்திலும் பெலவரன் களாகி சுபக்ஷேத்திர பெலத்துடன் இருக்கில் தேசம் விட்டு தேசம் போவதினலயே பலவகைப் பூமி கிரகவாகன் மேன்மையடையினும் தரித்திர மனமுடையவனுவன் மேற்கூறிய பாவர்களே பெலனற்றும் பகை நீச வீட்டி லிருக்கினும் ஸ்தானபெலன் கெடினும் பூமிகிரகவாகனமொன்றுங் கிடையாவாகும்.

வித்தியா பலன்.

சீவசரீராதிபதி குருவாகியும் கேந்திரகோணத்தில் உரவுமுதலியசுப க்ஷேத்திரத்திலும் புதன் சந்திரன் முதலியவரின் சுக்ஷேத்திர வீட்டி லிருக்கில் அல்லது இரவி வீட்டினிற்கினும் அரசவித்தைகளையும் சுய தேச பாஷாதி ஞானவானுவன் சுக்கிரனுகில் தமிழ் அரசபாஷைகள் பூரணமுடையவன் இவருடன் பாவர்கூடில் விசேஷ பிரபலமடையான் குசன் இரவியாகில் புராணுதிகணிதம் முதலியவகையும் இராசவித்தை யதிகார முயல்வு பெருவன் புதன் சனியாகில் வைத்தியம் உபாத்தியாயமும் கணிதம் முதலிய சோதிடனூலுண்டாகும் பரதேசபாஷை யரிவன் பாம்பு முதலியோராகில் அனேகவித பாஷையுண்டாகுமே ஒழிய விசேஷ பிரபலமடையமாட்டான் மேற்கூறியவர்கள் அவரவர்களுக்கு விரோதம் முதலிய அபெலகிரகத்துடனும் சூ-அ-முதலிய இடங்களி லும் பெலனற்றும் சனி குஜன் பாம்பு இவர்களின் வீட்டினிற்கினும் அந்த ஜாதகர்கள் அவிவேகியாகியும் மூடனுகியும் எவ்விதவித்தையும் இல்லாதவனுகி அகிருத்தியனுகி வாழ்வன்யென்றும் குசன் சனி பாம்பு முதலியவர்கள் கிரகவாகன விஷய சீவசரீராதிபராகினும் சுக்கிரனுடன் அல்லது உபயபாரிசம் இவையிலும் பகை நீசாதி அபெல வீடுகளாகியும் கிரகவாகன சீவசரீராதிபதிகளுக்கு விரோதமும் அத்தியந்த பாவராகியும் அவர்கள் இருக்குமிடம் நீசம் பகையோடு கேந்திரகோண இடத்தில் இருக்கில் விசேஷமான துக்கங்களும் கிரகவாகனங்களும் இருக்க நீடலின்றியும் காட்டிற் சஞ்சரித்துத் திரிவனென்றும் பலவகைக் கஷ்ட நஷ்ட வருத்தமடைவன் மேற்கண்ட பாவரே தனக்குரிய. சுபர் வீட்டில் பகை நீசாதி பாவரின்றி குருமதி முதலியவர்களின் கேந்திரகோ

ணத்திலும் ச-எ-ய-முதலிய இடங்களிலிருக்கில் சிலகாலம் வாகன முண்டு பரம்பரை வாகனமில்லான் என்றுங் கண்டறியவேண்டியது புத னுகினும் கிருஷ்ணபக்ஷ சந்திரனுகினும் அவ்விதியே மற்ற சுபர்களா கின் மேற்கூறிய விடத்தில் இருக்கினும் ஜீவ சரீராதிபதிகளாகிப் பெல முற்ற சுபக்ஷேத்திரத்தினிற்கினும் விசேஷ பிரபலயோகமும் பரம்பரை யாக அகௌரவமின்றி பலவாகனங்கள் ஆந்தோளி பரி கரி முதலிய வாகனமுடையவனென்றும் மிகவுங் கீர்த்தியுடன் வாழ்வனென்றுங் கூறல்வேண்டும்.

இவைகளின் லாபநஷ்ட கெணிதமும் காலங்களுந் திசாபுக்திகளும் கூறப்படுகிறது.

ஒவ்வொருபாவ ஜீவசரீராதிபதிகளுடன் கூடிய கிரகபெலாபெல வெண்களின்படிக்கு எடுத்தும் இராசிபெலனுக்குரியவெண்களையுமெடுத் துக்கொண்டு முன்போலவே பெருக்கவாவதல்லது கூட்டியதொகைகளை ஒன்று சேர்த்தவைகளை ஒவ்வொரு கிரகபெல வெண்களையும்முன்போ லவே தனித்துக் கூட்டியவகைகளை கூ-ல் கழித்த சேஷந் திசையிலும் வந்த ஈவை ரு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷமும் புக்தியிலும் அந்த கிரகங்களுக்குள் அந்தந்தபாவத்துக்கு சுபராகில் அந்த திசாபுக்தி கால த்தில் அதர்க்கிசைவுற்ற பிரபலஉத்தம பலன்களையும் அசுப பகைபாவ ராகில் அந்த திசாபுக்திகாலத்தில் அதர்க்குரிய கெடுதல் முதலிய கஷ்ட பலன்களையும் கொடுக்கப்படுமென்றறிய வேண்டயது இந்தநான்காம் பாவத்திற்கூறிய மாதுருவித்தை பூமி கிரகம் வாகனம் முதலிய ஒவ் வொன்றிற்கும் அதற்காதாரமாயுள்ள ஜீவசரீராதிபதிகளின் வசாதுரிய வெண்களைக் கண்டுரைக்கப்பட்டிருக்கின்றது இவ்விதமாகவேஒவ்வொரு லக்கின பாவங்களையும் நிதானித்தல்வேண்டும்.

ரு-வது புத்திரபாவ பலன்களாவன.

சவ்யம் சவ்யாபசவ்ய மாயுதித்திராநின்ற இந்தகுடும்பலக்கின சாத கத்துக்கு புத்திரபாவமேஅரிஷ்டமென்றும் புத்திரதோஷமடையுமென் றும் உண்டாவதேகிடையாவாம் அவ்விதமுற்பத்தியாகினும்புத்திரகரும சாதகன்அடையானென்பது மொத்தமானஜனரல்ரூல்களென்றும் இவ்வி லக்கினஅபசவ்யத்திற்கும்அபசவ்யாசவ்யத்திற்கும் காலாதீதாதி மருதார வழிகளுக்கும் முன்புத்திரவிஷய கவலையின்பேரிலுண்டாகுமென்றும்கூற ப்படும் இவைகளின் சஞ்சாரகிரகப்படிக்கு பலன்கள் அறியவேண்டியது

புதன் அல்லது சனி இவர்கள் புத்திரஸ்தான ஜீவசரீராதிபதிகளாகினும் மிதுனங்கன்னி மகர்கும்ப மிந்த விராசிகளிலிருக்கினும் அவ்விடங்கள் ௨-௫-௭-௯-இவ்வித இடமானாலும் மேற்கண்டவர்களிருக்குமிடத்துக்கு உபயபாரிசங்களில் சுபர்களான குரு சுக்கிரன் பூரணசந்திரனிவர்களின் றிமற்றய இரவி பாம்பு சனிகுசன் முதலியோர் யிருக்கினும் சுக்கிரன் பாவர்களுடன்கூடி பகைபாபக்ஷேத்திர கெதியுடன் குசன் பாம்பு சனி புதனுட னல்லது இவர்களின் சுக்ஷேத்திரங்களாள இடங்களில் இருந்தும் பெலக்குறைவுடன் இருக்கினும் பாம்புசனி முதலியோர் மிதுனம் கன்னி துலாம் விருஷப இந்த விராசிகளில் புதனுடன்கூடி மேற்கண்ட கிரகங்கள் கூடிநிற்கினு நோக்கினும் குரு முதலிய பூர்வ பக்ஷ சந்திரன் முதலியோர்கள் வீக்ஷணிபம் முதலிய சம்மந்த மின்றி யிருக்கில் சாதகனுக்கு புத்திரவிருத்தி கிடையாது அதில் குரு மேல் படி மதி முதலியோர் இருக்கினும் நோக்கினும் சீவசரீராதிபதி முன் போனுரினும் சிவிகாய மகவு பின் புத்திரலாபமுண்டென்றும் இரவி கிருஷ்ணபக்ஷ சந்திரன் பாம்பு முதலியோரிருக்கின் மாதுரு பிதுரு அயல்வகைக் கருமபாத்திபமும் குசனிருக்கின் சகோதரவம்சங்களே புத்திரதத்துவ முடையவராய் வாழ்வர்களென்றும் ஆத்மா சுயபுத்தி ரர்களில்லாதவனுவன் சுக்கிரன் புதன் முதலியவர்கள்கூடிநிற்கின் அன்ய வகை மருதாரவம்ச அகால புத்திரரை யடைவானுகினும் அவ்வபுத்திர யோகமுண்டாகும் சுக்கிரன் குருபூர்வபக்ஷ மதிமுதலியோர்கள் கேந்திர கோணமான கும்பம் துலாம் விருஷபம் மிதுனம் தனுசு இவ்விராசிகளி லும் ௧-௨-௪-௫-௯-௭-௧௧ இராசிகளிலும் சீவசரீராதிபதி சுபராகி யிருக் கினும் சனி புதன் முதலியோர் மிதுனம் தனுசு சிம்பம் மகரம் இவ்வி ராசிகளிலும் பெலத்துடனிருக்கினும் ௯-௫-௨-௭ - இவ்விருசிகளே குரு மதி நோக்கினுமலது இருக்கினும் புத்திரலாபமுண்டென்றும் முன்வகை யிலேயே பிரபல விருத்தியுடன் நேருமென்றும்.

குரு சுக்கிரன் முதலியவர்கள் சனி பாம்பு புதன் இவர்களின் சுக்ஷேத்திரமான மகரம் கும்பம் மேஷம் மிதுனம் கன்னி இந்த வீட்டி லிருக்கினும் அல்லது இவ்விராசியதிபதிகளுடன்கூடி நிற்கினும் மூன்று ரம் முதலியதுக்கும் முதலாக வுண்டாக்கும் பிரஜைக்களுக்கும் விர்த்தி கிடையாதென்றும் பல பிரஜைகள் ஜெனித்து உடன்மரணமிர்வதுடன் குடும்பங்களேயுமரிஷ்டிக்கப் படுமென்றும் சந்திரனுக்கு ௬-௮-௧௨ இவ் விருசிகளில் புதன் சுக்கிரன் பாப சம்மந்த பாப வீக்ஷணியத்துடன் இருக்கினும் பாப பகை க்ஷேத்திரமாகி இருக்கின் பிரந்த சாதகனுக்

கெக்காலம் புத்திர பாவமுண்டாகப் படுகிறதோ அக்காலத்தில் அவ்வித பிரசையின் தாய்மரணமடைபவளென்றும் பின்றூரங்களுக்குதிக்கில் சிசு மரணமடையுமென்றும் அம்மாதாவுக்கும் தேகாரிஷ்டகண்டங்களை உத்பத்திமுதலே கொடுக்கப்படுமென்றும் ரவிக்கி ௬-அ-௯ இவ்விடங்களாகில் பிதா மரணமடைவன் யென்றும் குருமுதலிய சுபக்ஷேத்திர கெதியான வீக்ஷணியம் பெற்றவர்களுக்கு பிதாவரிஷ்டமுதலிய உரோகங்களை மாத்திரம் கொடுத்து நிவர்த்தியாகப் படுமென்றுங்கூறல் வேண்டும் மேற்கூறிய மாதுரு ஜீவசரீருதிபதிகள் பாவர்களாய் பெலவான்களாகியும் சுக்கிரன் சந்திரன் இவர்கள் சிம்பம் கடகம் கும்பம் விருச்சிகம் இவ்விராசிகளிலும் ௬-எ-௧0-அ-௫ இந்த இடங்களில் இருக்கினும் கேந்திர கோண விராசிகளாகினும் அவ்விராசிகள் சுக்ஷேத்திராதி உச்சமான இடங்களிலிருக்கில் மத்திம வயதில் மாதுருகருமங்களும் மாதுருவம்சங்கள் முன் விருத்தியாக இருந்து பின் குடும்ப தோஷமும் பலவகையான துக்கமும் சந்திரன் சுக்கிரன் சுக்ஷேத்திர யிடங்களிலும் அல்லது புதசந்திர க்ஷேத்திரங்களில் அல்லது ௧0-எ யிடங்களாகில் மாதுரு மாரகங்களான போதிலும் பின் மாதுரு வம்ச தனலாபமும் குடும்ப சவுக்கியங்கள் தனதானிய லாபமும் முதலானவைகளும் பிரபலங்களுந் தாய் வழியினல் மேன்பாடாகிய லாபம்பெருவன் புத்திரன்முதலிய உ-முதலிய வகை தீர்க்கமும் கடகம் மீனம் விருஷபமிவ்விராசிகளிலிருக்கில் பெண்புத்திர மூலியமான குடும்ப மேன்மைகளும் அல்பமான புத்திரமூலியவிருத்திகளும்குடும்ப சுகசௌக்கியங்களும் இஷ்டசித்திகளும் அடைவன் இவ்வித கிரகங்கள் புதன் பாம்பு பாவர்களின் சுக்ஷேத்திர இடங்களில் மேற்கூறிய கிரகங்கள் இருக்கில் ஜாதகனுக்கு புத்திர தோஷமும் பலவிதமான வருத்தங்களும் உண்டாகி மரணநி பாதைகளுண்டாகுமென்றும் புத்திர வகைகளால் மனதுக்கு வருத்தமுண்டு அவ்வித சுக்கிரன் சந்திரனிவர்களுடன் புதன் பாம்பு சனி பாவர்களிருக்கினும் நோக்கினும் இருக்குமிடம் கன்னி துலாம் விருஷபம் மகரம் இவ்விராசிகளிலிருக்கில் பெண்சந்ததி தவிர புருஷசந்ததி கிடையாது அவர்களைக் குரு கூடினும் குருகேந்திரமாக சந்திரனிருக்கினும் ஜாதகனுக்கு அல்பமான புருஷ சந்ததியுண்டென்றும் சுக்கிரன் சந்திரனிவர்களுடன் இல்லது இருபக்கங்களிலும் சனிபாம்பு முதலிய கோள்க்களிருக்கினும் நோக்கினும் புத்திரபாகமுண்டாகி உண்டாகி மரணத்தடையும் புதன் சனி க்ஷேத்திரத்தி லிருக்கில் புத்திரர் ஒன்றே உண்டாகிற் பின் விர்த்தி கிடையாதென்றும் பெண்வகை விருத்திக்கி சுக்கிரன் பெண் இராசியாகிய விருஷபம் மீனம் கடகம் மகரங் கன்னியிலிருக்கில்

பெண் சந்ததி தவிரப் புருஷசந்ததி கிடையாதென்றும் அறியவேண்டியது குரு முதலிய தனித்த சுபர்கள் நோக்கினும் அல்லது கூடினும் ஜாதகனுக்குண்டான பெயரையுடைய புத்திர கரும முடையவனென்றும் புத்திர விருத்தியடைவன் என்றும் கூறப்படும் மேற்கூறிய சனி புதன் கிருஷ்ணபக்ஷ சந்திர இவர்கள் எவரேனும் மிதுனம் மேஷம் சுக்கிரன் அல்லது சுக்கிரன் வீட்டில் இருக்கினும் சனியின் சமசத்தம இடங்களில் சந்திரன் அல்லது புதன் இருக்கினும் நோக்கினும் சுக்கிரன் சந்திரன் விருச்சிகம் மீனம் இந்த இராசிகளிலிருக்கினும் புத்திரபாவ விஷயமாய் பலவகை மூலமான புத்திரலாபமுண்டாகும் ஆகினும்மிவைகளையெல்லாம் குரு முதலிய பூரண சுபர்கள் நோக்கினும் கூடினும் புத்திரர் சுப ஆத்ம புத்திரர்கள் காலாதீதத்தின் மேலுண்டாகுமென்றும் மேற்கூறிய சுக்கிரன் புதன் இருக்கினும் ரவிபூரண சந்திரன் குரு இவர்களின்சுக்ஷேத்திர இடங்களில் குசன் அல்லது இரவியுடன் கூடவலது இவ்விருவர்கள் நோக்கினும் அவ்விடங்களானவைகள் மகரம் கன்னி விருச்சிகம் விருஷபம் இவைகள் ரு-அ-க0-கஉ இவ்விடங்கள் பகை நீசமானவைகளாக விருக்கில் புத்திரர்முதலிய குடும்பங்கள் சிலகாலவரை இருந்து யவ்வனப் பருவம் பாலியப்பருவங்களில் ஜாதகனுக்கு புத்திர கருமமுண்டாகும் புத்திரவகையால் மனக்கவலை துக்காதிகளும் உ-முதலிய பலதாரங்களை புத்திர பாவத்துக்காகவே மணப்பனென்றும் இவ்விடங்களில் கூடிய புதன் சுக்கிரன் முதலியவர்களுடன் உ-பாவராகிய சனி பாம்பு முதலிய புதன் கூடினும் நோக்கினும் புத்திரரே கிடையாதென்றும் சுபர்களான இரவி குஜன் சுபராகிய பூரண சந்திரன் அல்லது குருமுதலியோர் கூடவல்லது நோக்கின் அல்பமான வேக புத்திர லாபமானவை வயதான காலத்தின்மேல் விருத்தப்பருவகாலத்தில் உண்டாகும் பிரஜை தீர்க்கமென்றும் மற்றய எவ்வன கவுமாரவயதிலுண்டாகும் பிரசைகள் தீர்க்கப்பட மாட்டாதென்றுங் காணவேண்டியது.

களத்திர பாவபலன்களாவன.

மேற்கூறிய புத்திர விஷய ஜீவசரீராதிபதியுடன் கூடிய வெணகளையும் புத்திரஸ்தானதிபதி ரு-கூ-மிடங்களில்கூடிய,கிரகவெண்களை தனித் தனி யவரவர்களின் பெலத்துக்கிசைந்ததை எடுத்து பூரணமான அவரவர்களின் கிரகவெண்பேருக்கு கொடுத்தானவை சுபக்கிரக ஈவுக்களை யெல்லா மிவ்விதமே கூட்டிய தொகையில் ஷ-உ-வ-அரிக்கால் தள்ளிக் கண்டமுழுத்த எண்கள் புத்திர பாவமென்றும் அதில் சுக்கி

ரன் கிருஷ்ணபக்ஷ சந்திரன் பெண் இராசிபால் வந்த ஈவை பெண் சந்ததி யென்றும் மற்றவை புருஷசந்ததி யென்றும் சனி முதலிய புதன் பெண் இராசியிலிருந்து கொடுத்த வெண்ணுகில் பெண்ணென் றும் புருஷ இராசியான ஆண் இராசியிலிருந்து கொடுத்த ஈவெண் புருஷர்களென்றுங் கண்டு சொல்ல வேண்டியது மேற்கண்டகிரகபெலா பெல்னுக்குரிய எண்களேயும் அவர்களிருக்கும் இராசிபெல வெண்களுக்கிசைந்த வெண்களேயும் பெருக்கிய துகையோவல்லது முன் உச்சஆக்ஷிக்கிக் கூறிய படி சேர்த்த வெண்களேயோ கூ-ல் கழித்த சேஷத்திசையிலும் வந்த ஈவை ௫-ல் பெருக்கி கூல் கழித்த சேஷம்புக்தி காலங்களிலும் புத்திர பாவம் முதலான லாபா லாப பலன்களேயும் சுபா சுகயோகாவ யோக பலன்களேயுங் கூறவேண்டியது இதில் அவ்வித புத்திர பாவத்தோர் சுபரால் கொடுத்து வந்த ஈவினல் கண்டறிந்த திசாபுக்தியாகில் புத்திர லாபாதி யோகங்களேயும் புத்திரன் மதுலன் இவர் வகையால் பெருஞ் செல்வத்தையும் சுப பலன்களேயுங் கூறப்பட்டிருக்கிறது மேலேகண்ட புத்திர பாவமான ௫-ம்பாவத்துக்கு பிரோதி பாவக்கிரக வெண்களால் வந்த திசாபுக்திகளாகில் புத்திர நஷ்டகருமாதி துக்கங்களேயும் மாதுலன் வகை நஷ்ட சேதமும் யோகபங்கமுங் குறைவுகளும் பலவகை வருத்தங்களேயும் அடையப் படுவனென்றறிய வேண்டியது மேற்கூறிய அந்தந்த பாவஸ்தானங்களுக்கு விரோதியாவல்லது அனுகூலியா வென்று கூறியது என்னகருத்தோ வென்றுல் ஒவ்வொரு பாவங்களுக்கும் சீவசரீராதிபதிகளுக்கும் ஸ்தானத்துக்கும் விரோதியாயிருக்கும் கிரகமும் அந்த பாவங்களுக்கு கூ-அ-மிடத்ததிபதிகளாகியுள்ள கிரகங்களுமென்று பொருள்படுத்திக் கொள்க.

கூ-வது சத்துருவியாதி முதலிய பலன்களாவன.

சந்திரனின்ற இராசிநாதன் ரோகத்திற்கு சீவனென்றும் சனி நின்ற இராசிக்கி கூ-க்குடையவனின்ற விராசிநாதன் வியாதிக்குச்சரீரமென்றும் குரு நின்றவைக் காராமதிபனின்ற விராசிநாதன் இராசதெண்டனே சத்துரு விவைகளுக்கு சீவனென்றும் இராகு விற்காரோனின்ற விராசிநாதன் இராச தெண்டனே முதலிய சத்துருக்களுக்குச் சரீரநாதர்களென்றும் பெயராகும் இதில் ஆராமதிபன் சந்திரனுமாகிப் பெலத்த கேந்திரகோண விராசியில் தனக்குரிய பூரணபலன்களைப் பெற்றிற்கினும் நோக்கினும் வியாதி மூல ஜீவசரீராதிபர்கள் ஐக்கியபத்தியர்

களாகியுமல்லது சனி சந்திரன் இரவி முதலிய கோளாகினும் அவ்வகை கிரகங்கள் சுபக்ஷேத்திரமான ௧-௪-௫-௭-௯-௰- இவ்விடங்களாகியும் அவை மீனம் விருஷபம் மிதுனம் சிம்மம் துலாம் தனுசு இவ்விராசிகளாகினும் குரு சந்திரனிவர்கள் கன்னி கடகம் தனுசு விருச்சிகம் இவைகளிலாவது குசன் சூரியன் வீட்டில் சனி யிருக்குமாயினும் சனி மந்திகாரி நிற்கினும் சீவசரீராதிபதிகள் மேற்கண்ட விராசிகளில் ஒன்று சேர்ந்தாவது சுபபெலத்தை யுடையவராய் இரவியாகில் நேத்திரநோயும் சிரநோய் சுவராதி சரீரமுள்ளவன் சந்திரனாகில் கபமுதலிய நோயும் நேத்திரத்தில் நீர் சம்மந்த உபாதியையுங் கொடுக்கும் உதரக்கட்டிகளையும் குசனாகில் மார்வலி இருணம் ரெக்தமூல நோயும் புதனாகில் புத்திமயக்கம் நேத்திரவுபாதிகளும் குருவாகில் வயிற்றிநோய்பித்தமுதலிய சேத்துமநோயும் சுக்கிரனால் குறிநோய் உதரங்களைக்காலுக்கு மேலான நோய்களும் சனியாகில் கால்முதலியநோய் காலூனம் வாதநோய் பக்ஷவாதநோய் ராகுவாகில் மூளைநோய் சித்தபிரமை மயக்கவலிப்பு நோயும் கேதுவாகில் வலிப்பு விஷநோய்களையும் இளைப்பு நோய்களும் கொடுக்கப்படும் என்றும் வியாதி ஜீவசரீராதிபதிகள்சேருமலும் சுபக்ஷேத்திரங்களிலும் மேற்கண்டவிராசி இடங்களிலின்றியிருக்கில் வியாதியில்லான் சுகசரீரனவன் மேற்கூறிய வியாதிகள்வருங்காலமாவது சந்திரன் புதன் சனியுடனவன் மேற்கூறிய வியாதிகள்வருங் காலமாவது சந்திரன் புதன்சனியுடனும் ௯-௮-௧-இந்த விராசிகளிலாவது கூடியகிரகவெண்களை பெலாபெலப்படிக்கி அவரவர்கள் வெண்களையும் தனித்தனியான இராசிவெண்களை தனித்தனி கிரகவெண்ணாற் பெருக்கி ௯-ல் கழித்த சேஷமும் வந்தசுவை ௫-ல் பெருக்கி ௯-ல்கழித்த சேஷந் திசாபுக்திகாலங்களொவ்வென்றிலும் சாதகனுக்கு வந்த கிராதிபத்தியத்திற்குரிய தேகாரிஷட வியாதி முதலியதும் இராசவிரோதமானதும் பலவகை கஷ்ட பலன்களை கொடுக்கப்படுமென்றும் மேலேகூறிய இராசதெண்டனை சத்துருவிற்கு கூறிய சீவசரீராதிபதிகள் ஒன்றான சினேகாரகியும் குரு இரவி சுக்கிரக்ஷேத்திரங்களிலும் பெலத்துடனிருக்கினும் சந்திரன் குருவும் அவ்விதமிருக்கின் சாதகனுக்கு வெப்பொழுதும் பலவிதபகையும் பொருள் பூமிதனம் முதலியவைகளாலும் பழம் பொருள்க்களாலும் விவாத நஷ்டமும் இராசதெண்டனைக் குரியதும் கடன் முதலிய பலதொந்திரவை யடைவன் அலேவன் சத்துருக்களாலயே எப்பவும் தொந்திரவும் சனி சந்திரன் குசக்ஷேத்திரங் குரு க்ஷேத்திரங்களிலிருக்கில் பலவிதமான துக்கசோகாதி வரிஷ்ட முண்டாகும்.

குரு சந்திரன் இரவி இவர்கள் தனுசு கும்பம் விருஷப சிம்மம் இவ்விடங்களிலிருக்கில் பலவிதவிவாத சத்துருக்களும் எவ்வித கடன் இராஜதெண்டனை வந்தபோதிலும் உண்டாகி உடனே வனுகூலமும் எவ்வித ஜெயங்களையும் அடைவன் மற்றய விராசியிலிருக்கில விவாதம் முதலிய பகைகளின்றி வாழ்வன் சந்திரன் குரு சனி இவர்களுடன் கூடியதும் கடகம் கன்னி தனுசு சந்திரனுக்கு ஆறிலுற்ற கிரக பெலா பெலனுக்குரிய வெண்களை தனித்தனி கூ-ல் கழித்த திசையிலும் வந்த ஈவை ரு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷமான புக்திகளிலும் சத்துரு இராஜவிரோதமும் தெண்டனை முதலிய அவமானதிக்குறைவுகள் நேரும் சந்திரனுக்கு ஆருக்குடையவனின்ற விராசிகளுக்குக-சு-அ-எ- இவ்விராசியிலிருக்கும் கிரக திசா புக்திகளிலயே மிகவும் கஷ்டநஷ்ட மும் பலவித துக்கசோகம் தன்னுடைய யோக்கிதைகுறைவு பலவகை வருத்தமும் பொருள்சேதம் அனேகவிதமான கஷ்டநஷ்டக் கடன் ஸ்தானபிருஷ்டம் முதலிய அவமான ஹேஷியங்களும் நேறும்.

களத்திர பாவபலன்களாவன.

களத்திர பாவ ஜீவ சரீராதிபதியைக் கொண்டு களத்திரபாவங்கூறல் வேண்டும் இரவிக்கி ஏழாமதிபன் சீவனென்றும் சுக்கிரனுக்கு ஏழாமதி பன் சரீரமென்றும் பெயராகும் ஜீவசரீராதிபதி பெலவான்களாகியும் ஒன்றாகியுங் கேந்திரகோண ஸ்திதியில் தனக்குரிய சுப மித்துருகளின் வீடாகியும் மீனம் விருஷபம் மிதுனம் சிம்மம் தனுசு இவ்விராசியாகி சுபபெலத்துடனிருக்கினும் பகைநீசக் கோளாவது பாம்பு இரவி குசன் முதலியோராவது சுக்கிரன் அல்லது இரவிக்கிரண்டு பனிரெண்டு ஒன் றில் கூடாமலிருக்கினும் பூரணசந்திரன் குருபார்க்கப் பெற்றாலும் சப்த் தமமாகிய சிம்மமுதலிய விடங்களில் பாபர் முதலியோரிருக்கினும் பார்க்காவிடினும் ஜாதகனுக்கு ஒரேதாரமாகும் இவ்விதமிருந்து ஜீவசரீ ராதிபதி குசன் புதன் பாம்பு முதலிய பாவராலும் இவர்களுடன் அல் லது இவர்கள் வீட்டில் இரண்டு விரோதிகளான சுபர் கூடினாலும் ஜீவ சரீராதிபர்கள் பகை நீசாதி அபெலராகினும் தார மிரண்டு முதலிய பெரு தார யோகனுவன் மேற்கூறிய இரவி சுக்கிரன் முதலியவர்கள் கன்னி துலாம் தனுசு சிம்மம் மகரம் விருச்சிக மிவைகளிலுள்ள ஜாதகர்களுக்கு மேற்கூறிய கிரகங்களுடன் பகையோரல்லது உபயபாரிசம் பாவரே இருக்கின் பெருதாரனுவன். சுக்கிரன் சுக்ஷேத்திர உச்சனுகியும் இரவி முதலியவர் சுபக்ஷேத்திரத்திலும் உபயவிராசியாகியும் பாம்பு குசன்

சனி இவரில் இரண்டுவித பாவர் நோக்கினு மிருக்கினும் தாரமானது வேககாலமாகவே இரண்டு முதலாகிய பெருதாரனுவன் குசன் சனி யின்றி மற்றப பாவர் நோக்கின் முதற்றாரமிறந்த பின்னர் இருவகைதார சம்யோகனுவன் உ-எ-அ-கக-இவ்விடங்களில் ஒன்றில் சனி யல்லது குசன் பாவரைக்கூடினும் நோக்கினும் பலபாவரின்றி சுபரே நிற்கினும் பெருகாலத்தின் பின்றாரமடைவன் அவையாவது ஒன்றக்கு மேலான தாரமெனக் கொள்ளவேண்டியது. சுக்கிரனுக்கு ஏழிலாவது மேற்படி கிரகங்களேயாவது குருமுதலிய சுபர்கள் பார்க்கில் தாரமொன்றென்றும் அந்தியகாலத்தில் தாரஉதவி யடையமாட்டானென்றுங் கூறல்வேண்டி யது. மற்றயவிராசிகளில் மேற்கூறிய கிரகங்களிருக்கினும் நோக்கினும் ஜீவசரீராதிபதி பலக்கில் தாரம் ஒன்றேயாகும் ஜீவசரீராதிபதிகள் இரவி யாகில் பிரபல குலமும் இரண்டுமுதலிய மனவியரைமணப்பன் அதிலும் இரவிக்கு விரோதியான ஜீவாதிபதியாவது சரீராதிபதியாவது உரில் நற் குலமும் பின் ஈனகுலமும் களத்திரத்தால் பலவித துக்கசோகாதி வருத் தமும் மான இழிவுநேரும் மித்துருசுபராகில் அவ்வகை மனேவியாலே வனுகூலமும் சுகமும் கீர்த்தி பெருவன். சந்திரனுகின் (சுகுணரூபியா வள்.) அமரபக்ஷ சந்திரனுகில் களத்திர மிருவரும் உரோகஸ்தியாவள் புத்திரதோஷமடைவள்.

குஜனுகில் விவகாரியலது பரகெமனியாகியும் தேகாரிஷ்ட மனேவி யாகினும் ஒன்றேயுள்ளன் (புதனுகில்) பலதாரமும் காலதாமத விவாக மும் உ-முதலிய பொருதாரனுவன் புத்திராஷ்டத்தினுல் பின்றாரமு னேரும் (குருவாகில்) சுகுணியாகி ஒருவன் சுக்கிரனுகில் பொருஸ்திரீ யையும் மனேவியாய் அடைவன். சனியாகில்காலதாமதமும் விவாகபங் கனுகியும் சோரஸ்திரீ விவாகமொற்றவனுகியும் வாழ்வன் அம்மனேவிவ ரினும் சாதகனுக்கு விரோதத்தையும் புருஷன் மேலிகழ்ந்தும் புருஷவ னுசாரத்தினுல் பரனேயுமனுபவமும் குறைவும் நேரும் பரம்பாகில் மனே யாளாலே பலவகைதுக்க சோகங்களேயும் பொருதாரனுகவும் வாழ்வனெ ன்றறிய வேண்டியது. அல்பபுத்திர யோகமாவது முதல் மனேவிக்கு புத் திரமுதலிய வகைஇன்றி பின்னவள்க்கும் அல்பமான ஒரேபுத்திர னென் றபெயரை வகிப்பன்.

இவ்வித களத்திரபாவாதி காலகணிதமாவன.

ஜீவசரீராதிபதி சிம்மம் சுக்கிர னிவர்களுடன் கூடியல்லது அக்கி ரகங்களுடைய பெலாபெலனுக்கிசைந்தபடி வெண்களே தனித்தனி இரா

சிபெல வெண்களேயுங் கூட்டி அந்தந்த கிரகங்களின் பூரண வெண்கள் பேருக்குக்கொடுத்துவந்தஈவு மொத்தம் சுபரின் ஈவையொன்றுபடுத்திய வைதாரமென்றும் பாப ஈவு பாதாரமென்றுங் கண்டுகொள்க. மேற் கூறிய கிரகவிராசி பெலவெண்களை கூ-ல் கழித்த சேஷமும் வந்த ஈவை டு-ல் பெருக்கி ஒன்பதில்கழித்த சேஷமான திசாபுக்திகாலம் விவாகமாதுமென்றும் மேலேகூடிய கிரகத்தில் பாவக்கிரக வெண்க ளும் சுக்கிரன் இரவி இவர்களுக்கு எட்டிலாவது அதிபதியுடனுவது கூடிய வெண்களை தனித்தனி கூ-ல் கழித்து வந்தஈவை டு-ல் பெருக்கி கூ-ல் கழித்த மிச்சம் திசாபுக்திகாலம் களத்திரமாரகமென்றும் அவ் வகை வெண்களெடுக்கும் கிரகங்களுடனுவது அவ்வதிபராவதுடு-கூ- எ-ல் உற்றவராயினும் அல்லது குரு பாம்பு புதன் கூடியதாகினும் அம்மனைவி பிரசவத்தால் இறப்பள் இரவி முதலிய கோளாகில் மானக் குரைவாலும் புதன் கிருஷ்ணபக்ஷ மதி குசனுகில் பிராாலும் குலக்கு சமானத்தாலும் மர்ணமும் கூபதடாகத்தில் விழுவள் கேதுமுதலியவ ராகின் அக்கினி முதலிய விரணநோய்களால் மரணமாவள் சனி முத லியவராகில் பிணியாலிறப்பள் சுக்கிரன் குருவாகில் சுவபாவமாகவே மறிப்பளென்றுங் காணல் வேண்டும்.

பிதுர்பாக்கிய பலன்களாவன.

சுக்கிரனின்ற ஸ்தானுதிபதி பிதுர்முதலிய பாக்கிய பாவத்துக்கு ஜீவனென்றும் சுக்கிரனுக்கு ஒன்பதாமிடத் ததிபதி நின்ற விராசிநா தன் ஜீவனென்றும் பெயராகும் மேற்கூறிய ஜீவசரீருதிபதிகள் மித் துருவான சுபராகி கேந்திரகோண கெதியிலும் சுக்கிரன் புதன்இரவி யிவர்கள் நால்வரும் பகைவருடன் கூடாமல் சுபர்வீட்டில் மீனம்விரு ஷபம் மிதுன கடகம் தனுசு துலரம் இவ்விராசிகள் கேந்திரகோண விடமாகியும் இருப்பக்கங்களிலாவது உடனுவது பாபர்கள் சம்மந்தம் நோக்க மிவைகளின்றி இருக்கின் விசேஷமான தனம்பாக்கியம்கிரக வாகனுதி இடம் பொருள் ஏவல் இவைகள் பூர்வார்சிதம் பிதுரார்ச் சித மிவைகளுள்ளவனென்றும் மேற்கூறிய கிரகங்களுடன் பாம்பு குஜன் இரவி முதலிய பகைக்கோள்க்களுடன் கூடியல்லது உபயபாரி சங்களிலாவது ஜீவசரீராதிபதி சுக்கிரனுடன் துலாமிவைகளுடன் மேற்கூறிய பகை நீசபாவர்கள் கூடினும் பார்த்தாலும் ஜாதகன் பிதர்முதலிய பூர்வார்ஜிதங்க ளிவனுக்கு அடையாதென்றும் பிதுரார் ஜிதம் பலவாரான விரயத்தாலும் விரோத இருணங்களாலும் நஷ்டப்

படுவனென் றறியவேண்டியது சுக்கிரன் விருஷபம்துலாம் மீனம்கும்பம் இவ்வித சுபக்ஷேத்திரங்களிற் பெலத்தும் தனித்தாவதல்லதுகுரு சனி புதனிவர் கூடினும் உபயபாரிசத்தில் சுபரே வாழினுஞ் சுபர்திருஷ்டியடைந்து கூடிய சுபர்களுக்கு அவ்வீடுபகை நீசக்ஷேத்திர மில்லாதிருக்கினும் சூரியன் புதனுடன்கூடி குருவீட்டிலாவது சுபக்ஷேத்திர உச்சபெலமுள்ள மித்துரு வீட்டிலிருக்கினும் பெலவான்களாகிய மித்துருக்க ளேக்கினும் கூடினும் பகை சுபரல்லது பாவர் கூடியாவது உபயபாரிசத்திலாவது துலாம் மிதுனம் கன்னி தனுசு யிவைகளி லில்லாதிருக்கில் பிதுரார்ச்சிதம் மேலான பிரபல லாபமும் மிகவுமேன்மையான தனலாபமும் பிதுருவம்ச பிரபலமும் மிகவும் விருத்தப்பருவ வயதுவரையிற் பிதுராயுட்டீர்க்கமும் சுகசௌக்கியவானுகியும் பிதாமேலான சிற்றரசனல்லது இராஜயோகவானுகியும் வாழ்வன் இவருடன் பாம்பு சனி குசனிவரி லெவரேனும் கூடியல்லது நோக்கினும் பகைபாபத்துவ நீசமுடைய சுபராகினும் பிதுரார்ச்சிதங்கள் பல பிரபலமாய்க் கிரகவாகனம் பூமி அனேக சம்மந்ததுடனுரில் ஜாதகன் வரிசையாய் வாழ்ந்து மத்தியகாலத்தில் கடன் முதலியதாலும் பலவகைக் கஷ்டநஷ்டங்களாலும் பொருள்களழிந்து பிதாவினுலும் ஷெ வகையாராலுந் துன்பமனுபவித்துக் கஷ்டப்படுவன் அதனுற் றனக்குந் தீங்குநேரும் சுக்கிரன் இரவி முதலியவர்களுஞ் சீவசரீராதிபதியும் பகைபாவருடனல்லது அவர் வீட்டினிற்கினும் சுக்கிரன் இரவி சீவசரீரர் பெலன்கெடினும் பாலியவயதிலேயே பிதுர்மரணமாவன் சுக்கிரன் சுக்ஷேத்திரனுகியும் பாம்பு முதலியபாவரைக்கூடி இரவி புதனிவர்கள் தனுசு சிம்மம் கன்னி இவையிலிருக்கிற் பிதுர் எவ்வனவயதில் ஷூ கசு-க்கு மேலான காலம் மரணமும் பிதுர்பகையையும் பலவித கஷ்டத்தையும் விவாதாதி பலவகை யரிஷ்டமடைவன் | சுக்கிரன் இரவி இவர்களும் சீவசரீராதிபதி கன்னி துலாம் மகரம் மிதுனம் மேஷம் விருச்சிக மிவ்விராசியில் சுபரான குரு சந்திரன் இவர்களைக்கூடி நிற்கினும் தனித்தனி நின்றுலும் பகை நீசம் பெற்றுலும் அவ்விதபகை நீசம்பெற்றவர்கள் சீவசரீராதிபதியானுல் சிசுவிற் பிதுர்மாரகம் பிதுர்சொத்துங் கிடையாவாம் இவ்விருவரி லொருவர் பகைநீசமானுல் எவ்வனத்தில் பிதுருகருமமும் பிதுரார்ச்சித மல்பமுண்டென்றம் இம்மூவரான சீவசரீரமும் இரவி சுக்கிரனிவர்கள் நட்புமுதலிய சுக்ஷேத்திர பெலத்துடன் பாவரைக்கூடினும் நோக்கினும் பிதுர் பிரபல வதிகாரியாகி மத்தியில் ஜீவனவிரோதமும் சுபரதிகமாகக்கூடி யல்லது நோக்கமுறில் பிதுர் பிரபல ஜீவனயோக இராஜவடிமையாவன் அவர்களுடன் பார்வரதிகமாகில் பிதா கௌமாரமென்ற வய

தில் மரணமும் பிதுரார்ச்சித மில்லாமலும் பிதுர்வர்க்க நாசமடைவன் சீவசரீராதிபதி மாத்திரம் பெலக்கில் பிதுர் விருத்தகாலவரை தீர்க்கமும் பிதுர்விஞற் பிரபலயோகமும் உண்டாகும் இரவி சுக்கிரன் பிதுர் சீவசரீ ராதிபதிகள் வேறு வேறு கிரகங்களாகிச் சுபமித்திரராகில் பிதாவல்லமை யுங் கீர்த்தியும் பிதுர்தனப் பிரபலமும் மிகவுமேலான யோகவந்தனுவ னென்றும் மேற்கூறியவர்கள் தனித்தனி பகை சுபராஞல் பலவித பிதுரார்ச்சித மழியும் செல்வாக்குண்டாம் பாபமித்துரு வாஞ லும் இருந்து கெடும் பாப சத்துருவாகில் ஆர்ச்சிதமே கிடையாவாம் மேற் கூறிய கிரகங்கள் கடகம் விருச்சிகம் மேஷம் மிதுனம் மீனம் மகரம் இவ்விராசிகளில் சுபரைக்கூடியும் அவரவர்களுக்கு வுரி த்துள்ள இடங்களி லிருக்கினும் நோக்கினும் மிகவு மேராளமான தனம் பூமிகிரகவாகனுதி பலபொருள்க்கள் பிதுராற்சேரினும் பிதுர் பாலியத்திலயே மரணமாவன் பாவர்கூடில். பிதுரார்ச்சிதங் கெடும் பிதாவிர்க் காயுள் அபி விருத்தி யுடையவனுவன் விருத்தைப் பருவத் தில் பிதாபோம் அவரிருக்கு மிடமுபய பாரிசம் பாம்பு சனி குசன் முதலியவராவது பகைவராவது ஷெ கிரகங்களுடன் கூடினும் அல் லது நோக்கினும் எவ்வனத்தில் பிதுர் போகும் பிதுரார்ச்சிதம் பலவாரான கஷடங்களை யனுபவிப்ப னென்றும் அவ்வவிராசிக் கதிபதிகள் கேந்திரகோணவிடத்திலிருக்கினும் நோக்கினும் பிதுரார்ச் சித மின்றிப் பிதுர்வகை பலவிருத்தி யடைவர் அவர் சுபராகில் வம்ச மும் பொருளும் பிரபலமுண்டாகும் பிதாவினல் மேலான கீர்த்தியுண் டாகும் பிதாகௌமார வயதில் மரண மடைவன் அவ்விதக் கிரகங் களு மதிபரும் பகை நீசராகியும் இரவி கன்னி துலாம் மிதுன மிவை யிலாவது மகரம் மீனத்திலாவ திருந்தும் சனி பாம்பைக்கூடி யல்லது உபயபாரிசத்தில் சனி பாம்பு குசனிருக்கினும் சுக்கிரனிரவியுடன் பகை நீசாதிபாரகி கன்னி மேஷம் விருச்சிகம் இவையிலிருக்கினுஞ் சுபர் சேரவல்லது. பாராதிருக்கின் பிதா அதி சிசுவாகியநாள் ௰ அல் லது மாதம் க௦-வருஷம் க௦-ல் மரணமாவ னென்றும் ரு-கூ-க-ந-ல் குரு பூரண சந்திரனிருக்கினும் நோக்கினும் பிதுர் கௌமார வயசு வரையிற்றீர்க்கமும் மேற்கூறிய மூவர் கடகம் சிம்மம் சுக்ஷேத்திரஉச் சபெலத்துடன் குரு மதி யிவர்களின் கேந்திர ஸ்தானங்களிலும் பெ லத்து நிர்க்கினும் நோக்கினும் அவர்களின் மூலத்திரிகோண விராசி களில்ச் சுபருடன் கூடினுலும் பிதாவதி காராதி பிரபலனுகி சிலவரச ராற்சீ விதம் மேலானவனுவன் குரு வீட்டிலிருக்கின் வேதியவொழுக் காதி வித்தை சீவனம் சுக்கிரன் வீடாகினும் அல்லது புதன் வீட்டி

னின்றாலும் வசியத் தொழிலால் பொருள் சேர்க்குந்திரமையானபிது ரார்ச்சிதமாகும் குசன் வீடாகின் கடுந் தெண்டனை யாவரும் பயப்ப டுந் தொழிலாற் றனயோகன் சனி பாம்பிடமாகில் ஈனத் தொழிலை யுடைய பிதுர் தனமாகும் இவைகளை சீவசரீராதிபதிவசாதுங் காண வேண்டியது.

இரவி சுக்கிரனிவர்களுடன் அல்லது ரு-கூ-க0-இவ்வீட்டிலும் சீவசரீராதிபதிகளுக்கு ரு-கூ-க0-இவ்விடங்களிலும் பகை பாவரா னோர் சனி பாம்பு கூடினாலும் இரவி சுக்கிரனிவர்கள் சனி பாம்புகளி ன்வீட்டிலாவது பகை நீசர்களாகினும் இவர்களின் உபயபாரிசத்தி லும் இச்சனி முதலிய பகைபாம்பு முதலியோர் கூடினாலும் இவர்கள் மகரம் தனுசு மீனம் கன்னி விருஷபம் இவ்விராசிகளில்சுபர்பார்க்கச் சேரவின்றி யிருக்கில் பிதுர் மரண காலத்தில் பிதுருவுக் குதவானெ ன்றும் மரணம் பின்றெறிவ னென்றும அயல்தேசவாசியாவன் பிது ருகருமங்களுங்கூட விழப்பனென் றறியவேண்டியது மேற்கூறிய மூவரும் கூடியபல்லது தனித்தனியாவது தனுசு துலாம் கடகம் கன்னி மேஷம் விருச்சிகம் இவ்விராசிகளில் குசன் பாம்பு கிருஷ்ணபக்ஷ மதி யிவரைக்கூடினும் நோக்கினும் பலவிதமான வியாதிகளும் நீண்டவியா திகளையும் இரவி இவ்விதம் சுக்கிரனிவருடன் மேற்கண்ட விடஞ்சே ரில் நேத்திராதி சித்த நோய்களையும் பிதாவனுபவிப்பனென் றறிய வேண்டியது.

பிதுர்பாவமாரகாதி காலதிசா புக்திகளின் குணிதமாவன.

இரவி சுக்கிரன் துலாம் மிதுனம் சீவசரீராதிபதி யிவருடன்கூடி யகிரக பாவர்களில் அவரவர்களுக்குரிய கிரகபெலாபெல எண்களைத் தனித்தனி இராசி பெலவெண்களுடன் கூட்டி கூ-ல் கழித்த சேஷ மும் அதில் வந்த ஈவை ரு-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷத்துக்குஞ் சரியான திசாபுக்தி காலத்தில் ஒவ்வொன்றிலும் பிதுர்கண்டமும் பிதுர்வகை துக்கசோகாதிகளும் மனக்கவலைகளும் பிதுரார்ச்சிதச்சே தம் விவாதவழக்குகளும் பிதுர்வகைக்குயோகபங்கமும் இரவியுடன் சீவசரீராதிபதியுடனாவது அவர்கள் தனித்திருக்கில் அவர்களின்பலா பலனுக்குரிய வெண்களைத் தனித்தனி இராசி பெலவெண்களுடன் சேர்த்து ஒன்பதில் கழித்த சேஷமும் வந்த ஈவை ரு-ல் பெருக்கி ஒன்பதில் கழித்த சேஷமுங் கண்டதிசாபுக்தி காலங்களில் பிதுர் மாரக காலமென்பதாம்.

ஒவ்வொருபாவங்களுக்கும் பாவாதிபதி நின்ற வீடும் அவ்வதிபதியும் அந்தந்த பாவங்களுக்கு சீவனென்றும் பாவாத்பாவாதிபதி நின்ற விராசியும் அவ்வதிபனுஞ் சரீரமென்று சொல்லா தொழிந்த இயாவைக்கும் பார்த்துக் கொள்ளவேண்டியது பாவாத்பாவாதிபதி யென்றது எப்படி யெனில் புத்திரபாவ மென்றவை ரு-மிடமாகில் அதனுக்குச் சரியான வதுமுதலைந்தா மிடமேயாம் இந்த பாவகெணிதங் கூறிய ஒவ்வொன்றினுக்கு மாத்திரம் சவ்யாப சவ்யமானநான்கு சக்கிரப்படி கணக்கெடுத்துக் கண்டறிய வேண்டியது மற்றய கிரகசஞ்சாரத்தால் பாவபலன் களியாவையும் எப்பொழுதும் பாற்கும் பாவவீடுகளாகப் பாவித்தும் பலன்களைத்தெரிந்துகொள்ள வேண்டியது இவையெல்லாவற்றினுக்கும் பொதுவானதாக வறியவேண்டியது.

சீவனபலனுமிராச்சிய பலன்களுங் கூறுவாம்.

சீவனமிராச்சிய மிவைகளுக்கு சீவசரீரகிரகமிவைகளையு மறிந்தும்பின் குசன் சனி இவர்கள் கேந்திரகோணத்துடையவராகியும் சீவசரீராதிபர் இரவி சந்திரன் இவர்கூடியல்லது கடகஞ் சிங்கத்திலாவது தனுசு மீன மேஷமிவ்விராசிகளில் பகைநீசாதி பாபர் சம்மந்தமின்றியிருந்தாலும் குரு ரவி சந்திரனிவர்களி லெவர்சீவசரீராதிபதியாகியும் சிம்மம் கடகம் தனுசு கும்பம் இவ்விராசிகளிலாவது விருஷபத்திலாவது இதில் ரண்டு கிரகங்கள் சுபராஞலும் சூரியன் குசனுக்கு கஉ-லாவது கο-மிடத்திலாவது மேற்கூறியகிரகங்களிருந்தும் சுபபெலமுடையமித்துருவாகினும் குசன் கூடியல்லது நோக்கினும் மகரம் தனுசு மீனமிவைகளில் இரவியல்லது மதி பாவருடன் குருவாதல் அல்லது சுக்கிரனுதல் சேர்ந்து நிற்கின் இராசாங்க சீவன மல்லது சிற்றரசருக்கு உகந்த சேவகத்துவத்திலும் மிகுந்த வதிகாரியாகி வாழ்வன் எவ்விதப் பிரபுவுந்தன்னை மானிப்பார்க ளென்றும் மூலத்திரிகோணஉச்சசொக்ஷேத்திர கிரகங்களாகில் சுயாதிகாரமேன்மையானும் ராசாங்கியாதியுடன்பெருவன் துலாங் கன்னியிலிருக்கினும் இவ்விதமேயாம் மேற்கூறிய மூவிதமான சீவசரீராதிபதி இரவி குசன் இவர்கள் மற்றய் விருஷபம் மிதுனம் விருச்சிகம் மேஷமிவ்விராசிகளிலிருந்து சுபரையலது பாபரைக் கூடினும் வடிமைத்தொழில் செய்வன் அவ்விராசிகளிலயே விரண்டு கிரகங்கள் பெலமான வுச்ச மல்லது ஆக்ஷிமூலத்திரிகோணராய்ச் சீவகிரகம் பெலத்தும் தசமத்தில் குசன்கேது அல்லது சுபர் நின்றாலும் சுயமான தொழிலும் "தானேவதிகாரனுகித் தன்னுற் பலரைச் சீவிக்கவுஞ் செய்வன் பத்திலாவது மேற்கூறிய மூவருடனு

வது மூவரிலிருவராயினும் கன்னி துலாம் மிதுனம் இவ்விராசிகளா வது இவ்விராசியதிபதிகளுடனாவது கூடினும் தசமத்தில் புதன் இரவி யல்லது சுக்கிரன் சந்திரன் சேரினும் சுபர் திருஷ்டி யல்லது உபயபா ரிசங்களி லிருக்கில் ஜாதகன் வியாபாரப் பிரபலனாகி யாவரும் புகழவி ராஜசூமான னவன் இவருடன் பாப பகை நீசம் பெரிலும் கூ-கக- இவ் விராசிகளில் பாம்பு முதலிய பகை பாவக் கோளிருக்கினும் இழிவு சீவனம் வியாபாரியுள் அடிமையும் நிலையற்றவரசாங்கத்திலும் தன்வே லையில் நிலையற்றுச் சிலகாலமத்தியில் வருந்தி இளைப்பன் மூவித கிரக மும் கஉ-எ-கக இவ்வீட்டில் குசன் அல்லது சனியைக் கூடினும் மேற் கண்ட எ-கஉ-கக வீட்டதிபர்கள் விருச்சிகம் சிம்மம்இவையிலாவது இவ்வதிபருடனாவது கூடி ரு-கூ-டு இவ்வீட்டி லிருக்கில் பிதாபூர்வ இடத்தை விட்டு பர விடத்தில் சீவனஞ் செய்வன் அம் மூவருடன் கூடியவர் குஜனாகில் யுத்தாதி குஸ்தி முதலிய சத்துரு சண்டைஜீவன மும் காவற் சீவன முண்டாகும் புதனாகில் வியாபாரம் கணக்கு ஜீவன மும் குருவாகில் வித்தை புராணாதியும் வக்கீல் முதலிய விவாத சாஸ் திரவுத்தியோகமும் சுக்கிரனால் சித்ராதிவிசிதரத் தொழிலும்அலங்கார சாஸ்திராதியும் மோகனத் தொழிலால் சீவன முண்டாம் சனியாகில் வயித்தியாதி குண்டுணிமுதலிய பொய்த் தொழிலும் பாம்பாகில் மித் துருபேதாதி விவாதம் நீசத்தொழிலும் அடிமையுஞ் செய்து சீவிப் பன் மேற்கூறிய இரவி சந்திரனாகில் அதிகாரமும் உத்தியோகமும்இரா ஜாங்கத்தாலுயர் சீவனமும் இவ்வகை முன்னுரைத்த வெண்கோட்க ளும் சுப பெலத்துடையராய் கேந்திர கோணத்திலும் பெலத்து தனக் குறிய சுபர் வீடலது சுபருடன் நட்பு முதலிய மூவகைப் பிலன் பெ ற்றிருக்கின் மேற்கூறியபடியே யவ்வவ கோட்களும் குரைத்த சீவன முண்டாம் அவ்விதக் கோள்க்கள் பாவராகிப் பகை நீசாதி அபெல க்ஷேத்திர அமித்திரக்கிரக சம்மந்தத்துடன் ரு-கூ-அ-கஉ இவ்விதபாப க்ஷேத்திரங்களில் வாழில் அவ்வல கிரகத்திற்குங் கூறிய தொழிலே ஹீனத் தொழிலாயும் எவ்வளவு படிப்பு முதலிய புத்தியோனாகினும் கீழ்ப்படிந்து அவ்வவ சீவனகர்த்தாக்களை பூசித்து நேசித்து பற்றற ந்து சீவனஞ் செய்வனென்றும் அறிய வேண்டியது.

குரு கடகம் தனுசு மீனங் கும்பம் கன்னி இவ்விராசிகளிலுஞ் சுக்கிரன் துலா மிதுனம் மிடபம் மீனம் கும்பம் இவ்விராசிகளிலும் குஜன் மகரம் விருச்சிகம் அல்லது புதன் சுக்கிரன் கூடிய எவ்விடத்தி னின்றாலும் அவர்கள் பகை நீசம் பெற்றவராகின் சந்திர குரு கேந்தி

ரமல்லது பார்வை பெற்றவாழினும் பாபபகையோர் சம்மந்த மின்றி யும் சீவசரீராதிபதி சூரியனல்லது குருவாகினும் இருவருமேயானுலுஞ் சாதகனுக்கு மேன்மையாகிய பூமி விராச்சியங்களுடன் செங்கோல்செய்வன் மற்றய விராசிகளிலும் பகை நீசாதி ஸ்தானம் கிரகமிவ ரைக்கூடினும் ஜீவசரீராதிபதி சனி பாம்பாகினும் சுபராகிப் பெலன் கெட்டும் கேந்திர கோான சுப க்ஷேத்திர நீங்கிப விடத்தி லிருக் கில் பூமி முதலிய எவ்விதப் பொருளுங் கிடையாவா மிருக்கினு மழிந்து ஜாதகனனுபவிக்காமற் நீங் கடைவன் முதற்கூறிய குருமுத லிய சுபரே ஜீவசரீராதிபதியாகி பலமற்று குசன் சனியின் வீடாகிய மகரம் மேஷம் ஒன்றிலும் இரவி புதன் வீடாகிய மிதுனம் சிம்மம் இவ்விரண்டிடங்களிலு மல்லது அவரவர்களின் பகை நீச விடமாகிப் பாம்பு முதலிய பாவர் கூடினும் முன்னோரார்ச்சித மிகவுமேலான பிரபலத்துட னிருந்து இவன் காலத்தில் இராச்சியம் முதலிய பூமி கிர கவாகனுதி கெட்டு இழிவடைவன் விருஷபம் விருச்சிகம் மிவைகளில் குசன் முதலியோரிருக்கினும் பகை நீசம் பெற்றாலும் பாம்பு முதலி யோரைக் கூடினும் சீவ சரீராதிபதி பெலமற்ற பாவராகியும் பகை நீசாதி குஜன் இரவி பாம்பு இவர்களின் வீட்டினின்றாலும் பல விதப் பொருளும் போகும் விவாதம் கடன் முதலிய பலதுர் வித விவாதங்களுக் களிப்ப னென்றும் மேற்கூறிய சீவசரீராதிபதி யும் குருவும் தனுசு கும்பம் கடகம் துலாம் மீனம் இவ்விராசிகளி லும் கேந்திரகோண பெலவந்தராகி அசுப பாப சம்மந்தமின்றி சுக்ர இவ்வீட்டில் பகை நீசம் முதலியதில்லாத புதன் சுக்கிரன் பூரண சந்திர னிவர்களிருக்கும் மிகவு மேலான சீவசரீராதிபதி சுக்கிரன் சந்தி ரன் புதனுகினும் சிற்றரசனுவன் இவருடன் சுபரான பாபரும் மித்திரு மானவர் கூடினும் சுபக்ஷேத்திரஞ் சீவசரீரவிடங்களி லிருக்கில் பூமி கிராமாதிபனுகி யனேகருக்கு அதிபதியாவன் சுபசத்துருகூடில் குடித் தனப் பிரபுவாவன் கட்டெடம் பூமி யனேகபலித முடையவனுவன் பாம்பு குசன் கூடில் பூர்வ பிரபுத்துவம் அதியோகவல்லபமும் பிதாவி னல் நூதனமாகவரசரின் றயவாற் கிடைத்த பூமி இராச்சியத்தையுந் தோற்றுவிட்டு இக்குலத்தை யடைவன் அழியுஞ் சுபருடன் இருபக் கத்திலாவது தனுசு துலாத்திலாவதிருக்கும் சுக்கிரன் புதன் குரு விவரி லெவராகினும் சூரியன் பாம்பு குசன் முதலியபாவரைக் கூடினும் குசன் கன்னி கடகம் தனுசு மிதுனம் இவ்விராசிகளி லிருக்கினும் புதனுடன் அல்லது சந்திரனுடன் கூடினும் அவ்வித குசனுக்கு உபயபார்சத்தி லெதிலேனும் பாம்பு சனி முதலிய அபலபாபிக ளிருக்கினு மலது நோக்

கினும் பூர்வ விசேஷமான பூமி கிருமம் பிரபுத்துவ வதிகாரங்கள் தன் குடும்பத்தார் முன்னோர் பிதுர் சோதரர் இவர்களாற் சகலபூமி கிரகவாகன சம்பத்தும் பல வாராக வழிந்து இருக்கவிடங்கூடத் திண்டாடி இராச்சியத்தால் மானபங்கம் பலதன இருணம் கஷ்டநஷ்டம் தேசபாதை முதலிய சிருமமடைவன் பலவாராகக் கெட்டு தேசமிழிந்து அற்பசீவனஞ் செய்வன் இப்படிக் கிரகங்களிருந்த வீட்டிலாவது உபய பாரிசத்திலாவது குரு பூரணமதி இருந்தும் ௪-௧0 மிடங்களி லிவ்வித சுபரிருக்கவும் நோக்கவும் உச்சமுதலிய நட்பு ஆகூஷிகளைப் பொருந்தி வாழினும் நோக்கினும் அவ்வித குரு சந்திர ரிவர் பத்தாமிடத்தின் கேந்திரத்தில் பெலத்தும் பத்து நான்கில் சுபரின்றி வாழில் பலனுள் அவ்வித பிதுரார்ச்சி விருச்சியத்தையிழந்தும் பலவிதகஷ்ட துன்பத்தின்மேல் அப்பூமிமுதலிய வரசியல் யாவுங்கிடைத்து ஆதிபத்தியஞ்செய்வன் அவ்வித சுபரும் பகைநீசாதி அபெலத்துடன்பாவரைக் கூடியும் இருக்கில் அப்பொருளில் அற்பம் பிச்சையொன்று கிடைத்தும் பிரயோசனமின்றி வருந்தியிளைப்பன் சனிபகையைக் கூடிக் குசனுவது சிம்மம்தனுசு மீனம் விருஷபத்திலாவது பகைநீசக்கோளுடன் குசன் சேர்ந்துங் குருவுங்கூடினும் குரு ௬-அ-௧௨ இவ்விடங்களிலிருந்து மேற்கூறிய குசனைக்கூடியல்லது பார்த்தாலும் ௧0-௪ இவ்விடங்களில் சந்திரன் குசன் கூடிப் பாம்பு உபயபாரிசத்திலாவது உடனுவது கூடினும் பரம்பரைப் பூமிக்கிரகமில்லான் அவர்களுக்கு ௧-௪-௫-எ-௬-௧0 இவ்விடங்களிலாவது இரண்டாமிடங்களானவை அவரவர்களுக்கு மித்துரு சுபபலக்ஷேத்திரமாய் சீவசரீராதிபதி சந்திரன் புதன் இரவியாகினுஞ் சனியானுலும் இவருடன் சீவசரீராதிபதி இவர் வீட்டினிற்கினும் பூர்வார்ச்சிதமின்றி சுயார்சித பேராளமாகக் கூடும் மிகவும் பிரபலவானுகிச் செகம்புகழ யோகமடைவனென்றும் அதிகக் கீர்த்தி பெற்று வாழ்வன் இவ்வித சீவசரீராதிபதியாவது உடன் கூடியவர்களாவது இரவியாகின் பூர்வார்ச்சிதம் சனியாகில் அயலாரார்ச்சிதமும் தாயாதிஆர்ச்சிதமும் சந்திரனுகில் மாதுரு பெண்ணுர்ச்சிதமும் குசனுகில் சகோதிரவார்ச்சிதமும் புதனுகில் மாதுலன் வகையார்ச்சிதம் பரார்ச்சிதமும் பெண்ணுர்ச்சிதமும் குருசுக்கிரன் சுயார்ச்சிதமும் சுக்கிரனுக்கு மனைவி வகையார்ச்சிதமும் பாம்பாகில் புராதனவார்ச்சிதமும் இவ்விதக் கிரகங்கள் சுபபெலத்துடைய சுபக்ஷேத்திர கெதியடையில் அந்தந்த வகைப் பொருளிராச்சியங்கள் விருத்தியும் பகை நீசாதிப்பாபத்துவராகிப் பகை பாபர் வீட்டினிற்கினும் னேக்கினும் அவ்வகைப் பொருள்

கிடைத்தும் யாவும்அழிந்துவிடுமென்றும் அவைகளாற்பலவாரான துக்க சோக கருமானுபவங்களை யனுசரிப்பனென்றறியவேண்டியது.

ஜீவனவிராச்சிய கணிதம்.

குரு குசன் சுக்கிரனிவர்களுடனுவது விருச்சிகம் மிடபம் இவ்வி ராசியுடன் கூடிய கிரக பெலாபெலனுக்குரிய சங்கைகளை தனித்தனி ஒவ்வொரு இராசி பலவெண்களால் பெருக்கி தனித்தனி கிரக வெண்களையும் கூ-ல் கழித்த சேஷந்திசையிலும் வந்த ஈவை நி-ல் பெருக்கி கூ-ல் கழித்த சேஷமான புக்திகளிலும் அத்திசாபுக்திநாதன் சத்துருபகை பாபனுகினும் சீவசரீருதிபதிக்கி ரு-சு-அ-கக-க்குடைய வரல்லது அவ்வீட்டிலிருப்போராகினும் குருகுசனிவர்களுக்குக்கொடிய பகைவராகினும் உள்ள திசாபுக்தி காலங்களில் இராச்சியம் அல்லது பூமிமுதலிய கைப்பொருள்களாலும் சீவன உத்தியோகங்களாலும் பல வித சத்துரு துன்பம் அவைகளாற் கெடுதல் விரோதம் இராசதெண்ட னுதிகளுக்குரிய கெடுதலும் விவாதவழக்கு நேரும் சுபவதிகாரமுங் கூட உரில் அவ்வித விவாதம் முதலிய துன்பங்களும் பொருச்சேதம் முத லிய வருத்தமுண்டாகிப்பின் காலதாமதத்தின்மேல் வருந்தியிளைத்துப் பின் கிடைக்கும் அவர்கள் பூரணசுப பெலத்துடையவராகியும் மேன் மையுள்ளவராகின் பலவித விராச்சியம் பூமிகிரகவாகனங்கள் நூதனம் நூதனமாகச் சேறுதலும் பிரபல சீவன விருத்தியடைவதும் எண்ணுத வைகூடும் பாபராகின் அக்காலத்தில் நமக்கென்று நிச்சயமாயுள்ளதுங் கைதவரி கையிலிருப்பதுங் மனுபவிப்பதுங் கூடகெடுமென்றும் இச்சுப ருக்கே சுபபாப இரு ஆதிபத்தியமாகில் அந்த திசாபுக்திகாலத்தில் மிக வும் வருந்தி முன்கிடைப்பதாகவே முடிவு பெற்றுத்தவரும் ஒவ்வொரு லக்கின பாவகணிதத்திலு மெந்தகிரக பலன் கனக்கால் வந்த திசாபுக் தியோ அந்தகிரகம் சவ்யமானுல் சூரியதிசை முதலும் அபசவ்யமானுல் சுக்கிரன் முதலத் தலைகீழாகவும் சவ்யாபசவ்யம் அபசவ்யசவ்யமானுல் குருதிசை தொட்டும் புக்திக்கும் முதல்கடை மத்திப புக்தி முதல் கொண்டு பார்க்கவேண்டுவனவாம்.

லாபவிரய பலன்களாவன.

சனியானவன் கேந்திரகோணமின்றியும் உ-கஉ-ரு-சு-இவ்விடங்க ளிலிருக்கினும் குரு சுக்ஷேத்திராதியிலும் கேந்திரகோண ஸ்தானங்க ளிற் பெலத்தும் சந்திர கேந்திரமல்லது இரவி கேந்திரத்திலும் உ-கக- கூ-இவ்விடங்களில் சுக்கிரன் பூரணமதி:குரு முதலிய சுபரிருக்கினும்

நோக்கினும் சிவசரீராதிபதியுஞ் சுபராகிக் கேந்திரகோண விடத்தில் பகைநீசாதி பாபசம்மந்த மின்றி இருக்கினும் ௧௨-௧௧-௨-௫-இவ் விடங்களில் குரு வல்லது குசன் றனித்தும் சனியல்லதுபாம்பு தனித்து நிற்கினும் நோக்கினும்சாதகனுக்கு மிகவுமேலானலாபமும் அசனசயன போகபோக்கிய மேன்மையுடன்வாழ்வன் சஞ்சாரமதிக முள்ளவனுமவன் மேற்கூறியவர்களுடன் பகை பாம்பு குசன் முதலியவர்கூடிஇருக்கினும் ௧௨-௧௧-௫-இவைகளில் பாம்பு சனி குசன் இரவி இருக்கினும் நோக்கினுமிவரி லொருவராகினும் குரு நீசம் பகை முதலிய பாவக்ஷேத்திரத்திலும் அவ்வதிபருடன் கூடினாலும் சனி பாம்பு முதலியவர் சுக்கிரன் குருஇவர் வீட்டிற் பெலத்துடனிருக்கின் மிகவும்விரயமும் பல தனச் சேதமும் அனேகவித கடனும் பலவகை வருத்தங்களையும் பிரயோசன மற்ற வீண்சிலவும் சிலவுசெய்தும் பலனடையாது தேசாந்தர சஞ்சார வாசனாகி படுக்கை முதலிய சுகமும் கிடையாவாகும் ௧௨-௧௧-௫-இவ்வி டத்தி லேதாவதொன்றில் பாவரின்றி சுபராய் அல்லது சுத்தமாகிஇருக் கினும் குரு கேந்திரகோண மித்துரு வீட்டினிற்கினும் சுக்கிரன் உச்ச சொக்ஷேத்திராதி பெலன் பெரினும் லாபமதிகமும் பலவிதச்செல்வமும் உடையவனாகியும் ஒரே இடமான கியாதிபெருவன் சிலவுக்கு மிஞ்சிய லாபமுண்டு இவ்விடங்களி லேதேனுமிரண்டிடத்தில் பாம்பு இரவிகுசன் சனி இவரில் எவர்கூடினும் நோக்கினும் சுக்கிரனுடன் பாம்பு முதலிய பாவக்கோள் கூடினாலும் லாபத்திற்கதிக சிலவுங்கியாதியும் நல்லவிஷயத் திலதிக விரயமும் சிலவிஷய கிருபணத்துவ முடையவனுவன்.

கணிதமாவன.

குருவுடனுந் தனுசுவிலும் முற்ற கிரகவெண்களை ௮-ல் பெருக்கி ௧0-கழித்த மிச்சம்லாபம் மகரத்திலும் சனியுடனுங் கூடியகிரகவெண் களை ௯-ல் பெருக்கி ௧0-ல் கழித்த சேஷம் விரயம்என்றும்லாபத்துக்கு விரயப்பங்கதிகமாகில்க் கடனும் கம்மியாகில் லாபமும் சமனாகிலிரண்டு மின்றி யறியவேண்டியது இத்தொகை ௯-ல் கழித்த சேஷமும் வந்த ஈவை ௫-ல் பெருக்கி ௯-ல் கழித்த சேஷமான திசாபுக்திகாலம் லாபவிர யங்களை யறியவேண்டியது.

பூரணமதி பூர்வபக்ஷசந்திரன்.

மீன லக்கினம்

மீனலக்கினத்தில் பிறந்த சாதகனின் மொத்தமான குணகுண வனுபவங்களாவன.

தனவான் சூரன் அழகுடைய சரீரன் ஞானன் அறிவுடையவன் அகோரி இருதாரன் கந்தபுஷ்பாதிப்பிரியன் விசாலநேத்திரன் கிருபையுள்ளவன் வாயுநோயுடையன் பரசொத்தின்மேல் எண்ணமுள்ளவன் முன்வருங்கருமங்களை நிதானித்தறிவன் பலபோசனப்பிரியன் ஓர்கால் மூர்க்கமுடையவன் ௧௨-௨௦-என்னும் வருடமல்லதுமாதகாலங்களில் மிகவுஞ் சுராதி செலகண்டமுடையவன் ௨௮-ன் காலம் க்ஷயமிருமல் புகைச்சல் முதலியநோயாற்கண்டம் இவ்விலக்கினத்தைச் சுபர்திருஷ்டியுரினு மிருக்கினும் மொத்தவாயுநூரெனக் கூறப்படும்.

பாவ திசாபுக்திகளின் காலங்களாவன. இவ்விலக்கினத்தின் காரகமாரகாதி

இம்மீனவிலக்கினத்துக்கு சந்திரன் குஜன் ஓர்பாகமும் புதனோர் பாகமும் குரு விவர்களி லெவராகினும் தனுசு கடகம் மீனம் துலாம் மிதுனமிவ்விராசிகளில் பகை நீசாதிகளின்றியிருக்குந் திசையிலும் இவர்களுக்கு கேந்திரகோணத்திலிருக்கும் மதி சுக்கிரன் பாம்பு குரு இவர்கள் பகைநீசாதி பாப க்ஷேத்திரமின்றி உச்சம் ஆக்ஷி மித்துரு வீடு அல்லது இவ்வித சுபம் பெற்றகோளுடன் கூடிய புக்திகாலங்களில் விசேஷமான பூமி கிரகவாகனம் அரசாங்கம் லாபம் சீவனம் மாடமாளிகைவரசாதி பத்தியப்பிரபலம் இராஜபொருமானம் இணைஇல்லாத பிரபலயோக முண்டாகு மென்றும் மிகவுமேன்பாடடைந்து சுகப்படுவன் விசேஷயோகதிசைகளாகும் குஜனோர்பாகமும் பாம்பு சனி சுக்கிரன் இரவி புதன் றிசையோர் பாகமுங் இவர்கள் ௨-௩-௫-௮-முதலிய இடங்களிலாவது பகைநீசாதி பாப க்ஷேத்திர மல்லது அவ்வகை கிரகங்களுடன் கூடினும் அவ்வவகிரகதிசையிலும் மேற்கூறிய இரவி பாம்பு குரு சனி புதன் முதலிய விவர்கள் பாபக்ஷேத்திரங்களில் தனக்கதிக கொடியபாபிகளுடன் இருக்கினும் நோக்கினும் இவ்வித புக்திகாலத்திலும் பலவகை யோகபங்கம் பொருள்சேத மனக்கலைவருத்தம் இராசபயம் இருந்தபொருளும் போகும் பலவித கஷ்டபலன்களைக் கொடுக்குமென்றும் பலவிதபாதைகளையுமடைவன் சீவனம்போம்.

மாரக திசாபுக்திகளாவன.

மிதுன மீனத்திலிருந்த புதன்றிசை இவருடன் கூடிய பாம்புசனி யின்றிசையிலும் பாம்புதிசையிலும் துலாம் விருஷபம்கன்னியிலிருந்த இரவிதிசையிலும் கடகம் சிம்மம் கன்னியிலிருந்த குசன்றிசை இவ்விததிசைகளில் துலாம் சிம்மம் மகரம்மேஷமிவைகளினின்றி இரவிபாம்புசனி சுக்கிரன் குரு இவ்வித புக்திகாலங்களில் மாரகத்தைக் கொடுக்கப்படும் மற்றய விராசியாகின் பகை நீசசுபருடனுவது அவரே பகைநீசாதி சுக்கிரன் பாம்பைக் கூடியதிசாபுக்திகளில் மாரகமெனக்கண்டுகூற வேண்டியது.

சாதகபிணி.

சனி பாம்பு சுக்கிரன் இரவி இவர் மகரம் சந்திரனுடன்சிம்மம்அல்லது சுக்கிரனுடன் சுக்கிரன் வீட்டிலுற்றவர் திசையிலும் தனுசு இரவி பாம்பு குசன் சுக்கிரன் புக்திகாலங்களில் இராசதெண்டனை நீராவியாதி பலவகைக் கஷ்ட நஷ்டம் அனேகவிதமான துக்க பலன் கடன் முதலியவகை சத்துரு அபாயம் திடீரென்ற கெண்டம் செலம் நெறுப்பு இவைகளாற்பயம் மிருகவாகன தெண்டங்களுண்டாகும்.

மாதுருவரிட்டம்.

பாம்பு குரு மிதுனம் கன்னி சந்திரனுடன் அல்லது சந்திரனுக்கு அ-ச-இவ்வீட்டிலும் மேற்கூறிய பாம்பு குருவல்லது சனி சுக்கிரனிவ்விததிசையிலும் சனி சந்திரன் சுக்கிரன் பாம்பு இவர்கள் மேற்கூறிய திசாநாதனுக்கு அ-ச-கo-எ-இவ்வித புக்திகாலங்களில் மாதுரு கருமமும் மாதுருவகை நஷ்டதுக்கசோகமும் தாய் தாய்வழியிவர்களுக்குதேகாரிஷ்டரோக துன்பங்களானவை யுண்டாகும்.

பிதுருவரிஷ்டம்.

விருஷபம் விருச்சிகம் சிம்மம் கடகம் சூரியனுக்குஞ் சனிக்கும் அ-கூ-டு-கo-இவ்விதஇடத்திலிருக்கும் பாம்பு சுக்கிரன் குரு சனி ரவி இந்த திசாகாலத்திலும் அப்படிக்கொற்ற திசாநாதர்களுக்கு அ-கூ-கo இவ்விடத்திலிருக்கும் புத்தியானவை சனிஇரவிபாம்பு சுக்கிரனிவ்வித புக்திகளிலும் பலவிதமான துக்கசோகமும் பிதுர்வரிஷ்டம் பிதுர் துக்கசோகாதி ஷெ வகைப் பொருள்ச்சேதமும் பலவகைவருத்தமும் பிதுர் ஞாதி துக்கம் தகப்பனுக்கும் தேகாரிஷ்ட பலன்னடக்கும்.

சகோதிரவரிஷ்டம்.

மேஷம் மகரம் சிம்மம் துலாம் தனுசு இவைகளில் இருக்கும் குசன் பாம்பு சனி இரவி இவ்வித திசாபுக்திகளில் சகோதிர வரிஷ்டம் துக்கபலன்.

களத்திர லாபமும் வரிஷ்டமும்.

சந்திரன் குரு புதன் பாம்பு இவர்கள் மிதுனங் கடகம் கன்னி மீனம் தனுசு இவ்விராசிகளிலிருக்குக் திசையிலும்குரு இரவி சுக்கிரன் புதன் இவ்வித புக்திகளில் விவாகசுபசோபன லாபமும் ஷ திசைகளிலும் பாம்பு சனி சுக்கிரன் புக்திகாலங்களில் களத்திர நஷ்டம் துக்க சோகம் அவைகளுக்கு தேகாரிஷ்ட ரோக துன்பமும் மனசுக்கு வருத்தம் பலரோக சோகபலன் நடக்கும்.

புத்திரலாபமும் வரிட்டமும் கூறுகின்றனவாம்.

சந்திரன்றிசை குரு குசன் பாம்பு இவர் கடகம் மீனம் விருச்சிகம் கன்னி மகரம் இவ்விராசி கிரகதிசையிலும் அவ்விததிசாநாதருக்கு உ-ரு-எ-கூ-கக-இவ்வீட்டி னிற்குஞ் சுபபெலக் குரு சந்திரன் இரவி சனி இவர்களின் புக்திகாலம் புத்திரலாபமும் பாம்புதிசை புதன் குசன் ஓர்பாக மித்திசைகளாதிபர் துலாம் கும்பம் விருச்சிகம்மேஷம் சிம்மத்திலிருந்த திசையிலும் இத்திசாநாதருக்கு அ-க0-உ-எ-இவைகளி லிருககுமல்லது அதிபர்களிவர்கள் சனி பாம்பு குசன் புதன் இவ்வித புக்திகாலங்களில் புத்திரமரணம் பலவகை வருத்தங்களும் சில நாள் வரைப் புத்திருள்ளவரும் நஷ்டமும் பொருள்ச்சேதமும் இவ்வகையாற் றுக்கமு முண்டாகும்.

க-வது ஆயுர்பாவ பலன்களாவன.

குரு கேந்திரத் திரிகோணத்திலும் பகை நீசமின்றியும் சுபக்ஷேத்திரமாகிய மீனம் மிதுனங் கடகம்கன்னி தனுசுஇவ்விராசியிலும்பெலத்துட னிருந்து பகைக்கோள் பாம்பு குசன் சனி இவர்கண்மேற் கூறியவர்களி னிருபக்கத்திலாவது லக்கினத்திற் கிருபுரத்திலின்றியும் குசன் சுக்ஷேத்திர சுபபெலத்துடனும் சுக்கிரன் சுக்ஷேத்திர மல்லது நட்பு வீட்டில் பெலக்குறைவுட னிருக்கினும் க-எ-ல் பாவரின்றி குருசுக்கிரன் அல்லது குருசனி சரஞ் சரமாகி ஆரோகணபணபரமான கடகம் மேஷமிவைகளிலிருக்கில் ௯0-ரா௨0-வரை ஆயுள்த்தீர்க்கமென்றும்

மேற்கூறிய கிரகங்களுந் தானமுமிவ்வித மிருந்தும் முன்கூறிய சுபாவர்க ளெவர்கூடியல்லது லக்கினங் குரு விவைகளுக்கு உபய பாரிசத்தி லிருக்கினும் நோக்கினும் அவை உபய முப்பவிராசியினிற் கின் ஜாதகனுக்கு ஆயுர்பாவ வரு-கூ௰சு வரை யென்றும் ஸ்திர மாகி மேற்கூறியபடி இருக்கின் வரு-சு௦சு-வரையென்றும் ஸ்திரசர மாகின் வரு-௫௪-ம் ஸ்திரமுபயமாகில் வரு-௪சு-ம் சரமுபயமாகில் வருஷம் ௬௨- வரையாயுட் டீர்க்கம் இதில் மேற்கூறியவர்களாகிய சுக் கிர குசனுஞ் சீவசரீராதிபதியும் துலாம் மகரம் சிம்மமிவைகளில் சில சுபரைக்கூடியும் மிலக்கின கேந்திரகோணத்தில் குரு வாதல் பூரணசந் திரனுதலிருக்கில் வருஷம் அ௪-யென்றும் பாவர் கூடியாவது பகை நீசம் பெற்று வாழில் வருஷம் ௪சு-க் குள்ளாகி எவ்வனத்திலயேமர ணமும் குரு சந்திரன் கேந்திர கோணமின்றி ௬-சு-அ-க௨-ல் பகை நீசாதிகள் பெற்றும் பெலமற்று சந்திரன் க-௪-எ-சு-க௦- லிருக்கினும் வருஷம் ௫௪-க்குள் சாதக தேகவியோகமும் சுப பெலத்துடன் குரு முதலியோர் நோக்கின் வருஷம் சுஅ-வரையென்றும் குரு மீனம் கட கம் மிதுனம் சிம்மம் தனுசு விவைகளிலும் சந்திர கேந்திரமாகிச்சுக் கிரன் சுக்ஷேத்திரமல்லது நட்புவீட்டினிற்கின் வருஷம் எ௨-வரை யா யுளுண்டாம் மற்றய விடத்தில் குரு பகை நீசம் பெற்றும் துர்த்தான த்திலும்மிருந்து சுக்கிரன் சுக்ஷேத்திரமுல்லது சீவசரீராதிபதி குசன் பாம்பு சனியாகினும் வரு ௬௨-க்குள்ளும் அவருடனல்லது உபயபாரி சத்தில் பாம்பு முதலிய கோள்க்கள் கூடினுமிருக்கினும் வரு-௨க-க்குள் ளென்றும் குசன் சனி இவர் க-எ-அ-இவ்விடங்களிலும் சுபர்பாரா திருக்கின் வரு-கசு-க்குள் மரணமென்றும் குரு வல்லது பூரண சந்திர கேந்திரத்தில் மேற்கூறிய குசன்முதலியபாவர்களிருக்கினும் குசன் லக் கினத்திலாவது அவ்விடத்தையாவது குருமுதலிய சுபர்திருஷ்டிபெலத் துடன் செய்யில் வரு-சு௨-வரையும் லக்கினத்தின் உபயபாரிசத்திலா வது எ-அ-கூ-இவ்விடங்களிலு மிலக்கினத்திலும் இதிலேதேனு மொன் றிலாவது இரவியுடன் குசன் பரம்பாவது குச னிரவியுடன் சனியா வது கூடினுமிருக்கினும் ஜாதகத்துக்குபாலாரிஷ்டம் பாலியமான வரு- க௨-அல்லது மீ-க௨-நாள் க௨-ல் மாரகமும் இரவிக்கி ஒன்றி லெட் டிலுரில் பிதுர்வரிஷ்டமும் சந்திரனுக்கு ஒன்றெட்டிலுரில் மாதுருவ ரிஷ்டத்துடன் சிசுவிற்கு மரணமென்றும் இவைகளி லெதையாவது

ஆரோகண பணபரம் ஏனின் ஜென்மலக்கினத்திர்க்கு ௨-௫-ம் வீடாகும்.

குரு நோக்கின் மாதுரு பிதுருமுதலிய சிசுக்களுக்கு வரிஷ்டங்கொடுத்து நீங்கும் குருவுடன் இரவி சனி குசன் பாம்பு இவைகளில் குசன்ற விரமற்றயவர்கள் கூடி மகரம் மேஷம் துலாம் விருச்சிகம் மிதுனமிவைகளினின்றாலும் குச னிராகுவானவர் துலாம் கும்பங் சிம்மமிந்தவிராசிகளிலிருக்கில் பிரஜை சன்மித்தவுடன் மரணமும் இதில் புதன்கூடியும் ஓர்பாவர் தனித்திருக்கினும் ௵-௭ மீ ௭-க்குள் பாலவரிஷ்டத்தால் மறிக்கும் மற்றயவிடத்திலிவரிருக்கின் பாலியத்திலரிஷ்டித்து நீங்கும் ரவி புதன் கேது முதலிய பாவர் தனித் தனியாவது ஒன்றாயாகவாவது சிம்மம் துலாம் கன்னி கும்பம் மேஷ மிவைகளிலிருக்கினும் நோக்கினும் இரெண்டு சுபரிருபாவர் கூடினாலும் மாதம் ௫-ல் சிசு மறிக்கும் என்றறிய வேண்டியது.

குரு சுக்கிரன் புதனிவர்கள் கேந்திரத் திரிகோணத்தி லிருந்தும் சனி ரவி இவர் சாராது மிதுனம் கடகம் தனுசு கும்பம் மீனம் இவைகளிலிருக்கில் ௵-௮௪ யென்றும் அவர்களுடன் சனி யல்லது பாம்பு ரவி குசனிவரில் இரண்டுமுதலிய பாவர் கூடினும் உபயமுபயமாகின் ௵-௯௨-அவர் விடத்திலிரண்டு பகையோர் கூடி-னும் சுக்கிரன் ரவி யல்லது சனி கூடினும் உபயபாரிசங்களில் பாவர் கூடினும் ௵-௮௪ என்றும் சுபசத்துருவாகில் ௵-௫௪ யென்றங் கண்டறியவேண்டியது சுக்கிரன் புதன் வீட்டிலும் பெலத்து நிற்காமல் சனி இரவி புதனிவரைக்கூடி யலது சுக்கிரன் கேந்திரத்திலிவரிருக்கின் ௵-௨௭-௯௨ இந்தக் காலங்களிலயே வாயுட்டீர்க்கமென்றும் குரு வலுத்து இவரை நோக்கினு மிலக்கினத்திலாவது ஏழிலாவதிருக்கின் ௵-௭௨- யென்றும் அவ்வித குரு வகைப்பவர் நோக்கின் ௵-௯௨ யென்றுங் கண்டறிய வேண்டியது.

ஆயுர்பாவ கெணிதங்களாவன.

ஜீவசரீராதிபதியுடனும் இவ்விராசிகளிலும் குரு மீனம் இவைகளுடன் கூடிய கிரகவெண்களை சுபாசுப பெலன்படிக்கி எடுத்துக் கொண்டு அவர்களிருக்கு மிராசி வெண்ணிற் பெருக்கி தனித்தனி கிரகவெண்களை ௯-ல் கழித்த சேஷந் திசையிலும் வந்த ஈவை ௫-ல் பெருக்கி ௯-ல் கழித்த சேஷம் புக்தியிலும் அவ்வித திசாபுக்தியோர் ௭-௨-௮-இவ்வித ஸ்தான ஸ்திதியோராவது அவ்வீட்டதிபரும் வரும் திசாபுக்தி காலத்தில் மாரகமென்றுங் ௯-௧௧-௩ இவ்விடத்ததிபதி இவ்விடங்களிலிருந்தவர் மூலமாக வந்த திசாபுக்திகாலத்தில் தே

காரிஷ்ட ரோகதுன்ப கெண்டமும் இராசவிட்வராதி முதலிய கெடுதற் பலன்களுண்டாகும்.

உ-வது தனகுடும்ப பலன்களாவன.

குசனின்றுஸ்தானமும் அவ்வதிபதியுந் தனக்குஜீவனென்றும் சுக்கிரனின்ற விருசியும் அவ்வதிபதியும் சரீரமென்றும் பெயராகும் சீவசரீராதிபதி சுக்கிரனல்லது பூரணசந்திரனாகியும் இவர்களுங்குசனுமொன்றாகியல்லது தனித்தனியாவது மேஷம் மீனம் தனுசு மகரம் இவைகளிருந்தும் உ-கஉ-இவைகளிலாவது மேற்கூறிய கிரகங்களுக்கு உ-கஉ இவ்விடங்களிலாவது நோக்காமலிருக்கினுஞ் சேருதரினு சாதகன் சுயமான கோடியாந்தராதி தனவந்தனவன்குடும்பவிருத்தியடைவன்இவருடன்பாவராகில் முன்னார்ச்சிதம் லக்ஷாந்திரவரை யடைந்து தீர்க்கமடையானென்றும் அவருடன் சனி யல்லது புதன் ரவி இவரிலெவர் கூடியாவது மேற்கூறிய விடத்திருக்கின் சகஸ்திராதிக் கணக்குள்ள தனவந்தனவன் குடும்ப விருத்தியில்லான் சுபர் நோக்கிச் சிலநாட்சென்று தனமுங் குடும்ப வபிவிருத்தியடைவனென்றும் மேற்கூறிய மூவரில் ஒருவர் மேற்கூறிய விடத்தினின்று மற்ற விருவர்களாவது குசன் சீவசரீருதிபதியாவது பகைநீச விடத்திலாவது சிம்மம் துலாம் கன்னி விருச்சிகம் கும்பமிவ்வித இருசியிலிருக்கினும் நோக்கினும் பலவிதமான வருத்தமும் தனமின்றியும் சதாந்தரக்கணக்குள்ள தனவந்தனவன் உ-கஉ-ல் சனி பாம்பு இரவி முதலியவரும் ஜீவசரீருதிபதி பெலமின்றி உச்ச சுக்ஷேத்திர வீட்டிலும் சுபபெலத்துடன் புதனாகி மிதுனங் கடகம் விருஷபம் இவைகளிலிருக்கினும் நோக்கினும் குசன் மேஷம் மிடபம் விருச்சிகம் மகரம் இவைகளிலிருக்கில் தச சகஸ்திராந்தர தனமுடையவனவன் மேற்கூறியவர்கள் அவர்களுக் கிணையில்லாத பகைவருடனிருக்கினுங்குசன் ஜீவசரீராதி பாவருடன் பகைபெற்ற பாம்பு சனிமுதலியோர்கூடினும் நோக்கினும் சதாந்திரதனவந்தனவன் மேற்கூறியவர்களிலிருவர்கள் துலாம் சிம்மம் கும்பம் இவைகளில் குசன் ரவியுடனும்பாவருடனும்உபயபாரிசத்திலும் பாவரிழிக்கினும் தனமின்றி இருணம்முதலியகொடிய வனுபவங்களை யனுபவிப்பன் குசன் குரு பாவரைக்கூடி பகை நீச விடமாகி அவை விருஷபம் கும்பம் சிம்மம் துலாம் இவைகளிலிருக்கில் பொருள் பலவித நஷ்டம் கடனும் றெக்க தனமில்லானாகி பூர்வார்ச்சிதத்தையு மிழப்பனென் றறியவேண்டியது உ-கஉ-ல் பாவரிருக்கினும் அவ்வதிபர் பகை நீசபாபக்ஷேத்திரமாகியும் அவ்வதிபருடன் கூடினும் பலபொருளும் போம் குடும்பக்ஷயமாகி வாக்குக்

குறைவுடன் அல்பவானவன் பலவகை வருத்தம் நேரும் பாவருஞ் சுபருங் கூடிப் பலவித வருத்தங்களின்றி தனம் மாத்திருமிருக்கிற் குடும்ப விருத்தி யாகாது குடும்ப மாத்திரு மிருக்கில் தனமின்றி வருந் துவன்.

தன கணிதமாவன.

